

5

கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள்

கி.வா.ஜ.

கந்தரலங்காரச் சொற்பொழிவுகள்

பாகம் - 5

கி.வா. ஜகந்நாதன்

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

உரிமை பதிவு
அல்லயன்ஸ்
முதற் பதிப்பு : 2003

மொத்த பக்கங்கள் (10+354) = 364

விலை: ரூ. 115.00

அல்லயன்ஸ் கம்பெனி
244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண்: 617,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
தொலைபேசி: 2494 1314

Laser Typeset by – **Print Point Graphics**, Chennai – 20.
Printed at – **Kay Em Packaging Industries**, Chennai

பதிப்புரை

'வாகீச கலாநிதி' கி.வா. ஜகந்நாதன் அவர்கள் எங்கள் குடும்பத்துடன் நெருங்கிப் பழகிய எழுத்தாளர்களுள் ஒருவர். எங்கள் நிறுவனர் வி. குப்புஸ்வாமி ஐயருக்கு, மூத்த குமாரர் போல் பழகி வந்தவர். அவருடைய நூல்கள் நமது நிறுவனத்தின் மூலம் மூன்று தலைமுறையினரால் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. இவர் தமிழ் இலக்கியத்தில் கரை கடந்தவர்; ஆன்மிகத்தில் பரம்பொருளைக் கண்ட ஞானி. எனவே இவரை 'ஞானப் புலவர்' என்று கூறினால், அது மிகையாகாது. இப்புவியில் அவ்வப்போது இப்படிப் பல 'ஞானப்புலவர்'கள் தோன்றிக் கொண்டே இருப்பதால்தான், நமது மொழிச் செல்வமும், ஞானச் செல்வமும், இறைவனது கட்டளைப்படி காப்பாற்றப்பட்டு வருகின்றது எனலாம். இப்போதும் நம்மிடையே திரு. சுகி சிவம், திரு. பி.என். பரசுராமன் போன்ற பல 'ஞானப்புலவர்கள்' இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் எல்லாம் சாதாரண மனித சக்தியை மீறி, இறைவன் திருவருளால், ஏராளமான சொற்பொழிவுகளையும்; நூல் களையும் இயற்றிக் கொண்டிருக்கிறார்கள். பிறவிப் பெருங்கடலை நீந்த நமக்கு வழிகாட்டியாக விளங்குகிறார்கள். இவர்களுடைய பேச்சுக் களையும், எழுத்துக்களையும் நாம் பின்பற்றி வந்தாலே போதும். அதுதான் அவர்கள் எல்லாம் பாமரராகிய நமக்குக் காட்டும் வழி.

சற்றேறக்குறைய 600 ஆண்டுகளுக்கு முன்பு இப்படி ஒரு 'ஞானப் புலவர்' இருந்தார். அவர்தான் அருணகிரிநாதர். இறைவனை நேரில் தரிசித்து அருளைப் பெற்றவர். இவர் அருளிய நூல்கள் எல்லாம் நமக்கு, பரப்பிரம்மத்தை உணரவைக்கும் வழிகாட்டிகள். இப்படி இவர் அருளிய நூல்களுள் 'கந்தர் அலங்கார'த்திற்கு விரிவான, அழகான, தெளிவான – தொடர் சொற்பொழிவை, ஒரு சமயம் கி.வா.ஜ. அவர்கள் நிகழ்த்தி னார்கள். அந்தச் சொற்பொழிவின் தொகுப்புதான் இந்நூல். இதைப் பற்றி அவரே, தனது முன்னுரையில் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

1986 வாக்கில் ஒரு நாள், அடியேன், கி.வா.ஜ. அவர்களுடன் 'புரூஃப்' பார்த்துக் கொண்டிருக்கும்போது, அவர் என்னிடம், ''நீ

என்னுடைய அலங்காரப் புத்தகங்களைப் போடுகிறாயா?'' என்று கேட்டார். ஒரு தெய்வப் புலவர் எழுதியதை மற்றொரு தெய்வப் புலவர் விளக்கமாகக் கூறிய நூலை 'வெளியிடுகிறாயா?' என்று கேட்கப்பட்ட வுடன் அதிர்ச்சி அடைந்தேன்; இவ்வளவு பெரிய பாக்கியம் நமக்கு உள்ளதா? என்று எண்ணி வியந்தேன். அன்று அவர் போட்ட பிள்ளையார் சுழி இன்றும் தொடர்ந்துகொண்டே போகிறது. எல்லாம் அவன் அருள்! 2005–ம் வருடம் கி.வா.ஜ. அவர்களின் நூற்றாண்டு வருகிறது. இந்தச் சமயத்தில் அவருடைய அனைத்து நூல்களையும், ஒன்றன்பின் ஒன்றாக வெளியிட, இறைவனைப் பிரார்த்திக்கிறோம். நல்லதையே எண்ணி னால், நல்லவைகளே நடைபெறும் என்பது ஞான வாக்கு. அதேபோல, இப்படிப்பட்ட நல்ல நூல்களை வெளியிட எண்ணி, அதன்படி நாங்கள் நடந்து வருவதால், இதைப் படிக்கும் வாசகர்களுக்கும் நல்லவைகளே சித்தி பெறும்.

இந்நூல் இப்போது நமது நிறுவனத்தின் மூலம் ஒரே தொகுப்பாக (6 பாகங்களாக) முதல் பதிப்பாக வெளிவந்தாலும், 1956 வாக்கிலிருந்து சிறுசிறு நூல்களாக, அவ்வப்போது வெளியிடப்பட்டதுதான்.

வாசகர்களே! கி.வா.ஜ. அவர்களின் ஞானப் பெருக்கையும், அவர் கையாண்ட தமிழ் அழகையும் நீங்களே படித்து ரஸியுங்கள்; சுவையுங்கள்; போற்றிப் பாதுகாத்து பயன்பெறுங்கள்.

– 'அல்லயன்ஸ்' **ஸ்ரீநிவாஸன்**

உள்ளுறை

1. நீர்க்குமிழ்

நீர்க்குமிழி (5 - 23)

உபதேசப் பழக்கம் (5), உடம்பு நிலையாமை (6), செல்வம் நிலை யாமை (8), வாசா ஞானிகள் (10), பசித்து வந்தவன் (10), சர்க்கரை ஞானம் (11), பேசா அநுபூதி (12), பிறர் துன்பத்துக்கு இரங்கல் (13), சோம்பேறிகள் (14), உயிர்களிடத்தில் அன்பு (15), அறிவும் செயலும் (17), கங்கைப் புராணம் (18), நம்பிக்கை (20), அறிவும் அநுபவமும் (21), மௌனமும் ஞானமும் (22), ஆத்ம குணம் (23)

பெறுதற்கரிய பிறவி (24 - 86)

இம்மையும் மறுமையும் (24), இறைவன் பூசை (25), தனிப்பூசை (26), தனியாகச் செய்தல் (29), தனி வழிபாடு (30), எல்லோரும் பூசை செய்யலாம் (31), விலங்குகள் பூசித்தல் (33), கோச்செங்கட் சோழன் (34), விலங்குகளின் அறிவு (36), விலங்குகளின் மொழி (37), ஆராய்ச்சியும் இரக்கமும் (39), அறிவின் பயன் (39), பரிணாமம் (40), சிறந்த பயன் (40), தாலாட்டு (41), பழக்க வழக்கங்கள் (42), அறிவின் வகை (42), தேவரும் மனிதரும் (43), இறைவனை அணுகும்முறை (44), வருங்காலத்துக்குப் பாதுகாப்பு (45), எதைச் செய்வது? (47), பன்மையின் உண்மை (48), இறைவனை நினைப்பூட்டுபவை (49), இருவகை நிலை (50), கருவியும் லட்சியமும் (51), உடம்பின் மேல் பற்று (52), உடம்பால் உடம்பைப் போக்குதல் (54), கற்றுக் கொள்ளும் ஆசை (54), குறுகுதல் (56), இறைவன் குறுகுதல் (56), சிற்றடி (57), இறைவன் அடியாரைத் தேடி வருதல் (60), திருவடியைப் பற்றுதல் (61), பணிதல் (61), பெறுதல் (62), குறுகியும் பயன் பெறாதார் (62), உரிமையும் உழைப்பும் (64), வளர்தல் (65), சூரசங்காரம் (66), இந்திரன் வேண்டுகோள் (66), திருமண முயற்சிகள் (69), முசுகுந்தன் (70), திருமணம் (72), தலைமை பெறுதல் (73), சோமாஸ்கந்தமூர்த்தி (76), முசுகுந்தன் செயல் (77), யானையும் மலையும் (78), கொடி படர்ந்த தோள் (80), போரிட்ட யானை (81), பெண்களுக்குப் பெருமை

(82), கிரியா சக்தி (82), வெற்றிக்கு அடையாளம் (83), செயலும் பயனும் (85)

எல்லை கடந்த இன்பம் (87 – 97)

இரண்டு எல்லைகள் (87), திருவருள் தோணி (87), காலத்தின் உணர்வு (88), இட உணர்வு (89), பிறவியும் துன்பமும் (90), காலமும் இடமும் கடந்த இன்பம் (91), மனம் உறங்குதல் (92), யுகமும் சகமும் (93), தனிவேல் முருகன் (93), பிரளய நிகழ்ச்சி (95), துரிய நிலை (96), அதீத நிலை (96)

சத்தி வாள் (98 – 118)

அச்சமும் பாதுகாப்பும் (98), நுண்பொருளுக்கு அடையாளம் (100), யமன் என்னும் கற்பனை (101), காலனும் கால காலனும் (102), பாவனையால் பயத்தை மாற்றுதல் (103), பயம் எழுதலும் மாற்றுதலும் (104), யமனை வெல்லுதல் (105), அருணகிரியாரின் உறுதி (106), கலக்கமும் தெளிவும் (106), துன்பமும் மாற்றும் (107), முன் கொடுத்த வாள் (109), தந்தைக்குத் தந்த வாள் (110), ஆற்றலும் கருணையும் (111), தனி ஞான வாள் (113), சக்தி வாள் (114), வெம்பும் காலன் (116), சித்திரம் (117)

2. விழிக்குத் துணை

விழிக்குத் துணை (129 – 147)

நம் அவதாரம் (129), உடன் வருபவை (130), வாழ்க்கையில் துணை (131), பெரிய துணை (132), உருவமும் பெயரும் (133), கண்ணின் செயல் (133), வாக்கின் செயல் (135), முருகா என்னும் நாமம் (136), நாமத்தின் சிறப்பு (137), மொழிக்குரிய தகுதி (139), நிகழ்காலத் துணை (140), பிராரப்தம் (141), தோள் துணை (142), வருங்காலத் துணை (142), விளக்கும் ஆயுதமும் நிழலும் (143), வேலும் மயிலும் (144), செங்கோடன் (144), மயில் (145), துணைகளின் வகை (145)

சிவயோகம் (148 – 173)

இரக்கம் (148), பாவத்தில் பங்கு (149), தக்க வழி (150), நூலும் அதிகாரியும் (151), முயற்சியும் குருவும் (151), போலி யோகம் (153),

யோக மென்னும் படி (153), இடையே வரும் கிளுகிளுப்பு (154), மூன்று நாடிகள் (155), மூச்சும் மனமும் (155), வாசி யோகம் (156), மனத் தெளிவு (157), பிராணாயாமம் (157), உருவத் தியானம் (158), ஹடயோகம் (159), அருணகிரியார் இரக்கம் (159), சித்திகள் (160), யோகியரை இழித்தல் (160), அசட்டு யோகி (162), கரும யோகி (163), எளிய வழி (165), தாயுமானவர் கூற்று (165), வேறு வழி (166), பூட்டும் சாவியும் (167), சிவயோகம் (169), எல்லாம் இறைவன் மயம் (170), பழக்கமும் அநுபவமும் (172)

தாழ்வு இல்லை (174 - 194)

மங்கல வாசகம் (174), கம்பர் கூறுவது (174), பல வகைத் தாழ்வு (175), அப்பர் நிலை (177), மனத்திற் சலனம் (178), மறவாதவர் (179), மறதியும் நினைப்பும் (180), பன்னாடை (181), ஆண்டவனை நினைக்க வாய்ப்பு (182), மனக் கோயில் (183), சாகும் வரையில் (184), பல அடை யாளங்கள் (185), சேந்தன் (187), கந்தன் (188), செங்கோட்டு வெற்பன் (188), செங்கோட்டு வேலன் (189), செந்தமிழ் நூல் விரித்தோன் (189), வள்ளி காந்தன் (191), கடம்பம் (191), மயில் வாகனன் (192)

சொல்லொணாத ஆனந்தம் (195 - 215)

அநுபவ வெளியீடு (195), இருவகை இரகசியம் (196), அருணகிரியாரின் சிறப்பு (198), இன்பத்தாக்கு (198), சுட்டும் முறை (199), இட எல்லை கடந்தது (200), கால எல்லை இல்லாதது (202), புறம்பும் உள்ளும் இல்லாதது (204), வாக்கு இறந்தது (205), அதிசயப் பெருக்கு (206), திரிபுடி ரகிதம் (207), வடிவும் முடிவும் (208), பக்குவமும் அநுபவமும் (209), கட்டை (210), மனோலயம் (211), அதன் வசம் (213), அறுமுகவன் (213)

இராப்பகல் அற்ற இடம் (216 - 236)

நான்கு படி (216), உடம்பு உள்ள போதே (217), ஜீவன் முக்தரும் பிறரும் (217), இரவும் பகலும் (219), இருளும் ஒளியும் (220), மயக்கமும் தெளிவும் (222), ஒளியும் நிழலும் (222), கேவல சுத்த அவஸ்தைகள் (223), படியேறுதல் (224), அருள் வேண்டும் (225), அராப்புனை வேணியன் (227), அன்பும் தொழுதலும் (228), அவிழ்ந்த அன்பு (229), குராமலர் (231), ஐவர் பராக்கு அறல் (232), மனம் பதைப்பறல் (234)

3. பழனித் திருநாமம்

பழனித் திருநாமம் (245 - 269)

பெரியவரின் நல்லுரை (245), அதுவும் இதுவும் (245), நெஞ்சை நோக்கிக் கூறல் (246), தலப்பெயர் (247), தலங்களின் பெருமை (248), தலதரிசனப் பயன் (249), சிறந்த தலங்கள் (250), பெயரைச் சொல்லுதல் (252), பழனியின் பழஞ்சிறப்பு (253), புராண வரலாறு (255), அரோகரா! (257), படித்தல் (258), அடியார்களைச் சார்தல் (258), மூர்த்தியின் நாமம் (259), பற்று அறுதலும் கொடையும் (260), இட்டு மிடித்தல் (261), அழுதல் (263), கூத்தாடல் (264), இருவகை அழுகை (266), ஐந்து நிலை (266), தஞ்சம் ஏது? (267), செய்ய முடிந்தவை (267)

செய்த குற்றம் என்ன? (270 - 283)

பொய்யர் (270), பொய்யும் மெய்யும் (270), அலங்காரம் (271), அருணகிரியார் இயல்பு (272), உறுப்புக்களால் பயன் (273), இறை வழிபாடு (273), இராமலிங்கர் வாக்கு (274), அருணகிரியார் கூறுவது (275), கோடாத வேதன் (276), வேலைக்காரன் குறை (277), தாடாளன் (277), வணங்காத் தலை (278), நாடாத கண் (278), தொழாத கை (279), கைகளைக் குவித்தல் (279), பாடாத நா (280), சிறப்பான உறுப்புகள் (281), கருத்து (282)

மயக்கத்துக்கு முறிவு (284 - 294)

காமனி காஞ்சனம் (284), அருணகிரியார் காலநிலை (284), பொதுமகளிர் செயல் (285), டாக்டரும் நோயாளியும் (285), மகளிர் அலங்காரம் (286), கண்வலைப்பட்டு மயங்குதல் (287), நிறைவுதராப் பொறி இன்பம் (287), மால் வாங்குதல் (288), ஏங்கி மயங்குதல் (289), மயக்கம் போக்க வழி (290), இந்திரன் நிலை (290), ஐராவதம் (291), இந்திரனும் சூரனும் (291), இந்திராணியின் நிலை (292), தாலி காத்த பெருமான் (292), நோக்கும் காலம் (293)

ஆர் கொண்டு போவர்? (295 - 311)

தாயின் கேள்வி (295), செல்வரின் கதை (295), பொருள்களின் வகை (296), வாழ்க்கையில் குறை (297), இறந்த பிறகு (298), இறைவன்

ஆணை (298), பற்று அற்ற நிலை (299), மூன்று வகை (300), அநுபூதிப் பாட்டு (301), இறத்தல் உறுதி (302), நிலையான பொருள் (303), ஐயப்படுபவர் (305), கூர்கொண்ட வேலன் (306), காலன் (307), ஆர் கொண்டு போவர்? (308), வேலன் துணை (309), எளிய செயல் (310)

சிந்தாகுலம் தீர (312 – 329)

பந்தாடும் மங்கையர் (312), பந்தும் கண்ணும் (314), காளையின் பார்வை (314), முள்ளும் ரோஜாவும் (315), பார்வையில் வேறுபாடு (315), சுழற்சி (316), சிந்தாகுலம் (316), விளையாட்டும் வினையும் (317), திருடன் பார்வை (318), மாற வழி (319), கண்ணை மறைக்கும் படலம் (320), படலம் கிழிக்கும் வேல் (320), விண்ணப்பம் போடும் இடம் (322), திருத்தணிகை (323), கடம்ப மலர் (323), வள்ளியை மணந்த இடம் (324), இளங்குமரன் (324), முருகன் ஆற்றல் (326), அரசனும் சேனாபதியும் (327), அமராவதி காவலன் (327)

விண்ணப்பம் (330 – 338)

பிரார்த்தனை (330), நெடுங்கூற்றன் (331), இருவேறு உருவம் (331), வேண்டுகோள் (333), முருகன் புகழ் (333), தியாகராஜன் (334), திரிபுராந்தகன் (335), முக்கண்ணன் (336), பரம கல்யாணி (336), பாலகன் (337)

யமனுக்கு எச்சரிக்கை (339 – 352)

வருமுன் காப்பவன் (339), முன் பாதுகாப்பு (340), காலத்தில் வேலை (340), பழியும் புகழும் (341), பாட்டியின் தீர்ப்பு (342), எய்ப்பில் வைப்பு (342), அருணகிரியார் பெற்ற உறுதி (344), வேலனும் காலனும் (344), பால் உண்ட பாலன் (345), பாவனை (349), படைக்கலங்கள் (350), படைக்கலங்களின் உண்மை (351)

சொல்லின் செல்வன் பி.என். பரசுராமன் எழுதிய நூல்கள்

1. வாரியார் சொற்பொழிவில் கேட்டவை I
2. வாரியர் சொற்பொழிவில் கேட்டவை II
3. அஷ்டாவக்ரர் உபதேசங்கள்
4. விதுர நீதி
5. பர்த்ருஹரியின் நீதி சதகம்
6. சனத்குமாரரின் உபதேசங்கள்
7. பீஷ்மர் சொன்ன தத்துவக் கதைகள்
8. விபூதி, ருத்ராட்சம் மகிமை
9. மன உறுதியுடன் வாழ வைராக்கிய சதகம்
10. சித்தர்கள் சரித்திரம்
11. யட்சப் பிரச்னம் & பிரச்னோத்ர ரத்னமாலிகா
12. துணுக் துணுக்குகள்
13. சித்ரகுப்தன் கதைகள்
14. அருணகிரிநாதரின் ராமாயணம்
15. ஊருக்கு நல்லது சொல்வேன்
16. மஹா ஸ்வாமிகள் அருளிய ஆதிசங்கரர் வரலாறு
17. மனோபோதை
18. அர்த்தமுள்ள கண்ணதாசன் பாடல்கள் I
19. ஸ்ருங்கார சதகம்
20. நீதிக் கதைகள் பாகம் 1
21. நீதிக் கதைகள் பாகம் 2
22. அம்மன் சந்நதி அற்புதங்கள்

(மேலும் ஆசிகள் நம்மைத் தேடி வரும்)

முன்னுரை

கந்தர் அலங்கார விளக்கச் சொற்பொழிவுகள் அடங்கிய அலங்கார மாலையில் இது பதின்மூன்றாவது மலர். இந்தப் புத்தகத்தில் அறுபத்தாறாவது பாடல் முதல் அறுபத்தொன்ப தாவது பாடல் வரையில் உள்ள நான்கு பாடல்களுக்குரிய விரிவுரைகள் இருக்கின்றன.

போலிவேதாந்தம் பேசி, வாழ்க்கையில் அநுபவம் பெறு வதற்குரிய நெறியில் நடவாத மக்களை எண்ணிப் பரிகாசமாகப் பாடிய பாட்டு முதலில் இருக்கிறது. உடல் நிலையாமை, செல்வ நிலையாமைகளை வாயினால் பேசி, பிறருக்கு உதவும் இயல் பில்லாதவர்களின் ஞானம் போலியானது என்கிறார் அருண கிரியார்.

இரண்டாவது விரிவுரையில் வரும் பாடல் மானிடப் பிறவி யின் அருமையையும் இதனைப் பெற்றதனால் செய்ய வேண் டியதையும் குறிக்கிறது. இவ்விடத்தில் மானிடப் பிறவி சிறந்ததென்பதற்குரிய காரணங்களையும், பாரத நாட்டில் எடுத்த பிறவி பின்னும் சிறந்தது என்பதற்குரிய காரணங்களையும் விரிவாகச் சொல்லியிருக்கிறேன். இந்தப் பாடலின் பிற்பகுதியில் தேவயானையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார் அருணகிரியார். அப்பிராட்டியைப் பற்றிய செய்தி மிகவும் அருமையாகவே வருகிறது. இப்பகுதிக்குரிய விளக்கத்தில் கந்தபுராணத்தில் வரும் தேவயானை திருமண வரலாற்றை விரிவாகச் சொல்லியிருக் கிறேன்.

அடுத்த பாடல் முருகனுடைய அன்பு முறுக முறுகக் கால தேச எல்லை கடந்த இன்பம் உண்டாகும் என்பதைச் சொல்வது. அதீதத்திலே உண்டாகும் பேரானந்த நிலையை அப்பாடல் சொல்கிறது.

இப்புத்தகத்தில் உள்ள கடைசிக் கட்டுரை யமபயத்தைப் போக்கும் தன்மை வாய்ந்தது. முருகப் பெருமானுடைய திருவருள்

வலிமையினால் காலனையும் வெல்லும் ஆற்றல் தமக்குக் கிடைத்திருப்பதை மிக்க ஊக்கத்துடன் கூறுகிறார் அருணகிரியார். இத்தகைய பாடல்கள் பலவற்றைக் கந்தர் அலங்காரத்தில் பார்க்கிறோம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் அமைந்திருக் கிறது. காலனையே நோக்கிச் சொல்லும் வகையில் சில உண்டு. இந்தப் பாடல் காலனைப் படர்க்கையில் வைத்துப் பாடியது. இத்தகைய பாடல்களைப் பல முறை பாடிப் பாடிப் பயில்வதனால் நம் மனத்தில் ஒரு வகை உறுதிப்பாடு உண்டாகும். மெல்ல மெல்ல அச்சம் நழுவிவிடும்.

இந்த அலங்கார மாலையில் முன்புள்ள புத்தகங்களில் சொன்ன சில கருத்துக்கள் இந்தப் புத்தகத்திலும், வரலாம். ஒரே கருத்து வெவ்வேறு பாடலில் வரும்போது அதை விளக்க வேண்டியது அவசியமாகிறது. ஆயினும் கூடிய வரையில் முன் சொன்னவற்றை இங்கே சொல்லும்போது சுருக்கிச் சொல்லியும் வேறு முறையிற் சொல்லியும் விளக்கியுள்ளேன்.

இலங்கை,பர்மா, தமிழ்நாடு ஆகிய இடங்களில் இந்த அலங் கார மாலையைப் படித்து மகிழ்பவர் பலர். இந்த மாலையினால் எனக்கு நெருங்கிய நண்பரானவர் பலர். எல்லாம் முருகப் பெருமானுடைய திருவருளே.

இன்னும் ஏழு புத்தகங்களில் இந்த மாலையை ஒருவாறு நிறைவேற்றலாம் என்று எண்ணியிருக்கிறேன். முருகன் திருவருள் துணை நிற்க வேண்டும்.

கி.வா. ஜகந்நாதன்

நீர்க்குமிழி

பல காலம் பெரியவர்களை அண்டி உண்மை உணர்ச்சி பற்று இறைவனிடத்தில் இடையறாத அன்பு கொண்டு, பல கைச் சாதனங்கள் புரிபவர்களுக்கே உண்மை உணர்வு கிடைப்து அரிதாக இருக்கிறது. அப்படி இருக்க, சில நூல்களைப் டித்துவிட்டுப் பல செய்திகளைத் தெரிந்து கொண்டு வெறும் ாசாஞானமாகப் பேசுபவர்களுக்கு இறைவன் அருள் எவ்வாறு டைக்கும்? நூல்களின் நுட்பங்களைத் தெரிந்து கொண்டு ன்றைப் பத்தாகப் பெருக்கிப் பேசினாலும் அவர்களுடைய ள்ளத்தில் ஈரம் படியாது. இரும்பினால் அமைந்த குழாயில் ,யிரம் ஆண்டுகள் தண்ணீர் ஓடினாலும் அதனூடே ஈரம் ற்றுவது இல்லை. அது போல வேதாந்த சித்தாந்த சாஸ்திரங் ளைப் பலகாலம் படித்துக் கரைகண்டிருந்தாலும் அவற்றி ள்ள சிக்கலைத் தெளிவு படுத்த முடியுமேயன்றி அவர்களது சாந்த அநுபவத்தில் இம்மியளவும் படியாது. நூல் உலகத்தில் _மாடுகிறவர்கள் அங்கங்கே மோதும் மோதல்களைத் தவிர்க் லாம். சந்தேகங்களைத் தெளிவாக்கிக் கொள்ளலாம். அத்தனை ம் நூல் உலகத்திற்குள் அமைந்தவைதாம். அநுபவம் என்பது ல் உலகத்திற்கு அப்பாற்பட்டது; இறைவன் அருள் உலகத்தின் ல்லையில் இருப்பது.

உபதேசப் பழக்கம்

மனிதன் வாய் உள்ளவனாக இருப்பதனால் நன்றாகப் பேசக் ற்றுக் கொண்டிருக்கிறான். பிராயம் அதிகமாக அதிகமாகத் ன்னைக் காட்டிலும் சிறியவர்களுக்கு உபதேசம் செய்யும் பழக்கம் வனுக்கு ஏற்பட்டுவிடுகிறது. தெரிகிறதோ, தெரியவில்லையோ, ான் அநுஷ்டிக்கிறானோ இல்லையோ, பிறனுக்குக் குருநாதனா தில் அவனுக்கு ஆசைதான். ஆனால் அவன் நெஞ்சு சொல்லும், நீ எந்த அளவில் அநுஷ்டித்தாய்?'' என்று. வேதாந்தத்தின்

தலைநிலத்திலுள்ள சுகப்பிரம்மத்துக்கு அடுத்த அவதாரமாகத் தம்மைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அவ்வப்போது உள்ள உள்ளக் கிளர்ச்சியினால் சகஜ சமாதி நிலை அடைந்தவர்களாகத் தம்மை எண்ணிக் கொண்டிருபபார்கள். யாரேனும் சிறிது கோப மாகப் பேசினால் உடனே சள்ளென்று விழுவார்கள். இவர் களுடைய ஞானம் எல்லாம் நுனி நாக்கின் அளவில் நிற்பது.

சொல்வது குறைவாகவும், செய்வது மிகுதியாகவும் இருப் பவன் அறிவாளி.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணஞ் செயல்"

என்று வள்ளுவர் கூறுகின்றார். தம்முடைய செயலினாலே பிறருக்கு வழிகாட்டுகிறவன்தான் உலகத்தாருக்குப் பயன்படுகிற குருநாதன். வெறும் வாசாலத்தினால் பேசுகின்றவர்களைப் பற்றி அருணகிரிநாதர் சொல்லி நகைக்கிறார்.

நீர்க்குமி ழிக்கு நிகர்என்பர் யாக்கைநில் லாதுசெல்வம்,
பார்க்கும் இடத்துஅந்த மின்போலும் என்பர்; பசித்துவந்தே
ஏற்கும் அவர்க்குஇட என்னின்எங் கேனும் எழுந்திருப்பார்;
வேல்குமரற்கு அன்பிலாதவர் ஞானம் மிகவும்நன்றே!

உடம்பு நிலையாமை

நாம் பிறருக்குக் கொடுக்காமல் எத்தனை சாப்பிட்டால்தான் என்ன? இந்த உடம்பை வளர்ப்பதற்கு ஒவ்வொரு நாளும் மூன்று வேளை வயிற்றில் சோறு கொட்டிக் கொள்கிறோம். அப்படி உள்ளே தள்ளுகிற சோறாவது வயிற்றில் தங்குகிறதா? பலகாலம் சோறு ஊட்டியூட்டி வளர்த்த இந்த உடம்பாவது நிலைத்து நிற்கிறதா? யாவுமே வீணாக அழிந்து போகின்றன. ஒருவேளை சாப்பிட்ட உணவு மறுவேளை இல்லாமல் போகிறது. ஒரு பிறவி யில் வளர்த்த உடம்பு சில ஆண்டுகளில் அழிந்து போகிறது. நீரில் உண்டாகும் கொப்புளம் போல இந்தப் பிரபஞ்சத்தில் உண்டாகும் உடம்பு அழிந்து போகிறது. ஐந்து பூதங்களினால் ஆனது பிரபஞ் சம். அதற்குள் ஒரு குட்டிப் பிரபஞ்சமாக இருப்பது உடம்பு; உயிர்க் கூட்டங்களுக்கு எல்லாம் உடம்பாகப் பிரபஞ்சம் இருக் கிறது. தனி உயிருக்குப் பிரபஞ்சமாக இந்த உடம்பு இருக்கிறது.

பிரபஞ்சமே அழியும் தன்மை வாய்ந்தது. பிரபஞ்சம் முற்றும் அழியும் காலத்தைப் பிரளயம் என்று சொல்வார்கள். இந்த உடம்பு அழியும் காலத்தை மரணம் என்று சொல்கிறோம். பிறருக்கு உபதேசம் செய்கிறவர்கள் இவற்றையெல்லாம் நினைப் பூட்டி, இந்த உடம்பு நீர்க்குமிழிக்குச் சமானமானது என்று சொல் வார்கள்.

நீர்க்குமிழிக்கு நிகர் என்பர் யாக்கை.

''நீர் மேல் குமிழி இக் காயம்'' என்று பரதேசிப் பாட்டில்கூட வருகிறது.

நீரில் தோன்றுகின்ற குமிழியைப் பார்த்தால் பளபளப்பாக இருக்கும். ஆனால் அது எந்தச் சமயத்தில் உடைந்து போகும் என்று யாராலும் சொல்ல முடியாது. இந்த உடம்பும், நெய்யும் பாலும் உண்டு, மருந்தும் விருந்தும் அருந்திப் பளபளப்பாக இருக்கிறது. பருவம் வந்துவிட்டாலோ புது மெருகு பெற்று விளங்குகிறது. அதிலும் பெண் உடம்பாக இருந்தால் பிறர் உள்ளத்தைக் கவரும் தன்மை உடையதாக இருக்கிறது. இப்படி உள்ள உடம்பு திடீரென்று ஒருநாள் அழிந்து போகிறது. இயற்கையோடு வளர்வதாக இருப்பின், நாளடைவில் அந்தப் பொலிவு போய்ச் சுருங்கித் தளர்ந்து முதுமை அடைந்து கெட்டுப் போகிறது. எல்லாருமே முதுமை வந்து இறப்பதில்லை. கட்டிளங் காளையாக இருப்பவன் திடீரென்று ஒருநாள் இறந்து போகிறான். உலக இன்பத்தை எல்லாம் அடைந்து வாழலாம் என்ற நம்பிக்கை யோடு உடம்பை வளர்த்து, அழகுக் கலைகளுக்கு ஏற்ப அலங்காரம் பண்ணிக் கொண்டு வாழும் மட மங்கை உலக இன்பத்தை நுகராமல் திடீரென்று இறந்து போகிறாள். இவற்றை யெல்லாம் பார்க்கும்போது, இந்த யாக்கை நீர்க் குமிழிக்கு நிகர் என்று சொல்வது எவ்வளவு பொருத்தம் என்று தோன்றுகிறது.

பெரிய ஞானிகள் யாக்கை நீர்க் குமிழிக்கு நிகர் என்று அறிந்து, இந்த யாக்கை அழிவதற்குள்ளே என்ன என்ன செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்வார்கள். உலகத்தாருக்குக் கேட் கும்படி, ''இந்த யாக்கை அழியும், அழியும்'' என்று சொல்லிக் கொண்டிருக்க மாட்டார்கள். தான் பசித்தவன், ''நீ சோறு உண்ணு'' என்று பிறன் ஒருவனைப் பார்த்துச் சொல்லமாட்டான்.

''பசிக்கேற்ற உணவு எங்கே இருக்கிறது?'' என்று தானே தேடி ஓடுவான்.

வாய் வேதாந்திகளோ தம்முடைய யாக்கை மாத்திரம் பலகாலம் வைரமாக இருப்பது போல எண்ணித் தம் அளவில் நிலையாமையை உணர்ந்து கொள்ளாமல் இருப்பார்கள். ஆனால் அடிக்கொரு தரம், ''இந்த உடம்பு அழியக்கூடியதுதானே?'' என்று சொல்வார்கள். அது மாத்திரம் அன்று. தம்முடைய உடம்புக்கு வேண்டிய உணவுகளை உ ணும்போது, ''ஆத்ம வஞ்சனை பண்ணக் கூடாது'' என்றும் இவர்கள் பேசுவார்கள். உயிரை வைத்திருக்கிற உடம்பு அவர்களுக்கு ஆத்மாவாகிவிடும். தமக்கு ஒரு நியாயம், ஊருக்கு ஒரு நியாயம் என்று பேசுகின்ற போலி வேதாந்திகள் அவர்கள்.

செல்வம் நிலையாமை

அடுத்தபடி, இந்த வாழ்க்கைக்கு இன்றியமையாதது செல்வம். உலகம் முழுவதும் செல்வத்தைத் தேடிக் கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் ஓரிடத்தில் செய்த உழைப்பின் பயன் பிறிதொரு காலத்தில் வேறு இடத்தில் வந்து உதவும் படியாகச் செல்வம் செய்கிறது. அதுவும், நாணயம் வந்துவிட்ட இந்தக் காலத்தில், நம்முடைய உழைப்பின் சாரத்தை எல்லாம் பணமாகச் சேர்த்துக் கொள்கிற உபாயம் இருக்கிறது. அதனால் ஒவ்வொரு மனிதனும் ரூபாய்,அணா, பைசாக் கணக்கில் தன் உழைப்பின் சக்தியைப் கணக்கிட்டு ஈட்டுகிறான். அறிவாளி பணம் சேர்க்கிறான். உழைப்பாளி பணம் சேர்க்கிறான். வியாபாரிகளும் பணம் சேர்க்கிறார்கள். பண்டமாக இருந்தால் ஒரு காலத்திற்கு மேல் வைத்துக் கொள்ள முடியாது. அவற்றை அவ்வப்போது பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பழங்காலத்தில் பெரிய பணக்காரர்களாக இருந்தவர்கள் நிறைய நெல் முதலிய பண்டங்களைச் சேமித்து வைத்திருப்பார்கள். அவற்றைச் சில ஆண்டுகளில் தானத்திலும், தர்மத்திலும் செலவிட்டுப் புதிய முயற்சியில் ஈடுபடுவார்கள். நாணயம் என்ற உருவத்தில் உள்ள பேய் வந்த பிறகு தம்முடைய உழைப்பை எல்லாம் நாணயமாக்கிக் கொள்ள முயலுகிறார்கள் மக்கள். எந்த இடத்திலும், எந்தக் காலத்திலும் அது செல்லும்; ஆதலால் பிறருக்கு அளிக்காமல் நாணயத்தைச் சேர்த்துக் கொள்

கிறார்கள். பிறருடைய நாணயத்தைத் திருடிக் கொள்ளவும் முயற்சி செய்கிறார்கள். ஓரளவு நாணயம் சேர்ந்துவிட்டால், இனி நாம் உழைப்பது எதற்கு என்று சோம்பேறிகளாகவும் ஆகிறார் கள். நாணயம் என்ற சனியன் வந்த பிறகு ஒருவகையில் மனிதனுக்கு முயற்சி இருந்தாலும் மற்றொரு வகையில் தானம், தவம் என்ற உணர்ச்சி செத்துப்போய்ப் பேராசை மிகுதியாகி விட்டது. பணக்காரர்களுக்குச் சோம்பேறித்தனமும் உடன் பிறந்த இயல்பாகிவிட்டது.

இப்படிச் சம்பாதிக்கிற செல்வம் ஓரிடத்தில் நிலை பெற்று நிற்கிறதா? அந்தக் காலத்திலும் சரி, இந்தக் காலத்திலும் சரி, செல்வம் நிலையாக நிற்பது இல்லை. அது எப்போதும் உருண்டு கொண்டே இருக்கிறது. ஆற்றிலே நிரம்ப வெள்ளம் வந்தால் இரு கரையையும் தொட்டுக் கொண்டு ஓடுகிறது. பின்பு வெள்ளம் வடிந்து விட்டால் சில இடங்களில் மேடுகள் உண்டா கின்றன. இந்த ஆண்டு ஓரிடத்தில் மேடு இருக்கிறது என்று கண்டோமானால், அடுத்த வெள்ளத்தில் அந்த மேடு அப்படியே இருக்கும் என்று சொல்ல முடியாது; வேறு எங்கேயோ மேடு உண்டாகிவிடும். இதை உணர்ந்து,

"ஆறிடு மேடும் மடுவும்போ லாம்செல்வம்"

என்று பெரியவர்கள் சொன்னார்கள். மேகம் வானத்தில் நிரம்பி யிருக்கிறபோது மின்னல் அடிக்கிறது. அது பளிச்சென்று தோன்று கிறது. ஆனால் அடுத்த கணத்தில் இருக்கும் இடம் தெரியாமல் மறைகிறது. நம்முடைய வாழ்க்கை என்கிற நீண்ட காலத்தைக் கொண்டு பார்ப்போமானால் செல்வமும் சிறு காலமே நின்று போய்விடுகிறதென்று உணரலாம். மின்னல் தோன்றி மறைவது போலவேதான் செல்வமும் தோன்றி மறைகிறது.

நில்லாது செல்வம்
பார்க்கும் இடத்து அந்த மின்போலும் என்பர்.

வெறும் வாய் ஞானம் பேசுகின்றவர்கள் இதையும் எடுத்துச் சொல்வார்கள். பிறருடைய செல்வதைப் பெற்றுக் கொண்டு இதைச் சொல்வார்கள். ஆனால் தம் அளவில் செல்வம் சேர்த்துக் கொண்டிருப்பார்கள். "இறைவனுடைய திருவருளால்தான் செல்வம் சேருகிறது. அதற்கு நாம் தர்மகர்த்தாவாக இருக்க வேண்டும்

நமக்கு வருகின்ற தீங்குகளைப் போக்கிக் கொள்வதற்கு அறம் செய்ய வேண்டும். நல்ல காரியங்கள் செய்ய வேண்டும். அதற்கு இத்தனை ரூபாய் ஆகும்'' என்று பிறருக்கு உபதேசம் செய்து தம் பொருளைச் சேர்த்துக் கொள்கிற மக்கள் உலகத்தில் பலர் இருக்கிறார்கள். பிறருடைய செல்வத்தைப் பற்றிக் கவலைப் படாமல் தம்முடைய செல்வத்தை மாத்திரம் பாதுகாத்துக் கொள்கிறவர்களைவிட இவர்கள் இழிந்த மக்கள். உண்மையில் உயிர்களிடத்தில் அன்பு இருந்தால் தம்முடைய செல்வத்தையும் பிறருக்குப் பகிர்ந்து அளிக்கும் மனப்பாங்கு உண்டாகும். அந்த அன்பு இல்லாதவர்கள் பிறருடைய செல்வத்தைப் பற்றிக் கூறுகிறார்களேயன்றித் தம்முடைய செல்வம் எப்போதும் நிலை யானது என்றே நினைத்துக் கொண்டிருப்பார்கள்.

வாசாஞானிகள்

யாக்கையின் நிலையாமையையும், செல்வத்தின் நிலையா மையையும் பிறருக்குத் தம்முடைய உபதேசங்களாலும், விரி வுரைகளாலும், கதைகளாலும் எடுத்து விரிக்கின்ற பேர்வழிகள் உலகத்தில் மிகுதியாக இருக்கிறார்கள். எல்லோரும் குரு நாதர்களாக ஆக ஆசைப்படுகிறார்களேயொழிய மாணாக்கர்களாக இருக்க விரும்புகிறவர்கள் மிகவும் அருமை. தாம் உணர்ந்து கண்டுவிட்டால் அதனை அநுஷ்டானத்தில் நாமே கொண்டு வந்திருக்கிறோமா என்று அவர்கள் எண்ணிப் பார்ப்பது இல்லை. உணர்ந்தது ஒன்று; ஆனால் சொல்வது பத்தாக இருக்கும். உணர்ந்ததையே செயல் முறையில் கொண்டுவராதபோது தாம் சொல்வனவற்றையெல்லாம் எப்படிக் கொண்டுவருவார்கள்?

பசித்து வந்தவன்

ஒருவர் தினந்தோறும், ''என்ன உடம்பு வேண்டியிருக்கிறது? இது நீர்க்குமிழி போன்றது. இதைப் போய் ஒருவன் காப்பாற்றிக் கொண்டிருப்பானா?'' என்று சொல்லிக் கொண்டு வந்தார். பணத்தைப் பற்றிப் பேச்சு வந்தால், ''செல்வம் மின்னலைப் போன்றது. அது ஓரிடத்தில் தங்குவது இல்லை. அதற்கு ஆசைப் படலாமா?'' என்று சொல்வார். ஒருநாள் அவருடைய வீட்டுக்கு ஓர் ஏழை வந்தான்; இரண்டு நாட்களாக உணவைக் காணாதவன்

அவன். அவனுடைய முகத்தைப் பார்த்தாலேயே பசி என்று எழுதி ஒட்டியிருப்பதுபோல இருந்தது. உடம்பிலே சோர்வு; வார்த்தையிலே தளர்ச்சி; நடக்கும் போதே விழுந்துவிடுவான் போலத் தோன்றியது.

அவன் மேலே சொன்னவருடைய வீட்டு வாசலுக்கு வந்து, ''ஐயா! பசி தாங்க முடியவில்லை. ஒரு கவளம் சோறு போடுங்கள்'' என்று சொன்னான். அவர் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ''அடடா, நான் மறந்துவிட்டேனே! அடுத்த ஊருக்குப் பத்து மணிக்கு வருவதாகச் சொல்லியிருந்தேனே! என்ன மடத்தனம்?'' என்று உடனே வீட்டைவிட்டே புறப்பட்டு விட்டார். அவருக்கு உண்மையில் வேறு ஊரில் வேலை இருக்கிறதோ இல்லையோ, அது நிச்சயம் இல்லை. ஆனால் தம் வீட்டுக்கு எதிரே வந்து நின்று, ''ஐயா பசி'' என்றானே, அந்த ஏழைக்கு ஒரு கவளம் சோறு இந்தா என்று சொல்ல அவருக்குப் புண்ணியம் இல்லை; இல்லையென்று சொல்லவோ தைரியம் இல்லை. ஆதலால் அவனைக் கவனிக்காதவர் போல, எங்கேயோ போகிறவர் போன்று எழுந்து போய்விட்டார். யாக்கை நிலையாதது என்றும், செல்வம் நிலையாதது என்றும் சொல்கிற அந்தப் பெருமான் தம் அளவில் இத்தகைய கைங்கர்யத்தைச் செய்கிறார். அவரைப் பார்த்து அருணகிரியார் சொல்கிறார்.

நீர்க்குமிழிக்கு நிகர் என்பர் யாக்கை நில்லாதுசெல்வம்
பார்க்கும் இடத்து அந்த மின்போலும் என்பர், பசித்துவந்தே
ஏற்கும் அவர்க்குஇட என்னின் எங்கேனும் எழுந்திருப்பார்.

போகிற இடம் இன்னது என்று சொன்னால் அந்த ஏழையும் அங்கே வந்துவிடலாம். அல்லது யாராவது அவனை அங்கே அனுப்பி வைத்துவிடலாம். ஆகவே அந்த இடத்தைக்கூடச் சொல்ல மாட்டார்களாம்! இப்படி உயிர்களிடத்தில் அன்பு இல்லாதவர்கள் தம்மை இறைவனுடைய பக்தர்கள் என்று சொல்வதைக் காட்டி லும் கேலிக் கூத்து வேறு இல்லை.

சர்க்கரை ஞானம்

சர்க்கரையைப் பற்றிப் பேச்சு வருகிறபோது மணிக்கணக்கில் ஒருவர் பேசுவார். கரும்பைப்பற்றியும், அதன் சாகுபடியைப்

பற்றியும், அது எந்த நிலத்தில் விளைகிறது என்பதைப் பற்றியும், கரும்புச் சாற்றை ஆலையில் சர்க்கரையாக எவ்வாறு மாற்று கிறார்கள் என்பதைப் பற்றியும் மிகமிக விரிவாகப் பேசுவார். அது சம்பந்தமாக இருநூறு புத்தகங்களுக்கு மேல் தாம் படித்த தாகச் சொல்வார். ஆனால் அவர் ஒரு பிடி சர்க்கரையை வாயில் போட்டுச் சுவைத்து அறியாதவர். சர்க்க்ரையைப் பற்றி அவரு டைய ஞானம் எத்தகையது?

வேறு ஒருவன் கரும்பு பற்றிய விஷயமோ, சர்க்கரை ஆலையைப் பற்றிய செய்தியோ ஒன்றையுமே விரிவாகத் தெரிந்து கொள்ளாதவன்; அதைப் பற்றிப் பேசத் தெரியாதவன். ஆனால் தினந்தோறும் சர்க்கரையைப் பிடிப்பிடியாகத் தின்கிறவன். அவன் சர்க்கரையைப் பற்றி விளம்பரம் செய்து கொண்டிருக்க மாட்டான். முடிந்தால் ஒரு பிடி சர்க்கரையைப் பிறருக்கு கொடுப்பான். அவன் உண்மையில் அநுபவிக்கிறவன். ஆகை யால் வாயளவில் அப்படி இப்படி என்று பேசுவதைக் குறைத்துக் கொள்கிறான். பேசாமல் இருக்கிறான். வாய் நிறையச் சர்க்க ரையைப் போட்டுக் கொண்டால் எப்படிப் பேசுவது? எங்கே உண்மையான அநுபவம் உண்டாகிறதோ அங்கே பேச்சுக்கு இடம் இல்லை. ''கண்டவர் விண்டிலர்'' என்கிற பழமொழியை நாம் கேட்டிருக்கிறோமே.

பேசா அநுபூதி

''அங்கே
பொங்கிவரும் பாலுண்டு அங்கம் இளைப் பாறிக்கொண்டு
தங்கப்பொம்மை போலே என்றும் நில்லுமே - துன்பம்
-வெல்லுமே
அதைக், கண்டாரும் விண்டதில்லை விண்டாரும்
கண்டதில்லை
அண்டாண்ட கோடியெல்லாம் ஒன்றாய்ப் பரந்திருக்கும்
அல்லவோ - அடியேன் - சொல்லவோ''

என்று நந்தனார் சரித்திரக் கீர்த்தனத்தில் அநுபவத்தையும், வாக்கையும் பற்றிய செய்திகள் வருகின்றன. இறைவனுடைய திருவருளால் அநுபவம் முதிர்ந்தவர்களுக்கு அதைப் பற்றிப் பேசுவதற்கு வாய் வராது.

"பேசா அநுபூதி பிறந்ததுவே"

என்று தம்முடைய அநுபவத்தை இறைவனுடைய அருளிலேயே மறைத்துப் புதைத்துக் கொள்வார்கள் பெருமக்கள்.

உலகத்தில் எந்த அநுபவமானாலும் அநுபவ முதிர்ச்சியில் பேச்சு எழாது. பெரும் புத்தகத்தைப் படித்து அறிந்து கொண்டாலும், அதனூடே அநுபவிக்கின்ற ஒரு நிலையில் எல்லாம் மறந்து, 'தூங்காத தூக்கம்' சித்திக்கும்.

"சொற்பாவும் பொருள் தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்காதானை"

என்று அப்பர் சுவாமிகள் சொல்வர். அப்படி ஒன்றிலே ஈடுபட்டவனுக்கு வேறு எதிலும் நாட்டம் இராது. எந்தப் பேச்சும் காதில் விழாது. அதற்குள்ளே புதைந்து போவான். சிறிதுகூட அநுபவம் இல்லாதவர்களே புத்தகத்தைப் படித்துப் படித்துப் பலபடியாக விரித்துப் பேசுவார்கள். அஷ்டாங்க யோகத்தைப் பற்றியும், சந்திர மண்டலத்தை முட்டி அமுத நுகர்ச்சி பெறுவதைப் பற்றியும், ஆதார யோகத்தைப் பற்றியும் மணிக்கணக்காக அளப்பார்கள். அத்தனை பேச்சும் உணர்ச்சி இல்லாத பேச்சு; அந்தப் பேச்சைப் பிழிந்தால் ஒரு சொட்டுக்கூட அநுபவம் இராது.

பிறர் துன்பத்துக்கு இரங்கல்

இப்படிப் பேசுகின்றவர்கள் மனிதனுக்கு மனிதன் காட்டுகின்ற இரக்கங்கூட இல்லாதவர்களாக இருப்பார்கள். "யாக்கையே நிலை இல்லாதபோது அதற்கு வரும் துன்பம் மாத்திரம் நிலைத்தது ஆகுமா?" என்று நினைக்கிறார்களோ என்னவோ தெரியாது. ஆனால் பிறருக்குப் பசி வரும்போதுதான் இந்த வேதாந்தத்தைச் சொல்ல முடியும். அவர்களுக்குப் பசி வந்து விட்டால் வீடே திமிலோகப்பட்டுவிடும். பசியினால் வரும் துன்பத்தைத் தம் அநுபவத்தில் உணர்ந்திருக்கிறபோது அதே துன்பம் மற்றவனுக்கும் உண்டு என்பதை உணர முடியாதா? இத்தனை பேசத் தெரிந்து கொண்ட அவர்களுக்கு அதை உணரவும் தெரியும். ஆனால் அவர்கள் உணர மறுக்கிறார்கள். உணர்ந்தாலும் செயலிலே காட்டுவது இல்லை.

நாம் உண்ணும்போது வேறு யாரேனும் ஒருவருக்காவது கொடுத்துச் சாப்பிட வேண்டுமென்பதை அருணகிரியார் பலமுறை வற்புறுத்தியிருக்கிறார்.

''யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி''

என்று திருமூலர் சொல்வார். நீ நொய்யாகச் சாப்பிடுவாயானால் அதில் குறுணையாகத் தர்மம் செய் என்று அருணகிரிநாதப் பெருமான் அநுபவ பூர்வமான வழியைச் சொல்லித் தந்தார். பிறருடைய பசியைப் போக்குவது போன்ற தர்மம் வேறு ஒன்றும் இல்லை. தனக்கு உணவை வைத்துக் கொண்டிருக்கிறவன் தன் னுடைய குழந்தையின் பசியைக் கண்டால் உடனே அதற்கு ஊட்டுகிறான். பசி என்கிற துன்பம் தெரியாத மனிதன் யாருமே இல்லை. ஆதலால் மற்றப் பெரிய தானங்கள் செய்வதைக் காட்டிலும் பிறனுடைய பசியை நீக்கும் தர்மம் எல்லோருக்கும் உரியது. மிகமிகப் பெரியது. அதை அடியோடு மறந்து அதனைச் செய்ய எண்ணாமல் ஏமாற்றுகிற மக்கள் உடம்பு நிலையாமையைப் பற்றிப் பேசி என்ன பயன்?

சோம்பேறிகள்

உலகத்தில் நல்லதைச் சொல்லுகின்ற ஆசிரியன்மார்கள் இல்லாமல் மனிதர்கள் கெட்டுப் போகவில்லை. நல்லதைச் சொல்லி விட்டுத் தாம் அவ்வாறு நடக்காமல் இருக்கிற போலிக் குருமார்களால்தான் உலகம் கெட்டுப் போகிறது. அத்தகையவர் களால் உண்மையில் அநுபூதிமான்களாக இருக்கிற நல்லவர் களுக்கும் கெட்ட பெயர் உண்டாகிறது.

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று''

என்று வாசாமகோசரமாகப் பேசுவார்கள். ஆனால் கோயிலுக்கு போகமாட்டார்கள். ''ஏன் நீங்கள் கோயிலுக்குப் போகவில்லை?'' என்று கேட்டால் அப்போது ஒரு புதிய வேதாந்தத்தைச் சொல் வார்கள். ''ஆண்டவன் கோயிலில் மாத்திரம் இருக்கிறானா? ஒவ்வொருவனுடைய உடம்பிலும் இருக்கிறான். உடம்பையே கோயிலாகக் கொண்டு வாழ்கிற பெருமான் அவன்'' என்று சொல்வார்கள். அப்படிச் சொல்வதற்குக் காரணம் அவர்கள் ஞானத்தில் முறுகி நின்றவர்கள் என்பது அன்று. பிறருக்கு உப தேசம் செய்து தாம் அதன்படி நடக்காத பெரிய சோம்பேறிகள்

அவர்கள். இத்தகையவர்கள் தம்மையும் கெடுத்துக் கொண்டு தம்மைச் சார்ந்தவர்களையும் கெடுத்து விடுகிறார்கள்.

ஆண்டவனை நம்முடைய உடம்பாகிய ஆலயத்தில் கண்டு பூசை புரிவது என்பது கிள்ளுக் கீரையா? கண்ணுக்கு முன்னாலே உருவம் எடுத்துக் கொண்டு வந்து நிற்கிற விக்கிரகங்களையே பார்க்க வேண்டிய முறையில் பார்க்க நமக்குத் தெரிவது இல்லை. கண்ணுக்கு முன்னால் நிற்கும் அந்தப் பெருமானைத் தரிசிக்கும் போதே ஆயிரம் ஆயிரம் வேறு பிற காட்சிகளும், எண்ணங்களும் வந்து நம் உள்ளத்தில் போராடிக் கொண்டிருக்கின்றன. இறை வனைப் பார்த்துக் கொண்டே இருக்கும்போது அந்த உருவத்தின் மேலுள்ள ஆபரணத்தில் உள்ளம் செல்கிறது; ஆடையில் உள்ளம் செல்கிறது. நம்முடைய வீட்டுக்கும் இப்படி விளக்குப் போட லாமே என்று ஏதோ ஞாபகம் வருகிறது. இப்படி இருக்கும் போது அந்தப் பெருமானுடைய ஒளி உருவத்தைக் கண்டு உள்ளப் பெருங்கோயிலில் வைத்துப் பூசித்து நம்மை மறந்து நிற்கிற நிலை எளிதில் வரக்கூடியதா? கோயிலுக்குப் போகாத சோம்பேறிகளோ மிக எளிதாக இறைவனைத் தம் உள்ளக் கோயிலில் வைத்துப் பூசிப்பதாகப் பேசுவார்கள். அவர்களால் உலகத்திற்குக் கெடுதியேயொழிய நன்மை இல்லை.

உயிர்களிடத்தில் அன்பு

ஆகவே, வாயினால் எத்தனை சொன்னாலும் அதைக் கொண்டு ஒருவருடைய தகுதியைத் தெரிந்து கொள்ள முடியாது. வேதாந்த சித்தாந்த நூல் பயிற்சி இல்லாமல், பஞ்சாட்சர ஷடாட்சர உபதேசம் இல்லாமல் இருந்தும், ஒருவன் பசித்து வந்தவர்களுக்குச் சோறு போடுவானேயானால் அவனே சிறந்த வன் என்று கொள்ளவேண்டும். சிலர் தாம் செய்கின்ற தவறான காரியங்களுக்கும், தம்முடைய சோம்பேறித்தனத்திற்கும் நூல் களில் இருந்து மேற்கொள் காட்டுவார்கள்; சமாதானம் பேசுவார்கள். ஆங்கிலத்தில் சொல்வார்கள், (Devil quotes the scripture) ''சனியன் வேதத்தை மேற்கோள் காட்டுகிறது'' என்று. அத்தகையவர்கள் உலகத்திலுள்ள ஆருயிர்களிடத்தில் அன்பு இல்லாதவர்கள்; உண்மையை உணராதவர்கள்; ஆண்டவனிடத்திலும் அன்பு இல்லாதவர்கள்.

வேல்குமரற்கு அன்பிலாதவர் ஞானம் மிகவும் நன்றே!

என்று அருணகிரிநாதர் அவர்களைப் பார்த்துப் பரிகாசம் பண்ணு கிறார்.

ஆருயிர்களிடத்தில் அன்பு இல்லாதவர்களுக்கு, அந்த ஆருயிர்களின் தலைவனாகிய ஆண்டவனிடத்திலும் அன்பு இருக்க நியாயம் இல்லை. முருகப் பெருமான் திருக்கையில் வேலை வைத்திருக்கிறான். அது ஞானமயமானது. உண்மை ஞானம் என்பது இறைவனையும், உலகத்திலுள்ள ஆருயிர்களை யும் ஒன்றாகப் பார்த்து அன்பு செய்வது. எவனுக்கு ஜீவகாருண் யம் இல்லையோ அவனுக்கு இறைவன் கருணை கிடைக்காது. இறைவன் கோயிலுக்குச் சென்று பலவகையான நிவேதனங் களைச் செய்து வழிபடுகின்றவர் பசித்து வரும் ஏழைக்கு ஒரு பிடி உணவு தராவிட்டால் அத்தனை நிவேதனமும் ஆண்டவனால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆருயிர்களிடத்தில் அன்பு செய்யாதவனுடைய அன்பை இறைவன் அன்பாகக் கொள்வ தில்லை. அருட்பிரகாச வள்ளலார் இந்தக் கருத்தை வெளியிடுகிறார்.

அவர் இறைவனிடத்தில் ஒரு விண்ணப்பம் செய்து கொண் டார். ''எம்பெருமானே! அடியேன் கூறும் விண்ணப்பத்தைத் திருச்செவியில் ஏற்றுக் கொண்டு அருள வேண்டும்'' என்கிறார்.

''அப்பா நான் வேண்டுதல் கேட்டு
அருள் புரிதல் வேண்டும்.''

இறைவனுடைய பெருமைகளை உலகத்திற்கு எல்லாம் சொல்ல வேண்டும் என்பது அவருடைய ஆசை. அப்படிச் சொல்வதற்குக் காரணம் உயிர்க்கூட்டங்கள் உய்ய வேண்டும் என்பதே. இறைவ னுடைய பெருமையை விளம்பரப்படுத்த வேண்டும் என்பது அவருடைய நோக்கம் அன்று. உயிர்கள் தம்முடைய சிறுமையை உணர்ந்து, அந்தச் சிறுமையைப் போக்கும் அருட்பெருமானாகிய இறைவனைப் பற்றித் தெரிந்துகொண்டு அவன் அருளுக்கு ஆளாக வேண்டும். அப்போதுதான் உய்யலாம். இந்தக் கருத்தை உலகத்து ஆருயிர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் ஆசைப்படுகிறார். தாம் தெரிந்துகொண்டதைப் போலச் சாமான்ய உயிர்களும் தெரிந்துகொண்டால் உலகமே இன்பமயமாகும் என்பது அவர் எண்ணம். இந்த எண்ணத்திற்கு மூலகாரணமாக இருப்பது

ஆருயிர்களிடத்தில் அவருக்கு உள்ள அன்பு. ஆகவே இறைவனிடத்தில் விண்ணப்பம் செய்து கொள்கிற அவர் முதலில்,

"ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்புசெய்தல் வேண்டும்"

என்கிறார். உயிர்களிடத்தில் அன்பு செய்ய இயலாதவன் இறைவனிடத்தில் அன்பு செய்யும் தகுதி இல்லாதவன்.

"எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே
எந்தை நினது அருட்புகழை இயம்பியிடல் வேண்டும்."

இறைவனுடைய சாம்ராஜ்யத்தில் அவனுடைய அருட்புகழை விளம்பரப்படுத்தும் விளம்பர மந்திரியாகத் தாம் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். பிரபஞ்சத்தில் உள்ள எல்லா இடங்களுக்கும், ஏன், எல்லா உலகங்களுக்குமே சென்று அவன் அருளை இயம்ப வேண்டுமாம். அந்த அருளாலே ஆருயிர்கள் உய்யவேண்டுமென்பது அவர் நோக்கம்.

இப்படி உயிர்களிடத்தில் அன்பு வைத்து இறைவனுடைய அருளை யாசிப்பவர்களுக்கு அது எளிதில் கிட்டும். அப்படியின்றித் தம்முடைய சகோதரனையே விரட்டி, தம் அண்டை வீட்டாரோடு விரோதித்து, பிச்சைக்கு வருகிற ஏழை எளியவர்களைக் கண்டு இரங்காமல் அடித்துத் துரத்துகிறவர்கள் எத்தனை தான் இறைவனுக்கு அபிஷேகம் செய்தாலும், பூசை செய்தாலும் அவர்களுடைய உள்ளத்தில் இறைவன் அன்பு பிறக்காது. பிறப்பதாகத் தோன்றினால் அது போலி அன்பு.

அறிவும் செயலும்

தாம் சொல்லும் சொற்களில் தமக்கே நம்பிக்கை இல்லாதவர்கள் பிறரை எப்படி நம்பச் செய்ய முடியும்? தாம் சொல்லும் சொற்களுக்குப் பொருள் இன்னது என்று தெரிந்து கொண்டால் போதாது. இலக்கியங்களுக்குப் பொருள் தெரிந்தால் இன்பத்தை நுகரலாம். ஆனால் வாழும் வகை இன்னது என்று சொல்லும் நூல்களுக்குப் பொருள் சொற்பொருள் மட்டுமன்று. தெரிந்து கொண்டவற்றைச் செயலாக மாற்றிக் கொள்வதுதான் அதற்கு முடிவான பொருள். சொல்லின் பொருளை மாத்திரம் தெரிந்து கொண்டு செயலாக ஆக்காமல் சோம்பேறிகளாக வாழ்கிறவர்கள் அந்த நூலைத் தெரிந்து கொண்ட முட்டாள்கள். ஆகவே யாக்கை

நிலையாதது என்றும், செல்வம் நிலையாது என்றும் நூலில் படித்து அந்த உண்மைகளுக்குப் பலபடியாக விரிவுரை சொல்வது அவர்களுடைய அறிவைக் காட்டாது. அன்பையும், அநுபவத்தை யும் காட்டாது. அவற்றை உண்மையில் உணர்ந்து கொண்டா ரானால் பிற உயிர்களுக்கு இரங்கி தம்முடைய செல்வத்தைப் பிறருக்கும் பங்கிட்டுக் கொடுக்கும் பாங்கு வரும். வாசாஞானம் பேசுகின்றவர்களுக்கு இத்தகைய செயல் இராது. இறைவன் திருவருளும் அவர்களுக்குக் கிடைக்கிறது இல்லை.

கங்கைப் புராணம்

இங்கே ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

காசியில் கங்கை ஓடுகிறது. அந்தக் கங்கையில் நீராடினால் பாவங்களை எல்லாம் போக்கிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை இந்த நாட்டில் பல காலமாக இருந்து வருகிறது. தம்முடைய இறுதிக் காலத்தில் காசிக்குச் சென்று அங்கே உயிர் நீத்துவிட வேண்டும் என்றும், அங்கேயே ஜலசமாதி அடைந்துவிட வேண்டும் என்றும் பல பெரியவர்கள் எண்ணி அங்கே போய் வசிக்கின்றார் கள். காசியின் மகிமையையும், கங்கையின் சிறப்பையும் பலர் விரித்துச் சொல்லியிருக்கிறார்கள். எத்தகைய பாவம் செய்தாலும் ஒரு முறை கங்கையில் நீராடினால் அது போய்விடும் என்று புராணங்கள் விரிக்கின்றன. பிரம்மஹத்தி தோஷமாக இருந் தாலும் கங்கையில் நீராடினால் போய்விடுமாம்.

கங்கையின் புராணத்தை அதன் கரையிலேயே பலர் படித்தும் விரித்தும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அதில் எத்தனை நம்பிக்கையோ! ஆண்டவனே அறிவான்.

ஒரு நாள் பார்வதியும், பரமேசுவரனும் பேசிக் கொண்டிருந் தார்கள். அப்போது பார்வதி, "இந்தப் புராணத்தில் கங்கையில் நீராடியவர்களுக்கு எல்லாப் பாவங்களும் போய்விடும் என்று சொல்லியிருக்கிறதே! இது உங்களுக்குச் சம்மதந்தானா? என்று கேட்டாள்.

"ஆம்; அதில் சந்தேகம் என்ன?" என்றான் இறைவன்.

"அப்படியானால் இங்கே வந்து மூழ்குகிறவர்கள் எல்லோ ருக்கும் மோட்சத்தில் இடம் இருக்குமா?" என்று பார்வதி கேட்டாள்.

''கங்கையில் மூழ்குகிறவர்கள் எல்லோரும் உண்மையாகவே தம்முடைய பாவம் போகும் என்ற நம்பிக்கை உடையவர்கள் என்று நினைக்கக் கூடாது. எவன் சத்தியமாக அதை நம்பு கிறானோ அவனுக்கே பயன் உண்டு. அப்படி நம்புகிறவர்கள் மிகவும் குறைவு. இதை வேண்டுமானால் உனக்குக் காட்டு கிறேன்'' என்றான் இறைவன்.

உடனே இறைவனும் இறைவியும் முதியவர்களாகக் கோலம் கொண்டார்கள். கங்கைக் கரைக்குச் சென்றார்கள். கிழவன் மெல்லக் கங்கையில் இறங்கி நீராட முயன்றான். அப்போது தடுக்கி விழுபவனைப் போல நடித்துக் கங்கை நீரோட்டத்தில் மிதந்தான். அம்பிகையாகிய கிழவி, ''ஐயோ, ஐயோ!'' என்று கத்தினாள். பலர் ஓடி வந்தார்கள். ''ஒரு பாவமும் இதுவரை செய்யாமல் இருக்கிற யாராவது ஒருவர் என்னுடைய கணவரை கரையேற்ற மாட்டாரா?'' என்று கெஞ்சினாள்.

வந்தவர்களில் பல பேர் ஒன்றும் புரியாதவர்களைப் போலத் தயங்கினார்கள். ''யார் இதுவரையில் ஒரு பாவமும் செய்யாத வரோ அவர்தான் அவரைப் போய் எடுக்க முடியும். இல்லா விட்டால் அவர் கீழே அமிழ்ந்து விடுவார். ஒரு பாவமும் செய்யாதவராக உங்களில் யாராவது இருந்தால் உடனே போய் என் கணவரைக் கரையேற்றுங்கள்'' என்று புலம்பினாள் கிழவி.

கங்கைப் புராணத்தைத் தினந்தோறும் படித்துக் கொண் டிருந்த அந்தணர், 'நாம் எத்தனையோ பாவம் செய்திருக்கிறோமே' என்று சும்மா இருந்துவிட்டார். புராணத்தைக் கேட்டுக் கொண் டிருந்தவர்களோ தாங்கள் பாவம் எதுவுமே செய்யாதவர்கள் என்று சொல்லும் தைரியம் இல்லாமல் நின்றார்கள். அங்கே இருந்தவர்கள் எல்லாருமே தங்களைப் பற்றி நம்பிக்கை இல்லா மல், 'ஒன்றுமே செய்வதற்கு இல்லையே!' என்று வருத்தத்தோடு நின்றார்கள்.

அப்போது யாரோ ஒரு முரடன் ஓடி வந்தான். ''ஏன் அழுது கொண்டிருக்கிறீர்கள் அம்மா?'' என்று கேட்டான்.

''ஒரு பாவமும் செய்யாதவனாக இருந்தால் அதோ மிதக் கிறாரே என் கணவர், அவரைக் கரையேற்ற முடியும். யாராவது எனக்கு உதவி செய்ய முன்வரமாட்டார்களா?'' என்று மறுபடியும் கிழவி புலம்பினாள்.

உடனே அந்த ஆள் கங்கையில் ஒரு முழுக்குப் போட்டான். ''கங்கையில் மூழ்கினால் எல்லாப் பாவங்களும் போய்விடும். நான் மூழ்கிவிட்டேன். இப்போது ஒரு பாவமும் இல்லாதவன் நான். இதோ நான் போய் உன் கணவரைக் கரையேற்றுகிறேன்'' என்று சொல்லி நீந்திப் போய்க் கிழவரை இழுத்துக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தான். முதியவர்களாக வந்த இறைவனும் இறைவியும் மறைந்துவிட்டார்கள்.

இறைவன் அம்பிகையைப் பார்த்து, ''பார்த்தாயா? கங்கையில் ஒரு தடவை மூழ்கினால் எல்லாப் பாவமும் போகும் என்று அந்தப் பௌராணிகர் எத்தனை பேர்களுக்கு உபதேசம் செய்து வருகிறார்! அவருக்கே அதில் நம்பிக்கை இல்லையே! இருந்தால் அவர் அல்லவா முதலில் வந்து என்னை இழுத்துப் போட்டிருக்க வேண்டும்? சொன்னவருக்கும் நம்பிக்கை இல்லை; கேட்டவர்களுக்கும் நம்பிக்கை இல்லை. ஆனால் ஒரு நூலையும் படிக்காமல் முரடனாக இருந்த ஒருவனுக்குத்தான் அந்த நம்பிக்கை உண்மையாக இருந்தது. ஆகவே அவன் செய்தது பலித்தது'' என்று சொன்னாராம்.

நம்பிக்கை

''துணிந்தவர் ஈசன் துறக்கம தாள்வார்''

என்பது திருமூலர் வாக்கு.

தாம் உணர்ந்தவற்றைப் பிறருக்கு உரைத்தும் அதில் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு அது கொஞ்சமும் பயன் அளிக்காது. இறைவனுடைய திருவருள் இன்பத்தைப் பெறும் முயற்சியில் மாத்திரம் அன்று; உலக இயலில் வெற்றிபெற வேண்டுமானாலும் தம்முடைய கொள்கையில் தமக்கே நம்பிக்கை இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் ஐயம் உள்ளவர்களுக்கு அந்தக் கொள்கை பயன் அளிப்பது இல்லை.

''சம்சய ஆத்மா விநச்யதி''

என்பது கீதை. எத்தனை படித்தாலும் படித்தவர்கள் உணர்ந்து கொள்வது ஒரு பகுதிதான். உணர்ந்து கொண்டாலும் சந்தேகம் இல்லாமல் தெளிவு அடைந்து கொள்வது மிகவும் சுருங்கிய பகுதியே. அப்படித் தெளிவு கிடைப்பதிலும் அநுபவத்தில்

அவற்றைக் கொண்டு வருவது மிகமிகச் சிறிய பகுதியே. அது தான் உண்மையாகத் தெளிந்து கொண்டதாகும். சிறிதளவு அநுபவம்கூட இல்லாமல் கடல் போன்ற கல்வியறிவு இருந்தா லும் அத்தகையவர்களுக்குப் படித்த நூல்களால் ஒரு சிறிதும் பயன் இல்லை. அவர்கள் பேசுகின்ற ஞானத்தினாலும் பயன் இல்லை. அவர்களைவிடப் படிக்காமல் ஒரு துளியாவது அநுப வம் பெற்றவன் ஆயிரம் மடங்கு சிறந்தவன்.

அறிவும் அநுபவமும்

விவேகானந்த சுவாமிகள் உலகத்துச் சமய நெறிகளை எல்லாம் தெரிந்து கொண்டவர். நூல்களை எல்லாம் படித்தவர். பெரிய மேதை. ஆனால் அவருக்கு அநுபவம் இல்லை. எதைக் கண்டாலும் சந்தேகமாக இருந்தது. யாராவது பரதேசியைக் கண்டால், ''நீ கடவுளைக் கண்டாயா?'' என்று கேள்வி கேட்பார். அவருக்கு நூல்கள் உணர்த்தும் சமாதானங்கள் அமைதியை உண்டாக்க வில்லை. ஒவ்வொரு சந்தேகத்திற்கும் நூல் அறிந்தவன் சமாதானம் சொன்னாலும், அதற்குமேல் மற்றொரு சந்தேகத்தைக் கிளப்புகிற அறிவு அவரிடம் இருந்தது. தத்துவ நூல்களைப் படித்திருந்தாலும் மனம் அமைதி பெறவில்லை. பல நூல்களைப் படித்த வேதாந்திகளும், ஞானிகளும் எத்தனையோ பேர் இருந் தார்கள். அவர்களால் அவருக்கு ஒரு பயனும் உண்டாகவில்லை. கடைசியில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரிடந்தான் அவர் வாய் அடங்கினார்; செயல் அடங்கினார்; உள்ளம் அடங்கினார். ராம கிருஷ்ணரோ எழுதப் படிக்கத் தெரியாதவர். என்ன ஆச்சரியம் பாருங்கள்: மகா மேதாவியாகிய விவேகானந்தர் எழுதப் படிக்கத் தெரியாத ஒருவரைக் குருவாக ஏற்றுக் கொண்டார்! தம்முடைய குருவைப் பற்றி உலகம் எல்லாம் முரசு அறைந்து புகழ் பரப்பி னார் என்று சொன்னால் ஏதோ விநோதமாகத் தோன்றுகிறது. அதனூடே உண்மை இருக்கிறது. எத்தனைதான் படித்தாலும் அநுபவ உலகத்தில் ஓர் அடிகூட அது வரை எடுத்து வைக்காதவர் விவேகானந்தர். ராமகிருஷ்ண பரமஹம்சரோ அநுபவ உலகத்தில் நடனம் ஆடியவர். அவர் விவேகானந்தருக்குத் தம்முடைய பரிசத்தினாலேயே அநுபூதியை உண்டாக்கினார். அப்போது விவேகானந்தரின் வாய் அடங்கிவிட்டது.

மௌனமும் ஞானமும்

எங்கே மௌனம் தொடங்குகிறதோ அங்கே ஞானம் நிறைவு அடைகிறது. "மோனம் என்பது ஞான வரம்பு" என்று சொல்வார்கள். வாய் பேசுகின்ற போது அதனை 'அநுபூதி நிலை' என்று சொல்ல முடியாது. அநுபூதி பெற்றவர்கள் மௌனமாக இருந்து, பிறகு உலகம் உய்ய வேண்டுமென்று சிலவற்றைச் சொல்வார்கள்.

சொல்வது ஒரு மடங்கு, செய்வது பத்து மடங்காக இருக்க வேண்டும் என்று அரசியல் தலைவர்கள்கூட இப்போது சொல்கிறார்கள். நாட்டில் வளம் நிரம்பவேண்டுமானால் உழைப்பு வேண்டும், உரை அடங்கவேண்டுமென்று பலர் பேசுகிறார்கள். உலக இயலோடு தொடர்புடைய வளவாழ்வுக்கே இந்த நீதி வேண்டுமானால் இறைவனுடன் தொடர்புடைய இன்ப வாழ்வுக்கு இது எத்தனை அவசியம் என்பது சொல்லாமல் விளங்கும். உயிர்க் கூட்டத்தினிடம் உண்மையான அன்பு வைப்பவர்களே இறைவனிடத்தில் அன்பு பாலித்தவர்கள் ஆவார்கள்; அப்படி அல்லாமல் பலபல பேசியும், பிறருக்கு உபதேசம் செய்தும் வாழ்கிறவர்கள் இறைவன் அன்பை உணராதவர்கள்.

ஆத்ம குணம்

ஆருயிர்களிடத்தில் அன்பு வைப்பது ஆத்ம குணங்களுக்குள் ஒன்று. ஆத்ம குணம் இல்லாமல் பக்தி வராது. இறைவனிடத்தில் உண்மையான அன்பு பூண்டவர்களுக்கு இயற்கையாகவே ஆத்ம குணங்கள் நிரம்பி வரும். பிறருடைய துயரத்தைக் கண்டு இரங்கும் உள்ளம் இருக்கும். பசித்தவர்களுக்குக் கிடைப்பதைக் கொடுப்பதும், கொடுக்க முடியாத நிலையில், "ஐயோ இப்படிக் கொடுக்க முடியாமல் இருக்கிறேனே!" என்று இரங்குவதும் அவர்களுடைய இயற்கையாக இருக்கும்.

அப்படியின்றித் தமக்கு வயிறு நிறையத் தின்பதற்குச் சோறு கேட்கிறவர்கள், உடம்பு நிலையாதது என்றும், செல்வம் நிலையாதது என்றும் பேசிவிட்டு, "ஐயா பசி", என்று யாரேனும் வந்தால் எங்காவது போய்விடுவார்களேயானால் அவர்களைப் போல அஞ்ஞானி வேறு ஒருவனும் இல்லை. ஞானமாகிய வேலை ஏந்திய குமரனிடத்தில் அவர்களுக்கு எள்ளளவும் அன்பு

இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம். இத்தகைய போலி ஞானிகள் உலகத்தில் புல்லுருவிகளாக இருக்கிறார்கள். இதனை நினைந்து அருணகிரியார் இந்தப் பாட்டைப் பாடுகிறார்.

நீர்க்குமி ழிக்கு நிகர் என்பர்
யாக்கை;நில் லாதுசெல்வம்;
பார்க்கும் இடத்துஅந்த மின்போலும்
என்பர்; பசித்துவந்தே
ஏற்கும் அவர்க்குஇட என்னின்எங்
கேனும் எழுந்திருப்பார்;
வேல்கும ரற்குஅன்பி லாதவர் ஞானம்
மிகவும் நன்றே!

('நம் உடம்பு நீர்மேல் தோன்றும் குமிழிக்கு ஒப்பானது' என்பார்கள்; 'செல்வம் நில்லாது; ஆராய்ந்து பார்த்தால் அது மின்னலைப் போன்று தோன்றி விரைவிலே மறைந்துவிடும்' என்பார்கள். யாரேனும் பசியினால் துன்புற்று வந்து, ''ஐயா சோறு'' என்று பிச்சை கேட்டால், எங்காவது போகவேண்டு மென்று சொல்லி அந்த இடத்தை விட்டே எழுந்து போய் விடுவார்கள். இத்தகையவர்கள் வேலாயுதத்தைப் பிடித்த குமரக் கடவுளிடத்தில் உண்மை அன்பு இல்லாதவர்கள். இவர்களுடைய வாசாஞானம் நல்ல ஞானம்!

வேற்குமரனுக்கு அன்பு உள்ளவர்கள் வாயால் ஒன்றும் சொல்லா விட்டாலும் பசி என்று வந்தவர்களுக்கு இரங்கிச் சோறு அளிப்பார்கள் என்ற கருத்தை இது வேறு வகையில் உணர்த்துகிறது.

யாக்கை நிகர் என்பர். பார்க்குமிடத்து – ஆராயும்போது. அந்த: உலகறி சுட்டு. ஏற்கும் அவர் – இரக்கும் ஏழைகள். எங்கேனும் – ஏதாவது இடத்தை எண்ணி. நன்றே என்றது குறிப்பு மொழி; நன்று அன்று என்ற பொருளை உடையது.)

இது கந்தர் அலங்காரத்தில் 66–ஆம் பாட்டு.

பெறுதற்கரிய பிறவி

1

உயிர்களிடத்தில் இரக்கம் இல்லாமல் தம்முடைய பாட்டைப் பார்த்துக் கொண்டு போகிறவர்கள் வெறும் வாய் வேதாந்தம் பேசிப் பயன் இல்லை என்பதைப் போன பாட்டில் பார்த்தோம். இந்தப் பிறவியினாலே பெறுவதற்குரிய உறுதிப் பொருள் அறம், பொருள், இன்பம் வீடு என்று சொல்வார்கள். அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றுமே வீட்டை அடைவதற்குரிய கருவிகளாக இருக்க வேண்டும். அந்த வகையில் சென்ற பாட்டில் அறத்தைப் பற்றிச் சொன்னார். இப்போது இறைவனுடைய திருவடியைப் பணியும் அன்பைப் பற்றிச் சொல்லப் போகிறார். முதலில், இந்தப் பிறவி பெறுவதற்கு அரியது என்று சொல்கிறார்.

இம்மையும் மறுமையும்

பெறுதற்கு அரிய பிறவியைப் பெற்றும்.

''அரிது அரிது மானிடர் ஆதல் அரிது' என்று ஔவைப் பாட்டி சொன்னாள். மற்றப் பிறவிகளைக் காட்டிலும் மனிதப் பிறவிக்கு இரண்டு வகையில் நலம் உண்டு. ஒன்று, பகுத்தறிவு என்னும் உயர்ந்த இலக்கணம் மனிதனுக்கு இருக்கிறது; மற்றொன்று, உலகத்தில் உள்ள விலங்கினங்களையும், பஞ்ச பூதங்களையும் தன் மனம் போனபடி அடக்கி ஆளும் ஆற்றலை அவன் பெற்றிருக்கிறான். அவன் தான் என்ன நினைத்தாலும் அதற்கு ஏற்றபடி வேலைகளைச் செய்யும் வசதி உள்ளவன்.

மனிதன் இம்மை உலகத்தில் எல்லா வகை இன்பங்களும் பெற்று, மறு உலகத்தில் மோட்சத்தை அடையவேண்டும். இம்மை உலக வாழ்வுக்கு வேண்டிய பொருள்களைப் பிறநாட்டு வாழ்விலே பார்க்கலாம். அமெரிக்காவில் பிறந்திருந்தால் இந்திரிய

சுகம் எல்லாவற்றையும் பெறலாம். வேறு சில நாடுகளில் பிறந்திருந்தால் சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சியில் நிபுணனாக வாழலாம். மனிதப் பிறவியின் பயன் இகலோக வாழ்வு என்று மட்டும் இருந்திருந்தால் அத்தகைய நாடுகளில் பிறப்பது சிறந்த பிறவி என்று கொள்ளலாம். ஆனால் இம்மை வாழ்வு முழுவதும் மறுமை வாழ்வுக்கு அடிப்படையாக இருக்கிறது. இப்போது நாம் கொள்கிற குணங்கள் அனைத்தும் இனி வரும் இன்ப துன்பங்களின் அடிப்படையாக இருக்கின்றன. ஆகவே, வீடடைதல் நம் லட்சியமாக இருந்தால் இந்த வாழ்வு முழுவதும் வீட்டுக் குரிய நெறியாக அமைய வேண்டும். அதற்கேற்ற வசதியை வேறு நாடுகளில் பெறுவதைக் காட்டிலும் பாரத நாட்டில் பெறுவது சிறந்தது.

இறைவன் பூசை

இந்த நாட்டில் இறைவன் பூசைக்குச் சிறப்பு அதிகம். மற்ற நாட்டிலுள்ள மக்களும் இறைவனை வணங்கி வழிபடுகிறார்கள். ஆனால் அவர்களுடைய வழிபாட்டுக்கும் நம் வழிபாட்டுக்கும் வேறுபாடு பல உண்டு. மற்ற நாடுகளில் கூட்டமாகச் சென்று இறைவனை வழிபடுவது வழக்கமாக இருக்கிறது. அவரவர் களுக்கு என்று மடமோ, கோயிலோ வைத்துக் கும்பிடுகிறார்கள். குருநாதன் முன்னிலையில் கூடிக் கூட்டு வழிபாட்டை நடத்து கிறார்கள். கிறிஸ்துவ மதத்தில் ஞாயிறுதோறும் மாதாகோயில் சென்று, பாதிரியார் பிரார்த்தனை செய்ய, எல்லோரும் கூடி யிருந்து வழிபடுகிறார்கள். தம் தம் ஆசனத்தில் இருந்து பிரார்த் தனை செய்கிறார்கள். பள்ளிக் கூடங்களில் காலை நேரத்தில் பிரார்த்தனை வகுப்பு நடக்கிற மாதிரி அந்தப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறும். இஸ்லாமிய நண்பர்களும் மசூதிகளில் ஒன்றாகக் கூடி இறைவனை வழிபடுகிறார்கள். தனியேயும் தொழுவது உண்டு. ஆனாலும் கூட்டமாகச் சென்று தொழுவதிலே அவர்கள் சிறப்பைக் காணுகிறார்கள்.

இத்தகைய கூட்டு வழிபாடு நமக்கும் உண்டு. திருக் கோயிலில் இந்த வழிபாட்டைப் பார்க்கலாம். ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு திருவிழாவைக் கண்டு களித்து இன்புறுகிறார்கள். பஜனை மடங்களை நிறுவி வாரந்தோறும் ஒரு நாளில் எல்லோ

ரும் சேர்ந்து பஜனை செய்கிற வழக்கம் இந்த நாட்டில் எங்கும் இருக்கிறது. அதற்கென்றே சில பத்ததிகள் உண்டு. இவை யாவும் மனிதனுக்கு இறைவனுடைய உணர்ச்சியை உண்டாக்க வேண்டுமென்பதற்கான உபாயங்கள்.

தனியாக இருந்து அறிவு தெளிவு பெற்று இறைவனை வழிபடுவது என்பது எளிதில் வரும் காரியம் அன்று. மனிதனைச் சமுதாய விலங்கு (Social Animal) என்று சொல்வார்கள். மற்றவர்களோடு கூடிக் கூடி அவர்கள் பேசுவது போலப் பேசியும், செய்வது போலச் செய்தும், எண்ணுவதுபோல எண்ணியும் பழக்கப்பட்டவன் அவன். எந்தக் கூட்டத்தில் ஒரு மனிதன் சேர்ந்திருக்கிறானோ அந்தக் கூட்டத்திற்கு ஏற்ற பழக்க வழக்கங்கள் அவனிடம் வளருகின்றன. சாதி என்றும், சமயம் என்றும், வகுப்பு என்றும், குலம் என்றும் வகுத்திருக்கிற கூட்டங்கள் எல்லாமே ஒருவகைச் சங்கங்களே. சாதிக்கும் சமயத்திற்கும், வகுப்புக்கும் ஏற்ற ஆசார விவகாரங்கள் முன்காலத்தில் வரையறையாக இருந்திருக்கின்றன. அவை கூட்டமாகச் செய்த முயற்சியின் விளைவு. இந்தியாவில் ஒவ்வொரு சமயத்திற்கும் ஆசாரியர்கள் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் சென்று உபதேசம் பெற்று வழிபடுகிற முறையும் இருக்கிறது.

தனிப்பூசை

இவையெல்லாம் அடிப்படையான முறைகள். தனியாக ஒரு மனிதன் இறைவனைப் பூசை செய்யும் வழக்கம் பாரத நாட்டில் தான் இருக்கிறது. அதற்குக் காரணம் பூசை செய்தல் என்பதே பல மதங்களுக்கு உடன்பாடு அன்று. பூசை செய்வதற்கு இறைவனுடைய வடிவம் வேண்டும். பலவகை விக்கிரகங்களை வைத்துப் பூசை செய்தும், அந்த விக்கிரகங்களுக்கு ஆலயம் எடுப்பித்து விழா நடத்தியும் பக்தியை வளர்த்தது பாரத நாடு. பல சமயங்களுக்கு விக்கிரகங்கள் உடன்பாடு இல்லை. ஆகையால் தனி மனிதன் பூசை செய்வதற்கு ஏற்ற வாய்ப்பு அந்த மதத்தினர்களுக்குக் கிடைப்பது இல்லை.

தனி மனிதன் பூசை செய்யவேண்டியது அவசியமா? மிகவும் அவசியம். ஊரெல்லாம் சேர்ந்து பொதுவான காரியங்களைத்

தங்களுக்கென்று செய்து கொள்கிறார்கள். ஆனால் தனி மனிதன் தனக்காகச் சில காரியங்களைச் செய்து கொள்ளத்தான் வேண்டும். தனக்கென்று தனிப்பட்ட வாயும், வயிறும், உடம்பும் படைத்த மனிதன் தனியே சில முயற்சிகள் செய்து வாழ வேண்டிய அவசியம் இயற்கையில் அமைந்திருக்கிறது. இறைவனிடம் பக்தி செய்ய வேண்டும் என்றும், அவன் திருவருளைப் பெற வேண்டும் என்றும் நாம் சொல்கிறோம். அதற்கு வழி என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். பக்தி செய்வதற்குப் புதியதாகத் தனி உடம்பு நமக்கு வரப்போவதில்லை. இருக்கிற உடம்பையும், உள்ளத்தையும், வாக்கையும் கொண்டே பக்தியை வளர்க்க வேண்டும். ஒரு குடியானவன் தன்னுடைய நிலத்தையும், விதையையும், உரத்தையும் கொண்டு பயிர் செய்வது போலத் தான் பெற்றிருக்கிற தனுகரணபுவன போகங்களை வைத்துக் கொண்டே பக்தி என்னும் பயிரை ஒவ்வொரு தனி மனிதனும் விளைவிக்க வேண்டும். இறைவன் குணம் இல்லாதவன், குறி இல்லாதவன் என்று மற்ற சமயங்கள் சொல்வது போலவே நம்முடைய சமயமும் சொல்கிறது. ஆனால் தன்னுடைய கருணை மிகுதியினால் பக்திப் பயிரை உலகில் வளர்க்க வேண்டுமென்று, கரணங்களை உடைய மக்களுக்குப் புலனாக வேண்டி, இறைவன் உருவம் எடுத்துக் கொள்கிறான். இந்தத் தத்துவத்தை நாம் பல காலமாகப் பார்த்துக் கொண்டு வருகிறோம்.

எல்லோரும் சேர்ந்து செய்யும் காரியம் ஓரளவுக்குத்தான் பயனைத் தரும். எல்லோருக்கும் ஒரே மாதிரி பயன் அதனால் உண்டாகாது. பொதுவாகச் சராசரிப் பயன் உண்டாகலாம். ஊருக் கெல்லாம் சேர்ந்து பள்ளிக்கூடம் போட்டால் எல்லோருமே ஒரேமாதிரி படிக்கிறது இல்லை. ஊருக்கெல்லாம் சேர்த்துக் குளம் வெட்டினால் எல்லோரும் அங்கே சென்று ஒரேமாதிரி யான பயனைப் பெறுவது இல்லை. ஊருக்கென்று பொதுவாக ஒரு வாசகசாலை அமைத்தால் யாவரும் சென்று நூல்களைப் படித்துப் பயன் அடைவது இல்லை. அவரவர்கள் தங்கள் தங்கள் முயற்சிக்கும், அறிவுக்கும், வாய்ப்புக்கும் ஏற்றபடியே பயனை அடைகிறார்கள். அப்படி அடைந்த அவர்கள்கூட மேன்மேலும் பயனைப் பெறவேண்டுமானால் தனித்தனியே இருந்து முயற்சி செய்து இன்புற வேண்டும்.

ஏதேனும் ஓரிடத்தில் விருந்து நடந்தால் ஒருநாள் எல்லோ ரும் சேர்ந்து சாப்பிடுகிறார்கள். ஆனால் நாள்தோறும் இப்படியே சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியாது. அதற்குக் காரணம் ஒவ் வொருவருடைய பசியும், ருசியும், வயிற்றின் நிலையும் வெவ் வேறாக அமைந்திருப்பதுதான். ஒரு செல்வர் வீட்டில் கல்யாணம் நடந்தால் எல்லா நண்பர்களையும் அழைத்துச் சாப்பாடு போடு வார் அவர். அது ஒருநாள் நடக்கிற செய்தி. மாதம் முப்பது நாளும் அயல் வீட்டு விருந்து உண்பது என்று இருந்துவிட்டால் நிச்சயமாக நம் வயிறே கோளாறாகப் போய்விடும். உணவுச் சாலையில் பலகாலம் தொடர்ந்து சாப்பிடுகிறவர்கள் இத்தகைய குறைக்கு ஆளாகிறார்கள். என்ன இருந்தாலும் தங்கள் தங்கள் வீட்டிலே தங்களுடைய உடம்புக்கும், சுவைக்கும் ஏற்றபடி சமையல் பண்ணச் செய்து சாப்பிடுவது சிறந்தது.

ஒரே வீட்டில் பலர் உணவு அருந்தினாலும் ஒவ்வொரு வருக்கும் ஏற்றபடி சிறப்பான பண்டங்களைத் தாய் சமைக் கிறாள். தன் பிள்ளைகள் எல்லோருக்கும் அவள் ஒரேமாதிரி உணவு தருவது இல்லை. பருவத்திற்கு ஏற்றபடி பண்டங்களைப் பரிமாறுகிறாள். குழந்தைக்கென்று காய்ச்சிய கஞ்சியைப் பெரிய வர்களுக்குக் கொடுப்பதில்லை. வயதானவர்களுக்கென்று பத்திய மாகச் சமைத்த சில பதார்த்தங்களை மற்றவர்களுக்குப் போட மாட்டாள். மருந்து உண்பவர்களுக்கென்று தனியே சிலவகை உணவு நியமங்கள் உண்டு. அவற்றை மற்றவர்கள் உண்பதற்கு மனம் கொள்வதில்லை. அவரவர்களுக்கு ஏற்றபடி சமைத்துப் பரிமாறும் தாய்க்கு மனத்தில் பட்சபாதம் என்பது இல்லை. அவ ரவர்களுக்கு உடம்புக்கு ஏற்றபடி, உடல் நலத்துக்கு ஏற்றபடி, உணவு கொடுக்க வேண்டும் என்ற நினைப்புதான் இந்த வேறு பாட்டுக்குக் காரணம்.

உணவு ஒருவனுக்கு நன்மையை உண்டாக்கவேண்டும். உடம்புக்குச் சுகத்தை உண்டாக்க வேண்டும். அப்படி இல்லாமல் நோயை உண்டாக்குவதாக இருந்தால் அதனால் பயன் இல்லை. எல்லா உடம்புகளுக்கும் பொதுவாகச் சில இயல்புகள் இருந் தாலும் ஒவ்வொருவருடைய உடம்பு நிலையும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. அதனால்தான் யாரேனும் வைத்தியர்

ஒருவரிடத்தில் கைகாட்டிப் பழகிவிட்டால் அவரிடமே மீண்டும் காட்டவேண்டும் என்று சொல்கிறோம்.

தனியாகச் செய்தல்

சாப்பிடுகிற விஷயத்தில் தனியே இருந்து சாப்பிட வேண்டும் என்று ஆசாரக்காரர்கள் சொல்கிறார்கள். எல்லோருடனும் சேர்ந்து சமபந்தி போஜனம் பண்ணுவது தவறு என்றுகூட ஒரு கொள்கை முன்பு இருந்தது. ஒரு சமயம் மகாத்மா காந்தியடிகளிடத்தில் சமபந்தி போஜனத்தைப் பற்றி ஒரு கேள்வி கேட்டார்கள். அவர் மிகவும் அருமையான விடை சொன்னார். "சமபந்தி போஜனம் பண்ணலாமா, கூடாதா?" என்பது கேள்வி. "ஒரு காரணத்தைக் கொண்டு நான் கூடாது என்று மறுப்பேன். ஆனால் மற்றொரு காரணத்தைப் பார்த்தால், வேண்டும் என்று ஆதரிப் பேன்" என்று அவர் சொன்னார். அப்படிச் சொன்னதற்குக் காரணங்களையும் காட்டினார். "சமபந்தி போஜனத்தால் மட்டும் நிச்சயமாக ஒற்றுமை வரப்போவதில்லை. இளமைப் பருவம் முதற்கொண்டு ஒன்றாகச் சேர்ந்து உண்டு வளர்ந்த அண்ணன் தம்பிகளே ஒருவருக்கொருவர் அடிதடி சண்டை போட்டுக் கொள்கிறார்கள்; சொத்துப் பிரிவினைக்கு வழக்குச் செய்கிறார்கள். ஆகவே வெறும் சமபந்தி போஜனம் மாத்திரம் ஒற்றுமையை உண்டாக்காது. அது மாத்திரம் அல்ல. தனி மனிதன் உடம்போடு சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களையும் தனியாக இருந்து செய்து கொள் கிறான். குளிப்பது, மலஜலம் கழிப்பது, இன்பம் உறுவது ஆகிய காரியங்களைத் தனியாகச் செய்கிறான். பிறர் காண அவற்றைச் செய்வது அநாகரிகம் என்று நினைக்கிறான். உண்ணுவதும் சரீர சம்பந்தமான காரியம். ஆகையால் தனித்து உண்ணுவதில் தவறு இல்லை. ஆனால் தனித்து உண்ணுவதும் தவறாகின்ற நிலை ஒன்று உண்டு. 'நான் உயர்ந்த சாதியைச் சேர்ந்தவன்; மற்றவன் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவன்; ஆகையால் நான் தனியே உண்ண வேண்டும்' என்ற மனோ பாவம் இருந்தால் அப்போது தனித்திருந்து உண்பது தவறு. நான் உண்பதைப் பிறர் காணக்கூடாது; கண்டால் நாணமாக இருக்கும் என்று எண்ணி ஒருவன் தனித்திருந்து உண்டால் அது தவறாகாது. அது அவரவர்களுடைய உடம்புக்கு ஏற்ற காரியம்" என்று காந்தியடிகள் விடையிறுத்தார்.

தனி வழிபாடு

உடம்பின் நலத்தைக் குறித்து ஒவ்வொருவரும் தனித் தனியே உண்ணுவது அவசியமானால் உள்ளத்திற்கு உணவாக இறைவனுடைய திருவுருவத்தைத் தனித்திருந்து வழிபடுவதும் தியானித்தலும் மிகவும் அவசியம். பொதுவாக ஆலயத்தில் சென்று இறைவனுடைய திருவுருவத்தைக் கண்டு வழிபடலாம். அதற்கு மேலும் முயற்சி செய்யாவிட்டால் அந்தத் திருவுருவம் உள்ளத்தில் பதியாது. காவிரிக்குப் போய்க் குடத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வருகிற தாய் அப்படியே கொண்டு வந்து வைத்துவிடுவது இல்லை. அதைச் சிறிய பாத்திரங்களில் மொண்டு எடுத்து வேண்டிய காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்கிறாள். அதைப் போலவே ஆலயத்திற்குச் சென்று மனத்தைத் தூய்மை யாக்க இறைவனுடைய திருவுருவத்தைக் கண்ணால் கண்டு கருத்திலும் பதிய வைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து தனியே இருந்து தியானம் செய்ய வேண்டும். தரிசனம் செய்வது கூட்டத்தில் இருந்தாலும் தியானம், பூசை செய்வது தனியாகத்தான் இருக்க வேண்டும். தியானமும், பூசையும் ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனி நிலையில் அமைவன.

இப்படித் தனியாக இருந்து பூசை செய்வதும், தியானம் செய்வதும் ஆகிய காரியங்களைப் பாரத நாட்டில் உள்ள சமயங்களே வற்புறுத்திச் சொல்கின்றன. தனியாக ஒருவன் பூசை செய்ய வேண்டியதன் அவசியத்தை நம்முடைய நாட்டுச் சமயத்தார் எல்லோரும் வற்புறுத்துகிறார்கள். இதற்காகத் தீட்சை செய்து கொள்கிறார்கள். நமக்கு வழிகாட்ட வந்த ஆசார்யர்களும் நாம் தனித்திருந்து பூசை செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்து வதற்காகத் தனியாகப் பூசை செய்து காட்டுகிறார்கள்.

கோயிலில் உள்ள விக்கிரகத்தை நாம் பூசை செய்ய முடியாது. அதற்கு உரிமை முப்பொழுதும் திருமேனி தீண்டுவார் ஆகிய ஆதி சைவர்களுக்குத்தான் உண்டு. ஆனால் ஒவ்வொரு வரும் நினைத்தால் தனித் தனியே பூசை செய்ய முடியும். நம்முடைய வீட்டைக் கோயிலாக்கி, அங்கே விக்கிரகத்தை அமைத்துப் பெரியவர்களிடம் உபதேசம் பெற்று நன்றாகப் பூசை செய்யலாம். எல்லோருமே உணவுச் சாலையில் சாப்பிட வேண்டு

மென்ற விதி வந்துவிட்டால் மனிதனுக்கு நோய் நிச்சயமாக வந்துவிடும். தனித்தனியே அவனவன் விருப்பப்படி சமைத்துச் சாப்பிடலாம் என்ற வகை இருப்பதனால் நாம் உய்கிறோம். அதுபோலவே ஆலயத்திற்குச் சென்றோ, கூட்டத்தில் இருந்தோ வழிபட்டால் போதும் என்றால் நிச்சயமாக மனிதனுடைய உள்ளத்தில் பக்தி உறைக்காது. கூட்டத்தில் இருந்து வழிபடுவ தோடு மாத்திரம் நில்லாது, தனியே இருந்து தன் இயல்புக்கு ஏற்றபடி குறிப்பாகத் தினந்தோறும் சிறிது நேரம் பூசை செய்து தியானித்துப் பக்தியை வளர்த்து வரவேண்டும். இதற்கு ஏற்ற முறைகளை நம்முடைய நாட்டுப் பெரியவர்கள் அமைத்திருக் கிறார்கள்.

கோயில்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. பல சிறந்த தினங்களில் நாமும் நம்முடைய வீட்டிலே விசேஷ பூசை செய்யலாம். ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று முறையும் பூசை செய்யலாம். அப்படிப் பூசை செய்கிற பக்தர்கள் இன்றும் பலர் இருக்கிறார்கள்.

எல்லோரும் பூசை செய்யலாம்

ஆகமம், வேதம் முதலியவற்றிலே சிறந்த திறமை பெற்ற வர்கள் தாம் பூசை பண்ணவேண்டும் என்பது இல்லை. தம்மு டைய வீட்டில் ஒரு படத்தை வைத்துத் தேவாரமோ, திருவாச கமோ, திவ்யப்பிரபந்தமோ, திருப்புகழோ சொல்லி மலரிட்டு வழிபடலாம். அதை யாரும் தவறு என்று சொல்வதில்லை. பூசை செய்வதில் பலவகை முறைகள் உண்டு. வெவ்வேறு சிறந்த வரையறைகளைப் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பள்ளிக்கூடத்திற்குப் போகிறவன் அரிச்சுவடி வகுப்பில் இருந்து கல்லூரி வகுப்பு வரைக்கும் படித்துக் கொண்டு போகிறான். அது போலவே உபாசனா முறையிலும் யந்திர தந்திர மந்திரங்கள் வேறுபடுகின்றன. எந்த மந்திரத்தையும் உபதேசம் பண்ணிக் கொள்ளாமல், எந்தப் பூசை முறையையும் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறவனும் தன்னுடைய மனத்துக்கு இசைந்த திருவுருவ முள்ள படத்தை வைத்து அவனுடைய நாமங்களைச் சொல்லி மலரிட்டு வணங்கலாம். நாம் உண்ணுகின்ற உணவை நிவேதன மாகப் படைக்கலாம். அந்தப் படத்திற்கு முன்னால் கீழே விழுந்து

வணக்கம் புரியலாம். இப்படிச் செய்வது அடுத்தபடிக்குப் போவ தற்கு உபயோகமாக இருக்கும். இத்தகைய பழக்க வழக்கங்களை இந்த நாட்டுப் பெரியவர்கள் நமக்குச் சொல்லித் தந்திருக் கிறார்கள். இறைவனுக்கு வடிவமும், திருநாமமும் வகுத்து அவற்றை எந்த நிலையில் இருப்பவர்களும் பயன்படுத்திக் கொள்ளும்படியாக மிக எளியமுறையை வகுத்திருக்கிறார்கள். இத்தகைய முறை வேறு நாட்டில் கிடைப்பது இல்லை.

நம்முடைய உள்ளத்திற்கு ஏற்ற வழிபடு தெய்வத்தைத் தனியே நிறுவி அதற்குரிய யந்திர மந்திரங்களைத் தெரிந்து கொண்டு முறைப்படி வழிபடுவதில் பேரநுபவம் அடைந்த பல மகான்கள் இந்த நாட்டில் இருந்தார்கள். இப்போதும் இருக்கிறார்கள். அவர்கள் பிறக்கும்போது மகான்களாகப் பிறப்பதில்லை. பிறந்த பிறகு தம்முடைய மனம்,. வாக்கு, காயம் ஆகிய எல்லாவற்றை யும் இறைவனுடைய பூசை, தியானம் முதலியவற்றில் செலுத்தி முறுகிய தியானத்தால் பெரியவர்களாகியிருக்கிறார்கள். அந்த நிலை யாருக்கும் கிடைக்கும். வேதம் ஓதுபவர்களால் மாத்திரந் தான் அதைப் பெறமுடியும் என்ற வரையறை இல்லை. தில்லை வாழ் அந்தணர்கள் அறுபத்துமூன்று நாயன்மார்களில் முதலில் சொல்லப்படுகிறார்கள். ஆனால் அதே நாயன்மார் கூட்டத்தில் அந்தக் காலத்தில் தீண்டாத சாதியில் பிறந்த திருநாளைப் போவாரும் இருக்கிறார். அவருடைய பக்தியையும் ஆண்டவன் ஏற்றுக் கொண்டான். இன்று அந்தப் பெருமான் நாம் வழிபடும் தெய்வக் கூட்டங்களில் ஒருவராக இருக்கிறார். அப்படியே அந்தணர் குலத்தில் பிறந்தவராகிய பெரியாழ்வாரும் போற்றுகின்ற நிலை பெற்றார்; பாணர் குலத்தில் பிறந்த திருப்பாணாழ்வாரும் போற்றப் பெறுகிறார். பாணர் குலம் அந்தக் காலத்தில் இழிந்த குலமாக நினைக்கப்பட்டது. அப்படி இருந்தும் அவரும் இறைவன் திருவருளைப் பெற்று உய்ந்தார். இவற்றால், தனிமனிதர்கள் தம்முடைய முயற்சியினால் இறைவனை வழிபட்டுப் பூசை செய்து பெறுதற்கரிய பேற்றைப் பெறலாம் என்பதும், அதற்கு ஏற்ற வசதிகள் எல்லாம் இந்த நாட்டில் இருக்கின்றன என்பதும், அந்த நம்பிக்கையை ஊட்டுகின்ற பழக்க வழக்கங்கள் இந்த நாடு முழுவதும் இருக்கின்றன என்பதும் புலனாகின்றன.

ஆகவே, 'பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்' என்று அருண கிரியார் சொல்லும்போது அவர், 'வாயும், அறிவும், கையும்,

காலும் உடைய மனிதனாகப் பிறந்திருக்கிறோம்' என்பதை மட்டும் நினைக்கவில்லை. 'இறைவனைத் தனியே இருந்து வழி பட்டு வரவரப் பக்குவம் முதிர்ந்து அவன் திருவருளுக்கு ஆளாகும் வாய்ப்புடைய இந்த நாட்டில் மனிதனாகப் பிறந் தேனே!' என்ற நினைப்போடு பாடுகிறார்.

விலங்குகள் பூசித்தல்

இறைவனைத் தனியே இருந்து பூசை பண்ண வேண்டியதன் அவசியத்தை வேறு ஒருவகையிலும் இந்த நாட்டார் வற்புறுத்தி யிருக்கிறார்கள். யாராவது ஒரு பையன், வசதி உள்ளவன், பள்ளிக் கூடத்திற்குப் போய்ப் படிக்காவிட்டால் அவனுடைய தந்தையார், ''அடே பைத்தியக்காரா! அதோ பார். பிச்சை எடுக்கிற அந்த ஏழைப் பையன் எவ்வளவு நன்றாகப் படிக்கிறான்! நீ இப்படி இருக்கிறாயே!'' என்று சுட்டிக்காட்டுவது வழக்கம். அது போலவே பிறவிகளில் சிறந்த மனிதப் பிறவி எடுத்தும் வழிபாடு செய்யா மல் இருக்கிறவர்களுக்கு, மற்றப் பிறவிகளாகிய விலங்கினங் கள்கூட இறைவனைத் தனியே வழிபட்டு நன்மை அடைந்திருக் கின்றனவே என்பதைப் பெரியவர்கள் புராணங்களின் மூலம் நினைப்பூட்டுகிறார்கள். புழுவும் பூச்சியும் ஆண்டவனுடைய திருவுருவத்தை வழிபட்டு நல்ல பேறு பெற்றன என்று தல புராணங்கள் சொல்கின்றன.

திருச்சிக்கு அருகில் திருஎறும்பூர் என்ற தலம் இருக்கிறது. இப்போது அதைத் திருவரம்பூர் என்று வழங்குகிறார்கள். திருச்சி யில் இருந்து தஞ்சைக்கு வரும் வழியில் அந்தத் தலம் இருக் கிறது. சிறிய குன்று. அங்கே எறும்பு ஆண்டவனைப் பூசை பண்ணிப் பேறு பெற்றதாம். திருவானைக்காவல் என்ற தலத்தைப் பற்றிக் கேட்டிருப்பீர்கள். அங்கே யானை பூசை பண்ணியதாம். சிலந்தி பூசை பண்ணியதாம். ஒரு நாவல் மரத்தின் அடியில் சிவ பெருமான் லிங்க உருவத்துடன் தோன்றினான். ஒரு சிலந்திக்கு அந்தப் பெருமானிடத்தில் பக்தி உண்டாயிற்று. 'பெருமான் வெயிலில் காய்கிறானே' என்று மனம் வருந்திய சிலந்தி லிங்கத்தின்மேல் பந்தல் போட்டது போல வலை பின்னியது. ஆண்டவனுக்கு இந்த வழியிலாவது தொண்டு செய்யலாம் என்ற அறிவு அதற்கு இருந்தது. தன்னுடைய இயல்புக்கு ஏற்றபடி விதானம் போலக் கூடு கட்டித் தொண்டு செய்தது.

அந்தப் பெருமானிடத்தில் ஒரு யானைக்கும் பற்று உண்டா யிற்று. அது தன்னுடைய இயல்புக்கு ஏற்பப் பூசை செய்யத் தொடங்கியது. காவிரி ஆற்றுக்குச் சென்று தன் துதிக்கையில் தண்ணீர் எடுத்து வந்து சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்தது. லிங்கத்தின் மேலே சிலந்திக் கூடு இருப்பதைப் பார்த்து அதைக் குலைத்து விட்டது. யானை போன பிறகு சிலந்தி வந்தது. தான் கட்டிய கூடு குலைந்துவிட்டதே என்ற கோபம் அதற்கு வரவில்லை. எம்பெருமான் வெயிலில் காய்கிறானே என்று மனம் இரங்கி வருந்தியது. மறுபடியும் ஒரு நாழிகையில் வலை பின்னிக் கூடு கட்டிவிட்டது. மறுநாள் அந்த யானை கூட்டைப் பார்த்து மறுபடியும் கலைத்துவிட்டது. யானை கலைப் பதும், சிலந்தி மீட்டும் கூடு கட்டுவதுமாக நடந்து வந்தது.

ஒருநாள் சிலந்தி, ''இதை யார் செய்கிறார்கள் என்று பார்க்க வேண்டும்'' என்று நினைத்தது. வலை கட்டின பிறகு அங்கே தங்கிக் கவனித்தது. அப்போது துதிக்கை நிறையத் தண்ணீரை முகந்து வந்து யானை அபிஷேகம் செய்தது. சிலந்திக் கூட்டை யும் துதிக்கையினாலே குலைத்தது. அந்தச் சமயம் பார்த்துச் சிலந்தி யானையின் துதிக்கையினுள் புகுந்து குடைய ஆரம்பித் தது. யானையோ வலி தாங்க முடியாமல் துதிக்கையை நீட்டித் தரையில் அறைந்தது. அதனால் சிலந்தியும் இறந்து போயிற்று; யானையும் இறந்துவிட்டது. அந்த யானை சிவ கணங்களில் ஒரு வராக ஆகிவிட்டது. சிலந்தி என்ன பதவி பெற்றது தெரியுமா? பெரிய அரசனாகப் பிறந்தது.

கோச்செங்கட் சோழன்

சோழச் சக்கரவர்த்திகளுக்குள் கோச்செங்கட்சோழன் என்று ஓர் அரசன் இருந்தான். அவனை, திருவானைக்காவில் ஆண்ட வனை வழிபட்ட சிலந்தியின் மறுபிறவி என்று சொல்வார்கள்.

''சிலந்தியும் ஆனைக் காவில் திருநிழற் பந்தர் செய்து
உலந்தவன் இறந்த போதே கோச்செங்க ணானு மாகக்
கலந்தநீர்க் காவிரி சூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்ட னாரே''

என்று அப்பர் சுவாமிகள் இந்த வரலாற்றைக் குறிக்கிறார்.

கோச்செங்கட் சோழன் என்பவன் சங்ககாலத்தில் இருந்த ஓர் அரசன். அவன் பிறந்த கதையே மிகச் சுவை பொருந்தியது. அவனை அவன் தாய் கருவுற்றிருந்தாள். அவன் எந்த நேரத்தில் பிறந்தால் மிக்க புகழ் உடையவனாக விளங்குவான் என்று சோதிடர்கள் எல்லாம் சேர்ந்து ஆராய்ந்தார்கள். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பிறந்தால் அவன் சிறந்த அரசனாக ஆட்சி புரிந்து விளங்குவான் என்று சோதிடர்கள் சொன்னார்கள். குறிப்பிட்ட நேரத்தில் பிறக்கச் செய்வது என்பது நம்மால் இயலுகிறது அல்லவே! ஆனாலும் மருத்துவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு காரியம் செய்தார்கள். இன்னும் ஒரு முகூர்த்தம் சென்று பிறந் தால் அவன் சிறந்தவனாக இருப்பான் என்று தெரிந்து, அதற்கு என்ன வழி என்று ஆராய்ந்தார்கள். கரு உற்றிருந்த அரசியைத் தலையைச் சற்றுத் தாழ்த்தியும், கால் மேலாக இருக்கும்படியும் படுக்க வைத்தார்கள். இப்படி, பிறக்க வேண்டிய நேரம் கழிந்து, உரிய வேளையில் பிறப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். தாய் வயிற்றில் சற்று நேரம் கடந்து இருந்தமையினால் அவன் பிறந்தபோதே இரு கண்களும் இரத்தம் குழம்பிச் சிவந்திருந்தது. அதனால் அவனுக்குக் கோச்செங்கட் சோழன் என்ற பெயர் வந்தது. இவ்வாறு ஒரு வரலாறு வழங்கி வருகிறது.

சிலந்தியாக இருந்தவனே இறைவனை வழிபட்ட புண்ணியப் பேற்றால் கோச்செங்கட் சோழனாகப் பிறந்தான் என்று திரு வானைக்காப் புராணம், தேவாரம் முதலிய நூல்கள் சொல்கின்றன. கோச்செங்கட் சோழன் சிவபெருமானுக்குப் பல கோயில்களைக் கட்டினான். திருமாலையும் வழிபட்டான். அவன் கட்டிய கோயில்கள் தனிச் சிறப்புடையவை. மாடக் கோயில்களைக் கட்டினான். போன பிறவியில் யானையினால் தான் கட்டிய வலை சிதைந்தமையினால் இந்தப் பிறவியில் யானை ஏற முடியாத கோயில்களைக் கட்டினான் என்று சொல்வது உண்டு. அவன் எழுபத்திரண்டு கோயில்களைச் சிவபெருமானுக்கு எடுப்பித் தான் என்பதைத் திருமங்கையாழ்வாரே சொல்லியிருக்கிறார்.

"இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ ளீசற்கு
எழில்மாட மெழுபதுசெய் துலக மாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே."

முன் பிறவியில் சிலந்தியாக இருந்து வழிபட்ட பெருமையினால் கோச்செங்கட் சோழனாகப் பிறந்து உலகத்தை ஆண்டு சிறந்திருந்தான் என்ற இந்தக் கதையை ஆராய்ச்சிக் கண் கொண்டு பார்ப்பதில் பயன் இல்லை. அந்தக் கதையின் கருத்து, அறிவற்ற பிராணியும் இறைவனை வழிபட்டால் நல்ல பயன் பெறும் என்பதே.

சிலந்தி பூசை பண்ணின மற்றொரு தலம் உண்டு. அது காளஹஸ்தி. கழுதையும் பூசை பண்ணின இடம் உண்டு. திருக்கரபுரத்தில் கழுதை வழிபட்டு நலம் பெற்றது. யானை பூசை பண்ணின இடம் திருவானைக்கா மட்டும் அல்ல; திருக்காளத்தியிலும் பூசை பண்ணியது. பாம்பு பலவிடங்களில் பூசை பண்ணிப் பேறு பெற்றதாகக் கதை உண்டு.

இப்படிக் குரங்கு வழிபட்ட இடம், பசு வழிபட்ட தலம், வண்டு வழிபட்ட தலம், மான் வழிபட்ட தலம் என்று பல தலங்கள் உண்டு; தலபுராணங்களைப் பார்த்தால் தெரியவரும். அவற்றையெல்லாம் பார்க்கும்போது 'அவைகளே பூசை பண்ணிப் பேறு பெற்றிருக்கின்றனவே; பெறுதற்கு மிகவும் அரிய பிறவியாகிய மனிதப் பிறவியை எடுத்திருக்கும் நாம் சும்மா இருக்கலாமா?' என்ற இரக்கம் நமக்குத் தோன்ற வேண்டும். இது தான் புராணங்களைப் படிப்பதன் பயன்.

விலங்குகளின் அறிவு

பறவை முதலியவை பூசை பண்ணுமா என்று ஒருவர் கேட்டார். "ஞான சம்பந்தர் முதலிய பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்களே!" என்று நான் சொன்னேன். "அவர்கள் ஏதாவது காரணத்தைக் கொண்டு சொல்லியிருக்கலாம். அதற்கு வேறு ஏதாவது பொருள் இருக்கலாம். வண்டு நேராகப் பூசை பண்ணியது என்று என்னால் நம்பமுடியவில்லை" என்று அந்த அன்பர் சொன்னார். வண்டு பக்தியுடன் பூசை பண்ணிற்றா இல்லையா என்பதைத் தெரிவதற்குமுன், அதற்கு உள்ளம் உண்டா இல்லையா என்ற ஆராய்ச்சி செய்ய வேண்டும். பிறருடைய உள்ளத்தில் இருப்பதை அறிந்து கொள்ள நமக்கு ஆற்றல் இல்லாதபோது மற்றப் பிராணிகளின் உள்ளத்தைப் பற்றி ஆராய நமக்குச் சக்தி

ஏது? பிராணிகளுக்கும் மனம் உண்டு; அறிவு உண்டு. நாய் தன் எசமானனை அறிந்து கொள்கிறது. கன்று தன் தாயை அறிந்து கொள்கிறது. எல்லா விலங்கினங்களும் உண்ணுவது எது, உண்ணாதது எது என்பதை அறிந்து கொள்கின்றன. இவற்றைக் கொண்டு பார்த்தால் நம்மைக் காட்டிலும் அவற்றிற்கு அறிவு குறைவாக இருக்கலாம் என்று சொல்லலாமேயன்றி, அறிவே இல்லையென்று சொல்ல முடியாது.

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும்"

என்று அப்பர் சுவாமிகள் வேண்டுகிறார். புழுவுக்கும் மனம் இருக்கிறது என்றும், அந்த மனத்தில் இறைவன் அடியை நினைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதென்றும் அதிலிருந்து ஊகித்துக் கொள்ளலாம்.

வண்டு கோயிலுக்குள் சென்று இறைவனைச் சுற்றுகிறது. குருக்கள் போகிற இடத்திற்கு எல்லாம் அதுவும் போகிறது. நம்மால் அப்படிப் போக முடியாது. அதைக் காணும்போது, அந்த வண்டு இறைவனை வலம் வருவதாக எண்ணிக் கொள்ளலாம். கூர்ந்து அறிவதற்குரிய ஆற்றல் நம்மிடத்தில் இல்லாதபோது அது பூசை செய்யவில்லையென்று சொல்லுவது நியாயமாகாது. நமக்கு ஒன்று தெரியவில்லை யென்பதனால் அந்தப் பொருளே இல்லையென்று சொல்வது முறை அன்று.

விலங்குகளின் மொழி

பிராணிகளுக்கு அறிவு உண்டு. அவற்றுக்கும் தனித்தனியே மொழி உண்டு. நம்முடைய மொழியைப் போல வளப்பம் பெற்றதாக இல்லாவிட்டாலும் சிலவகை ஒலிக் குறிப்புகளால் பிராணிகளும் பேசுகின்றன. காக்கைக்கும் பேசுகின்ற ஆற்றல் உண்டு. நம்மைப் போன்ற ஒலி விரிவுடன் அது பேசுவது இல்லையென்பதே வேறுபாடு. பாரதியார் காக்கையின் பேச்சைக் கவனித்துக் கிட்டத்தட்ட முப்பது வகையான ஒலிகளை அது ஒலிக்கிறது என்று எழுதியிருக்கிறார். மலைக் காட்டில் வாழ்கிற குடிகளுக்குப் பிராணிகளின் ஒலியைக் கண்டு அவற்றின் உள்ளக் குறிப்பை அறியும் அறிவு இருக்கிறது. நம்மைப் போலச்

சொற்பொழிவு ஆற்றவும், ஒருவரை ஒருவர் வைது கொள்ளவும், பயன் இல்லாமல் பேசவும் விலங்குகளுக்கு வாய் இல்லை. ஆனாலும் அவற்றினுடைய இயல்புக்கு ஏற்றபடி ஓரளவு ஒலிக் குறிப்புகள் இருக்கின்றன.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் சேரமான்பெருமாள் நாயனார் ஒருவர். அவர் சேர மன்னர். வஞ்சிமா நகரத்தில் இருந்து ஆட்சி புரிந்து வந்தார். அவருக்கு இறைவனிடத்தில் இடையறாத பக்தி. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தோழராக இருந்தவர். அவர் தவம் செய்து கொண்டிருந்தார். ஆட்சி புரியும் பாரத்தை ஏற்காமல் விலகி இருந்தார். ஆனாலும் பெரியவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து, ''நீங்கள் ஆட்சி புரியத்தான் வேண்டும்'' என்று சொன்னார்கள். இறைவனுடைய திருத்தொண்டை மறவாமல் அரசாண்டு வந்தார் அவர். இறைவனைப் பூசித்து ஒரு வரம் கேட்டார். ''எல்லா வகையான விலங்குகளும் பேசும் பேச்சுக்கள் எனக்குத் தெரியவேண்டும்'' என்று கேட்டார். மனிதர்களுடைய உள்ளம் அறிந்து அரசாட்சி புரிவதோடு, பசு, பட்சி முதலியவற்றினுடைய பேச்சையும் உணர்ந்து, அவற்றுக்கும் ஒரு குறை இன்றி அந்த ஆருயிர்களுக்கும் இன்பம் தருகிற வகையில் ஆட்சி செய்ய வேண்டுமென்று அவர் நினைத்தார். அதனால் எல்லா விலங்குகளின் மொழிகளும் தமக்குத் தெரிய வேண்டுமென்று இறைவனை யாசித்து வரம் பெற்றார். எந்தப் பிராணியும் கழறுவதைத் தெரிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றமையினால் அவருக்குக் கழறிற்றறிவார் என்ற பெயர் உண்டாயிற்று.

இந்த வரலாறு, பிராணிகளுக்குப் பேச்சு உண்டென்றும், அதற்கு மூலகாரணமான சிந்திக்கும் திறன் உண்டென்றும் தெரிந்துகொள்ள உதவுகிறது. மனம் இருக்கும்போது உணர்வு இருக்கும். பெரும்பாலான விலங்கினங்களுக்கு இறைவனைப் பூசிக்கும் பக்தி இல்லாமல் இருக்கலாம். ஆனால் மனிதர்களிலே பலர் அப்படி இல்லையா? மனிதர்களுள் சிலர் எப்படி இறைவனை இடையறாது பூசித்து, இறைவன் வடிவத்தைச் சிந்திக்கும் ஆற்றல் அதிகமாகப் பெற்றிருக்கிறார்களோ அவ்வாறே விலங்கினங்களிலும் சில பெற்றிருக்கலாம். அதை உள்ளபடி தெரிந்து கொள்வதற்கு நமக்கு ஆற்றல் போதாது.

ஆராய்ச்சியும் இரக்கமும்

எறும்பு முதலிய பிராணிகள் இறைவனைப் பூசித்தன என்று நூல்களில் சொல்லியிருப்பதைப் பார்க்கும்போது நமக்கு ஆராய்ச்சி பிறக்கிறது. அதற்குப் பதிலாக உயர்ந்த பகுத்தறிவைப் படைத்த நாம் இறைவனை இன்னும் வழிபடவில்லையே என்ற இரக்கந் தான் தோன்றவேண்டும். ஆராய்ச்சியினால் எதையும் சாதித்துக் கொள்ள முடியாது. எறும்பு பூசை பண்ணினதோ இல்லையோ அதைப் பற்றி இப்போது நமக்குக் கவலையில்லை. எறும்பு பூசை பண்ணினது நிச்சயம் என்று அதன் சரித்திரத்தை எழுதி உலகம் எல்லாம் தெரிந்துகொள்ளும்படி பரப்புவது நம் கடமை அல்ல. நம் வாழ்க்கைக்கு அந்தச் செய்தியினால் ஏதாவது உண்மையான பலன் உண்டா என்று பார்க்க வேண்டும். எறும்பும் இறைவனை வழிபடும்போது கரசரணாதி அவயவங்களில் சிறந்த வற்றைப் பெற்ற நாம் வாளா இருக்கிறோமே என்ற நினைவு உண்டாவதற்கு அத்தகைய வரலாறுகள் உதவுகின்றன.

அறிவின் பயன்

மனிதனுக்கு உள்ள அவயவங்கள் மிகச் சிறந்தன. அவனுடைய அறிவும் ஆற்றலும் வேறு எதற்கும் இல்லை. நமக்குக் கைகால்கள் கொடுத்திருப்பது இறைவன் திருக்கோயிலை வலம் வந்து கும்பிடுவதற்காகத்தான். நம் கரங்களால் மலர்களைப் பறித்து இறைவன் திருவடிக் கீழே இட்டு அருச்சித்து வழிபட வேண்டும். ஆண்டவன் நமக்கு அறிவு தந்திருக்கிறான். உலகம் அழிந்து போவது என்றும், மனித யாக்கை நிலையாதது என்றும் அநுபவத்தினால் கண்டு, அதனை நினைந்து பார்க்கிற ஆற்றலைப் பெற்றிருக்கிறோம். முன்னால் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கண்டு, பின்னாலும் இப்படி நிகழும் என்று தெளிந்து கொள்ளும் அறிவு நமக்கு இருக்கிறது. அயல் வீட்டில் ஒருவன் இறந்து போனால் அதைப் போலவே நாமும் இறக்கும் சமயம் ஒன்று உண்டென்று அறிய அந்த அறிவு பயன்பட வேண்டும். உலகமாகிய படைப்பு இருக்கும்போது அதற்கு மூலகாரணமாக ஒருவர் இருக்கவேண்டு மென்று ஆராய அறிவு துணை செய்யும். அவனுக்கும் நமக்கும் உள்ள உறவைத் தெரிந்து கொண்டு, இனி அவனால் பயன் பெற வேண்டும் என்ற தெளிவும் உண்டாகவேண்டும். இதற்கெல்லாம்

உதவியான அறிவும் ஆற்றலும் உடைய மக்கட் பிறவி எளிதில் பெறுவதற்குரியது அன்று.

பரிணாமம்

புல் முதல் யானை வரைக்கும் படிப்படியாக வளர்ந்து பின்பு இந்த உடம்பை எடுத்திருக்கிறோம்.

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்''

என்று மணிவாசகப் பெருமான் சொல்கிறார். நவீன விஞ்ஞானி கள்கூடப் பரிணாமம் என்று இதைச் சொல்வார்கள். டார்வின் என்னும் பிரபல விஞ்ஞானி பரிணாமவாதத்தை நிலைநிறுத் தினார். சிறிய பிராணியில் இருந்து வளர்ந்து வளர்ந்து மனிதன் உண்டாகியிருக்கிறானென்று அவர் சொல்கிறார். எந்த வகையில் பார்த்தாலும் மனிதப் பிறப்பு என்பது மிகவும் அருமையான பிறப்புத்தான். எல்லாப் பிறப்புகளிலும் இது சிறந்தது என்பதை யும் தெரிந்து கொள்கிறோம்.

2

சிறந்த பயன்

நம்மிடம் ஏதாவது ஒரு கருவி கிடைத்ததானால் அந்தக் கருவியைக் கொண்டு மிகச் சிறந்த பயனை அடைய முயல் கிறோம். சாமான்ய அறிவு உள்ளவன் தன்னுடைய அறிவுக்குப் பட்ட எதையாவது படிக்கிறான். விறகு வெட்டி படிப்பது கிடையாது. ஆனால் அவனும் ஏதாவது நாடோடிப் பாட்டு ஒன்றையாவது கேட்டு இன்புறுகிறான். அறிவிலே சிறந்திருக்கிற மனிதன் இன்னும் சிறந்த நூல்களைப் படிக்கிறான். மேலே போகப் போக நுட்பமான நூல்களை அவன் படிக்கிறான். மிக நுட்பமான நூலைப் படிக்கிறவனையே சிறந்த அறிவு உள்ளவன் என்று சொல்கிறோம்.

இந்திரியங்களின் இன்பத்தை ஆராய்ந்தாலும் யார் மிகச் சிறந்த இன்பத்தை நுகர்கிறார்களோ அவர்களையே வளவாழ்வு உடையவர் என்று போற்றுகிறோம். மனிதன் மிகச் சிறந்த நுகர்ச்சியை நுகரலாம்; மிகச் சிறந்து ஆராய்ச்சியைச் செய்யலாம்; தன்னுடைய வாழ்வை மிகச் சீரியதாக வைத்துக் கொள்ளலாம். பணத்தையும் பலத்தையும் அறிவையும் தேடிக் கொள்ளும் மக்கள் எல்லோருமே அவற்றால் சிறந்த உயர்ந்து நிற்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அமெரிக்க நாட்டில் பணத்தை மலை போலக் குவித்து வைத்திருக்கிறார்கள். ரஷ்ய நாட்டில் ஜன சக்தியை மிக அதிகமாகக் குவித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு இருந்தும் அங்கே அமைதியைக் காணவில்லை. பாரத நாட்டில் இறைவனுடைய பக்தியை வளர்த்து அதனால் இறைவன் திருவருளைப் பெறுவதுதான் மனிதப் பிறவியினால் பெறும் உயர்ந்த பயன் என்று தெரிந்து கொண்டு அந்த வழியில் ஒழுகு கிறார்கள்.

தாலாட்டு

இளம் பருவத்திலிருந்து இந்த நாட்டுக் குழந்தைகளுக்கு எது நிச்சயமானது என்ற அறிவை அடிக்கடி புகட்டி வருகிறார்கள். குழந்தையைத் தாலாட்டும் தாய் தாலாட்டுப் பாட்டிலே வேடிக்கைப் பாட்டைச் சொல்வது இல்லை. ஆண்டவனது திரு அவதாரங்களையும் திருநாமங்களையும் சொல்லித் தாலாட்டு கிறாள். உயர்ந்த வேதாந்த தத்துவங்களைச் சொல்லும் பாடல் களைப் பாடுகிறாள். அவற்றையெல்லாம் அறிந்து உணர்ந்து கொள்கிற அறிவு குழந்தைக்கு இருப்பது இல்லை. ஆனால் காதில் அந்த ஒலியைக் கேட்டு, மெல்ல மெல்லப் பிராயம் வளர்ந்தால், கேட்ட சொற்களுக்குப் பொருள் என்ன என்ற ஆராய்ச்சி பிறக்கும். குழந்தையைத் தாலாட்டும்போது பாடும் பாட்டை அது அறியாவிட்டாலும் முன்பே குழந்தையாக இருந்து பின்பு வளர்ந்த பெரிய மனிதர்கள் கேட்பார்கள் அல்லவா? எப்படியோ அந்தப் பாட்டு ஒருவகையான உயர்ந்த சூழ்நிலையை உண்டாக்கிவிடுகிறது.

பழக்க வழக்கங்கள்

குழந்தைகளுக்குப் பெயர் வைக்கும்போது இறைவனுடைய நினைவு உண்டாவதற்காக ஆண்டவன் திருநாமங்களை வைக்கிறோம். இவையெல்லாம் மனிதப் பிறவியின் ஆரம்பத்திலேயே இறைவனுடைய உணர்வு நமக்கு இருக்கவேண்டும் என்பதற்காக ஏற்படுத்தும் பழக்கவழக்கங்கள்.

இதுவரைக்கும் சொன்னவற்றை எல்லாம் சற்றே தொகுத்துப் பார்க்கலாம். உலகத்தில் உள்ள எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்களில் மனிதப் பிறவி சிறந்தது. அந்தப் பிறவியில் அறிவும் ஆற்றலும் செல்வமும் படைக்கும் வாய்ப்பு மிகுதியாக இருக்கிறது. ஏனைய விலங்குகளுக்கு இவை இல்லை. அந்த அறிவைக் கொண்டு இறைவனுடைய திருவருளைப் பெற வேண்டுமென்ற ஆசையும், அதற்கு ஏற்ற முயற்சியும் நமக்கு உண்டாக வேண்டும். சிறப்பான நிலையில் சில விலங்கினங்கள்கூட இறைவனை வழிபட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் நினைப் பூட்டுகிற பாரத தேசத்தில் பிறவி எடுப்பது மிக அருமையான காரியம். அத்தகைய பிறவி நமக்குக் கிடைத்திருக்கிறது. கிடைத்தவற்றால் மிகச் சிறந்த பயன் உண்டாகும்படி நடக்க வேண்டும். அந்தப் பயன்தான் இறைவன் திருவடியை வழிபடுதல். ''அப்படிப் பெற்றும் உன் திருவடியை நான் வணங்க வில்லையே!'' என்று அருணகிரியார் இந்தப் பாட்டில் இரங்குகிறார்.

> பெறுதற்கு அரிய பிறவியைப் பெற்றும் நின் சிற்றடியைக்
> குறுகிப் பணிந்து பெறக் கற்றிலேன்!

அறிவின் வகை

பொதுவாக மனிதப் பிறவியின் சிறப்பைப் பற்றிப் பேசுகிறபோது, அறிவு இருப்பதனால் அது சிறந்தது என்று பலரும் சொல்வது உண்டு. நூல்களைப் படிக்கும் அறிவு என்பது மாத்திரம் பொருள் அன்று. அறிவு பலதரப்படும். ஒன்றும் அறியாத குழந்தையைவிடப் படிக்கத் தெரிந்த குழந்தை அறிவுடையது. படிக்கத் தெரிந்த குழந்தையைக் காட்டிலும் நூல்களில் ஆராய்ச்சி உடைய குழந்தை பின்னும் அறிவுடையது. அறிவு பசு அறிவு, பாச அறிவு, பதி அறிவு என்று மூன்று வகைப்படும். இறைவனைப்

பற்றிய அறிவைப் பதி அறிவு என்ற சொல்வார்கள். அந்த அறிவை வளர்க்கும் நூல்களைப் படிப்பது சிறந்த பயனைத் தரும். இப்படி நூல்களால் வரும் அறிவுகூட உயர்ந்த அறிவு ஆகாது. அது அநுபவத்தோடு கலவாத அறிவு; அபர ஞானம் என்று பெயர் பெறும். இந்த வாழ்வில் நன்றாக வாழ்வதற்கும், இனிக் கிடைக்கவேண்டிய நன்மைக்கு என்ன செய்ய வேண்டுமென்று வழி காட்டுவதற்கும் நூலறிவு பயன்படும். அந்த அறிவை மனிதன் பெறத்தான் வேண்டும். பின்னாலே அடையவேண்டிய அநுபவத்தில் ஒருவிதமான ஆர்வத்தை உண்டாக்க நூல் அறிவு பயன்படும். சிறந்த குருவின் திருவருளால் உபதேசம் பெற்று அநுபவம் பெறவேண்டும். அநுபவம் நமக்குக் கிடைக்குமென்ற நம்பிக்கையையும், நாமும் முயற்சி செய்து பெறவேண்டுமென்ற ஆர்வத்தையும் உண்டாக்குவதற்கு நூல்களும், நல்லோர் கூட்டுறவும், பெரியவர்களின் உபதேசங்களும் பயன்படும். அந்த ஆர்வத்தைச் செயலாக்கி முயன்று அநுபவ முறையில் பெற யார் துணிகிறானோ அவன் தான் பிறகு சிறந்த அறிவைப் பெறுகிறான். அந்த அறிவும் அநுபவமும் ஒன்றாகவே தோன்றும். அதைப் பரஞானம் என்று சொல்வார்கள். அத்தகைய அநுபவத்தைப் பெறுவதற்கும் இந்தப் பிறவியே சிறந்தது.

தேவரும் மனிதரும்

விலங்குகளுக்கு உறுப்புகள் வளம் பெறுவது இல்லை. அறிவும் வளம் பெறுவது இல்லை. அவற்றுக்குச் சுதந்தரம் கிடை யாது. ஆகையால் அவை இழிந்த பிறவி என்று நினைக்கிறோம். சுதந்தரமும், உறுப்புகளின் வளமும், நினைவு ஆற்றலும் மிகுதி யாகப் பெற்ற மனிதன் சிறந்தவனாகிறான். விலங்கினங்களை விட மனிதன் சிறந்தவன் என்பது கிடக்கட்டும். தேவர்களைக் காட்டிலுங்கூட மனிதன் சிறந்தவன் என்று சொல்ல வேண்டும். தேவர்கள் இறைவனிடம் வேலை வாங்குவார்களேயன்றி அவன் பெருமையை நன்கு உணரமாட்டார்கள். தங்களுடைய வாழ்வுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்தால் அப்போதுதான் அவர்களுக்கு இறை வனைப் பற்றிய நினைவு வரும். விலங்கினங்கள் முழுப் பாவத்தின் பயனாகப் பிறவி எடுக்கின்றன. அதுபோலவே முழுப் புண்ணியத்தின் பயனாகத் தேவர்கள் ஆகிறார்கள். அவர்களுக்கு

இன்ப அநுபவந்தான் வாழ்க்கையின் குறிக்கோள். அந்த அநுபவம் முடிந்த பிறகு அவர்கள் மீட்டும் இந்த உலகத்தில் வந்து தவம் செய்தே இறைவன் அடியைப் பெறவேண்டும். வானவர் பதவி சிறந்ததன்று. வானுலகத்தைவிடச் சிறந்தது வீடு.

"வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்."

என்று வள்ளுவரும் வானவர்க்கும் மேலான ஒரு பதவியைச் சொல்கிறார். அதுதான் முடிந்த முடிபாகிய மோட்சம் என்பது. அதனை அடைவதற்கு உரியவர்கள் மனிதர்களே.

இறைவனும் தன்னுடைய திருவிளையாடல்களைக் காட்டி உலகத்தார் பயன் பெறவேண்டுமென்று இந்தப் பூமியையே தன் திருவிளையாட்டு மேடையாகக் கொள்கிறான். அதுபோலவே ஆத்மாக்களும் புண்ணியம் செய்து தேவலோகத்தை அடைய வேண்டுமானாலும், ஞானம் பெற்று மோட்சத்தை அடைய வேண்டுமானாலும் அதற்குரிய நிலைக்களமாக இந்த உலகம் உதவுகிறது. மனிதப் பிறவி பெற்றதன் பயனாக அந்தச் சீரிய நிலையை அடைய வேண்டும். "இப்பூமி சிவனுய்யக் கொள்வது" என்பர் மணிவாசகர். இந்த வகையிலும் மனிதப் பிறவி அருமையானது.

இறைவனை அணுகும் முறை

ஆண்டவனை அணுகுகின்ற செயலில் எத்தனையோ வேறுபாடு உண்டு. திருமுருகாற்றுப்படையில் முருகனை வழிபடுகிற மக்களில் பல வகையினரைப் பார்க்கிறோம். மலையில் இருக்கிற வேடர்கள் முருகனுக்குப் பூசை போடுகிறார்கள். விரதம் இருக்கும் முனிவர்கள் வருகிறார்கள். அந்த முனிபுங்கவர்களை முன்னிட்டுக்கொண்டு பழனியில் தேவர்கள் முருகனைப் பார்க்கிறார்கள். அங்கே மனிதர்களின் சிறப்புத் தெரிகிறது. தேவலோகத்தில் இருந்து வந்த திருமாலும், சிவபெருமானும், இந்திரன் முதலிய தேவர்களும் நேரே முருகனைப் போய்ப் பார்க்கவில்லை; பார்க்கத் துணியவில்லை. முருகன் கந்த லோகத்தில் இருந்திருந்தால் ஒருகால் அவர்கள் நேரே போய்ப் பார்த்திருப்பார்கள். ஆனால் பூவுலகத்தில் வந்து அவனுடைய அருளைப் பெறவேண்டுமென்று நினைக்கும்போது முருகனுக்கு மிகவும் பிரியமான முனிபுங்கவர்களை முன்னிட்டுக்கொண்டு செல்கிறார்கள்.

நான்கு முகம் படைத்த பிரமதேவன் ஒரு தவறு செய்ததனால் அவனை முருகன் சிறையில் அடைத்துவிட்டான். படைப்பாகிய தொழில் நின்றுவிட்டது. அதன் பின் நடக்கவேண்டிய காப்பு முதலிய காரியங்களும் நிகழவில்லை. ஆகையால் தேவர்கள் யாவருக்கும் வேலை இல்லாமல் போய்விட்டது. சுத்த சோம்பேறியாகப் பொழுது கழித்தால் நல்லவர்களுக்கு நோய் வந்ததுபோல இருக்கும். ஆகையால் தங்களுக்கு வேலையும் அதன் காரணமாக அவிசு முதலிய கூலியும் கிடைக்காமையினால் தேவர்கள் ஆராய்ந்தார்கள். மூலத் தொழிலாகிய படைப்பு நின்று விட்டதே இந்த நிலைக்குக் காரணம் என்பதை உணர்ந்தார்கள். அதற்குக் காரணம் நான்முகன் முருகப்பெருமானுக்கு அபசாரம் செய்தது என்பதைத் தெரிந்து கொண்டார்கள். அதற்குமேல் எல்லாரும் பழனி ஆண்டவனிடம் போய், நான்முகனை மன்னித்து விடுவிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ள வந்தார்கள். வரும்போது பூவுலகத்தில் முருகப் பெருமானிடத்தில் அன்பு செய்யும் முனிவர்களையே முன்னிட்டுக்கொண்டு வந்தார்களாம். முருகப் பெருமானுக்குக் கோபம் உண்டாகாதிருக்க வேண்டு மென்று அவனுடைய குழந்தைகளைப் போன்ற முனிவர்களை முன்னால் போகச் சொல்லி, பின்பு அவர்களைப் பின்பற்றித் தேவர்கள் போனார்கள். இந்த நிகழ்ச்சியிலும் தேவர்களைக் காட்டிலும் முருகனை அணுகும் திறத்தில் மனிதர்களே சிறந்த வர்கள் என்பது தெரியவரும்.

வருங்காலத்துக்குப் பாதுகாப்பு

மனிதனாகப் பிறந்தவனுக்கு மற்றது பற்றிய அறிவு இருக் கிறதோ இல்லையோ, ஒன்று மாத்திரம் நிச்சயமாக அவன் தன் கவனத்தில் வைக்கிறான். வருங்காலத்தில் துன்புறாமல் சேமித்து வைக்கவேண்டுமென்ற நினைவு எல்லோருக்கும் இருக்கிறது. அப்போதைக்குச் சேமித்துக் கொள்ளலாம் என்ற நிச்சயம் இல்லா மையினால், நாளைக்கு வேண்டியதையும் இன்றைக்கே சேமித்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை உண்டாகிறது. இதுவும் அறி வினாலே உண்டாகின்ற காரியந்தான். இதே அறிவைக் கொண்டு இந்தப் பிறவிக்குப் பின்னும் பயன்படுகிற காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற உணர்வு தோன்றுவது நியாயமாகும். மறுநாளைக்கு

வேண்டிய உணவை மாத்திரம் சம்பாதித்துக் கொள்கிறவன் பெரிய செல்வன் அல்லன். அடுத்த மாதத்திற்கு வேண்டியதை இந்த மாதமே சம்பாதிக்கிறவன் அன்றாடம் காய்ச்சியைவிடச் சிறந்தவன். அடுத்த ஆண்டுக்கு உரியதை இந்த ஆண்டு சம்பாதிக்கிறவன் அவனைவிடச் செல்வன். பல காலத்திற்கும் பயன்படுகிற நிலங்களை வாங்கிப் போட்டுக் கொண்டவன் பெரிய செல்வன். வருங்காலத்திற்கு இன்பம் பயக்கின்ற செயல் களைச் செய்து, வசதி உள்ளபோதே செ ்வத்தைச் சேர்த்துக் கொள்கிறவனைக் கெட்டிக்காரன் என்று உலகம் பாராட்டுகிறது. கையும் காலும் கருவிகளும் உள்ளபோதே சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்ற உணர்வு பொருளாதார நூல் படித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது இல்லை. மனிதனுக்கு இயற்கையாகவே இந்த எண்ணம் தோன்றிவிடுகிறது. அதேபோல நம்முடைய கருவிகரணங்களோடு கூடிய சரீரம் முதுமையை அடையாது கட்டிளமையுடன் இருக்கும்போதே இந்தப் பிறவிக்கு அப்பாற்பட்ட வாழ்க்கைக்கு வேண்டிய பொருளைச் சம்பாதித்துக் கொள்ளும் எண்ணம் தோன்ற வேண்டும். இதுதான் நல்ல அறிவு. 'உடம்பு தளர்ந்த பிறகு வேறு ஒரு வேலையும் செய்வதற்கு முடியாத காலத்தில் இறைவனை வழிபடலாம். அதுதான் சரியான சமயம்' என்று சிலர் நினைக்கிறார்கள். உலகியல் இன்பங்களை அநுபவிப்பதற்கே உடம்பு இருக்கிறது என்னும் எண்ணந்தான் இத்தகைய நினைவுக்குக் காரணம். வேறு எந்த இன்பத்தையும் பெறுவதற்கு இயலாத தளர்ச்சியை இந்த உடம்பு அடையும்போது ஆண்டவனை நினைக்கிறேன் என்று சொல் வதற்கு ஒப்பானதே அது.

உடல் தளர்ந்த காலத்தில் நம்முடைய பொறிபுலன்கள் நாம் நினைத்தபடி வேலை செய்வதில்லை. உடம்பில் பலம் இருக்கும் போதுதான் மனத்தில் நினைக்கிறதைச் சரியாகச் செய்யமுடியும். கையும் காலும் நன்றாக இருந்தால்தான் நடக்கவும் எடுக்கவும் முடியும்.நன்றாக இருக்கிறபோது அவற்றைச் செய்யாமல் தளர்ந்த பிறகு மனத்தினால் நினைத்தால் கை எழாது; கால் நடக்காது. இளமை தொடங்கி எந்தப் பழக்கத்தை மனிதன் செய்து வரு கிறானோ அந்தப் பழக்கந்தான் கடைசி வரைக்கும் நிலையாக நிற்கும். சாகிற காலத்தில் சங்கரா சங்கரா என்று சொல்லிக்

கொள்ளலாம் என்றால், நிச்சயமாக அந்த நினைப்பு அப்போது வாராது. பிற்காலத்திற்குச் சேமித்து வைக்க வேண்டுமென்ற அறிவை மனிதன் பெற்றிருப்பதனால், அந்த அறிவுக்கு ஏற்ப இறந்த பிறகு வாழும் வாழ்க்கைக்கு எது உரியது என்று தெரிந்து கொண்டு அதனைச் சேமித்து வைக்க வேண்டும்.

எதைச் செய்வது?

அறிவினால் நல்லன எது என்று தெரிந்து கொண்டு அவற்றை நாம் செய்யவேண்டுமென்று பெரியவர்கள் சொல் கிறார்கள். இங்கே ஒரு மயக்கம் வரும். நம்முடைய நாட்டில் எத்தனையோ தலங்கள் இருக்கின்றன. பலவகையான கோயில் கள் உள்ளன. தானம், தர்மம், தவம் ஆகியவற்றில் எத்தனையோ வகைகள் இருக்கின்றன. குருமார்களும் பலர் இருக்கிறார்கள். சத்சங்கங்களும் அங்கங்கே பல நடந்து வருகின்றன. பஜனை செய்வாரும், கூட்டாக வழிபடுவாரும், தனித்திருந்து தியானம் செய்வாரும் நிறைய இருக்கின்றனர். இப்படி இறைவன் அருளைப் பெறுவதற்காகப் பண்ணுகிற முயற்சிகள் கணக்கு வழக்கு இல்லாமல் இருக்கின்றன. எல்லாவற்றிலும் நாம் கலந்து கொண்டால் நல்லது என்று நமக்குத் தோன்றுகிறது. அது நம்மால் முடிவதில்லை. ஆகவே நம்மாலே எதுவும் செய்ய முடியாது என்று சிலர் தளர்ந்து போகிறார்கள்.

இந்த நிலையில், நம்முடைய மனத்தைத் தேற்றிக் கொள்வ தற்கும், அநுபவபூர்வமான செயலில் இறங்குவதற்கும் நாம் ஓர் எண்ணத்தை மேற்கொள்ளவேண்டும். உலகத்தில் எத்தனையோ நல்லவை இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் ஒரு மனிதன் செய்ய இயலாது. ஆனால் அவன் செய்வனவெல்லாம் நல்லவன வாக இருக்கலாம். திருச்செந்தூருக்குப் போகவேண்டுமென்று நாம் நினைத்தால் அந்தச் சமயம் பார்த்து ஓர் அன்பர், ''பழனிக்குப் போனால் நன்றாக இருக்கும்'' என்று சொல்வார். மற்றொருவர், ''திருத்தணி நமக்கு அருகில் இருக்கிறதே; அங்கே போகலாம்'' என்று சொல்வார். பின்னும் ஒருவர், ''சென்னையிலேயே வடபழனி இருக்கிறதே; அங்கே போய்விடலாம்'' என்று யோசனை சொல் வார். அத்தனை பேரும் சொல்பவை நல்லவையே. எல்லோ ருடைய பேச்சையும் கேட்டு நடக்க முடியுமா? ஒன்றும் அறியா

மல் இருப்பதுதான் சங்கடமென்றால், பலவற்றை அறியும் போதும் சங்கடம் உண்டாகிறது. நல்லவைகளாக இருந்தாலும் எல்லோருடைய முறையையும் பின்பற்றி நடக்க நமக்கு ஆற்றல் இல்லை. ஒரு சமயத்தில் அத்தனையையும் செய்ய முடியாது. அப்போது, நாம் நன்றாகத் தெளிந்து ஏதாவது ஓரிடத்திற்குப் போகத்தான் வேண்டும். ''இத்தனை பேர் நம்மை அங்கே போ, இங்கே போ என்கிறார்களே; நாம் எங்கே போவது? சினிமா வுக்குப் போய்விடலாம்'' என்று நினைப்பது தான் அறியாமை.

பன்மையின் உண்மை

இந்த நாட்டின் பெருமையைப் பற்றி முன்பு சொன்னேன். அறிவு உடையவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர் சிலர் இந்த நாட்டில் பண்பாட்டு முறைகள் பலவாக இருப்பதைக் கண்டு பரிகசிக்கிறார்கள். பலவிதமான திருவுருவங்கள், பலவிதமான சமயங்கள், பலவிதமான ஆலயங்கள் என்று இருப்பது நமக்குள் ஒருமைப்பாட்டைக் காட்டுமா என்று அந்த அறிவாளிகள் சொல்கிறார்கள்.

ஒரு பட்சணக் கடைக்குச் செல்லும் ஏழை ஒருவன் அங்கே உள்ள தின்பண்டங்களைப் பார்க்கிறான். எல்லாவற்றையும் பார்த்து அவன் நாக்கில் தண்ணீர் சொட்டுகிறது. அவன் வறிய வன். ஆகையால் எதையும் வாங்கிக் கொள்ளவில்லை. ஆனால் பணம் உள்ளவன் அங்கே போனால் தனக்குப் பிடித்தவற்றை வாங்கிச் சாப்பிடுவான். பணமும் பசியும் உள்ளவனுக்கு எது பிடித்தமாக இருக்கிறதோ அதைப் வாங்கிப் பயன்படுத்திக் கொள்ளும் இயல்பு இருக்கும்.

அதுபோல் இறைவனிடத்தில் அன்பு உள்ளவன் எத்தனை திருவுருவம் இருந்தாலும் தன் உள்ளம் பற்றிக் கொள்கிற திரு வுருவத்தில் மனத்தை வயப்படுத்தி விடுவான்; ஏதேனும் ஒன்றில் புகுந்து செயல் ஒழிந்து நிற்பான். ''அது இருக்கிறதே; இது இருக் கிறதே; எந்த உருவத்தைத் தியானிப்பது?'' என்னும் கேள்வி, மயக்கம் எல்லாம் அன்பில்லாதவர்களுக்கு உண்டாகலாம். அன்பும் நம்பிக்கையும் உள்ளவர்கள் எல்லாம் ஒன்று என்கிற தத்துவத்தைப் பெரியவர்கள் மூலம் தெரிந்து கொண்டவர்கள். நெஞ்சம் ஒட்டிவிடுகிற ஒரு முறையைக் கடைப்பிடித்துப் பயன் அடைவார்கள். இதற்கும் நம் அறிவே துணை செய்யும்.

மனிதனுக்குப் பலவற்றைக் காட்டினால்தான் தனக்குப் பிடிப்பது இன்னது என்று தெரிந்து கொள்ள முடியும். இப்படித் தான் செய்யவேண்டுமென்று ஒன்றையே சொன்னால் அதைச் செய்ய மனம் இல்லாதவன் ஏதோ தண்டனைக்கு உட்பட்டுச் செயல் செய்வானைப் போலச் செய்வான். தான் விரும்புகிற பொருளை வாங்கிச் சாப்பிடலாம் என்று எண்ணியே சில பிள்ளைகள் வீட்டிலுள்ள சிற்றுண்டிகளை உண்ணாமல் ஹோட்டலுக்குப் போகிறார்கள். பல வகைகள் இருப்பதனால்தான் அவர்கள் நெஞ்சம் அதை நாடுகிறது. இறை வழிபாட்டிலும் பலவகை இருப்பதற்குக் காரணம் அவரவர்களுக்குப் பொருத்தமாகவும் வாய்ப்பாகவும் ஏதேனும் ஒன்று இருக்க வேண்டும் என்பதுதான்.

பசி உடையவனுக்கு எங்கே உணவு கிடைத்தாலும் உடனே உண்ணுகின்ற ஆர்வம் உண்டாகும். பல உணவுச்சாலைகள் இருந்தாலும் இவ்வளவு இருக்கின்றனவே என்று அவன் மயங்க மாட்டான். எது அருகில் இருக்கிறதோ அங்கே சென்று கையிலுள்ள பணத்திற்கு ஏற்ப எது கிடைக்கிறதோ அதை வாங்கி உண்பான். ஆர்வமும், அறிவும் கலந்த முயற்சி அது.

இறைவனை நினைப்பூட்டுபவை

இறைவனை வழிபட நமக்குச் சரீரம் அமைந்திருக்கிறதே யொழிய வேறு எதற்கும் இல்லை. பிரபஞ்சம் அதற்கு உதவியாக இருக்கிறது. நம்முடைய நாட்டில் நமது வாழ்க்கை முழுவதுமே இறை வழிபாட்டுக்கு ஏற்ப அமைந்திருக்கிறது. ஊரெல்லாம் விருந்து கொண்டாடுகிற நாள் இறைவனுடைய விழா நாளாக அமைகிறது. நம் இலக்கியங்கள் எல்லாம் இறைவனை நினைப் பூட்டுகின்றன. சிறந்த சிற்பங்களும், கலைகளும் இறைவனை நினைப்பூட்டுவனவாக அமைந்திருக்கின்றன. தமிழிலும் பிற மொழிகளிலும் பலவகையான தோத்திரங்கள் இருக்கின்றன. யந்திரம், மந்திரம், தந்திரம், புராணம், சாஸ்திரம், வேதம் என்று வழிபாட்டு நெறிகளுக்குரிய கருவிகள் எல்லாம் வேறு எந்த நாட்டிலும் இல்லாத வகையில் இங்கே அளவுக்கு மிஞ்சி இருக்கின்றன. இவ்வளவு இருந்தும் அவற்றைப் பற்றிச் சிந்திக்காத அறிவு ஒருவனுக்கு இருக்குமானால் அவனை அறிவு உடையவன் என்று எப்படிச் சொல்வது?

இத்தகைய கருவிகள் இல்லாவிட்டாலும் இயற்கையில் அமைந்த பிரபஞ்சமே இறைவனை வழிபடுவதற்குப் போது மானது.

"காக்கைச் சிறகினிலே நந்தலாலா - உன்றன்
கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா"

என்று பாரதியார் பாடுவார். இறைவனை வழிபட வேண்டுமென்ற ஆர்வம் யாருக்கு வருகிறதோ அவர்கள் எல்லாவற்றையும் பயன் படுத்திக் கொள்வார்கள். எங்கும் இறைவனுடைய திருவுருவத்தைப் பார்ப்பார்கள். அதற்கு ஏற்ற பிறவியை நாம் பெற்றிருக்கிறோம்.

இருவகை நிலை

இந்தப் பிறவி பெறுவதற்கு அரியது என்று சொன்னவுடன், இந்த உடம்பைப் பாதுகாக்க வேண்டுமென்ற நினைவு உடனே வருகிறது. பெறுதற்கு அரிய பொருளைப் பெற்றுவிட்டோம்; இதனாலே வருகின்ற இன்பங்களைப் பெறவேண்டுமென்ற ஒரு வகை நினைப்பும் மக்களுக்கு உண்டாகலாம். இந்த உடம்பினால் அடைகின்ற இகலோக இன்பங்களைப் பெறுவதுதான் பிறவிப் பயன் என்று நினைத்துப் பலர் தம் வாழ்நாள் முழுவதையும் இந்திரிய சுகம் பெறப் பயன்படுத்துகிறார்கள். அவர்களும் பெறு தற்கரிய பிறவி இது என்று உணர்ந்திருக்கிறார்கள். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்று அவர்களும் சொல் கிறார்கள்; பக்தர்களும் சொல்கிறார்கள். இரண்டு வகையினரும் உடம்பைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. இந்த உடம்பை உடம்பி னுடைய சுகத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கிறவன் முதல் வகையினன். இந்த உடம்பைக் கருவியாகக் கொண்டு பயன் படுத்திக் கொள்கிறவன் பக்தன். இரண்டு பேருக்கும் இந்த உடம் பிலே பற்று இருக்கும். ஆனால் முதல் வகையினனோ இந்த உடம்பினால் வேறு ஒன்றைச் சாதித்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறது இல்லை. பக்தனோ இந்த உடம்பினால் உடம்பை அறுக்கின்ற ஒரு வகை முடிவைச் சாதிக்க நினைக் கிறான். இரண்டு பேரும் சரீரத்தில் அன்பு உடையவர்கள்தாம்.

"உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"

என்று திருமூலர் சொல்கிறார். எப்படியும் இரண்டு பேரும் சரீர அபிமானிகளே அல்லவா?

கருவியும் லட்சியமும்

ஒருவன் ஏணியை எடுத்துக் கொண்டு போகிறான். மாடி மேல் ஏறவேண்டும் என்பது அவன் நினைப்பு. போகும்போது யாராவது அந்த ஏணியைக் கைப்பற்ற நினைத்தால் அவர்களிட மிருந்து அதைக் காப்பற்றிக் கொள்கிறான். ஏணி முறியாமல், எங்கும் மோதாமல் பத்திரமாக எடுத்துச் செல்கிறான். மாடிக்கு நேராக அதைச் சுவரில் சார்த்தி வைத்து அதன்மேல் ஏறி விடுகிறான். இது வரைக்கும் அந்த ஏணியினிடம் அவனுக்கு எத்தனையோ அன்பு இருந்தது. அதைச் சுமந்து கொண்டு வரும் போது இருந்த அன்பைவிட அதைச் சார்த்தி வைத்து ஒவ்வொரு படியாக ஏறும்போது அதிகக் கவனமாக ஏணி கீழே விழாமல் பார்த்துக் கொள்கிறான். படி முறியாமல் பார்த்துக் கொள்கிறான். யாரையாவது ஜாக்கிரதையாகப் பிடித்துக் கொள்ளும்படி சொல் கிறான். அவனுடைய எண்ணம் ஏணி விழக்கூடாது, முறியக் கூடாது என்பது மாத்திரம் அன்று. அப்படி விழுந்தால் நாமும் வீழ்ந்து படுவோம் என்றே அவன் நினைக்கிறான். ஒவ்வொரு படியாக மெள்ளக் கால் வைத்து மேலே ஏறின பிறகு அவன் அந்த ஏணியை மறந்துவிடுகிறான்.

எந்தக் காரியம் செய்தாலும் அந்தக் காரியத்திற்குரிய கருவி களை முதலில் பாதுகாப்போடு அமைத்துக் கொண்டு, செய்யும் போது மிக அருமையாகப் பாதுகாத்து, அதனால் விளைகின்ற காரியம் கைகூடிய பிறகு அவற்றைப் பற்றி கவலைப்படாமல் இருப்பதுதான் அறிஞர்களுடைய இயற்கை. கருவிகளில் மூன்று வகை உண்டு. மூலப் பொருளாக இருக்கிற கருவி ஒன்று; துணைப் பொருளாக இருக்கிற கருவிகள் இரண்டு வகை. குடத்தைப் பண்ணும்போது அந்தக் குடத்திற்கு மூலமாக இருக் கிறது மண். குடத்தை வனைகிறான் குயவன். அவனுக்குக் சக்கரம், தண்டு முதலியவை உதவியாக இருக்கின்றன. மூலப்பொருள்களான மண் குடமான பிறகும் அதில் இருக்கிறது. தண்டு சக்கரமோ குடம் உருவான பிறகு நழுவி விடுகின்றன; குயவனும் போகிறான். அதுபோல் இந்த உடம்பாகிய கருவியின்

உதவி கொண்டு ஆன்மா அடையவேண்டிய பயனை அடைந்த பிறகு உடம்பை மறந்து விடுகிறது. பக்தர்கள் இந்த உடம்பைத் தண்டு சக்கரம் போலக் காப்பாற்றுகிறார்கள். இதனால் அடைகின்ற பயனை அடைந்த பிறகு இதைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. கரும்பினால் சாறு கொண்டவன் சக்கையை நீக்கிவிடுவது போல இந்த உடம்பை நீக்குவதற்கு அவர்கள் சித்தமாக இருப்பார்கள்.

ஆகவே நல்லவர்கள் உடம்பைப் பாதுகாப்பது கருவிகளைப் பாதுகாப்பது போன்றது. மற்றவர்கள் உடம்பைப் பாதுகாப் பதற்கு உடம்பே இன்ப நிலையம் என்ற நினைப்புக் காரணம்.

உடம்பின் மேல் பற்று

பலகாலம் வாழ்ந்த ஒன்றை விட்டுப் போவதற்கு மனம் வருவதில்லை. பக்தர்கள் மாத்திரம் எத்தனை காலம் இந்த உடம் போடு வாழ்ந்தாலும் எந்தச் சமயத்திலும் இதை விடுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். இதுதான் கருவியினிடத்தில் உள்ள அபிமானம் என்பது. தன்னுடைய பெண் குழந்தையை வளர்த்து, கல்வி வழங்கி, அழகு உடையவளாக ஆக்குகிறான் தந்தை. அவளுக்குத் திருமணம் செய்ய ஏற்பாடுகளும் செய்கிறான். மாப்பிள்ளை தேடின பிற்பாடு மகிழ்ச்சியுடன் அவளை அவனுடன் அனுப்பி வைக்கிறான். நம் வீட்டுப் பெண்ணை அயல் வீட்டுக்கு அனுப்பலாமா என்று நினைப்பது இல்லை. திருமணம் புரியும்போது, நம் வீட்டை விட்டுப் போவாள். போகவேண்டிய இடத்திற்குப் போவாள் என்று நினைக்கிற தந்தைக்கு மகிழ்ச்சி வருகிறதேயொழிய துக்கம் வருகிறது இல்லை. ஏதோ சிறிது துக்கம் தோன்றினாலும் போகப் போக அவன் உண்மையான மகிழ்ச்சி அடைகிறான். அந்தப் பெண்ணுக்கும் 'ஐயோ! அப்பா வீட்டை விட்டுப் போகிறோம்!' என்ற வருத்தம் உண்டாவதில்லை. மணத்தில் பெண் இந்த வீட்டைவிட்டுப் போவது போல, மரணத்தில் ஆத்மாவானது இந்த உடம்பை விட்டுப் போகிறது. இந்த வீட்டில் பிறந்த பெண் இங்கே இருந்து பலவகையான பயிற்சிகள் பெற்று, வளர்ச்சி அடைந்தது போல, இந்த உடம்பில் வாழ்கிற ஆன்மா பலவகைச் சாதனங்களைச் செய்து அந்த உடம்பின் வாழ்வையே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த

எண்ணத்தோடு வாழ்ந்தால் பலகாலம் வாழ்ந்த உடம்பாயிற்றே என்ற பற்று இருக்க நியாயம் இல்லை.

பழைய காலத்திலாவது வீடு என்றும் ஊர் என்றும் பற்று இருக்கும். இந்தக் கால வாழ்க்கை அந்தப் பற்றைப் போக்கி விடுகிற முறையில் அமைந்திருக்கிறது. பழங்காலத்தில் ஏதேனும் ஒரு சிறிய ஊரில் நான்கு தெருவுக்கு அப்பால் ஒரு தெருவில் ஒருவன் செத்துப் போனாலும் ஊரில் உள்ளவர்கள் அத்தனை பேரும் துக்கம் கேட்பார்கள். வீட்டுக்காரர்கள் ஒரு வருஷம் துக்கம் காப்பார்கள். ஒரு மாதம் முழுவதும் அழுது கொண்டிருப் பார்கள். நவீன நாகரிகத்தில் நகரங்கள் மிகுதியாகிவிட்டன. அதுவும் சென்னைப் பட்டினத்தில் பாருங்கள். இந்த வீட்டில் ஒரு பிணம் கிடக்கும்; அடுத்த வீட்டில் ஆண்டு நிறைவு நடக்கும். மரணம், மணம் ஆகிய இரண்டும் ஒரு தெருவில் அடுத்தடுத்து நிகழும். இங்குள்ளவர்கள் பற்றற்ற ஞானிகளைப் போலவே வாழ்வார்கள். இத்தகைய பற்றற்ற வாழ்வு நடத்தும் பழக்கம் நமக்கு உண்டாகியிருக்கும்போது தேகப்பற்றை விடுகிற பழக்கம் மட்டும் உண்டாகவில்லை.

'ஸ்டேஷன் மாஸ்டர்'களைப் பாருங்கள். அவர்களுக்கு அடிக்கடி ஓர் ஊரில் இருந்து வேறோர் ஊருக்கு மாற்றலாகிறது. ஒருவர் தம்முடைய குடித்தனத்துடன் மாடு கன்றுகளுடன் ஓர் ஊருக்குப் போகிறர். அங்கே அவரோடு வேலை செய்கிற பல அன்பர்கள் வாழ்கிறார்கள். அந்த ஊரில் நடக்கும் காரியங்கள் அத்தனையிலும் கலந்து கொண்டு அவர் உறவாடுகிறார். அடுத்த ஆறு மாதத்தில் அந்த ஊரிலிருந்து இருநூறு மைலுக்கு அப்பால் உள்ள ஊருக்கு அவருக்கு மாற்றலாகிறது. போகிற ஊர் பழக்கம் இல்லாத ஊர் ஆயிற்றே என்று அவர் நினைப்பது இல்லை. பழகிய ஊரைவிட்டுப் போகிறோமே என்ற துயரமும் அவருக்கு அதிகம் உண்டாவதில்லை. எந்தச் சமயத்திலும் தம் சாமான்களை வண்டியில் போட்டுக் கொண்டு, தாமும் போவதற்குத் தயாராக இருக்கிறார். இதுவும் ஒரு விதமான ஞானம் என்றே நான் நினைப்பது வழக்கம்.

அதுபோல, இந்த உடம்பை விட்டுப் போவதற்கு நாம் தயாராக இருந்துகொண்டு இதனைப் பாதுகாப்போமானால் மரணத்தினால் நமக்குத் துயரம் உண்டாகாது. பெறுதற்கு அரிய

பிறவியைப் பெற்றதனால் இந்த உடம்பை எப்போதும் பாதுகாக்கவேண்டும் என்பது அறிவு ஆகாது. இதனால் கிடைக்கிற பயனை இந்தக் கருவி நன்றாக இருக்கும்போதே அடைய வேண்டும் என்ற ஆர்வம் கொள்வதுதான் அறிவின் பயன்.

உடம்பால் உடம்பைப் போக்குதல்

வடமொழியில் ஒரு சுலோகம் உண்டு. இந்த உடம்பைப் பெறுவதற்குப் பயன் மீட்டும் உடம்பு வராமல் செய்வதுதான் என்று அது சொல்கிறது. முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும்; வைரத்தை வைரத்தால் அறுக்க வேண்டும்; உடம்பை உடம்பால் போக்க வேண்டும்.

பெரியவர்கள் உடம்பு வராமல் இருக்கும் இன்ப நிலையை அடைவதற்காகவே இந்த உடம்பைப் பயன்படுத்தவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். சேக்கிழார் பெரியபுராணத்தில் இரண்டாவது பாட்டில் இந்தக் கருத்தைச் சொல்கிறார்:

"ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாற டஞ்செய் வரதர்பொற் றாள்தொழ."

ஔவையாரும், "உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பினுள் உத்தமனைக் காண்" என்று அருளியிருக்கிறார். இந்த உடம்பு பெறாமல் இருப்பதற்கு வழி இறைவன் திருவடியை வணங்குவது. அதுதான் மனிதப் பிறவியின் பயன். அதனை நினைந்து, "நான் உன் திருவடியை வணங்கவில்லையே!" என்று வருந்துகிறார் அருணகிரியார்.

பெறுதற்கு அரிய பிறவியைப் பெற்றும் - நின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக் கற்றிலேன்.

கற்றுக் கொள்ளும் ஆசை

மனிதனுடைய இயற்கை மேலும்மேலும் கற்றுக்கொள்வது. குழந்தைப் பருவத்தில் தன்னுடைய கண் முன்னால் தோன்றும் பொருளைத் தெரிந்துகொள்கிற ஆசை இருக்கிறது. அறிவாளிகள் கேட்கிற கேள்விகளைப் காட்டிலும் குழந்தை கேட்கிற கேள்வி

கள் அதிகம். இந்த நிலத்தில் உடம்பு பட்டவுடன் அதனிடம் நான் எங்கே இருக்கிறேன் என்ற கேள்வி பிறக்கிறது. வடமொழி யில் சிலேடையாகச் சொல்வார்கள். குழந்தை வயிற்றில் இருக்கும் மட்டும் இறைவன் துணையோடு இருந்தது. அது நிலத் தில் வந்து விழுந்ததும் தான் வந்த இடம் இன்னது என்று தெரியா மல், ''எங்கே, எங்கே?'' என்று கேட்கிறது என்று சொல்வார்கள். குழந்தை குவா குவா என்று அழுகிறது அல்லவா? குவா என்பதற்கு வடமொழியில் எங்கே என்று பொருள். இது சமத்காரமாக இருந்தாலும் இதில் ஓர் உண்மை இருக்கிறது.

பேசத் தெரிந்தவுடன் அம்மாவிடமும், அப்பாவிடமும், ''அது என்ன? இது என்ன?'' என்று குழந்தை நச்சரித்துக் கேட்கிறது. அம்மா என்று பேசக் கற்றுக் கொள்கிறது. அப்பா என்று கூப்பிடக் கற்றுக் கொள்கிறது. சாப்பிடக் கற்றுக் கொள்கிறது. நாளடைவில் உண்ணவும், உடுக்கவும், உடம்பைச் சுத்தம் பண்ணிக் கொள்ளவும் கற்றுக் கொண்டுவிடுகிறது. முதலில் அம்மா கற்றுக் கொடுக்கிறாள். பின்பு அந்தக் குழந்தையே மற்றவர்களைப் பார்த்துக் கற்றுக் கொள்கிறது.

இப்படி ஒரு பருவம் வரைக்கும் தினந்தோறும் பார்ப்பதை எல்லாம் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறது. அந்தப் பருவம் நீங்கின பிறகோ பிறர் வாழ்வதைப் பார்த்து ஆசையை வளர்த்து, அதனை அநுபவிக்க என்ன வழி என்று கற்றுக் கொள்ள முயல் கிறான் மனிதன். பால் குடிக்கக் கற்றுக் கொண்ட குழந்தை தாயி னுடைய உதவியால் அதைச் செய்கிறது. சோறு தின்னக் கற்றுக் கொள்கிற குழந்தை தாயினுடைய உதவி இல்லாமலே வேறு சிலருடைய உதவியினால் தின்னக் கற்றுக் கொள்கிறது. பணம் சம்பாதிக்கக் கற்றுக் கொள்ளும் மனிதன் தன்னுடைய முயற் சியைக் கொண்டு அதைச் செய்கிறான். இப்படிப் பிறந்தது முதற் கொண்டு சாகும் மட்டும் வஞ்சகங்களையும், பொய்யையும், பணம் சம்பாதிக்கும் வழியையும், பிற மனிதர்களை மயக்கும் திறத்தையும் மனிதன் கற்றுக் கொண்டே இருக்கிறான். அவன் கற்காமல் சும்மா இருப்பது இல்லை. ஆனால் ஒன்றை மாத்திரம் கற்றுக் கொள்வதில்லை. இறைவன் திருவடியை அடைவதற் குரிய நெறி இன்னது என்பதைக் கற்றுக் கொள்வதில்லை.

நின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக் கற்றிலேன்

என்பதில் அருணகிரியார் மூன்று நிலையைச் சொல்கிறார். முதல் நிலை இறைவன் திருவடியைக் குறுகுதல்; இரண்டாவது பணிதல்; மூன்றாவது நிலை அந்த அடியைப் பெறுதல்.

குறுகுதல்

பெறுதற்கரிய பிறவியைப் பெற்ற மனிதன் அறிவு பெற்றிருப்பதனால் இது நல்லது இது அல்லாதது என்பதை உணர்கிறான். இறைவன் திருவடியைப் பெறுவதுதான் நம் கடமை என்று தெரிந்து கொள்கிறான். கல்வியினாலும், கேள்வியினாலும், சத்சங்கத்தினாலும் அந்த அறிவு அவனுக்கு வருகிறது. அறிவு வந்தால் போதுமா? அறிவதோடு நின்று விடுகிறவர்கள் எல்லோருமே சோம்பேறிகள். அந்த அறிவு முறுகினால் அவனுக்கு ஆசை பிறக்கிறது. அந்த ஆசை முறுகும்போது அவன் சாதனம் செய்யத் தொடங்குகிறான். சாதனம் செய்த பின்பு அதனுடைய பயனாகிய சாத்தியத்தை அடைகிறான்.

இறைவன் குறுகுதல்

இறைவனுடைய சிற்றடியைக் குறுகுதல் முதல் படி; பணிதல் இரண்டாவது படி; பெறுதல் மூன்றாவது படி. குறுகுதல் அறிவின் பயன். பணிதல் செயல். பெறுதல், விளைவு அல்லது பயன். நாம் தன்னை அணுக வேண்டுமென்று கருதியே இறைவன் நம்மை அணுகிக் கொண்டிருக்கிறான். நம்முடைய உணர்வும், உடம்பும் அறிவும் அணுக முடியாத நிலையில் அவன் இருக்கிறான் என்று வேதங்கள் பேசுகின்றன. குணமும் குறியும் இல்லாதவன் ஆகையால் வாக்கும் மனமும் அடையத்தக்க நிலையில் அவன் இல்லையென்று சொல்கிறார்கள். ஆனால் ஆண்டவன் அந் நிலையில் மாத்திரம் நில்லாமல் நம்மை அணுகி வருகிறான். நம்முடைய அறிவை அறிந்து அணுகுகிறான். தவலை நிறையச் சோறு இருந்தாலும் கரண்டியில் எடுத்து இலையில் பரிமாறுவது போல, தனக்கு எல்லாவற்றையும் கடந்து நிற்கும் நிலை இருந்தாலும் மக்களுடைய உள்ளமாகிய இலையில் பரிமாறுவதற்காகச் சிறிய திருவுருவத்தை எடுத்து

வருகிறான். விசுவரூபம் எடுக்கிற ஆற்றல் உள்ள பெருமானே கண் காணுகின்ற அளவிலே மனிதனைப் போன்ற உருவத்தை எடுத்து வருகிறான். இது அவன் கருணையினால் செய்வது. அப்படி வரும்போது அவனுக்குப் பெருமை, வரவரக் குறுகிக் கொண்டு வருவது. நமக்குப் பெருமை உயருதல்; அவனுக்குப் பெருமை தாழ்தல். அவன் எத்தனைக்கு எத்தனை சிறியவனாக வருகிறானோ அத்தனைக்கு அத்தனை அவன் கருணை மிகுதி யாக விளங்குகிறது.

சிற்றடி

முருகப் பெருமானோ குழந்தையாகவே வந்துவிட்டான். நாம் பற்றிக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிற அந்தத் திருவடி வேதங்களால் சொல்லப்பட்டது; பூவுலகங்களை எல்லாம் கடந்துள்ளது என்று சொன்னால் மயக்கம் உண்டாகும். ஆகவே மிகப் பெருங்கருணையினால் சின்னஞ் சிறு அடியை உடைய வனாக, தளர் நடையிட்டு, நாம் அணுகக் கூடிய குழந்தை உருவத் தோடு வருகிறான். அவன் சிற்றடியை,

"சிற்றடியும் முற்றிய பன்னிரு தோளும்"

என்று பாடுவார் அருணகிரியார். அவன் பெரிய திருவடி சிறுத்த தற்குக் காரணம் நாம் சிறியவர்களாக இருப்பதுதான். தான் சிறுமையை ஏற்றுக் கொண்டு நாம் பெருமையை அடைய வேண்டு மென்ற கருணையினால் அவன் இறங்கி, இளைய வனாக, குறு கியவனாக, சிறிய அடியைக் கொண்டு வருகிறான். கண்ணனும் அப்படி வந்தான். மற்ற எந்த உருவத்திலும் சிறிய அடி இல்லை. தன் அடியை நம் மனத்தில் வைப்பதற்காக அல்லவா அவன் அப்படி வருகிறான்? நம்முடைய மனம் விரிந்தது அல்ல என்று நமக்கே தெரியும். உலக இயலில் ஈடுபடு கிறவர்கள்கூட யாரை யாவது குறை சொல்ல வேண்டுமானால் 'விரிந்த மனம் இல்லா தவர்' என்று சொல்கிறார்கள். உண்மையில் இறைவனை வைத்துக் கொள்ளக் கூடிய விரிவு இந்த மனத்திற்கு இல்லை.

பெரிய பணக்காரன் ஒருவன் நல்லவனாக இருக்கிறான். அவனுக்கு ஏழையாகிய ஒரு நண்பன் இருக்கிறான். மாளிகையில் இருக்கிற பணக்காரனை, "எங்கள் வீட்டுக்கு வரவேண்டும்" என்று அந்த ஏழை அழைக்கிறான். ஏழை குடிக்கூலி கொடுத்துச்

சிறிய அறையில் வாழ்கிறான். அந்த அறை மிகவும் சிறியது. பணக்காரன் வருவதாக இருந்தால் நான்கைந்து வேலைக்காரர் களுடன் வருவான்; எடுபிடி சாமான்களோடு வருவான்; பெட்டி பேழைகளுடன் வருவான். எல்லாவற்றையும் வைப்பதற்கு அந்த அறை இடம் காணாது. ஆனால் பணக்காரன் உண்மையான அன்பு உடையவனாக இருந்து, தன்னுடைய உறவினனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க வேண்டுமென்று எண்ணினால், அவ னுடைய அறைக்கு வரும்போது தன் பரிவாரங்களை விட்டு விட்டு வருவான்; ஆட்களைக் கூட்டிக் கொண்டு வர மாட்டான்; பெட்டி பேழைகளைச் சுமந்து வரமாட்டான்; தனி ஆளாக அவனுடைய அறைக்கு வந்து, அவன் அருகில் உட்கார்ந்து, அவன் இடுகிறது எதுவானாலும் உண்ணுவான்.

இறைவனும் அப்படித்தான் செய்கிறான். சின்னப் புத்தியும், சின்ன உள்ளமும், சின்ன ஆசையும் உடைய மனிதனுக்குச் சின்ன அடியை உடையவனாக அவன் வருகிறான்; சின்னஞ் சிறிய குழந்தைபோல வருகிறான்.அவன் திருவடி குழந்தையின் சிற்றடி என்பதை அவன் வரும்போதே அந்தத் திருவடியில் அணிந்திருக் கிற தண்டையும், சதங்கையும் தம் ஒலியினால் புலப்படுத்து கின்றன. 'சரக் சரக்' என்று சத்தம் கேட்கிற செருப்பை ஒருவன் போட்டுக் கொண்டிருந்தால் வரும் போதே இன்னார் வருகிறார் என்பது அதன் ஒலியினால் தெரியும். நம்முடைய வீட்டுக் குழந்தை வெளியில் போய் இருக்கிறது. அது ஓடி வரும்போதே அதன் தண்டை ஒலி காதில் கேட்டால் குழந்தை வருகிறதென்று தெரிந்து தாய் உவகை அடைகிறாள். அதுபோல் ஆண்டவன் தன் சிற்றடியிலே அதன் பெருமையைக் காட்டுகின்ற, அதாவது அதன் 'சிறுமை'யைக் காட்டுகின்ற சதங்கையும் அணிந்திருக்கிறான். திருவடியின் சிறுமையை, குழந்தையின் பெருமையை, நினைப்ப தற்குத் தண்டையும் சதங்கையும் அறிகுறிகளாக இருக்கின்றன. காலுக்குப் பெருமை, குழந்தை அடியாக இருப்பது. தண்டை, சதங்கைக்குப் பெருமை அது குழந்தையின் திருவடி என்று அடையாளம் காட்டுவது. அதனால்தான்,

"திருவடியும் தண்டையும் சிலம்பும்'

என்று அந்த அணிகளோடு திருவடியைத் தியானம் செய்யத் தொடங்குகிறார் அருணகிரியார்.

''தண்டையணி வெண்டயங் கிண்கிணிச தங்கையுந்
தன்கழல்சி லம்புடன் கொஞ்சவே''

என்று அருமையாகத் திருப்புகழிலும் பாடுகிறார்.

''இப்படி நீ எங்களுக்கென்று சிறிய அடியை எடுத்துக் கொண்டு எங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறாய். நீ உருவத்தில் குறுகி எங்களைக் குறுகி வருகிறாய்'' என்று எண்ணுகிறார்.

குறுகுதல் என்பதற்கு இரண்டு பொருள். அணுகுதல் என்பது ஒரு பொருள்; அளவில் குறுகுதல் என்பது மற்றொரு பொருள். அளவிலும் தான் குறுகி, அறிவினால் நாம் குறுகும்படியாக, அணுகும்படியாக வருகிறான். இதனை அவன் சிற்றடி காட்டுகிறது. முன்பே நாம் ஒரு பாடலில் பார்த்தோம் அல்லவா?

''தாவடி ஓட்டும் மயிலிலும் தேவர் தலையிலும்என்
பாவடி ஏட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபால்
மூவடி கேட்டு அன்று மூதண்ட கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே.''

அவனும் திருமாலைப் போலப் பெரிய திருவடியெடுத்து உலகத்தை அளக்கும் ஆற்றல் உள்ளவன்தான். உலகத்தை அளப்பதைவிட நம்முடைய மனத்தை அளக்க வேண்டுமென்ற ஆசையினால் முருகன் சிறிய திருவடியுடன் வருகிறான். எங்கே நம் குழந்தைகளுடைய உள்ளம் கொள்ளாமல் இருக்கப் போகிறதோ என்று அஞ்சி, தான் குழந்தையாகி, நம்முடைய எட்டடி அறைக்குள்ளே ஓர் அங்குல உருவமுடையவனாக வந்து குடியிருப்பதற்காக ஓடிவருகிறான். இப்படி ஓடி வருகிற கருணையாளன் என்பதையே 'சிற்றடி' என்ற தொடரினால் அருணகிரியார் குறிப்பிக்கிறார்.

முருகன் எல்லா இடத்தும் சிற்றடியோடு போகிறவன் அல்ல. அவன் தன்னுடைய விசுவரூபத்தை இந்திராதி தேவர்களுக்குக் காட்டினான். இன்னும் அவன் திருவடியைக் காணாமல் ஏங்குகிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். யார் யாருக்கு எப்படி எப்படித் தன் திருவடியைக் காட்ட வேண்டுமென்பது அவனுக்குத் தெரியும்.

யானைக்காரனுக்குப் பெண்டாட்டி ஒருத்தி இருக்கிறாள். அவளே யானைக்கு கவளம் கொடுப்பது வழக்கம். தன் குழந்தைக்

கும் தினந்தோறும் சோறு ஊட்டுகிறாள். யானைக்குப் பெரிய கவளமாக எடுத்து ஊட்டுகிறாள். ஆனால் யானையினும் சிறந்த தன் குழந்தைக்கோ கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து ஊட்டு கிறாள். யானையின் கவளத்திற்கும், தன் குழந்தையின் கவளத் திற்கும் உள்ள வேறுபாடு அவளுக்குத் தெரியும். ''அவ்வளவு பெரிய உருண்டையாக யானைக்குக் கொடுத்து, சின்னஞ்சிறு உருண்டையாகக் குழந்தைக்கு கொடுக்கிறாயே!'' என்று யாரா வது அவளைக் கேட்கிறார்களா?

அப்படி, உலகம் எல்லாம் அடங்காத திருவடியைத் தேவர் களுக்குக் காட்டுகின்ற முருகன் பக்தர்களுடைய உள்ளத்தில் செல்வதற்காகக் குழந்தையாக, சின்னஞ் சிறிய திருவடியை உடையவனாக எழுந்தருளுகிறான். ''இப்படி நீ சின்னஞ் சிறிய அடியை உடையவனாகக் குறுகி, எங்களைக் குறுகி வந்து கொண்டிருந்தும் நான் உன்னைக் குறுகவில்லையே!'' என்கிறார் அருணகிரியார்.

நின்சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக் கற்றிலேன்.

இறைவன் அடியாரைத் தேடி வருதல்

ஆண்டவனைத் தேடிக்கொண்டு நாம் போகிறோம். அவனும் நம்மைத் தேடிக் கொண்டு வருகிறான். நம்முடைய அடியைக் கொண்டு வேகமாக நடக்க முடியாது; அவன் அடியோ எத்தனை வேகமாகவும் நடக்கும். அவன் நம்மைத் தேடிவர நாமும் அவனைத் தேடிப் போகவேண்டும். அப்போதுதான் நாம் பயன்பெறலாம். நமக்கு அருள் செய்யவேண்டுமென்று அவன் வரும்போது நாம் தூங்கிக் கிடந்தால், ''இவன் தூங்குகிறான்; விழிக்கட்டும்'' என்று அவன் போய்விடுவான்.

அவன் எப்போதும் வந்து கொண்டிருக்கிறான் என்ற உணர்வு இருந்தால் நாம் எப்போது உணர்வு பெற்றாலும் அடுத்த நிமிஷமே அவனைப் பணியப் புறப்பட்டுவிடுவோம். இது பக்தர்களுடைய நிலை.

''நீ என்னை ஆட்கொள்வதற்காகச் சிற்றடியை உடையவனாக எழுந்தருளுகிறாய். நான் உன் அடியைக் குறுகவில்லையே!'' என்று அருணகிரியார் கூறுகிறார்.

திருவடியைப் பற்றுதல்

மனிதப் பிறவியின் பயனாக இறைவனுடைய தத்துவத்தைத் தெரிந்து கொள்ளவில்லையே, வேதத்தை வாசிக்கவில்லையே, இறைவனுடைய உருவம் அவ்வளவும் பார்க்கவில்லையே என்று வருந்தவில்லை அருணகிரியார். இத்தனையையும் நாம் செய்வது கடைசியில் அவன் திருவடியைப் பற்றிக் கொள்வதற்காகத்தான்.

''கற்றதனா லாய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்''

என்று வள்ளுவர் சொன்னார். இறைவனுடைய தாளை வணங்கு வதுதான் அறிவின் பயன். அப்போதுதான் நம் அகந்தை அடங்கும். அவன் நம்மைக் குறுகினாலும் அவனது அடியைப் பாராது உயரே பார்க்கிற மனிதர்களும் இருக்கிறார்கள். சூரபன்மன் அப்படித்தான் முதலில் பார்த்தானாம்.

''கோலமா மஞ்ஞை மீதிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாள்; பரிசிவை உணர்ந்திலேன்யான்;
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ?''

என்று அறிவு வந்த பிறகு சொல்கிறான்.

பணிதல்

அடியைக் குறுகினால் பணிவு உண்டாகும். ''நான் உன் சிற்றடியைக் குறுகவில்லையே'' என்று சொன்னவர் அதற்கு அடுத்த நிலையாக, ''உன் திருவடியைக் குறுகி அந்தச் சிற் றடியைப் பணியவில்லையே!'' என்று சொல்கிறார்.

குறுகிப் பணிந்து,

ஆண்டவன் திருவடி என்பது ஞானமே வடிவமானது. அதனைப் பற்றிக் கொண்டால் அதுவே மோட்சமாகப் பரிண மிக்கும். முதலில் அதைக் காணும்போது நம்முடைய உள்ளத்தில் ஆசை உண்டாகும்; இதனைப் பற்றவேண்டுமென்ற ஆர்வம் உண்டாகும். கண்களால் கோயில்களில் உள்ள ஆண்டவன் திருவடியைக் காணலாம். அந்த உருவை உள்ளத்திலேயும் காண வேண்டும். இந்த இரண்டு வகையினாலும் அவனைக் குறுக வேண்டும். பின்பு செயல் தோன்ற வேண்டும்.

பெறுதல்

அவனைப் பணியவேண்டும். குறுகின அளவிலே நின்றால் போதாது. நாமும் உடம்பு குறுகி, உள்ளம் குறுகி, 'நாம் துதித்து வணங்கும்வண்ணம் குறுகி வந்தானே இறைவன்' என்று அவன் கருணையில் நனைந்து அவன் திருத்தாள்களில் விழவேண்டும். அப்படி வீழ்ந்தால் இறைவன் திருவருள் கிட்டும். எந்த அடியில் நாம் விழுகிறோமோ அந்த அடியே நமக்குக் காணியாகும். நாம் மோட்ச வீட்டை அடைவோம். தன்னைக் குறுகும்போது ஆர்வத்தைத் தருகின்ற அழகிய பொருளாக இருந்தது, பணியும் போது மெய்ஞ்ஞானமாகத் தோற்றும்; பெறும் போதோ அதுவே வீடாக இருக்கும்.

"பொக்கக் குடிலில் புகுதா வகைப்புண்ட ரீகத்தினும்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள்"

என்று அருணகிரியார் சொல்வார். ஆண்டவன் சிற்றடியைக் கொண்டு, நம்மைப் போல நடந்து வருகிறான்; அப்படி வருவது நம்மைக் குறுகவைத்து, நம் தலையில் திருவடியை வைத்து, நம்முடைய பிறவியை மாற்றி, தன்னுடைய திருவடிகளாகிய வீட்டைக் கொடுத்துக் காப்பதற்காகத்தான்.

அவனும் மூன்று செயல் செய்கிறான். நம்மை அணுகிச் சிற்றடியைக் காட்டுகிறான். அதைத் தலையின் மேல் வைக்கிறான். பின்பு ஆட்கொள்ளுகிறான். நாமும் அவனை அணுகி, சிற்றடியைப் பணிந்து, அதனைப் பெறுவதற்காகப் பற்றிக் கொள்ள வேண்டும். "இந்த மூன்று வகைச் செயல் செய்து பயன் பெறவில்லையே!" என்று அருணகிரியார் புலம்புகிறார்.

குறுகியும் பயன் பெறாதார்

பெரிய மனிதர்களை அணுகி, பொழுதுபோக்காக அவர்களுடன் விளையாடுகிற மக்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களால் பெரிய மனிதர்களை அணுகுவதன் பயனை அனுபவிக்க முடிவதில்லை. இறைவனை மூன்று பொழுதும் திருமேனியைத் தீண்டுவார் ஆகிய ஆதிசைவர்களில், பிறருக்காக வழிபட்டுப் பொருள் வருவாயைத் தேடிக் கொள்கிறவர்களாகச் சிலர் இருக்கிறார்கள். ஆனால் சுந்தரமூர்த்தி சுவாமிகள், நம்பியாண்டார்

நம்பி போன்று அதனால் தாமே இன்பம் பெறுகிறவர்களும் உண்டு. குறுகிப் பயன் பெறாதவர்களும் இருக்கிறார்கள். அவர் களுக்கு அஞ்ஞானம் போகாமையினால்.

இறைவன் திருவடியைக் குறுகிப் பணிந்தால்தான் அதனைப் பெற முடியும். குறுகுதலும், பணிதலும் நம்முடைய செயல். பெறுதல் அவன் அருளால் கிடைக்கின்றது. நாம் குறுகுதலும், பணிதலும் உண்மையாக இருந்தால் நிச்சயம் அதனைப் பெறு வோம். ''நான் கோயிலுக்குத் தினந்தோறும் போனேனே; நூற் றெட்டு முறை வணங்கினேனே; இன்னும் ஆண்டவன் திருவருள் செய்யவில்லையே'' என்று சிலர் ஏங்குவது உண்டு. அவர்கள் குறுகியதும், பணிந்ததும் உண்மையான செய்கைகள் அல்ல. அது பயனைப் பெறாமையினால் தெரியும். ஓடத்தில் ஏறி ஆற்றைக் கடந்து சென்றால் நிச்சயமாகக் கரையை அடையலாம். ஓடத்தில் முதலில் ஏறவேண்டும். பின்பு அதை ஓடக்காரன் தள்ள வேண்டும். அக்கரைக்குப் போகும்படியாகத் தள்ள வேண்டும். நீர் போகிற போக்கிலே தள்ளினால் கடைசியில் கடலில் போய் விழ வேண்டியதுதான்.

அப்படி, இந்த உடம்பைப் பெற்று, இதில் இறைவனை ஏற்றுக் கொண்டு பிறவி என்னும் ஆற்றைக் கடக்க வேண்டும். குறுகிய அளவோடு நின்றுவிட்டால் பயன் இல்லை. குறுகிப் பணியும் அளவோடு நின்றுவிட்டாலும் பயன் இல்லை. அந்த அடியைப் பெறவேண்டும். குறுகுதலும், பணிதலும் ஆகிய இரண்டும் உண்மையாக நடந்தால் பெறுதலாகிய லாபம் நிச்சய மாகக் கிடைக்கும். ''நான் அந்த அடியைப் பெறாமையினால், நான் குறுகவில்லை, பணியவில்லை என்று தெரிகிறது'' என்று குறிப்பாக இதில் புலப்படுத்துகிறார் அருணகிரியார்.

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும் நின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக் கற்றிலேன்.

இந்த மனிதப் பிறவி அறிவையும் கரணச் சிறப்பையும் உடையது. அந்த இரண்டினாலும் பெறுகின்ற பயன் இறைவனை வழிபடுதல். அந்தக் காரியத்தைச் செய்யாதவன் உடம்பைப் பெற்றதன் பயன் பெறாதவன் ஆகிறான். அப்படி ஆகாமல் உன்னுடைய திருவடியை அடைந்து, பணிந்து, அந்த அடியே மோட்சமாக அதைப் பெறவேண்டும் என்று உயர்ந்த நீதியை

அருணகிரியார் இந்த இரண்டடியினாலே புலப்படுத்துகிறார். இனி அடுத்த இரண்டடியைப் பார்க்கலாம்.

3

'மனிதப் பிறவி பெறுவதற்கரியது. அதைப் பெற்றும் நான் செய்ய வேண்டியதைச் செய்யவில்லையே!' என்று முருகனைப் பார்த்து முறையிடுகின்றார் அருணகிரிநாதர். முருகப் பெருமானைப் பலவாறு பாராட்டி வருகின்ற அம்முனிவர் பெரும்பாலும் வள்ளியம் பெருமாட்டியைப் பற்றியே சொல்லுவார். தம் தம் இனத்தவரை நினைந்து பாராட்டுவது மக்கள் இயல்பு. மனித இனத்தினருள்ளே ஒருத்தியாக வாழ்ந்து எம்பெருமான் திருத்தோளை அணைந்த பெருமை வள்ளியம்பெருமாட்டிக்கு உரியது. மனித இனத்திலே குறத்தியாகப் பிறந்தாள் என்று கருதாமல் அவளுடைய அன்பு ஒன்றையே ஏற்றுக் பெருங்கருணையினால் எம்பெருமான் ஆட்கொண்டமையினால் வள்ளி திருமணம் நிகழ்ந்தது. நாமும் அந்தக் கருணையையே வேண்டுகிறோம். ஆதலால் நம் இனத்தில் ஒருத்தியாக வாழ்ந்த வள்ளியோடு இறைவனைச் சார்த்தி நினைப்பதுதான் இயல்பு. அதனால் அவன் அருளைப் பெற விரும்புகிற பக்தர்கள் வள்ளிநாயகன் என்றே அவனைப் பெரும்பாலும் பேசுவார்கள். ஆனால் மற்றவற்றை மறக்க மாட்டார்கள். அவற்றையும் சொல்வது உண்டு.

அருணகிரிநாதப் பெருமான் இந்தப் பாட்டிலே, தேவசேனையின் நாயகன் என்று சொல்ல வருகிறார்.

மத கும்பகம்பத்
தறுகண் சிறுகண் சங்க்ராம சயில சரசவல்லி
இறுகத் தழுவும் கடகாசல பன்னிரு புயனே!

எம்பெருமான் ஆறுமுகமும் பன்னிரு திருத்தோளும் உடையவன். அந்தப் பன்னிரண்டு திருத்தோளையும் ஒருபெருமாட்டி அணைகிறாள். அவள் யார்?

உரிமையும் உழைப்பும்

அமுதவல்லி, சுந்தரவல்லி என்ற இரண்டு மகளிரும் திருமாலின் குழந்தைகள். திருமால் முருகனுக்கு மாமன். 'நாம் நம்

அத்தை மகன் முருகனை உரிமையோடு அடையலாம்' என்ற அகங்கார நினைப்பு அவர்களுக்கு இல்லை. அத்தை மகளையோ, மாமன் மகளையோ உரிமையுடன் மணந்து கொள்வதானாலும் பெண்ணைக் கொடுத்தால் சீதனம் வேண்டும் என்று கேட்கிற துண்டு அல்லவா? உரிமையோடு பெறவேண்டும் என்று நினைக் காமல் உழைப்பினால் பெறவேண்டும் என்று நினைத்தார்கள் அந்த இரண்டு பெண்களும். தவத்தின் பெருமையினால் முருகனைத் திருமணம் பண்ணிக் கொண்டால் உண்மையான இன்பம் கிடைக்கும். உறவினால் திருமணம் பண்ணிக் கொண் டால் அந்தப் பெருமை பெற்றோர்களுக்கே போய்ச் சேரும். ஆகவே தமக்கே உரிய சிறப்பினால் அடையவேண்டும் என்று நினைத்தார்கள். ''தான் தேடாப் பொன்னுக்கு மாற்றும் இல்லை; உரையும் இல்லை'' என்று சொல்வார்கள் அல்லவா?

தவம் செய்தார்கள். சுந்தரவல்லி மானின் வயிற்றிலே பிறந்து வேட அரசனிடம் வளர்ந்தாள். அமுதவல்லி இந்திரனுடைய பெண்ணாக ஐராவதத்தினால் வளர்க்கப் பட்டாள்.

வளர்தல்

ஒருமகா சக்ரவர்த்தியின் பெண் என்றால் குடிமக்கள் எல்லாம் அவளைத் தம் பெண்ணாக நினைத்துப் போற்றுவார்கள். தேவேந் திரனின் பெண்ணாகிய தேவசேனையை தேவர்கள் யாவரும் தங்கள் தங்கள் பெண்ணாகப் போற்றி வளர்த்தார்கள். தேவ லோகத்து அரம்பையர்கள் அவளைத் தம் கண்ணில் வைத்துக் காப்பாற்றினார்கள். இப்படி முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் ஒரு பெண்ணாக, இந்திரனின் பெண்ணாக, ஐராவதத்தினால் வளர்க்கப் பெற்ற பெருமாட்டி தேவசேனை.

இந்திரனோ தனக்கு வந்த பெருந் துன்பத்தினாலே அமரா வதியை விட்டே ஓடிச் சீர்காழியில் ஒரு மூங்கிலுக்குள் ஒளித் திருந்தான். மாயையின் பிள்ளையாகிய சூரன் தன் தம்பிமார் களோடு அமராவதியைக் கைப்பற்றிக் கொண்டு தேவர்களைச் சிறையில் அடைத்தான். இந்திரனின் மகனாகிய சயந்தனையும் சிறையில் போட்டான். இந்திராணி அஞ்சி மகாமேரு மலைக்குச் சென்று ஒளிந்து கொண்டாள்.

சூரசங்காரம்

உலகம் போற்றத் தேவர்களுக்கு விடுதலை அளித்து, மகிழ்ச்சி ஊட்ட ஆறுமுகநாதன் அவதாரம் பண்ணிச் சூரசங்காரம் செய்தான். தேவர்களுடைய சேனைகளுக்குத் தலைவனாக இருந்த ஆறுமுகநாதன், சூரசங்காரம் செய்து அமராவதியை மீட்டுத் தேவராஜனிடம் கொடுத்தான். காமதேனுவை மீட்டுக் கொடுத்தான். தேவசேனாபதி என்று தேவர்கள் அவனை வணங்கிப் பாராட்டினார்கள். தேவசேனாபதியாக, அமரர் படைக்குக் காவலனாக இருந்து அந்தப் பெரிய போரை நடத்தி வெற்றி பெற்றான் எம்பெருமான். திருச்செந்தூருக்கு வந்து, நான்முகன் முதலியவர்களுடைய பூசையை ஏற்றுக் கொண்டு, திருப்பரங் குன்றம் அடைந்தான்.

இந்திரன் வேண்டுகோள்

தன்னுடைய அரசை மீட்டும் வாங்கிக் கொடுத்த ஆறுமுகப் பெருமானுக்குத் தேவேந்திரன் தன் பெண் தேவசேனையை மணம் செய்து வைக்க நினைந்து, இந்திராணியையும் தேவ சேனையையும் மேருமலையிலிருந்து அழைத்து வரச் சொன்னான். எல்லாத் தேவருடனும் எம்பெருமானிடத்தில் சென்று ஒரு விண்ணப்பம் செய்து கொண்டான். ''எம்பெருமானே! போர் நடந்த காலத்து அமரர் சேனைக்குக் காவலனாக இருந்தாய்; தேவசேனாபதியாக இருந்தாய். இனிச் சண்டை இல்லை. என்றாலும் தேவசேனாபதி என்ற பட்டம் மாறக்கூடாது. சண்டை போடுகிற தேவசேனாதிபதியாக இல்லாவிட்டாலும், என் மகள் தேவசேனைக்குப் பதியாக இருந்து அருள் வழங்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான்.

''உலகம் எல்லாம் போற்றுகின்ற பெருமானே! உன் திருவருள் இல்லாவிட்டால் எங்களுக்கு வாழ்வு ஏது? அமராவதி ஏது? காமதேனு ஏது? சூரபன்மனை எதிர்க்கச் சக்தி இல்லாததனால் அவை எல்லாவற்றையும் நாங்கள் இழந்து நின்றோம். உன் திருவருளால் அவற்றையெல்லாம் மீட்டும் நாங்கள் பெறச் செய்தாய். இதற்கு நாங்கள் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டாமா? பலகாலம் உன் பெருமை விளங்கிக் கொண்டிருக்கும்படியான அடையாளப் பரிசு ஒன்று கொடுக்க வேண்டாமா?

''எங்களிடத்தில் உள்ள பொருள் எல்லாவற்றையும் தந்தவன் நீ. அசுரக் கூட்டங்களை ஒழித்துத் தேவர்களைச் சிறைமீட்ட உனக்கு செய்ந்நன்றி யறிவுக்கு அடையாளமாக இந்த ஏழை செய்யத்தக்கது உண்டா? என்னிடத்தில் ஒரு பெண் இருக்கிறாள். என் திருமகள் தேவசேனையை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று இந்திரன் பிரார்த்தித்தான்.

இதைக் கந்தபுராணம் அழகாகச் சொல்கிறது.

''கன்னின்ற மொய்ம்பின் அவுணக்களை கட்டல் செய்தாய்
இந்நின்ற தேவர் சிறைமீட்டனை என்ற ணக்கு
முன்னின்ற தொல்சீர் புரிந்தாய்அது முற்றும் நாடிச்
செய்ந்நன்றி யாகச் சிறியேன்செயத் தக்க துண்டோ?''[1]

பெரும் கூட்டம்; திருமால் ஒருபால், பிரமன் ஒருபால், அக்கினி வருணன் ஆகிய முப்பத்து முக்கோடி தேவர்கள் ஒரு பால். எல்லாரும் மிக்க மகிழ்ச்சியோடு எம்பெருமானைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

முருகனுக்கு முன்னே இந்திரன் கையைக் கட்டி வாயைப் பொத்திக் கொண்டு நின்றான். ''என்ன சமாசாரம்?'' என்று எம் பெருமான் கேட்டவுடன் மெல்லச் சொல்லத் தொடங்கினான்.

''அமராவதி, காமதேனு, கற்பக விருட்சம் இவற்றை யெல்லாம் வைத்துக் கொண்டு நாங்கள் தருக்கி இருந்தோம். அசுரக் களைகள் முளைத்தன. எங்கள் ஆனந்தப் பயிரை அந்த அசுரக் களைகள் அழித்துவிட்டன. அந்தச் சமயத்தில் நீ வந்து உன் தோள் வலிமையினால் அவுணக்களையைக் களைந்தாய்.

''கன்னின்ற மொய்ம்பின் அவுணக்களை கட்டல் செய்தாய்.''

''இதோ நிற்கிறார்களே தேவர்கள். முன்பு இவர்கள் முகம் வாடித் தொங்கச் சூரனால் சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டிருந் தார்கள். முகத்திலே இன்பம் பொங்க, தலையிலே மகுடம் ஒளி விட, மார்பிலே மாலை புரள இன்று விளங்கும்படி இவர்களை நீ சிறையிலிருந்துமீட்டாய்.

---

1. மொய்ம்பின் – தோள் வலிமையினால். அவுணர் – அசுரர். கட்டல் – களையெடுத்தல்.

"இந் நின்ற தேவர் சிறைமீட்டனை."

"அதுமாத்திரமா? என்னைத் தேவருலகுக்கு அரசன், தேவேந்திரன், அமராவதி காவலன் என்று சொன்னார்கள். இந்திர பதவி என்பதை மிக உயர்ந்த பதவிக்குப் பெரியவர்கள் உதாரணமாகச் சொல்வார்கள். அந்த இந்திர பதவி, இந்திர போகம் எல்லாவற்றையும் நான் இழந்து சூரனுக்குப் பயந்து ஓடினேன். அந்தப் பழைய பெருமையை உன் திருவருளினால் பெற்றிருக்கிறேன். நான் இழந்துவிட்ட பெருமைகளை நீ சூரனைச் சங்காரம் செய்து, எனக்குத் திரும்பவும் அளித்தாய்.

"என்றனக்கு
முன்னின்ற தொல்சீர் புரிந்தாய்"

"இவற்றை இப்போது நினைக்கத் தோன்றுகிறது. முன்பு உன் பெருமையை நினைக்கத் தெரியவில்லை. எங்களுக்குச் செய்ந்நன்றி யறிவு இருக்கிறது. எல்லா வகையிலும் எங்களுக்கு வாழ்வளித்த உனக்கு, நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்?

"இது முற்றும் நாடிச்
செய்ந்நன்றி யாகச் சிறியேன்செயத்தக்க துண்டோ?"

"ஆனால் ஒரு விண்ணப்பம். பெரிய பெரிய காரியங்களைச் செய்து கீர்த்தியைச் சம்பாதித்துக் கொண்டிருக்கும் நீ, எங்களுடைய வேண்டுகோளுக்காக என் பெண்ணை ஏற்றருள வேண்டும். முன்பு அடியேன் பெற்ற மங்கை இந்தச் சபையில் வருவாள். அவளைத் திருமணம் புரிந்து கொண்டு, தூணைப் போன்ற வலிமையையுடைய உன் திருத்தோளில் அணைத்துக் கொள்ள வேண்டும்.

"முந்தே தமியேன் பெறுமங்கைஇம் மொய்வ ரைக்கண்
வந்தே அமர்வாள் அவள்தன்னை வதுவை செய்து
கந்தே புரைநின் பெருந்தோளில் கலத்தி யாங்கள்
உய்ந்தே பிறவிப் பயன்பெற்றனம் ஓங்க என்றான்."[1]

"அப்போதுதான் நாங்கள் பிறவி எடுத்ததன் பயன் பெற்றவர்கள் ஆவாம்" என்ற இந்திரன் விண்ணப்பம் செய்து கொண்டான்.

1. முந்தே - முன்பே. கந்து - தூண். புரை - ஒக்கும்

அறிவுள்ள பெண்ணை, அழகான பெண்ணைப் பெற்று விடலாம். ஆனால் அவள் வளர்ந்து தளர்ந்து நிற்காமல் தனக்கு ஏற்ற நாயகனை அடையும்போதுதான் பெற்றவர்களுக்கு எல்லை இல்லா ஆனந்தம் உண்டாகும். பெண்ணுக்கு ஏற்ற தகுதி எதுவும் இல்லாத, முப்பது ரூபாய் சம்பளக்காரன் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டால் அது பின்னர்க் கண்ணைக் கசக்கிக் கொண்டு நிற்கும்போது, ''ஐயோ! இது ஏன் என் வயிற்றில் பெண்ணாகப் பிறந்தது?'' என்று பெற்றோர்களின் உள்ளம் வேதனைப்படும்.

இந்திரனுடைய பெண் தேவசேனைக்கு முருகனைக் காட்டிலும் சிறந்த மணவாளன் வேறு கிடைப்பானா? முருகன் இந்திரனுடைய வேண்டுகோளைச் செவிமடுத்து, ''அப்படியே ஆகுக'' என்றான். உடனே திருமணத்திற்கு ஏற்பாடாயிற்று.

திருமண முயற்சிகள்

இந்திரன் திருமணம் செய்தால் அந்தத் திருமண மண்டபம் எப்படி இருக்க வேண்டும்? உலகத்தில் பெரிய பணக்காரர்கள் கலைஞர்களை அழைத்துச் சிறந்த வேலைப்பாடுடைய கொட்டகை போடச் சொல்வார்கள். தேவேந்திரன் விசுவகர்மாவைக் கொண்டு பெரிய மண்டபம் அமைக்கச் செய்தான். சிவ பெருமானும், உமாதேவியும் தங்கத் தனியான இடம்; அந்தப் பெருமானோடு வருகின்ற தேவர்கள் தங்கத் தனி இடம்; பூத கணங்களுக்கு ஏற்றபடி தனியிடம். எல்லோருக்கும் ஏற்றபடி உணவு. இப்படி மிக விரிவான ஏற்பாடுகளை இந்திரன் செய்தான். விசுவகர்மா இரத்தினகசிதமான வதுவை மண்டபம், வந்தவர்கள் தங்கும் மண்டபம் முதலியவற்றையும் அமைத்தான். வேண்டிய பொருளை எல்லாம் காமதேனு கொண்டு வந்து கொட்டிவிட்டது. நினைத்த மாத்திரத்திலே வெகுதூரத்தில் உள்ள பொருள்களைச் சிந்தாமணி தந்தது. முப்பத்துமுக்கோடி தேவர்கள் எம்பெருமானின் கல்யாணம் என்னும் உவகையினால் ஓடி ஓடி ஏற்பாடுகளைச் செய்தார்கள். வெறும் கல்யாணப் பத்திரிகையை மாத்திரம் இந்திரன் பல இடங்களுக்கு அனுப்பவில்லை. பத்திரிகையோடு தூதுவர்களையும் ஒவ்வோர் ஊருக்கும் அனுப்பினான். தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் தூதுவர்களை அனுப்பி வைத்ததோடு முசுகுந்த சக்கரவர்த்தி முதலாகிய பூவுலக அரசர்களுக்கும் அனுப்பினான்.

முசுகுந்தன்

முசுகுந்த சக்கரவர்த்தி கருவூரிலிருந்து சோழநாட்டை ஆண்டு வந்தான். அவன் இந்திரனுக்கு மிகவும் வேண்டியவன். ஒரு காலத்தில் வலம்புரி என்னும் அசுரன் இந்திரனைச் சண்டையில் தோல்வியுறச் செய்து அழிக்க இருந்தபோது முசுகுந்த சக்கரவர்த்தி தன் படைகளோடு சென்று அவனுக்குத் துணையாக இருந்து, வெற்றி வாங்கிக் கொடுத்தான். அந்தச் சமயத்தில்தான் தியாக ராசப் பெருமானை அவன் இந்திரனிடத்திலிருந்து பெற்றான் என்று திருவாரூர்த் தல புராணம் சொல்கிறது. ''சண்டையில் நீ எனக்கு உதவி செய்தாய். இன்று நான் பூவுலகத்தில் என் பெண் ணுக்குக் கல்யாணம் பண்ணுகிறேன். நீ வந்து உதவி செய்ய வேண்டும்'' என்று இந்திரன் முசுகுந்த சக்கரவர்த்திக்கு ஓலை அனுப்பினான்.

நாம் மனித உடம்பும், குரங்கு மனமும் படைத்திருக்கிறோம். முசுகுந்த சக்கரவர்த்தி குரங்கு போன்ற முகத்தையும், மனிதர் களைப் போன்ற உடம்பையும் படைத்தவன்.

அப்படிப் படைத்ததற்கு ஒரு காரணம் உண்டு. கைலாசச் சோலையில் பரமேசுவரன் பார்வதியோடு பேசிக் கொண்டிருந் தான். அவர்கள் இருந்த இடத்தில் வில்வ மரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தின் மேல் குரங்கு ஒன்று விளையாடிக் கொண் டிருந்தது. சிவபெருமானும் அம்மையும் பேசிக் கொண்டிருப் பதைக் கண்டு அவர்களுக்குப் பூசை செய்வதுபோல அது வில்வத்தைப் பறித்து ஒவ்வொன்றாகப் போட்டது. அம்மைக்குச் சிறிது கோபம் வந்தாலும், சிவபெருமான் அதை அடக்கி, ''பக்தி யினாலே அந்தக் குரங்கு நமக்கு அர்ச்சனை செய்கிறது'' என்று சொல்லி, வில்வத்தால் அர்ச்சனை செய்பவன் மகா சக்கரவர்த்தி யாவான் என்பதற்கிணங்கப் பூலோகத்தில் பெரிய சக்கரவர்த்தியாக இருப்பாய் என்று அருள் செய்தான்.

சிவபெருமான் அருளியதைக் கேட்டு அந்தக் குரங்குக்கு மகிழ்ச்சி உண்டாகவில்லை. அம்மை அப்பனின் காலில் வீழ்ந்து வணங்கி, ''எம்பெருமானே! நான் என்ன பிழை செய்தேன்? எதற்காக என்னை இப்படிச் சபித்தீர்கள்? இங்கே தினந்தோறும் தேவரீரைத் தரிசனம் பண்ணிக் கொண்டிருந்தேன். உங்களை

விட்டு நீங்கி மனிதப் பிறவியா எடுக்கவேண்டும்? உலகத்துக்குப் போய்விட்டால் எனக்குப் பக்தி இருக்குமா? பணம் படைத்தால் கடவுளை நினைக்கத் தோன்றாதே! மகாசக்கரவர்த்தியாகும்படி சொல்லிவிட்டீர்களே! நில உலகத்திற்குச் சென்று செல்வமாகிய வலைக்குள் அகப்பட்டால் நான் மீட்டும் எங்ஙனம் உய்வு பெறப் போகிறேன்?''

''நுங்களை வைகலும் நோக்கி உவப்பாய்
இங்குறை கின்ற திகந்து நிலம்போய்
மங்குறு செல்வ வலைப்படு வேனேல்
எங்கள் பிரான்பினை எங்ஙனம் உய்கேன்!''[1]

என்று விண்ணப்பித்துக் கொண்டது.

''உனக்குப் பக்தி இருக்கும்; என்னை மறக்கமாட்டாய். நல்ல காரியங்களைச் செய்வாய். 'குரங்கு வில்வத்தால் அர்ச்சனை பண்ணியது; மகா சக்கரவர்த்தி ஆயிற்று' என்று உன்னால் மக்களுக்குப் பக்தியும், நம்பிக்கையும் உண்டாகும். அதனால் நீ அங்கே போய் வா'' என்று கட்டளையிட்டான் இறைவன்.

''தங்கள் உத்தரவுப்படியே அங்கே செல்கிறேன். என்றாலும் மானிடப் பிறப்பில் மயங்காவண்ணம் இந்த முசுவின் முகத் தோடேயே பிறக்க வேண்டும். என் உடம்பு சக்கரவர்த்தியின் உடம்பாக இருக்கட்டும். ஆனால் என்னுடைய முகம் மட்டும் குரங்காக இருக்க வேண்டும்'' என்று அக்குரங்கு கேட்டுக் கொண்டது. அப்படியே ஆண்டவன் அருள் செய்தான். குரங்கு முகத்தோடும், நல்ல அழகான மனித உடம்போடும் முசுகுந்த சக்கரவர்த்தி சோழ வமிசத்தில் பிறந்தான். பிறந்து சக்கரவர்த்தி யாகிக் கருவூரில் இருந்து ஆண்டு வந்தான். அப்போதுதான் இந்திரனுக்கு உதவி செய்தான்.

ஆகவே பரமேசுவரனுக்கும் அவன் வேண்டியவன்; இந்திர னுக்கும் வேண்டியவன். இரண்டு பக்கத்திலும் தொடர்பு உடை யவன் அவன். அங்கிருந்தும் பத்திரிகை வரும்; இங்கிருந்தும் பத்திரிகை வரும். கல்யாணத்திற்குத் தன் சேனைகளோடும் உறவினர்களோடும் புறப்பட்டு வந்தான்.

---

1. வைகலும் – நாள்தோறும், இகந்து – நீங்கி, நிலம் – பூவுலகில், பினை – பின்னை.

திருமணம்

தேவசேனையின் திருமணத்தை எண்ணித் தேவர்கள் யாவரும் திருப்பரங்குன்றத்திற்கு வந்து குழுமியிருந்தார்கள். பூலோகத்துச் சக்கரவர்த்திகள் பரிவாரங்களுடனும், உறவினர் களுடனும் வந்திருந்தார்கள். உமாதேவியும் சிவபெருமானும் பூதகணங்களுடனும் முனிபுங்கவர்களுடனும் வந்திருந்தார்கள். நன்றாக அலங்கரிக்கப்பெற்ற தேவசேனை வதுவை மண்டபத்திற்கு வந்து உமையையும் சிவபெருமானையும் வணங்கினாள். ''ஆறுமுக நாதனின் பக்கத்தில் போய் அமர்ந்துகொள்'' என்று இரண்டு பேரும் சொல்ல அவ்விதமே அவள் போய் உட்கார்ந்தாள்.

பிரமன் புரோகிதராக இருந்து நடத்த, வேதம் முழங்க, ஆகமங்கள் முழங்க, பற்பல வாத்தியங்கள் முழங்க, இந்திரன் தூய கங்கை நீரை முருகப் பெருமான் திருக்கையில் வார்த்து, ''இந்தப் பெண்ணை நான் உனக்குத் தாரைவார்த்துக் கொடுக் கிறேன்'' என்று சொன்னான்.

''அன்னுழி இந்திரன் ஆறுமு கேசன்
தன்னொரு கையிடைத் தந்தியை நல்கி
நின்னடி யேன்இவண் நேர்ந்தனன் என்னாக்
கன்னல் உமிழ்ந்த கடிப்புனல் உய்த்தான்.''[1]

முருகன் திருக்கரத்தில் இந்திரன் நீர்பெய்து தாரை வார்த்துத் தேவயானையை அளித்தான்.

முருகன் அந்த நீரை ஏற்றுத் தேவயானையையும் மனைவி யாக ஏற்றுக் கொண்டான். தன்னை அடைகின்றவர்களுக்கு வேண்டிய வேண்டியாங்கு ஈயும் எம்பெருமான், விரும்பும் அன்பர்களுக்கு முத்தியும் ஆக்கமும் கொடுக்கும் பெருமான், தன் திருக்கரம் கீழாக இருக்க, இந்திரனுடைய கரம் மேலாக இருக்க, அவன் தாரைவார்க்க ஏற்றுக் கொண்டான். யாருடைய கையின் கீழே எல்லாரும் நிற்கிறார்களோ அவனுடைய கையில் தூய கங்கை நீரை வார்த்து, ''என் பெண்ணைத் தங்களுக்குக் கொடுத் தேன்'' என்றான் இந்திரன். 'வாங்கிக் கொண்டேன்' என்று முருகன் ஏற்றுக் கொண்டான்.

---

1. அன்னுழி – அப்போது. தந்தி –தேவயானை. இவண் – இங்கே. நேர்ந்தனன் – அளித்தேன். கன்னல் – பாத்திரம்.

"மருத்துவன் மாமறை மந்திர நீரால்
ஒருத்தி பொருட்டினில் ஒண்புனல் உய்ப்பக்
கரத்திடை ஏற்றன னால்கழல் சேர்ந்தார்க்
கருத்திகொள் முத்தியும் ஆக்கமும் ஈவோன்."[1]

தலைமை பெறுதல்

தவப்பெருமாட்டி தேவசேனை தன்னிடம் வந்து சேர வேண்டும் என்பதற்காக இந்திரன் வார்த்த நீரைத் தன்கையை நீட்டி வாங்கிக் கொண்டான் முருகன். கல்யாணம் மிக்க சிறப்பாக நடந்தது. எல்லோரும் ஆனந்தத்தை அடைந்தார்கள். திருமணம் ஆனவுடனே ஆறுமுகநாதன், தன் மனையாட்டியுடன் தன்னுடைய அம்மையையும் அப்பனையும் சென்று வணங்கினான். உலகுக்கு வழிகாட்டுகின்ற பரமேசுவரனும் பார்வதியும் தங்களுடைய திருவடியில் வந்து வீழ்ந்து வணங்கிய ஆறுமுகநாதனையும் தேவசேனையையும் களிப்போடு எடுத்து வாரி அணைத்து அருள் செய்து பக்கத்தில் உட்கார வைத்து உச்சிமோந் தார்கள். உலகத்தில் நடக்கிறதைப்போல ஒரு நாடகத்தை நடித்தார்கள் அவ்விருவரும்.

"அடித்த லத்தில்வீழ் மக்களை இருவரும் ஆர்வத்
தெடுத்த ணைத்தருள் செய்துதம் பாங்கரில் இருத்தி
முடித்த லத்தினில் உயிர்த்துமக் கெம்முறு முதன்மை
கொடுத்தும் என்றனர் உவகையால் மீக்கொள்கொள் கையினார்."[2]

"அப்பா, எங்களுக்கு வயசாகிவிட்டது. உலகினர் மாதா பிதா என்று இதுவரை எங்களுக்குத் தலைமை கொடுத்தார்கள். இனி நீங்களே அந்தத் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டு உலகிலுள்ள ஆருயிர்களுக்கு அம்மா அப்பாவாக இருந்து அருள் செய்து வருவீர்களாக! தலைமைப் பதவியை நீங்கள் எங்களிடமிருந்து வாங்கிக் கொண்டு எங்களுக்கு ஓய்வு கொடுங்கள்" என்று மகிழ்ச்சியோடு சொன்னார்களாம். "இனிமேல் எங்களுக்கு கவலை எதுவும் வேண்டாம். எங்களுடைய கவலையை எல்லாம்

---

1. மருத்துவன் – இந்திரன். மறை மந்திரம் – வேத மந்திரம். உய்ப்ப – விட, அருத்தி – விருப்பம். ஆக்கம் – செல்வம்.
2. பாங்கரில் – பக்கத்தில். உயிர்த்து – மோந்து. முதன்மை – தலைமை. கொடுத்தும் – கொடுத்தோம். மீக்கொள் – மேலாகக் கொண்ட.

உங்களிடத்தில் தள்ளிவிட்டோம்'' என்று சொன்னதோடு நில்லாமல், தலைமைப் பதவியையும் கொடுத்து ஆசீர்வாதம் செய்துவிட்டு அங்கிருந்து எழுந்து போனார்களாம்.

தம்முடைய குழந்தைக்குக் கல்யாணம் ஆகி, மனையாட்டியோடு அவன் குடித்தனம் செய்ய ஆரம்பித்தவுடனே சிவபெருமான் பார்வதியைப் போல வயசு வந்த பெற்றோர்கள் நடந்து கொண்டால் சண்டை வராது. இந்த உண்மையைத் தன் அருள் விளையாடலிலே வைத்துக் காட்டினான், சிவபெருமான். மயானம் போகுமட்டும் அதிகாரத்தைப் பிடித்துக் கொள்ள விரும்பினால் சண்டைதான்; துக்கந்தான். தங்கள் குழந்தைகளிடத்தில் மனப் பூர்வமாகத் தங்கள் அதிகாரத்தில் ஒரு பங்கைவிட்டுக் கொடுத்துவிட்டால் போதும்; அவர்கள் பன்மடங்கு அன்போடு பாதுகாப்பார்கள். பற்றைச் சிதறவிடாமல் பற்றிக் கொண்டிருந்தால் துன்பந்தான் வரும். இதை ஆண்டவன் நமக்கு நாடகமாகக் காட்டினான்.

உண்மையாகச் சொல்லுகின்ற நல்லவர்களுடைய வார்த்தை உடனே அமலுக்கு வந்துவிடும். சிவபெருமானும் அம்மையும்,

> "முடித்த லத்தினில் உயிர்த்துமக் கெம்முறு முதன்மை
> கொடுத்தும்"

என்று சொல்லிப் புறப்பட்டுப் போனவுடன் அவர்கள் எந்த ஆசனத்தில் அமர்ந்திருந்தார்களோ அந்த ஆசனத்தில் இவர்கள் இரண்டு பேரும் அமர்ந்தார்கள்.

''என்ன பைத்தியக்காரத்தனம்! அப்பா, அம்மா சொன்னார்கள் என்றால் உடனே பிள்ளை அப்படிச் செய்யலாமா? அவர்கள் ஆசனத்தில் அமரலாமா?'' என்று கேட்கத் தோன்றும். நம்முடைய அப்பா அம்மா அப்படி மனசாரச் சொல்கிறது இல்லை; பிள்ளையும் மனசார எடுத்துக் கொள்ளுவதும் இல்லை; எடுத்துக் கொள்ள அஞ்சுவான்.

இங்கே சிவபெருமான் உண்மையிலேயே சொல்லி விட்டுக் கைலாசம் புறப்பட்டுப் போனான். உடனே அவனுடைய கட்டளைப்படி இவர்கள் அவர்களுடைய ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு ஆருயிர்களுக்கு அருள் பாலித்தார்கள்.

'முருகப்பெருமான் சிவபெருமானின் பிள்ளை. தன் பிள்ளையை உலகம் எல்லாம் வணங்க வேண்டும் என்பதற்காகச் சிவபெருமான் அப்படிச் சொல்லித் தலைமைப் பதவியைக் கொடுத்துவிட்டுப் போனான்' என்று நாம் நினைப்போம். முருகப் பெருமானைச் சிவபெருமான் சொல்வதற்கு முன்பே உலகம் போற்றித் துதிக்க ஆரம்பித்துவிட்டது. அவனுடைய தண்டைச் சிற்றடியைத் தேவர்கள் தம் தலையில் வைத்துக் கொண்டு சூரசங்காரம் ஆனது முதலே போற்ற ஆரம்பித்துவிட்டார்கள். அவனை மாத்திரம் போற்றினால் போதாது. தேவ சேனையையும் அவர்கள் போற்ற வேண்டும் என்கிற மேலான கருணையினாலே சிவனும் பார்வதியும் தங்கள் தலைமைப் பதவியைத் தந்து, முருகனையும் தேவசேனையையும் தாய் தந்தையாகப் போற்றி ஆருயிர்கள் உய்வுபெறட்டும் என்று அப்படிச் செய்தார்கள். முருகனுக்கு இங்கே புதிதாக முதன்மை வர வில்லை. தேவ சேனைக்குக்குத்தான் இதுவரையில் இல்லாத முதன்மை வந்தது. இது வரையிலும் அவள் இந்திரன் பெண். இனியும் இந்திரன் பொண்ணாக நினைக்கக்கூடாது. எல்லாரும் வணங்குகின்ற திருவடியை உடைய தெய்வமாகிவிட்டாள். எந்தக் கணத்தில் முருகப் பெருமான் கட்டிய திருமாங்கல்யம் அந்தப் பெருமாட்டி கழுத்தில் ஏறிற்றோ அந்தக் கணம் முதலே அவள் திருவடி எல்லோராலும் வணங்கும் தெய்வத் திருவடியாகிவிட்டது. அதை எல்லோரும் அறிய வேண்டும் என்பதை நினைந்தே பரமேசுவர னும் உமையும் அவர்களுக்குத் தலைமைப் பதவி கொடுத்தோம் என்று சொல்லிப் போக, இரண்டு பேரும் அவர்கள் அமர்ந்திருந்த பீடத்தில் எழுந்தருளினார்கள்.

"உமையும் ஈசனும் இருந்திடு பீடிகை உம்பர்க்
குமர நாயகன் தெய்வதக் களிற்றொடுங் கூடி
அமர, அன்னது காண்டலும் மகிழ்சிறந் தன்னார்
கமல மெல்லடி தொழுதனர் வாழ்த்தினர் களிப்பால்."[1]

அதைப் பார்த்தவுடன் தேவர்கள் எல்லாரும் மிக்க ஆனந்தம் அடைந்தார்கள். 'இந்திரன் இப்பெருமாட்டியைக் கன்னிகாதானம் செய்து கொடுத்தானே! ஆறுமுக நாதனும் இந்தத் தெய்வதக் களிற்றைத் திருமணம் செய்து கொண்டானே! இதைப் பார்க்க

1. பிடிகை உம்பர் – பிடத்தின் மேல். தெய்வதக்களிறு – தெய்வயானை

நாம் எத்தனை பாக்கியம் பண்ணினோம்!' என்று எல்லாரும் மகிழ்ச்சி அடைந்தவர்களாய் அவர்களுடைய தாமரை போன்ற மென்மையான திருவடிகளைத் தொழுது வாழ்த்தி வணங்கினர். ''ஆயிரம் கண் படைத்த பயன் இன்றுதான் எய்தப் பெற்றேன்'' என்று இந்திரன் எல்லையில்லா மகிழ்வெய்தி அவர்களை வணங்கினான். பிரமன் திருமால் முதலாய தேவர்களும், பூவுலகச் சக்கரவர்த்திகளும் வணங்கினார்கள். முசுகுந்த சக்கரவர்த்தி இத்தகைய தெய்வத் திருமணத்தைக் காணும் பேறு கிடைத்ததே என்று மகிழ்வெய்தினான்.

சோமாஸ்கந்தமூர்த்தி

இந்திரன் ஒரு சமயம் திருப்பாற்கடலுக்குச் சென்றிருந்தான். திருமால் பாம்பணையில் படுத்துக் கொண்டிருந்தார். அவருடைய மார்பில் சோமாஸ்கந்தமூர்த்தி இருந்தார். ஒரு பக்கம் சிவன், மற்றொரு பக்கம் உமை, நடுவில் முருகப் பெருமான் உள்ள கோலமே சோமாஸ்கந்தமூர்த்தி, உமையுடனும் கந்தனுடனும் இருப்பவன் என்று பொருள். பிள்ளை இல்லாமல் திருமாலின் மனம் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தபோது, ''சோமாஸ்கந்த மூர்த்தியை உபாசனை செய்; பிள்ளை பிறக்கும்'' என்று ஒரு முனிவர் சொன்னாராம். திருமால் அப்படியே பூசை செய்தார். மன்மதன் பிறந்தான். இவ்வாறு புராணம் சொல்கிறது. அந்தச் சோமாஸ்கந்தமூர்த்தியை, ''யாருக்கும் கொடுக்காதே'' என்று சொல்லித் திருமால் இந்திரனிடத்தில் கொடுத்தாராம்.

திருமாலின் மார்பில் உட்கார்ந்திருந்தவர் சோமாஸ்கந்த மூர்த்தி. அவரே தியாகராஜன். நடராஜா நின்று கொண்டிருக்கிறார். தியாகராஜா உட்கார்ந்துகொண்டிருக்கிறார். அவர் நின்று கொண்டு ஆடுகிறார். இவர் திருமாலின் மார்பில் உட்கார்ந்து கொண்டு ஆடுகிறார். சுவாசம் உள்ளே போய் வரும்போது மார்பு வீங்கித் தணிய, இவர் உட்கார்ந்துகொண்டே ஆடுவதுபோல் இருக்கிறதாம். அதனால் இருந்தாடும் அழகர் என்று இவருக்குப் பெயர். நடராஜ மூர்த்தி நின்றுகொண்டு ஆடும் நடனத்திற்கு ஆனந்தத் தாண்டவம் என்று பெயர். உட்கார்ந்து கொண்டே ஆடுகிற தியாகராஜரின் நடனத்திற்கு அஜபா நடனம் என்று பெயர். அஜபை என்றால் வாயினாலே ஜபிக்காமல் மனசினாலே சுவாசத்தோடு ஜபிக்கிறது என்று பொருள். அது ஒரு மந்திரம்.

உசுவாச, நிசுவாசத்தோடே கலந்து உள்ளுக்குள் மனசினாலே சொல்கிற, ஜபிக்காத மந்திரம் அஜபை. திருமால் தம்முடைய மூச்சுக் காற்றோடு அதை ஜபிக்கிறார். சுவாசம் உள்ளே போகும் போது மார்பு விம்மி, வெளியே போகும்போது தணிகிறது; அவர் மார்பிலிருந்து தியாகராஜா அமர்ந்தபடியே ஆடுகிறார். அஜபா மந்திரத்தைத் திருமால் சொல்லுகையில் ஆடுவதால் இதற்கு அஜபா நடனம் என்று பெயர் வந்தது.

இந்த மூர்த்தியைத் திருமாலிடமிருந்து இந்திரன் வாங்கிக் கொண்டான். ''நீ யாருக்கும் எந்தக் காலத்திலும் கொடுக்காதே'' என்று சொல்லி நாராயணமூர்த்தி அவனுக்குக் கொடுத்தார்.

முசுகுந்தன் செயல்

இந்திரன் தனக்கு உதவி செய்த முசுகுந்த சக்கரவர்த்திக்குக் கைம்மாறாக ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணி, ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டான். நம்மைப் போல பக்தி இல்லாதவனாக இருந்தால், இன்னும் கொஞ்சம் பொருள் கொடு என்று வாங்கிப் போயிருப்பான். நல்ல பக்தி உடையவன் ஆதலாலே, ''நீ வைத்திருக்கும் சோமாஸ்கந்தரைக் கொடு'' என்று கேட்டான்.

இந்திரன் 'கேட்டதைக் கொடுக்கிறேன்' என்று சொன்னான் அல்லவா? இப்போது கொடுக்கக் கூடாத பொருளை அவன் கேட்டு விட்டான். என்ன செய்வது என்று இந்திரன் யோசித்தான். உடனே விசுவகர்மாவை அழைத்து அதே போன்று வேறு ஒரு சோமாஸ்கந்தமூர்த்தியைப் பண்ணச் சொல்லி, அதை மன்னனிடம் கொடுத்து ஏமாற்ற நினைத்தான். முசுகுந்த சக்கரவர்த்தி அதை வாங்கிக் கொண்டவுடனே, நல்ல பக்தி உடையவனாதலால் உண்மையை உணர்ந்து, ''இது அல்ல அந்தச் சோமாஸ்கந்த மூர்த்தி; அதைத் தா'' என்று கேட்டானாம். உடனே இந்திரன் விசுவகர்மாவைப் பின்னும் ஒன்று பண்ணச் சொல்லி அதைக் கொடுத்தான். அதையும் வாங்கிக் கொள்ள மறுத்தான் முசுகுந்தன். இப்படியே ஏழு சோமாஸ்கந்தமூர்த்தியைக் கொடுத்தும் அவன் ஏமாறவில்லையாதலால் உண்மையான சோமாஸ்கந்தரையே இந்திரன் கடைசியில் கொடுத்துவிட்டான். இந்தச் சோமாஸ்கந்தமூர்த்தியைத்தான் அந்தச் சக்கரவர்த்தி திருவாரூரில்

பிரதிஷ்டை பண்ணினான் என்று புராணம் சொல்கிறது. மற்ற ஆறு மூர்த்திகளையும் ஆறு வேறு இடங்களில் பிரதிஷ்டை பண்ணினான்.

அந்த முசுகுந்தன் இப்போது தேவசேனையோடு அம்மையப்பனாக வீற்றிருந்த முருகனை வழிபட்டுப் பேரானந்தம் அடைந்தான்.

இதுவரைக்கும் அம்மா அப்பாவுக்கு நடுவில் குழந்தையாக, நடுநாயகமாக வீற்றிருந்த பெருமான், திருப்பரங்குன்றத்தில் தேவசேனையோடு திருக்கல்யாணக் கோலங்கொண்டு வீற்றிருந்து உலகத்திற்கெல்லாம் அருள் செய்யலானான்.

'குழந்தை இல்லாதவர்கள் சஷ்டி விரதத்தை அநுசரிப்பார்கள். முக்கியமாகத் தேவயானையை வழிபடுவது வழக்கம். அதனால் அந்தப் பெருமாட்டிக்குச் சஷ்டி தேவி என்று பெயர். தேவசேனையைத் தேவயானை என்று சொல்வார்கள். தேவயானையாகிய ஐராவதத்தினால் வளர்க்கப் பட்டவளாதலினால் அந்தப் பெயர் வந்தது. அவளைத் தேவகுஞ்சரி என்றும் சொல்வதுண்டு. யானை என்ற பெயர் இருப்பதை எண்ணிப் புலவர்கள் பல வகையில் கற்பனை செய்வார்கள். அருணகிரியார்.'

மத கும்ப கம்பத்
தறுகன் சிறுகண் சங்க்ராம சயில சரசவல்லி
இறுகத் தழுவும் கடகாசல பன்னிருபுயனே

என்று பாடுகிறார். தேவயானையை இறுகத் தழுவும் பன்னிரண்டு தோளாகிய மலைகளை உடையவன் முருகன். அந்தத் தோள்களில் வளைகளை அணிந்திருக்கிறான். மலையைச் சுற்றிப் பட்டை போட்டதுபோலக் கடகம் விளங்குகிறது. யானை மலையில் விளையாடுவது. தேவ யானையை யானை தந்த கொடி போன்ற பெண் யானைக்குட்டியாக உருவகம் செய்து, அந்த யானை முருகனுடைய கடகம் அணிந்த பன்னிருதோள்களாகிய மலையில் விளையாடுகிறது என்று வருணிக்கிறார். இத்தகைய உருவகத்தை வேறு புலவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

யானையும் மலையும்

கச்சியப்ப சிவாசாரியார் தேவயானை திருமணத்தை வருணித்து விட்டுக் கடைசியில் அலங்காரமாக ஒரு பாட்டுப் பாடுகிறார்.

தேவலோகத்தில் உதித்தவள் தேவயானை. அந்தப் பெருமாட்டியை முருகப் பெருமான் திருமணம் செய்து கொண்டான். தேவ யானைக்குச் செவ்வேளாகிய முருகன் நாண் கட்டினான். திருமங்கல நாண் பூட்டுவது திருமணத்தில் முக்கியமான செயல் அல்லவா? நாண் என்பது திருமங்கல்ய நாணையும், கயிற்றையும் குறிக்கும். அப்படிக் கட்டி நல்ல ஆபரணங்களை அணிவித்து, அங்குசம் கொண்டு தன்னுடைய புயமாகிய தூணில் பிணித்தான் என்று அவர் பாடுகிறார்.

"சேணு தித்திடு தெய்வதக் களிற்றினைச் செவ்வேள்
நாணி னிற்கட்டி நகரிடைத் தந்துநற் கலன்கள்
பூணு தற்றுறும் அங்குசங் கைக்கொடு புயமாம்
தூணு றப்பிணித் தணைத்தனன் அருளெனும் தொடரால்."[1]

இங்கே அங்குசம் என்பது, அங்குசம் என்னும் ஆயுதத்தையும், அழகிய தனம் என்பதையும் குறிக்க வந்த சிலேடை. நெடுந் தூரத்தில் வாழ்ந்திருந்த யானையைக் கயிற்றினால் கட்டித் தன் ஊருக்குக் கொண்டு வந்தான் என்ற ஒரு பொருள் தொனிக்கிறது.

குமரகுருபரர் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில் முரு கனுடைய பன்னிரு தோள்களையும் மலைகளாகச் சொன்னவர், அந்த மலைகளில் இந்திராணி வளர்த்த யானை விளையாடுகிறது என்று பாடுகிறார். கற்பகமரத்தின் அடியில் சிவந்த கண்ணை யுடைய இந்திராணி வளர்த்த கும்பம் போன்ற நகில்களை உடைய உவகை பெற்ற தேவயானை விளையாடுவதற்குரிய பன்னிரண்டு மலைகளைப் போன்ற தோளை உடையவன் என்று பாராட்டுகிறார்.

"பூமேவு கற்பகப் பொங்கரிற் செங்கட்
புலோமசை வளர்த்தகும்பப்
புணர்முலைக் களியானை விளையாடு பன்னிரு
பொருப்பனை."[2]

---

1. சேண் – தேவலோகத்தில், தெய்வதக்களிறு – தேவயானை, தந்து – கொண்டு வந்து, பூணுதல் துறம் – பூணுதலை நெருங்கிய, தொடர் – சங்கிலி.

2. பொங்கர் – மரம், புலோமசை – இந்திராணி, பொருப்பனை – மலைபோன்ற தோளை உடையவன்.

கொடி படர்ந்த தோள்

அருணகிரியார் தேவயானையைச் சொல்வதை இனி விவரமாகப் பார்க்கலாம். அவள் யானையினால் வளர்க்கப் பெற்ற, யானைக்குப் பெண்ணாகிய கொடி போன்றவள்.

யானை மலையைப் போல இருப்பதால் அதை மலையென்றும் சொல்வது உண்டு. மலைக்கும் அதற்கும் வேறுபாடு காட்டுவதற்காக மதமலையென்று சொல்வார்கள். மலைபோன்ற ஐராவதத்தால் வளர்க்கப்பெற்ற இன்பக் கொடி தேவயானை என்று பாடுகிறார் அருணகிரியார்.

மதகும்ப கம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம சயிலம்

என்று ஐராவதத்தைக் குறிக்கிறார். மதம் நிரம்பியது. மதநீர் வழிகின்ற மத்தகத்தை உடையது. எப்போதும் அசைந்து கொண்டே இருப்பது. கடுமையானது. சிறிய கண்ணை உடையது. இவை யாவும் யானைக்கு இலக்கணம். போரில் இந்திரன் ஐராவதத்தின் மேல் ஏறிப் போர் செய்வான். அப்போது எதிரிகளை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்வது அந்த யானை. சங்க்ராமம் – போர். போரில் மலைபோன்று நிற்கிற ஐராவதத்தை,

மதகும்ப கம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம சயிலம்

என்று வருணித்தார் அருணகிரியார். அந்தச் சயிலத்தினுடைய பெண்ணாகிய கொடி போன்றவள் தேவயானை. சரசம் என்பது இன்பம் என்ற பொருள் உடையது.

சங்க்ராம சயில சரசவல்லி.

இந்தக் கொடி முருகப் பெருமானுடைய தோளில் படர்ந்தது.

இறுகத் தழுவும் கடகாசல பன்னிரு புயனே.

தேவயானை முருகப் பெருமானை இறுகத் தழுவினாள்; தழுவி இன்புற்றாள். அந்தத் தோள்களும் மலையைப் போல உயர்ந்து நிற்பவை. மலைக்கும் அவன் தோளுக்கும் வித்தியாசம், அந்தத் தோளில் கடகம் அமைந்திருப்பது. கடகம் அமைந்த பன்னிரண்டு மலைகளைப் போன்ற தோள்களை உடையவன் முருகன். மதம் பொழிகின்ற சங்க்ராம சயிலம், யானை. அதனால் வளர்க்கப்

பெற்ற சரசவல்லியாகிய தேவயானை வேறு ஒரு மலையைச் சார்ந்தாள். உயர்ந்த இடத்தில் பிறந்த பெண் தன் பிறந்தகத்திற்கு ஏற்ற பொருத்தம் உடைய இடத்தைத்தானே சேர்வாள்? ஆகை யால் ஒரு மலையில் பிறந்து மற்றொரு மலையைச் சேர்ந்தாள் என்று நயம்படச் சொல்கிறார் அருணகிரியார். அவள் பிறந்து வளர்ந்த இடம் சங்க்ராம சயிலம். அவள் படர்ந்து இறுகத் தழுவிய இடம் கடகாசலம்; வளையை உடைய மலை.

போரிட்ட யானை

சூரபன்மனுடன் சண்டை இடும்போது இந்திரனும் சண்டை செய்தான். முருகப் பெருமான் துணை இருந்ததனால் அவன் அஞ்சாமல் சண்டை செய்தான். தனியே சூரபன்மனை எதிர்ப் பதற்கு அவனுக்கு ஆற்றல் இல்லை. இறைவனாகிய தலைவன் அருகில் இருக்கும் தைரியத்தால் எல்லோருமே சண்டை செய்தார்கள். ஐராவதமும் தன்னுடைய ஆற்றலைக் காட்டியது. போருக்குப் பிறகு தேவயானையின் மணம் நடந்தது. ஆகையால் அந்தப் போரில் உண்டான காயங்களுடன் ஐராவதம் நின்றது. அருணகிரியார் அதை நினைப்பூட்டுகிறார். 'இப்போதுதான் போரில் புகுந்து மதம் பொழிகின்ற மத்தகத்தோடு எதிரிகளை எதிர்த்துப் போரில் பெற்ற அடையாளங்களுடன் இதோ நிற்கிறது ஐராவதம். இந்த ஐராவதத்தின் பெண்ணை எம்பெருமான் திருமணம் செய்து கொண்டான்' என்று நினைப்பூட்டுவதுபோல ஐராவதத்தைச் சங்க்ராம சயிலம் என்று குறிப்பிட்டார். வேறு நிகழ்ச்சியையும், வேறு அடையாளங்களையும் சொல்லியிருக் கலாம். ஆனால் தேவையானையின் திருமணத்திற்கு முன்னால் நிகழ்ந்தது போர். ஆகையால் இவ்வாறு சொன்னார். அந்தப் போரில் தேவர்களுக்கு வெற்றி கிடைத்தமையினால் நன்றி யறிவுக்கு அறிகுறியாகத் தேவயானையை இந்திரன் மணம் செய்து கொடுத்தான் என்பதை முன்பு பார்த்தோம் அல்லவா?

முருகப் பெருமான் தேவயானையாகிய கொடியைத் தன் திருத்தோள்களின் மீது படர விட்டுக் கொண்டான். அந்தக் கொடி அதற்கு முன்னால் தளர்ந்து இருந்தது. அந்தக் கொடிக்கு ஏற்ற கொழுகொம்பாக இறைவன் அருள் புரிந்தான்.

பெண்களுக்குப் பெருமை

பெண்களுக்குப் பெருமை கணவரால் வருவது. எத்தனை சிறப்பு இருந்தாலும், பெரிய இடத்தில் பிறந்திருந்தாலும் கல்வி அறிவைப் பெற்றுப் பண்புடையவர்களாக இருந்தாலும் அத்தனையும் நிறைவு பெறுவது கணவனை அடைந்த பிறகுதான். அதுவரைக்கும் அவர்கள் தலைநிமிர்ந்து நடக்கவும் அஞ்சுவார்கள். கணவனுடன் சேர்ந்த பெண்களுக்கே பெருமிதம் உண்டாகும். தேவசேனையும் ஐராவதத்தின் மகளாக வளர்ந்தும், இந்திரனுடைய மாளிகையில் வாழ்ந்தும் பெற்ற பெருமை சிறந்ததன்று. முருகப்பெருமானை அடைந்த பிறகே அந்தப் பெருமாட்டிக்குத் தலைமை கிடைத்தது. தேவர்கள் வணங்கினார்கள்; அவளை வளர்த்த இந்திரனே வணங்கிப் பாராட்டினான்.

கிரியா சக்தி

முருகப்பெருமானுக்குரிய தேவியாகிய தேவயானை கிரியா சக்தி ஆவாள். இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என்று இறைவனுக்கு மூன்று சக்திகள் உண்டு. இச்சா சக்தி, வள்ளியம் பெருமாட்டி. ஞான சக்தி முருகன் கையில் உள்ள வேலாயுதம். கிரியா சக்தி தேவயானை.

ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமென்று நினைக்கிறோம். அதனை நன்றாகச் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். அதை எப்படி எப்படிச் செய்யவேண்டுமென்று திட்டமிடு கிறோம். திட்டப்படியே வேலை செய்து காரியத்தைச் சாதித்துக் கொள்கிறோம். எல்லாவற்றுக்கும் மூலமாக இருப்பது செய்ய வேண்டுமென்ற ஆசை. பின்பு அதற்குரிய வழிகளைக் காட்டுவது அறிவு. அதன் பிறகு செயல் முகிழ்க்கிறது. ஆசை, அறிவு, செயல் என்ற மூன்றும் எல்லா மக்களிடத்திலும் இருக்கின்றன. ஆசை என்பதுதான் இச்சை. அறிவு என்பதுதான் ஞானம். செயல் என்பது தான் கிரியை. இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி ஆகிய மூன்றும் எல்லோரிடத்திலும் உண்டு. ஆனால் நம்மிடத்தில் அந்த மூன்று சக்தியும் மிகக் குறைந்த அளவில் இருக்கிறது. நம்மைக் காட்டிலும் அதிகமான சக்திகள் தேவர்களிடம் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக இந்த மூன்று வகைச் சக்திகளுக்கும் மூலமாக இறைவனிடத்தில் உள்ள சக்திகள் அமைகின்றன.

மனிதனுடைய ஆசை அவனவன் இயல்புக்கேற்ற அளவில் வேறுபடுகிறது. தீபாவளி வந்தால் என் குழந்தை இரண்டு கட்டுப் பட்டாசுக்கு ஆசைப்படுகிறது. என் மனைவி பட்டுப் புடவைக்கு ஆசைப்படுகிறாள். நான் இரண்டு மாதப் போனசுக்கு ஆசைப்படுகிறேன். ஆசை என்பது பொதுவாக இருந்தாலும் அதன் அளவு ஆளுக்குத் தக்கபடி வேறுபடுகிறது. நம் குடும்பம் வாழ வேண்டுமென்று நாம் ஆசைப்படுகிறோம். உலகம் முழு வதும் வாழவேண்டுமென்று பெரியவர்கள் ஆசைப்படுகிறார்கள். இறைவனோடு எல்லா உயிரும் வாழ வேண்டும் என்று, பிரபஞ்சத்தில் உள்ள புழு முதல் யானை வரைக்கும் எல்லாம் வளர்ந்து தன்னைச் சார்ந்து இப்த்தை அடைய வேண்டும் என்று, நினைக்கிறான். நமக்கு ஒரு குடும்பம். எம்பெருமானுக்கோ உலகில் உள்ள எல்லாக் குடும்பங்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இருக்கிறது. அந்த அந்தக் குடும்பங்களில் வாழும் உயிர்களை எப்படி எப்படி மேலே ஏற்றவேண்டுமென்பதைப் பற்றி அவன் நினைக்கிறான்; ஆசைப்படுகிறான். எப்படிச் செய்ய வேண்டுமென்பதை யோசிக்கிறான். அதற்கேற்ற செயல்களைச் செய்கின்றான். ஆகவே அவனிடம் மூன்று வகைச் சக்திகளும் இருக்கின்றன. உயிர்க் கூட்டங்களுக்கு எல்லாம் நலம் செய்கின்ற சக்தி ஆகையால் அவனிடம் உள்ள சக்திகளுக்குச் சமானமாக வேறு யாரிடமும் இல்லை. இந்த மூன்று சக்திகளும் இறை வனிடம் உள்ளன என்பதை மூன்று வகையான பொருள்களிலும் காட்டுகிறான். ஞான சக்தி தன்னிடம் உள்ளது என்பதைத் தன் கையில் பிடித்துள்ள வேலினால் காட்டுகிறான். இச்சா சக்தியை உடையவன் தான் என்பதை வள்ளியம்பெருமாட்டியை அருகில் வைத்துக் கொண்டு காட்டுகிறான். கிரியா சக்தி தன்னிடம் இருக் கிறது என்பதைத் தேவகுஞ்சரி மணாளனாக இருந்து காட்டு கிறான்.

வெற்றிக்கு அடையாளம்

இப்போது அவன் பெரிய காரியத்தைச் செய்தான். முருகப் பெருமானுடைய பெருமையைச் சொல்லும் கந்தபுராணம் சூரசங்காரத்தை மிக விரிவாகச் சொல்கிறது. இராமாயணம், பாரதம், கந்தபுராணம் ஆகிய மூன்றிலும் கொடியவர்கள் சங்கார

மானதாகக் கதை முடிகிறது. எந்தக் கதையாக இருந்தாலும் அடியிலிருந்து தொடங்கிப் பல பல கிளைகளாகப் பிரித்து பின்பு மறுபடியும் சங்காரத்தில் கொண்டு வந்து முடிக்கிறார்கள் புலவர்கள். கந்தபுராணத்தின் முக்கியமான காரியம் சூரசங்காரம். மாயையின் பிள்ளையாகிய சூரனோடு ஆண்டவன் போரிட்டான். அவன் தன் திருக்கையில் பிடித்த ஞானசக்தியைக் கொண்டு அஞ்ஞான சொரூபமாகிய சூரனை வென்றான். போர் நிகழ்த்தினான். அந்தப் போரே பெரிய காரியம். ஆண்டவன் தேவசேனையை மணப்பதற்கு முன்னால் அவ்வளவு பெரிய காரியத்தைச் செய்தான். வேறு யாராலும் செய்ய முடியாத காரியத்தைச் செய்தான். வலன் என்ற அசுரனை மாய்க்கக் கூடிய ஆற்றல்தான் இந்திரனிடம் இருந்தது. மாயையின் பிள்ளையாகிய சூரன் வந்தபோது அவனிடத்தில் இருந்த சக்தி யாவும் அந்தப் பெரிய பகையை மாற்றி விடுவதற்குப் போதுமானதாக இல்லை. அப்படியே மற்ற மற்றத் தெய்வங்களிடம் கிரியா சக்தி இருந்தது என்பது உண்மை. என்றாலும் அவற்றால் சூரனைச் சங்காரம் செய்ய முடியவில்லை. மிகப் பெரிய பகைவனாகிய அவனை அழிப்பதற்கு இணையில்லாத கிரியா சக்தியை உடைய முருகப் பெருமான்தான் வேண்டி இருந்தது. ஆகவே அவன் தன்னுடைய வீர ஆற்றலினால் சூரனைச் சங்காரம் செய்தான். தான் பெரிய கிரியா சக்தியை உடையவன் என்பதைக் காட்டுவதற்காகத் தேவயானையை மணம் புரிந்து ஏற்றுக் கொண்டான். கிரியா சக்தி உருக்கொண்டு வெளிப்பட்ட பிறகு அவளைத் தன் அருகில் எல்லோரும் காணும் படியாக வைத்துக் கொண்டான். பெரிய வீரன் வீரச்செயல் புரிந்த பிறகு அதனைக் காட்டும் அடையாளமாகப் பதக்கத்தை அணிந்து கொள்வது போல, பெரும்போரைச் செய்து வெற்றி பெற்றவன் என்பதைத் தன் அருகில் தேவயானையை அடையாளமாக வைத்து முருகன் காட்டினான்.

திருப்பரங்குன்றத்தில் இந்தத் திருமணம் நடந்தது. திருமுருகாற்றுப்படையில் ஆறு படை வீடுகளையும் சொல்லவந்த நக்கீரர் முதலில் திருப்பரங்குன்றத்தைச் சொல்கிறார். அப்போது தேவயானையை,

"மறுவில் கற்பின் வாணுதல்"

என்று பாராட்டுகிறார். குற்றம் இல்லாத கற்புடைய பெருமாட்டி தேவயானை. இங்கே கற்பு என்பது திருமணம் செய்துகொண்டு ஏற்றுக் கொண்டதைக் குறிக்கிறது.

யார் யார் தாம் மேற்கொண்ட காரியங்களைத் திறம்படச் செய்ய நினைத்துப் பலன் அடையவேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்கள் எல்லாம் கிரியா சக்தியோடு எழுந்தருளி இருக்கும் ஆண்டவனை ஆராதிக்க வேண்டும். தேவசேனாபதியை வணங்குகிறவர்கள் தம் முயற்சியில் வெற்றி பெறுவார்கள்.

செயலும் பயனும்

கிடைத்த பொருள்களைக் கொண்டே நாம் முயற்சி செய்ய வேண்டும். நமக்குக் கிடைத்திருப்பது மனிதப் பிறவி. இந்தப் பிறவியில் நாம் செய்யும் முயற்சிகளுக்குத் துணையாகக் கருவி கரணங்கள் உள்ளன; பிரபஞ்சம் இருக்கிறது; நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள்; இவர்களை எல்லாம் கொண்டு நல்லது இன்னது என்று அறிந்து இறைவன் திருவடியை வணங்க வேண்டும்; பிறவிப் பயன் அது.

அவனை வணங்குவதாகிய செயலைச் செய்தால் அவன் நமக்குத் தன்னுடைய திருவடியைக் கொடுப்பான். செயலாற்றல் உள்ளவர்கள் இறைவனை வணங்கும் செயலையே சிறப்புடையதாக நினைப்பார்கள். செயலால் விளைகிற வெற்றியைப் பெற்று வாழ்வார்கள். முருகப் பெருமான் தன் வெற்றியினால் தான் இன்பம் அடையவில்லை. தேவலோகத்திற்கு இன்பம் தந்தான். பிறருக்காகச் செயல் செய்யும் அருளாளன் அவன். யார் யார் நல்ல முறையில் செயல் செய்கிறார்களோ அவர்களுக்குரிய வெற்றியை அவன் அருளுவான். தேவசேனைக்குத் தலைவன் என்பது இந்தத் தத்துவத்தை நினைப்பூட்டுகிறது. ஆதலால் இந்தப் பிறவி எடுத்துப் பிரஞ்சத்தில் உள்ள பல பொருள்களைத் துணையாகக் கொண்டு இறைவனை வணங்குவதாகிய செயலில் ஈடுபடத் தமக்குக் கிரியா சக்தியாகிய தேவசேனையின் தலைவனாக உலகம் எல்லாம் போற்றுகின்ற முருகன் அருள் செய்வான் என்பதை அருணகிரியார் நினைத்தார்; பாடினார்.

'கிரியா சக்தியாகிய தேவயானையை அணைந்து கொண்ட எம்பெருமானே! செயலுக்கு ஏற்ற பயனை உவகையோடு வழங்கு

வதற்கு நீ இருந்தும், நல்ல முறையில் செயல் செய்வதற்குரிய நான் பிறவியைப் பெற்றும், நான் உன்னை அடைந்து பணிந்து உன் திருவடி இன்பத்தைப் பெற்று வாழவில்லையே!' என்கிறார்.

பெறுதற்கு அரிய பிறவியைப்
பெற்றும்நின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற்
றிலேன்;மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட்சங் க்ராம
சயில சரசவல்லி
இறுகத் தழுவும் கடகா
சலபன் னிருபுயனே!

(பெறுவதற்கு அருமையான மனிதப் பிறவியைப் பெற்றும் நின்னுடைய சிறிய அடியை அணுகி வழிபட்டு அதைப் பெற யான் கற்றுக் கொள்ளவில்லையே; மதம் பொழியும் மத்தகத்தையும், அசைவையும், அஞ்சாமையையும், சிறிய கண்ணையும், போரிடும் இயல்பையும் உடைய மலை போன்ற ஐராவதத்தால் பெறப் பெற்ற இனிமையையுடைய கொடி போன்ற தேவயானையானவள் இறுகி அணைக்கும் கடகம் அணிந்த மலைகளைப் போன்ற பன்னிரண்டு தோள்களையுடைய பெருமானே.

குறுகி – அணுகி, அடியைப் பெறுதலாவது – முத்தியின்பத்தை அடைதல். கும்பம் – மத்தகம். கம்பம் – அசைவு. தறுகண் – அஞ்சாமை. சங்க்ராமம் – போர்; சயிலம் – மலை; சங்க்ராம சயிலம் – யானை. சரச வல்லி – இன்பக் கொடி. கடகம் – தோள்வளை. அசலம் – மலை.)

இது கந்தர் அலங்காரத்தில் 67–ஆம் பாட்டு.

எல்லை கடந்த இன்பம்

இரண்டு எல்லைகள்

உயிர்க் கூட்டங்கள் இரண்டு எல்லைக்கு உட்பட்டு வாழ்கின்றன. ஒன்று தேச எல்லை அல்லது இட எல்லை; மற்றொன்று கால எல்லை. தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு, தூரம், சமீபம் என்பன இட எல்லையைக் குறிப்பிடுபவை. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், நூறு ஆண்டு, ஆயிரம் வருஷம், யுகம், நொடி, கணம், நிமிஷம், மணி என்பன எல்லாம் கால எல்லையைக் குறிக்க வந்த பலவகையான பெயர்கள். இந்த இரண்டும் பிரபஞ்சத்தோடு தொடர்புடைய வாழ்வு எந்த உயிருக்கு உண்டோ அந்த உயிருக்கு உண்டு. இந்த இரண்டு எல்லைகளையும் கடந்தவன் இறைவன். இறைவனோடு ஒன்று பட்ட உயிர்களுக்கும் இட எல்லை, கால எல்லை ஆகிய இரண்டும் இல்லை. இந்த உடம்பில் வாழும் மட்டும் அந்த இரண்டு எல்லைக்குட்பட்டு நாம் வாழ்கிறோம். ஆனால் இறைவனுடைய திருவருள் இருந்தால் இந்த உடம்பில் இருக்கும் போதே இரண்டு எல்லையின் நினைவும் இல்லாத ஓர் ஆனந்த அநுபவத்தைப் பெறலாம். அத்தகைய இன்ப அநுபூதி நிலையை இந்தப் பாட்டில் அருணகிரிநாதப் பெருமான் சொல்ல வருகிறார்.

திருவருள் தோணி

பெரிய ஆற்றில் ஒருவன் இறங்கி நடந்து செல்லத் தொடங்கினான். கணுக்கால் அளவு முதலில் தண்ணீர் இருந்தது. பின்பு முழங்கால் அளவு ஆயிற்று. அதன் பின் இடுப்பளவு வந்தது. அதற்குப் பின்னால் கழுத்தளவு வந்தது. பின்பு தலை முழுகி விட்டது. ஆற்றில் ஆழம் அறியவேண்டுமென்று மேலே மிதந்தும், கீழே ஆழ்ந்தும் அவன் சென்று கொண்டே இருந்தான். ஓர் ஆள் ஆழம், இரண்டு ஆள் ஆழம் என்று கண்டுபிடித்த பின்பு

கரையேறினான். அவன் அணிந்திருந்த ஆடைகள் எல்லாம் நனைந்து போயின. கையில் கொண்டுபோன பொருள்கள் எல்லாம் ஆற்றோடு போயின. ஏதோ கொஞ்சம் நீச்சல் கற்றுக் கொண்டிருந்ததால் ஒருவாறு பிழைத்துக் கரையேறினான்.

அவன் மற்றொரு நாள் அந்த ஆற்றில் ஒரு படகில் மேல் ஏறி வந்தான். ஏறி வரும்போது எந்த எந்த இடத்தில் ஆழத்தின் அளவை எடுத்தானோ அந்த அந்த இடங்கள் வந்தபோதெல்லாம், "இங்கே ஓர் ஆள் ஆழம்; இங்கே இரண்டாள் ஆழம்" என்று கணக்குச் சொல்லிக் கொண்டு வந்தான். அவனோடு ஏறிவந்த மற்றொரு நண்பனுக்கு அவன் சொல்வது ஒன்றும் புரியவில்லை. தண்ணீரின் மேலே ஓடத்தில் இருந்ததால் தண்ணீரின் கீழ் ஆழம் எத்தனை என்பது அவனுக்குத் தெரியவில்லை. அந்தத் தண்ணீர் குளிர்ந்ததா, சுடுவதா என்பதையும் அவன் உணரவில்லை. இறைவனுடைய திருவருள் என்னும் தோணியில் ஏறிக் கொண்டால் இப்படித்தான் பிரபஞ்சத்தோடு தொடர்புடைய எல்லைகள் நமக்குத் தெரிவதில்லை. இன்பம் துன்பம் ஆகிய உணர்ச்சிகூடப் பிரபஞ்சத்தை ஒட்டி வாழ்கிறவர்களுக்கு உண்டேயன்றி, இறைவனோடு ஒட்டி வாழ்கிறவர்களுக்கு இருப்பது இல்லை.

காலத்தின் உணர்வு

நம்முடைய உள்ளம் எதனோடு ஒட்டியிருக்கிறதோ அதற்கு ஏற்பக் காலமும் இடமும் இன்பமும் துன்பமும் உடையனவாகத் தோன்றும். மந்த மதி உள்ளவனுக்குப் பள்ளிக்கூடத்தில் இருக்கும் மட்டும் துன்பம் நீடித்துக் கொண்டே இருக்கும். ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு மணிபோல இருக்கும். ஆனால் அவன் வீட்டுக்குப் போய் விட்டால் காலம் ஓடுவது தெரியாது. விளையாட்டில் புகுந்தானானால் பொழுதே போதவில்லையென்று தோன்றும். தன்னுடைய சொந்த வீட்டில் இருப்பதைக் காட்டிலும் மாமனார் வீட்டில் இருக்கும்போது மாப்பிள்ளைக்குக் காலம் போவது தெரிவதே இல்லை. அப்படியே தம்முடைய பிறந்தகத்தில் இருக்கும்போது பெண்களுக்கு காலம் போவது தெரிகிறது இல்லை. இடத்தினுடைய வேறுபாட்டாலே, மனோபாவத்தின் மாற்றத்தினாலே இந்த வேறுபாடு அமைகிறது. காலத்தின் அளவு எல்லோருக்கும் ஒன்றாக இருந்தாலும் அவ

ரவர்கள் அநுபவிக்கின்ற இன்ப துன்பத்தின் சார்பினால் காலத்தை உணர்வதும், உணராமையும் உண்டாகின்றன.

சோம்பேறிகளுக்குக் காலம் போவதே சிரமமாக இருக்கிறது. 'இன்னும் போது போகவில்லையே' என்று சொல்கிறார்கள். எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கிறவர்களுக்குக் காலம் போவது தெரிவதில்லை. 'பொழுது போதவில்லையே' என்று அவர்கள் சொல்கிறார்கள். தம்முடைய நாயகரோடு ஒன்றுபட்டு இன்ப வாழ்வு வாழ்கிற காதலிமார்களுக்குக் காலம் போவது புலனாவ தில்லை. ஆனால் காதலரைப் பிரிந்து வாழும் காதலிமார் களுக்கோ ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமாகத் தோன்று கிறது. இந்த இரண்டு வகைப் பெண்களுக்கும் காலத்தின் நீட்டம், குறுக்கம் எவ்வாறு தோற்றினாலும் உண்மையில் இரண்டிடத்தும் காலம் ஒரே அளவுள்ளதாகவே இருக்கிறது.

தன் தலைவனோடு ஒன்றாத மங்கைக்குக் காலத்தின் எல்லை நீண்டு தோன்றும். ஒன்றியவளுக்கோ காலமே தோன்றுவது இல்லை. அதுபோலவே இறைவனாகிய தலைவனுடன் ஒன்றிய உள்ளம் படைத்த ஆன்மாக்களுக்குக் காலம் போவது தெரியாது. எந்த இடத்தில் இருக்கிறோம் என்ற உணர்வே இராது.

இட உணர்வு

தன்னுடைய சொந்த வீட்டில் வேண்டிய வசதிகளைப் பெற்று நாயகனுடன் வாழ்கின்ற மங்கை இன்பத்தை நுகர்கிறாள். பல காலமாகத் தன்னுடைய தலைவனைப் பிரிந்து அவன் இருக்கும் இடம்கூடத் தெரியாமல் அவனை நாடித் தேடி ஊரெல்லாம் அலைகிறாள் ஒருத்தி. கடைசியில் எங்கோ ஒரு பாலைவனத்தில் ஒரு மரத்தின் அடியில் அவனைக் காண்கிறாள். அவனைக் காணாதபோது எத்தனையோ மாளிகையில் அவள் தங்கியிருக்கிறாள். பூம்பொழில்களைத் தாண்டி வந்திருக்கிறாள். இனிய நீர்ச்சுனையில் நீர் குடித்து வந்திருக்கிறாள். ஆனால் இந்தப் பாலைவனத்தில் ஒற்றை மரத்தின் அடியில் தன் காதலனைக் கண்டபோது அவளுக்கு உண்டான இன்பம் மாளி கையில் தங்கியபோதெல்லாம் உண்டாகவில்லை. இனிய நீர்ச் சுனையில் நீர் பருகிய காலத்தும் உண்டாகவில்லை. மற்றவர் களுக்கு அந்த இடங்கள் எல்லாம் இன்பம் தருவனவாக இருந்

தாலும் அந்த மங்கைக்கு அப்படியில்லை. இப்போதோ, 'நம் முடைய காதலனைத் தேடிப் பிடித்துவிட்டோம்' என்ற உணர்ச்சி யினாலும், அவனோடு சேர்ந்திருக்கிற இன்ப அநுபவத்தாலும் இடம் பாலை என்ற நினைவே அற்றுப் போகிறது. ஆகவே மனத்தின்கண் தோற்றுகிற இன்பம் காரணமாகக் காலம் குறை கிறது; இடத்தின் தீங்கும் மறைந்து போகிறது.

பிறவியும் துன்பமும்

நோய் உடையானுக்குத் தென்றல் காற்றும் துன்பத்தைத் தரும்; வாடைக் காற்றும் துன்பத்தைத் தரும். அவன் எந்த இடத்தில் இருந்தாலும் துன்பத்தை உணர்கிறான். அதுபோலவே பிறவி என்னும் பெரிய நோய் அடைந்தவனுக்கு எல்லா இடங் களும் துன்பத்தைத் தருவனவாக அமைகின்றன. இன்பம் தருவ தாகச் சிலகணம் தோற்றினாலும் பின்பு துன்பமாக முடிகிறது. உலகில் வாழ்கிற மக்கள் எல்லாம் பொருளினால் இன்பம் பெறுவதாக நினைக்கிறார்கள். ஆனால் பலகாலம் அந்த இன்பம் அவர்களுக்கு நிலைப்பது இல்லை. அதுபோலவே உடம்பின் ஆற்றலாலும், இளமையினாலும், மக்களுடைய உறவினாலும், பலவகைப் பண்டங்களின் உதவியினாலும் இன்பம் அடைவதாக முதலில் ஒரு தோற்றம் உண்டாகிறது; பின்பு அவற்றால் துன்பமே உண்டாவதை உணர்கிறான்.

பொதுவாக உலகத்தில் பிறந்தவர்கள் எல்லோருமே துன்பத்தையே அடைகிறார்கள். ஒருகால் வாழ்நாள் முழுவதும் குறைவு இல்லாத இன்பத்தை அடைந்தாலும் இறுதியில் மரணம் என்ற துன்பத்தை நிச்சயமாக அடைகிறார்கள்.

இப்படி வருகிற இன்ப துன்பங்கள் எல்லாம் மனத்தில் உண்டாகின்ற உணர்ச்சிகள். மனம் எதைச் சார்ந்திருக்கிறதோ அதன் வண்ணமாக நின்று அநுபவத்தைப் பெறுகிறது. எந்தப் பொருள் இன்ப துன்பத்திற்கு அப்பாற்பட்டதோ அந்தப் பொருளை மனம் சார்ந்தால் இன்ப துன்பத்திற்கு அப்பாற்பட்ட நிலையான அநுபவம் ஓரளவு அதற்கும் கிடைக்கும். காலதேச பரிச்சின்னத்திற்கு அப்பால் இருக்கிற இறைவன் நிரதிசய ஆனந்தமாகிய முத்தியைத் தருபவன். அவனை மனம் அடைய முடியாது. ஆனாலும் அவனுடைய திருவருளை நினைந்து அவன்

திருவடியில் தூங்கப் பழகிக் கொண்டால் அந்தத் தூக்கத்தில் இடம் மறந்து போகும்; காலம் மறந்து போகும்.

காலமும் இடமும் கடந்த இன்பம்

ஆயிரம் மைல் கடந்து ஒருவன் ரெயில் வண்டியில் செல்ல வேண்டும். அவன் தக்கபடி டிக்கெட் வாங்காமல் இருந்தால் ஒவ்வொரு கணமும் டிக்கெட் பரிசோதகர் வந்து விடுவாரே என்று அஞ்சிப் பயந்து கொண்டிருப்பான். மூன்றாம் வகுப்பு டிக்கெட் வாங்கிக் கொண்டவனோ வண்டியில் உள்ள நெருக்க மும், மூட்டைப் பூச்சியும் துன்புறுத்த உறக்கமும் கெட்டு, வழி யெல்லாம் வெப்பத்தினாலும், குளிர்ச்சியினாலும் துன்புறுவான். ஆனால் முதல் வகுப்பு டிக்கெட் வாங்கிக் கொண்டவனுக்கு வண்டியில் ஏறிப் படுத்தது தெரியும். விடியற்காலையில் சிற்றுண்டி கொண்டுவந்து ஒருவன் எழுப்பும்போது வீட்டில் படுத்துத் தூங்கி எழுவானைப் போல எழுவான். அவன் 500 மைல் கடந்து வந்திருக்கிறான். பன்னிரண்டு மணி நேரம் சென்றிருக்கிறது. ஆனால் அவன் ஏறிக் கொண்ட வண்டியின் வசதியினாலும் நன்றாகத் தூங்குவதற்குரிய உடல்நிலை இருப்பதனாலும் அவன் பன்னிரண்டு மணி நேரத்தையும் மறந்தான்; ஐந்நூறு மைல் தூரத்தையும் மறந்தான். காலம், இடம் என்பன மற்றவர்கள் கண்ணுக்கும், கருத்துக்கும் முன்னே நின்று துன்பத்தையும் இன்பத்தையும் உண்டாக்கவும் அவ்விரண்டும் இவன் அளவில் நின்றுவிட்டன. இவன் அவற்றை உணரவில்லை. அவ்வாறே இறைவனுடைய பாதாரவிந்தங்களிலே நம்முடைய உள்ளத்தைச் செலுத்தி, அதனை அங்கே தூங்கச் செய்துவிட்டால் காலதேச பரிச்சின்னத்திற்கு அப்பாற்பட்ட ஓர் இன்பம் நமக்கு வரும்.

நன்றாக அயர்ந்து தூங்குவானுக்கு இன்ன இடத்தில் தூங்கு கிறோம் என்ற இடவேறுபாடோ, இத்தனை காலம் தூங்கினோம் என்ற கால அளவோ தெரிவது இல்லை. தூக்கத்திற்குச் சுகம் இல்லையென்று சொல்வார்கள். தூக்கம் வராதவர்களுக்கு மெத்தை வேண்டும்; விசிறி வேண்டும்; தலையணை வேண்டும்; கால் பிடிக்க வேண்டும். நன்றாக உடலால் உழைத்து இளைப் புற்ற தொழிலாளர்களுக்கு, கையே தலையணையாக, கட்டாந் தரையே படுக்கையாக வைத்துப் படுத்தாலும் கண்ணை மூடின

வுடன் தூக்கம் வந்துவிடுகிறது. அடித்துப் போட்டாற்போல உடலைக் கீழே சாய்த்துப் படுத்தவுடனே உறங்கிவிடுகிறார்கள். இடறினால்கூட அவர்களுக்குத் தெரிவது இல்லை. அப்படி உலகத்திலே உண்டான துன்பங்களினால் அலுத்துப் போய், இறைவன் திருவருளைப் பெறவேண்டுமென்ற தாகம் மிகுந்து, அவனுடைய திருவடி மலரிலே உள்ளம் என்னும் வண்டைத் தூங்கவிட்டு நிற்பார்களானால் அத்தகைய அன்பர்களுக்குக் காலம் போவது தெரியாது; இடம் மறைவது தெரியாது.

மனம் உறங்குதல்

மனத்தை ஒருமுகப்படுத்துவதைத் தியானம் என்று சொல்வார்கள். நாமாக முயன்று செய்வது தியானம். அதன் முடிவிலே அது தனியாக ஓரிடத்தில் நிற்பது லயம். மனம் இறைவனுடைய திருவடியில் லயப்பட்டால் அது தூங்கத் தொடங்கும். அது சுத்த அவஸ்தையில் சுஷுப்தி என்று சொல்லப்படும். அதையே சவிகற்ப சமாதி என்று சொல்வார்கள். தூங்குகிறவர்களில் சிலர் கொஞ்சம் கைதட்டினால் எழுந்துவிடுவார்கள். அதுபோலச் சவிகற்ப சமாதியில் சற்றுத் தடை நேர்ந்தால் உடனே விழிப்புக் கொடுத்துவிடும். அப்படியின்றிக் காடாந்தகாரத் தூக்கம் போடுவது போல எந்த இடையூறும் தாக்காமல் தூங்குவது நிர்விகற்ப சமாதி. அந்தச் சமாதியில் ஈடுபடுகிறவனுக்குப் புற உலகமே தோன்றாது. புற உலக நிகழ்ச்சிகளுக்கும் அவனுக்கும் தொடர்பு இல்லை.

ஒருவன் ஓரிடத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறான். அப்போது அந்தப் பக்கத்தில் ஒரு பாம்பு ஓடி வந்து திரும்பிப் போய் விடுகிறது. ஒரு புலி அந்தப் பக்கமாகச் செல்கிறது. திருடன் ஒருவன் ஓடுகிறான். அவன் இருக்கும் இடத்தில் தீப்பிடிக்கிறது. தூங்கும்போது இவற்றில் ஒன்றையும் அவன் தெரிந்து கொள்வதில்லை. ஆனால் தூங்காமல் இருந்திருந்தால் அவற்றைக் கண்டவுடன் ஓலமிட்டிருப்பான். பிரபஞ்ச வாசனையோடு உலகில் வாழ்கிற மனிதனுக்கு இன்ப துன்பம் வருவதற்கு முன்னாலே அதைப் பற்றிய நினைவு மாத்திரத்தில் பயம் உண்டாகும். புலி அடிப்பதைவிடக் கிலி அடிப்பது பெரியது என்பார்கள். பிரபஞ்சச் சேற்றைக் கழுவி, இறைவனுடைய திருத்தாளில் ஈடுபட்ட நெஞ்சுடையவர்களுக்கோ மனோலயம்

ஏற்பட்டுக் கால தேச பரிச்சின்னத்திற்கு அப்பாற்பட்ட அநுபவத்தைப் பெறும் வழி கைகூடும். இதனை அருணகிரியார் இந்தப் பாட்டில் சொல்கிறார்.

யுகமும் சகமும்

முருகப்பெருமானுடைய சரணாரவிந்தங்களில் தம்முடைய கருத்தை இருத்துகின்ற ஆற்றல் பெற்றவர்களுக்கு யுகம் போகும்; ஜகம் போகும் என்கிறார்.

முருகன் சரணத்திலே
ஓடும் கருத்தை இருத்த வல்லார்க்கு உகம் போய்ச்
சகம்போய்.

மனம் எப்பொழுதும் சலனம் உடையது. அதனை வாயுவின் அம்சம் என்று சொல்வார்கள். ஒரு கணம்கூட நிற்காமல் எப் போதும் அலைபடும் கடலைப் போலச் சஞ்சலித்துக் கொண் டிருக்கும் இயல்புடையது. ஒன்றை விட்டு ஒன்றைப் பற்றித் தாவுகின்ற தன்மை வாய்ந்தது. அதனால் அதை 'ஓடும் கருத்து' என்று சொன்னார். உலகம் எல்லாம் பறந்தோடுகின்ற அத னுடைய தன்மையை மாற்றி, இறைவனுடைய நினைவாகிய வட்டத்தினுள் ஓடச் செய்து, பின்பு அவன் திருவடியில் படிந்து நிற்கச் செய்ய வேண்டும்.

தனிவேல் முருகன்

முருகப் பெருமானைப் பற்றிச் சொல்லுகையில் அவன் போர்க்களத்தில் அமைதியை உண்டாக்கின வேலாயுதத்தை உடையவன் என்று தெரிவிக்கிறார். தேவர்களும், அசுரர்களும் எதிர்த்துச் சாடுகின்ற போர்க்களத்தில் வேறு யாராலும் செய்ய முடியாத பெரிய வீரச் செயல்களைச் செய்யும் ஒப்பற்ற வேலா யுதத்தைக் கையில் படைத்தவன் முருகன்.

சாடும் சமரத் தனிவேல் முருகன்.

சமரம் என்பது சண்டை. இரண்டு கட்சியில் உள்ளவர்களும் ஒருவரோடு ஒருவர் மோதி, ஆரவாரம் செய்து கருவிகளை எல்லாம் வீசி எறிந்து, உடம்பையும் உள்ளத்தையும் குலைத்துக் கொள்வது சமரம். ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் தினந்

தோறும் சண்டை நடந்து கொண்டிருக்கிறது. தீய குணங்களுக்கும், நல்ல குணங்களுக்கும் போராட்டம் ஓய்வு ஒழிவின்றி நிகழ்கிறது.

"ஓயாதோ என்கவலை? உள்ளேயா னந்தவெள்ளம்
பாயாதோ? ஐயா பகராய் பராபரமே"

என்கிறார் தாயுமானவர். இப்படி ஓயாத கவலையும், ஒழியாத போராட்டமுமாக நம்முடைய உள்ளம் இருக்கிறது. இதுவே குருக்ஷேத்திரம். இதுவே போர்க்களம். இந்த உள்ளத்தில் அமைதி உண்டாகவேண்டுமானால், இந்த அலைச்சலைப் போக்குவதற்குத் தனிப்பெரும் கருவி ஒன்று வேண்டும். அமரரை நம்பினால் பயன் இல்லை. அசுரர்களை நம்பினாலும் பயன் இல்லை. அமரரை நம்பினால் அகங்காரம் எழும்; அசுரர்களை நம்பினால் அஞ்ஞானம் எழும். அமரர்களுடைய தயவு உண்டானால் சொர்க்கம் சித்திக்கும். அசுரர்களுடைய அன்பு உண்டானால் நரகம் சித்திக்கும். புண்ணியத்தின் பயனாகிய சொர்க்கமும், பாவத்தின் பயனாகிய நரகமும் இரண்டும் அற்ற நிலையிலே உண்டாகும் வீடு ஆகாது.

ஆகவே, போராட்டம் நின்று அமைதியாகிய சாந்தம் நிலவ வேண்டுமானால் வேலாயுதம் நமக்குத் துணையாக நிற்க வேண்டும். வேலாயுதம் ஞானத்தின் சொரூபம். அதனை நமக்கு வழங்குபவன் என்றும் இளைய பிரானாகிய முருகன். பிரபஞ்ச வாசனையிலே ஈடுபட்டுக் காமம் குரோதம் முதலிய ஆறுவகைப் பகைவர்களுக்குட்பட்டுத் தினந்தோறும் பெரிய சண்டையில் ஈடுபட்டிருக்கிற மனத்தில் அமைதி வரவேண்டுமானால், ஞான சக்தியை வேலாயுதமாக வைத்திருக்கிற முருகப் பெருமானுடைய பாதாரவிந்தத்தில் அந்த மனம் ஈடுபட வேண்டும். எங்கும் ஓடா மல் அங்கே அது இருக்க வேண்டும். அவனுடைய வேலையும், அவனுடைய முகத்தையும், தோளையும், திருவுருவப் பேரெழி லையும் சுற்றிச் சுற்றி வந்து நடமிட்டுப் பின்பு எல்லாவற்றுக்கும் மூலமாக இருக்கிற திருவடி மலரிலே விழுந்து கிடக்க வேண்டும். அப்போதுதான் அதனுடைய ஓட்டம் நிற்கும்.

சாடும் சமரத் தனிவேல் முருகன் சரணத்திலே
ஓடும் கருத்தை இருத்த வல்லார்க்கு உகம்போய்ச் சகம் போய்

யுகம் என்றால் கால எல்லைக்குத் தலையெல்லை. சகம் என்பது நமக்குத் தெரிந்த இட எல்லையின் முடிவு. பிரபஞ்ச

வாசனையும், காலத்தின் நினைவும் இறைவனுடைய திருவடியிலே உள்ளத்தை உறங்கச் செய்வார்களுக்கு வாரா என்பது தான் இதன் கருத்து. சமாதி இன்பத்தில் இந்த நினைப்புகள் எல்லாம் அடியோடு அற்றுவிடும்.

பிரளய நிகழ்ச்சி

இனி இந்த இரண்டு எல்லையை விரித்துச் சொல்கிறார். உலகம் மறைந்து, மனிதன் காணுகின்ற காலத்தின் சிற்றெல்லைகள் மறைந்து இறைவனும் இறைவியும் தனியாக நிற்கின்ற காலம் ஒன்று உண்டு. ஒரு வீட்டிலே இருக்கும் குழந்தைகளும், வேலைக்காரர்களும், உறவினர்களும் பகலிலே தங்கள் தங்கள் வேலைகளைச் செய்வார்கள்; ஓடியாடுவார்கள்; கூடிச் சிரிப்பார்கள். இரவு வந்துவிட்டால் முதலிலே குழந்தைகள் தூங்கிவிடுவார்கள். வேலைக்காரர்கள் வீட்டுக்குப் போய் விடுவார்கள். பின்பு வீட்டுக்காரரும், வீட்டுக்காரியும் வீட்டின் மற்ற மற்ற இடங்களில் வளைய வருவதை விட்டுவிட்டு தனி அறைக்குச் சென்று ஒன்று படுவார்கள். அதுபோலத்தான் பிரபஞ்சமாகிய குடும்பத்தை நடத்தும் வீட்டுக்காரனாகிய பரமேசுவரனும், வீட்டுக்காரியாகிய அம்பிகையும் மற்றக் காலங்களில் உயிர்களோடு உலவி வருகிறார்கள். உலகத்திலுள்ள உயிர்கள் எல்லாம் ஒரு சமயத்தில் அமைதி பெறுகின்றன. அதைத்தான் பிரளய காலம் அல்லது ஊழி என்று சொல்வார்கள். எல்லோரும் தூங்கின பிறகு ஒரு சங்கீத வித்துவான் தம்முடைய மனையாட்டி ஆடத் தானும் ஆடினான். மற்றவர்கள் பார்த்தால் நாணமாக இருக்கும் என்பது ஒரு கருத்து. மற்றொன்று: மற்ற நேரத்தில் வெவ்வேறு வேலைகள் இருப்பதனாலே தங்களுக்குப் பிரியமான ஆட்டத்தை நடத்த முடிவதில்லை. குழந்தைகள் எல்லாம் தூங்கி, ஊரும் தூங்கின பிறகு தனியாக இவர்கள் இரண்டு பேர்கள் மட்டும் இருக்கும் போது அம்மா ஆட ஐயாவும் ஆடுவார். யுகாந்த காலத்தில் உலகம் எல்லாம் ஓய்ந்து நிற்க, பஞ்சபூதங்களும் அடங்கிப் போக, தத்துவங்கள் எல்லாம் ஒன்றினுள் ஒன்று அடங்கித் தூங்க, அந்த நள்ளிரவு நேரத்தில் ஆண்டவன் நட்டம் பயில்கிறான். அப்போது அம்பிகை கைத்தாளம் கொட்டித் தானும் சுழன்று நட்டம் ஆடுகிறாள்.

பாடும் கவுரி பவுரிகொண்டு ஆடப் பசுபதி நின்று
ஆடும் பொழுது.

துரிய நிலை

இது உலகப் பிரளயம். அதுபோலவே ஒரு மனிதன் நல்ல சாதன முறையில் சென்று மனத்தை ஒருமைப்படுத்தித் தியானத்தில் ஈடுபட்டு ஆன்ம இன்பம் அடையும் பக்குவம் அடைந்தால் இறைவன் இறைவியினது கூத்தும் பாட்டும் அவனுக்குப் புலனாகும். அவனளவில் பிரபஞ்சம் ஒடுங்கித் தத்துவங்கள் ஒடுங்கிவிடுகின்றன. பிரளயமே வந்துவிடுகிறது. அதுதான் கருவி கரணங்களுக்கு அதீதமான நிலை; அவஸ்தைகளுக்கு அதீதமான நிலை. யோகியர்கள் இந்த நிலையை அநுபவிப்பார்கள்.

அதீத நிலை

உயிர் துரியாவஸ்தையில் நிற்கும்போது இறைவனுடைய ஆட்டத்தையும், இறைவியினுடைய தாளத்தையும், பாட்டையும் காணலாம். அதற்கு முன்பு மனம் தூங்குகிற சுழுத்தியைக் கடக்க வேண்டும். பின்பு துரிய நிலையையும் கடந்து, துரியாதீத நிலையை அடையும்போது பேரின்ப அநுபவத்தில் திளைக்கும் அநுபவம் கைகூடும்.

பரமாய் இருக்கும் அதீதத்திலே.

மூச்சை நிறுத்தி, மூலாதாரத்து அக்கினியை எழுப்பி, பிரம மரந்தரம் அளவும் செலுத்தி, இடையில் வருகிற இடையூறுகளை எல்லாம் மாற்றிச் சமாதி நிலை எய்தினால் இந்த இன்பம் கைகூடும் என்ற யோகிகள் கூறுவார்கள். ஆனால் முருகனுடைய பாதாரவிந்தத்தில் உள்ளத்தை வைத்துவிட்டால் மிகவும் முயன்று யோகம் செய்ய வேண்டியதில்லை. யோகிகள் பெறும் சிறந்த நிலையையே அடைந்துவிடலாம் என்று ஓர் எளிய வழியை அருணகிரியார் இந்தப் பாடலில் காட்டுகிறார்.

சாடும் சமரத் தனிவேல்
முருகன் சரணத்திலே
ஓடும் கருத்தை இருத்தவல்
லார்க்குஉகம் போய்ச்சகம்போய்ப்

பாடும் கவுரி பவுரிகொண்
டாடப் பசுபதிநின்று
ஆடும் பொழுது பரமாய்
இருக்கும் அதீதத்திலே.

(பகைவர்களை எதிர்த்துச் சென்று அழிக்கும் போரில் சிறந்து விளங்கும் ஒப்பற்ற வேலை ஏந்திய முருகனுடைய திருவடிகளில், எப் பொழுதும் ஓடிக்கொண்டிருக்கும் மனத்தை அமைந்து இருக்கச் செய்யும் ஆற்றலுடையவர்களுக்கு, யுகங்கள் போய், சக உணர்வு போய், பாடுகின்ற கவுரி சுழன்று ஆடும் கூத்தை மேற்கொண்டு ஆட, பசுபதி நின்று ஆடுவான்; அப்பொழுது அதீதத்தில் சென்றால் அங்கே எல்லாவற்றிற்கும் மேற்பட்ட ஆனந்தமாக இருக்கும்.

சாடும் – பகையை அழிக்கும். சமரம் – போர். சரணம் – திருவடி. பவுரி – சுழன்றாடும் கூத்து. அதீதம் – அதற்கும் மேலான நிலை. பரமாய் – மிக உயர்ந்த ஆனந்தமாய்.)

நம் முயற்சி, ஓடும் கருத்தை முருகன் சரணத்தில் இருத்துவது. பின் மெல்ல மெல்லப் பிற அநுபவம் கைகூடும். முதலில் இடமும் காலமும் மறந்த நிலையில் சிவசக்தி தாண்டவ தரிசனம் கிடைக்கும்; அப்பால் எல்லாம் மறந்த இன்பம் உண்டாகும்.

இது கந்தர் அலங்காரத்தில் 68–ஆம் பாடல்.

சத்தி வாள்

மனிதனுக்கு ஏதேனும் ஒரு பொருளால் துன்பம் உண்டாவது இயற்கை. ஆனால் அந்தத் துன்பம் உண்டாவதற்கு முன்பே அது வருமே என்று எதிர்நோக்கி அஞ்சிப் புதிய துன்பத்தை அவன் அடைகிறான். புலி அடிக்காவிட்டாலும் கிலி அடித்துவிடும் என்பது பழமொழி. தைரியம் இல்லாதவன் தான் படுகிற துன்பத்தைக் கண்டு சாவதோடு, வரப்போடும் துன்பத்தையும் நினைந்து புலம்புகிறான். போனதையும் நினைத்து அழுகிறான். ''போனது போய்விட்டது; இனி எது வந்தால்தான் என்ன?'' என்ற உறுதியோடு செய்ய வேண்டியவற்றைக் கவனிக்காமல் கோழையாகிறான். பத்து ஆண்டுகளுக்குப் பின்னால் இப்படி வரும் என்று யாராவது ஒரு குருட்டு ஜோஸ்யன் சொல்லியிருந் தால் அதனை நினைத்து இன்று முதலே துன்பப்படுகிறான். மன வலி இல்லாதவர்களின் இயல்பு இது. ஆண்டவன் திருவருளி னால் மன வலிமை பெற்றவர்கள் வருகிற துன்பம் எத்தனை யானாலும் வருவது வரட்டும் என்று தைரியத்தோடு எதிர்த்து நிற்பார்கள்.

அச்சமும் பாதுகாப்பும்

''தைரியத்தோடு இருந்தால் வருகிற துன்பம் போய் விடுமா? நம் வீடு தீப்பிடித்துக் கொள்ள இருக்கும்போது, தீப்பற்றிக் கொள்ளாது என்ற தைரியத்தோடு இருந்தால் பற்றிக் கொள்ளாமல் இருக்குமா?'' என்ற கேள்வியை யாராவது கேட்க லாம். வீட்டிலே தீப்பற்றிக் கொள்வதற்கும், மனத்திலே அச்சம் உண்டாவதற்கும் வேறுபாடு உண்டு. தீப்பற்றிக் கொள்ளும் என்று அறிந்து அதற்குப் பாதுகாப்பைத் தேடிக் கொள்ள வேண்டும். 'தீ வருமே' என்று வாயால் சொல்லிக் கொண்டு துன்பமுறுவது அறிவு ஆகாது. பின்னாலே புலி வரலாம் என்றால், புலி வருமே என்று அஞ்சி ஏங்கிக் கொண்டிருத்தல் கூடாது. அது வருவதற்கு

முன்னால் அது வந்தால் பாதுகாத்துக் கொள்வதற்குக் கவசம் போட்டுக் கொள்ள வேண்டும். அப்போது புலி வந்தால் என்ன செய்யும் என்று கேட்கும் தைரியம் உண்டாகி விடும்.

இந்த உலகத்தில் செய்ய வேண்டியதைச் செய்தவர்கள் மரணம் என்ற துன்பம் வந்தாலும் அஞ்சுவது இல்லை.

''சந்ததமும் வேதமொழி யாதென்று பற்றினது
தான்வந்து முற்றும் எனலால்
சகமீ திருந்தாலும் மரணமுண் டென்பதைச்
சதாநிஷ்டர் நினைவ தில்லை''

என்று தாயுமானவர் சொல்கிறார். உலகத்தில் பிறந்த அத்தனை பேரும் இறந்துபடுவார்கள் என்பது உறுதி. அவரவர்கள் அநுபவிக்கின்ற துன்ப நிலைகள் மாறுபாடு உடையனவாக இருந்தாலும் மரணம் என்னும் துன்பத்தில் யாருக்கும் வேறுபாடு இல்லை,

''வினைப்போக மேயிந்தத் தேகம்கண் டாய்வினை
தான்ஒழிந்தால்
தினைப்போ தளவும்நில் லாதுகண் டாய்.''

ஊழ்வினை முற்றுப்பெறும்போது நிச்சயமாக மரணம் அடைவோம் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. அறியாவிட்டாலும் உண்மை உண்மைதான். இதற்காக மரணம் வருமே என்று சொல்லிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. வந்தால் என்ன செய்ய வேண்டும் என்று நினைத்து அதற்குரிய பாதுகாப்பைச் செய்ய வேண்டும்.

மார்கழி மாதம் வந்தால் குளிர் வருகிறது. குளிர் நமக்கு மட்டும் வருவது இல்லை. சமுதாயம் அத்தனைக்கும் பொதுவாக வருகிறது. மக்கள் எல்லோரும் குளிரினால் துன்புறுகிறார்கள். 'குளிரினால் உண்டாகும் துன்பத்திற்கு நான் அஞ்ச மாட்டேன்' என்று ஒருவன் சொன்னால் மார்கழி மாதத்தில் குளிரே வராமல் தடுத்துவிடுகிறான் என்று பொருள் அல்ல. குளிரில் விறைக்காமல் இருக்கக் கம்பளிச்சட்டை, போர்வை முதலியவற்றை எல்லாம் முன்கூட்டியே வாங்கி வைத்துக் கொள்கிறான். துன்பம் வரும் போது அவற்றைப் பயன்படுத்திக் கொள்கிறான். துன்பத்தின் உறைப்பு இல்லாமல் காப்பாற்றிக் கொள்கிறான். அதனால் அவனளவில் துன்பம் இல்லையாகிறது. மழை

பெய்வது இயற்கைதான். மழை பெய்யும் காலத்தில் அதற்குப் பயந்து கொண்டு வெளியில் போகாமல் இருப்பது சாத்தியம் அன்று. நம் கையில் குடை இருந்தால் மழையில் நனையாமல் நம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம்; வெளியில் போய் வரலாம். ஊர் முழுவதும் மழை பெய்து ஓய்ந்த பின்புதான் வெளியில் போக வேண்டும் என்று யாரும் நினைக்க மாட்டார்கள்.

யமனால் உண்டாகிய பயம் உலகம் முழுவதற்கும் பொது. யமன் என்று சொல்லாவிட்டாலும் மரணம் என்பது மனிதனுக்கு உண்டு என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். மரணாவஸ்தை நமக்கு வரும் என்று அறிந்து, அது வருவதற்கு முன்பு வேண்டிய பாதுகாப்பைத் தேடிக் கொண்டால் மரணத் துன்பத்தினின்றும் ஓரளவு நீங்கலாம். அந்தப் பாதுகாப்புத்தான் ஆண்டவனுடைய திருவருள்.

நுண்பொருளுக்கு அடையாளம்

இனிமேல் வருகிற துன்பத்தை எண்ணி அஞ்சுவது மற்றொரு துன்பத்திற்குக் காரணமாகிறது. அந்த அச்சம் போக வேண்டுமென்றால் அதற்கு மாற்றாகச் சில உறுதிகளை மனத்தில் கொள்ள வேண்டும். பயம் என்பது கண்ணுக்குத் தெரியாத பொருள். யமனும் அத்தகையவன் தான். யமனை யாரேனும் பார்த்தது உண்டா? ஒருகால் இறந்து போனவர்கள் பார்த்திருக்கலாம். அதுவும் நிச்சயம் சொல்வதற்கு இல்லை. இறந்தவர்கள் திரும்பி வந்து சொன்னது இல்லையே! யமனை மரண தேவன் என்று சொல்வார்கள். அவன் கன்னங்கரேல் என்று இருப்பான்; எருமைக்கடா வாகனத்தின்மேல் வருவான்; கையில் திரிசூலம் வைத்திருப்பான்; பாசக் கயிற்றை வைத்திருப்பான்; அவன் கண் சிவப்பாய் இருக்கும் – இப்படிக் காலனைப் பற்றிய விவரங்களைப் புராணங்கள் சொல்கின்றன. இந்த உருவம் அவனைப் பார்த்துப் படம் பிடித்த உருவம் அன்று. பார்த்தவர்கள் யாரும் இல்லை. மரணம் என்ற ஒன்றை நாம் நினைக்க வேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் உருவம் கொடுத்திருக்கிறார்கள். நுண் பொருளாக இருப்பதைப் பருப்பொருளாகக் கற்பனை செய்வது கலைத் தன்மையில் ஒரு வகை. நல்லதாக இருந்தாலும், பொல்லாததாக இருந்தாலும் உருவம் கொடுத்துக் கற்பனை

செய்து விவகாரம் பண்ணுவது இந்த நாளிலும் அதிகமாக இருக்கிறது.

யமன் என்னும் கற்பனை

உலகத்தில் மரணம் என்பது இந்த ஊர்க்காரனுக்குத்தான் வரும், இன்ன சாதிக்காரனுக்குத்தான் வரும் என்ற வரையறை கிடையாது. உடம்பு எடுத்த எல்லா உயிர்க்கும், உடம்பைப் போக்குகின்ற மரணம் வருவது இயற்கையே. எல்லோருக்கும் மரணம் ஒன்றாக வரும்போது இந்து மதத்தில் உள்ளவர்களுக்கு மாத்திரம் இந்தமரணத்தை உண்டாக்க யமன் வருகிறான் என்றால் மற்ற மதத்தினர்களுக்கு யார் யார் வருகிறார்கள்? அவர்களுக்கு வெவ்வேறு ஆசாமி வருவானா? மற்ற மதத்தினர்கள் யமனைப் பற்றிச் சொல்வது இல்லை. ஆகையால் அவர்களுக்கு மரணம் இல்லையா? மரண தேவன் யமனானால் யமன் இல்லாத மக்களுக்கு மரணம் இல்லையென்று சொல்ல முடியுமா?

இப்படியெல்லாம் பல கேள்விகள் எழலாம். மரணம் வரும் என்பதை நினைப்பூட்டுவதற்கு யமன் என்ற ஒரு கற்பனை செய்திருக்கிறார்கள். அந்தக் கற்பனை இடத்திற்குத் தக்கபடி வேறுபடும். மற்ற நாடுகளிலும் மரண தேவதை என்று ஒன்றைச் சொல்வார்கள். இப்போதும் மரணத்தை எலும்பு உருவத்தில் குறிக்கிற வழக்கம் கலைஞர்களிடம் இருக்கிறது. யமன் என்பது ஓர் அடையாளம்.

காலன் என்ற சொல் நம் இறுதிக் காலத்தை அறிந்து வருகிறவன் என்ற பொருளை உடையது. அவன் எருமைக் கடாவின் மேல் வருகிறான். எதற்கும் அஞ்சாதது எருமைக்கடா. அவனும் யாருக்கும் அஞ்சாதவன். மரணத்தை யாராலும் மாற்ற முடியாது என்ற கருத்தை இப்படியெல்லாம் கற்பனை பண்ணியிருக்கிறார்கள். எவ்வளவு ஆற்றல் உடையவனாக இருந்தாலும், கல்வி உடையவனாக இருந்தாலும், பொருள் உடையவனாக இருந்தாலும் மரணத்தினின்றும் தப்புவது அரியது. மரணம் எதற்கும் அஞ்சி நில்லாது என்ற கருத்தையே இவ்வாறு சொல்கிறார்கள்.

பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்தில் உள்ள ரோடுகளில் ஒரு தூணை நட்டு அதன்மேல் ஒரு தகட்டை அடித்திருப்பார்கள்.

அதில் ஒரு பையன் ஓடுவது போலப் படம் எழுதி வைத்திருப் பார்கள். ''பள்ளிக்கூடத்துப் பையன்கள் நடமாடுகிற இடம் இது. ஆகையால் காரை மெல்ல ஒட்டு'' என்று விரிவாக எழுதி வைப் பதற்குப் பதிலாக இந்தத் தகட்டை நட்டு வைத்திருக்கிறார்கள். கார் ஓட்டுகிறவர்களுக்கு இதன் பொருள் தெரியும். சொல்ல வேண்டியவற்றை விரிவாக எழுதி அங்கே வைத்திருந்தால், வேகமாகக் காரில் போகிறவர்களால் அதைப் பார்க்க முடியாது. அது அவசியமும் அன்று. விரிவாக இருப்பதைச் சுருக்கமாகவும், நுட்பமாக இருப்பதைப் பருப்பொருளாகவும் தெரிந்துகொள்ளச் சித்திரம் போட்டுக் காட்டுவது சிறந்த கலைப் பண்பு. அது நாகரிகத்துக்கு ஒத்ததே.

செஞ்சிலுவை (Red – Cross) என்று ஒரு ஸ்தாபனம் இருக் கிறது. அதற்கு அடையாளம் செஞ்சிலுவை. அதைப் பார்த்தால் நோயாளிகளுக்கும் அகதிகளுக்கும் உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கை உண்டாகிறது. அந்தச் சின்னத்தை அணிந்தவர்கள் சிறந்த தொண்டுகளைச் செய்வதனால் அதைக் காணும்போதே அவர்கள் செய்யும் காரியங்களை நாம் உணர்ந்து கொள்கிறோம். செஞ்சிலுவைக்கும் அந்தக் காரியத்திற்கும் என்ன தொடர்பு என்று கேட்பது இல்லை.

காலனும் கால காலனும்

இத்தகைய குறியீடுகளைத் தெரிந்து கொள்ளக் கூடிய பகுத் தறிவும், பொறுமையும் இருக்குமானால் யமன் என்ற குறியீட்டின் பொருளையும் நாம் தெரிந்து கொள்ளலாம். மரணம் வரும் என்ற உண்மையை யாவருக்கும் நினைப்பூட்டும் சித்திரம் அது. மரணத் திற்கு யமனுடைய உருவத்தைக் கொடுத்து, அந்த மரணத்தைப் போக்கும் பலம் இறைவன் திருவருளால் வரும் என்பதை நமக்கு அறிவிக்கவே சிவபெருமான் காலகாலன் என்பதையும் சொல்லி யிருக்கிறார்கள். அதற்கு ஒரு கதையையும் வழங்குகிறார்கள்.

இந்தக் கதையைச் சின்னஞ்சிறு பிராயத்தில் குழந்தைகள் தெரிந்து கொள்கிறார்கள். மரணம் என்பது இன்ன பருவத்தில் வரும் என்ற நிச்சயம் இல்லை. எந்தச் சமயத்திலும் நாம் மரணத்தை அடையலாம் என்பதை உணர்ந்து, அதற்குரிய

பாதுகாப்பைத் தெரிந்து கொள்ளவேண்டும். அதற்காகத்தான் காலன் கதையும், காலகாலன் கதையும் இந்த நாட்டில் வழங்கு கின்றன.

யமனைப் பற்றி மாத்திரம் தெரிந்துகொண்டால் போதாது. யமனுடைய உருவம், யமன் செய்யும் காரியங்கள் ஆகியவற்றை எல்லாம் தெரிந்துகொள்பவன் யமனுக்கும் யமனாக இருக்கிற ஆண்டவனுடைய உருவம், அவனுடைய கருணைத் திருவிளை யாடல்கள், உபகாரங்கள் ஆகியவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

பாவனையால் பயத்தை மாற்றுதல்

நம்முடைய மனத்தில் ஒரு பயம் இருந்தால் அதை மாற்று வதற்கு ஒரு தைரியம் வேண்டும். பயம் மனத்தில் தோன்றுவது. அதை மாற்றும் தைரியமும் மனத்தில் எழுவது. பயம் கற்பனை யாக இருந்தால் அதை மாற்றும் தைரியம் கற்பனையாக இருக்க வேண்டும். பயம் உண்மையாக இருந்தாலும் அதை மாற்றுகின்ற தைரியத்தைப் பாவனை மாத்திரத்தால் உண்டாக்கிக் கொள்ளலாம்.

என் இளமையில் ஒரு பெரியவர் எனக்குச் சில உபதேசங்கள் செய்தார். மனத்தில் உண்டாகும் பயத்தை மாற்ற அவர் ஒரு வழி சொன்னார். பயத்திற்கு மாற்றாக அதனைப் போக்குகின்ற ஒரு பாவனை செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தார். எங்கள் ஊர் காவேரிக் கரையில் சுடுகாடு இருக்கிறது. அங்கே பேய் இருப்பதாக இளம் பிராயத்தில் எனக்கு ஒரு பயம் உண்டாயிற்று. பேய் என்ற நினைவு வரும்போது எனக்குப் பயமாக இருக்கிறதென்று பெரியவரிடத்தில் சொன்னேன். பேய் உண்டா என்றும் கேட்டேன். அவர், ''பேய் இருக்கிறதோ இல்லையோ, அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். பேய் என்ற நினைவினால் வரும் அச்சத்தைப் போக்க வழி சொல்லித் தருகிறேன்'' என்று சொன்னார். ''பேய் உனக்குமுன் நிற்பது போலவும், உன்னுடைய கையில் ஒரு வாளை வைத்துக் கொண்டு அதை வெட்டுவது போலவும் கற்பனை செய். அப்படி வெட்டிய போது பேய் கதறுவதாகவும், இறந்துவிட்டதாகவும் பாவனை செய். அப்போது பேய்ப் பயம் போய்விடும்'' என்றார்.

இந்த உபதேசத்தைக் கேட்டுக் கொண்டு பாதி ராத்திரியில் வேண்டுமென்றே காவேரிக் கரையில் உள்ள சுடுகாட்டுக்கு அருகில் செல்வேன். முதலில் பேய் என்ற நினைவினால் உடம்பெல்லாம் நடுங்கும். பின்பு கண்ணை மூடிக் கொண்டு என் கையில் வாள் இருப்பதாகவும் அந்தப் பேயை வெட்டுவதாகவும் பாவனை பண்ணு வேன். கண்ணைத் திறந்து கொண்டும் அந்தப் பாவனையை மறுபடியும் செய்வேன். இந்தப் பழக்கத்தினால் பேயின் பயம் எனக்கு நீங்கிவிட்டது. பேய் இருக்கிறதென்பது ஒரு கற்பனை. அதை மாய்த்துவிட்டேன் என்பதும் கற்பனை. முள்ளை முள்ளால் எடுப்பதுபோலக் கற்பனையைக் கற்பனையால் நீக்குவதற்கு இந்த வழக்கத்தை அந்தப் பெரியவர் எனக்குச் சொல்லிக் கொடுத்தார்.

மனத்திண்மை இல்லாதவர்களுக்கு திண்மை வரவேண்டு மானால் மீட்டும் மீட்டும் வலிமையுடைய எண்ணங்களை எண்ண வேண்டும். மெஸ்மெரிசம், ஹிப்னாடிசம் என்று சொல்லுகிற வித்தைக்காரர்கள் அடுத்தடுத்து ஒரு கருத்தைச் சொல்லித்தான் மயக்குவார்கள். நம் மனத்திற்குப் பலமுறை பாவனை பண்ணு வதனால் வலிமையோ, பயமோ உண்டாகும் என்பதை இந்தக் காலத்து மனவியல் அறிந்தவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். மரணம் என்பது நிச்சயமாக வருகிறது. அதை மாற்றிக் கொள்வதற்கு வழி வேண்டும். அந்த மரணத்திற்குக் கண் காணுகின்ற ஓர் உருவத்தைக் கற்பித்து, அந்த உருவத்தை நாம் வென்றுவிடலாம் என்பதற்கு மற்றொரு கற்பனை செய்தால் மனத்தில் உறுதி ஏற்படும். எது பயத்தை உண்டாக்குகிறதோ அந்தப் பொருளை அழித்துவிட்ட தாகக் கற்பனை பண்ணினால் பயம் குறையும்.

பயம் எழுதலும் மாற்றுதலும்

பயம் எழாமலே இருப்பது என்பது இயலாத காரியம். மனத்தினுடைய இயற்கை பயம் தோன்றுவது. தோன்றிய பயத்தை மாற்றுவதற்கு வழி காணவேண்டும். ஒளவைப்பாட்டி, ''ஆறுவது சினம்'' என்று சொன்னாள். சினம் கொள்ளாமல் இரு என்று சொல்லியிருக்கலாம். அது மிகவும் அரிது. சாமானிய மனிதனுடைய உள்ளத்தில் திடீர் திடீர் என்று சினம் தோன்றுவது இயற்கை. இயற்கையாகத் தோன்றும் சினத்தை அறிவினாலே தடுத்து நிறுத்த வேண்டுமென்று, நடைமுறைக்கு இணைந்த

நீதியைச் சொன்னார். அதுபோலவே நம்முடைய உள்ளத்தில் பயம் தோன்றாமல் இருப்பது இயற்கை அன்று. ஆனால் உண்டாகும் பயத்தை வளரவிட்டால் அதனைப் போக்குவதற்கு ஏதேனும் உபாயத்தைப் பின்பற்றலாம்.

மரண பயத்தைப் போக்குவதற்கு மரணத்தை வெல்லுகின்ற நெறியில் நடக்க வேண்டும். மரண பயத்தைப் போக்குவதற்கு இறைவன் இருக்கிறான் என்று நிச்சயபுத்தி வேண்டும். மரணம் வருமே என்று பொதுவாக நினைப்பதைக் காட்டிலும் யமன் வருவான் என்று உருக்கொடுத்து நினைப்பது எளிது. அந்த யமனுக்கு யமனான ஆண்டவன் திருவருள் கிடைக்கும் என்று கற்பனை செய்வதும் எளிது. ஒன்றை ஒன்று மாற்றிவிடும். இதற்காகத்தான் எம்பெருமான் திருவிளையாடல்களை நாம் படித்துச் சிந்தித்து வருகிறோம்.

யமனை வெல்லுதல்

மரணத் துன்பம் கண்ணாலே காண முடியாதது. நுட்ப மானது. அதற்குப் பருப்பொருளாக ஓர் உருவத்தைக் கொடுத்துத் திரிசூலமும் பாசக் கயிறும் தாங்கி, எருமைக் கடாவின் மேல் யமன் வருகிறான் என்று எழுதி இருக்கிறார்கள். ஆண்டவன் அருள் இருக்குமானால் அவனைக் கொன்று வீழ்த்தலாம் என்று நம்பிக்கை ஊட்டுகிறார்கள்.

"யாதொன்று பாவிக்க நான் அது ஆதலால்"

என்று கூறுவார் தாயுமானவர். "நான் யமனைக் கொன்று விட்டேன் என்று அடுத்தடுத்து நினைத்தால் அது மெய்யாகப் போய்விடும். ஆனால் அந்தத் தைரியம் நமக்கு வரவேண்டு மானால் நாமும் ஒரு பலத்தைக் கொள்ள வேண்டும்; ஒரு பெரும் துணையைப் பற்றிக் கொள்ள வேண்டும். அந்தத் துணைதான் இறைவன். அருணகிரியார் அத்தகைய பலம் ஒன்று உண்டென்று இங்கே நினைப்பூட்டுகிறார்.

"முருகப்பெருமானுடைய திருக்கரத்தில் உள்ள சத்திவாள் கிடைத்திருக்கிறது; அதனால் நான் யமனை வெட்டி வீழ்த்தி விடு வேன்" என்று கூறுகிறார். யமன் வருவான் என்ற நினைவோடு மயில்வாகனப் பெருமானது சத்திவாள் நமக்குக் கிடைக்கும்

என்ற எண்ணமும் நமக்கு இருந்தால் பயம் போய்விடும். அருண கிரிநாதர் கால பயம் போவதற்குப் பல பாடல்களை வெவ்வேறு வகையில் சொல்லியிருக்கிறார். காலனால் வருகிற அச்சத்தை நினைப்பூட்டி, அதனைப் போக்குவதற்கு இறைவனுடைய அருள் பயன்படும் என்பதையும் அழுத்தமாகப் பாடுகிறார். அத்தகைய பாடல்களுள் இப்போது பார்க்கும் பாடலும் ஒன்று.

அருணகிரியாரின் உறுதி

''காலன் என்ற ஒரு பாவி வருவான். அவன் மிகப் பொல்லாதவன். நம்மிடம் வந்து தொந்தரவு செய்வதற்கே அவன் வருகிறான். யாவருக்கும் அஞ்சாத பேர்வழி அவன். அத்தகைய வன் ஒரு பக்தனிடம் சென்று வாலாட்டினான். அவனை அறுத்துக் கொன்றுவிட்டார் ஒரு பெரியவர். அந்தப் பெரியவருக்கு அந்தத் தைரியம் எப்படி வந்தது தெரியுமா? அத்தகைய தைரியத்தை அவருக்கு ஒரு பிள்ளையாண்டான் அளித்தான். அவர் கையில் வாள் ஒன்று கொடுத்து அந்த வாளினால் அத்தகைய தைரியத்தைப் பெறும்படி செய்தான். அந்தப் பிள்ளையை நான் தேடிச் சென்று என்னுடைய துன்பத்தைப் போக்க வேண்டுமென்று இறைஞ்சி னேன். எனக்கும் ஒரு சக்தி வாள் கொடுத்தான். நான் இப்போது வலிமை உடையவன் ஆகிவிட்டேன். அந்தக் காலன் என்னிடத்தில் இப்போது வருவானா?'' என்று அறைகூவுகிறார் அருணகிரியார்.

''தந்தைக்கு முன்னம் தனிஞான வாள்ஒன்று சாதித்தருள்
கந்தச்சுவாமி எனைத்தேற் றியபின்னர்க் காலன்வெம்பி
வந்திப் பொழுதுஎன்னை என்செய்ய லாம்? சத்தி
வாள் ஒன்றினால்
சிந்தத் துணிப்பன் தணிப்பரும் கோபத்ரி சூலத்தையே.

கலக்கமும் தெளிவும்

தேற்றுதல் - தெளிவு பெறச் செய்தல். தெளிவுக்கு மாறுபாடு கலக்கம். மனிதன் பிறந்துவிட்டால் பிறப்பாகிய துன்பத்திற்கு உட்பட்டுப் பலபல கலக்கங்களை அடைகிறான். பிறரால் துன்பம் நேருமே என்று நினைக்கும் போது கலக்கம் உண்டா கிறது. தான் செய்த காரியங்கள் நல்ல பலனைத் தராதபோது கலக்கம் உண்டாகிறது. ''இத்தகைய பலவகைக் கலக்கங்கள்

உடையவனாக நான் இருந்தேன். கந்தசாமிக் கடவுள் என்னைத் தேற்றினான். நான் தெளிவு பெற்றேன். அதற்கு முன்பு நான் இருந்த அவலநிலை மாறியது. இப்போது நான் எதற்கும் அஞ்ச வில்லை'' என்பது அருணகிரிநாதருடைய அநுபவம்.

இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்கு முன்னால் நாம் நம்முடைய வலிமை காரணமாக எந்தத் துன்பம் வந்தாலும் போக்கிக் கொண்டு விடலாம் என்ற தைரியத்தோடு இருக் கிறோம். தம்மோடு வாழ்கிறவர்களை வெட்டுவதும், குத்தவது மாக உடல் பலத்தைக் கொண்டு சிலர் வாழ்கிறார்கள். இத்தனை வீரமும் காலனுக்கு முன்னால் செல்லாது. ஆயிரம் ஆயிரம் மக்களைக் கொன்று குவிக்கின்ற பெருவீரம் உடையவர்களையும் கொன்று குவித்து விடுகிறான் காலன். உலகத்திலுள்ள அத்தனை பேரையும் அவரவர்களுக்குரிய நாளில் அவன் வெட்டிச் சாய்த்துக் கொண்டு வருகிறான். அவனைக் கண்டு அஞ்சிய மக்கள் பலர். வெறும் வாய் வீரமும், வல்லமையும் அந்தக் காலனிடத்தில் செல்லா. அவனைக் கண்டு அஞ்சுகின்ற கூட்டத்தில் இறைவ னுடைய அருளைப் பெறாதவர்கள் சேருகிறார்கள். திருவருளைப் பெற்றுவிட்டாலோ காலனால் நமக்கு எந்தத் துன்பமும் இல்லை என்ற உறுதிப்பாடு வந்துவிடும்.

நமக்கு வரும் துன்பம் இன்னது என்று முறைப்படி தெரிவது இல்லை. வறுமையினால் துன்பம், நோயினால் துன்பம், பிறருடைய நலிவினால் துன்பம் என்று பல துன்பங்கள் நமக்கு உண்டாகின்றன. இவை அல்லாமல் பிறன் வாழ்வதைக் கண்டும் சிலருக்குத் துன்பம் உண்டாகிறது; இதற்குக் காரணம் பொறாமை. வேறு ஒருவன் புகழ் உடையவனாக இருந்தால் நமக்குப் புகழ் கிடைக்கவில்லையே என்று மனம் கலங்குகிறது. இந்த வகை யில் நமக்கு ஏற்படும் துன்பங்களும், கலக்கங்களும் எல்லை காணாதவை. காலன் வருவான் என்ற துன்பம் எல்லோ ருக்கும் நன்றாகத் தெரியும்.

துன்பமும் மாற்றும்

நமக்கு வருமோ வராதோ என்று நினைத்திருக்கிற துன்பங் களுக்கு எல்லாம் மாற்றாகப் பல வலிமையுடைய பொருளைத் தேடிக் கொண்டிருக்கிறோம். வறுமைத் துன்பத்திற்கு மாற்றுப்

பணமும், பணக்காரர்களும்; நோய்த் துன்பத்திற்கு மாற்று மருந்தும் மருத்துவர்களும்; தனிமைத் துன்பத்திற்கு மாற்று உறவினர்களும், நண்பர்களும்; அறியாமைத் துன்பத்திற்கு மாற்றுக் கல்வி; பசித் துன்பத்திற்கு மாற்று உணவு; புலன்களின் பசிக்கு மாற்று, புலன்களால் நுகரப்படும் அநுபவம். இப்படித் துன்பமும் அதனைப் போக்குகின்ற முறிவுமாகப் பலவற்றை உலகத்தில் பார்க்கிறோம்.

தமக்கு ஒரு துன்பம் வருமா, வராதா என்பது தெரியாவிட்டாலும் அதற்குரிய பாதுகாப்பைப் பலர் தேடி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கல்யாணம் பண்ணிக் கொண்டவன் தனக்குப் பிள்ளை பிறக்கும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆனால் பிறந்தால் அவனுக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்று சொத்துச் சேர்த்துக் கொள்கிறான். ஒரு பெண்மணி தனக்குப் பெண் பிறக்கும் என்ற நிச்சய புத்தி இல்லாவிட்டாலும் தானும் போட்டுக் கொண்டு தனக்குப் பிறக்கும் பெண்ணுக்கும் போட வேண்டுமென்று நகைகளைச் சேர்த்துக் கொள்கிறாள். நிச்சயம் இல்லாத ஒன்றை எதிர்பார்த்து முன்கூட்டியே பல காரியங்களைச் செய்யத் தெரிந்து கொண்டிருக்கும் நாம், நிச்சயமாக வரக்கூடிய காலனுடைய துன்பத்திற்கு மாற்றாக என்ன செய்திருக்கிறோம் என்பதை நினைந்து பார்க்க வேண்டும்.

அருணகிரியார் அப்படி நினைந்து பார்த்து அந்தக் காலனையே வெட்டி வீழ்த்துவதற்கு ஒரு வாள் வேண்டும் என்று கருதினார். பௌதிகமான வாளால் பயன் இல்லை என்று தெரிந்து இறைவனுடைய அருளாகிய சக்தி வாளை யாசித்தார். பொருள் அல்லாதவற்றைப் பொருள் என்று எண்ணி அவற்றையே துணையாகத் தேடிக் கலங்கி நிற்கிற நம்மைப் போல இல்லாமல், யார் மெய்யான பொருளோ, எவனுடைய துணை மெய்யான துணையோ அவனையும், அதனையும் அவர் பெற்றார். அவருக்கு மயக்கம் தெளிந்தது. சத்தியமான பொருளை அடைந்து சத்தியமான துணையை அடைவதைக் காட்டிலும் தெளிவு வேறு என்ன இருக்கிறது? அந்தத் தெளிவை இறைவன் தமக்குத் தந்ததாகச் சொல்கிறார்.

''இதற்கு முன்னாலே நான் மயக்கத்தில் வீழ்ந்து இருந்தேன். இப்போது கந்தசுவாமி அந்த மயக்கத்தைப் போக்கி எனக்குச்

சத்திவாள் தந்தான். அந்த வாளை என் கையில் கொண்ட வுடனேயே மயக்கமும், பயமும் போய்விட்டன. காலன் வந்தால் இனிப் பயம் இல்லையென்ற உறுதிப்பாடு எனக்கு வந்துவிட்டது'' என்கிறார்.

முன் கொடுத்த வாள்

இப்படிக் கொடுத்த பெருமான் முன்னாலேயே ஒரு வாளை ஒருவருக்குக் கொடுத்திருக்கிறான். மிகச் சிறந்த ஒருவருக்கு அந்த வாள் பயன்பட்டிருக்கிறது. வேறு யாருக்கும் கொடுக்காத வாள் அது; ஒப்பற்ற ஞான வாள். ஞானவாளாகிய ஓங்காரப் பொருளைத் தன்னுடைய தந்தைக்குக் கொடுத்தவன் முருகப் பெருமான். அந்த வாளைச் சிவபெருமான் வைத்திருக்கிறான். அத்தகைய பெருமான் எனக்கு இப்போது ஒரு வாள் தந்தான் என்று பேசுகின்றார் அருணகிரியார்.

தந்தைக்கு முன்னம் தனிஞான வாள்ஒன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி.

''இது என்ன வேடிக்கையாக இருக்கிறது! தன்னுடைய தகப்பனுக்கு ஞான வாளைத் தந்தான் முருகன் என்றால், அதற்கு முன்பு சிவபெருமானிடத்தில் அஞ்ஞானம் இருந்ததா?'' என்ற கேள்வி வரும். தானம் பண்ணுகிறவர்கள் இல்லாதவனுக்கும் கொடுப்பது உண்டு; இருப்பவனுக்கும் கொடுப்பது உண்டு. சோம வார அமாவாசை என்று அரச மரத்தைப் பிரதட்சிணம் செய்வார்கள். ஆயிரத்தெட்டுப் பிரதட்சிணம் பண்ணுவதற்கு ஒரு கணக்கு வேண்டும் அல்லவா? அதற்கு அவரவர்களுடைய செல்வநிலைக்கு ஏற்றபடி பலபல பொருள்களைப் போடுவார் கள். மிளகு போடுவாரும், திராட்சைப் பழம் போடுவாரும். கண்ணாடியும் குங்குமச்சிமிழும் போடுவாரும் உண்டு. சில பேர் லட்டு போடுவார்கள்; முறுக்கு போடுவார்கள். விலை உயர்ந்த பண்டங்களைச் சிறந்த செல்வர்கள் போடுவார்கள். அப்படிப் போட்ட பொருள்களைப் பிறகு அருகில் உள்ள ஏழைகளுக்கும், குழந்தைகளுக்கும் விநியோகிப்பது வழக்கம். கொடுப்பதற்கு முன் அங்கே யார் மிகப் பெரியவர்களாக இருக்கிறார்களோ அவர் களுக்குக் கொடுப்பார்கள். அவருக்கு அந்தப் பொருள் வேண்டும் என்பது அல்ல. நாம் கொடுக்கும்போது நல்லவருக்குக் கொடுக்க

வேண்டும் என்றே அவரிடம் அந்தப் பண்டத்தைக் கொடுக்கிறார்கள். அந்த மாதிரி முருகப் பெருமான் உலகத்தில் உள்ள ஏழைகளுக்கெல்லாம் தன்னுடைய சத்திவாளை வழங்க முற்பட்டான். முதல் முதலாக ஒரு பெரியவரிடத்தில் கொடுக்க வேண்டும் என்று அந்த ஞான வாளைத் தன்னுடைய தந்தையாகிய சிவபெருமானுக்கே தந்தான். தான் தொடங்கின காரியத்தை நல்ல இடத்திலிருந்து தொடங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அந்தக் காரியத்தை அவன் செய்தான்.

தந்தைக்குத் தந்த வாள்

முருகப்பெருமான் ஞான வாள் கொடுக்கிறவன் என்ற செய்தியை உலகம் அறியவேண்டும் என்றால் அதை எப்படி விளம்பரப்படுத்துவது? ஓரிடத்தில் எல்லோருக்கும் சோறு போடுவதானால் பழைய காலத்தில் அன்னக் கொடி கட்டுவார்கள். ஒவ்வொரு வீடாகச் சென்று. ''நாங்கள் சோறு போடுகிறோம். வாருங்கள், வாருங்கள்'' என்று அழைக்க முடியாது. அன்னக் கொடி கட்டிவிட்டால் அதைப் பார்க்கிறவர்கள் எல்லோரும் இங்கே சாப்பாடு கிடைக்கும் என்று வருவார்கள். வேண்டியவர்கள், வேண்டாதவர்கள், ஏழைகள், செல்வர்கள், பசித்தவர்கள், பசி இல்லாதவர்கள் யாரானாலும் அன்னம் பெறுவார்கள் என்பதற்கு அறிகுறியாக அந்த அன்னக் கொடி இருக்கும். அதுபோலத்தான் முருகன் செய்தான். ஞான வாளை யாருக்குக் கொடுக்கிறது என்று ஆளைத் தேடிக் கொண்டு போகவில்லை. எல்லோரும் நன்றாகத் தெரிந்து கொள்ளும்படியாக ஒரு காரியத்தைச் செய்தான். ஞான வாள் கொடுக்கிற உத்தியோகம் தன்னுடையது என்பதை உலகம் உணரவேண்டும் என்பதற்காக உலகத்திற்கு எல்லாம் தனித் தலைவனாக இருக்கும் தன் தந்தையிடம் முதலில் கொடுத்தான். சிவபெருமான் நிரந்தரமாக இருப்பவன். மற்றவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் மறைந்து விடுவார்கள். ஒருகால் இருப்பார்கள்; மற்றொரு கால் விலாசம் இல்லாமல் போய்விடுவார்கள். அவர்களிடத்தில் கொடுக்கிறதும் மறைந்து போய்விடும். ஆகையால் என்றைக்கும் உள்ளவனும் தனக்கு மிகவும் நெருக்கமான தந்தையும் ஆகிய சிவபெருமானிடத்தில் அதைக் கொடுத்தான்.

அழகான வண்டியைப் பண்ணுகின்ற தச்சன் ஒருவன் இளம் பிராயத்தில் தன் தந்தையிடத்தில் அத்தொழிலைக் கற்றுக் கொண்டான். பலருக்கு வண்டி பண்ணிக் கொடுக்கும் தொழிலை மேற்கொண்டான். முதலில் தன் தந்தைக்கு வண்டி செய்து கொடுத்தான். தன் தந்தையால் வண்டி செய்து கொள்ள முடியாது என்ற எண்ணம் அவனுக்கு இல்லை. எல்லோருக்கும் உபகாரம் செய்யும்போது அந்த உபகாரம் விளங்கவேண்டும என்றும், அதற்கு மதிப்பு உண்டாக வேண்டும் என்றும் தன் தந்தைக்கு முதலில் செய்து கொடுத்தான். அந்த வகையில் முருகப் பெருமான் தன்னுடைய தந்தைக்குத் தனி ஞான வாளைக் கொடுத்தான். அப்படிக் கொடுத்ததனாலேயே முருகப் பெருமானுடைய பெருமையை உலகம் முழுவதும் உணர்ந்து கொண்டது.

ஆற்றலும் கருணையும்

முருகப் பெருமானுடைய பெருமைக்கு அவன் குருநாதனாக இருந்தது ஒரு பெரிய அடையாளம். இறைவனிடத்தில் மற்றவர்களுக்கு இல்லாத பெரிய ஆற்றல் இருக்கிறது. அதோடு வேறு யாருக்கும் இல்லாத கருணையும் இருக்கிறது. அவனுடைய ஆற்றல், படைத்தல் முதலிய காரியங்களுக்கு உதவியாக இருக்கிறது. ஆருயிர்களுக்கு அருள் அநுபவம் கொடுப்பதற்காக அவன் கருணையை வைத்திருக்கிறான். அவனுடைய ஆற்றல் பொதுவானது; அதாவது எல்லா ஆருயிர்களுக்கும் அந்த ஆற்றல் உதவுகிறது. ஆனால் அவனுடைய கருணையோ சிறப்பானது; யார் யார் அதை நாடி வருகிறார்களோ அவர்களுக்கு நலம் செய்வது. இறைவனின் பெருமைகளை எண்ணும்போது நமக்கு வியப்பு உண்டாகிறது. ஆனால் அவனுடைய கருணையை எண்ணும்போது நாமும் அதைப் பெறவேண்டும் என்ற ஆசை உண்டாகிறது. வியப்பு உண்டாகும்போது நாம் சற்று எட்டி நின்று பார்த்துக் கும்பிடுகிறோம். கருணையை நினைந்து நம்பிக்கை உண்டாகும் போது அவனைத் தொட்டு நின்று இன்பம் அடைய வேண்டும் என்று எண்ணுகிறோம். முருகப்பெருமானது பெருமைக்கு அறிகுறி அவன் குமரகுருபரனாக இருந்து தந்தைக்கு முன்னம் தனி ஞான வாள் ஒன்று தந்தது. அவனுடைய கருணையைக் காட்டும் சிறந்த செயல் வள்ளியம் பெருமாட்டியை ஆட்

கொண்டது. ஆகவே குமரகுருபரனாக எண்ணும்போது அவன் மகிமையும், வள்ளி மணாளனாக எண்ணும்போது அவன் கருணையும் நமக்குப் புலனாகின்றன. எவன் எல்லா வல்லமையும் உடையவனோ, யார் எல்லாக் காரியங்களையும் செய்பவனோ அவன் கருணையும் உடையவன் என்று நினைக்கும் போது அவன்பால் வியப்பும் மதிப்பும், அவன் நமக்கும் அருள் செய்வான் என்ற நம்பிக்கையும் இணைந்து நம்முடைய பெரும் பயத்தைப் போக்கத் துணையாக நிற்கின்றன.

சிறியவன் இரக்கம் உடையவனாக இருந்தால் அவனிடத்தில் இருந்து சிறிய உதவியைத்தான் பெறலாம். பணத்தினால் மிகவும் பெரியவனாக இருப்பவன் இரக்கம் இல்லாதவனாக இருந்தால் அவனிடத்திலிருந்து எதுவும் பெறமுடியாது. இரக்கம் இல்லாதவன் மிகப் பெரிய பணக்காரனாக இருந்தாலும், இரக்கம் உள்ளவன் மிகச் சிறியவனாக இருந்தாலும் பயன் இல்லை.

> "அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும்
> செல்வச் செவிலியால் உண்டு"

என்று வள்ளுவர் கூறுவார். இரக்கம் என்பது அன்பிலிருந்து விளைவது. அந்த இரக்கம் நன்றாகப் பயன்பட வேண்டுமானால் பொருள் என்ற செவிலி இருக்கவேண்டுமாம். எத்தனையோ நல்லவர்களுக்கு இரக்கம் இருக்கிறது. ஆனால் பிறருக்கு உதவி செய்கின்ற தகுதி அவர்களுக்கு இருப்பது இல்லை. ஏழைகளை எல்லாம் காப்பாற்ற வேண்டும் என்று ஒரு நல்லவர் நினைக்கிறார். அத்தனை பேருக்கும் கொடுக்கப் பணம் அவரிடம் இருப்பது இல்லை. பெரிய பணக்காரர்களுக்குப் பணத்தை மேலும் மேலும் சேர்க்கவேண்டும் என்ற ஆசை இருக்கிறதேயொழியப் பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்ற இரக்கம் இருப்பது இல்லை. வேறு யாருக்கும் இல்லாத செல்வமும், பிறருக்கு உதவி செய்யவேண்டும் என்ற இரக்கமும் ஒரே இடத்தில் இருந்தால் அவரால் உலகம் எல்லாம் இன்பத்தை அடையும். அத்தகையவன்தான் முருகன். அவன் தன் தந்தைக்கே ஞான வாளைச் சாதித்தான். அருணகிரிநாதர் முருகனுடைய பெருமையை நினைக்கும்போது அவன் குருநாதனாக இருந்தான் என்பதைத்தான் நினைப்பார். பதினாறாயிரம் திருப்புகழ் பாடிய அவர் முதல் திருப்புகழின் ஆரம்பத்தில் அதனை நினைக்கிறார்

''முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர – எனவோதும்
முக்கட்பர மர்க்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்து.''

தனி ஞான வாள்

இப்போது பார்க்கும் பாடலில் அந்தப் பெருமையை அலங் காரமாகச் சொல்கிறார். சிவனுக்குப் பிரணவ உபதேசம் செய்தான் என்று சொல்லிவிடலாம். தந்தைக்குத் தனி (ஒப்பற்ற) ஞானவாள் கொடுத்தான் என்று சொல்கிறார். இங்கே வாள் என்பது உருவகம். நாம் காணுகின்ற இரும்பு வாள் தசையைச் சேதிப்பது; உடம்பை வெட்டுவது. ஞான வாளோ உடம்பு சம்பந்தமான நினைவு அல்லது சரீர அபிமானத்தை வெட்டுவது. இந்தச் சரீரத்தையே பிரதானம் என்று நினைத்துச் சரீரத்தில் உள்ள இந்திரியங்களுக்கு இன்பம் ஊட்டுகிறவர்களே காலனைக் கண்டு பயப்படுகிறார்கள். தேகத்தைச் சதம் என்று நினைப்பவர்கள் மரணத்திற்கு அஞ்சு கிறார்கள். சரீரத்தை வெட்டுவது வாள். சரீர அபிமானத்தை வெட்டுவது ஞான வாள். சரீர அபிமானமும், காலனைப் பற்றிய பயமும் ஒன்றினோடு ஒன்று இணைந்தவை. ஆகவே சரீர அபி மானத்தை வெட்டுவது என்பதும், காலனை வெட்டுவது என்பதும் ஒன்றுதான். முருகப் பெருமான் திருவருளினால் சரீர அபி மானத்தைப் போக்கிவிடலாம். உடம்பினின்றும் உயிரைக் கூறு படுத்துவதனால் காலனுக்குக் கூற்றுவன் என்று பெயர் உண்டா யிற்று. இறைவனுடைய அருளைப் பெறாதவர்கள் கூற்றுவனுடைய சூலத்தால் குத்தப்படுவார்கள். அந்தக் காலனை வெல்வதற்கு ஞானம் பயன்படும். ஞானத்தை வாள் என்று சொல்வது ஒரு மரபு.

''ஞான வாள் ஏந்தும் ஐயர்
நாதப் பறைஅறைமின்''

என்பார் மணிவாசகர். 'முருகப் பெருமான் தன்னுடைய தந்தைக்கு ஒப்பற்ற ஞான வாளைத் தந்தான்; அது மிகச் சிறந்தது. எனக்குச் சக்தி வாளைத் தந்தான். சத்தி வாள் எனக்கு ஆயிற்று. ''குருவிக்கு ஏற்ற இராமேசுவரம்'' என்பது போல எனக்கேற்ற சக்தி வாளைத் தந்தான்' என்று அருணகிரியார் சொல்கிறார்.

வாள் என்பது கூர்மையானது. வாள் என்ற சொல்லுக்கு ஒளி என்றும் பொருள் உண்டு. அஞ்ஞானம் என்ற இருட்டைப் போக்குகின்ற ஞானமாகிய ஒளியைக் கொடுத்தான். வாளுக்கும் கூர்மை உண்டு. அறிவுக்கும் கூர்மை உண்டு. கல்வி, கேள்வி, அநுபவம் என்ற மூன்றினாலும் ஞானம் உண்டாகிறது. அநுபவ ஞானம் மிகச் சிறந்தது. அதை அபரோக்ஷ ஞானம் என்றும், பர ஞானம் என்றும் சொல்வார்கள். இந்த ஞானத்தை ஆண்டவன் நமக்கு வாளாகக் கொடுக்கிறான். அதனால் அறியாமையாகிய இருளைப் போக்கி, சரீர அபிமானத்தைச் சேதித்து, அறியாமையின் விளைவாக வருகின்ற மரணத்தையும் மாய்த்து விடலாம்.

சக்தி வாள்

'இறைவன் சக்தி வாள் தந்தான். அதனுடைய உதவியால் காலன் வந்தால் துணித்துவிடுவேன்' என்று பேசுகின்றார் அருணகிரியார். அவனுடைய அருளே சக்தி வாள். சக்தி என்பது அருள் தான். இறைவனிடம் அமைந்திருக்கும் ஆற்றல் அருள். அவன் அருளே யம பயத்தைப் போக்கும் சக்தி வாளாக உதவும். அந்த வாளை ஓச்சுவதற்கு நாம் முயலவேண்டும். படுக்கையில் படுத்துக் கொண்டு தூங்குகிறோம் என்றாலும் படுக்கையே தூக்கத்தைத் தருகிறது என்று சொல்ல முடியாது. தூங்குகின்ற சக்தி உடையவனுக்குப் படுக்கை தூக்கத்தை உண்டாக்கும் கருவியாக இருக்கலாம். இதை எண்ணாமல் படுக்கைதான் தூக்கத்தை உண்டாக்குகிறது என்று எண்ணி மனத்தில் கவலைகளை வைத்துக் கொண்டு படுத்தால், எத்தனை உருண்டு புரண்டாலும் தூக்கம் வராது. நம்முடைய மனநிலை தூக்கம் வருவதற்கு ஏற்றதாக இருந்தால் தான் படுக்கையும் சாதனமாக இருந்து தூங்குவதற்கு இடம் கொடுக்கும்.

'எம்பெருமான் எனக்குச் சக்தி வாள் தந்தான். அதனால் இனி மரண பயத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்' என்ற தைரியத்தோடு முனிவர் பேசுகின்றார். இந்த வாள் ஆண்டவனுடைய கையில் இருக்கிறது. நமக்கும் உதவுவான், ஆனால் அதைப் பெறுவதற்குரிய பக்குவத்தைப் பெற்று அப்பால் அவனுடைய திருவருளால் அது கிடைக்கப் பெற்றால்தான் நாமும் கால ஜயம் பண்ணுகின்ற நிலைக்கு வருவோம்.

கந்தசுவாமி நம்மைத் தேற்றுவதற்கு அவனிடத்தில் போய் அழ வேண்டும். வாசலிலே விளையாடச் சென்ற குழந்தை துன்ப முற்று அழுதுகொண்டே தாயிடத்தில் வந்தால் தாய் அந்தக் குழந்தையை அணைத்து முதலில் தேற்றிப் பின்பு அதற்கு வேண்டிய உணவைத் தருகிறாள். உலகத்தில் நாம் படுகிற துன்பங்களுக்கு அஞ்சி முருகப் பெருமானிடத்தில் போய் அழுது நின்றால் அவன் நம்மைத் தேற்றுவான்; சக்தி வாளைத் தருவான். வழியில் போகிற பெண்மணி தெருவில் நிற்கும் குழந்தைக்குத் தேறுதலோ நன்மையோ செய்யமாட்டாள். யாரிடத்திலிருந்து தேறுதல் வரும் என்பதைக் குழந்தை தெரிந்து கொள்ள வேண்டும். அநாதைக் குழந்தைக்கு ஊரெல்லாம் தாய்தான். ஒருத்தியும் தாய் அல்ல என்று சொல்கிற நிலையும் உண்டாகும். யார் தனக்கு அருள் செய்வாள் என்பதைத் தேடிக் கண்டுபிடிப்பது அதற்கு ஒரு பெரிய வேலையாக இருக்கும். முருகப் பெரு மானைக் கண்டுபிடித்து அவன்தான் நம்மைத் தேற்றுவதற்கு உரியவன் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படித் தெரிந்துகொள்ள அவனிடம் அடையாளம் இருக்கிறது. அவன் தந்தைக்கு ஞானவாளைச் சாதித்தவன்.

தந்தைக்கு முன்னம் தனிஞான வாள்
ஒன்று சாதித்தருள் கந்தச்சுவாமி

சாதித்தல் என்றால் கொடுத்தல் என்று இங்கே பொருள். வைஷ்ணவ சம்பிரதாயத்தில் பரிமாறுவதைச் சாதித்தல் என்று சொல்வார்கள். கந்த சுவாமி என்று சொல்லுக்கு முன்னே பொருள் சொல்லி யிருக்கிறேன். ஆறு திருவுருவங்களையும் ஒன்று சேர்த்துக் கந்தன் என்ற பெயரை அம்பிகை கொடுத்தாள் என்று நூல்கள் கூறு கின்றன. பிரித்து வைத்திருக்கிறவற்றையெல்லாம் ஒட்ட வைக் கின்றவன் ஆண்டவன். தளர்ந்து போனதற்கு முறுக்கு ஏற்றி, சிதைந்து போனதை ஒன்றுபடுத்தி வலிமை உடையதாகச் செய் கின்றவன் ஆண்டவன். ஆறு கூறாக இருந்த குழந்தைகளை எல்லாம் ஒன்றாக உமாதேவி செய்ய, முருகு ஏறிய திரு வுருவத்தை ஏற்று எம்பெருமான் அருள் செய்கின்றான்.

பிரித்துப் பிரித்துப் பார்க்கின்ற தன்மையினால் உடலினின்றும் உயிரைப் பிரிக்கிற கூற்றுவனின் பாசத்திற்கு ஆளாகிறோம். பிரிப்பதை மாற்றி ஒன்றுபடுத்தி அருள் செய்கின்ற கந்த சுவாமி

யின் திருவருளால் பிரிக்கும் சக்தியினின்றும் பிரிந்து, ஒன்றும் சக்தியோடு ஒன்றுபடலாம். இதற்குக் காரணமாக இருப்பது இறைவனுடைய சக்தி வாள். ''சக்தி வாள் என்னுடைய கையில் வந்த பிறகு காலன் என்னைக் கண்டாலே வெம்புவான்.'' வெம்புவதாவது கோபம் கொள்ளுதல். ''என்னுடைய மிடுக்கையும், துடிப்பையும் கண்டு, இந்தப் பயல் மாத்திரம் நம்மிடம் அச்சம் இல்லாமல் இருக்கிறானே என்று கோபித்துக் கொள்வான். அவன் கோபம் இல்லாமல் சும்மா வந்தாலேயே குலை நடுங்கும். கோபத்தோடு வந்துவிட்டால் எப்படி இருக்கும்! அவன் வந்தாலும் நான் பயப்படமாட்டேன்'' என்று துணிவாகச் சொல்கிறார்.

காலன்வெம்பி
வந்து இப்பொழுது என்னை என்செய்யலாம்?

வெம்பும் காலன்

முன்னாலேயே மார்க்கண்டேயன் ஆண்டவனை நம்பிப் போன போது நம் பாசத்திற்கு அகப்படாமல் போகிறானே என்று காலன் வெம்பினான்; கோபம் கொண்டான்; இறைவனிடத்தில் உதைப்பட்டான். அவனுக்கு இன்னும் புத்தி வரவில்லை. 'அந்த யமன் இப்போது வந்தால் அவன் சூலத்தை நானே வெட்டுவேன்' என்று அருணகிரிநாதர் சொல்கிறார்.

மார்க்கண்டேயனைத் தொடர்ந்த காலன் மார்க்கண்டேயனால் உதைபடவில்லை. அவன் யாரை நாடிச் சேர்ந்தானோ அந்தப் பெருமான் காலனை உதைத்தான். ''முன் முளைத்த காதைவிடப் பின் முளைத்த கொம்புக்கு வலிவு அதிகம்'' என்று சொல்வார்கள். அப்படி அருணகிரியார் பேசுகிறார். ''என்னிடத்தில் யமன் வந்தால் நான் பரமேசுவரனுக்காகக் காத்துக் கொண்டிருக்கமாட்டேன். அவனுக்கு ஞான வாள் தந்த கந்த சுவாமியைக் கூப்பிட மாட்டேன். முளையை வெட்டுவதற்குக் கோடரி எதற்கு? எம்பெருமான் என் கையில் தந்திருக்கிற சக்திவாள் ஒன்றே போதும்; காலனை ஓட்டுவேன்'' என்று அருணகிரியார் கூறுகிறார்.

சக்தி வாள் ஒன்றினால்
சிந்தத் துணிப்பன் தணிப்பரும் கோப த்ரிசூலத்தையே.

'காலன் என்னிடத்தில் வரமாட்டான். ஒருகால் வந்து விட்டால் என் கையில் உள்ள சக்திவாள் ஒன்றினாலேயே, என்னைக் குத்திக் கொல்ல வருகின்ற அவனுடைய திரிசூல மாகிய படையை அடியோடு அழித்துத் தள்ளுவேன்' என்று வீறு பேசுகின்றார்.

காலன் என்ற தத்துவத்தை நாம் அடியோடு மாற்ற முடியாது. அவனுக்கும் நமக்கும் உள்ள தொடர்பாகிய சூலத்தை நம் அளவில் உடைத்து விடலாம்.

யமன் இன்னார் என்று தமக்கு நன்றாகத் தெரியும் என்பதை உணர்த்த அவனை அடையாளத்தோடு குறிக்கிறார். 'வேறு யாராலும் தணிக்க முடியாத கோபத்தைப் பெற்ற மூன்று தலை உடைய சூலத்தை நான் வெட்டுவேன்' என்று சொல்கிறார். யமனுடைய கோபத்தைத் திரிசூலத்தின் மேல் ஏற்றிச் சொன்னார். அவனுடைய கோபத்தை யாராலும் தணிக்க முடியாது. இறைவன் திருவருள் இருந்தால் அந்தக் கோபத்திற்கு நாம் அஞ்ச வேண்டியதில்லை.

சித்திரம்

அருணகிரியார் தம்முடைய மனத்திற்குள் ஒரு சித்திரத்தை அமைக்கிறார். காலன் எல்லா உயிர்களிடத்திலும் செல்வது போல அருணகிரிநாதரிடத்தில் வருகிறான். மற்றவர்கள் மரணா வஸ்தைப்படுகிறார்கள். காலன் வருவானே வருவானே என்று பயந்து, வரும்போது அவன் வெட்டுவானே என்று நடுங்குகிறார் கள். அருணகிரிநாதரோ சிறிதும் அச்சம் இல்லாமல் நிமிர்ந்து நிற்கிறார்; நடுங்கவில்லை. அதனைக் கண்டு வெதும்பவும் இல்லை. இதைக் காலன் பார்க்கிறான். 'இந்த மனிதன் புதுவிதமாக இருக் கிறானே; நம்மைக் கண்டு நடுங்கவில்லையே!' என்று நினைக் கிறபோது அவனுக்குக் கோபம் உண்டாகிறது; வெம்புகிறான். கோபத்தினாலே உடம்பு நடுங்கும் அல்லவா? இப்போது நடுக்கம் அருணகிரிநாதரிடத்தில் இல்லை. யமனிடத்தில் இருக் கிறது. கலங்குகின்ற மனிதர்கள் காலனைக் கண்டால் நடுங்கு வார்கள். அருணகிரிநாதரிடத்தில் கலக்கம் இல்லை. அந்தக் கலக்கம் இப்போது யமனிடம் ஏறிவிட்டது. 'எல்லோரும் நடுங்கும் நம்மிடத்தில் இவன் நடுங்காமல் இருக்கிறானே!' என்று அவன் கலங்குகிறான். அவனுடைய உடம்பு கோபத்தால் துடிக்கிறது.

மீசை படபடக்கிறது. அவனுடைய திரிசூலம் நடுங்குகிறது. அவனுக்கு எதிரே முருகப் பெருமான் தந்த சக்திவாளை, அருளாகிய வாளைக் கையில் வைத்திருக்கிறார் அருணகிரியார்.

இப்படி ஒரு விதமாக மனத்தில் பாவனை செய்து கொண்டு இந்தப் பாடலை அருணகிரிநாதர் பாடியிருக்க வேண்டும். அத் தகைய பாவனையை அவர் மாத்திரமா செய்தார்? நாமும் செய்யும் படியாக இந்தப் பாட்டைக் கொடுத்திருக்கிறார்.

தந்தைக்கு முன்னும் தனிஞான
வாள் ஒன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி எனைத்தேற்
றியபின்னர்க் காலன்வெம்பி
வந்துஇப் பொழுதுஎன்னை என்செய்ய
லாம்?சத்தி வாள்ஒன்றினால்
சிந்தத் துணிப்பன் தணிப்பரும்
கோபத்ரி சூலத்தையே.

(தன்னுடைய தந்தையாகிய பரமசிவனுக்கு ஒப்பற்ற ஞானமாகிய வாள் ஒன்றைத் தந்தருளிய கந்தப் பெருமான் அடியேனுடைய கலக்கம் யாவும் தீர்த்துத் தெளிவித்த பிறகு, காலன் சினம் கொண்டு இப்பொழுது வந்து என்ன செய்ய முடியும்? அப்படி அவன் வந்தால் முருகன் எனக்குத் தந்தருளிய சக்திவாள் ஒன்றினால் யாராலும் தடுப்பதற்கரிய கோபத்தை யுடைய அவனது முத்தலைச் சூலப்படையைக் கீழே விழும்படியாக வெட்டிவிடுவேன்.

தனி ஞானவாள் - வேறு யாருக்கும் கொடுக்காத ஒப்பற்ற ஞான மாகிய வாள். சாதித்தருள் - வழங்கியருளிய. வெம்பி - சினம் மூண்டு. சக்தி வாள் - அருளாற்றலாகிய வாள். துணிப்பன் - வெட்டுவேன். தணிப்ப அரும் - தணியச் செய்வதற்கு அரிய.)

'முருகன் தந்தைக்கே சிறப்பான வாள் ஒன்றைத் தந்தான்; துமுதல் பலருக்கு வாளைத் தரும் வழக்கம் அவனுக்கு உண் ாயிற்று. எனக்குச் சக்தியாகிய வாள் தந்தருளினான். அது ாலனுடைய படையாகிய முத்தலைச் சூலத்தையே அழிக்கும் ற்றலுடையது' என்றார்.

முருகன் திருவருள் இருந்தால் மரணத்துக்கும் அஞ்ச வண்டாம் என்பது கருத்து.

இது கந்தர் அலங்காரத்தில் 69-ஆம் பாடல்.

விழிக்குத் துணை

முன்னுரை

அருணகிரிநாதப் பெருமானுடைய நூல்களில் ஊற ஊற அவருடைய பெருமை மிகுதியாகத் தெரிகிறது. அவருடைய பாடல்களின் சிறப்பைப் புலவர் பெருமக்கள் அதிகமாக உணர்வதில்லை. முன் ஒரு காலத்தில் அவற்றைப் பரதேசிப் பாடல்களோடும் துக்கடாக்களோடும் சேர்த்துப் பாடி வந்தார்கள்.

நாள் ஆக ஆகப் பஞ்சாமிர்தத்துக்குச் சுவை மிகுதியாகும். அது போல், அருணகிரிநாதருடைய திருவாக்கு இப்போது அதிகச் சுவை தருவதாகப் பல அன்பர்கள் உணர்ந்து வருகிறார்கள். வள்ளிமலை சுவாமிகளும், திருப்புகழ்ச் சாமி ஐயர் முதலிய பெரு மக்களும் திருப்புகழைப் பரப்பப் பாடுபட்டார்கள். அவர்கள் விதைத்த விதை முளைத்துப் படர்ந்து இன்று மலர்ந்து மணக்கிறது.

அருணகிரியாரைப் பழங்காலப் பெருமக்கள் பாராட்டவில்லை என்று எண்ணக்கூடாது. அந்தகக் கவி வீரராகவ முதலியார், வரகவி மார்க்க சகாயதேவர், திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள், தாயுமான சுவாமிகள், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர், சிதம்பர முனிவர், கந்தப்ப தேசிகர், தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் ஆகியவர்கள் அப்பெருமானுடைய திருப் பாடல்களில் ஈடுபட்டு அவரைப் பாராட்டியிருக்கிறார்கள். இருந்தும் புலவர்கள் திருப்புகழில் பழங்காலத்தில் மிகுதியாக ஈடுபாடு உடையவர்களாக இருக்கவில்லை.

திருப்புகழில் சந்தத்தை நோக்கிச் சில இலக்கண விதிகளைக் கடந்து சொற்களையும் சொற்றொடர்களையும் அமைத்திருக்கிறார். அவற்றைக் கண்டு, இலக்கணப் புலவர்கள் அவரை மதிக்க வேண்டிய முறையில் வைத்து மதிக்கவில்லை. இந்தச் செய்தியை என்னுடைய ஆசிரியப் பிரானாகிய ஸ்ரீ ஐயரவர்களே தெரிவித் திருக்கிறார்கள். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புவதே மரபு; அருணகிரியார் பாடிய அற்புதமான சந்தப்பாக்களில் வரும் தொடர்களும் அமைப்புகளும் இதுகாறும் வழங்கும் இலக்கணத்

துக்குப் புறம்பாகத் தோன்றின் அவற்றை அமைத்துக் கொள்ள வழி தேடவேண்டும். இலக்கண நூல்களில் இவற்றையெல்லாம் அமைத்துக்கொள்ள வழிதுறைகள் உண்டு.

அருணகிரியார் வாக்கில் உயிராக நிற்பது அவருடைய இறையருள் அநுபவம். அதனை உணரும்போதுதான் அவருடைய ஈடில்லாப் பெருமை புலனாகிறது. அவருடைய மிடுக்குகள் சந்தப் புலமையும், விரிவான வருணனைச் சிறப்பும், முருகனைப் பாடி மகிழும் பக்தி உயரமும் பலகாலும் அறிந்து இன்புறுதற் குரியனவே எனினும், அவர் தம்முடைய அநுபூதியை வெளியிடும் இடங்கள் மிகமிக நுட்பமானவை; அரியவை.

கந்தர் அலங்கார விரிவுரையில் பல இடங்களில் இந்த உண்மையை உணரும் வாய்ப்புக் கிடைத்தது. முருகனுடைய பெருங்கருணையை அறிவுறுத்தும் பாடல்களும், அநுபவக் குறிப்பையுடைய பாடல்களும் அப்பெருமான்பால் மேலும் மேலும் பக்தி செய்து அவனருளைப் பெற வேண்டும் என்று ஆவலை உண்டாக்குகின்றன.

இந்த விரிவுரைகளில் ஒரு முக்கியமான கருத்தை வற்புறுத்த வேண்டும் என்பது அடியேனுடைய விருப்பம். அருளாளராகிய அருணகிரிநாதருடைய திருப்பாடல்களைப பலகாலும் படித்து இன்புறுவதும் பொருள் தெரிந்து உளங்கனிவதும் அவசியமான காரியங்களே. அவற்றிற்கு அப்பால், நாம் நம் வாழ்க்கையில் இத்துறையில் சிறிய அளவாவது அநுபவத்தைப் பெற வேண்டும் என்ற கிளர்ச்சி எழவேண்டும். எல்லோரையும் போலப் பொழுதைக் கழிப்பதும், உண்பது உறங்குவது தொழில் புரிவது `பான்ற வேலைகளில் யந்திரம் போல ஈடுபடுவதும் ஆன்ம ிளக்கத்தைத் தருவதில்லை. கடவுளைத் தொழுவதும் பாரா யணம் பண்ணுவதும் வெறும் சடங்குகளாக, சம்பிரதாயங்களாக இருந்தால் மேலே சொன்ன செயல்களோடு சேர்க்கும்படி ஆகிவிடும். சட்டையை அழுக்கின்றி வைப்பது வேறு; உடம்பை அழுக்கின்றி வைப்பது வேறு உள்ளத்தைக் கிளுகிளுக்கச் செய்வது வேறு; உயிரினூடே அநுபவம் உறைப்பது வேறு. நாம் உடம்புக்கும் உள்ளத்துக்கும் வேண்டியவற்றையே செய்து

கொண்டிருக்கிறோம். உயிருக்காக ஏதும் செய்வதில்லை. இந்த உடம்பிலிருந்து வாழும்பொழுதே உயிர் விளக்கத்துக்குரிய செயல்களைச் செய்யலாம் என்பதை அருணகிரியாரும் பிறரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆதலின் அந்தத் துறையில், இறைவனுடைய அருளின்பம் பெறுந்துறையில், புகுந்து குள்ளக் குளிர ஆழும் பேறு கிட்டாவிட்டாலும், இன்றைக்கே அந்தத் திசையில் ஓர் அடியாவது எடுத்து வைக்க வேண்டும். நாளைக்கு என்று தள்ளிப் போடுகின்றதன்று இது.

பணம் ஈட்டினவர்கள் தம்முடைய வரலாற்றைச் சொல்லும் போது, நாமும் முயன்று பொருள் ஈட்ட வேண்டுமென்ற ஆர்வம் பிறக்கிறது. முயற்சி செய்து பொருள் சேமிக்கிறோம். பிறர் வீடு கட்டுவதைப் பார்த்து நாமும் ஒரு சிறு வீடாவது கட்டிக் கொள்ள வேண்டுமென்று எண்ணி, சிக்கனமாக வாழ்ந்து அந்த விருப் பத்தை நிறைவேற்றிக் கொள்கிறோம். நாம் பெரிய செல்வராக இல்லாவிட்டாலும் சில விஷயங்களிலாவது செல்வரைப் போல வாழ ஆசைப்படுகிறோம். உயர்ந்த விலையுள்ள பேனா அல்லது கடிகாரமாவது வாங்கி வைத்துக் கொள்கிறோம். அந்த மட்டிலாவது பணக்காரனுக்குச் சமமாக இருக்கிறோம் என்ற திருப்தி உண்டாகிறது.

ஆனால் அருட்செல்வர்கள் இறைவனை வழிபட்டு அவன ருளால் இந்த உலகிலேயே ஒருவகை இன்ப நிலையை அடைந்தார்கள் என்பதை அறிந்தும், அவர்கள் சென்ற நெறியில் செல்ல வேண்டும் என்ற விருப்பம் உண்டாவதில்லை. மற்றக் காரியங்களுக்குத் தடை இல்லாமல் கோயிலுக்குப் போகவும் பாராயணம் செய்யவும் ஆயத்தமாக இருக்கிறோம். அருளாளர்கள் ஒருவர் அல்ல, இருவர் அல்ல, நூற்றுக்கணக்கான பேர்கள் அநு பூதிமான்களாக வாழ்ந்த நாடு இது. பழங்காலத்தில் இருந்தவர்கள் மட்டும்அன்று; இக்காலத்தும் ராமகிருஷ்ணர் ரமணர் போன்ற ஞானிகள் சிறந்த அநுபூதி பெற்று விளங்கினார்கள். எல்லாச் சமயத்திலும் அருளநுபவம் பெற்றவர்கள் உண்டு. அவர்களைப் பற்றித் தெரிந்து கொண்டு, அவர்களையும் தெய்வம்போல வைத்துத் தொழ முன் வருகிறோம். அவர்களுக்கும் நமக்கும் உள்ள தூரம் என்றும் மாறாமல், நாம் நின்ற நிலையிலே

நிற்கிறோம். நாம் அவர்கள் சென்ற நெறியிற் செல்லவோ, அவர்களைப் போல் ஆகவோ எண்ணுவதில்லை. இறைவன் அருளநுபவம் என்பது ஏதோ சிலருக்குத்தான் உரியது, நமக்கு அது வேண்டியதில்லை என்பது போன்ற எண்ணமே நம் உள்ளத்தில் நிலவுகிறது.

கம்பங்களின் மீது ஏறி அற்புதமான வித்தைகளைக் காட்டுகிறான் ஒருவன். அவனைப் பாராட்டிப் பரிசளிக்கிறோம். நல்ல இசைக் கச்சேரி செய்கிறார் ஒரு வித்துவான். அதைக் கேட்டு மகிழ்ந்து பாராட்டுகிறோம். சிறந்த புலவனைக் கண்டு அவனுடைய கவிதையாற்றலை வியந்து போற்றுகிறோம். நாமும் அவர்களைப் போல் ஆக வேண்டும் என்ற நினைப்போ முயற்சியோ நம்மிடம் எழுவதில்லை. அவ்வண்ணமே அருளநுபவம் பெற்ற பெரியவர்களைப் பற்றித் தெரிந்து கொண்டு அவர்களை மதிக்கவும், போற்றவும் வியக்கவும் சித்தமாக இருக்கிறோமேயன்றி, நாமும் அப்படி ஆக வேண்டும் என்ற விருப்பம் எழுவதில்லை. அத்தகைய விருப்பம் நமக்கு எழ வேண்டியது அவசியம். பெரு மக்களுடைய திருவாக்குகளைப் படிப்பதற்கு இது மிகவும் முக்கியமான பயன்.

நாமும் அவர்கள் பெற்ற நிலையை அடையலாம் என்ற நம்பிக்கையையும், முருகன் பரம கருணை உடையவனாதலால் நம்மையும் ஏற்றுக் கொள்ளுவான் என்ற உறுதியான எண்ணத்தையும் நாம் பெறவேண்டும். அருணகிரிநாத சுவாமிகளுடைய திருவாக்கில் அழுந்தினால் அத்தகைய எண்ணங்கள் நிச்சயமாக ண்டாகும். நாமும் அவர்கள் போன நெறியில் போகவேண்டும் ன்ற ஆசை உண்டாக இவ்விரிவுரைகள் பயன்பட வேண்டும் ன்பது என் நோக்கம். கரும்பைப் பற்றிய விரிவான சொற்பொழிவைக் கேட்டவன் தானும் கரும்பைப் பற்றி ஒரு சொற்பொழிவு ஆற்றவோ, கட்டுரை எழுதவோ புகுந்தால் முதலில் கேட்ட சொற்பொழிவு பெரிய பயன் தந்தது என்று சொல்ல இயலாது. கரும்பைத் தேடி அதன் சுவையை நுகர வேண்டும் என்று ஆவலை உண்டாக்கினால் சொற்பொழிவு பயனுடையதாயிற்று என்று கொள்ளலாம். அதுபோலவே அருணகிரியார் பெருமையையும், முருகனுடைய சிறப்பையும் உணர்ந்த அளவில்

நின்றுவிட்டால் இந்த விரிவுரைகளால் பயன் உண்டாயிற்றென்று கருத இடமில்லை. சிலரேனும் அருளநுபவத் துறையில் புகுந்தால், பெரும்பயன் உண்டாயிற்றென்ற மனநிறைவு உண்டாகும். என்னுடைய ஆற்றல் வீணாகிவிடுமே என்ற எண்ணத்தால் இப்படி எழுதுவதாக அன்பர்கள் நினைக்கக் கூடாது. கற்பக தருவைப் போன்ற அருணகிரிநாதர் இவ்வளவு நெருங்கி வந்து சொல்வதைக் கேட்டுப் பயன்பெறாமல் இருக்கலாமா என்ற எண்ணமே இப்படி எழுதுவதற்குக் காரணம்.

"நாம் என்ன அடைந்தோம்?" என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு, "ஒன்றும் அடையவில்லையே" என்ற ஏக்கம் அழுத்தமாக உள்ளத்தில் எழ, அதன் பிறகு "வழி என்ன?" என்று நாடப் புகுந்தால் பயன் கிடைக்காமலா போகும்? முருகன் கருணையும் அருணகிரியார் அரிய உபதேசமும் இருக்கும்போது அவ நம்பிக்கைக்கு இடமே இல்லை. "நம்பினார் கெடுவதில்லை – நான்கு மறைத் தீர்ப்பு."

★ ★ ★

கந்தர் அலங்கார விரிவுரை மாலையிலே 14-ஆவது மலராகிய இதில் ஐந்து பாடல்களின் விளக்கங்கள் உள்ளன. நமக்கு என்றும் துணையாக முருகன் இருப்பான் என்பதைச் சொல்வது, "விழிக்குத் துணை" என்னும் பாடல். அந்த பாட்டை எத்தனை முறை ஓதினாலும் தகும். அச்சத்தைப் போக்கப் பாராயணம் செய்வதற்குரிய அருமைப் பாட்டு அது.

ஹடயோகத்தை எல்லாப் பெரியவர்களும் கண்டித்திருக் கிறார்கள். அருணகிரியாரும் "துருத்தி யெனும்படி" என்ற பாட்டில், திணறித் திண்டாடும் யோகிகளைப் பார்த்து இரங்குகிறார். சிவயோகம் இன்னதென்று அறிந்து பயிலுங்கள் என்று உபதேசிக்கிறார். இந்தப் பாட்டில் சிவயோகம் என்பது இன்னது என்று விளக்காவிட்டாலும் திருப்புகழில் வரும் பாடல் ஒன்றைக் கொண்டு அவருடைய கருத்தை ஒருவாறு புலப் படுத்தியிருக்கிறேன்.

எக்காலத்தும் மறவாமல் முருகனை நினைக்க வேண்டும் என்பதை வற்புறுத்துவது, "சேந்தனை" என்ற பாட்டு. ஒரு

தாழ்வும் இல்லாமல் வாழ வழி வகுக்கும் அந்தப் பாட்டிலே முருகனுடைய பெருமைகள் பல வருகின்றன.

அடுத்தது அருணை முனிவரின் அநுபவப் பாட்டு; நம்மை ஈர்த்து மயக்கும் பாட்டு. சொல்லொணாத ஆனந்தத்தின் இயல்பை எதிர்மறை வாய்ப்பாட்டால் சுற்றிக் காட்டுகிறார். தாம் அந்த அருளநுபவத்தால் தாக்கப் பெற்றதையும் மனம் நின்றதையும் தாம் அந்த அநுபவ மயமானதையும் சொல்லி, ''அறு முகவா சொல்லொணாதிந்த ஆனந்தமே'' என்று முடிக்கிறார். இத்தகைய அநுபவத்தை நாம் பெற முடியா விட்டாலும் இன்னும் சில பிறவிகளிலாவது பெற வேண்டாமா? அதைப் பெறும் வழியிலே போயாவது நிற்கலாமே!

அடுத்த பாட்டில் நமக்கு ஏற்ற வழியைச் சொல்கிறார். அவனருள் வேண்டும்; அதனால் அன்பு அவிழ்ந்து மலர வேண்டும்; அதனால் அவனடி தொழ வேண்டும்; அதனால் இந்திரியங்களின் குறும்பற்று உண்முக நாட்டம் உண்டாக வேண்டும்; அதனால் மனம் பதைப்பற வேண்டும். இவ்வாறு படிப்படியாகச் சாதனங்களை உபதேசிக்கிறார் அருணகிரி யாராகிய பரம குருநாதர். இராப் பகல் அற்ற இடத்தே இருந்து சொல் லொணாத ஆனந்தத்தைத் துய்க்கும் வழி அறிந்த அப் பெருமானுடைய திருவாக்கிலே ஆழ்ந்து அமிழ்ந்து கரைந்து, ''நமக்கும் அந்த நிலை வராதா?'' என்று ஏங்க வேண்டும். அந்த ஏக்கமே நம் முயற்சிக்குத் தூண்டுகோலாக உதவும்.

இந்த ஐந்து பாடல்களில் செங்கோட்டு வேலன் இரண்டு பாடல்களில் காட்சி தருகிறான். முருகன், செங்கோடன், முகம் ஆறுடைக் குருநாதன், சேந்தன், கந்தன், செங்கோட்டு வெற்பன், செஞ்சுடர் வேல் வேந்தன், செந்தமிழ் நூல் விரித்தோன், வள்ளி காந்தன், கந்தக் கடம்பன், கார்மயில் வாகனன் 'அறுமுகவன், அராப்புனை வேணியன் சேய் என்ற அவன் திருநாமங்களை அருணை முனிவர் நினைப்பூட்டுகிறார். அவனுடைய பாதங் களையும் பன்னிரு தோள்களையும், முகம் ஆறினையும் தரிசிக்கச் செய்கிறார். அவனுடைய வடிவேலையும், மயூரத்தையும், வள்ளி நாயகியையும், கடம்ப மாலையினையும் கண்டு போற்றச் செய்கிறார்.

இந்த மலரோடு எழுபத்து நான்கு பாடல்களின் விளக்கம் நிறைவெய்துகிறது.

அன்பர் சிரஞ்சீவி அனந்தனுடைய உதவியினால் இந்தப் புத்தகங்கள் உருவாகின்றன. முருகன் திருவருளால் எஞ்சிய புத்தகங்களும் வெளிவர வேண்டும். அவன் அருளே எங்கும் மலிவதாகுக!

கி.வா. ஜகந்நாதன்

விழிக்குத் துணை

நாம் இப்போது ஒரு யாத்திரை செய்து கொண்டிருக்கிறோம். இந்த யாத்திரை இன்று நேற்று வந்தது அல்ல. சாட்டை இல்லாத பம்பரம் போல ஆடும் பிரபஞ்சத்தில் கலந்து ஆடிக் கொண்டும் ஓடிக்கொண்டும் இருக்கிறோம். இந்தப் பிறவி போனால் அடுத்த பிறவி, அதன் பிறகு மற்றொரு பிறவி என்று ஓயாமல் ஒழியாமல் இந்தப் பயணம் தொடர்ந்து கொண்டு வருகிறது. இதற்கு முன்னால் எத்தனை பிறவிகள் எடுத்தோமோ அது நமக்குத் தெரியாது.

நம் அவதாரம்

அருணகிரிநாதர் அதற்கு ஒரு கணக்குச் சொல்லலாம் என்று பார்த்தார். அவரால் முடியவில்லை. ஏழு கடலின் கரையில் இருந்து அங்குள்ள மணல்களை எண்ணிப் பார்த்தாலும் அதைவிட அதிக மான எண்ணிக்கையுடைய என் பிறவிகள் என்று சொல்கிறார்.

"எழுகடல் மணலை அளவிடின் அதிகம்
எனதிடர் பிறவி அவதாரம்."

இறைவனுடைய திருஅவதாரத்திற்கும், நம்முடைய பிறப்புக்கும் எத்தனையோ வகையில் வேறுபாடு உண்டு. நம் பிறவிகள் அத்தனையும் துன்பமானவை; இடையூறு நிறைந்தவை. இறைவனுக்கு அருகில் நெருங்க வேண்டிய நாம் பிரபஞ்சம் என்னும் சேற்றில் அழுந்தி, கீழே இறங்கிக் கொண்டிருக்கிறோம். அவதாரம் என்பதற்கு இறங்குதல் என்று பொருள். இதுவும் ஒரு வகையில் குப்புற விழும் அவதாரந்தான். இன்னும் இந்தப் பயணம் தொடர்ந்துகொண்டே இருந்தால் இந்தத் துன்பத்திற்கு எல்லையே இல்லாமல் போய்விடும். எப்போதாவது ஒரு சமயம் இந்தப் பயணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு, ஏறவேண்டிய இடத்தில் ஏறிக்கொள்ளவேண்டும். இறைவனுடைய திருவடியாகிய மோட்சத்தில் ஏறிக் கொண்டால்

அப்புறம் கீழே இறங்கவேண்டிய அவசியம் இல்லை; பிரயாணத் தொல்லையும் இல்லை.

உடன் வருபவை

இந்த நீண்ட பிரயாணத்தில் நமக்கு எப்போதும் உடன் வருபவை இரண்டு. புண்ணியம் பாவம் என்னும் இரண்டுமே நம்முடைய பயணத்தை நீட்டித்துக் கொண்டு வருகின்றன. இப் பிறவியில் நாம் சேமிக்கிற பொருளும், பிற வாழ்க்கை வசதி களும் இந்த உடம்போடு நாம் இருக்கிற வரைக்குந்தான் நமக்குப் பயன்படும். உடம்பு பிணம் ஆன பிறகு பணமோ, போகப் பொருள்களோ எதுவும் நமக்குப் பயன்படுவது இல்லை.

"அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே"

என்று பட்டினத்தார் சொல்வார். நம்மோடு உடம்பிரண்டு, உயிர் ஒன்றாகக் காதல் செய்து வாழ்ந்த மனைவியோ இந்த உடம்பு பிணம் ஆனவுடன் இதைக் கண்டு அஞ்சுவாள். அவள் இந்த உடம்பை எடுத்துப் போவதைக் கண்டு அலறுவாளே ஒழிய, "நானும் வருகிறேன்" என்று சொல்ல மாட்டாள். வீதியில் விழுந்து, மார்பில் அடித்துக் கொண்டு அலறுவதோடு நின்று விடுவாள்.

"விழி அம்பொழுக, மெத்திய மாதரும் வீதிமட்டே."

நம்மிடம் பல காலம் அன்பு செய்த அன்பர்களும் மைந்தர் களும் சுடுகாடு மட்டும் வந்து இந்த உடம்பைத் தீக்கு இரை யாக்கி விடுவார்கள். இரண்டு கைகளாலும் கண்களைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழும் மைந்தர்கள் சுடுகாடு மட்டுந்தான் வருவார்கள்.

"விம்மி விம்மிஇரு, கைத்தலம் மேல்வைத்து
அழுமைந்தரும் சுடுகாடுமட்டே."

நாம் நம்முடைய உடம்போடு வாழும் காலத்திலும், இந்தப் !ற உடல் நீங்கி யாதனா சரீரத்தில் வாழும் காலத்திலும், மீண்டும் பிறவி பெறும் காலத்திலும் நம்மோடு தொடர்ந்து வரு வன புண்ணிய பாவ வினைகள் தாம்.

"பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே."

இந்த இரண்டையும் நாம் துணைகளாகக் கொள்கிறோம். உண்மையில் இவை துணை அல்ல. நமது யாத்திரை நீள்வதற்கு

இவை தூண்டுகோல். ஒருவகையில் இவற்றை நோய் என்று சொல்லலாம். இந்த இரண்டு வினைகளையும் அகற்றிவிட்டால் நம் யாத்திரை நின்றுவிடும். இருவினை ஒப்பு வந்தபோது மல பரிபாகம் வரும். பின்பு இறைவன் அருள் பதியும். அதைச் சத்திநிபாதம் என்று சொல்வார்கள். அதன் பிறகு ஞானம் பெற்று முத்தி அடையலாம்.

இப்போது நமக்குச் சத்துருவாக இருந்து வருவன இரண்டு வினைகள்.

"ஏழையின் இரட்டைவினை ஆயதோர் உடற்சிறை."

இந்த உடம்பாகிய சிறைக்குள் வாழும் வாழ்வு அந்த இரண்டு வினைகளால் வந்தது. வினை நின்றவுடன் பிறவியும் நின்று போகும். வினையைப் போக்கிக் கொள்ள முயற்சி செய்யாது நாம் மேலும் மேலும் வினைகளைச் செய்து கொண்டிருக் கிறோம். பல காலமாகச் செய்த சஞ்சித வினை குவிந்திருக்கிறது. பிராரப்த வினை இந்தப் பிறவியோடு வர, இப்போது செய்கின்ற ஆகாம்யவினை பின்பும் நமது பழைய மூட்டையை அதிகமாக்கு கிறது. இதனால் வினையே இல்லாத காலம் எப்போதும் வருவது இல்லை. இப்படியே போய்க் கொண்டிருந்தால் எந்தக் காலத்தில் வாழ்க்கைப் பயணம் முற்றுப் பெறும்?

வாழ்க்கையில் துணை

அப்படியாவது இந்தப் பயணத்தில் இன்பம் இருக்கிறதா என்றால், ஓயாத தொல்லையும், ஒழியாத துன்பமுமே வாழ்க்கை யின் பயனாக இருக்கின்றன.

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்"

என்று பேசுவர் பெருமக்கள். இந்த வாழ்க்கையில் துணையாக நாம் யார் யாரை நம்பிக் கொண்டிருக்கிறோமா அவர்கள் எல்லாம் இட எல்லை, கால எல்லை ஆகியவற்றுக்கு உட்பட்டவர்கள். இங்குள்ள ஒன்றுமே உண்மையில் உயிருக்குத் துணையாக வருவது இல்லை. நமக்கு மேலும் பிறவியைத் தருவதற்குக் காரணமாக இருக்கும் வாழ்க்கையை மாற்றி, துன்பத்தை அடி யோடு அழிப்பதற்குரிய வேறு பெரிய துணை வேண்டும். அந்தத் துணைகள் என்ன என்பதை இந்தப் பாட்டால் அருணகிரியார் சொல்ல ஆரம்பிக்கிறார்.

நாம் இந்தப் பிறவியில் பல துன்பங்களை அடைந்து வருகிறோம். இவற்றிற்கு ஏதுவாக இருப்பவை முற்பிறவியில் செய்த பாவ புண்ணியங்கள். முற்பிறவியில் படிந்திருக்கும் வாசனை இப்போது நம் மனத்தில் நின்று மேலும் தீயவற்றையே செய்யத் தூண்டுகின்றது. இனிமேல் என்ன பிறவி வருமோ என்பதும் நமக்குத் தெரியவில்லை. முந்திய பிறவியின் பயனாக நாம் படும் துன்பம் போதாது என்று இந்தப் பிறவியில் செய்த செயல்களின் பயனாக வேறு இந்தப் பிறவியில் துன்புறுகிறோம். இந்தப் பிறவியில் செய்யும் வினைகள் காரணமாக இனி வரும் பிறவியிலும் துன்பப்படுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக் கிறோம். மூன்று காலங்களிலும் நமக்கு வினைகளே துன்பத்தைத் தருவனவாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் போக்குவதற்கு என்ன வழி? முதலில் இந்தப் பிறவியில் வருகிற துன்பங்களைப் போக்க என்ன வழியென்று பார்க்கலாம். இறந்தகாலம், எதிர் காலம் ஆகியவைபற்றி இப்போதைக்கு யோசனை பண்ண வேண்டிய அவசியம் இல்லை. இரண்டு நாட்களாக நாம் பட்டினி என்று கவலைப்படுவதைக் காட்டிலும், நாளைக்கு யார் சோறு அளிப்பார்கள் என்று இன்று யோசிப்பதையும்விட, இன்று எங்கே சாப்பிடுவது என்ற யோசனைதான் முதலில் உண்டாக வேண்டும்.

பெரிய துணை

நமக்குப் பகையாக இருக்கும் இரண்டு வினைகளும் நாம் செய்யும் செயல்களால் வருகின்றன. செயல்களைச் செய்யும் கரணங்கள் மூன்று நம்மிடம் உள்ளன. ஒன்று மனம். இரண்டு வாக்கு. மூன்று உடம்பு. மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றி னாலும் செயல்களைச் செய்து கொண்டிருக்கிறோம். அப்படிச் செய்வன எல்லாமே புண்ணியத்திற்கும், பாவத்திற்கும் காரண மாக அமைகின்றன. உலக இயலில் ஈடுபட்டுப் பிரபஞ்சச் சேற்றில் உழன்று நாம் செய்கிற செயல்கள் யாவுமே, வரும் பிறவிகளுக்கு மூலவித்தாக முடிகின்றன. இந்தத் தவறான முறையை மாற்ற வேண்டுமானால் நம்முடைய பயணத்தில் போகிற வழியை முட்டுக்கட்டை போட்டு மாற்றுவதற்குத் தக்க துணை வேண்டும். உலகத்திலுள்ள மக்கள் யாரும் நமக்குத்

துணையாக இருக்க முடியாது என்பதை முன்பே பார்த்தோம். நமக்குத் துணையாக இருக்கத் தக்கவன் ஒருவன்தான். இறைவனே நம்முடைய உயிர்ப் பயணத்தை முடிவுகட்டுவதற்கு ஏற்ற வகையில் அருள் புரிவான். வினைகள் செய்தவனுக்கு அவற்றின் பயன்களை உடனே மாற்றி முத்தி தருவது என்பது இயலாத காரியம். தவறு செய்தவன் அதற்குரிய தண்டனையை அநுபவிக்கத்தான் வேண்டும். நாமோ ஒரு பிறவி, இரு பிறவி அல்ல, பல பிறவிகளில் தவறு செய்து கொண்டு வருகிறோம். இனிமேல் தவறு செய்யாமல் நல்ல பிள்ளையாக வாழ்வதற்கு அவன் திருவருள் துணை இருக்கவேண்டுமென்று நினைந்து முயற்சி செய்யலாம். ஆனால் அவனோடு தொடர்பு வைத்துக் கொள்வது அவ்வளவு எளிதன்று. மூன்று கரணங்களின் தொடர் பினால் நாம் உலகத்தில் வாழ்கிறோம். அவனோ கரணம் கடந்த பெரியவனாக இருக்கிறான். அவன் துணையை நாம் எப்படிப் பெறுவது?

உருவமும் பெயரும்

இந்த யோசனை ஆண்டவனுக்கே தோன்றியிருக்கின்றது. நம்முடைய அறிவினால் நாம் ஏதேனும் தெளிவு பெற வேண்டு மென்று முயன்றோமானால் அந்த முயற்சிக்கு முடிவே இராது. ஆனால் ஆண்டவனே வினையில் உழன்று வாழும் உயிர்க் கூட்டங்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்ற கருணையினால் நமக்கு ஏற்ற வகையில் சில நலங்கள் பண்ணியிருக்கிறான். நாம் செய்கிற பிழைக்காகத் தான் தன்னுடைய உயர்ந்த நிலையில் இருந்தும் இறங்கி வருகிறான். கண்ணுக்கும், கருத்துக்கும் அப்பாற்பட்டவனாக இருந்தும் உயிர்க் கூட்டங்கள் உடம்போடு வாழ்வதனால் அவர்களுடைய கண்ணுக்கும் கருத்துக்கும் பொரு ளாகத் திருவுருவங்களையும் திருநாமங்களையும் பெற்றிருக்கிறான்.

கண்ணின் செயல்

உடம்பாகிய கரணத்திற்குத் தலைமையான அங்கம் தலை. அந்தத் தலையில் முக்கியமான உறுப்பு, கண். ஞானேந்திரியங் களுக்குள் அது மிகவும் சிறந்தது. உடம்பினால் செய்ய வேண்டிய காரியங்கள் பலவானாலும் முக்கியமாக நம்முடைய கண்ணைப்

பாதுகாத்துக் கொண்டு, நல்ல முறையில் அதைப் பயன் படுத்தினால் உடம்பாகிய கரணத்தினால் செய்யும் பாவங்களைக் குறைத்துக் கொள்ளலாம். இதற்காகவே ஆண்டவன் திருவடிவம் கொண்டிருக்கிறான்.

நம்முடைய உடம்பில் கண் எப்படி முக்கியமோ அது போல ஆண்டவனுடைய திவ்யமங்களத் திருமேனியில் திருவடி முக்கியம். அவனுடைய பாதங்களை நாம் தலையில் வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு முன் அந்தப் பாதங்களின் பேரழகை இரண்டு கண்களாலும் முகந்து உண்ண வேண்டும். புறத்தில் நம்முடைய பார்வைக்குப் பொருளாக அவன் விக்கிரகத் திரு மேனி கொண்டு எழுந்தருளுகிறான்.அந்தத் திருவுருவத்தைக் கண்ணினால் பசியோடு கண்டு நீருகுக்க வேண்டும். காணுவதும் நீருகுப்பதும் கண்களின் வேலை.

பல பல பொருள்களைக் கண்டு கண்டு நம்முடைய கண்கள் தவறான வழியில் சென்று அழுக்கை ஏற்றிக் கொண்டிருக் கின்றன. நம்முடைய கண், வலி இல்லாத கண்ணைப் போலத் தோன்றினாலும் பிரபஞ்சச் சேற்றிலே உழன்று வலி பெற்றிருக்கி றது. காமாலைக் கண்ணுக்கு எல்லாம் மஞ்சளாகத் தோற்றுவது போல நம்முடைய கண்ணுக்குப் பிரபஞ்சம் முழுவதும் பேதமய மாகத் தோன்றுகிறது. இதுவே ஒரு வியாதிதான். எங்கும் நீக்கமற நிற்கும் கடவுளைக் காணவேண்டியிருக்க, வேறு வேறு வகை யாக மாயா சொரூபமான பிரபஞ்சத்தைக் கண்டு கண்டு அதுவே காட்சி என்று அமைந்திருக்கிறோம். இது ஒரு வகையில் மஞ்சள் காமாலை; ஒரு வகைக் கண் வலி. கண் வலி வருமானால் நந்தியாவட்டை போன்ற மலர்களைக் கண்ணில் ஒற்றிக் கொள் 'ார்கள். பிரபஞ்சச் சேற்றிலே அழுந்திய பொருள்களை எல்லாம் ண்டு நோய் பெற்ற கண்ணுக்கு ஆறுதல் உண்டாக வேண்டு ானால் ஆண்டவனுடைய பாதங்களைத் தரிசனம் செய்ய ◌வண்டும். அதற்காகவே அவன் தன்னுடைய பாதங்களை மிக மெல்லிய மலர்களைப் போலக் காட்டிக் கொண்டிருக்கிறான்.

"கண்ணிணைநின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி"

என்பர் மணிவாசகர்.

அவனுக்கும் இரண்டு திருவடிகள்; நமக்கும் இரண்டு கண்கள். அதன் பாதங்களை முதலில் தரிசிக்க வேண்டும். அவ

னுடைய திருவுருவம் மிகப் பெரிதாக இருந்தாலும் முக்கியமாக நம்முடைய கண்கள் அவனுடைய பாதத்தில் வண்டாக மொய்க்க வேண்டும். அப்போதுதான் நம் பார்வையில் உள்ள மாசு தீரும். கண்களில் உள்ள தீங்கு அகலும். இறைவன் திருவுருவத்தைப் பயன்படுத்திக் கொள்வன நம்முடைய கண்களே. இந்திரியங் களுக்குள் சிறந்தனவாகிய கண்களுக்குரிய துணையாக ஆண்டவன் திருவடியைத் தாங்கியிருக்கிறான்.

விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள்.

வாக்கின் செயல்

மற்றொரு கரணமாகிய வாக்கைத் தூய்மைப்படுத்த ஆண்டவன் ஒரு மருந்து வைத்திருக்கிறான். மனம் படைத்த மக்களுக்கு நாம ரூபம் இல்லாவிட்டால் ஒன்றையும் நினைக்க முடியாது. ஆகை யால் இயல்பாகத் தனக்குப் பெயரும் உருவமும் இல்லாவிட்டா லும் உயிர்களின்பால் உள்ள கருணையினால் அவற்றோடு அவன் எழுந்தருளுகிறான். அவன் திருவுருவத்தைக் கண்ணால் கண்டு கண்டு கண்களின் மாசைக் கழுவிக் கொள்ளலாம். பலபல பேசி நம் நாக்கை மாசுடையதாக ஆக்கிக் கொண்டிருக்கிறோம். அதற்கு முறிவாக அவன் திருநாமத்தைச் சொல்ல வேண்டும். உலகில் உள்ள எண்பத்து நான்கு இலட்சம் யோனி பேதங்களுக்குள் மனிதன்தான் சிறந்தவன் என்று சொல்வார்கள். அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவன் அறிவினால் சிறந்தவன் என்பது ஒன்று. மற்றொன்று, யாரும் பெறாத வாக்கு அவனிடம் அமைந் திருக்கிறது. மிகச் சிறந்த பொருள் ஒருவனிடத்தில் இருக்குமா னால் அதை நல்ல வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதுதான் அறிவாளிக்கு அழகு. வாக்கு என்பது வேறு யாருக்கும் இல்லாமல் மனிதனுக்குக் கிடைத்திருக்கிறது. அதனை மிகச் சிறந்த பயனுடையதாக ஆக்க வேண்டும். பலவற்றைப் பேசிப் பேசி நாம் துன்புற்று வருகிறோம்.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்பர் வள்ளுவர். உரையைப் பெருக்கிப் பெருக்கி எண்ணங் களையும் பெருக்கிக் கொண்டிருக்கிறோம்.

"வசனம் மிக ஏற்றி அலையாதே
மனது துயராற்றில் உழலாதே"

என்று திருப்புகழில் அருணகிரிநாத சுவாமிகள் அருளியிருக்கிறார். வார்த்தைகளை மிக அதிகப்படுத்திப் பேசி மனத்தில் துயர் கொண்டு உழலாமல் இருக்க வேண்டுமென்று அந்தப் பாட்டில் உணர்த்துகிறார். நாக்கில் உண்டாகும் மாசுகளைக் கழுவிக் கொள்ள வேண்டுமானால் இறைவன் திருநாமங்களைச் சொல்ல வேண்டும்.

இறைவன் திருவடிகளைப் பார்க்கும் விழி வேறு ஒன்றையும் பாராமல் இருக்கிற நிலை வரும். அந்தப் பாதங்கள் விழிக்குத் துணையாக இருக்கும். அதுபோல நம் மொழிக்குத் துணையாக அவன் திருநாமங்கள் இருக்கும்.

விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள்
மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்.

முருகா என்னும் நாமம்

வடிவேற் பெருமானின் நாமங்களுக்குள் மிகவும் சிறந்தது முருகா என்பது. அதனை நக்கீரர்,

"அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக"

என்று திருமுருகாற்றுப் படையில் பாராட்டுவார். முருகு என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. அவற்றுள் ஞான மணம், தெய்வத் தன்மை, இளமை, அழகு என்பவை சிறந்தவை. இந்த நான்கும் இறைவனுடைய பிற கோலங்களில் சிறப்பாக அமையாமல் முருகத் திருக்கோலத்தில் அமைந்தமையினால் முருகன் என்னும் நாமம் அவனுக்கு வாய்த்தது. வேறிடத்தில் பெறுவதற்கு அரிய இலக்கணங்கள் அமைந்ததனால் முருகன் என்னும் திருநாமம் அவனுக்கு கிடைத்தது. அந்த நாமம் மிகச் சிறந்தது.

தமிழில் வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூன்று வகை எழுத்துக்கள் உண்டு. முருக என்ற திருநாமத்தில் மெல்லினம், இடையினம், வல்லினம் என்று மூன்றும் இருக்கின்றன. அகர உகர மகரங்களைத் தலைக் கீழாகச் சொன்னதுபோல "முருக" என்று திருநாமம் அமைந்திருப்பதைப் பார்க்கலாம். க என்பதில்

அகரமும், ரு என்பதில் உகரமும், மு என்பதில் மகரமும் அமைந்திருக்கின்றன. பிரணவ எழுத்தின் பகுதிகளோடு வேறு சில பகுதிகளும் சேர்ந்து முருக என்ற நாமம் அமைந்திருக்கிறது. மந்திரத்தை மறைத்துச் சொல்வது மரபு. முருக நாமத்தைச் சொல்லிச் சொல்லி உள்ளம் குளிர்ந்து இன்புறுவது பக்தர்களுடைய இயல்பு. இங்கே அருணகிரியார்,

மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்

என்றார்.

முருகா என்பது ஒரு நாமந்தான். ஆனால் அதை நாமங்கள் என்று பன்மையினால் கூறுகிறார். முருகா என்பது ஒரு பெயராக இருந்தாலும் அது பல பெயர்களின் பொருளை உடையது. ஆகவே அதை ஒருமுறை சொன்னாலும் பல பெயர்களைச் சொன்னதன் பயன் உண்டாகும். பல நாமங்களின் பெருமை எல்லாம் தன்மாட்டு உடையது ஆகையால் அதனை, ''நாமங்கள்' என்று பன்மையினால் சொன்னார்.

நாமத்தின் சிறப்பு

இறைவனுடைய திருவருளில் ஈடுபட வேண்டுமென்ற ஆசை உடையவர்கள் அவன் திருவுருவத்தைக் கண்களால் கண்டு இன்புற்று, இடைவிடாமல் அவன் நாமத்தை ஓதவேண்டும். இறைவனுடைய உருவத்தைக் காட்டிலும் நாமத்திற்கு ஒரு சிறப்பு உண்டு. நாம் கோயிலில் பார்க்கிற உருவம் இறைவனுடைய தேசோமயமான உருவம் அன்று; அதனை நினைப்பூட்டுகின்ற அடையாளம். எங்கேயோ இருக்கிற ஒரு பெண்ணின் படத்தை ஓர் இளைஞன் பார்த்தால் அந்தப் பெண்ணின் மூக்கு, விழி முதலியவற்றின் அமைப்புக்களை மாத்திரம் உணரலாம். மேனி நிறம், பொலிவு முதலியவற்றை உணர முடியாது. ஆனாலும் அந்தப் படத்தை முதலில் கண்டு, பின்பு அவளையும் நேரில் பார்த்துத் திருமணம் செய்து கொள்ள ஒப்புக் கொள்கிறான். அதுபோல, இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்கு மிகுதியான தகுதி நமக்கு இல்லாமையினால், அவனுடைய திவ்ய தேசோமய விக்கிரகத்தை நம் மனத்தில் கண்டுகொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். கண்களினால் கண்டு கருத்தினால்

சிந்தித்துத் தியானம் செய்ய வேண்டும். கண்களினால் காணும் சிலா வடிவங்கள் போட்டோ படம் போன்றவைகளே. அந்த வடிவங்களைக் கண்களினால் கண்டு தியானித்தால் அவை மெல்லச் சோதிப் பிழம்பாகிய உருவமாக அகக் கண்ணில் தோன்றும். அதுதான் இறைவனுடைய நேர் வடிவம். அதனைக் காணும் பக்குவம் இல்லாமையினால் படத்தைப் பார்ப்பது போல விக்கிரகங்களைக் காண்கிறோம். ஆகவே, நாம் இப்போது காணும் விக்கிரகங்கள் அறிகுறி மாத்திரமானவை. நாமங்களோ அப்படி அல்ல. அவை எதனுடைய அடையாளமும் அல்ல. இறைவனுடைய திருப்பெயர்களே.

இறைவனுடைய திரு உருவங்களை ஆலயங்களுக்குப் போய்ப் பார்க்கிறோம். அப்படிப் போய்ப் பார்க்க முடியாதவர்களுக்கு திருவிழாக்களில் ஆண்டவன் எழுந்தருளிக் காட்சி அளிக்கிறான். அப்படி வந்தும் இறைவனுடைய தேசோமய உருவத்தின் பிரதிநிதியாகிய அந்த விக்கிரகத்தை நாம் பயன்படுத்திக் கொள்வதில் எத்தனையோ சங்கடம் இருக்கிறது. வீதியில் இறைவன் எழுந்தருளினாலும் குருடன் பார்க்க முடியாது. இறைவன் திருநாமமோ அத்தகையது அன்று. எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும், யாரும் அதை நாவில் ஏற்றிக் கொள்ளலாம். அது இறைவனுடைய நாமத்தின் அடையாளம் அன்று; அவன் நாமமே. ஆகவே, இறைவனுடைய அர்ச்சா வடிவங்களைக் காட்டிலும் அவன் திருநாமங்கள் பல மடங்கு சிறந்தன. எந்த இடத்திலும், எந்த நிலையிலும், எந்தக் காலத்திலும், யாரும் அவனுடைய திருநாமத்தைச் சொல்லலாம். வீதியில் அவன் எழுந்தருளும் போது வெளியில் வந்து பார்க்க முடியாத நொண்டி அந்தப் பெருமானுடைய வடிவத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. நாமம் அத்தகையது அன்று. நோயாளியும் சொல்லலாம்; பேசத் தெரிந்த குழந்தையும் சொல்லலாம். அழுக்காக இருக்கிறபோதும் சொல்லலாம்; அழகாக இருக்கிற போதும் சொல்லலாம். மூச்சு இருக்கும் மட்டும் அவன் நாமத்தைச் சொல்லிக் கொண்டிருக்கலாம். அதனால் இறைவன் உருவத்தைக் காட்டிலும் நாமத்துக்குப் பெருமை அதிகம்.

முருகப் பெருமானுடைய திருநாமங்கள் பலவாக இருந்தாலும் அவற்றுள் எல்லாம் மிகமிகச் சிறந்தது முருகன் என்னும்

திருநாமம். அதை அடுத்தடுத்துச் சொன்னால் நம் நாவுக்கு அது துணையாக இருக்கும். நம் நாவில் எந்தக் குற்றமும் வராமல் வாழலாம். நாவில் வருகிற குற்றங்கள் நான்கு வகை. புறம் கூறுதல், பொய்யுரைத்தல், பிறர் மனம் புண்பட இன்னாத கூறுதல், பயன் இல்லாதன சொல்லல் ஆகிய நான்கும் அகங் காரம் உடையவர்களிடத்தில் தோன்றுகின்றன. இறைவன் திரு நாமத்தைச் சொல்லிச் சொல்லிப் பழகிய நாவுக்கு மற்ற எந்த வார்த்தைகளும் பயனற்றனவாகத் தோன்றும். பேசப் புகுந்தால் இறைவன் நாமத்தைப் பேச வேண்டும் என்று தோன்றும்.

ஒரு வள்ளல் தன்னிடம் யார் எப்போது வந்தாலும், எவ்வளவு வேண்டுமானாலும் பண உதவி செய்வதாகச் சொல் கிறான். அவனிடம் தடையின்றிப் பணத்தைப் பெற வேண்டும் என்ற ஆசை உள்ளவன், எப்போதும் அவன் பக்கத்தில் இருப் பான். தடுக்க முடியாத காரியங்கள் இருந்தாலும் கூடிய வரையில் எப்பொழுதெல்லாம் அவனிடம் வந்து வாங்கிக் கொள்ளலாமோ அப்பொழுதெல்லாம் வந்து வாங்கிக் கொள்வான். அதுபோலவே இறைவனிடம் அன்பு பூண்டவன் எப்பொழுதெல்லாம் ஓய்வு கிடைக்குமோ, சந்தர்ப்பம் இருக்குமோ அப்பொழுதெல்லாம் அவன் நாமத்தைச் சொல்லிக் கொண்டிருப்பான். அப்படி இருந் தால் அவனுடைய வாக்கினால் வருகிற பாவங்கள் அகலும். இறைவன் திருநாமமே அவனுக்குத் துணையாக இருக்கும்.

மொழிக்குரிய தகுதி

சும்மா முருகா என்று சொன்னால் அது நமக்குத் துணையாக நில்லாது. பாவங்களைச் செய்து பல பொய்களைப் பேசி முருகா என்று சொன்னால் அவனுக்கு அந்த நாமம் துணை நில்லாது. தான் செய்கிற பாவத்திற்கு அந்த நாமத்தைத் துணையாகக் கொள்வதைக் காட்டிலும் வஞ்சகச் செயல் வேறு இல்லை. அதனால்தான் அருணகிரியார்,

மெய்ம்மை குன்றா மொழிக்குத் துணை

என்று சொன்னார். எவன் சத்தியத்தை உணர்கிறானோ, எவன் இறைவன் ஒருவன்தான் உண்மையான பொருள் என்று தெரிந்து பக்தி கொள்கிறானோ அவன் முருகா என்று சொன்னால் அவனை ஆண்டவன் காப்பாற்ற முற்படுவான்.

"முருகா எனவோர் தரம்ஓ தடியார்
முடிமே லிருதாள் புனைவோனே"

என்பது திருப்புகழ். ஒருதரம் முருகா என்று சொன்னாலும் அவன் திருவடிகள் தலையின்மீது படியும் என்று சொல்கிறார். அங்கே ஒரு முறை சொல்வது என்பது முக்கியம் அல்ல. அதைச் சொல்வோன் தகுதிதான் முக்கியம். இறைவனிடத்தில் ஆராத காதலுடன், அந்தத் திருநாமத்தை நாக்குத் தித்திக்கப் பலமுறை சொன்னால் நிச்சயமாகப் பயன் உண்டாகும்.

"அஞ்சு முகம்தோன்றின் ஆறு முகம்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும் – நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகாஎன்று ஓதுவார் முன்"

என்று இந்த நாம பாராயணத்தின் சிறப்பைத் திருமுருகாற்றுப் படையின் பயனாக உள்ள வெண்பா ஒன்று கூறுகிறது. மனத்திலுள்ள அச்சத்தை ஒழித்து, நல்ல காட்சிகளைக் காணச் செய்து, உலகத்திலுள்ள போராட்டத்தில் வெற்றி வாங்கித் தந்து, எம்பெருமான் திருவருளைக் கூட்டி வைப்பது முருகா என்னும் திருநாமம். அந்த நாமத்தின் பெருமையை நக்கீரரும் அருணகிரிநாதப் பெருமானும் ஏனைய பக்தர்களும் பலபடியாகப் பாராட்டிப் போற்றியிருக்கிறார்கள்.

நிகழ்காலத் துணை

இந்த வாழ்வில் நம்முடைய வினைகள் போக வேண்டுமானால் அதற்குத் துணையாக இரண்டு சொன்னார். கண்ணுக்குத் துணை இறைவன் திருப்பாதங்கள். வாக்குக்குத் துணை அவன் நாமங்கள். நாம ரூப நாட்டம் உடைய மனத்திலே கண்ணாலே காணும் காட்சியும், வாக்கினாலே சொல்லும் நாமமும் படியும். அவனுடைய திருவடி மலர்களைக் கண்டு அன்பு செய்வார்களுக்கு அந்த அடிமலர் உள்ளத்தில் நின்று என்றைக்கும் மாறாத துணையாக இருக்கும். அப்படியே அவனுடைய திருநாமம் அவனுடைய இயல்புகளையும், குணங்களையும், திருவுருவத்தையும் நன்கு நினைப்பூட்டி உள்ளத்தில் தேனாறு பாலாறு பெருகச் செய்யும். இந்த இரண்டும் நிகழ்காலத்திற்குத் துணையாக இருப்

பவை. இப்போது வாழ்கிற வாழ்க்கையில், வருங்கால வாழ்க்கைக்கு அடிப்படையாகச் செய்யும் வினைகள் தோன்றாமல், அமைதி பெறத் துணையாக அவை இருக்கும்.

இறைவனுடைய திருப்பாதப் போதுகளைக் கண்ணிலும் கருத்திலும் புதைத்து, மெய்ம்மை குன்றா மொழியில் அவன் நாமத்தை நிறுத்தி வாழ்ந்தால் எல்லாம் இறைவன் செயல் என்ற உணர்வு விஞ்சும். எனக்கு இனிச் செயல் வேறு இல்லை என்ற உறுதிப்பாடு தலைப்படும். அந்த நிலையில் உள்ளவன் எங்கே பார்த்தாலும் இறைவன் திருவடிகளைப் பார்ப்பான்; எதைப் பேசினாலும் அவன் வாயில் திருநாமங்களாக வரும். எதைச் செய்தாலும் இறைவன் திருப்பணியாக அவை முடிவு பெறும். அவன் செய்கின்ற காரியங்கள் அனைத்தும் புண்ணிய பாவங்களுக்கு அப்பாற்பட்டனவாக, வரும் பிறவிக்கு வித்தாக அமையாமல் இருக்கும்.

"சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன்"

என்று மணிவாசகர் குறிப்பிடும் நிலை அது.

2

பிராரப்தம்

போன பிறவிகளில் செய்த வினைகள் இந்தப் பிறவியில் நமக்கு இன்ப துன்பங்களை உண்டாக்குகின்றன. அப்படி உண்டாக்குவதற்குக் காரணமான வினைகளைப் பிராரப்தம் என்று சொல்வர். இது மிகவும் வலிமையானது; ஞானம் பெற்றவர் களாலும் போக்குவதற்கு அரியது. இந்தப் பிறவியில் ஞானம் பெற்றவர்கள் இப்போது செய்யும் வினைகளால் பாதிக்கப் படுவது இல்லை; முன்னாலே மூட்டையாகக் கட்டிக் கிடக்கிற சஞ்சிதமும் அவர்களுக்குத் துன்பத்தை உண்டாக்காது. ஆனால் இந்தப் பிறவியில் அநுபவிப்பதற்காகக் கொண்டு வந்த பிராரப்தத்தை எந்த வகையினாலும் அழிக்க முடியாது. அதை அநுபவித்தே தீர்க்க வேண்டும். ஊழ்வினை எப்படியும் வந்து முந்திக் கொள்ளும் என்று வள்ளுவர் சொல்கிறார்.

தோள் துணை

ஆனால் இறைவனுடைய திருவருளால் நமக்கு ஒரு நலம் உண்டாகும். ஊழ்வினையை அடியோடு மாற்றிக் கொள்ள முடியாதென்றாலும் அதன் உறைப்பை மாற்றிக் கொள்ளலாம். அதற்குத்தான் பலமான துணை வேண்டும். முருகப்பெருமானுடைய பன்னிரு தோள்களும் முன்பு செய்த பழிக்குத் துணையாக நிற்கும் என்று அருணகிரியார் பேசுகின்றார்.

முன்பு செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும்.

இறைவனுடைய பன்னிரு தோளும் மிகுந்த பராக்கிரமம் உடையவை; வீரத்தின் உறைவிடம். அவைகளே அசுரர்களின் வாழ்க்கையை நிலைகுலையச் செய்தவை. இந்தத் தோள்களின் வலிவினால் நம்முடைய பிராரப்தத்தின் வலி குறைய வேண்டும். ஞானிகளாலேயே போக்கிக் கொள்ள முடியாத பிராரப்தத்தின் உறைப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்றால் அவற்றையும்விட மிக்க வலிவாக பன்னிரு தோள்களின் நினைவு வேண்டும். அவை முன்பு செய்த பழிகளினால் உண்டான வாசனைக்கு மாற்றாக, பிராரப்தத்தின் உறைப்பைப் போக்குவனவாக, நமக்கு உதவும். இது சென்ற காலப் பயனை மாற்றுவிக்கத் துணை.

வருங்காலத் துணை

இப்படி நிகழ்காலத்திற்கு இரண்டு துணைகளும், சென்ற காலத்தின் பயனை மாற்றுவதற்கு ஒரு துணையும் இன்னவென்று சொன்னார். இனி வருங்காலத்தில் நமக்கு வருகின்ற பெரிய துன்பத்தை மாற்றுவதற்குத் துணை வேண்டும் அல்லவா? அந்தத் துன்பந்தான் மரணத் துன்பம். அதை நினைந்து பயப்படாத மக்களே இல்லை. இந்த உலகத்தில் நாம் சேமித்துக் கொண்டிருக்கிற துணைகள் எல்லாம் அங்கே உதவா என்பதை முன்னமேயே பார்த்தோம். மாணிக்கவாசகரும் ஆழ்வாராதிகளும் 'மரணம் வந்தால் இனி என்ன செய்வோம்' என்று பயந்திருக்கிறார்கள். பிற மக்கள் யாருடைய துணையும் பயன்படாத வழி அது. ஆகவே அந்த வழியைத் தனிவழி என்று சொல்வார்கள். எல்லோருக்கும் அச்சத்தை உண்டாக்கும் வழி அது.

பயந்த தனி வழி.

இந்தப் பயத்தை நீக்கிக் கொள்ள வேண்டுமானால் அதற்கு ஏற்ற துணை வேண்டும்.

இறைவனுடைய திருவருள் நமக்கு நிச்சயம் கிடைக்கும் என்று இருந்தாலும் இந்த உடம்பை விட்டு நீங்கும்போது நமக்கு மரணத் துன்பம் உண்டாகிறது. ஒரு நல்ல மாளிகை நமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வழியில் போகிறோம். அந்த மாளிகை கிட்டும் மட்டும் இடையிலுள்ள வழியைத் தாண்ட வேண்டுமே! அதற்குத்தான் துணை வேண்டும். மரணம் அடைந்த ஆன்மா இறைவன் திருவடியாகிய வீட்டைச் சென்றடையும் மட்டும் தக்க துணை என்ன என்பதை அருணகிரியார் கடைசியில் சொல்கிறார்.

விளக்கும் ஆயுதமும் நிழலும்

நீண்ட வழியில் ஒருவன் போகிறான். இராக் காலத்தில் இருள் கப்பிக் கொள்கிறது. அப்போது மறைந்திருக்கிற விலங்கு களும், திருடர்களும் வந்து துன்புறுத்துவார்கள். அதற்காக இருட்டு வழி போகும்போது ஒளி நிறைந்திருக்கிற விளக்கும், விலங்குகளை அழிக்கும் ஆயுதமும் கையில் இருக்க வேண்டும். பகலில் நெடுந்தூரம் போனால் வெயிலினால் துன்பம் உண்டா கும். அதற்கு நிழல் வேண்டும். ஆகவே பகல், இரவு ஆகிய இரண்டு வேளைப் பயணத்திற்கும் ஒளிதரும் விளக்கும், ஆயுதமும், நிழல் தரும் பொருளும் நமக்கு அவசியம்.

நெடுவழியாகிய, பயந்தரும் தனி வழியாகிய, மரணத் திற்குப் பின்னால் உள்ள வழியில் பகல் உண்டு; இரவு உண்டு. நாம் காணுகின்ற பகல் இரவு போல் இல்லாவிட்டாலும் சொர்க்கம், நரகம் என்று சொல்கிற பகல் இரவு உண்டு. இறை வனை நம்புகிறவர்களுக்கு அவற்றால் யாதோர் இடையூறும் நேராது. இருட்டில் போகிறவனுக்கு விளக்கும் ஆயுதமுமாக இருந்து இறைவன் கையில் உள்ள வடிவேல் துணை செய்யும். வடிவேல் சுடர் உடையது. பகையைப் போக்கும் ஆயுதமாகவும் பயன்படுவது. பயந்த தனி வழிக்கு வடிவேல் ஒரு துணை.

வேலும் மயிலும்

நமக்கு நிழல் தந்து, கண்ணுக்குக் குளிர்ச்சியான காட்சி தருவது ஆண்டவன் வாகனமாகிய மயில். அதுவும் நமக்குத் துணையாக நிற்பது. வேலும் மயிலும் ஆகிய இரண்டும் இந்தப் பிறவிக்குப் பின்பு சொர்க்கம், நரகம் என்ற பாதையை அடையாமல் நேரே இறைவனிடத்தில் நம்மை அழைத்துச் செல்லும் தன்மை உடையவை. வடிவேல், மயூரம் ஆகிய இரண்டும் இரண்டு பெரிய தத்துவங்களின் அறிகுறிகள். வேல் ஞானசக்தி. மயூரம் ஓங்காரம். இறைவன் வடிவை ஓங்கார ஒளியில் கண்டு மெய்ஞ்ஞானம் பெற்றவர்களுக்கு மரணத்திற்குப் பின்பு மீட்டும் பிறவி வராத பெரு வாழ்வு கிடைக்கும். அதையே,

பயந்த தனி வழிக்குத் துணை வடிவேலும்
செங்கோடன் மயூரமுமே

என்று சொன்னார்.

செங்கோடன்

அருணகிரிநாத சுவாமிகளுக்கு மரணத்தைப் பற்றிய நினைப்பு வந்தால் உடனேயே அதற்கு மாற்றாகத் திருச்செங் கோடும் நினைவுக்கு வருவதைப் பலமுறை பார்த்திருக்கிறோம். இங்கேயும்,

செங்கோடன் மயூரமுமே

என்று சொன்னார். செங்கோடன் என்ற சொல்லை, விழிக்குத் துணை செங்கோடன் திருமென்மலர்ப் பாதங்கள், மொழிக்குத் துணை செங்கோடன் முருகா எனும் நாமங்கள், பழிக்குத் துணை செங்கோடன் பன்னிரு தோளும், தனி வழிக்குத் துணை செங் கோடன் வடிவேலும், செங்கோடன் மயூரமுமே என்று கூட்டிக் கொள்ள வேண்டும். செங்கோடன் என்ற தொடர் நடுநிலை விளக்காக இருந்து முன்னும் பின்னும் உள்ள சொற்களோடும் இசைந்து பொருள் தந்தது.

திருச்செங்கோட்டில் எம்பெருமான் தன் திருக்கரத்தில் வேலோடு காட்சி தருகிறான் என்பதை முன்னும் சொல்லியிருக் கிறேன்.

மயில்

அவனுடைய வேல் நம்முடைய உள்ளத்தில் உள்ள இருளைப் போக்கி ஒளி காட்டும். அவித்தையாகிய பகையைப் போக்கி இன்பத்தைத் தரும். அப்படியே அவனுடைய மயூரம் நம்முடைய மயக்கத்தை மாற்றும். மயில் பாம்புக்கு எதிரி. உலகத்திலுள்ள மாயையைப் பாம்பாகச் சொல்வது ஒரு வழக்கம். கயிற்றிலே பாம்பு தோற்றுவதைச் சர்ப்பப் பிராந்தி என்று சொல் வார்கள். அந்தப் பாம்பின் பயம் போக வேண்டுமானால் மயிலின் ஞாபகம் வரவேண்டும். கயிறு பாம்பு போலத் தோன்றி னாலே பயம் உண்டாகுமானால் உண்மையான பாம்பு தோன்றி னால் பயத்திலிருந்து தெளிய வழி இல்லை. ஆனால் மயிலின் துணை இருக்குமானால் உயிருள்ள பாம்புக்குக்கூட நாம் பயப் படமாட்டோம். மாயையினால் விளைகின்ற தீய இன்னல்களுக்கு ஆண்டவனுடைய மயிலைத் தியானம் செய்கிறவர்கள் அஞ்ச மாட்டார்கள். இறைவன் திருவுருவத்தை அமைத்திருக்கும் படங் களைப் பார்த்தால் இந்த உண்மை தெரியவரும். அவனுடைய வாகனத்தின் அடிக்குக் கீழே நாகம் இருப்பதைக் காணலாம். பாம்பை மிதித்துக் கொண்டு அது நடனம் ஆடுகிறது.

"வாளெயிற துற்றபகு வாய்தொறும் நெருப்புமிழும்
வாசுகி எடுத்துதறும் வாசிக்காரனும்"

என்று வேளைக்காரன் வகுப்பில் அருணகிரியார் பாடுகிறார். நஞ்சுடைய பெரிய பாம்பாகிய வாசுகியையும் அந்த மயில் எடுத்து உதறுமாம். மாயையின் அடையாளமாகிய பாம்பின் நஞ்சு நம்மைத் தொடராமல் மயூரம் நம்மைக் காப்பாற்றும்.

பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே.

துணைகளின் வகை

இந்தப் பாட்டில் மெல்ல மெல்ல எளிய உபாயத்திலிருந்து அரிய உபாயம் வரைக்கும் அருணகிரியார் கூறி உபதேசிக்கிறார். இறைவனுடைய திருவடிவம் முழுவதும் நாம் கண்டு மனத்தில் வைத்துக் கொள்வது என்பது எளிய செயல் அன்று. அவனுடைய மெல்லிய மலர்ப் பாதங்கள் இரண்டையும் கண்களில் வைத்து

முதலில் பழக வேண்டும். அதோடு அவனுடைய திருநாமம் ஆகிய முருகா என்பதை நாக்கில் வைத்துச் சொல்லிப் பழக வேண்டும். பின்பு அவனுடைய பன்னிரு தோள்களையும் கண்டு தியானித்துப் பழக வேண்டும். இறைவனுடைய திருவடியையும், திருத்தோளையும் சேர்ந்து பார்த்தால் இறைவனுடைய உருவம் முழுவதும் தெரியும். பின்பு அவன் திருக்கரத்தில் உள்ள வேலை யும், அவனுக்கு வாகனமாகிய மயிலையும் தியானம் பண்ணி னால் அவன் கோலம் முழுமையும் நன்றாகப் புலனாகும். பாதத்தைக் கண்டாருக்குப் பார்வையில் தூய்மையும், தோளை நினைத்தாருக்கு மனத்திலே தூய்மையும், வேலையும், மயூரத்தை யும் தியானித்தாருக்கு நெஞ்சில் உறுதியும் உண்டாகும்.

இதில் மூன்று காலத்தினுடைய வினைப் பயன்களையும் அந்தப் பயனை மாற்றிக் கொள்வதற்கு வழிகளையும் சொல்லி யிருக்கிறார் அருணகிரியார். நிகழ்காலத்தின் தீய விளைவு களிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கு விழிக்கும் மொழிக்கும் துணையாகத் திருவடியையும் முருகா என்னும் நாமங்களையும் சொன்னார். இறந்த காலத்தின் தீய விளைவு களுக்கு மாற்றாகப் பன்னிரு தோள்களின் தியானத்தைச் சொன் னார். வருங்காலத்தின் தீங்கை மாற்றுவதற்கு வேலையும் மயிலையும் துணையாகச் சொன்னார்.

'வேலும் மயிலும்' என்று சொல்வது ஒரு மந்திரம் போன்றது. இடும்பன் இந்த மந்திரத்தைச் சொல்லி இரண்டு மலைகளைத் தூக்கிக் கொண்டு வந்தான் என்று ஒரு பெரியவர் சொல்லக் கேட்டிருக்கிறேன். 'வேலும் மயிலும் துணை' என்பது பல அடியார்களின் திருநாக்கில் மந்திரம் போல உதவுகிறது. இந்த இரண்டையும் ஒரு சேரச் சொல்வதைப் பழங்கால நூல் ஆகிய பரிபாடலில் பார்க்கிறோம்.

"விறல்வெய்யோன் ஊர்மயில் வேல்நிழல் நோக்கி"

என்று சேர்ந்து வருகின்றன.

"கிரணக்கலாபியும் வேலும் உண்டே"

என்று முன்பும் ஒரு பாட்டில் அருணகிரியார் சொல்லியிருக் கிறார்.

இதுவரைக்கும் சொன்னவற்றால் இறைவனுடைய வடிவக் காட்சியும், திருநாமத்தைச் சொல்வதும், அவனுடைய தியானமும் நம்முடைய மூன்று காலத் துன்பங்களையும் போக்கி என்றும் மாறாத இன்பத்தைத் தரும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காஎனும்
நாமங்கள் முன்செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும்செங்
கோடன் மயூரமுமே.

(நம்முடைய கண்களுக்குத் துணையாக இருப்பவை திருச்செங் கோட்டிலுள்ள முருகனுடைய மென்மையான மலரைப் போன்ற திருவடிகள்; உண்மை சிறிதும் குன்றாத மொழிக்குத் துணையாக இருப்பவை முருகா என்னும் திருநாமங்கள். முன் பிறவிகளில் செய்த தீய செயல்களுக்குத் துணை அவனுடைய பன்னிரண்டு திருத்தோள்களும் ஆம். யாவரும் பயந்த தனி வழியாகிய மரணத்துக்குப் பின் உள்ள வாழ்க் கைக்குத் துணை அவனுடைய வடிவேலும் மயிலும்.

விழிக்குத் துணை, விழிக்கு உண்டாகும் இடையூறுகளை நீக்கிப் பாதுகாப்பது. மொழியைத் தீய வழியில் செல்ல விடாமல் பாதுகாப்பவை நாமங்கள். பழிக்குத் துணை என்றது பழிக்குக் காரணமாகிய பாவங்களால் உண்டாகும் தீங்குகளினின்றும் பாதுகாக்கும் துணை என்றபடி. தனி வழிக்குத் துணை என்பது தனி வழியில் நேரும் துன்பங்கள் நம்மைச் சாராமல் காக்கும் துணை என்றபடி. மெய்ம்மை - உண்மை. மயூரம் - மயில்.)

சிவயோகம்

இறைவன் திருவருளைப் பெறுவதற்கு முயற்சி செய்யாமல் இருக்கும் மக்களைப் பார்த்துப் பெரியவர்கள் இரங்குவது வழக்கம். அருணகிரிநாதரும் அப்படி இரங்கிப் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். ஆனால் அவன் திருவருளைப் பெருகின்ற முயற்சியில் ஈடுபடுகின்ற சிலவகை மக்களிடத்தில் அருணகிரியாருக்கு இரக்கம் தோன்றுகிறது. இந்தப் பாட்டில் அத்தகைய இரக்கத்தைப் பார்க்கிறோம்.

இரக்கம்

முருகன் திருவருளில் ஈடுபட்டு இன்பம் பெறுவதற்குரிய வாய்ப்பு மனிதனுக்கு இருக்கும்போது, சரியான வழியில் போகாமல் கோணல் வழிகளில் சென்று துன்பப்படுகிறார்களே என்று அவருக்கு இரக்கம் பிறக்கிறது. ''பணம் இல்லாமல், பணம் ஈட்டவேண்டும் என்ற நினைப்பும் இல்லாமல் வறுமை ல் உழல்கின்றானே!'' என்று ஓர் ஏழையைப் பார்க்கும்போது ரக்கம் தோன்றுவது முறை. ஒருவனுக்கு அளவற்ற பணம் இருக் றது; ஒரு காசுகூடச் செலவழிக்காமல் லோபியாக இருக்கிறான். அவனைப் பார்த்து, ''இவனிடம் பணம் இருந்து என்ன பயன்?'' என்று இரக்கம் தோன்றுவது உண்டு. இதுவும் இயல்பானது. ஒருவன் அளவற்ற பணம் வைத்திருக்கிறான். லோபியாக இல்லாமல் செலவு செய்கிறான். அத்தகையவனிடத்தில் இரக்கம் தோன்றுகிறது. அப்படித் தோன்றுவதற்குக் காரணம் என்ன? அவன் பணத்தைச் சேர்த்து வைக்காமல் பிறருக்குக் கொடுக்கிறான் என்பது உண்மை. ஆனால் எந்த வழியில் செலவழிக்கிறான் என்பதைப் பார்க்க வேண்டும். தீய எண்ணத்தை வளர்த்து உடலின்பத்திற்குக் காரணமான மக்களுக்குப் பணத்தைக் கொடுத்தும், கொலை, கொள்ளை, திருட்டு முதலிய துறைகளில் பலருக்குக் கொடுத்தும் செலவு செய்தால் அந்தச் செலவு நல்லது

என்று சொல்ல முடியாது. அவன் நல்ல முறையில் செலவழிக்காமையினால் அவனைக் கண்டு பெரியவர்களுக்கு இரக்கம் உண்டாகும். அத்தகைய செல்வன் தன் செல்வத்தைச் செலவு செய்யாமல் இருப்பதே மேல் என்றுகூடத் தோன்றும். வீணாகத் தேர்தலில் லட்சக் கணக்காகச் செலவு செய்தல், அடிதடிக்கு ஆயிரம் பதினையாயிரம் என்று செலவு செய்தல், லஞ்சம் கொடுத்தல் முதலிய செலவினங்கள் முறைப்படி நடப்பவை என்று சொல்ல இயலாது. தன்னுடைய இன்பத்தைக் கருதாமல் பொது நலத்தைக் கருதி ஏழைகளுக்கு இரங்கிப் பணத்தைச் செலவழித்தால் அதுதான் நல்ல செலவு ஆகும். அப்படிச் செலவழித்த ஒருவன் ஏழையாகிவிட்டாலும் அவனை மக்கள் பாராட்டுவார்கள்.

பாவத்தில் பங்கு

பழங்காலத்தில் ஒரு கதை சொல்வார்கள். ஒருவன் தன் கையிலிருந்து நான்கணா ஓர் ஏழைக்குக் கொடுத்தானாம். அப்படிக் கொடுத்தவன் இறந்த பிறகு அவனை நரகத்திற்கு அழைத்துச் சென்றார்களாம். ''நான் தர்மந்தானே செய்தேன்? என்னை ஏன் நரகத்திற்கு அழைத்துக் கொண்டு செல்கிறீர்கள்?'' என்று கேட்டானாம். ''நீ பாத்திரம் அறிந்து தர்மம் செய்யவில்லை. அதனால் கொண்டு போகிறோம்'' என்று பதில் வந்தது. அவன் ஒன்றும் தெரியாமல் விழித்தான். ''நீ கொடுத்த நான் கணாவைக் கொண்டு அந்த ஏழை தூண்டில் முள் வாங்கி மீன் பிடித்தான். நீ அ...ப் பணத்தைக் கொடுத்தமையினால் பல மீன்களைக் கொன்றான். அந்தப் பாவத்தில் உனக்கும் பங்கு உண்டு''என்று சொன்னார்களாம்.

இந்தக் கதை அப்படியே நடந்தது என்பதற்காக நான் சொல்லவில்லை. நாம் செலவழிக்கிற பணம் நல்ல முறையில் பயன்படுமா என்பதை நன்கு தெரிந்தே கொடுக்க வேண்டும். இல்லையானால் நாம் கொடுக்கும் பணத்தால் தீமையே விளையும். பணம் செலவிடுவது பெரிது அல்ல. பாத்திரம் அறிந்து, பயன் அறிந்து செலவிட வேண்டும். இந்தக் கருத்தை இக்கதை புலனாக்குகிறது.

அல்லாத செலவுகளைக் கண்டு நல்லவர்கள் இரங்குவார்கள். திருடன் கையில் வாளைக் கொடுப்பதும், போக்கிரி கையில் பணத்தைக் கொடுப்பதும் ஒன்றே யாகும்.

தக்க வழி

இறைவன் உலகில் உள்ள உயிர்கள் தன் திருவருளைப் பெற்று உய்வு பெறவேண்டும் என்பதற்காகவே இந்த உடம்பையும், இந்த உடம்பில் கருவி கரணங்களையும் நாம் வாழ்வதற்குரிய பிரபஞ்சத்தையும், இதில் பலவகையான போகங்களையும் அருளியிருக்கிறான். இவற்றை வைத்துக் கொண்டு நல்ல முறையில் வாழ்கிறவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் செய்கிற காரியங்கள் யாவுமே இறைவன் திருவருளை அடைவதற்குக் காரணமானவை என்று சொல்ல முடியாது. அறியாமை காரணமாக நம்பாதவர்களை நம்பி, தெளிவு இல்லாததனால் பயன் இல்லாத துறைகளில் ஈடுபட்டு வாழ்க்கையை வீணாக்குகிறவர்களும் இருக்கிறார்கள். ஒரு பொருளைப் பெறவேண்டும் என்று விரும்புவது தவறு அன்று. ஆனால் அந்தப் பொருளைப் பெறுவதற்குரிய சரியான வழி இன்னதென்று தெரிந்து கொண்டே முயற்சி செய்ய வேண்டும். முயற்சி தோற்றதானால் 'வர்கள் கொண்ட விருப்பம் பயன்படாமல் ஒழியும்.

ஒரு மருத்துவனிடம் போகிறோம். அவன் நம் நோயை அறிந்து மருந்து கொடுக்கிறான். அந்த மருந்தைச் சாப்பிடுகிறோம். அப்போது இன்ன பத்தியம் இருக்க வேண்டும் என்பதை அவன் அறிவிக்கிறான். அவன் கொடுக்கிற மருந்தை மாத்திரம் குறிப்பிட்ட காலத்தில் சாப்பிட்டு அவன் சொன்ன பத்தியத்தை மேற்கொள்ளாமல் இருந்தால் நோய் போகாது. மருத்துவன் சொன்ன இரண்டையுமே நாம் கவனிக்க வேண்டும்.

அதுபோல இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்குரிய சாதனங்களை, பெருமக்கள் சொன்னபடி கடைப்பிடித்து, அவற்றுடனே வரும் இடையூறுகளைப் பாதுகாக்காமல் அவற்றுக்கு உட்பட்டால் நம் முயற்சி முழுவதும் பயன் அற்று ஒழியும்.

நூலும் அதிகாரியும்

ஒரு பொருளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முக்கியமாக மூன்று முறைகளைப் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சுருதி, யுக்தி, அநுபவம் என்பவை அவை. சுருதி என்பது பெரியவர்கள் சொன்ன நூல்கள். யுக்தி என்பது நம் பகுத்தறிவினால் அறிந்து தெளிவது. அநுபவம் என்பது நம் வாழ்க்கையில் நாமே தெரிந்து கொள்வது. இந்த மூன்றில் இறைவனைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு நம் யுக்தி பயன்படுவது இல்லை. நமக்கு அநுபவமும் இல்லை. ஆகையால் அவன் திருவருள் அநுபவத்தைப் பெற்றவர்கள் சொல்வதைக் கேட்டு நம்பவேண்டும். அவர்கள் சொல்வன நூல் வடிவில் இருக்கின்றன. நூல்கள் எல்லாமே நமக்குப் பயன்படும் என்று சொல்வதற்கில்லை. பெருமக்கள், யார் யாருக்கு எந்த எந்த நூல் பயன்படுமோ அந்த அந்த நூலைப் படித்துப் பயன் பெறட்டும் என்று எழுதி வைத்திருக்கிறார்கள். எல்லா நூல்களையும், எல்லோரும் படித்துப் பயன்பெற முடியாது. பொதுவாக, நூல்களைப் படிப்பதற்கு முன்னால் இந்த நூல்களைப் படிப்பதற்குரிய அதிகாரி இன்னார் என்ற வரையறை உண்டு. மருத்துவத்தைத் தெரிந்து கொள்ள வேண்டியவன் சோதிட நூலைப் படித்துப் பயன் இல்லை. யோகத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறவன் காம சாஸ்திரத்தைப் படித்துப் பயன் இல்லை. நூல் நல்லதாக இருந்தாலும் அதனைத் தெரிந்து கொள்ளும் பக்குவம் இல்லாதவர்கள் படித்தால் அவர்களுக்குத் தீய பயனே உண்டாகும்.

நூல்களால் தெரிந்து கொள்வன நமக்கு அநுபவத்தை உண்டாக்குவதில்லை. அவை வழியைக் காட்டும். அந்த வழியில் சென்று அநுபவத்தை ஊட்டுவதற்குரிய குருநாதனைத் தேடித் தலைப்பட வேண்டும்.

முயற்சியும் குருவும்

ஓர் ஊரில் ஒருவர் இருக்கிறார். அவரைக் காண வேண்டும் என்று போகிறோம். அந்த ஊர் எங்கே இருக்கிறது என்று தெரிந்து கொண்டு, அவர் உள்ள தெருவைத் தெரிந்து கொண்டு, அந்தத் தெருவில் அவர் வாழும் வீட்டைத் தெரிந்து கொண்டு, அவர்

பெயர் முதலியவற்றைத் தெரிந்து கொள்கிறோம். ஊருக்குச் சென்று, தெருவைத் தேடிக் கண்டுபிடித்து வீட்டையும் அடைந்து விடுகிறோம். ஆனால் அந்த வீட்டுக்குள் போகவேண்டுமென்றால் வீட்டுக்குள்ளே இருப்பவர் கதவைத் திறந்தாலன்றிப் போக முடியாது. ஊரை மூடுவார் யாரும் இல்லை. தெருவை மூடுவார் யாரும். ஆனால் வீட்டுக்கு உடையவன் தன் வீட்டைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டிருந்தாலும், பூட்டிக் கொண்டு வெளியில் சென்றிருந்தாலும் அவனைக் காண முடியாது. வீட்டுக்கு வரும் வரைக்கும் நம்முடைய முயற்சி பயன்படுகிறது. அதற்கப்பால் நம் முயற்சி மாத்திரம் இருந்தால் போதாது. வீட்டுக்கு உடையவன் கதவைத் திறந்து வரவேற்க வேண்டும்.

கதவைத் திறந்து வரவேற்பவரே குரு. ஆண்டவன் திருவருளை அடைவதற்கு முன்பு சரியை முதலிய சோபானங்களைக் கடந்து செல்கிறோம். அப்படிச் செய்தால் நல்ல குருநாதனுடைய காட்சி கிடைக்கும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றைத் தரிசிப்பதும் குருநாதனுடைய அருளைப் பெறுவதற்காகத்தான். ஊரைத் தேடி, தெருவைத் தேடி, வீட்டைத் தேடுகின்ற முயற்சிகளைப் போன்றன அவை. கதவு மூடி இருக்கும்போது நாம் வலியப் போய்த் தட்டிப் பயன் இல்லை. நாம் போனவுடனே உள்ளே இருப்பவன் தாழைத் திறந்து வந்தால் நம் பாக்கியமென்று நினைக்க வேண்டும். அப்படி இல்லாமல் கதவைத் தட்டினால், கை பலமாக இருந்தால் கதவு உடைந்து போகும்; கதவு பலமாக இருந்தால் கை வீங்கிப் போகும். இரண்டும் கூடாது.

ஆனால் குருநாதன் நம்பால் கருணை கூர்ந்து தாழைத் திறக்க வரும் சமயத்தில் சென்றால் கதவு திறந்து உள்ளே நுழையலாம். அல்லது கதவு திறக்கும் மட்டும் காத்து இருக்க வேண்டும். நம்முடைய முயற்சியோடு குருநாதனுடைய கருணையும் சேர்ந்தால்தான் நமக்கு நல்ல பயன் உண்டாகும்.

ஒருவரைக் காண்பதற்காக ஆயிரம் மைல்கள் கடந்து டெல்லியிருந்து ஒருவர் வருகிறார். நண்பர் ஊரில் இருப்பார், வீட்டில் இருப்பார் என்று எண்ணிக் கொண்டு ரெயிலை விட்டு இறங்கி டாக்ஸி வைத்துக் கொண்டு வேகமாக டெல்லிக்காரர் வருகிறார்.

வீட்டுக்கு வந்தவுடன் வீடு பூட்டி இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருக்கு எத்தனை ஆசாபங்கம் ஏற்படும்! அத்தகைய நிலை வரக்கூடாது என்று அருணகிரியார் சொல் கிறார். முயற்சிகள் எல்லாம் சரிவரச் செய்து, குரு நாதனுடைய கிருபையைத் தெரிந்து கொண்டு அந்த வகையில் நடக்கக் கூடிய வர்களுடைய முயற்சிதான் பயனைத் தரும். அதைச் சொல்ல வருகிறார். ஊர் தேடி வந்துவிட்டுத் தெருக் காணாமல் அலை கிறார்கள் பலர். அவர்களே யோகிகள்.

துருத்தி எனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்து
அருத்தி உடம்பை ஒறுக்கில்என் னாம்சிவ யோகம் என்னும்
குருத்தை அறிந்து முகம்ஆறுடைக்குரு நாதன் சொன்ன
கருத்தை மனத்தில் இருத்தும்கண் டீர்முத்தி கைகண்டதே.

போலி யோகம்

யோகிகளைப் பற்றி முன் இரண்டு அடிகளில் சொல்கிறார். அவர் ஏன் யோகத்தைத் தாக்கவேண்டும்? யோகம் நல்லது அல்லவா? முன்னாலே சொன்னது போலப் பணம் நல்லதுதான். ஆனால் அந்தப் பணத்தினால் தீங்கு அடைகிறவர்களைக் கண்டு பணமே தீங்குதான் என்று சொல்ல முடியாது. யோகம் நல்லது தான். ஆனால் யோகம் என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு பலர் தமக்குத் தீங்கு தேடிக்கொண்டு பிறருக்கும் தீங்கு செய்கிறார்கள். அதனால் யோகிகளைக் கண்டால் போலி யோகியா அல்லவா என்று மிக நாட்டத்தோடு பார்க்க வேண்டும். ஆழ்வார்களும், நாயன்மார்களும், அருணகிரியாரும் பலவிடங்களில் போலி யோகத்தைக் கண்டித்திருக்கிறார்கள்.

யோக மென்னும் படி

யோகம் என்ற பொருளுக்கு ஒன்று கூடுதல் என்று பொருள்; இணைப்பு என்றும் பொருள். பல வகையாகச் சிதறுண்டு போகா மல் மனம் அடங்கி ஒடுங்கிவர வேண்டும். அதுதான் யோகம்.

"யோகாத் சித்த வ்ருத்தி நிரோத:"

என்று பதஞ்சலி யோக சூத்திரத்தில் முதலில் சொல்கிறார். மனம் ஒருமைப்பட்டு நிற்க, இறைவனோடு ஒன்றுபட வேண்டும்.

இதற்காகத் தியானம் முதலியன செய்ய வேண்டும். சரியை, கிரியை, யோகம் என்று மூன்று படிகளைச் சொல்வார்கள். அந்த யோகம் ஞானம் என்ற லட்சியத்தை உடையது. யோகத்திற்கு மேலும் ஞானம் என்ற படி இருப்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். யோகத்தை முடிந்த முடிபு என்று கொள்ளக்கூடாது. ஞானிகள் அநுபவமாகிய கடைசிப் படியை மிதிக்கிறார்கள். யோகத்தில் மட்டும் முழுப் பயன் அடைய முடியாது. இறைவனுடைய நினைவு இல்லாமல் செய்கிற யோகம் பயன் படாது; ஞானமும் பயன்படுவதில்லை.

இடையே வரும் கிளுகிளுப்பு

யோகத்தைத் தொடங்கும்போது இறைவனுடைய திருவருளைப் பெறவேண்டும் என்ற நினைவோடுதான் பலர் தொடங்குகிறார்கள். யோகம் செய்வதனால் ஒருவகையான வலிமை உண்டாகும். இடையே சில வகையான கிளுகிளுப்புகள் உண்டாகும். அவற்றை அநுபவிக்கும்போது, இவையே யோகத்தினால் உண்டாகும் பயன் என்று சிலர் ஏமாந்து போகிறார்கள். என்றைக்கும் மாறாத இன்பத்தை, இறைவனுடைய திருவருள் இன்பத்தைப் பெற வேண்டும் என்ற நினைவு போய்விடும்.

வெளி ஊருக்குப் போய் நிறையப் பணம் சம்பாதித்துக் கொண்டு மீட்டும் சொந்த ஊருக்கு வந்து மனையாளோடும், உறவினர்களோடும் வாழ வேண்டும் என்று ஒருவன் நினைக்கிறான். யாவரிடமும் விடை பெற்றுக் கொண்டு வெளியூருக்குப் போகிறான். அங்கே போய்ப் பணம் சம்பாதிக்கிறான். அந்த ஊரில் ஒருத்தியுடன் அவனுக்கு நட்பு ஏற்படுகிறது. அங்கே வீடு கட்டிக் கொண்டு அவளோடு வாழ்கிறான். அவன் செய்வது அறம் ஆகாது.

அதுபோலவே யோகம் என்ற ஏணியை வைத்துக் கொண்டு இறைவனுடைய திருவருள் இன்பமாகிய லட்சியத்தை அடைய வேண்டும். அந்த அநுபவம் கிடைப்பதற்கு முன்னால் யோக நிலைகளில் பலவகை அநுபவங்கள் ஏற்படும். சாமானிய மனிதனுக்குக் கிடைக்காத அநுபவங்கள் அவை. யோகத்தில் மாத்திரம் அல்ல. பக்தி முதலிய நெறிகளிலும் இப்படி இடையிடையே சில உயர்ந்த அநுபவங்கள் கிடைக்கும். அந்த

அநுபவங்கள் உலகப்பற்றில் சிக்கி உழலுகின்ற மக்களுக்கு கிடைக்காதவை. ஆனால் அந்த அநுபவங்களை முடிந்த முடிவு என்று கருதி நாம் மிக உயர்ந்த நிலைக்கு வந்துவிட்டோம் என்று ஏமாந்து, அப்படியே நின்றுவிடுகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் மீட்டும் உலக மாயையில் சிக்கிக் கொண்டு தடுமாறிக் கீழே விழுந்துவிடுவார்கள். பல துறவிகளும், யோகிகளும் மிகவும் தீவிரமாக வைராக்கியத்தோடு சாதகம் செய்வார்கள். அதில் ஏதோ ஒரு நிலை வந்துவிடும். நமக்கு முடிந்த நிலை கிடைத்துவிட்டது என்று எண்ணி நின்றுவிடுவார்கள். கடைசியில் பெண் மயலில் சிக்கிக் கீழே விழுந்துவிடுவார்கள். இதற்கு உதாரணமாகப் பலரை நாம் பார்த்திருக்கிறோம். இதற்குக் காரணம் என்ன? அவர்கள் லட்சிய நிலையை அடையவில்லை. அடைந்திருந்தால் இந்த உலகமே எதிர்த்து நின்று மயக்கினாலும் அவர்கள் மனம் மயங்க மாட்டார்கள்.

மூன்று நாடிகள்

நாம் அடிக்கடி யோகம் என்று சொல்வது அஷ்டாங்க யோகத்தை. அதற்கு முக்கியமான பயற்சி மூச்சை அடக்குவது. நம்முடைய உடம்பில் மூன்று நாடிகள் இருக்கின்றன. முக்கியமான நாடிகள் அவை; இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்று சொல்வார்கள். இடப்பக்கத்தில் ஓடும் நாடிக்கு இடை கலை என்று பெயர்; வலப்பக்கத்தில் உள்ள நாடிக்குப் பிங்கலை என்று பெயர். இரண்டுக்கும் நடுவில் முதுகுத்தண்டின் நடுவிலே செல்வது சுழுமுனை என்ற நாடி. மூக்கில் இரண்டு துவாரங்கள் இருக்கின்றன. இடப் பக்கமாக மூச்சு வந்தால் இடைகலையில் மூச்சு ஓடுகிறது என்று சொல்வார்கள். அப்படியே வலப்பக்க மூக்கில் வந்தால் அது பிங்கலை நாடியில் ஓடும். சுழுமுனையாகிய நடு நாடியில் மூச்சு ஓடினால் இரண்டு மூக்கிலேயிருந்தும் ஒரே மாதிரி மூச்சு வரும். இந்த நடு நாடியின் வழியாக மூச்சு வெளிப்பட்டால் மனம் மிகத் தெளிவாக இருக்கும்.

மூச்சும் மனமும்

மூச்சுக்கும் மனத்துக்கும் தொடர்பு உண்டு. மூச்சுப் பிடித்துக் கொண்டிருந்தால் மனம் மயங்குகிறது. மூச்சு வழியாக மயக்க

மருந்தைக் கொடுத்தாலும் மனம் மயங்குகிறது. துக்கம் வந்தாலும், கோபம் வந்தாலும் மூச்சு வேகமாக வருகிறது. மூச்சு வாயு, மனமோ வாயுவின் அம்சம்.

"மனோவாயு நிற்கும் வண்ணம்"

என்று தாயுமானவர் பாடுவார். மூச்சுக் காற்றின் பயிற்சியினால் மனத்தையே மாற்றலாம் என்று யோகிகள் கண்டார்கள். அதற்காக இயல்பாக வரும் மூச்சை மாற்றினார்கள். இட நாடி, வல நாடி என்று மூச்சை மாற்றி மாற்றிப் பழகினால் நடுவில் மூச்சு வரும், மனம் தெளியும் என்று எண்ணினார்கள். மூச்சை உள்ளே இழுப்பதற்குப் பூரகம் என்றும், உள்ளே நிறுத்துவதற்குக் கும்பகம் என்றும், வெளியில் விடுவதற்கு ரேசகம் என்றும் பெயர். நாம் மூச்சை விடுவதும், இழுப்பதுமாக இருக்கிறோம்; நிறுத்துவது இல்லை.

வாசியோகம்

மூச்சை நிறுத்தப் பழகினால் மூலாதாரத்திலுள்ள அக்கினி மேலே எழும். ஆதாரந்தோறும் அந்த அக்கினி சென்று கடைசியில் ஆறு ஆதாரங்களும் கடந்து மேலே உள்ள சந்திர மண்டலத்தை முட்டும் என்றும், அங்கிருந்து அமுத தாரை ஒழுகும் என்றும், அதனை உண்டவர்கள் நரை திரை மூப்பு இல்லாமல் வாழ்வார்கள் என்றும் யோகியர்கள் சொல்வார்கள். அப்படிச் செய்யும் யோகத்திற்கு 'வாசி யோகம்' என்று பெயர். மூச்சை அதிக நேரம் நிறுத்தும் வலிமை கைவரப் பெறுபவர் யோகியர். சரியானபடி குருநாதன் அருள் பெற்றுத் தக்க வழியில் யோகம் செய்தால் அதனால் பயன் கைகூடும். அது மிகமிக அரிது. அல்லாதவர்கள் மூச்சு முட்டித் திணறுவார்கள்.

நாம் மூச்சு இழுத்துச் சிறிது நேரம் நிறுத்தி வெளிவிட்டால் உடம்பெல்லாம் படபடக்கும். கொஞ்சம் மயக்கம் வந்தது போல இருக்கும். மிகவும் சங்கடமான காரியம் அது. மனத்தை அடக்குவதற்கு இந்த வழி செயற்கை வழி; சிங்கத்தைக் கூட்டில் அடைத்து எங்கும் போகாமல் நிறுத்துவது போன்ற வழி. இதில் அபாயம் உண்டு. மந்திரத்தினால் சிங்கத்தை அடக்கி வைப்பது போலப் பக்தி உணர்ச்சியினால் மனத்தை எளிதில் அடக்கிவிடலாம்.

மனத் தெளிவு

மனத்தில் இறைவன் திருவுருவத்தைத் தியானம் பண்ணினால் நம்மை அறியாமல் சுழுமுனை நாடியில் மூச்சு ஓடும். மனம் தெளிவாக இருக்கும். மனம் தெளிவாக இருப்பதுதான் நம் லட்சியம். ஒரு குளத்தில் குனிந்து நம் முகத்தைப் பார்க்கிறோம். நீர் தெளிவாக அசங்காமல் இருந்தால் நம் முகத்தின் பிரதிபிம்பம் நன்றாகத் தெரியும். சிறிய கல் விழுந்து அசங்கினாலும் முகத்தைப் பார்க்க முடியாது. நீருக்கு அடியில் ஏதேனும் இருந்தால் தெளிவான தண்ணீரில் நன்றாகத் தெரியும். எவ்வளவு ஆழமாக இருந்தாலும் கீழே உள்ள பொருள் தெளிவாகத் தெரியும். குழம்பிய நீரில் கணுக்கால் அளவு கீழே இருக்கிற பொருள்கூடத் தெரியாது. நம் மனம் கவலையினாலும், உலக இயல் வாழ்க்கையில் அடைகின்ற ஆசாபாசங்களினாலும் கலங்கி இருக்கும்போது உள்ளத்தினடியில் இருக்கும் இறைவனைக் காண முடியாது. எல்லோருடைய உள்ளத்திலும் இறைவன் அந்தர்யாமியாக இருக்கிறான். அவனை மனம் தெளிவு பெற்றுத் தாமும் கண்டு, பிறரையும் காணும்படி செய்கிறவர்கள் பெரியோர்கள். நம் மனம் குழம்பி இருப்பதால் அந்தரங்கத்தில் உள்ள இறைவனுடைய திருவுருவம் நமக்குத் தெரிவது இல்லை. அந்தக் கலக்கம் தெளியத் தெளிய இறைவன் திருவுருவமும் தெளிவாகத் தோன்றும்.

அது மாத்திரம் அன்று. மனித மனத்திற்குள்ள சக்தி வேறு எதற்கும் கிடையாது. மனத்தை யார் கட்டுப்படுத்தி வைக்கிறார்களோ அவர்கள் பலவகையான காரியங்களைச் செய்ய வல்லவராவார்கள். மனத்தில் அடங்கிய சக்தி அணுக்குண்டைவிட மிக அதிகமானது. தெளிவான எண்ணம் படைத்தவர்களுக்குப் பிறருடைய எண்ணங்களும் தெரியும். எதை நினைத்தாலும் அதை நிறைவேற்றுகின்ற ஆற்றல் உண்டாகும்.

பிரணாயாமம்

மனம் தெளிவு அடைவதற்குத்தான் யோகம் செய்கிறார்கள். மூச்சை இழுத்து விடுகின்ற பிராணாயாமமே முதலில் செய்கிறார்கள். நாமும் பிராணாயாமம் செய்வது நல்லதுதான். அதை ஓரளவுக்குள் நிறுத்திக் கொள்ள வேண்டும். ஜபம் செய்கிறவர்

களுக்கு ஆரம்பத்தில் பிராணாயாமம் விதித்திருக்கிறது. சந்தியா வந்தனத்தில் பிராணாயாமம் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. அதைச் செய்யும்போது மந்திரத்தோடு செய்கின்றோம். அந்த மந்திரத்தில் இறைவனுடைய நினைவு வருவதற்குரிய குறிப்புகள் இருக்கின்றன. பிராணாயாமம் செய்து மனத்தைத் தெளிவுறச் செய்துகொண்டு தியானம் செய்தால் இறைவனுடைய திருவுருவம் மிகத் தெளிவாக மனத்தில் அமையும்.

உருவத் தியானம்

ஒரு நரியின் உடம்பில் தெள்ளுப்பூச்சி பிடித்துவிட்டதாம். நரி மிகவும் சாமர்த்தியம் உடையதாயிற்றே. அது ஒரு குச்சியை வாயில் கௌவிக் கொண்டு மெல்ல ஒரு குளத்தில் இறங்கியது. கால் அளவு தண்ணீருக்குப் போனவுடன் தெள்ளுப்பூச்சிகள் உடம்பில் ஏறின. பின்னும் கொஞ்சம் ஆழத்திற்குச் சென்றவுடன் கழுத்தளவும் தண்ணீரில் மறைந்தது. உடம்பில் இருந்த தெள்ளுப் பூச்சிகள் கழுத்தின் மேலும், தலையின் மேலும் உட்கார்ந்து கொண்டன. பின்பு தலையும் மூழ்கும்படியாக நீரில் சென்றது. அப்போது உடம்பில் இருந்த தெள்ளுப்பூச்சிகள் அத்தனையும் குச்சியைப் பற்றிக் கொண்டன. கடைசியில் நரி குச்சியைத் தண்ணீரில் மூழ்க விட்டுவிட்டுக் கரைக்கு வந்துவிட்டதாம். இவ்வாறு ஒரு கதை உண்டு. மாயை ஆகிய தெள்ளுப் பூச்சி நம்மைப் பற்றிக் கொண்டிருக்க, மாயையின் குட்டி போன்று இருக்கிற மனம் வேதனை தாளமாட்டாமல் எங்கெங்கோ போய் அலைந்து கொண்டிருக்கிறது. ஆண்டவனுடைய உருவமாகிய குச்சியைப் பற்றிக்கொண்டு தியானத்தில் மூழ்கினால் மலம் முதலியன அந்தக் குச்சியோடு போய்விடும். உருவத்தைத் தியானம் பண்ணப் பண்ண மனம் தெளிவுறுகிறது. இப்படி இறைவனைச் சகுணமாகத் தியானித்த பிறகு சகுணம் மறைந்து நிர்க்குண நாட்டம் ஏற்படும் என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

முதலில் மனம் ஒருமைப்பாடு அடைவதற்குப் பழகி, அந்த இயல்பு கைவந்த பிறகு தியானம் செய்தால், தியானம் முறுக முறுகத் திருவுருவம் மறைந்து மனமும் அடங்கிப் பின்பு இல்லையாகிவிடும். மனோலயம் உண்டாவதற்கு முன்னாலே மனம் ஒருமைப்பாடு அடைந்து நிற்பதற்கு இறைவனுடைய திருவுருவைத் தியானம் செய்ய வேண்டும்.

யோகம் செய்வது தியானம் கைகூடுவதற்குத்தான். இப்போது யோகத்தை ஆசனத்தோடு நிறுத்திவிடுகிறார்கள். ஆசனம் என்பது மேலே இருக்கிற யோக வழிகளுக்குத் துணையாக நிற்பது. அப்படியின்றிப் பள்ளிக்கூடத்தில் 'டிரில்' செய்வது போல, இன்ன இன்ன மாதிரியாக ஆசனம் போட வேண்டும் என்று சொல்லி உடல்பயிற்சி வகையைப் போல மக்கள் பண்ணுகிறார்கள். மனம் தெளிவு பெறவும், ஒருமைப் பாட்டுடன் இறைவன் திருவுருவத்தைத் தியானம் செய்யவும் ஆசனம் முதலிய யோக உறுப்புக்கள் பயன்படும். இதை இப்போது நாம் மறந்துவிட்டோம்.

ஹடயோகம்

பலர் யோகத்தில் ஒருவகையான நிலை வந்தவுடன் அதுவே பெரிது என்று நினைக்கிறார்கள். நீரில் மிதந்து காட்டுவதும், குழியில் பத்து நாட்கள் இருபது நாட்கள் இருந்து காட்டுவதும் ஆகிய செயல்கள் எல்லாம் செப்பிடுவித்தையைப் போன்ற சாமான்யச் செய்கைகளே. இவை ஹடயோகத்தைச் சார்ந்தவை. நாக்கை உள்ளே செலுத்தினால் சந்திர மண்டலத்திலுள்ள அமுதத்தை உண்ணலாம் என்று கருதி, நாக்கின் அடியில் உள்ள நரம்புகளை அறுத்து உள்ளே செருகி அதனால் சிலர் துன்பத்தை அடைவார்கள். இதை 'லம்பகம்' என்று சொல்வார்கள். இன்னும் சிலர் மெல்லிய துணியை உள்ளே விட்டு முழுமையும் விழுங்கிப் பின்பு எடுப்பார்கள். இப்படியெல்லாம் காயசுத்தி செய்ய வேண்டும் என்று சொல்வார்கள். இப்படிச் செய்யும்போது கண் பிதுங்கும்; வயிறு உப்பிக் கொள்ளும்; உடம்பு நடுங்கும். அநேக சமயத்தில் இந்தக் காரியத்தால் மூலத்திற்கே மோசம் வந்துவிடும். ஏதேனும் பெரிய வியாதி வரும்; அல்லது இறந்து போவார்கள்.

அருணகிரியார் இரக்கம்

இப்படி ஹடயோகங்களைச் சாதித்து, இடையிலே வருகின்ற விசேஷ ஆற்றல்களில் மயங்கி நின்று உலகத்தாரையும் ஏமாற்றுகின்ற யோகியர்கள் கூட்டத்தை அருணகிரியார் பார்த்தார். லட்சியமாகிய இறைவனுடைய திருவருளை மறந்துவிட்டு மூச்சை அடக்கி அதனால் வருகின்ற சிறிய இன்பங்களில் மயங்கி, அதோடு நின்று விடுகிறார்களே என்ற இரக்கம் அவருக்கு

உண்டாயிற்று. இறைவனிடத்தில் பக்தி இல்லாவிட்டால் எந்த யோகமும் கைகூடுவது இல்லை. யோகத்தின் பயனே சித்த விருத்தியை நிரோதனம் பண்ணுவது. ஆனால் யோகம் செய்வர் சிலர் உலகம் எல்லாம் தம்மைப் புகழ வேண்டுமென்ற பேராசை கொண்டு எல்லோரையும் ஏமாற்றப் பார்க்கிறார்கள். அவர் களுக்கு மனம் எங்கே அடங்குகிறது? மற்றவர்களைப் போலச் சிறிய சிறிய ஆசை அவர்களிடத்தில் இல்லை என்பது உண்மை தான். ஆனால் உலகத்தைக் கட்டியாள வேண்டுமென்ற பேராசை அவர்களிடத்தில் தலைப்படுகிறது.

சித்திகள்

முதலில் யோகம் செய்யும்போது மனத்தை அடக்க வேண்டு மென்றே தொடங்குகிறார்கள். ஆனால் இடையே வருகின்ற கிளுகிளுப்புகளிலும், சிலவகையான சித்திகளிலும் அவர்களே மயங்கி விடுகின்றனர். சிலர் கோயிலுக்குத் தர்மகர்த்தர்களாகப் போவார்கள். போகும்போது அவர்கள் மனத்தில் பக்தி இருக்கும். நல்ல தொண்டு புரியவேண்டுமென்ற நோக்கத்தோடு போவார் கள். ஆனால் போன பிறகு அங்கே கிடைக்கும் மலர், பிரசாதம், கௌரவம் ஆகியவற்றைக் கண்டு ஏமாந்து போய் ஆண்ட வனையே மறந்து விடுவார்கள். அதுபோல ஹடயோகம் பண்ணு கிறவர்கள் சுவாச பந்தனம் முதலியவற்றைப் பண்ணும்போது ஏதோ ஒருவகையான இன்பத்தைப் பெற்று, அந்த அளவில் நின்று இறைவனையே மறந்து விடுகிறார்கள். அவர்கள் செய்கிற காரியங்கள் எல்லாம் இந்த உடம்பு மறைந்து போனால் மறைந்து விடுபவை. உடம்பு உரம் உடையதாகவும், மேலும் மேலும் சாதனைகளைத் தருவதற்குரிய வன்மை உடையதாகவும் இருந் தால் போதாது. மனத்தை லயப்படுத்திக் கடைசியில் அதை மாய்க்கும் வகையில் யோகம் உதவி புரிய வேண்டும். இல்லை யானால் யோகம் செய்து பயன் இல்லை.

யோகியரை இழித்தல்

உலகத்தில் யோகம் செய்கிறவர்களில் பல பேர் தோல்வியுறு கிறார்கள். பல பேர் முறையோடு செய்ய முடியாதபடி திண்டாடு கிறார்கள். இன்னும் பல பேர் பலவகையான துன்பத்திற்கு

ஆளாகிறார்கள். ஏதோ லட்சத்தில் ஒருவர் யோகத்தின் ஒரு பகுதியில் சித்தி பெறுவதனால், அந்த ஆற்றல்களில் ஏமாந்து மேலே போக வேண்டுமென்ற எண்ணத்தை மறந்து விடுகிறார். இப்படிப் பார்க்கப்போனால் யோகத்தினால் இறைவனை அடைந்த வர்கள் மிகவும் குறைவு என்று தெரியவரும். அதனால்தான் ஆழ்வார்களும், நாயன்மார்களும், அருணகிரியாரும் யோகிகளைப் பலவிடங்களில் இழிவாகக் கூறியிருக்கிறார்கள். "இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்கும் அதற்கு வழியாக மனத்தைத் தெளிவு அடையச் செய்வதற்கும் பக்தி என்ற எளிய முறை இருக்கவும் இவர்கள் எல்லாம் வீணாக மூச்சை அடக்கித் திண்டாடுகிறார்களே!" என்ற இரக்கம் அருணகிரியாருக்கு உண்டாகிறது. "எங்கள் ஆண்டவனாகிய முருகப் பெருமான் திருவருளால் மிக எளிதில் இன்பத்தைப் பெறுவதற்குரிய வழி இருக்கவும், துருத்தியில் காற்று அடைப்பதைப் போல வாயுவை அடைத்து, அது எந்தத் துவாரத்தின் வழியாக வெளியேறலாம் என்று முட்டிப் பார்க்கும்படி செய்து திண்டாடுகிறார்களே! தமக்குத் தாமே விதிக்கின்ற தண்டனை அல்லவா இது? ஐயோ பாவம்!" என்று இரங்குகிறார்.

> துருத்தி எனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றி முறித்து
> அருத்தி உடம்பை ஒறுக்கில் என் ஆம்?

'காற்றை இழுத்துத் தோலினாலான துருத்தி உப்புவது போல வயிறு உப்பும்படியாகச் சுவாச பந்தனம் செய்து, உள்ளே உண்ட காற்றைப் பலபல பாகங்களுக்குச் சுற்றிக் கொண்டுபோய் முறித்துப் பரவும்படி செய்கின்ற செயல்களினால் உடம்புக்கு உண்டாவது துன்பந்தான். இவ்வாறு உடம்பைத் தண்டித்து வேதனை உண்டாகும்படி செய்தால் என்ன பயன் உண்டாகப் போகிறது?' என்று கேட்கிறார். இறைவனுடைய பக்தி இல்லாமல் இப்படிச் செய்வதால் எந்த வகையான பயனும் உண்டாவதில்லை என்பது அவரது கருத்து.

அருணகிரியார் காலத்தில் இப்படிச் சில யோகிகள் இருந் திருக்கக்கூடும். அவர்கள் மூச்சை அடக்கி வயிறு உப்பவும், கண் பிதுங்கவும் சிரமப்படுவதைப் பார்த்திருக்கலாம். இறைவனிடத் தில் பக்தி இல்லாமல், கோயில் மூலைகளில் மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டு, தாங்கள் சுவாசபந்தனம் செய்வதை விளம்

பரப்படுத்துவது போலச் செய்து கொண்டிருப்பார்கள். அப்படி யோகாசனம் செய்கிறவர்களைப் பார்த்து இரங்கி இதைப் பாடி யிருக்க வேண்டும் அருணகிரியார். பலவிடங்களில் யோகிகளைப் பார்த்து அவர் இரங்குகிறார்.

அசட்டு யோகி

திருப்புகழில் ஒரு பாட்டில் பின்வருமாறு சொல்கிறார்.

"அநித்தமான ஊன்நாளும் இருப்பதாக வேநாசி
அடைத்துவாயு ஓடாத வகைசாதித்
தவத்திலேகு வால்மூலி புசித்துவாடு மாயாச
அசட்டுயோகி ஆகாமல்."

யோகம் பண்ணுகிறவர்கள் என்ன சொல்கிறார்கள்? "யோகம் செய்தால் இந்த உடம்பு சாகாது. நரை திரை போய்விடும்; கருமை மறையாது; மூப்பு அண்டாது; கண் ஒளி மங்காது. பல காலம் சித்தர்கள் வாழ்கிறார்கள்" என்று சொல்கிறார்கள். மூக்கைப் பிடிக்கிற அனைவருமே சித்தர் ஆகிவிட முடியாது என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். இந்த உடம்பு என்றைக் காவது நிச்சயமாக மறைந்துவிடும். சோற்றைப் புசிக்கும்போதே உடம்பு சாகாமல் இருப்பது இல்லை. வெறும் காற்றைப் புசித்து உடம்பு சாகாமல் இருக்கும் என்றால் அது வேடிக்கை அல்லவா? ஐந்து பூதங்களின் சம்பந்தத்தினாலானது இந்த உடம்பு. இதை யோகம் முதலியவற்றாலும், மருந்து மூலிகைகளினாலும் நெடுங்காலம் வாழும்படி செய்யலாம். ஆனால் சாவாமல் செய்ய முடியாது. எந்தப் பொருளுக்குத் தோற்றம் உண்டோ அந்தப் பொருளுக்கு நிச்சயமாக மரணம் உண்டு.

"தோற்றம் உண்டேல் மரணம் உண்டு"

என்று சுந்தரர் சொல்கிறார். உடம்பை நெடுங்காலம் நீடித்து வைக்கிற வழி தெரிந்த ஒரு சித்தர் இருக்கிறார். ஐந்து பூதங் களினாலான பாண்டமாகிய இது மூல ஐந்து பூதங்களும் மாய்கிற பிரளய காலத்தில் மாய்ந்து விடும் என்று சொல்ல வேண்டிய தில்லை. ஆகவே பூதங்கள் எல்லாம் அழியும் மட்டும் அந்தச் சித்தர் இந்த உடம்போடு இருக்கலாம். அதற்குமேல் இருக்க இயலாது. 'அநித்தியமான இந்த ஊன் எப்போதும் இருக்கும்

என்று எண்ணி, வாயுவை அடைத்து ஓடாத வகை செய்து, அதனால் உண்டாகிற வெப்பத்தை மாற்றுவதற்காக பல மூலிகை களைப் புசித்து வாடுகின்ற ஆயாசத்தை உடைய அசட்டு யோகி' என்று மேல் சொன்ன திருப்புகழில் அவர்களைப் பரிகசிக்கின்றார்.

உடம்பைப் பலமுடையதாகச் செய்வது அவசியம். அதற் காக ஓரளவு பிராணாயாமம் செய்து உடம்பைச் சுத்தமாக வைத்திருக்கத்தான் வேண்டும். ஆனால் இந்த உடம்பை வலிமை யுடையதாக வைப்பதற்குக் காரணம் இறைவனுடைய திரு வருளைப் பெறும் கருவியாக இது இருப்பதுதான்.

"உடம்பினுள் உத்தமன் கோயில்கொண் டானென்
றுடம்பினை யான்இருந் தோம்புகின் றேனே"

என்பர் திருமூலர். உடம்பினால் அடையும் பயனைப் பெற்று விட்ட பிறகு இந்த உடம்பினால் எதுவும் பயன் இல்லை. இந்த உடம்பு என்றைக்கு நழுவும் என்று அதன் பிறகு எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள் பெரியவர்கள்.

கரும யோகி

வேறு ஓரிடத்தில் அருணகிரியார் இத்தகைய யோகிகளைக் கர்ம யோகிகள் என்று சொல்கிறார். கீதையில் சொல்கிற கர்மயோகம் அன்று. யாராவது தவித்தால் கர்மம் என்று நாம் சொல்கிறோம். பழைய பிறவியில் செய்த பாவத்தின் பயன் என்ற கருத்திலேயே அப்படிச் சொல்கிறோம்.

"அடைபடாது நாள்தோறும் இடைவிடாது போய்வாயு
　　அடையமீளில் வீடாகும் எனநாடி
அருள்பெறா அநாசார கருமயோகி ஆகாமல்
　　அவனிமீதில் ஓயாது தடுமாறும்
உடலம்வேறு யான்வேறு கரணம்வேறு வேறாக
　　உதறிவாச காதீத அடியூடே
உருகிஆரி யாசார பரமயோகி ஆமாறுன்
　　உபயபாத ராசீவம் அருள்வாயே."

உடல்வேறு, நான் வேறு, கரணங்கள் வேறு என்று ஆராய்ந்து, அவற்றில் பாசம் வைக்கக் கூடாது. பெரியவர்கள் வீடு வேண்டு மென்று கருதி அநித்தியமான உடம்பில் ஆசை வைக்கமாட்டார்

கள். யோகிகளோ இதனிடத்தில் பேராசை வைத்துக் கொண்டிருப் பார்கள். அதற்காக மூலிகைககளையும், தங்க ரேக்குகளையும் உண்பார்கள். இந்த அநாசாரக் கர்மயோகிகளுக்கு உடம்பைப் பேணுகின்ற சிற்றின்பத்தில் ஆசை இருக்கிறது என்று சொல்ல வேண்டும். உடம்பை வேறு வகையில் பேணி இந்திரிய சுகத்தை வளர்க்கின்ற மக்களுக்கும் இவர்களுக்கும் பல வகையில் பொதுமை உண்டு. உடல் வேறு, நான் வேறு, கரணம் வேறு என்று தனித்தனியாகப் பிரித்துப் பார்த்து அவற்றின்பால் ஆசை வைக்காதிருக்க வேண்டும் என்று அருணகிரியார் வேண்டுகிறார்.

"வாசகாதீத அடியூடே
உருகி ஆரியாசார பரம யோகி யாமாறுன்
உபயபாத ராசீவ மருள்வாயே."

மனம் இரண்டு விதத்தில் அழிந்து போகும். அதைக் காற்றாக்கி விடலாம்; அல்லது நீராக உருக்கிவிடலாம். யோகம் செய்பவர்கள் இதனைக் காற்றாக எண்ணி அடைத்து வெளியில் போகாமல் நிறுத்த முயல்கிறார்கள். சரியானபடி அடைத்து நிறுத்தாவிட்டால் எங்காவது பிய்த்துக்கொள்ளும். ஆனால் அன்பர்கள் இறைவன் குணங்களில் உருகி உருகி மனத்தை இல்லை ஆக்குகிறார்கள்.

"ஆண்டவனே! வாக்குக்கு அப்பாற்பட்டு இருக்கிற உன்னுடைய திருவடி மலரை எண்ணி உருகி மனம் அற்றுப்போன ஆரிய ஆசார பரம யோகிகள் இருக்கிறார்களே. அவர்களுக்குக் கிடைக்கின்ற நிலை எனக்கு வேண்டும்" என்று அருணகிரியார் வேண்டுகிறார்.

"உருகி ஆரியாசார பரம யோகி யாமாறுன்
உபயபாத ராசீவ மருள்வாயே."

அவர்களும் யோகிகள்தாம். மனத்தை வென்றவர்கள் யாவருமே யோகிகள். இப்போது யோகி என்று சொன்னால் ஹடயோகம் செய்கிறவர்களையே நினைக்கிறோம். ஆனால் பக்தி செய்கின்றவனும் யோகிதான். அவனைப் பக்தி யோகி என்று சொல்வது வேதாந்த சம்பிரதாயம். பக்தி யோகி, கர்மயோகி, ஞானயோகி என்று யோகிகளைப் பிரிப்பார்கள். மூச்சை அடக்கிக் கஷ்டப் படுகிறவர்கள் ஹடயோகிகள்.

காற்றை அடைத்து உள்ளே கும்பித்து மனத்தை வேலை செய்யாமல் தம்பிக்கச் செய்து அப்புறம் இல்லாமல் செய்வது

எல்லோருக்கும் சாத்தியமான காரியம் அன்று என்பதை இது வரைக்கும் பார்த்தோம்.

எளிய வழி

அப்படியானால் மனத்தை அடக்காமல் அதன் போக்குப்படி விட்டுவிடலாமா? இறைவன் திருவுருவை மனத்தில் கொள்ள வேண்டும். தியானம் சித்திக்க வேண்டும் என்றால் அதற்கு யோகத்தை அன்றி வேறு வழி இருக்கிறதா? நிச்சயமாக இருக் கிறது. யோகத்தைவிட மிக எளிதிலே இறைவன் திருவருளைப் பெறுவதற்கு ஏற்ற வழி உண்டு. அதுதான் பக்தி. மனம் இறை வனுடைய திருத்தாள் நினைவினால் உருகிவிட்டால் மனம் இல்லாமல் போய்விடும். நம்முடைய மனத்தில் அவனுடைய திருவடி மலர்களைப் பதித்துத் தியானம் செய்ய வேண்டும். அப்படித் தியானம் செய்கின்ற நிலை எனக்கு வரவேண்டும் என்று அருணகிரியார் இந்தத் திருப்புகழ்ப் பாட்டில் வேண்டுகிறார்.

"உபயபாத ராசீவம் அருள்வாயே."

தாயுமானவர் கூற்று

தாயுமானவர் மனம் அற்ற தூய பரிசுத்த நிலை அடை வதற்குப் பலபல இடங்களுக்குச் சென்று ஓடி அலைந்தார். எந்த யோகிகளைக் கண்டாலும் அவர்களிடத்தில் ஏதாவது உண்மை இருக்குமோ, அநுபவம் இருக்குமோ என்று எண்ணி ஏங்கி, அவர்களை நாடிச் சென்று முடிவில் உண்மையான அநுபவம் எங்கும் தட்டுப்படாமல் அலைந்தார். அப்படி ஓடி ஓடி அலைந்த அவருக்கு அருணகிரிநாதரின் திருவாக்கில் பற்று விழுந்து விட்டது. கந்தர் அநுபூதியை அவர் பாராட்டினார். யோகிகளோடு சேர்ந்து யோகத்தையும் செய்தார் போலும். ஞான அநுபவ வாக்கைக் கண்டபிறகு அவற்றையெல்லாம் விட்டுவிட்டார். அதற்கு முன்பு அவர் தாம் பட்ட அவஸ்தையைப் பாடுகிறார்.

"சோற்றுத் துருத்திச் சுமைசுமப்பக் கண்பிதுங்கக்
காற்றைப் பிடித்தலைந்தேன் கண்டாய் பராபரமே."

இந்த உடம்பு சோற்றினால் வளர்ந்த துருத்தி போன்றது. உள்ளே காற்றை அடைத்து வயிறு உப்புவதனால் துருத்தி என்று சொன்

னார். மூச்சை வாங்கி வெளிவிடும் பழக்கம் நமக்கு இருக்கிறது. தூங்கும்போது அது நன்றாகத் தெரியும். பெரிய வயிறு உடையவன் ஒருவன் குறட்டை விட்டுத் தூங்கும்போது வயிற்றை மாத்திரம் கவனித்தால் போதும். துருத்தி உப்பி வடிவது போலத் தோன்றும் "இந்தத் துருத்தி என்னும் சுமையைப் பலகாலம் சுமக்க வேண்டும் என்பதற்காகக் கண் பிதுங்கக் காற்றை உள்ளே அடைத்து அலைந்து திரிந்தேனே! சோற்றுத் துருத்தியைக் காற்றுத் துருத்தியாக்கி அலைந்ததனால் ஒரு பயனும் காணவில்லையே பராபரமே!" என்று வருந்துகிறார் தாயுமானவர்.

மற்றொரு பாட்டில்,

"சும்மா இருக்கச் சுகம்உதய மாகுமே
இம்மாயா யோகமினி ஏனடா – தம்அறிவின்
சுட்டாலே யாகுமோ சொல்லவேண் டாங்கன்ம
நிட்டா சிறுபிள்ளாய் நீ."

கன்மநிட்டா என்றால் கர்ம யோகியே என்று பொருள். இவர்கள் செய்கின்ற மாய யோகத்தினால் பயன் இல்லை. அதனால் இன்பம் சாதிக்க ஒண்ணாது என்பது அவர் கருத்து.

இப்படியெல்லாம் யோகத்தைப் பலபடியாக இழிவாகப் பேசிய பெருமக்களுடைய கருத்துக்களைப் பார்க்கும் போது, யோகத்தினால் இறைவனுடைய திருவருளை அடைதல் மிக மிக அரிது என்பது தெளிவாகும்.

வேறு வழி

துருத்தி எனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றி முறித்து
அருத்தி உடம்பை ஒறுக்கில் என்னாம்?

என்று கேட்கும் அருணகிரிநாதரை, "பின்னே என்னதான் செய்வது?" என்று நாம் கேட்கிறோம். "அங்கே போகாதே" என்று ஒரு குழந்தையைத் தடுத்தால், "பின்னே எங்கே போவது? அதற்கு வழி என்ன?" என்று அது கேட்கும். அப்படிக் கேட்கிற கேள்விக்கு அருணகிரிநாதர் விடை சொல்கிறார்.

சிவயோகம் என்னும்
குருத்தை அறிந்து முகம் ஆறுடைக் குருநாதன் சொன்ன
கருத்தை மனத்தில் இருத்தும் கண்டீர் முத்தி கைகண்டதே.

சிவயோகம் என்று கூறுகின்ற முறையைத் தெரிந்து, ஆறு திரு முகங்களை உடைய குருநாதன் உபதேசித்தருளியதை மனத்தில் இருத்தினால் முத்தி கைகண்டதாகுமாமம். 'அத்தகைய தியானத் தால் கைமேல் பலன் உண்டாகும்.' என்று அருணகிரியார் சொல்கிறார்.

அருணகிரியார் முன்னாலே சொன்ன ஹடயோகத்தை மறுத்து வேறு ஒரு யோகம் சொல்கிறார். அவயோகத்தைச் சொல்லாமல் சிவயோகத்தைச் சொல்கிறார். அது ஆறு முகங் களையுடைய குருநாதன் உபதேசம் செய்தது என்று அடையாளம் காட்டுகிறார்.

சிவயோகம் எனும் குருத்தை அறிந்து.

வாழை மரம் இருக்கிறது. நீரைக் கொண்டுபோய் அதன் இலை யிலோ தண்டிலோ கொட்டுவது இல்லை. இலை நன்றாக வளர வேண்டும் என்றும், பூவிட்டுக் காய் காய்த்துக் கனி கனிய வேண்டும் என்றும் நினைக்கிறவர்கள் அந்த அந்த இடத்தில் தண்ணீர் விடுவது இல்லை. எங்கே வேர் இருக்கிறதோ அங்கே விடுவார்கள். அப்படி யோகத்தின் ஆதாரமானது எங்கே இருக்கிறது, அதன் குருத்து எங்கே, முளை எங்கே என்று கண்டு கொள்ள வேண்டும். சிவயோகம் என்பது எல்லாவற்றுக்கும் மேலான யோகம். அதை ஆறுமுகமுடைய குருநாதன் உபதேசம் செய் தான். அதை மனத்தில் நிறுத்திக் கொண்டு வழிபட வேண்டும். அதனால் பயன் உண்டாகும் என்று இங்கே சொல்கிறார்.

பூட்டும் சாவியும்

சிவயோகம் என்ற பெயரைச் சொன்னாரேயன்றி அது என்ன வென்றே தெரியவில்லையே. "சிவயோகம் என்னும் குருத்தை அறிந்து கொள்ளுங்கள். முகம் ஆறுடைக் குருநாதன் சொன்ன கருத்தை மனத்தில் இருத்துங்கள். முத்தி கைமேல் கிடைக்கும்" என்று சொல்லிவிட்டு அந்தச் சிவயோகம் என்றால் என்ன என்று அடையாளம் சொல்லவில்லையே!

கந்தர் அலங்காரத்தைப் படித்தவர்கள் திருப்புகழையும் படிப் பார்கள் என்று அருணகிரிநாதர் கருதியே அப்படிச் சொல்லாமல் விட்டார். அவருடைய கருத்தை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவர் இயற்றிய நூல்களைப் பார்த்தால் விளங்கும். ஒரு புலவருடைய கருத்து ஏதேனும் ஓர் இடத்தில்

விளக்கமாக இல்லாவிட்டால் பிறிதோரிடத்தில் விளக்கமாக இருக்கும். பெரிய நூல்களைப் படிப்பவர்களுக்கு இந்தக் கருத்து விளங்கும். சொல்லக் கூடியவற்றை ஒரே பாட்டில் சொல்லிவிட முடியாது. ஆகையால் அந்த அந்த ஆசிரியர்கள் தம் உள்ளக் கருத்தை அங்கங்கே வைத்திருப்பார்கள். நூல் முழுவதையும் படித்தால்தான் கவிஞன் இதயம் முழுவதும் தெரியும். சில பாடல்களைப் படித்துவிட்டுக் கவிஞன் இதயம் முழுவதும் கண்டுவிட்டவர் போலச் சிலர் ஆராய்ச்சி செய்கிறார்கள். அதனால் வருகிற தீங்குக்கு அளவேயில்லை.

பெட்டியை எப்போதும் திறந்து போட்டிருக்கமாட்டார்கள். அதைப் பூட்டினால் அதன் சாவியை அந்தப் பெட்டியின் வாயிலே வைத்திருக்கமாட்டார்கள். சாவி வேறிடத்தில் இருக்கும். சாவியைத் தேடிப் பெட்டியைத் திறந்தால் அதன் உள்ளே இருக்கும் பொருள் இன்னது என்று தெரிந்து கொள்ளலாம். சட்டென்று போய் ஒரு சாமானை எடுப்பதாக இருந்தால், வெளியில் இருந்தால் எடுத்துக் கொள்ளலாம். பெட்டியில் வைத்துள்ள அருமையான பொருளைச் சாவியைத் தேடித்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த முறையில் அருணகிரியார் இந்தப் பாட்டில் சிவ யோகம் என்பதைச் சொன்னார். அதற்குச் சாவி இங்கே இல்லை. ஆறுமுகமுடைய குருநாதன் சொன்னான் என்று மாத்திரம் சொன்னார். இதனைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் நமக்குப் பொறுமையும், முயற்சியும் இருக்க வேண்டும். மிக அரிய உபதேசமாதலால் நமக்கு ஆர்வம் உண்டாக வேண்டும் என்பதற்காக இப்படிச் சொல்லி வைத்தார் என்றும் கருதலாம். சிவயோகத்தைப் பற்றித் தாம் வேறிடத்தில் சொல்லியிருப்பதை நாமே தேடிக் கண்டுபிடித்துக் கொள்ளட்டுமே என்று சுருக்கமாகச் சொன்னார் போலும்.

நாம் கொஞ்சம் தேடிப் பார்க்கலாம். கந்தர் அலங்காரத்தைப் படிப்பவர்கள் திருப்புகழையும் கொஞ்சம் தேடிப் பார்த்தால் சிவயோக இலக்கணத்தை அங்கே அருணகிரியார் எவ்வாறு சொல்கிறார் என்பது தெரியவரும்.

சிவயோகம்

திருப்புகழில் ஓரிடத்தில் சொல்கிறார்.

“ஐந்து பூதமும் ஆறு சமயமும்
மந்த்ர வேத புராண கலைகளும்
ஐம்ப தோர்வித மான லிபிகளும் – வெகுரூப
அண்ட ராதிச ராசர முமுயர்
புண்ட ரீகனு மேக நிறவனும்
அந்தி போலுரு வானு நிலவொரு – வெயில் காலும்
சந்த்ர சூரியர் தாமும் அசபையும்
விந்து நாதமும் ஏகவடிவம
தன்சொ ரூபம தாக உறைவது – சிவயோகம்.”

பஞ்சபூதங்களாகிய அடிப்படைத் தத்துவம் முதற்கொண்டு நாத தத்துவம் வரைக்கும் எல்லாத் தத்துவங்களும் ஒன்றன் விரிவு என்று கருதி, அந்த நிலையில் எல்லாவற்றையும் ஒன்றாக நினைந்து கொண்டு அநுபவித்து நிற்பதுதான் சிவயோகம் என்று அந்தப் பாட்டில் சொல்கிறார்.

''எல்லாம் ஒன்றுதான். இதனை நான் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறேன்'' என்று ஒருவர் சொல்லலாம். அப்படிச் சொல்வதற்கும், நினைப்பதற்கும் தனித் திறமை வேண்டும். அப்படிச் சொன்னாலும் போதாது. எங்கும் இறைவன் இருக்கிறான் என்பதை நூல்கள் சொல்கின்றன. அமெரிக்கா கண்டம் என்று ஒன்று இருக்கிறது என்று ஒருவர் சொல்லிக் கேட்டும், நூல்களில் படித்தும் அறிந்தால், அது இருக்கிறதென்று உண்மையைத் தெரிந்து கொள்கிறோம். ஆனால் அது எப்படி இருக்கிறது என்று நமக்குத் தெரியாது. அதுபோல இறைவன் எங்கும் இருக்கிறான் என்பதை நூல்கள் சொல்வதைக் கேட்டு நாம் நம்புகிறோம். ஆனால் அதை அநுபவத்தில் உணருவது இல்லை. உலகிலுள்ள எல்லாவற்றையும் இறைவனாகவே காணவேண்டுமென்ற ஆசை உள்ளவன் முதலில் அந்த நினைவை மனத்தில் அழுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். மெல்ல மெல்ல அந்த நினைவில் ஈடுபட்டு உள்ளத்தை ஒன்றுபடுத்தினால் இறைவன் என்ற நினைவே மிக்கு நம்முடைய நினைவு குறைந்து போகும். இப்படி எல்லாம் மறைந்து ஏக வடிவம் ஆகியவனது நிலையைத் தான் சிவயோகம் என்று இந்தப் பாட்டில் அருணகிரியார் சொன்னார்.

தத்துவங்கள் எல்லாவற்றுக்கும் முதலாக இருப்பது நாத தத்துவம். முடிவாகிய தத்துவமாக இருப்பது பூமியாகிய பிருதிவி. மொத்தம் முப்பத்தாறு தத்துவங்கள். இவற்றின் விரிவையே தொண்ணூற்றாறு தத்துவங்கள் என்றும் சொல்வார்கள். தோற்றத்தில் முதல் தத்துவமாக இருப்பது முடிவில் கடைசித் தத்துவமாக இருக்கிறது. ஒடுங்கும்போது கடைசியில் ஒடுங்குவது தோன்றும் போது முதலில் தோன்றும் தத்துவமாகும். தத்துவங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டு நிற்கிற எம்பெருமான் தத்துவங்கள் எல்லாவற்றுக்கும் கடைசியாக இருக்கிற தத்துவமாகிய மண்ணைத் தன் தலைமீது சுமந்தான். இந்தத் திருவிளையாடலை நாம் கேட்டிருக்கிறோம். தன் அடியாரைக் காப்பதற்காக நாத தத்துவத்துக்கும் மூலமாக உள்ள சிவ தத்துவமாகிய இறைவன் கடைசித் தத்துவமாகிய பிருதிவியைத் தன் தலைமேல் வைத்துக் கொண்டான் என்றால் அவனுடைய பெருங் கருணைத்திறம் புலனாகிறது. இந்த இரண்டு தத்துவங்களுக்குமிடையே உள்ள தத்துவங்களும் இறைவனிடமிருந்து விரிந்தன என்பதை அநுபவத்தில் காண வேண்டும். இறைவனாகிய பெருங்கடலில் தோற்றுகின்ற அலைகள் அவை. அலைகள் என்று பார்க்கும் போது கடலாகவே தோற்றுகின்றன. கடல் இல்லாமல் அலை இல்லை. ஆனால் அலை இல்லாமல் கடல் உண்டு. இறைவன் இல்லாமல் தத்துவங்கள் இல்லை. ஆனால் தத்துவங்கள் இல்லாமல் இறைவன் உண்டு. குமிழ் என்றும் நுரை என்றும் கழி என்றும் நீர் நிலை என்றும் சொல்கிற பகுதிகள் எல்லாமே கடலின் பல்வேறு நிலைகள்.

'ஐந்து பூதமும், ஆறு சமயமும், மந்திர வேத புராண கலைகளும், ஐம்பத்தொரு லிபிகளும், அண்ட சராசரமும், பிரம்மா முதலிய திருமூர்த்திகளும், ஆகாசம் சந்திரன் சூரியனும் ஆகிய எல்லாமே ஆண்டவனாகிய பெரிய கடலின் அலைகள் என்பதை உணர்ந்து நாமும் அந்தப் பெரிய தத்துவத்திலே கரைந்து நிற்கிற நிலைதான் சிவயோகம்' என்பது அருணகிரியார் கருத்து.

எல்லாம் இறைவன் மயம்

இந்த நிலை வரவேண்டுமானால் நாம் பார்க்கிற பொருள்களை எல்லாம் இறைவனுடைய திருவுருவாகப் பார்க்க வேண்டும்.

எல்லாவற்றிலும் இறைவன் இருக்கிறான் என்பதைக் கேட்டும் கற்றும் செய்தி அளவில் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம் நாம். விலங்குகளுக்கு அதுகூடத் தெரியாது. அந்த அளவுக்கு நாம் பாக்கியசாலிகள். ஆனால் மூளையில் ஏற்றுமதி செய்து கொண்ட வெறும் செய்தியாக இல்லாமல் இதயத்தில் ஏற்றுமதி செய்து கொண்ட உணர்ச்சியாக மாறி, பின்பு ஆன்மாவில் ஏற்றுமதி செய்கிற அநுபவமாக விளைய வேண்டும். அதற்குத் துணையாக இருப்பது அறிவுதான். ஆனால் அறிவோடு நின்றுவிடுவதால் அநுபவம் புலப்படாது. அறிவுக்கு மேலே உணர்ச்சி வரவேண்டும்.

"பார்க்குமிடமெங்கும்ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே"

என்று அநுபவிக்கின்ற நிலை வரும்போது எம்பெருமானுக்குள் எல்லாம் மறைந்துபோகும். இதற்கு ஆரம்பம், எல்லாம் அவன் உருவாகக் காணவேண்டும் என்ற ஆசையும் அப்படிக் காண்பதற் குரிய முயற்சியுந்தான்.

ஏதேனும் ஒரு பொருளின்பால் நமக்கு அதிகமான ஆசை இருக்குமானால் எந்தப் பொருளைப் பார்த்தாலும் அந்தப் பொருளோடு நம்முடைய மனத்திலுள்ள ஆசைப்பொருளையும் தொடர்புபடுத்திப் பார்க்கிற நிலை உண்டாகும். புதிதாகத் திருமணம் பண்ணிக்கொண்ட பெண்ணுக்கு எந்தப் பொருளைப் பார்த்தாலும் தன் கணவனோடு தொடர்புபடுத்த நினைக்கிற நிலை உண்டாகும். பார்க்கிற பொருள், தோழி வாயிலாகக் கேட்கிற செய்தி எல்லாவற்றையும் அவள் தன் நாயகனோடு தொடர்புபடுத்திப் பார்க்க முயல்வாள். இதற்குக் காரணமாக இருப்பது அவள் நெஞ்சில் உள்ள காதல். அதுபோல் இறைவனிடத்தில் உண்மையான பக்தி உண்டானால் உலகத்தி லுள்ள பொருள் எல்லாவற்றோடும் அவனைத் தொடர்பு படுத்திப் பார்ப்போம். இறைவனுடைய நினைப்பும், உலகப் பொருளைக் காணும் காட்சியும் சேர்ந்து சேர்ந்து வந்து பிறகு காதல் முறுகிவிட்டால் அந்தக் காட்சி மறைந்து இறைவன் நினைவே காட்சியாக மாறிவிடும். கடைசியில் இறைவனை யன்றிப் பிறிதொன்றையும் பாராத நிலை வந்து விடும். அதுதான் சிவயோகம் என்று தம் அநுபவத்தால் தெரிந்து கொண்டார் அருணகிரியார்.

உலகத்திலுள்ள பொருள்களை எல்லாம் இறைவனாகவே பார்ப்பதற்கு வழி உண்டு. தத்தாத்திரேய முனிபுங்கவர் உலகத்திலுள்ள பொருள்களை எல்லாம் தமக்கு உபதேசம் செய்கின்ற குருவாகக் கண்டார் என்று சொல்வார்கள். பாகவதத்தில் இந்தக் கதை வருகிறது. தாசியைக் கண்டு, ''நான் உன்னைப்போல இருக்க வேண்டும்'' என்று அவர் சொன்னாராம். ''இன்பம் வந்தாலும், துன்பம் வந்தாலும், நோய் உடையவனாக இருந்தாலும்,நோய் அற்றவனாக இருந்தாலும் வருகிறவனுடைய பொருளிலேயே அவளுக்குக் குறி இருப்பதுபோல, இந்த உலகத்தில் எவ்விதமான நிலை எனக்குக் கிடைத்தாலும் எப்போதும் இறைவனைக் குறியாகக் கொண்டு நிற்கவேண்டுமென்பதை உன்னிடத்தில் தெரிந்துகொண்டேன்'' என்று கூறினாராம். அவருக்கு அத்தகைய காட்சியும், கருத்தும் இருந்தன. அந்த வகையில் அவர் மன வளர்ச்சி பெற்றிருந்தார்.

பழக்கமும் அநுபவமும்

நாமும் அந்த வகையில் முயற்சி செய்து பழகினால் முகம் ஆறுடைக் குருநாதனாக எல்லாவற்றையும் பார்க்கும் நிலை வரும். அந்த நிலை எப்போது சித்திக்கிறதோ அப்போது நமக்குச் சிவயோக சித்தி உண்டாகும். அதற்கு வழி, எல்லாமாக எல்லாவிடத்திலும் இறைவன் இருக்கிறான் என்று எண்ணி, அவன் இருப்பதைக் காணவேண்டும் என்ற பேராசையை உள்ளத்தில் வளர்த்துக் கொள்வதுதான். இது ஆசை என்று பெயர் பெற்றாலும் இதுவே பக்தியில் ஓர் நிலை. இதுவே மிக எளிய வழி என்று தோன்றுகிறது அருணகிரியாருக்கு. இதுவே கஷ்டமாக இருக்குமானால், மூச்சைப் பிடித்து அடைத்து உடம்பை ஒறுத்து நடயோகம் செய்வதனால் இறைவனைக் காண்பது என்பது எத்தனை கடினமானது! அன்பு செய்யத் தெரிந்த மனிதனுக்கு, அன்பு வைக்கும் பொருளைப் பற்றிய நினைவு பார்க்கும் பொருளிடத்தில் எல்லாம் வருகிற நிலை உள்ள மனிதனுக்கு, இறைவனிடத்தில் அன்பு வைக்கும் பழக்கம் உண்டாகிவிட்டால் உலகம் முழுவதும் அந்தப் பொருளுக்கு இடமாகவே ஆகிவிடும். இது மனிதனுடைய மன இயல்புக்கு ஒத்தது. ஆகையால் பக்தி செய்வது மிகவும் எளிது என்று பெரியவர்கள் சொல்கிறார்கள்.

''மிகவும் துன்பப்பட்டு, மனம் ஆயாசமடைய, மூச்சாகிய வாயுவை நிறுத்தி வெளியே ஓடாமல் உள்ளே அடக்குவதனால் வயிறு உப்பி, கண் பிதுங்குகிறது; உடம்பு நடுங்கிறது. இத்தகைய ஹடயோகத்தினால் இறைவனை அடைவது முடியாது. அப்படி இன்றி ஆறுமுகநாதனுடைய உபதேசப்படி, அவனுடைய திருத் தாளில் பக்தி செய்து அவனே எங்கும் எல்லாப் பொருளுமாக இருக்கிறான் என்ற அறிவு பெற்று, பின்பு உணர்ச்சி பெற்று, அதன் பின்பு அனுபவம் பெறுகின்ற சிவயோகமாகிய நிலை மிக எளிது. இந்தக் கருத்தை முருகப் பெருமான் எனக்கு உபதேசம் செய்தான். இதை நீங்களும் மனத்தில் இருத்தி வைத்து அந்த வழியில் செல்வீர்களானால் முத்தி கைகண்ட பொருளாகும்'' என்று அருணகிரியார் நமக்கு உபதேசம் செய்கிறார்.

துருத்தி எனும்படி கும்பித்து
 வாயுவைச் சுற்றிமுறித்து
அருத்தி உடம்பை ஒறுக்கில்என்
 ணாம்?சிவ யோகம்என்னும்
குருத்தை அறிந்து முகம்ஆ
 றுடைக்குரு நாதன் சொன்ன
கருத்தை மனத்தில் இருத்தும்கண்
 டீர்முத்தி கைகண்டதே.

(உலகத்து மக்களே! வாயுவைத் துருத்தியில் ஊதுவதைப் போல (உள்ளிழுத்து) வெளியே விட்டு அதை நாடிகளில் சுற்றும்படி மாற்றி, நம் ஆசைக்குரிய உடம்பைத் துன்புறுத்துவதனால் என்ன பயன் உண்டாகும்? சிவயோகம் என்னும் மூலத்தைத் தெரிந்து கொண்டு ஆறுமுகங்களை யுடைய குருநாதன் உபதேசம் செய்த உண்மைக் கருத்தை மனத்தில் வைத்து வழிபடுங்கள்; அப்போது முத்தி கைகண்ட அநுபவமாகும்.

கும்பித்தல் - மூச்சை வெளியே விடுதல். அருத்தி - விருப்பம். குருத்து - மூலம், கருத்து என்றது இறைவன்பால் பக்தி செய்து எல்லாமாக அவன் இருக்கிறான் என்பதைப் பாவித்து உணரும் உண்மையை. இருத்தும் - இருக்கச் செய்யுங்கள். கைகண்டது - அநுபவத்திலே பெறத் தகுவது; எளிது என்றபடி.)

தாழ்வு இல்லை

1

மங்கல வாசகம்

சென்ற முறை ஹடயோகிகளைப் பார்த்து, எம்பெருமான் திருவடியிலே பக்தி இல்லாமல் உடம்பை வருத்தி யோகம் செய்து பயன் இல்லை என்று சொல்லும் கருத்தையுடைய பாட்டைப் பார்த்தோம். இப்போது பார்க்கப் போகிற பாட்டில் அருணகிரிநாத சுவாமிகள் அருமையான மங்கல வாசகம் ஒன்றைச் சொல்கிறார். மங்கல வாசகம் என்பது நல்லதைச் சொல்வது. நல்லதை இரண்டு வகையாகச் சொல்லலாம். நேர் முகமாகச் சொல்வது ஒன்று; மறைமுகமாகச் சொல்வது ஒன்று. பொல்லாதவர்களுக்கு நல்லதைச் சொல்லும்போது எதிர் மறை வாய்பாட்டிலே சொல்வது வழக்கம். நல்லவர்களுக்கோ உடன் பாட்டு வாய்பாட்டாலே சொல்வார்கள். நோயாளிக்கு நல்லதைச் சொல்ல வேண்டுமானால், ''நிறைய உண்டு வாழ்வாயாக'' என்று சொல்லிப் பயன் இல்லை; ''உன்னுடைய நோய் தீர்ந்து ?டுவதாக'' என்று சொல்வது முறை.

கம்பர் கூறுவது

கம்பர் இராமாயணத்தில் எதிர்மறை வாய்பாட்டிலே நல்லதைச் சொல்வதற்கு ஓர் உதாரணம் தருகிறார். இராமாயணத் தில் பலவிடங்களில் கதையின் திருப்பங்களுக்கு மூலகாரணமாக இருக்கிறவர்கள் பெண்கள். நல்ல பெண்கள், பொல்லாத பெண்கள் எல்லோருமே கதையின் போக்கிலேயே வருவார்கள். கூனி என்ற பெண் கைகேயியின் உள்ளத்தை முட்டுக்கட்டை போட்டுத் திருப்புகிறாள். அதனால் இராமன் அரசு இழந்து காட்டுக்குச் செல்கிறான். காட்டில் இருந்த இராமனிடத்தில்

காமம் கொண்டு சீதைக்குத் துன்பம் செய்ய வந்தவள் சூர்ப் பணகை. அவள் இராமனிடத்தில் வந்தபோது அரக்கியின் கோலத்தில் வரவில்லை. அழகிய மடமகள் போல அஞ்சொலிள அன்னமென வஞ்சியென நடந்து வந்தாள். இராமன் அவளை வந்து வரவேற்றான். ''உன் வரவு நல்வரவு ஆகுக'' என்று அவன் சொல்லலாம். ஆனால் அந்தப் பெருமானுடைய வாக்கில் ஒரு குறிப்பு இருக்கிறது.

''தீதில் வரவாக திருநின்வரவு''

என்கிறான்.

''உன் திருவுருவத்தைப் பார்த்தால் திருமகள் மாதிரி இருக் கிறது. ஆனால் நீ வருகிற வருகையிலே தீது வருகிறது போல இருக்கிறது'' என்கிற குறிப்பை வைத்து, ''உன் வரவு தீது இல்லாத வரவு ஆகுக'' என்று சொல்கிறான். நல்வரவு ஆகுக என்பதே இதற்குக் கருத்தானாலும் தீதுடைய வரவாக நிகழ்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைக் குறிப்பாகக் காட்டிச் சொன்னான்.

அந்த வகையில் அருணகிரியார் நமக்கு உபதேசம் செய்கிறார்.

ஒரு தாழ்வு இல்லை

என்று எதிர்மறை முகத்தால் மங்கல வாழ்த்தைச் சொல்கிறார். இவ்வாறு சொல்வதற்குப் பதிலாக 'வாழ்வு உண்டு' என்று சொல்லலாம்.

''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்''

என்று திருஞானசம்பந்தப் பெருமாள் பாடுகிறார். அப்படியும் சொல்வதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் அருணகிரியார்.

தாழ்வு இல்லையே

என்று எதிர்மறை முகத்தினால் நமக்கு உபதேசம் செய்கிறார். ஏன்?

பலவகைத் தாழ்வு

நாம் எப்படி இருக்கிறோம் என்பதை ஆராய்ந்து பார்க்க லாம். நமக்கு எப்போதும் தாழ்விலேயே நினைப்பு. தாழ்ந்த எண்ணங்களும், தாழ்ந்த பேச்சும், தாழ்வான செயல்களுமே

நமக்கு இயல்பாக அமைந்தவை. ஒரு நாளாவது மனம் உருகி நல்லவராக இருந்தோம் என்பது இல்லை. எப்போதோ சில கணங்கள் நல்லவராக இருக்க முயன்று பார்க்கிறோம். ஆனாலும் இயற்கையாக உள்ள தாழ்ந்த நிலை நம்மை வந்து கப்பிக் கொள்கிறது. இருபது மணி நேரம் மகிழ்ச்சியுடன் இருந்தாலும் நாம் பெற்ற மகிழ்ச்சியைக் குறித்துத் திருப்தி அடையாமல் பெறாததை நினைந்து துக்கப்படுகிறோம். ஆயிரம் ரூபாய் நமக்கு வந்தது. அந்தத் தொகையில் இரண்டு ரூபாய் செலவழிந்து விட்டது. 998 ரூபாய் இருக்கிறதே என்று திருப்தி அடையாமல் இரண்டு ரூபாய் செலவழிந்துவிட்டதே என்று துயரம் அடைபவர் களே மிகுதி. இப்படி இல்லாததையும், பொல்லாததையும் நினைந்து துக்கப்படுபவர்கள் மனத்திண்மை இல்லாதவர்கள். அவர்கள் மனத்தில் தாழ்வு இருக்கிறது. நல்லது ஆனாலும் பொல்லாதது ஆனாலும் திண்மை உடைய நெஞ்சினருக்கு ஒன்றாகவே இருக்கும். தீங்கு அவர்களுக்குத் துன்பம் பயக்காது.

பயத்தினால் மனம் தாழ்ந்து துன்பத்தை அடையும். நல்ல மனம் உடையவர்கள்கூடச் சில சமயம் அஞ்சுவது உண்டு. நமக்கு ஏற்ற துணை இல்லையே என்ற அச்சம் அவர்களுக்கு உண்டாகும். தவறு செய்பவர்களுக்கும் அவர்களுடைய செயல் மனத்திற்குள் துன்பத்தை உண்டாக்கும்.

"தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்."

அறியாமையினால் தீய செயலைச் செய்துவிட்டு அதை நினைந்து தாழ்வு வருமே என்று நாம் பயந்துகொண்டே இருக்கிறோம். நம்மிடத்தில் குறை ஒன்றும் இல்லை என்றால் நம்மை யாராலும் துன்புறுத்த முடியாது. நமக்குச் சிறந்த துணை இருக்கிறது என்ற திண்ணிய எண்ணம் யாரிடம் உண்டோ அவர்களுக்குப் பயம் இராது. எல்லோரும் நமக்கு வேண்டியவர்கள் என்ற நினை வினால் தைரியமும், அயலான் ஒருவன் இருக்கிறான் என்ற நினைவினால் பயமும் உண்டாகும்.

பிறரை நம்பி வாழ்ந்து, துன்பம் வரும்போது பிறரால் துன்பம் வந்ததென்று குழந்தையைப்போல வருந்துகிறோம். நாம் செய்கிற பிழைகளுக்குக் காரணம் பிறர் என்று நினைத்துக்

கொண்டிருக்கும் வரைக்கும் நிச்சயமாகத் துன்பம் உண்டாகும். அதைப் போலவே ஆசை உடையவர்களுக்கும் மனம் தாழ்ந்து கொண்டே இருக்கும். துன்பத்தினால் வரவரக் கனம் கொண்டு அது தாழும். எத்தனை செல்வம் இருந்தாலும், கல்வி முதலியன இருந்தாலும் நெஞ்சில் குறை உடையவர்களுக்குத் துன்பம் எப்போதும் உரிமையாக இருக்கும்.

"ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பம்"

என்பர் திருமூலர்.

குறைவிலா நிறைவு பெற்றவர்களுக்குச் சிறிதும் துன்பமும், அச்சமும் இருப்பது இல்லை.

அப்பர் நிலை

"அஞ்சுவது யாதொன்றும் இல்லை"

என்று அப்பர் சுவாமிகள் பாடினார். முதலில் அவர் நம்மைப் போலவே அஞ்சினவர்தாம்.

"கூற்றாயினவாறு விலக்ககிலீர்"

என்று வயிற்று வலி பொறுக்கமாட்டாமல் துடித்தவர். தமக்கு ஏற்ற துணை கிடைக்காமல் வாடினவர். யார் யார் துணை என்று நினைந்திருந்தாரோ அவர்கள் எல்லாம் அவருக்குப் பயன் இல்லாமல் போய்விட்டனர். இறுதியில் ஆண்டவனே துணை என்ற நம்பிக்கை அவருக்கு உண்டாயிற்று. அவரிடத்தில் அது வரையிலும் இருந்த அச்சம் முற்றும் அடியோடு ஒழிந்தது. நாம் நல்ல துணையின்றி வாழும் மட்டும் மனத்தில் நிறைவு இல்லா மல் வாழ்கிறோம். அயலானைக் கண்டு அஞ்சி வாழ்கிறோம். எப்போதும் சந்தேகம் இருக்கிறது. நம்மைப் பற்றி நமக்கே திடமான நம்பிக்கை இல்லை. ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்யப் புகுந்தால் நம்மால் இது முடியுமா என்று சந்தேகிக் கிறோம். பிறர் நமக்குத் துணை செய்வார்களோ மாட்டார்களோ என்று அஞ்சுகிறோம். அதைவிட, இந்தக் காரியத்துக்கு யாரேனும் இடையூறு செய்வார்களோ என்ற அச்சம் மிகுதியாக உண்டா கிறது. சந்தேகத்திற்கும் அச்சத்திற்கும் நெருக்கம் அதிகம். ஐயம் உடையவன் அழிவைத் தேடிக் கொள்கிறான் என்று கண்ணன் கீதையில் சொல்லியிருக்கிறான்.

மனத்திற் சலனம்

நம்முடைய ஆற்றலில் நமக்குச் சந்தேகம் இருக்கிறதோடு பிறரையும் எடைபோட்டுப் பார்த்துச் சந்தேகிக்கிறோம். எடை போடுவதற்குரிய கருவி நம்மிடம் இருக்கிறதா என்பதை யோசித்துப் பார்ப்பது இல்லை. யாரேனும் பேசினால் அதிலுள்ள நன்மை தெரிவது இல்லை; கோளாறு தெரிகிறது. பஞ்சை இரும்பாக எடை போடுகிறோம். இரும்பைப் பஞ்சாக எடை போடுகிறோம். நம் பலம் இன்னது, பலவீனம் இன்னது என்று தெரிந்து கொள்வதற்கு நம்மிடம் ஆற்றல் இல்லை. சந்தேகம் உள்ள வரை தாழ்வு அகலாது. ஒவ்வொரு கணமும் நம்முடைய மனத்தில் நாம் பலவீனன் என்ற நினைவு இருந்து கொண்டிருக் கிறது. அதனால்தான் ஏதேனும் காரியத்தைச் செய்யும்போது பிறர் துணையைத் தேடுகிறோம். நாம் தேடுகிற துணைகள் நம்மைப் போலவே பலவீனமானவர்களாக இருப்பதை அறிந்து மனச் சோர்வு அடைகிறோம். உண்மையான துணை, எல்லோருக்கும் மேலான துணை இறைவன் என்ற நினைப்பும், அவனைச் சேர்ந்து ஒழுகும் வாய்ப்பும் கிடைக்குமானால் நமக்குத் தாழ்வு உண்டாகாது. அத்தகைய நிலை நமக்கு வராமையினால் ஒவ் வொரு கணமும் தாழ்வு அடைந்துகொண்டே இருக்கிறோம். பல வீனமான எண்ணங்களைக் கொண்டு, குறிப்பிட்ட காரியத்தைத் திண்மையான மனத்தோடு இருந்து செய்வதற்கு ஆற்றல் இல்லா மல் திண்டாடுகிறோம். ஒருமைப்பட்ட மனமும், ஒருமைப்பட்ட செயலும், ஒருமைப்பட்ட மொழியும் இல்லாதவர்கள் நாம். ஞானசம்பந்தப் பெருமான் தம்மைப் பற்றிச் சொல்லும்போது,

"ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன்"

என்று பாடுகிறார். அந்த ஒருமைப்பாடு இல்லாமையினால் நாம் பலவகை வேதனைக்கு ஆளாகித் துன்பப்படுகிறோம். மனம் எப்போதும் ஓடிக்கொண்டே இருக்கிறது. ஓடுகிற வண்டியின் மேல் மண் உருண்டையை வீசினால் அது சிதறுண்டு விழும். அதுபோல் எப்போதும் ஓடிக் கொண்டே இருக்கும் மனத்தில் ஏதாவது ஓர் எண்ணத்தை வைத்தால் அது அடுத்த கணமே பலவகையாகச் சிதறுண்டு விடுகிறது. அந்தப் பண்டத்திற்கு இயல்பாக உள்ள திண்மைகூட மாறிவிடுகிறது. இறைவன் உண்

டென்ற எண்ணம் பல காலமாகப் பல பெரியவர்களுடைய வாசகங்களால் திண்மையாக இருப்பது, நம்முடைய மனத்தில் சலனம் அடைந்துவிடுகிறது. அந்தச் சலனமற்ற உண்மைகூட நமக்குச் சந்தேகத்தைத் தருவதாக இருக்கிறது. இதற்குக் காரணம் அந்த உண்மையில் உள்ள குறை அன்று; நம்முடைய மனத்தில் உள்ள சலனமே.

சலனத்தையுடைய மனம் நம்மை இழுத்துக் கொண்டு போய் அலைய வைக்கிறது. நாம் வலிமையுடையவர்களாக இருந்து அதனை அடக்கி ஓட்டினால் நம்முடைய விருப்பப்படி அது நடக்கும்.

குதிரை நம் மேல் ஏறினால் விபத்து. நாம் குதிரை மேல் ஏறினால் வாகன வசதி. நாம் இப்போது மனம் என்னும் குதிரையினால் ஏறி மிதிக்கப்பெற்று விபத்திற்கு ஆளாகிக் கொண்டு இருக்கிறோம். அதன் மேலே ஏறி நடத்தி நம்முடைய விருப்பப் படி ஓட்டவேண்டும். அதற்கு என்ன வழி என்று தெரியாத காரணத்தினால் இப்போது தாழ்வை அடைந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு கணமும் துக்கத்தை அடைகிறோம். இத்தகைய நிலையில் இருக்கும் நம்மைப் பார்த்து அருணகிரியார்,

ஒரு தாழ்வு இல்லையே

என்று உபதேசம் பண்ணுகிறார்.

மறவாதவர்

எந்த நிலையில் தாழ்வு இல்லாத வாய்ப்பு உண்டாகும் என்பதைச் சொல்கிறார்.

மறவாதவர்க்கு ஒரு தாழ்வு இல்லையே.

இங்கும் உடன்பாடாகச் சொல்லாமல் எதிர்மறையாகவே சொல்கிறார். 'நினைந்தவர்க்கு' என்று சொல்வதையே 'மறவாத வர்க்கு' என்று எதிர்மறை வாய்ப்பாட்டினாலே சொல்கிறார். 'வாழ்வு உண்டே' என்று சொல்லாமல் 'தாழ்வு இல்லையே' என்று சொன்னது போலவே இதுவும் இருக்கிறது. மறத்தல், தாழ்வு உறுதல் என்பன நம்முடைய இயல்புகளாக உள்ளவை. அதனால் அவற்றை நீக்க இந்த வகையில் சொல்கிறார். புத்த கத்தைப் படிக்காமல் குழந்தை அதைக் கிழித்துக் கொண்

டிருக்கிறது. அதைப் பார்த்துக் 'கிழிக்காதே' என்று சொல்கிறோம். ஓடி வருகிற குழந்தையைப் பார்த்து நில் என்று சொல்லாது ஓடாதே என்று சொல்கிறோம். அந்த வகையில் அருணகிரியார் இங்கே பேசுகிறார்.

மறதியும் நினைப்பும்

நாம் இப்போது மறந்து கொண்டிருக்கிறோம். எதை நினைக்க வேண்டுமோ அதை மறந்து கொண்டிருக்கிறோம். மறப்பு என்பது நமக்குச் சொந்தமானது. உடம்பு எடுத்தவுடனேயே மறதி நமக்கு வந்துவிடுகிறது. சென்ற பிறவியில் எப்படி இருந்தோம் என்பது இந்த உலகத்தில் பிறந்தவுடன் மறந்து போகிறது. இந்த உலகில் பிறந்த பிறகும் பல விஷயங்களை மறந்துவிடுகிறோம். ஆண்டவன் ஒருவன் இருக்கிறான் என்ற நினைவு மறந்து போகிறது. ஏதோ மேலெழுந்தவாரியாகச் சில சமயங்களில் சந்தர்ப்பத்தின் வசத்தால் நினைக்கிறோமேயன்றி அழுத்தமான நினைவு நம் உள்ளத்தில் இருப்பது இல்லை. இந்த உடம்புக்குள் புகுவதற்கு முன்பு இறைவன் இருக்கிறான் என்ற நினைவு உயிருக்கு இருக்குமாம். திடீரென்று உடம்பில் புகுந்து பூமியில் பிறக்கும்போது, ''நான் எங்கே இருக்கிறேன்?'' என்று தெரியாமல் உயிர் திண்டாடுகிறது. குழந்தை பிறக்கும் போது 'குவா குவா' என்று கத்துகிறதைக் கேட்கிறோம். குவா என்றால் வடமொழியில் எங்கே என்று பொருள். ஆண்டவனுடைய நினைவோடு இருந்த உயிர் இந்த மண்ணில் பிறந்தவுடன் எங்கே இருக்கிறோம் என்பது தெரியாமல், இப்போது வந்தது எங்கே எங்கே என்று சொல்லி அழுகிறது என்று ஒரு கற்பனை சொல்வது உண்டு. எப்படியோ மறதி என்பது நம்முடன் பிறந்த பொருளாகிவிடுகிறது. பிறந்த பிறகு முன் நிகழ்ந்தவற்றை மறக்கும் மறதி நமக்கு நல்லதுதான். ஆனால் இப்போது வாழ்கிற வாழ்வில் பலவற்றை மறக்கிறோம். ஒன்றை மறப்பது நன்று. மற்றொன்றை மறப்பது தீது. நல்லனவற்றை எல்லாம் நமக்கு மறக்கத் தெரிகிறது. பிறரிடம் உள்ள குணங்களை மறக்கத் தெரிகிறது. ஆனால் நமக்கு யாரேனும் தீங்கு செய்தால் யானையைப் போல மறக்காமல் நினைத்துக் கொண்டிருக்கிறோம். பிறருடைய குறைகளை ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கிச் சதா நினைத்துக்

கொண்டிருக்கிறோம். இதற்கு மாறாக நல்லனவற்றை நினைந்து அல்லாதனவற்றை மறக்க வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"

என்பது திருக்குறள்.

பன்னாடை

நாம் பன்னாடையைப் போல இருக்கிறோம். பன்னாடைக்கு நெய்யரி என்று பெயர். காட்டில் இருக்கிறவர்கள் அதைக் கொண்டு தேனை வடிகட்டுவார்கள். நெய் என்பது தேனுக்குப் பெயர். தேனைப் பன்னாடையில் விடும்போது தேனில் விழுந்த தூசி, வண்டு முதலியவைகள் அதில் தங்கி விடுகின்றன. இலக்கணக்காரர்கள் மாணவர்களுக்கு உபமானமாக இதை ஆண்டிருக்கிறார்கள். கடைநிலை மாணாக்கனைச் சொல்லும் போது, "அவன் பன்னாடையைப் போன்றவன்" என்கிறார்கள். ஆசிரியன் சொல்கிற நல்ல பொருள்களை எல்லாம் விட்டு விட்டுத் தீய பொருள்களை மாத்திரம் ஏந்திக் கொள்கிற இயல்பு உடையவன் அதம மாணாக்கன். பன்னாடையின் இயல்பு அல்லவா இது?

வேறு ஓர் இலக்கணக்காரர் நல்ல மாணாக்கனுக்குப் பன்னாடையை உபமானம் சொல்கிறார். பொல்லாத ஒன்றுக்கு உபமானமாகச் சொல்வதை நல்ல ஒன்றுக்கு உபமானமாகச் சொல்வது எப்படிப் பொருந்தும் என்று நமக்குத் தோன்றும். அவர் சொல்கிற மாதிரியே வேறு.

பாத்திரத்திற்குள் நல்லனவற்றை எல்லாம் விட்டு விட்டு அல்லாதவற்றை வெளியில் தேங்கிவிடும்படி செய்கிறது பன்னாடை. நல்ல கருத்துக்களை உள்ளத்திற்குள் புகவிட்டு மற்றவற்றைப் புறத்தே நின்றுவிடும்படி செய்கிறவன் நல்ல மாணாக்கனாம்.

நல்லவற்றை நினைந்து பொல்லாதவற்றை மறக்க வேண்டும் என்பதை மாணாக்கன் நிலையிலும் வைத்துப் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாமோ அதற்கு மாறாக இருக்கிறோம். பிறர் செய்த தீங்குகளை நினைந்து நல்லவற்றைக் கூடியவரையில்

மறந்து கொண்டிருக்கிறோம். நமக்கு உபகாரம் செய்கிறவர்களுக்குள் மிகவும் சிறந்தவன் ஆண்டவன். இப்போது நமக்கு நல்லது செய்கிறவர்கள் எல்லாப் பிறவிகளிலும் தொடர்பு உடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் இறைவனோ எல்லாப் பிறவிகளிலும் நம்மோடு தொடர்ந்து நின்று அருள் செய்கிறான். நமக்குத் தனு கரண புவன போகங்களை எல்லாம் கொடுக்கிறான். அத்தகைய் பெரு வள்ளலை நாம் மறந்துவிடுகிறோம். அழுத்தமாக நினைப்பது இல்லை.

ஆண்டவனை நினைக்க வாய்ப்பு

ஆண்டவனை நினைப்பதற்குரிய வாய்ப்பு நமக்கு இல்லையென்று ஒரு காரணம் கூறலாம். ஆனால் அது உண்மையன்று. ஒவ்வொரு கணமும் ஆண்டவனை நினைப்பூட்டிக் கொள்வதற்குரிய நிகழ்ச்சி உலகில் நடக்கிறது. நாம் காணும் பொருள்கள் எல்லாம் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டன அல்ல. இயற்கையாக அமைந்த பலவற்றை இறைவன் உண்டாக்கியிருக்கிறான். மின்சார விளக்கை மனிதன் உண்டாக்கினான் என்ற நினைவு வரும் போது மனிதனின் செய்கையில் அகப்படாத சூரியனும் சந்திரனும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தியால் அமைக்கப்பட்டன என்று தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. அந்தச் சக்தியே இறைவன். அதைத் தெரிந்து கொள்வதற்குரிய அறிவும் நமக்கு இருக்கிறது. நம்முடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கும் பொழுது அவை இறைவனுடைய அருளால் நிகழ்பவை என்று ஊகித்து உணர்ந்து கொள்ளலாம். நம்முடைய அறிவுக்குப் புலப்படாத நிகழ்ச்சிகளைக் காணும்போது இறைவனுடைய நினைவு வர வழியுண்டு. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் எத்தனையோ சம்பவங்கள் உலகத்தில் நிகழ்கின்றன. சிறிது அறிவைத் தூண்டிப் பார்த்தால் எல்லாவற்றையும் அடக்கி ஆளும் மகாசக்தி ஒன்று இந்த இயக்கங்களுக்கு எல்லாம் மூலகாரணமாக இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இந்த அறிவு நமக்கு எளிதில் வரும். ஆனாலும் அத்தகைய நினைப்பு நமக்கு உண்டாவது இல்லை. சில சமயங்களில் உணர்ந்தாலும் பாசி மூடிய குளம்போல விரைவில் மறதி வந்து மூடிக்கொள்கிறது.

நினைப்பும், மறப்பும் உடையவர்கள் நாம். இருபத்து நான்கு மணி நேரமும் எப்படி மூச்சை இழுத்துவிட்டுக் கொண்டு இருக்கிறோமோ அப்படி நாம் என்ற நினைவு நம்மிடம் இருக்கிறது. இதைத்தான் அகங்காரம் (Consciousness) என்று சொல்வார்கள். அதே மாதிரி இறைவனுடைய நினைப்பும் நமக்கு இருக்க வேண்டும். அதுதான் முறையானது. ஆனால் அத்தகைய நினைப்பு நமக்கு இருப்பது இல்லை. யாரேனும் நினைப்பூட்டி னாலோ அல்லது இறைவனை அவசியமாக நினைக்க வேண்டிய நிகழ்ச்சி ஏற்பட்டாலோ அப்போதுதான் அவனை நினைக்க முடிகிறது.

விலங்கு முழு இருட்டில் இருக்கிறது. தேவர்கள் முழு ஒளியில் இருக்கிறார்கள். முழுப் பாவத்தின் விளைவை அநுபவிக்கின்றவை விலங்குகள். முழுப் புண்ணியப் பயனை அநுபவிப்பவர்கள் தேவர்கள். நாமோ, புண்ணியமும், பாவமும் கலந்த மிச்ர கர்மங்களால் பிறவி எடுத்திருக்கிறோம். நாம் இருப்பது ஒளியும் இருட்டும் அல்லாத சாயங்கால மங்கல் வேளை. அதாவது முழு மயக்கமும் இல்லாமல் முழுத் தெளிவும் இல்லாமல் மாறி மாறி வருகின்ற நிலை. யாராவது இறை வனைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்றினால் இறைவன் நினைவு வருகிறது. நம்முடைய ஆற்றலுக்கு மிஞ்சி ஏதேனும் ஒரு விபத்து நேர்ந்து துயரம் வந்தால், அப்போது நினைவு வருகிறது. புத்தகத்தைப் படித்தால் வருகிறது. மற்றச் சமயங்களில் அந்த நினைவே இருப்பது இல்லை.

மனக் கோயில்

இறைவனை நினைப்பதற்கு ஏதோதோ புதிய முயற்சி செய்ய வேண்டும் என்று அவசியம் இல்லை. அமெரிக்காவில் இருக்கிற ஒருவனை நாம் மறந்துவிடுகிறோம். அவனைப் பற்றிச் செய்தி வந்தால் ஒரு கணம் நினைக்கிறோம். காரணம் அவன் வெகுதூரத்தில் இருக்கிறான். இறைவனோ நமக்கு வெகு நெருக்கத்தில் இருக்கிறான். ஆனாலும் அவனை நினைப்பது இல்லை, உணர்வது இல்லை.

"நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்"

என்று அப்பர் சுவாமிகள் பாடினார். நம் நெஞ்சு ஆண்டவன் ஒளிந்து கொண்டிருக்கிற குகை போல் இருக்கிறது. அப்படி அல்லாமல் அவன் அரசு ஆளும் இடமாக இருக்க வேண்டும். நாம் சதா அவனை நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

வேலை கொடுக்காத ஆள் சோம்பேறியாகிவிடுவான். அவன் இருப்பதும் நமக்குத் தெரியாது. இறைவனோ நம் உள்ளத்தில் இருந்தாலும் தனக்கு வேலை கொடுக்காதவர்களுடைய வீட்டில் சும்மா இருப்பான். அவனுடைய சைதன்யம் பயன்படாமல் போகும். அவனைத் தட்டி எழுப்பிப் புகழ்ந்து, நீ இந்த வேலையைச் செய் என்றால் சோம்பாமல், சோராமல் எப் பொழுதுமே வேலை செய்வான். அதற்காகவே அவன் நம் உள்ளத்தில் இருக்கிறான். அதனைத் தெரிந்துகொள்ளாமல் நாமும் தூங்கி, அவனையும் தூங்கச் செய்து கொண்டிருக்கிறோம். அதனால் அவன் நம் உள்ளத்தில் இருந்தும் அவனால் கிடைக்கும் பயனை நாம் அடையாமல் இருக்கிறோம். நம் உள்ளம் தூங்கும் மடமாக இருக்கிறது. அவன் நமக்கு முழுச் சைதன்யத்தைக் காட்டும் கோயிலாக நம் உள்ளம் இருக்கவேண்டுமானால் அவனை நாம் எப்பொழுதும் நினைத்துக்கொண்டே இருக்க வேண்டும்.

"நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்"

என்பது இந்த உண்மையைத் தனக்குள் அடக்கியிருக்கிறது.

நமக்கு உபதேசம் செய்ய வருகிற அருணகிரிநாத சுவாமிகள் நாம் செய்யும் தீங்குகளை மாற்றி நல்ல செயல்களைச் செய்ய வேண்டும் என்று சொல்ல வருகிறார். நாம் நல்லவர்களாக இருந்தால், 'ஆண்டவனை நினைந்தவர்க்கு வாழ்வு உண்டு' என்று சொல்லியிருப்பார்; அல்லது 'மறந்தவர்க்குத் தாழ்வு உண்டு' என்று சொல்லியிருப்பார். நம்முடைய இயல்புகளை நன்றாக உணர்ந்து அவர் நாம் உய்ய வேண்டும் என்று கருதி எம்பெருமானை மறவாமல் இருந்தால் தாழ்வு உண்டாகாது என்று சொல்கிறார்.

சாகும் வரையில்

சாந்துணைப் போதும் மறவாதவர்க்கு ஒரு தாழ்வு
இல்லையே.

'சாகும் காலம் வரையிலும் மறவாமல் இருப்பவருக்கு எந்தவிதமான தாழ்வும் இல்லாமல் போகும்' என்பது இதன் பொருள். எப்போதும் மறந்து கொண்டிருக்கிற நமக்கு எப் போதும் நினைவு வரவேண்டும். சாகும் வரைக்கும் மறவாமல் இருந்துவிட்டால் செத்த பிறகும் அந்த நினைவு மறையாமல் தொடர்ந்து வரும். சாகிற காலத்தில் மாத்திரம் நினைக்கலாம் என்றால் அது முடியாத காரியம். ''சாகும் காலத்தில் சங்கரா சங்கரா என்று சொல்ல வருமா?'' என்ற பழ மொழியைக் கேட்டிருக்கிறோம். வாழ்க்கையில் இறைவனை நினைப்பதற்கு நம்முடைய நாட்டில் பல வகையான வாய்ப்புகள் உண்டு. கண்ணினாலே காணும் பொருள்களையும், காதினாலே கேட்கும் பெயர்களையும் இறைவனுடைய நினைப்பு வருவதற்குரியன வாகப் பெரியவர்கள் அமைத்திருக்கிறார்கள்.

வீடுகளுக்கு நடுவிலேயே கோயில்களை அமைத்திருக் கிறார்கள். சோலைகளுக்கு நடுவிலே நந்தவனம் இருக்கிறது. படங்களுக்கு நடுவிலேயே இறைவன் திருவுருவம் இருக்கிறது. கலைப்பொருளுக்கு நடுவில் காட்சி தருகிறான். காவியங்களிலும் நூல்களிலும் அவன் புகழ் உலவுகிறது. இப்படியாக நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் இறைவனை நினைப் பூட்டிக் கொள்வதற்குரிய பொருள்கள் பல பல இருக்கின்றன. இப்படி எல்லாம் அமைத்ததன் காரணமே ஒவ்வொரு கணமும் எம்பெருமானை நினைத்து நாம் வாழவேண்டும் என்பதுதான். இவ்வளவு அடையாளங்கள் இருந்தும் நாம் அவனை மறந்து விடுகிறோம். இறைவனுடைய பெயர்களைக் குழந்தைகளுக்கு வைத்தும் அதை முழுமையாகச் சொல்லாமல் குறுக்கிச் சொல்லிக் கூப்பிடுகிறோம். அதனால் எதற்காகப் பெயர் வைக்கிறோமோ அதன் பயனே கெட்டுப் போகிறது.

2

பல அடையாளங்கள்

'மறவாதவர்க்கு' என்றால், எந்தப் பொருளை மறவாதவர்க்கு என்று சொல்ல வேண்டும் அல்லவா? 'முருகப் பெருமானைச் சாகும் காலம் வரையில் மறவாமல் இருப்பவர்க்கு ஒரு தாழ்வு

இல்லை' என்று அருணகிரியார் சொல்ல வருகிறார். ஆனால் அப்படிச் சுருக்கமாகச் சொல்லவில்லை. அடிக்கடி மறந்து போகும் பொருளை நினைப்பூட்டிக் கொள்ள வேண்டுமானால் அதைப்பற்றிப் பல வகையில் சொன்னால் அந்த நினைவு உண்டாகும். எத்தனை சொன்னாலும் மறதி வந்து கப்பிக் கொள்கிற இயல்பு உடையவர்கள் நாம். அறிவு உடையவனுக்கு இன்னார் இந்த ஊரில் இருக்கிறார் என்று சொன்னால் போதும். ஊர் தேடி, தெருத் தேடி, விலாசம் தேடி அவரைப் போய்ப் பார்த்து விடுவான். அவன் அறிவு அவர் இருக்கும் இடத்தை ஆராய்ந்து தேடுவதற்கு உதவி செய்யும். ஆனால் அறிவு அற்றவர் களுக்கோ இன்ன ஊருக்கு இப்படிப் போக வேண்டும், இன்ன வண்டியில் ஏறவேண்டும், இன்ன இடத்தில் இறங்கவேண்டும், இன்ன தெருவில் இன்ன எண்ணிக்கையுள்ள வீட்டில் போய் விசாரிக்க வேண்டும், அவர் இன்ன உருவோடு இருப்பார், இன்ன நேரத்தில்தான் இருப்பார் என்று பலவகை அடையாளங்கள் சொல்லிக் காட்டவேண்டும். அந்த வகையில் யாரை நினைக்க வேண்டுமோ அந்தப் பெருமானுக்குரிய அடையாளங்களை அருணகிரியார் பலவகையில் இந்தப் பாட்டில் சொல்கிறார். எட்டு அடையாளங்களைச் சொல்லிக் காட்டி அத்தகைய இயல்பு களைப் பெற்ற முருகனைச் சாந்துணைப் போதும் மறவாதவர்கள் யாதொரு தாழ்வையும் அடையமாட்டார்கள் என்று சொல்கிறார்.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச்
செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனை
சாந்துணைப் போதும் மறவா தவர்க்குஒரு தாழ்வு இல்லையே.

இறக்கும் வரைக்கும் மறக்காமல் இருந்தால் பிறகும் அந்த நினைவு தொடர்ந்து வரும் என்று சொன்னேன். இந்த உடம்பு எடுத்தவுடன் நம்முடைய நினைவுக்கு ஒரு திரை போட்டது போல மறதி வந்து விடுகிறது. இறந்தபிறகு, மறந்த நினைப்புகள் எல்லாம் மீட்டு வரும். ஆகையால் இடையிலே மறதிக் காலமாக வந்த இந்தப் பிறவியைப் பெற்ற நாம் இறக்கும் வரைக்கும் மறவாமல் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்.

ஏதேனும் ஒரு பொருளிடத்தில் அன்பு இருந்தால் அந்தப் பொருளைப் பற்றிய இயல்புகளை அடிக்கடி சொல்லவேண்டும் என்று தோன்றும். இறைவன்பால் அன்பும், அவனை நினைக்க வேண்டும் என்ற ஆர்வமும் இருந்தால் அவன் நாமங்களையும், இயல்புகளையும் பலபடியாகச் சொல்லி இன்புறும் இயல்பு உண்டாகும். பலபடியாகச் சொன்னால் கொஞ்சம் உள்ளத்தில் உருக்கமும் தட்டும். அதனால் ஆண்டவனுக்குரிய இயல்புகளை இந்தப் பாட்டில் வரிசையாக அருணகிரியார் சொல்கிறார். அப்படிச் சொல்வதனால் அவருக்கு இன்பம் உண்டாகின்றது. நாமும் இறைவனை நினைத்துப் பார்க்கும்படி செய்கிறார். அவர் முருகப் பெருமானை எந்த எந்த வகையில் அடையாளம் காட்டுகிறார் என்பதை இனிப் பார்க்கலாம்.

சேந்தன்

முதலில்,

சேந்தனை

என்று சொல்கிறார். சேந்தன் – சிவந்த நிறம் உடையவன். முருகப் பெருமான் செக்கச்சேவல் என்ற திருமேனி உடையவன், 'குங்கும ரத்த வர்ணம் உடையவன்' என்பது தியான சுலோகம். காலையில் உதிக்கும் கதிரவன் சிவந்த நிறத்தோடு தோற்றுவான். முருகனும் அந்த இளஞாயிறு போல் விளங்குவான்.

"உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிர் ஒளி"

என்று நக்கீரர் திருமுருகாற்றுப்படையின் ஆரம்பத்தில் சொல்வார்.

"செய்யன் சிவந்த ஆடையன்"

என்று பாடுவார். குறுந்தொகையில் உள்ள கடவுள் வாழ்த்து,

"பவழத் தன்ன மேனி"

என்று முருகனுடைய திருமேனிக்கு உவமை கூறும்.

"செங்கோட்டுப் பிள்ளை சிவந்த பிள்ளை"

என்பது ஒரு தனிப்பாட்டு. நம்முடைய தமிழ்நாட்டில் ஒருவனை அழகுடையவன் என்று குறிப்பிட வேண்டுமானால் முதலில்

அவனைச் சிவப்பு என்று அடையாளம் சொல்கிறாம். முருக பேரழகன். அந்தப் பேரழகனுக்கு ஓர் இலக்கணமாக அவ சிவந்த நிறம் உடையவன் என்று சொல்கிறார்.

கந்தன்

அடுத்தபடியாக, கந்தன் என்று சொல்கிறார்.

கந்தனை.

சரவணப்பூம் பொய்கையில் முருகப் பெருமான் அவதார எடுத்தபோது முதலில் ஆறு திருமேனியுடன் இருந்தான். அந் ஆறு குழந்தைகளையும் பார்ப்பதற்காகச் சிவபெருமானுட வந்த பராசக்தி மிக்க அன்போடு ஆறு திருவுருவங்களையும் வா எடுத்து அணைத்தாள். அப்போது ஆறு மேனிகளும் ஒன்றா ஆறு திருமுகமும், பன்னிரண்டு திருக்கரங்களும் உடைய ஆறுமு நாதன் தன்னுடைய திருக்கோலத்தைக் காட்டினான். அப்ப இணைந்த உருவத்தில் தோற்றினவன் ஆனதால் அவனுக்கு கந்தன் என்ற திருநாமம் உண்டாயிற்று. வடமொழியில் ஸ்கந்த என்று சொல்வார். அதைப் பற்றி முன்பே ஒரு முறை சொல் யிருக்கிறேன்.

செங்கோட்டு வெற்பன்

அருணகிரிநாத முனிவருக்குத் திருச்செங்கோடு என் திருப்பதியில் அதிக விருப்பம் உண்டு. கந்தர் அலங்காரத்தி பலவிடங்களில் திருச்சொங்கோட்டைப் பாராட்டிப் பா யிருக்கிறார். செங்கோட்டில் உள்ள வடிவேல் பெருமானிடத்தி அருணகிரி முனிவருக்கு உள்ள ஈடுபாட்டை,

"தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழும் செழுஞ்சுடரே"

என்று வரும் பாடலிலும் வேறு பாடல்களிலும் முன்பே கவனி திருக்கிறோம். வேறு எந்தத் தலங்களையும் சொல்லாத கந்த அநுபூதியில்,

"நாகாசல வேலவ"

என்று அத்தலத்தை நாகாசலம் என்று குறிப்பிடுகிறார்.

சாகும்மட்டும் மறவாமல் நினைப்பதற்காக முருகப் பெ மானுக்குரிய அடையாளங்களை இங்கே சொல்ல வந்தவர்,

செங்கோட்டு வெற்பனை

என்று திருச்செங்கோட்டை நினைக்கிறார். 'திருச்செங்கோட்டு மலையில் எழுந்தருளி இருக்கும் முருகனை' என்பது பொருள்.

செங்கோட்டு வேலன்

அங்கே அந்தப் பெருமானுடைய திருக்கரத்தில் வேல் இருக்கிறது. அலங்காரம் பண்ணும்போது சாத்தும் வேல் அன்று; இயல்பாகவே திருவுருவத்தோடு ஒட்டியுள்ளது. அதனால் செங்கோட்டு வேலன் என்று வழங்கும் வழக்கம் இருப்பதை முன்பும் நினைப்பூட்டிக் கொண்டிருக்கிறோம். அதனால் செங்கோட்டு வெற்பனை,

செஞ்சுடர் வேல் வேந்தனை

என்று சொன்னார்.

சிவந்த சுடர் வீசுகின்ற வேலைத் திருக்கரத்தில் பிடித்தவன் அவன். உலகத்தில் உள்ள எல்லா உயிர்களுக்கும், பொருள்களுக்கும் அரசனாக இருக்கிறவன்.

செந்தமிழ் நூல் விரித்தோன்

பிறகு,

செந்தமிழ் நூல் விரித்தோனை

என்கிறார். அருணகிரியார் வெறும் பக்தர் மாத்திரம் அல்லர். பெரும் புலவர். ஆகவே புலவர் உலகத்திற்கும் புலப்படும்படியாக ஓர் அடையாளம் சொல்கிறார். முருகன் செந்தமிழ் நூலை விரித்தானாம். அகத்தியருக்கு முருகப் பெருமான் இலக்கணம் சொன்னார் என்பதை முன்பு சில முறை பார்த்திருக்கிறோம். சிவபெருமானிடத்தில் ஓரளவு தமிழைப் பாடம் கேட்ட அகத்தியனார், தமிழ்நாட்டுக்கு வந்து இங்கே நிலை கொள்ள எண்ணிய போது இந்த நாட்டுக்குரிய மொழியில் சிறந்த புலமை பெற வேண்டும் என்று எண்ணினார். சிறந்த புலமையாவது பல நூல்களைக் கற்பதோடு நிற்காமல் தாமே நூல்களை இயற்றும் ஆற்றல் பெறுவதுதான். இலக்கியம் இயற்றுவதைவிட இலக்கண நூல் இயற்றுவதற்குப் பெரிய புலமை வேண்டும். அகத்தியனார் அத்தகைய புலமை தமக்கு வேண்டும் என்று விரும்பினார்.

முன்பு பாடம் கேட்ட இடமோ பெரிய இடம். இப்போது அதற்கு மேலும் சிறந்த புலமை வர வேண்டுமானால் முன்பு கேட்ட ஆசிரியரைவிடப் பெரிய ஆசிரியரைக் கிட்ட வேண்டும். ஞான குருவாகிய சிவபெருமானைவிடப் பெரிய குருவை அவர் எங்கே தேடுவார்? ஆனாலும் அப்படி ஒரு குரு உண்டு என்பதை அவர் தெரிந்து கொண்டார். சிவபெருமானுக்குக் குருவாக இருந்து அருள் செய்த குமர குருபரனுடைய நினைவு அவருக்கு வந்தது. அந்தப் பெருமானை உபாசித்துத் தமக்குச் சிறந்த தமிழ் அறிவைத் தந்தருள வேண்டுமென்று வேண்டினார். முருகப் பெருமான் அவருடைய விண்ணப்பத்தை ஏற்றுச் செந்தமிழ்ப் பெரும் புலமை உண்டாகும்படி அருள் செய்தான். அதன் பயனாக அவர் பொதிய மலையில் ஒரு தமிழ்ச் சங்கத்தை வைத்து நடத்தினார். அகத்தியம் என்று மூன்று தமிழுக்கும் உரிய நூலை இயற்றினார். அதனால் செந்தமிழ்ப் பரமாசாரியன் என்ற பெயர் முருகப் பெருமானுக்கு ஏற்பட்டது. ''அகத்தியனுக்குத் தமிழ் அறிவுறுத்த செந்தமிழ்ப் பராமாசாரியன்'' என்று சிவஞான முனிவர் முருகனைச் சொல்வார்.

> ''சிவனை நிகர் பொதியமலை முனிவனக மகிழ இரு
> செவி நிறைய இனியதமிழ் பகர்வோனே''

என்று அருணகிரியாரும்,

> ''குறுமுனிக்குந் தமிழுரைக்கும் குமரமுத்தந் தருகவே''

என்று குமரகுருபரரும் இந்த நிகழ்ச்சியைச் சொல்லிப் பாராட்டினார்கள். ஆகவே செந்தமிழ் நூல் விரித்தோனை என்பதை, குடமுனிக்கு இலக்கணத்தை விரிவாக உபதேசம் பண்ணினவனை என்ற பொருள் உடையதாகக் கொள்ளலாம்.

மற்றொரு பொருளையும் சொல்வதற்கு வகை உண்டு. ஞான சம்பந்தப் பெருமான் முருகனுடைய திரு அவதாரம் என்பது அருணகிரியாரின் கருத்து. அவர் தமிழ் விரகர் என்ற பெயரை உடையவர். திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் அந்தப் பெருமான் பாடியவை. அவருடைய திருப்பாட்டுக்களில் தமிழ் அழகு ஒழுகும். சந்த நயங்கள், அழகிய வருணனைகள் மலிந்து நிற்கும். அவர் இருபத்து நாலாயிரம் பதிகங்கள் பாடினார் என்று தெரிய வருகிறது. அத்தகைய தமிழ் விரகர் முருகப் பெருமானுடைய திருஅவதாரம் என்பதை எண்ணி,

செந்தமிழ் நூல் விரித்தோனை

என்று அருணகிரியார் இங்கே பாடினார் என்றும் கொள்ளலாம்.

வள்ளி காந்தன்

அடுத்தபடியாக,

விளங்கு வள்ளி காந்தனை

என்கிறார். எம்பெருமான் தேவசேனை, வள்ளி ஆகிய இரண்டு தேவியரைத் திருமணம் செய்து கொண்டான். தேவசேனை தேவர்களுடைய அன்புக்கு அடையாளமாக நிற்கிறவள். சூரசங்காரத்தின் பயனாகத் தாம் பெற்ற நலத்திற்கு நன்றி அறிவு காட்ட வேண்டும் என்று கருதிய தேவர்கள் தேவசேனையை முருகப் பெருமானுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். ஆனால் வள்ளியம்பெருமாட்டியோ இழிந்த நிலையில் இருப்பவர்களுடைய அன்புக்கு அடையாளம். நில உலகத்தில் வாழ்கிற மக்களுக்கு, நாமும் இறைவனை அடைந்து உய்யலாம் என்ற நம்பிக்கையை ஊட்டும் இயல்பை உடையவள். ஆகையால் பல சமயங்களில் நாம் வள்ளி மணவாளன் என்றே சொல்கிறோம். வள்ளி நாயகி காட்டில் குறவர்களின் நடுவில் வாழ்ந்தபோது அவளுக்கு விளக்கம் உண்டாகவில்லை. இயல்பாக அவளிடத்தில் உள்ள தெய்வத்தன்மை மறைந்து கிடந்தது. எம்பெருமானை அடைந்த பிறகே அந்தப் பெருமாட்டிக்கு விளக்கம் உண்டாயிற்று. ஆகையால் முருகனை அடைந்த பிறகே விளக்கத்தைப் பெற்ற வள்ளி காந்தன் என்பகை அருணகிரியார் நினைப்பூட்டுகிறார்.

விளஙகு வள்ளி காந்தனை.

கடம்பம்

வள்ளி மணவாளனாக எம்பெருமான் எழுந்தருளும் போது பலவகை அலங்காரங்களைச் செய்துகொண்டு வீற்றிருக்கிறான். அவன் கழுத்தில் மலர் மாலை விளங்குகிறது. வீரத்தின் பொருட்டுச் சூட்டிக் கொள்வதும்,போகத்தின் பொருட்டு அணிந்து கொள்வதுமாகிய மாலைகள் தனித்தனியே உண்டு. முருகப் பெருமானுடைய அடையாள மாலை காந்தள். அவன் போகத்தின் பொருட்டு அணிந்து கொள்வது கடம்ப மாலை.

இதைத் திருமுருகாற்றுப் படையின் உரையில் உரைகாரர் எடுத்துக்காட்டியிருக்கிறார். இங்கே திருமணக் கோலத்தில் மணம் பொருந்திய கடம்ப மாலையை முருகன் அணிந்திருக்கிறான். ஆகவே,

கந்தக் கடம்பனை

என்று சொன்னார்.

செங்கோட்டு வெற்பன், செஞ்சுடர்வேல் வேந்தன் ஆகிய இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்பு உடையன என்று பார்த்தோம். அதுபோல் விளங்கு வள்ளி காந்தன், கந்தக் கடம்பன் என்ற இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன. தன்னுடைய காதலியாகிய வள்ளியோடு திருமார்பில் மணம் பொருந்திய மணமாலையாகிய கடம்ப மாலையை அணிந்து கொண்டு எம் பெருமான் அழகிய திருக்கோலத்தோடு வீற்றிருக்கிறான். அதனை இந்த இரண்டு தொடர்களும் நினைப்பூட்டுகின்றன.

உலகம் எங்கும் ஆணும் பெண்ணுமாகிய உடம்பு பெற்று உயிர்கள் உலவுகின்றன. அப்படி அவை பெற்றமையினால் உலகம் மேலும் மேலும் வளர்கிறது. புதிய புதிய உடம்புகள் தோற்றுகின்றன. அத்தகைய மரபு தொடர்ந்து வரவேண்டும் என்று கருதியே இறைவனும் இரு வேறுருவமாக நின்று சக்தனும் சக்தியுமாக விளங்குகிறான்.

"பெண்பால் உகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ"

என்று இந்தத் தத்துவத்தை மணிவாசகர் பேசுகின்றார். முருகப் பெருமான் வள்ளி நாயகியோடு மகிழ்ச்சியாக வீற்றிருக்கிறான். அதனால் உலகம் எல்லாம் மணம் பெற்று, வாழ்வு பெற்று இயங்குகிறது.

மயில் வாகனன்

சிவந்த நிறம் உடையவனாக, ஆறு உருவமும் ஒன்றாக இணைந்த கந்தனாக, திருச்செங்கோட்டில் எழுந்தருளி இருக்கும் வேலனாக, வள்ளியம்பெருமாட்டியோடு மணமாலை அணிந்து விளங்குபவனாக உள்ள பெருமான் உலகில் தன்னை விரும்புகிற

அன்பர்களுக்கு அருள் செய்வதற்காக உலா வருகிறான். வெறும் மூலமூர்த்தியாக இருந்தால் பலர் பயன்பெற இயலாது. தம்முடைய சொந்த முயற்சியால் அவனை அடைந்து அவன் திருவடியைப் பணிந்து அவன் திருவருளைப் பெறுகிறவர்கள் மிகச் சிலரே. முருகப் பெருமான் கருணை மிக்கவன். எங்கே தரிசு கிடக்கிறதோ அங்கே சென்று பெய்யும் மழை போன்றவன். அவ்வாறு செய்கிறவன் தான் என்பதைக் காட்டுவதற்காக மிக வேகமாகச் செல்கிற மயில் வாகனத்தைப் படைத்திருக்கிறான். மழையைக் கண்டு இன்புறுவது மயில் வாகனம். பயிருக்கு நீர் சொரிந்து இன்புறும் மழையைப் போலத் துன்புறுகின்ற ஆன்மாக் களுக்கு அருள் சொரியும் முருகப் பெருமானை நினைந்து இன்புறு கின்ற இயல்பு மயில் வாகனத்திற்கு இருக்கிறது. முருகன் தன்னை விரும்புகிறவர்கள் எந்த இடத்தில் இருந்தாலும் அருள் செய்வதற்குரிய கருவி உடையவன். அதற்கு ஏற்ற வாகனத்தை உடையவன். அதனால்,

கார்மயில் வாகனனை

என்று அருணகிரியார் அடையாளம் காட்டினார்.

இப்படி.

சேந்தனைக் கந்தனை செங்கோட்டுவெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனை

என்று எட்டுவகை அடையாளங்களை அழகாகச் சொன்னார் அருணகிரிநாத சுவாமிகள். ஓர் அடையாளம், இரண்டு அடை யாளம் என்றால் மறப்பதற்கு நியாயம் உண்டு. இத்தனை அடை யாளங்களையும் சொல்லி, 'அந்தப் பெருமானைச் சாகும் வரை யில் மறவாமல் இருக்க வேண்டும்; அப்படி இருந்தால் நமக்குத் தாழ்வு வராது' என்ற நல்லுபதேசத்தைச் செய்கிறார்.

நாம் இப்போது மறந்திருக்கிறோம். அதனால் தாழ்வுற்று இருக்கிறோம் என்பதை உணர்ந்து அந்தத் தாழ்வு நமக்கு இல்லாமல் போக வேண்டும் என்ற கருணை உள்ளத்தோடு தாழ்வுக்குக் காரணமாகிய மறதியை மாற்றுவதற்கு ஏற்ற வகையில் முருகப் பெருமானுடைய நினைவு வரும் பொருட்டுப் பல பல அடையாளங்களைச் சொல்கிறார். இவ்வளவு அடை

யாளங்கள் சொன்ன பிறகு நாம் அவனை நினைந்து வாழலாம் என்பது அவர் கருத்து. ஆகையால் இந்தப் பாட்டைப் பலமுறை பாராயணம் பண்ணினால் அவனை மறவாத நிலை வரும் என்பதற்கு ஐயம் என்ன?

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனை
சாந்துணைப் போதும் மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே.

(செந்நிறமுடையவனை, கந்தப் பெருமானை, திருச்செங்கோடென்னும் மலையில் எழுந்தருளியிருப்பவனை, சிவந்த கதிர்களை வீசும் வேலைத் திருக்கரத்தில் ஏந்தியவனை, செந்தமிழ் நூல்களை விரிவாகச் சொன்னவனை, விளக்கம் பெற்ற வள்ளிநாயகியின் கணவனை, மணமுள்ள கடம்ப மாலையை அணிந்தவனை, மேகத்தைக் கண்டு களிக்கும் மயில் வாகனத்தை உடையவனைச் சாகும் வரைக்கும் மறவாமல் நினைப்பவர்க்கு இம்மையிலும் மறுமையிலும் ஒரு தாழ்வும் இல்லை.

சேந்தன் - செந்நிறமுடையவன். வெற்பு - மலை. கந்தம் - நறுமணம். கார்மயில் - கரிய மயில் என்றுமாம். சாந்துணைப் போதும் - சாகும் அளவுள்ள காலமெல்லாம். ஒரு தாழ்வும் என்ற உம்மை மறைந்து நின்றது. ஏகாரம் தேற்றம்.)

இது கந்தர் அலங்காரத்தில் 72-ஆம் பாட்டு.

சொல்லொணா ஆனந்தம்

அருணகிரியார் பாடும் பாடல்களில் பலவகை அமைப்பைப் பார்க்கலாம். பொதுவகையில் எம்பெருமான் திருமேனி அழகை யும் அவனது அருள் திறத்தையும் எடுத்துச் சொல்வது உண்டு. உலகத்தாருக்கு உபதேசம் செய்யும் வகையிலே சில பாடல் களைப் பாடியிருக்கிறார். உலகத்தார் படுகின்ற துன்பங்களைத் தாம் படுவதாகச் சொல்லும் பாடல்களும் உண்டு. இவையாவும் அருணகிரியாருடைய விரிவான அறிவையும் கருணையையும் காட்டுகிறது. இத்தகையவற்றை மற்றவர்களும் பாடலாம். ஆனால் அருணகிரியாருடைய சிறப்பை நன்றாக வெளிப்படுத்தும் பாடல்கள் வேறு சில உண்டு. அத்தகைய பாடல்களை மற்றவர் கள் பாடுவது அரிது. அவைதாம் அவர் தம் அநுபவத்தைச் சொல்லும் பாடல்கள். அந்தப் பாடல்களைப் படித்தால் அருண கிரிப் பெருமுனிவர் முருகனது திருவருளைப் பெற்றுச் சிறந்த அநுபவம் அடைந்தவர் என்ற உண்மை புலனாகும்.

அனுபவ வெளியீடு

அத்தகைய அநுபவத்தைப் பெற்றவர்கள் பலர் இருக்கலாம். அவற்றைப் பிறருக்குச் சொல்ல வேண்டும் என்ற ஆசை உடையவர்களும் இருக்கலாம். ஆனால் சொன்னவர்கள் மிக அரியர். அருணகிரி முனிவர் அத்தகைய பெரிய உபகாரத்தைச் செய்தவர். அதனால்தான்,

"ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக ஓர் சொல் விளம்பினார்யார்?"

என்று தாயுமான சுவாமிகள் வியந்து பாராட்டினார்.

அருணகிரிப் பெருமானுக்கு இறைவனுடைய திருவருளால் அருள் அநுபவம் கிடைத்தது; இந்த உடம்பில் இருக்கும்போதே கிடைத்தது. அதனைச் சொல்வதற்குரிய பக்குவம் அவரிடம்

இருந்தது. இறைவனது பெருங்கருணையைப் பெற்று, மற்றவர்களும் உய்யவேண்டும் என்ற காரணத்தினால் தாம் பெற்ற அநுபவத்தை எவ்வளவு மிகுதியான அளவில் சொல்ல முடியுமோ அந்த அளவுக்குச் சொல்லும் ஆற்றல் அருணகிரியாருக்குக் கிடைத்தது.

"கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்"

என்று சொல்லிக்கொண்டிருக்கும் உலகத்தில் மற்றவர்கள் முயன்றாலும் எடுத்துச் சொல்லமுடியாத அளவு வரையில் அருணகிரிநாத சுவாமிகள் தம்முடைய அநுபவத்தைச் சொன்னார். அந்த அநுபவம் பரம இரகசியம் என்று பலர் சொல்வார்கள்.

இருவகை இரகசியம்

இரகசியத்தில் இரண்டு வகை உண்டு. பிறருக்குத் தெரிகின்ற இரகசியம் ஒரு வகை. அது சொன்னால் புரிந்துவிடும். பிறருக்குச் சொன்னாலும் தெரியாத இரகசியம் ஒரு வகை. நாம் ஒருவருக்குத் தெரியாமல் பத்து ரூபாய் பையில் வைத்துக் கொண்டிருக்கிறோம். சொல்லாமல் இருக்கும் வரையில் அது இரகசியம். "என்னிடம் பத்து ரூபாய் இருக்கிறது" என்று சொல்லிவிட்டால் அந்த இரகசியத்தை எல்லோரும் தெரிந்து கொள்வார்கள். இது சொன்னால் தெரிந்து கொண்டுவிடும் இரகசியத்தைச் சார்ந்தது. வடநாட்டில் செய்த பட்சணம் ஒன்றை இரகசியமாக நான் வைத்திருக்கிறேன். அதன் பெயரைச் சொன்னால் கேட்பவருக்கு அது விளங்காது. ஒலி அளவில்தான் பெயரைத் தெரிந்து கொள்ளலாம். அதனை அநுபவித்தால் அன்றி அது எத்தகையது என்று கேட்பவருக்குத் தெரியாது.

இப்படி இரண்டு வேறு இரகசியங்கள் இருப்பதை உலகில் காணலாம். பிறன் கண்டால் அநுபவிக்கின்ற ஒன்றை ஒளித்து வைக்கும் இரகசியம் ஒன்று. கண்டாலும் பக்குவம் இன்மையினால் தெரிந்து கொள்ள முடியாத இரகசியம் ஒன்று. தகப்பனுக்கும், பிள்ளைக்கும் உள்ள தொடர்பைக் காட்டிலும் பெண்ணுக்கும் தாய்க்கும் உள்ள தொடர்பு அதிகம். தாய் அறியாத இரகசியம் பெண்ணிடம் இல்லை. பெண்ணுக்குச் சொல்லாத இரகசியம் தாயிடமும் இராது. தாய் உலக வாழ்வின் இரகசியங்களை எல்லாம் பெண்ணுக்குச் சொல்லிக் கொடுப்பாள். ஆனால் பக்குவம்

வாராத பெண்ணுக்குத் தான் அநுபவிக்கும் இன்பத்தை எப்படிச் சொல்வது? அது அவள் அளவில் இரகசியமாக இருக்கும்.

"மகட்குத் தாய்தன் மணாளனோடு ஆடிய
சுகத்தைச் சொல்எனில் சொல்லுமா றெங்ஙனே"

என்கிறார் திருமூலர். அந்த இரகசியம் வேண்டும் என்றே மறைப்பது அன்று; சொன்னால் விளங்காதது.

பிறர் சொல்லாததனால் இரகசியமாக இருப்பது ஒன்று. சொன்னாலும் அநுபவம் இல்லாமையினால் உணர்ந்து கொள்ள முடியாதது ஒன்று. இப்படி இரண்டு வகை இரகசியங்கள் இருக்கின்றன. ஒன்று செயற்கை இரகசியம், மற்றொன்று இயற்கை இரகசியம் என்று சொல்லலாம்.

இறைவன் திருவருளால் பெறுகின்ற இன்ப அநுபவம் பக்குவம் பெற்ற ஆன்மாக்களினால் பெறுவதற்குரியது. பக்குவம் இல்லாதவர்களுக்கு அது தெரியாது. அதைப் பற்றிச் சொன்னாலும் தெரிந்து கொள்ள முடியாது. அதனால்தான் இரகசியம் என்ற பெயரைப் பெறுகிறது. இறைவன் திருவருள் அநுபவத்தை அநுபவிப்பவர்கள் அதை எப்படிச் சொல்வது என்று தெரியாமல் திண்டாடுகிறார்கள். மகாத்மாகாந்தி அடிகளும், ராமகிருஷ்ண பரமஹம்சரும் தம் அநுபவங்களை இரகசியமாக வைத்துக் கொள்ளவில்லை. இரகசியம் இரகசியம் என்று பிறர் அறியாமல் எதையேனும் வைத்துக் கொள்கிறவர்களிடத்தில் பெரும்பாலும் பண்டம் ஒன்றும் இருப்பது இல்லை. அதனால்தான் காந்தி அடிகள் இரகசியமென்று யாரேனும் சொன்னால் அவரிடம் வஞ்சகம் இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்.

இவை உலகத்தோடு ஒட்டிய இரகசியங்களுக்குத்தான் பொருந்தும். பக்குவம் அற்றவர்கள் தெரிந்துகொள்ளாத அநுபவம் என்ற இரகசியம் அத்தகையது அன்று. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குத் தம் அநுபவம் எல்லாவற்றையும் தம்மைச் சார்ந்தவர்களுக்குச் சொல்ல வேண்டும் என்று ஆசை. சுட்டிக் காட்ட வேண்டும் என்று அவர் விரும்பினார். எல்லோருடனும் உட்கார்ந்து கொண்டிருக்கும்போதே அவருக்குச் சமாதி நிலை கைகூடிவிடும். மெல்ல மெல்ல எல்லாவற்றையும் மறந்து அதில் லயித்துவிடுவார். மீண்டும் உலக நிலைக்கு வரும்போது, "உங்களுக்கு அதைச் சொல்லவேண்டும்

என்று நினைத்தேன். என்னால் சொல்ல முடியவில்லையே!'' என்று இரங்குவாராம். ஓரளவு அந்த அநுபவத்தைப் பெறுகின்ற வழிகளைத் தெளிவாகச் சொல்லலாம். ஆனால் அநுபவம் எத்தகையது என்று சுட்டிக் காட்ட முடியாது.

அருணகிரியாரின் சிறப்பு

எவ்வளவு உயர்ந்த நிலை வரைக்கும் சொல்ல முடியுமோ அதுவரைக்கும் சொன்ன பெருமை அருணகிரியாருக்கு உண்டு. அவருடைய பாடல்களில் அவர் பெற்ற அநுபவக் கசிவு தேங்கி யிருப்பதைக் காணலாம்.

''பெரும்பைம் புனத்தினுட்சிற்றேனல் காக்கின்ற பேதைகொங்கை
விரும்பும் குமரனை மெய்யன்பி னால்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தம் தித்தித் தறிந்தவன்றே
கரும்பும் துவர்த்துச்செந் தேனும் புளித்தறக் கைத்ததுவே''

என்று ஓரிடத்தில் ஒருவகை அநுபவத்தைச் சொன்னார்.

''பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண் டேன்செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனம்எற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே''

என்று ஓரிடத்தில் சொன்னார். இப்படிச் சொல்கின்ற பாடல்கள் எல்லாம் ஒருவாறு அநுபவத்தைக் காட்டுகின்றன. ஆனால் இன்னதுதான் என்று அநுபவத்தைச் சுட்டிக்காட்ட முடியாது. சுட்டிக்காட்ட முடியாத ஒன்றைச் சுற்றிச் சுற்றிக் காட்டுகிறார். அதனால்தான் ஒரு வகையில் சொல்லாமல் பல பல உருவங் களில் தம் அநுபவத்தைச் சொல்கிறார். அவ்வாறு சொல்கிற பாடல்களில் ஒன்றை இப்போது பார்க்கப் போகிறோம்.

இன்பத் தாக்கு

எனக்கு ஓர் இன்பம் உண்டாயிற்று என்று சொல்ல வரு கிறார். ஒரு மின்சாரக் கம்பி கிழே கிடக்கிறது. அது மின்சார ஓட்டம் உடையது. தெரியாமல் அதன்மேல் ஒருவன் காலை வைத்துவிட்டான். திடீரென்று மின்சாரத் தாக்கு உண்டாயிற்று. அவன் என்ன செய்வான்? இன்னது என்று தெரியாது ''ஏதோ

'ஷாக்கு' அடித்தது'' என்று சொல்வான். ''எனக்கு ஓர் 'ஷாக்கு' அடித்தது'' என்று அருணகிரியார் சொல்கிறார். அது இன்ப மின் சாரத் தாக்குதலாக அமைந்தது. அது எப்படி வந்தது? ''எனக்கே தெரியாது.'' எந்த இடத்தில் இருந்து வந்தது? எந்த சமயத்தில் வந்தது? ஒன்றும் சொல்லவில்லை. ''ஆண்டவன் திரு வருளால் எனக்கு அந்த மின்சாரத் தாக்குதல் கிடைத்தது'' என்று தெரி விக்கிறார். ஆண்டவனைப் பார்த்தே தெரிவிக்கிறார்.

அத்தகைய அநுபவங்களை நமக்குச் சொல்லவேண்டும் என்று அருணகிரியாருக்கு ஆசை. அந்த அநுபவம் எத்தகையது என்று சுட்டிக்காட்ட முடியாதது. நாமே பல வகை அநுபவங் களைப் பெறுகிறோம். அவற்றை இன்ப துன்பங்கள் என்று வகைப்படுத்தி வைக்கிறோம். இந்திரியங்களின் வாயிலாகப் பெறும் இன்பங்கள் நமக்குத் தெரியும். இன்பம் ஒன்று தமக்குக் கிடைத்தது என்றால் நாம் பெறுகின்ற இன்பத்தைப் போன்றதோ என்ற சந்தேகம் நமக்கு எழும். அந்த இன்பம் இத்தகையது என்று சுட்டிக் காட்ட ஒண்ணாதது. அந்த அருள் அநுபவத்தை அவர் ஒருவகையில் சொல்கிறார். வேதம் இறைவனை அப்படிச் சொல்லுமாம். இறைவன் சுட்டிக்காட்ட ஒண்ணாதவன். வேதம் அவனை அது அன்று, இது இன்று என்று கழித்துக் காட்டுகிற தாம். அப்படியே, நாம் பெறுகின்ற இன்பம் எந்த எந்த இயல்பு களை உடையதோ அந்த இயல்புகள் தாம் பெற்ற இன்பத்திற்கு இல்லை என்று சொல்கிறார். எதிர்மறை வாசகத்தால், தமக்கு அந்த அநுபவம் வந்து சார்ந்த வகையை நமக்குச் சொல்கிறார் அருணகிரியார்.

சுட்டும் முறை

ஏதேனும் ஒரு பொருளைச் சுட்டிக்காட்ட வேண்டுமானால் அது கண்ணாலே காணப்படுவது என்று சொல்லலாம். இன்ன பரிமாணத்தை உடையது என்று சொன்னால் நமக்கு விளங்கும். அப்படிச் சொல்லும்போது உபமானமாக வேறு ஒரு பொருளைச் சொன்னால் பின்னும் நன்கு விளங்கும். இன்னது போல இருக் கிறது என்று சொன்னால் பருமனை உணர்ந்து கொள்ளலாம். பார்க்காத ஒன்றை உணர்ந்து கொள்ளப் பார்த்த ஒன்றை உபமான மாகச் சொல்வது வழக்கம். அந்த மாதிரி சொல்ல முடியாதது இது. அவர் இந்தப் பாட்டை முருகனைப் பார்த்தே பேசுகிறார்.

தாய் குழந்தைக்குத் தின்பண்டம் பண்ணிக் கொடுக்கிறாள். "இது நன்றாக இருக்கிறதே. இனிப்பாக இருக்கிறதே. இது எப்படி இனிக்கிறது என்று எனக்குத் தெரியவில்லையே அம்மா" என்று தன் தாயிடத்தில் குழந்தை சொல்வது போல அருண கிரியார், யார் இன்பத்தைத் தந்தானோ அவனிடத்தில் தம் அநுபவத்தைச் சொல்கிறார்.

அறுமுகவா சொல்லொணாது இந்த ஆனந்தமே.

எந்த ஆனந்தம்? "ஏதோ ஒன்று வந்து வந்து என்னைத் தாக்கியது. மனோலயம் தானே உண்டாகும்படியாகச் செய்து என்னைத் தன்வசத்தே ஆக்கிக்கொண்டது. அந்த இன்பம் சொல்ல முடியா தது?" என்று பேசுகின்றார்.

வந்து வந்து
தாக்கும் மனோலயம் தானே தரும் எனைத் தன்வசத்தே
ஆக்கும் அறுமுகவா சொல்லொணாது இந்த ஆனந்தமே.

இட எல்லை கடந்தது

ஒருவன் வந்தான் என்று சொன்னால் எங்கே இருந்து வந்தான் என்ற கேள்வி வரும். போனான் என்று சொன்னால் ஓரிடத்திலிருந்து பிரிந்து சென்றான் என்ற பொருள் வரும். ஒன்று வந்து வந்து தாக்கும் என்று சொல்கிறாரே; இவர் எங்கே இருந்தார்? வந்து வந்து தாக்கிய ஒன்று முன்பு எங்கே இருந்தது? இவரிடத்தில் வந்து தாக்கியது என்றால் முன்பு வேறு ஓரிடத் திலிருந்து பின்பு அவரிடத்தில் வந்து தாக்கியது என்றுதானே பொருள்? "தபால்காரன் பக்கத்து வீட்டில் இருந்தான்; உடனே என் வீட்டுக்கு வந்தான்" என்றால், பக்கத்து வீட்டை விட்டு வந்தான் என்று ஆகும். "அடுத்த வீட்டுக்குப் போனான்" என்றால் என் வீட்டை விட்டுப் போய்விட்டான் என்று ஆகும். அப்படி வந்து போகிறவன் பல இடங்களுக்கும் போகிறான். பல இடங்களிலிருந்தும் வருகிறான். இதைப் போல வேறு ஓரிடத் திலிருந்து வந்து தாக்கியதா? அப்படியே மற்றவர்களிடத்திலும் வந்து தாக்குமா? - இந்தக் கேள்விகளை அவரையே கேட்டுப் பார்க்கலாம்.

''அப்படி இல்லை அப்பா! உலகத்தின் சம்பிரதாயத்தை ஒட்டி அப்படிச் சொன்னேன் நான்'' என்பார். பஸ்ஸில் போய்க் கொண்டிருக்கிறவன், ''திருவல்லிக்கேணி வந்து விட்டதா?'' என்று கேட்கிறான். ''திருவல்லிக்கேணி வந்து விட்டது'' என்கிறார் கண்டக்டர். உண்மையில் திருவல்லிக்கேணி வந்ததா, அல்லது நாம் வந்தோமா? அதுவரைக்கும் திருவல்லிக்கேணி நம்கண்ணில்படாதது அப்போது படுகிறது. திருவல்லிக் கேணியைக் காணும் அநுபவம் நமக்குச் சேருகிறது. அதனால் திருவல்லிக் கேணி வந்தது என்று சொல்கிறோம். இதை லட்சணை என்று இலக்கணக்காரர்கள் கூறுவார்கள். திருவல்லிக் கேணி இருந்த இடத்தில் இருக்கிறது. அதைக் காணும் அநுபவ நிலை நமக்கு வந்த போது அது வந்ததாகத் தெரிகிறது.

ஒரு பொருளை ஒருவன் விட்டுப் பிரிந்து போவதும், அந்தப் பொருளை மீட்டும் அடைவதும் உலக இயல்போடு பொருந் தியவை. ஆனால் அருணகிரியார் குறிப்பிக்கும் இன்பமோ போக்கும் வரவும் இல்லாத ஒன்று.

போக்கு வரவும்.... இல்லாது ஒன்று.

''அது நீங்கள் இருக்கும் இடத்திற்கு வராமல் இருக்கலாம். அதனிடம் நீங்கள் போனீர்களா? என்ற கேள்விக்கு இடம் இல்லாமல், ''நானும் போகவில்லை; அதுவும் என்னிடத்தில் வரவில்லை. அதற்குப் போக்குவரத்து என்பதே இல்லை'' என் கிறார். போக்கும் வரவும் இல்லாதது எப்படி வந்து வந்து தாக்கும் என்கிற சந்தேகம் நமக்குப் போகவில்லை.

காற்று எங்கும் இருக்கிறது. காற்று இல்லாத இடத்தில் நம்மால் உயிரோடு இருக்க முடியாது என்பது தெரியும். ஆனால், ''காற்றே இல்லை'' என்று சில சமயங்களில் சொல்கிறோம். அப்படியே, ''காற்றுச் சுகமாக வருகிறது'' என்று சில சமயங்களில் சொல்வது உண்டு. இல்லையென்று சொன்னபோது காற்று எங்கே போயிற்று? ஜில்லென்று வருகிறது என்று சொல்கிற போது எங்கே இருந்து வந்தது? எங்கும் இருக்கும் காற்று நம்மேல் வீசுகின்றபோது, அதாவது அதன் குளிர்ச்சி நம்மேல் பட அதை உணரும் போது, அது வந்தது என்று சொல்கிறோம். உணராதபோது இல்லை என்று சொல்கிறோம்.

சாமானியக் காற்று அடித்தாலும் ஜுரம் உள்ளவனுக்குக் குளிர்வது போல இருக்கும். அந்தக் குளிர் நமக்குத் தெரியாது. குளிரவே இல்லை என்று சொல்வோம். ஜுரம் அடிக்கிறவனோ கம்பளிக்கு மேல் கம்பளி போர்த்துக் கொண்டிருப்பான். இரண்டு பேருக்கும் உடம்பு இருந்தாலும் அவன் உடம்பில் சிறிதளவு குளிர்ச்சியையும் உணருகின்ற பக்குவம் ஜுரத்தால் உண்டாகி யிருக்கிறது. அவ்வாறே அருணகிரியார் பெற்ற அநுபவம் போக்கும் வரவும் இல்லாமல் எங்கும் இருப்பது. அந்த அநுபவத் திற்குக் காரணமான பொருள் புதியதாக நம்மைச் சார வேண்டும் என்பது இல்லை. எப்போதும் நம் அருகில் நம் உள்ளேயே இருக்கிறது. ஆனால் உணர்ந்து கொள்ளும் நெகிழ்ச்சியும், பக்குவமும் நமக்கு இருப்பது இல்லை.

எங்கும் நிறைந்திருக்கிற பொருள் அது. அது இல்லாத இடம் இருந்தால் போக முடியும். அப்படி ஓரிடம் இல்லாமையினால் அந்தப் பொருளுக்குப் போக்கும் இல்லை, வரவும் இல்லை. அருணகிரிநாதப் பெருமானை இறைவனே அநுபவமயமாக நின்று தாக்கினான். அவன் எங்கும் இருப்பவன்; சர்வ வியாபி; சர்வாந்தர்யாமி. அவன் புதிதாக ஓரிடத்திலிருந்து வரவும் இல்லை, போகவும் இல்லை. ஆனால் அவனோடு சாருகின்ற உணர்ச்சியைப் பெறும் பக்குவம் வந்தால்தான் அவன் இருப்பது தெரியும்; வந்தது போலத் தெரியும்.

''நான் சொல்கிற ஒன்று எங்கே இருந்தும் போகவில்லை. எங்கிருந்தும் வரவில்லை. எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிற ஒரு பொருள்தான் என்னை வந்து வந்து தாக்கியது'' என்கிறார் அருணகிரியார்.

போக்கும்வரவும்....
இல்லாது ஒன்று வந்துவந்து தாக்கும்.

''எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிற ஒரு பொருள் உங்களை வந்து வந்து தாக்கியது என்கிறீர்களே. அது இரவில் தாக்கியதா? பகலில் தாக்கியதா?'' என்று கேட்கலாம். அதற்கும் விடை வருகிறது.

கால எல்லை இல்லாதது

''அப்பா! அந்தப் பொருளுக்கு இட எல்லை கிடையாது என்று சொன்னேன் அல்லவா? அதனால்தான் போக்கு வரத்து

என்ற இரண்டும் அதற்கு இல்லை. எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிற அதற்கு இட எல்லை இல்லை. அது போலவே அதற்குக் கால எல்லையும் இல்லை.''

கோடைக் காலத்தில் வெப்பம் உண்டாகும் என்றும், பனிக் காலத்தில் குளிர் வரும் என்றும் சொல்வது போல, அந்தப் பொருள் தாக்க வரும் இன்பம் இன்னகாலத்தில்தான் வரும் என்று சொல்ல முடியாது. அது எப்போதும் இருந்து கொண்டிருப்பதால் அதைப் பெறும் பக்குவம் வரும் காலத்தில்தான் தாக்குதலை உணர்கிறோம். இன்ன காலத்தில்தான் வந்து தாக்கும் என்று சொல்வதற்கில்லை. நாம் நினைக்கிற பகல், இரவு, நாள், மாதம், ஆண்டு ஆகிய கால எல்லைகள் அந்தப் பொருளுக்கு இல்லை. எந்த நேரத்திலும் வந்து தாக்கும். இரவு பகல் என்ற கால எல்லை அற்றது.

இரவு பகலும்...
இல்லாது ஒன்று வந்துவந்து தாக்கும்.

ஆண்டவன் காலத்திற்கும் இடத்திற்கும் அப்பாற் பட்டவன். அவன் இன்பமயமாக இருக்கிறான். அவன் திருவருளே இன்பம்: அதற்குக் கால எல்லை, இட எல்லை என்பதே இல்லை. ஒளி என்றால் நிழல் உண்டு. விளக்கை ஏற்றினால் வெளிச்சம் படுகிற பக்கம் அல்லாத பக்கத்தில் நிழல் இருக்கும். சர்வாந்தர்யாமியாக இருக்கிற எம்பெருமான் சோதிப் பிழம்பாக இருக்கிறான். அந்த ஜோதி நிழல் இல்லாத ஒளியாக இருக்கிறது. உண்மையில் எரியும் சுடருக்கு நிழல் இல்லை. அந்தச் சுடர் பற்றிக் கொள் கின்ற இடமாகிய விளக்கு இருந்தால்தான் நிழல் உண்டாகும். சுடருக்கு ஒளியும் அந்தச் சுடரை ஏந்தும் ஆதாரமாகிய விளக்குக்கு நிழலும் உண்டு.

எல்லாப் பொருளுக்கும் தானே ஆதாரமாக இருக்கிற சோதிப் பிழம்பாகிய ஆண்டவனுக்கு வேறு ஆதாரம் இல்லாமையினால் அவன் நிழல் இல்லா ஒளியாகத் திகழ்கிறான். பகல், இரவு என்ற வரையறையில்லாதவன். ஒரே ஒளிமயமாக இருக்கும் அந்தப் பெருமானுடைய அருள் இன்ப அநுபவம் கால எல்லையைக் கடந்து விளங்குவது. இருள் அற்றது; நிழலற்றது; பகலும் இரவும் அற்றது. ஆகவே,

போக்கும் வரவும் இரவும் பகலும்
இல்லாது ஒன்று வந்துவந்து தாக்கும்.

என்றார்.

புறம்பும் உள்ளும் இல்லாதது

பின்னும் அதற்கு என்ன என்ன இல்லை என்பதைச் சொல்கிறார். மனத்திற்கும் வாக்குக்கும் அப்பாற்பட்டதாகிய ஒன்றைச் சுட்டிக் காட்ட இயலாது. சுட்டிக் காட்டும் பொருளைக் கண்ட அநுபவம் உள்ளவருக்கு அது போல் இருக்கிறது இது என்றால் விளங்கும். இல்லாவிட்டால் இதுவோ அதுவோ என்ற ஐயம் தோன்றும். அப்படித் தோன்றும்போது இது அன்று, இது அன்று என்று கழித்துக் காட்டவேண்டும். அந்த வகையில்தான் அருணகிரியார் இதைச் சொல்ல வருகிறார். நாம் அநுபவிக்கும் இன்பம் சில சமயங்களில் உள் இருந்தும் வரும்; சில சமயங்களில் வெளியில் இருந்தும் வரும். அருணகிரியாருடைய அநுபவம் உள் இருந்து வந்ததா? வெளியில் இருந்து வந்ததா? உள் வெளி என்ற பாகுபாடு அதற்கு இல்லை.

போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும்
இல்லாது ஒன்று வந்துவந்து தாக்கும்.

போக்கும் வரவுமாகிய இரண்டும் இல்லை என்றபோதே அதற்கு இட எல்லை இல்லை என்பது புலனாயிற்று. இந்த அநுபவம் உடம்போடு சார்ந்த உயிருக்கு ஏற்பட்டது. அது எங்கே இருந்து வந்தது?

நினைப்பும் மறப்பும் கடந்த அந்த நிலையில் உடம்பு இருக்கிறது என்றே தெரியாது. மனமும் இருக்கும் இடம் தெரியாமல் நழுவிவிடும். அப்போது உள் எது, வெளி எது என்ற நினைவே ஏற்படாது. உள் என்பது ஓரிடம். வெளி என்று ஓரிடம். இரண்டுக்கும் நடுவில் ஒன்று இருந்தால்தான் அந்த இரண்டும் புலனாகும். நான் என்ற ஒன்று இருந்து அநுபவித்தால் இது உள்ளிருந்து வந்தது, அல்லது இது எனக்குப் புறத்தில் இருந்து வந்தது என்று சொல்லலாம். உள்ளுக்கும், புறம்புக்கும் வேறுபாடு காட்டும் நான் என்பது எப்போது இல்லையோ அப்போது அநுபவத்துக்கு உள்ளும் இல்லை; புறம்பும் இல்லை.

ஊருக்குள் இருப்பாருக்கு ஊருக்கு வெளியில் எல்லை இருக்கிறது. உலகத்திற்குள் இருப்பாருக்கு உலகத்திற்கு வெளியே எல்லை இருக்கிறது. உடம்புக்குள் இருப்பாருக்கு இதற்கு வெளியே எல்லை இருக்கிறது. உள்ளே இருந்தால் வெளி உண்டு. வெளியே இருந்தால் உள் உண்டு. இருப்பாரே இல்லாவிட்டால் உள் இல்லை; புறம்பு இல்லை. ''என்னை ஒன்று வந்து வந்து தாக்கியது என்று சொன்னேனே. அப்படித் தாக்கிய போது நான் என்பதே இல்லாமற் போய்விட்டது. அதனால் உள், புறம்பு என்ற வேறுபாடும் இல்லாமல் போய்விட்டது. உள்ளும் புறம்பும் இல்லாது ஒன்று தாக்கியது'' என்கிறார்.

புறம்பும் உள்ளும்
இல்லாது ஒன்று வந்துவந்து தாக்கும்.

வெறும் குடத்தைத் தண்ணீருக்குள் போட்டுவிட்டால் குடத்திற்குள்ளும் தண்ணீர் நிறையும். வெளியிலும் தண்ணீர் இருக்கும். உள்ளும் புறம்பும் ஒன்றுதான். குடத்தில் தண்ணீரை எடுத்துக் கொண்டு வெளியில் நடக்கும்போது உள்ளே தண்ணீர் இருக்கும்; புறம்பே இருக்காது. புறம்பு, உள் என்ற வேறுபாடுள்ள நிலையை அப்போது காணலாம். ஆனால் நீர் நிறைந்த பொய்கையில் குடம் தன்னை மறைத்துக் கிடக்கும் போது உள் என்றும், புறம்பு என்றும் வேறுபாடு இல்லை. எங்கும் தண்ணீராக இருக்கும். அப்படிப் பரமானந்தம் வெள்ளமாகப் பொங்க வேண்டும். பொங்கிய ஆனந்தம் இடையில் நின்றதை உடைத்துவிட்டுப் புறம்பு உள் என்ற வேறுபாடற்ற நிலையை உண்டாக்குகின்றது.

போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும்
இல்லாது ஒன்று வந்து வந்து தாக்கும்.

வாக்கு இறந்தது

இது வாயினாற் சொல்லிச் சுட்டிக் காட்ட இயலாதது. ஐந்து இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட இன்பம். இந்திரியங்களின் நுகர்ச்சியைக்கூட வாயினால் சொல்ல முடியாது என்பார்கள். அப்படி இருக்க, இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட இதனை எப்படி வாயால் சொல்ல முடியும்? பிறவிக் குருடனாக இருக்கும் ஒருவனுக்குப் பச்சை நிறம் என்றால் என்ன என்று விளங்க வைக்க முடியுமா? பார்வை இல்லாதவனுக்கு அதன் வண்ணத்

தையும் வடிவையும் சொல்ல முடியாது. அவன் எந்தப் பொருளையும் பார்த்தவன் அல்ல. பார்த்திருந்தால் உவமையாகச் சொல்லி விளக்கலாம். இந்த இன்பமோ இந்திரியங்களுக்கு அப்பாற்பட்டது. இந்திரியங்களோடிருந்து அவற்றால் விளையும் இன்பங்களை அநுபவிக்கும் மனிதனுக்கு அவற்றுக்கு அப்பால் உள்ள இன்பத்தின் லேசம்கூடத் தெரியாது. அப்படி ஏதேனும் தெரிந்திருந்தால் அல்லவா உபமானத்தின் வாயிலாகச் சொல்ல முடியும்? ஆகவே அது வாயினாலேயும் இன்னபடி இருக்கும் என்று சொல்ல முடியாதது; வாக்கையும் கடந்தது.

வாக்கும்...இல்லாது ஒன்று வந்து வந்து தாக்கும்.

அதிசயப் பெருக்கு

அப்படியானால் இப்போது அருணகிரியார் தம்முடைய திருவாக்கினாலே அநுபவத்தைச் சொன்னாரே என்ற கேள்வி எழும். அவர் இங்கே சொன்னது அநுபவம் அன்று. அநுபவத்தைப் பெற்ற பிறகு உண்டாகும் அதிசயப் பெருக்கு. அநுபூதிப் பாடல்கள் என்று சொல்கிற எல்லாமே இந்த வகையில் இருப்பவைதாம். சர்க்கரைப் பொங்கலை உண்டான் ஒருவன். நிரம்ப உண்டுவிட்ட பிறகு, "நான் அதனை உண்டேன்" என்று சொல்ல வருகிறான். அப்போது அவனுக்கு ஏப்பம் வருகிறது. அந்த ஏப்பத்தால் அவன் உண்டது உண்மை என்று புலனாகிறது. பொங்கலே உண்ணாமல் நான் உண்டுவிட்டேன் என்பவர்களும் இருக்கிறார்கள். அப்படிச் சொல்கிறவர்களுக்குள் ஏப்பம் விட்டுக் கொண்டு சொல்கிறவன் உண்மையான அநுபவத்தைப் பெற்றவன் என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும். மற்றவர்களுக்கும் அவனுக்கும் வேறுபாடு காட்டுவது அந்த ஏப்பந்தான். அது அநுபவித்தவனுக்குத்தான் வரும். அதனைக் கொண்டு அவன் உண்டது உண்மை என்று நாம் உணர்ந்து கொள்கிறோம்.

ஆனால் ஏப்பமே சர்க்கரைப் பொங்கல் ஆகாது. அது போல் இறைவன் திருவருள் அநுபவத்தைப் பெற்ற பலனாகப் பலர் பாடியிருக்கிறார்கள். மற்றவர்கள் சொன்னதை எல்லாம் வைத்துக் கொண்டு வாக்குத் திறமையினால் அலங்காரமாகப் பாடியவர்கள் உண்டு. அவர்களுடைய வாக்கில் ஒரு கசிவு இராது. மணிவாசகர், அருணகிரியார் போன்ற அநுபூதிமான்கள் பாடிய பாடல்களில்

அந்தக் கசிவு தேங்கி நிற்கும். தாம் பெற்ற அநுபவ அதிசயத்தை அவர்கள் சொல்லும்போதே சர்க்கரைப் பொங்கல் உண்டவன் ஏப்பம் விடுவது போலத் தோற்றும். அவை அநுபவத்தையே சுட்டிக்காட்டும் பாடல்கள் அல்ல; முன்பு சொன்னதைப் போலச் சுற்றிக் காட்டும் பாடல்கள்.

ஆகவே, இங்கே வாக்கினாலே சொல்லிவிட்டாரே என்றால், அந்த அநுபவம் சொல்வதற்குரியது என்று எண்ணக் கூடாது. கந்தர் அநுபூதியில்,

"பேசா அநுபூதி பிறந்ததுவே"

என்று பாடுகிறார். "அப்படியானால் இந்த அநுபவத்தைப் பாடியிருக்கிறாரே" என்று கேட்கலாம். அவர் அடைந்த அநுபூதி வேறு. அதனைப் பெற்றதனால் உண்டான ஆனந்த அதிசயப் பெருக்கை அநுபூதி என்ற பெயருடன் சொல்கிற பாடல்கள் வேறு. அதனால்தான் இங்கே,

வாக்கும் இல்லாது ஒன்று வந்து வந்து தாக்கும்

என்றார்.

திரிபுடி ரகிதம்

இன்ப அநுபவம் பெறும்போது அநுபவத்தைப் பெறுகின்றவன், அதனைத் தருகின்றவன், அநுபவம் ஆகிய மூன்றும் வெவ்வேறாகத் தோன்றுவது இல்லை. அவன் வேறு என்று உணரவும் முடியாது. காண்பான், காட்சிப் பொருள், காட்சி என்னும் மூன்று வேறுபாடும் இல்லாத நிலை அது. இந்த மூன்றைத் திரிபுடி என்று சொல்லுவார்கள். இந்த மூன்றும் அற்றநிலை திரிபுடி ரகிதம். அறிவான், அறிவு, அறியப்படும் பொருளாகிய ஞாத்ரு, ஞான, ஞேயம் என்றும் திரிபுடியைக் கூறுவார்கள். இறைவன் அருள் அநுபவத்தில் இந்த மூன்றும் மறைந்து போய்விடும்.

உலக இயலில் நம்முடைய நிலையோ இதற்கு முற்றும் வேறுபட்டது. ஏதேனும் ஒரு பண்டம் இருக்க வேண்டும். அதைப் பார்க்கும் கண் இருக்க வேண்டும். கண்ணுக்குப் பார்க்கும் ஆற்றல் இருக்க வேண்டும். பண்டம், கண், பார்வை ஆகிய மூன்றும் இல்லாவிட்டால் காட்சி என்பது இல்லை. கண்பார்த்தாலும் பண்டம் இல்லாவிட்டால் காட்சி நிகழாது.

பண்டமும், கண்ணும் இருந்து பார்த்தல் இல்லாவிட்டால் காட்சி நிகழாது. கண் இல்லாவிட்டாலும் காட்சி இல்லை. ஆனால் அருணகிரியார் சொல்லும் அநுபவமோ, மனோலயம் உண்டாகச் செய்வது; இன்னவாறு இருந்தது என்று சொல்ல முடியாமல் அமைந்தது. மூன்று பொருளென்ற வேறுபாடே அற்ற ஒருமை நிலை உண்டாயிற்றாம்.

வடிவும் முடிவும்

அது கண்ணாலே பார்ப்பதற்குரியது அன்று. ஆதலின்,

வடிவும் இல்லாது ஒன்று வந்து வந்து தாக்கும்

என்றார்.

''போக்கு இல்லை, வரவு இல்லை. பகல் இல்லை, இரவு இல்லை. உள் இல்லை, புறம் இல்லை, வாக்கு இல்லை, வடிவு இல்லை என்று சொன்னீர்களே. அந்த அநுபவத்தைப் பற்றி இப்போது எங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே; அந்த அநுபவம் முடிந்துவிட்டதா?'' என்று அவரையே கேட்கலாம். ''முடிவா? முடிவு இல்லாத பேரானந்தம் அது'' என்று வியப் புடன் சொல்கிறார். எதற்கு ஆதி உண்டோ அதற்கு அந்தம் உண்டு. வந்து வந்து தாக்கியது என்று சம்பிரதாயத்திற்குச் சொன்னது போல, இது தோன்றியது என்றும், இது தோன்றாமல் இருந்தது என்றும் சொல்லலாமே அன்றி, அது உண்டாயிற்று, முடிந்தது என்று சொல்ல இயலாது.

அந்த இன்பமே கடவுள். கடவுளே இன்பம். ஆதலின் கடவுளுக்கு எப்படி முடிவு இல்லையோ அதுபோல அந்த ஆனந்தத்திற்கும் முடிவு இல்லை.

''பார்க்குமிட மெங்கும் ஒரு நீக்கமற்ற நிறைகின்ற
பரிபூரணானந்தமே''

என்று தாயுமானவர் இறைவனைக் கூறுவார். சச்சிதானந்த சொரூபி என்று பொதுவாக எல்லோரும் சொல்வது உண்டு. அத்தகைய ஆண்டவனுக்கு ஆண்பால், பெண்பால், ஆதி, அந்தம் என்ற வரையறையே இல்லை. அவனாகவே நின்ற ஆனந்தத்திற்கும் அவை இல்லை. அதனால்,

போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும்
வாக்கும் வடிவும் முடிவும் இல்லாது ஒன்று வந்து வந்து
தாக்கும்.

என்று விரிவாக அருணகிரியார் சொன்னார்.

அந்த இன்பம் எப்படி வந்தது? கடையில் ஒரு பண்டத்தை வாங்குவது போல அதை வாங்க முடியுமா? அதனைப் பெறு கின்ற பக்குவ உணர்ச்சி நமக்கு வரும்போது அந்த இன்பம் நமக்கும் கிடைக்கும். இன்ன காலத்தில்தான் அது கிடைக்கும் என்பது இல்லை. இன்ன இடத்தில்தான் கிடைக்கும் என்பதும் இல்லை. இன்ன நிலையில் கிடைக்கும் என்ற ஒன்றுதான் அதற்கு உண்டு.அந்த நிலை அதனைப் பொறுத்தது அன்று; நம்மைப் பொறுத்தது. வாக்கு மனம் கடந்த பொருள் நமக்குள் புகுந்துவிட்டால் அங்கே நாமே இல்லாமல் போய்விடுவோம்.

பக்குவமும் அநுபவமும்

ஓர் ஊருக்கு நாம் போகிறோம். மிகவும் தாகமாக இருக் கிறது. ஒரு நண்பர் வீட்டுக்குப் போகிறோம். அங்கே பானையில் நீர் இருக்கிறது. அதை எடுத்துக் குடித்துக் கொண்டிருக்கிறோம். பாதி நீர் குடிப்பதற்குள் அந்த வீட்டில் இருந்த டாக்டராகிய நண்பர் வருகிறார். ''அடடா! இந்த நீரையா குடிக்கிறீர்கள்? இது ஒரே புழு நிரம்பியது ஆயிற்றே'' என்கிறார். நீரைப் பார்த்தபோது ஒன்றும் தெரியவில்லை. அவரோ பூதக்கண்ணாடியில் வைத்துக் காட்டுகிறார். ஒரே புழு மயமாக இருக்கிறது. நாம் குடித்த தண்ணீரிலும் அந்தப் புழுக்கள் இருந்தன. பூதக் கண்ணாடியை வைத்துப் பார்த்தபோதுதான் இந்த உண்மை தெரிய வந்தது. உடனே வாந்தி எடுத்து விடுகிறோம். முதலில் புழுவைப் பார்க்காததனால் குடித்த தண்ணீரில் புழு இருந்த உணர்ச்சி இல்லை. பார்த்தபோது உணர்ச்சி உண்டாகி விட்டதால் அதை வாந்தி எடுத்துவிட்டோம். முன்னே உணர்ச்சி இல்லை. பின்னே உணர்ச்சி வந்துவிட்டது.

பஞ்சை வெயிலில் போட்டுக் காய வைக்கிறோம். பஞ்சு எரிந்து போவதில்லை. அதனால் சூரியனது ஒளியில் எரிக்கும் சக்தி இல்லையென்று சொல்லலாமா? சூரியனுக்கும், பஞ்சுக்கும்

இடையில் பூதக்கண்ணாடியை வைத்தால் பஞ்சு எரிந்து போகிறது. ஆகவே புதிதாக வந்தது சூரியனும் அன்று; பஞ்சும் அன்று. சூரியனுக்குப் புதிதாக எரிக்கும் சக்தி வரவில்லை. புதிதாக வந்தது பூதக்கண்ணாடி.

அப்படி ஆன்மாவையும், பரமான்மாவையும் ஒன்றுபடுத்துவதற்கு வேண்டிய ஒன்று இடையில் வரவேண்டும். அதுதான் பக்குவம் என்பது. பக்குவம் இல்லாத காரணத்தினால் ஆன்மாவும், பரமான்மாவும் ஒன்றின் பக்கத்தில் ஒன்று இருந்தாலும் பரமான் மாவின் இன்பத் தாக்குதல் ஆன்மாவின் மேல் சாருவது இல்லை. சாருவதற்குரிய பக்குவம் வந்தால் இன்பம் வந்து வந்து தாக்கும். எல்லோரிடமும் அது தாக்காததனால் இறைவனிடம் இன்பம் இல்லையென்று சொல்ல இயலாது. இறைவனிடம் இருக்கும் அந்த மின்சாரத் தாக்குதலைப் பெறுவதற்கு ஏற்ற பக்குவம் ஆன்மாக்களுக்கு இல்லை என்பதே உண்மை.

வேறு ஓர் உதாரணம் பார்க்கலாம். ஒரு மின்சாரக் கம்பி (Live Wire). கட்டைபோட்டுக் கொண்டிருக்கின்றவன் அதில் வேலை செய்கிறான். கட்டை இல்லாமல் அதைத் தொட்டால் மின்சாரத் தாக்குதல் அடிக்கிறது. எனக்கு ஷாக்கு அடிக்கிறது என்று இவன் சொன்னால் மற்றவனுக்கு அடிக்கவில்லையே என்று சுட்டிக் காட்டலாமா? அதற்குக் காரணம் உண்டு. மின்சாரம் ஏற முடியாத பக்குவத்தில் அவன் இருக்கிறான். மின்சாரம் ஏறும் பக்குவத்தில் இவன் இருக்கிறான்.

கட்டை

அப்படி, எங்கும் நிறைந்திருக்கிற இன்பமயமான ஒன்று அருணகிரியாரை வந்து வந்து தாக்கிற்று. அப்படித் தாக்கியதற்குக் காரணம் அவரிடம் பக்குவம் உண்டானதுதான். நாமோ மின்சாரத் தாக்குதலைப் பெறாத கட்டையாக இருக்கிறோம். நம் உள்ளம் கட்டையாக, நம் உடம்பு கட்டையாக இருக்கின்றன. உள்ளமும் உடம்பும் ஆகிய கட்டையைக் கவசமாகப் பெற்றிருப்பதனால் உயிரினிடையே மின்சாரத் தாக்குதல் உண்டாவதில்லை. இந்தக் கட்டைத் தன்மை மாறிப் பக்குவம் உண்டானால் அந்தத் தாக்குதல் நமக்கும் உண்டாகும்.

மணிவாசகர் தம்முடைய உடம்பெல்லாம் மரமாகி விட்டது என்று சொல்கிறார். இந்த மரத்தன்மை மாறி நெகிழ்ந்தால் இறைவனுடைய அருள் தாக்கு நமக்குக் கிடைக்கும்.

"உள்ளந்தாள் நின்று உச்சிஅளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பு எல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல் ஆம்
கண் இணையும் மரம்ஆம் தீவினையி னேற்கே"

என்று பாடுகிறார். கல்லினும் கட்டையிலும் மின்சாரத் தாக்குதல் உண்டாகுமா? நம்முடைய உடம்பு கட்டையாகவும், உள்ளம் கல்லாகவும் இருக்கும் வரைக்கும் இறைவனுடைய அருள் மின்சாரத் தாக்குப்படாது. அது மாறினால், இறைவனுடைய அருளையே நினைந்து உள்ளம் உருகி உடம்பும் உருகினால், அப்போது அநுபவம் பெறும் நிலை உண்டாகும்.

மனோலயம்

இறைவனுடைய அருள் இன்பம் மெல்ல வந்து வந்து தாக்கும். அதனுடைய பயன் என்ன? இந்த மின்சாரத் தாக்குதல் இல்லாத வரைக்கும் மனம் தன் போக்கில் துடித்துக் கொண்டிருக்கும். இயற்கையாக வேலை செய்து கொண்டிருக்கும் ஒன்றின்மேல் மின்சாரத் தாக்குதல் ஏற்பட்டால் அதன் செயல்கள் எல்லாம் ஒழிந்து கீழே விழுந்துவிடும். அதுபோல இறைவன் திருவருள் மின்சாரத் தாக்கு யாருக்கு ஏற்படுகிறதோ அவன் மனம் தன் துடிப்பை இழந்து நிற்கும். அதுவரைக்கும் அவன் என்ன முயற்சி செய்தாலும் அதனை அடக்க முடியாது. அந்தத் தாக்குதல் ஏற்பட்டுவிட்டால் மனோலயம் தானே உண்டாகி விடும். அதனால்,

மனோலயம் தானே தரும்

என்கிறார் அருணகிரியார்.

மனம் நம்மிடத்தில் இருக்கிறது. அதை நம்முடைய மனம் என்று சொல்கிறோம். உண்மையைச் சொல்லப் போனால் நாம் மனத்தினிடம் இருக்கிறோம். நம்மிடத்தில் அது இருப்பதனால் அது நம்முடைய சொற்படி கேட்க வேண்டும். அதுதான் இல்லை. நம்மிடத்தில் கட்டுப்பட்டு இருப்பதானால் அதை வேண்டிய

இடத்தில் விடலாம்; வேண்டாதபோது அடக்கிக் கொள்ளலாம். அப்படியா இருக்கிறது மனம்? நம் விருப்பப்படி அதனை வசப் படுத்த முடியவில்லை. ஆனால் இறைவன் திருவருளைப் பெற்றால் மனம் அடங்கும்; நம் வசப்பட்டுவிடும்; எந்தச் சமயத் தில் எப்படி அதை உருவாக்க வேண்டுமோ அப்படியெல்லாம் செய்யலாம். நம்முடைய சொந்த முயற்சியினால் அதனை வசப் படுத்திவிடலாம் என்பது இயலாத காரியம். இறைவன் திருவருள் வந்து வந்து தாக்கினால்தான் மனம் நம்முடைய வயப்படும்.

மனோலயம் தானே தரும்

என்று அருணகிரியார் சொல்லும்போது, அதற்குக் காரணம், வந்து வந்து தாக்கிய அருள் என்பதை உணர வேண்டும்.

ஒரு குழந்தை ஒரு பொம்மையிடத்தில் மிகவும் ஆசையாக இருக்கிறது. அந்தப் பொம்மையில் ஆணி நீட்டிக் கொண்டிருக் கிறது. அது குழந்தையின் கையைக் கிழித்துவிடப் போகிறதே என்று தாய் அஞ்சுகிறாள். அது பிடிவாதமாகப் பற்றிக் கொண்டிருக் கிறது. என்ன சொல்லியும் கேட்பதில்லை. அந்தக் குழந்தையை மெல்ல உறங்கச் செய்கிறாள் தாய். சிறிது நேரத்தில் தூங்கி விடுகிறது. அப்போது குழந்தை தன்னை அறியாமல் கையில் இருந்த பொம்மையை நழுவ விட்டுவிடுகிறது. அதனைப் பற்றிக் கொண்டிருக்கிற நிலை மாறியதால் பொம்மை தானே நழுவி விடுகிறது. அதைப் போல ஆனந்தத் தூக்கம் வரும்போது மனோ லயம் தானே சித்தித்துவிடும். நான் எனது என்பவையாவுமே கழன்றுவிடும்.

மனம் தவியாய்த் தவிக்கிறது; துடியாய்த் துடிக்கிறது. ஒரு கணமேனும் ஓரிடத்தில் நிற்பது இல்லை. தளர்ந்து எழுந்து படரும் கொடிக்கு ஒரு கம்பை நட்டு நிறுத்தினால் அக்கொடி கம்பைப் பற்றிக் கொண்டே போகும். அப்படியே, நிற்கமுடியாது தவிக்கின்ற மனத்திற்கு ஆண்டவனாகிய கொழுகொம்பு கிடைத்தால் அது நேராக நிற்கிறது. மனோலயம் உண்டாகிறது. நாளடைவில் மனம் வேலை செய்யாமல் அடங்கி விடுகிறது. வந்து வந்து தாக்கிய இன்பம் மனத்தை லயப்படுத்தியதோடு நான் எனது என்பவற்றை மாய்த்து உயிரையும் தன் வசத்தில் ஆக்கிவிடும். அப்போது நான் என்ற உணர்ச்சியே இல்லாமல் போய்விடும்.

மனோலயம் தானே தரும்; எனைத் தன்வசத்தே ஆக்கும்.

அதன் வசம்

நாம் இப்போது மனத்தின் வசப்பட்டிருக்கிறோம். எப்போதும் ஏதாவது ஒன்றின் வசமாக நாம் இருக்க வேண்டும். மனத்திற்கு வசமாக இருக்கும் வரையில் இறைவன் அருளுக்கு வசமாக முடியாது. மனம் நமக்கு வசப்பட்டதானால் இன்பம் உண் டாகும். அப்படி ஆவதற்கு இறைவன் திருவருள் வந்து வந்து தாக்க வேண்டும்.

"உரையவிழ உணர்வவிழ உளமவிழ உடலவிழ உயிரவிழ
உளபடியை உணருமவர் அநுபூதி யானதுவும்"

என்று அருணகிரியார் திருவகுப்பில் பாடுகிறார். உள்ளம் உணர்வு ஆகியவை தம் செயல் இழந்து நிற்கிறபோது இறைவனது அநுபூதி கிடைக்கும். அத்தகைய அநுபூதியைச் சொல்ல ஆசைப் படுகிறார் அருணகிரியார்.

அறுமுகவா சொல்லொணாது இந்த ஆனந்தமே!

என்று பேசுகின்றார். இதுவரைக்கும் சொன்னது அத்தனையும் சொன்னதாக ஆகாதா என்றால் இவை யாவும் அதனைப் பற்றிய செய்தியேயன்றி, அதனை நேரே சுட்டிக் காட்டியதன்று என்று முன்பே சொன்னேன். அது சொல்லொணாதது என்னும் போது,

அறுமுகவா

என்று விளிக்கிறார்.

அறுமுகவன்

போக்கும், வரவும், இரவும், பகலும், புறம்பும், உள்ளும், வாக்கும், வடிவும், முடிவும் இல்லாத பொருளை அநுபவிக்கும் போது பேசமுடியாது. இப்போது பேசுகின்ற அருணகிரியார் ஆனந்த அநுபவத்தை நினைவிலே கொண்டு பேசுகின்றார். அந்த நினைப்பு வரும்போதே எந்த வாயிலாகப் புகுந்தோம் என்ற எண்ணமும் உடன் தோன்றுகிறது. ஒரு வீட்டுக்குள் புகுந்து அதனிடையே நின்று இன்பம் பெற்ற ஒருவன் மீட்டும் வெளியில் வந்து பிறருக்கு அதைப் பற்றிச் சொல்லும்போது, "அதுதான் வாசல்" என்று அடையாளம் காட்டுவான். "அதன் உள்ளே பெரியகூடம் இருக்கிறது. அந்தக் கூடத்தில் மெத்தை இருக்கிறது. அதில் என்னை மறந்து தூங்கினேன்" என்பான் .

அருணகிரியார் அநுபூதி நிலையில் இருந்து வெளியில் வந்து நின்று நமக்குச் சொல்கிற சமயம் இது; ஆகையால்தான் அவரால் பேச முடிகிறது. முருகப் பெருமானை அறுமுகவனாகக் கண்டு, அந்த உருவ வழிபாடாகிய வாயில் வழியே சென்று போக்கு வரவு எல்லாம் இழந்து கிடந்த இன்ப அநுபூதியைப் பெற்றவர். இப்போது புறத்திலே இருந்து காட்டுகிறார். ஆகவே தாம் புகுந்த திருவாயிலைச் சுட்டிக் காட்டுவதுபோல அறுமுகவன் என்று மூர்த்தியைச் சொல்கிறார். அந்தப் பெருமானையே விளித்துப் பாடுவது போலப் பாடுகிறார்.

அறுமுகவா! சொல்லொணாது இந்த ஆனந்தமே.

சிவபெருமானுடைய ஐந்து முகமும் உமாதேவியாரின் ஒரு முகமும் சேர்ந்து, சிவனும் சக்தியும் கலந்த ஒரு திருவுருவமாக ஆறுமுகநாதனாகிய ஆண்டவன் தோன்றினான் என்பது ஒன்று. இறைவன் தன்னுடைய ஐந்து முகங்களையும், அதோ முகத்தை யும் சேர்த்து ஆறுமுகக் கடவுளாகத் திருஅவதாரம் செய்தான் என்பது மற்றொன்று. நான்கு திசைகளாகிய இடங்கள், மேல் கீழ் என்ற இரண்டு ஆகிய ஆறு இடங்களிலும் எம்பெருமானின் கருணைப் பார்வை செல்கின்றது என்பதை அவன் ஆறுமுகம் கொண்டதனால் உணரப் பெறலாம். மனிதனுடைய உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களிலும் அவன் தனித்தனியே நின்று பாது காத்து வருகிறான். யோகிகள் அந்த ஆதாரங்களில் அவனுடைய திருமுக மண்டலத்தைத் தரிசிக்கலாம். ஆகையால் ஆறுமுக நாதனாக இருக்கிறான். இவ்வாறெல்லாம் ஆறுமுக தத்துவத்தைக் கூறுவது உண்டு. அதுவே ஆதியானது; அந்தமானது. ஒருவகை யில் சொன்னால் ஆதியும், அந்தமும் அற்றது.

"தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டான்"

என்பது கந்தபுராணம். ஆறுமுகம் மிகப் பழமையானது.

"ஆதியொடும் அந்த மாகிய நலங்கள்
ஆறுமுக மென்று தெளியேனே"

என்று திருப்புகழில் அருணகிரிநாதப் பெருமான் அருளியிருக் கிறார். ஆகையால் முருகனுடைய ஆறுமுக தத்துவம் மிகப் பழமையானது; மிகப் புதுமையானது; எல்லாக் காலத்திற்கும் உரியது. அத்தகைய ஆறுமுகத்தை எண்ணி, தியானித்து, அந்தத்

திருவாயில் வழியிலே புகுந்து ஆண்டவனுடைய அருள் இன்பத் தாக்குதலுக்கு உட்பட்டபோது, எல்லாம் கடந்த பேரானந்தப் பெருவாழ்வு அருணகிரியாருக்குக் கிடைத்தது. அப்போதும் அவர் திருவாசலை மறக்காமல் சுட்டிக் காட்டுகிறார். இத்தகைய இன்பத்தை அநுபவிப்பவர்கள் சிலரானாலும், அதைப் பற்றிச் சொல்பவர்கள் சிலரிலும் சிலர். இவர்களில் மிகச் சிறந்தவர் அருணகிரியார் என்பதை நாம் மறக்கக் கூடாது.

போக்கும் வரவும் இரவும்
பகலும் புறம்பும் உள்ளும்
வாக்கும் வடிவும் முடிவும்இல்
லாதுஒன்று வந்துவந்து
தாக்கும்; மனோலயம் தானே
தரும்;எனைத் தன்வசத்தே
ஆக்கும்; அறுமுக வா, சொல்
லொணாதுஇந்த ஆனந்தமே!

(போவதும் வருவதும் இரவும் பகலும் வெளியும் உள்ளும் சொல்லுக்குள் அகப்படும் தன்மையும் கண்ணினால் காணும் வடிவமும் முடிவும் இல்லாமல் ஓர் அநுபவப் பொருள் அடிக்கடி வந்து வந்து என்னைத் தாக்கும்; என் மனம் லயிக்கும்படியான அமைதியைத் தரும்; என்னைத் தன்மயமாக ஆக்கிவிடும்; ஆறுமுகப்பெருமானே! இந்த ஆனந்த அநுபவம் இன்னபடி இருந்ததென்று சொல்ல முடியாது.

போக்கு வரவு என்னும் இரண்டும் ஒன்றற்கொன்று தொடர்புடையவை. அப்படியே இரவு பகல், புறம்பு உள், வாக்கு வடிவு என்பன இரட்டைகள், வாக்கு ஒலியினால் உணர்வது; வடிவு ஒளியினால் உணர்வது. காதும் கண்ணும் ஆகிய இரண்டு பொறிகளுக்குப் பொருளாக உள்ளவை இவை. இல்லாது - இல்லாமல்; இல்லாதது ஒன்று என்பது செய்யுள் விகாரத்தால் தொக்கது என்றும் கொள்ளலாம். இன்ன பொருள் என்று சுட்டலாகாமையின் ஒன்று என்றார். இறைவன், அவன் அருள், அவன் அருளால் விளையும் அநுபவம் என்று எதையேனும் கொள்ளலாம்; உண்மையில் அந்த மூன்றும் ஒன்றுதான். தானே தரும் என்றது, என் முயற்சியின்றியே வந்ததென்றபடி; தன் என்றது ஒன்று என்று சுட்டியதை. இந்த ஆனந்தம் என்று அண்மைச் சுட்டினால் சொன்னார். அது தமக்குக் கை வந்த உணர்ச்சியினால்.

அறுமுகவா, ஒன்று தாக்கும், தரும்; ஆனந்தம் சொல்லொணாது என்று கூட்டுக.)

இது கந்தர் அலங்காரத்தில் 73-ஆம் பாட்டு.

இராப்பகல் அற்ற இடம்

நான்கு படி

இறைவனுடைய திருவருள் இன்பத்தை இந்த உடம்பு இருக்கும்போதே பெறலாம். அதனை அடைவதற்குச் சில படிகள் உண்டு. அந்தப் படிகளை வெவ்வேறு பெயரிட்டுச் சொல்வது வழக்கம். அருணகிரிநாத சுவாமிகள் இந்த உடம்பில் இருக்கும்போதே முத்தி இன்பத்தை அடைவதற்கு நான்கு வகையான படிகளைச் சொல்கிறார். சாத்திரங்களில் சொல்வது போல முறையாகச் சொன்னாலும் அழகுபெறத் தோத்திரமாக அமைந்து இருக்கிறது இந்தப் பாட்டு.

அராப்புனை வேணியன் சேய்அருள் வேண்டும்;
அவிழ்ந்த அன்பால்
குராப்புனை தண்டையம் தாள்தொழல் வேண்டும்;
கொடியஐவர்
பராக்குஅறல் வேண்டும்; மனமும் பதைப்பு அறல்
வேண்டும்; என்றால்
இராப்பகல் அற்ற இடத்தே இருக்கை
எளிதல்லவே!

''அராப்புனை வேணியன் சேய்அருள் வேண்டும்'' என்பது முதல்படி; ''அன்பால் குராப்புனை தண்டையம் தாள் தொழல் வேண்டும்'' என்பது இரண்டாவது படி; அதற்கப்பால் மூன்றாவது படி, ''கொடிய ஐவர் பராக்கு அறல் வேண்டும்'' என்பது; நான்காவது, ''மனமும் பதைப்பு அறல் வேண்டும்.'' கடைசியில் அடைய வேண்டியது ஒன்று வருகிறது. அதுதான் மேல்மாடி. ''இராப்பகல் அற்ற இடம்.'' படியின்மேல் படியாக ஏறிச் சென்று கடைசியில் உள்ள தளத்திற்குச் சென்றால் இன்பம் உண்டாகும். அதுதான் மோட்சம்.

உடம்பு உள்ள போதே

ஏழுலகம் கடந்த எல்லையில் அது இல்லை. இந்த உடம்பை விட்டுச் சென்ற பிறகு ஏதோ குறிப்பிட்ட இடத்தில் மோட்சம் இருக்கிறதென்று சொல்வது தவறு. நம்முடைய சமயத்தில் அப்படிச் சொல்வது இல்லை. இந்த உடம்பில் இருக்கும்போதே இறைவனுடைய திருவருள் இன்பத்தை முற்றும் பெறலாம் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உடம்பை விட்டுப் போன பிறகு எந்த முக்தி இன்பத்தை அடைகிறோமோ அந்த இன்பத்தின் சுவையை இந்த உடம்பில் இருக்கும் போதே பெற லாம். இரண்டுக்கும் வேறுபாடு என்ன? புளியம்பழம் நன்றாகக் கனிந்து ஓட்டோடு ஒட்டாமல் இருப்பது போல, உயிர் உடம்பில் இருந்தும் கருவி கரணங்களால் உண்டாகும் உணர்ச்சியோடு தொடர்பு பெறாமல் இருக்கும். இந்த உடம்பைவிட்டுப் போனால் மீட்டும் உடம்பு எடுக்காத நெறியில் சென்று இன்புறும். இந்த இரண்டு வகையையும் முக்தி என்றே சொல்வார்கள். உடம்பில் இருக்கும்போதே இந்திரியங்களின் தொடர்பை விட்டு மனத்தை அறுத்து இன்பத்தைப் பெறுவதை ஜீவன் முக்தி நிலை என்பார் கள். இந்த உடம்பில் இருக்கும் போதே அத்தகைய இன்பம் வருவது சாத்தியம் என்பதை அநுபவித்தவர்கள் சொல்லியிருக் கிறார்கள்.

ஜீவன் முக்தரும் பிறரும்

ஜீவன் முக்தர்கள் மற்றவர்களைப் போலத்தான் கரசரணாதி அவயங்களுடன் இருப்பவர்கள். ஆனாலும் மற்றவர்களுக்கும் அவர்களுக்கும் வேறுபாடு உண்டு. நெல்லை வாணலியில் இட்டு மணலைப் போட்டு வறுத்தால் நன்றாக வறுபடும். பொரியா வதற்கு முன்னாலே ஓரளவு நன்றாகச் சூடு ஏறும்படி வறுத்து எடுத்தால் கறுப்பாக ஆகாது. அது நெல் போலவே தோன்றும். அந்த நிலையில் வறுத்த நெல்லுக்கும், வறுக்காத நெல்லுக்கும் வேறுபாடு கண்ணுக்குத் தெரியாது. ஆனால் நிச்சயமாக வேறு பாடு உண்டு. வறுத்த நெல் முளைக்காது. அதுபோல் ஜீவன்முக்த நிலையில் இந்த உடம்பில் வாழ்கிறவர்களுக்கும், மற்றவர் களுக்கும் வேறுபாடு உண்டு. ஞானாக்கினியினால் நன்றாக வறுக்கப் பட்டவர்கள் இரு வினையினின்றும் நீங்கி ஜீவன் முக்தி நிலையை

அடைவார்கள். அவர்கள் வேறு உடம்பை எடுக்கமாட்டார்கள். அவர்கள் மற்ற மக்களைப் போலவே வாழ்வார்கள். உணவு உண்பார்கள். உடை அணிவார்கள். இந்த உடம்பை விட்டுச் சென்றால் மீண்டும் பிறவி எடுக்கின்ற நிலை அவர்களுக்கு இல்லை. பிறவித் துன்பத்தினின்றும் நீங்கினவர்கள் அவர்கள். மற்றவர்களோ இந்த உடம்பினின்றும் நீங்குவது மறுபடியும் வேறு உடம்பை எடுத்து, இன்ப துன்பங்களை அடைவதற்குத்தான்.

மனிதன் வாழும்போது இந்த உடம்பிலேயே ஜீவன் முக்தி நிலையை அடையலாம் என்று காட்டிய சமயம் நம் சமயம். ஆன்மா உடம்பாகிய சிறைக்குள் இருக்கும்போதே மனத்தின் கட்டுக்களை அறுத்து எறிந்து இன்பத்தை அடையலாம் என்றும், அதுவே ஜீவன் முத்தி என்றும் சொல்வார்கள்.

உடம்பைவிட்டுச் சென்று அடைகிற முக்திக்கு விதேஹமுத்தி என்று பெயர். ஜீவன் முத்தி நிலையை இராப்பகல் அற்ற இடம் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அருணகிரியார் இங்கே அதைச் சொல்கிறார்.

இராப்பகல் அற்ற இடத்தே இருக்கை.

அப்படி ஒரு நிலை கிடைப்பது மிகவும் அரிய செயல். அதற்கு முன் பல முயற்சிகள் செய்து இறைவன் திருவருளால் அந்த நிலையை அடையவேண்டும். ஆதலின் ஜீவன் முத்தி நிலையை ஒருவன் பெறுவது எளிய காரியம் அன்று என்று சொல்கிறார்.

இராப்பகல் அற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே.

அந்த நிலையில் இரவு இல்லை; பகலும் இல்லை. ஒரே இன்பமயமாக இருக்கும். அதற்கு வழி என்ன என்பதை இந்தப் பாட்டில் சொல்கிறார்.

அதற்கு முதல்படி இறைவன் திருவருள். இரண்டாவது படி அந்த அருளினால் வருகிற அன்பு. மூன்றாவது படி இந்திரிய நிக்கிரகம். நான்காவது படி மனத்தின் பதைப்பு அறுதல். அப் போது மனம் தன்னுடைய சலனத்தை நீத்து அலையற்று அடங் கிய கடல்போல இருக்கும். படிப்படியாக இவற்றைச் சொல்லா மல் ஒரே வார்த்தையில் இராப்பகல் அற்ற இடத்தில் இருத்தல்

என்றே சொல்லலாம். ஆனால் அலங்காரமாகச் சொல்கிறார்; ஆகையால் நான்கு படிகளைக் காட்டி அவற்றைத் தாண்டிச் செல்லுகின்ற மாடியையும் சொல்கிறார்.

இரவும் பகலும்

''இந்த உடம்போடு உலகத்தில் இருந்தால் இரவு பகல் இல்லாத ஒரு நிலை எப்படி வரும்? உலகத்தில் இரவு பகல் என்ற இரண்டும் இருக்கின்றனவே!'' என்ற ஐயம் நமக்குத் தோன்றும். சூரியன் உதயம் ஆகும்போது பகல் உண்டாகிறது. அது மறைந்தால் இரவு வருகிறது. இவை எல்லாம் புற உலகத்தில் தோன்றும் ஒளியும், இருளும் ஆகும். அக உலகத்திலும் இரவு உண்டு பகல் உண்டு. மனிதனின் உள்ளத்தில் அஞ்ஞானம் இருக்கிறது. அஞ்ஞானத்தை இருட்டு என்று சொல்வார்கள். அங்கே உண்டாகிற தெளிவுதான் ஒளி.

பல ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்த ஒருவரைத் திடீரென்று ஓரிடத்தில் பார்க்கிறோம். அவர் நம்மைப் பார்த்து, ''சௌக்கியந் தானே?'' என்று கேட்டார். நாம் சௌக்கியந்தான் என்று பதில் சொல்லிவிட்டுக் கொஞ்சம் மயங்கி நிற்கிறோம். அவர் யாரென்று தெரியாமல் சிறிது விழிக்கிறோம். 'இவரை எங்கே பார்த்தோம்? இவர் பெயர் என்ன?' என்று மூளையைக்குடைந்து கொள்கிறோம். இருள் அடைந்து கிடக்கும் மனத்தில் பழைய நினைவுகளை எல்லாம் கொண்டு தேடியபோது ஒரு தெளிவு பிறக்கிறது. ''நீங்கள் திருவண்ணாமலை அல்லவா?'' என்று கேட்கிறோம். ''ஆமாம்'' என்று அவர் சொல்கிறார். மேலும் நமக்கு தெளிவு வருகிறது. வெளிச்சம் உள்ளே நுழைகிறது. ''உங்கள் பெயர் சந்திரசேகரன்தானே? கிருத்திகைத் தீபத்தின்போது திருவண்ணா மலைக்கு என்னுடன் நீங்கள் வரவில்லையா?'' என்று பல பல கேள்விகளைக் கேட்க ஆரம்பித்து நம் தெளிவை நிலைநிறுத்திக் கொள்கிறோம். அவருடைய உறவினர்கள், அவருடைய சுகம், அவருடைய குடும்பத்தின் நிலை முதலியவை எல்லாம் நமக்குப் பளிச்சென்று தெரிகின்றன. முதலில் அவர் இன்னார் என்றே தெரிந்து கொள்ள முடியாமல் இருந்து, சிறிது நேரம் சந்தேகப் பட்டு மயங்கி நின்றோமே, அதுதான் இருட்டு. இருட்டிலே பொருள் தெரியாமல் கையால் தடவுவது போல மூளையினால்

தடுமாறுகிறோம். ஆள் இன்னார் என்று தெரிந்து கொள்ளப் பழைய நினைவுகளைக் கொண்டு வந்து தெரிந்துகொள்ள முயல் கிறோம். கொஞ்சம் தெளிவு பிறந்தவுடன் பல செய்திகளை மனம் தெரிவிக்கிறது.

அடுப்பில் விறகு விரட்டி எல்லாவற்றையும் வைத்து நன்றாக மூட்டுவதற்குக் கனலைப் போடுகிறோம். நெருப்பைப் போட்டு விசிற விசிறப் புகை கிளம்புகிறது. அது வரும்போது கண்ணை அவிக்கிறது. நமக்கு இருமல் வருகிறது. கண் எரிகிறது. நெருப்புக் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கிவிட்டால் உடனே எல்லாம் தீப்பற்றிக் கொண்டு எரிகின்றன. சிறு புகை தோன்றிப் பின்பு பெரும் புகையாகி, சிறுகொழுந்து தோன்றி, அதுவே பெரு நெருப்பாகி விடுகிறது. கனல்கிற வரைக்கும் ஒரே புகை. கொழுந்து தோன்றியவுடன் நெருப்பு உண்டாகி விடுகிறது; புகை அடங்குகிறது; வெளிச்சம் வந்து விடுகிறது. இருட்டில் இருக்கும் வரைக்கும் ஒரே புகை, மயக்கம். கொஞ்சம் ஊதித் தெளிவாக்கிய வுடன் வெளிச்சமாகிவிடுகிறது. புகை அறியாமை. ''திருவண்ணா மலை அல்லவா?'' என்ற கொழுந்து வந்தவுடன், ''நீங்கள் இன்னார் அல்லவா? இன்னார் பிள்ளை அல்லவா?'' முதலான நினைவுகள் எல்லாம் உடனே வந்துவிடுகின்றன. முதல் நிலை, அறியாமையாகிய இருட்டில் நிற்பானுடைய நிலை. பின், நினைவு என்னும் ஒளியினால் தெளிவு உண்டான ஒளிநிலையில் இருக்கிறான். இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன.

இருளும் ஒளியும்

ஓர் இடத்தில் ஒரே இருட்டாக இருக்கிறது. செத்தையைப் போட்டுக் கொளுத்தியவுடன் ஒரே வெளிச்சமாகி விடுகிறது. செத்தை எரிந்து அணைந்தவுடன் திரும்பவும் இருள் கப்பிக் கொள் கிறது. அப்படியே நம்முடைய நினைவும், மறதியும் அடிக்கடி மாறி வருகின்றன. மறப்பு, நினைப்பு ஆகிய இரண்டும் நம் மனத்திற்கு இயல்பு. மறப்பை மயக்கம் என்றும், நினைப்பைத் தெளிவு என்றும் சொல்லலாம். மயக்கமே இருள். தெளிவே ஒளி. இருட்டு ஒளி ஆகிய இரண்டும், அதாவது மயக்கம், தெளிவு ஆகிய இரண்டும், நம் மனத்திற்குள் இருக்கின்றன. இந்த மனம் இப்போது காண்கின்ற பொருளைத் தெரிந்து கொள்வதும், முன்பு

தெரிந்து கொண்டதை மீட்டும் நினைப்பதும் ஆகிய இயல்பு களைக் கொண்டிருக்கிறது. இன்னும் சில பொருள்கள் இருக் கின்றன. அவற்றைத் தெரிந்து கொள்ள எவ்வளவு முயன்றாலும் முடிவது இல்லை. ஒரு புத்தகத்தைப் படித்தால் சில பேருக்கு எளிதில் தெளிவு வந்துவிடுகிறது. சில பேருக்கு எத்தனை படித்தாலும் வருவது இல்லை. அறிவு அந்த அந்தப் பிறவியோடு போய்விடுவதன்று. உடம்பு பிறவிதோறும் மாறுகிறது. அறிவோ பல பிறவிகளிலும் தொடர்ந்து வரும். அதனால் சிலருக்கு முன்னைக் கூர்மை இருக்கும்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

என்பர் வள்ளுவர். ஒரு பிறவியில் ஒருவன் கற்கும் கல்வி ஏழு பிறவிகளிலும் அவனுக்குத் தொடர்ந்து வரும் என்பது அதன் கருத்து.

ஆகையால் பிறவிதோறும் தொடர்ந்து வருவது கல்வியின் சாரம். எடுத்தவுடன் ஒரு புத்தகத்தை ஒருவன் அறிந்துகொண்டு விடுகிறானே என்றால், முன்னாலேயே தொடர்பு இருக்கிறது. ஒருவன் செதுக்குவதற்கு வாச்சியைத் தீட்டி வைத்துக் கொண்டிருக் கிறான். எய்வதற்கு இன்னொருவன் அம்பைத் தீட்டி வைத்துக் கொண்டிருக்கிறான். அவர்கள் வேலையில் புகுந்தால் உடனே விரைவாக வேலை முடிந்துவிடும். அப்படி இல்லாமல் புதிதாக வாச்சியைத் தீட்டிக் கொண்டு வேலை செய்ய வேண்டுமானால் தாமதம் ஆகும். அதுபோல ஒருவன் கணக்கில் புலியாக இருக் கிறான். முன் பிறப்பில் அதற்கு வேண்டிய சமஸ்காரங்கள் இருக் கும். ஒருவன் சித்திரம் தீட்டுவதில் நிபுணனாக இருக்கிறான். அதற்கு வேண்டிய அறிவை முன் பிறவியில் தீட்டிக் கொண்டிருக் கிறான். கவிதை புனைவதற்கு வேண்டிய அறிவைத் தீட்டி வைத்துக் கொண்டிருக்கிறவன் இந்தப் பிறவியில் ஆயிரம் பதினாயிரம் கவிதைகளை இயற்றக் கூடியவனாக இருக்கிறான். இப்படி முன் பிறவியில் அவரவர்கள் அந்த அந்தத் துறைக்கு வேண்டிய அறிவைத் தீட்டி வைத்துக் கொண்டிருப்பதனால் தான் இந்தப் பிறவியில் அவர்கள் அந்த அந்தத் துறைகளில் சிறப்புடையவர் களாக வாழ்கிறார்கள். எனக்கு அப்படி வரவில்லை என்றால், முன்பு கூர்மையாக்கிக் கொள்ளவில்லை என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

மயக்கமும் தெளிவும்

முன்பு கண்டு உறவாடிய ஒருவனைத் தெரிந்து கொள்ள முடியாமைக்குக் காரணம் மனத்தில் தெளிவு இல்லாத தன்மை. மனத்திற்கு மறதி இயற்கையாக இருப்பதனால் கண்டதே மறந்து போகிறது. அப்படியே பிறவி மயக்கத்தினால் போன பிறவியில் நாம் எப்படி இருந்தோம் என்பது தெரிவதில்லை. நமக்குத் துணையாக இருக்கிற கடவுளை நாம் மறந்துவிடுகிறோம். இவை எல்லாம் மனம் கலங்கி நிற்பதனால் உண்டாகின்றவை. இருள், அஞ்ஞானம், அவித்தை என்று பல பல பெயர்களால் சொல்லப் படும் அறியாமையினால் உண்மைப் பொருள் இன்னது என்று தெரிந்து கொள்ள வகையில்லாமல் வாழ்கிறோம். கலக்கம் நீங்கி, இருள் நீங்கிக் கொஞ்சம் தெளிவு உண்டானால் ஞான ஒளி நமக்குக் கிடைக்கும். மயக்கம் இருக்கும்போது தெளிவு இல்லை; ஒளி இல்லை. தெளிவு இருக்கும்போது மயக்கம் இல்லை.

ஒளியும் நிழலும்

ஒளி இருக்கும்போதே நிழல் இருக்கிறதும் உண்டு. அது வேறு வகை. ஒளியைத் தருகிற பொருள் வேறு. நிழலைத் தருகிற பொருள் வேறு. ஒளி நிழல் இரண்டும் கலந்து இருப்ப துண்டு. ஒளியைத் தருகின்ற பொருளுக்கு முன்னால் நிழலைத் தருகின்ற பொருள் இருந்தால்தான் நிழல் விழும். விளக்குக்கு முன்னால் மரம் இருந்தால் விளக்கின் ஒளியிலே மரத்தின் நிழல் தெரியும். இந்த நிழலும் மரத்தின் எதிர்ப்புறத்தில் விழும். சூரியன் கிழக்கே உதித்தால் அதன் எதிரிலேயுள்ள கட்டிடத்தின் நிழல் மேற்கே விழும். சூரியன் மாலையில் மேற்கே வரும்போது கட்டிடத்தின் நிழல் கிழக்கே வரும். இதிலிருந்து ஒளிக்கும் நிழலுக்கும் நேர் விரோதம் என்று தெரிகிறது அல்லவா? நிழல் இல்லாமல் போகவேண்டும் என்றால் சூரியனுக்கு முன் நிற்கும் கட்டிடம் இல்லாமல் போக வேண்டும்; அல்லது கட்டிடமும் ஒளியுடையதாக நிற்க வேண்டும். அப்போது நிழல் படியாது. ஒளி முன் ஒளியாக நின்றுவிட்டால் நிழல் இல்லாமல் போய் விடும். சூரியனுக்கு முன்னால் நிற்கிறவன் கீழே படுத்துக் கொண்டால் அவன் நிழல் எங்கும் படிவது இல்லை. அப்போது அவன் செயல் இழந்தவனாக இருக்கிறான்.

ஆத்மா, பரமாத்மா என்ற வேறுபாடு இருக்கிற வரைக்கும் நிழல் உண்டு; அறியாமை உண்டு. இரண்டறக் கலக்கும்போது இந்த நிழலுக்கு இடம் இல்லை. பாசம் அங்கே தன்னுடைய வேலையைச் செய்ய இயலாது. இத்தகைய நிலையையே அருணகிரியார், 'இராப்பகல் அற்ற இடம்' என்று சொல்கிறார். பசுவும் பதியும் இரண்டறக் கலந்துவிடுகிற நிலையில் நினைப்பு மறப்பு இல்லை; இருள் ஒளி இல்லை. இவற்றை நூல்கள் சகல கேவலம் என்று சொல்கின்றன. சகலம், நனவு நிலை; கேவலம் என்பது தூக்க நிலை. சகலம், எல்லாம் என்ற பொருளை உடையது அல்லவா? இப்போது உலகத்தில் எல்லோரும் சகல நிலையில் இருக்கிறார்கள். மூன்று மலங்களும் உடையவர்களைச் சகலர் என்று சாத்திரம் சொல்லும். திரும்பத் திரும்பப் பிறப் பதற்கு அந்த மலங்கள் காரணமாகின்றன. இந்த நிலையில் நாம் சகலாவஸ்தையில் இருக்கிறோம்; அதாவது நாம் இப்போது பொருள்களைக் கண்டும் கேட்டும் இருக்கிற நிலை

கேவல சுத்த அவஸ்தைகள்

கேவலாவஸ்தை என்பது ஒன்று. அது ஒன்றும் தெரியாமல் மறந்து கிடக்கும் நிலை. நாம் தூங்கும்போது புண்ணியமோ பாவமோ செய்வதில்லை. தெளிவு பிறக்காத நிலை அது. அதையே கேவலம் என்று சொல்வார்கள். முழு இருட்டிலும் தூங்கலாம்; முழு ஒளியிலும் தூங்கலாம். ஒன்று மயக்கத் தூக்கம்; மற்றொன்று ஒளித் தூக்கம். இருட்டுத் தூக்கம் மேலும் பிறவியை உண்டாக்குவது. ஒளித் தூக்கம் பிறவியை வேரறுப்பது. இப்படித் தூங்குகிற தூக்கமே நினைப்பும் மறப்புமாகிய இரண்டும் அற்ற நிலை; இரவு பகல் அற்ற இடம் என்பதும் அதுவே. தெளிவு மயக்கமாகிய இரண்டும் மாறி மாறி இங்கே வருவதில்லை. எல்லாம் முழுத் தெளிவாக இருக்கும். இதனைச் சுத்த அவஸ்தை என்று சொல்வார்கள். அந்தத் தெளிவில் எது உண்மைப் பொருளோ அதுதான் தெரியும்.

கனவில் சாப்பிடுவது போலவும், எழுந்து ஓடுவது போல வும் காண்கிறோம். கனவு கலைந்தவுடன் எல்லாம் பொய் என்று தெரிகின்றன. கனவிலேயே கனவு காண்பதும் உண்டு. அடுத்து, ''இது கனவு அல்லவா?'' என்று கனவிலேயே நினைக்கிறோம்.

ஆனாலும் அந்தத் தெளிவு உண்மைத் தெளிவாகாது. அதுவும் கனவுப் பகுதியே. அது போலித் தெளிவு. அதுபோல் மலத் தினின்றும் நீங்காமல் அஞ்ஞான நிலையில் நாம் தெளிவு பெற்றதாகத் தோன்றுகிறது. அது போலித் தெளிவு. இப்போது விழிப்பது போல நமக்குத் தோன்றுகிறது. இந்த விழிப்பு உண்மையான விழிப்பு அல்ல. நாம் காணுகின்ற காட்சி அத்தனையும் உண்மையான காட்சியும் அன்று.

எப்படிக் கனவில், கனவு தெளிந்ததாகக் காணும்போது அது உண்மையான தெளிவு ஆகாதோ அதுபோல், இப்போது நாம் காணுகின்றது சரியான காட்சி என்று தெளிவாகத் தோன்றினாலும் இது முடிந்த முடிவான தெளிவு அன்று. உண்மையான ஒளியில் அல்லது உண்மையான விழிப்பில் நாம் நிற்கும் நிலைதான் உண்மையான தெளிவை உண்டாக்கும். உண்மையான விழிப்பா வது யாது? ஐந்து பொறியும் அடங்க, மனம் சலனம் இல்லாமல் நிற்க, நாம் இறைவனுடைய அருள் ஒளியில் நிற்கும் நிலைதான் அது. நிழல் இல்லாது ஒளி இல்லாது வேறு பொருள் இல்லாத நிலை அது. அந்த நிலையில் நின்றால் இன்பத்தை நுகர முடியும்.

"இத்தேகமொடு காண்பனோ?"

என்று தாயுமானவர் கூறுவர். இத்தேகத்தோடு அத்தகைய இன் பத்தைக் காண முடியும் என்ற கருத்தை அது புலப்படுத்துகிறது.

அந்த நிலையை இந்த உடம்போடு இருக்கும்போதே அடைந்துவிடலாம் என்பது அநுபவித்தாலன்றித் தெரியாது. அதற்குப் போகிற வழியை மாத்திரம் சுட்டிக் காட்டலாம். அதையே இந்தப் பாடலில் சொல்கிறார் அருணகிரியார்.

படியேறுதல்

நாம் இப்போது இருக்கும் இடம் தாழ்ந்த இடம். மிக உயர்ந்த இடத்திற்குப் போகவேண்டும். இடம் என்று சொன் னாலும், கண்ணால் காணுகின்ற இடம் என்பது பொருள் அன்று. அது ஒரு நிலை. உயிர் இன்பத்தில் நிற்கின்ற நிலை எதுவோ அதுதான் முக்தி என்று சொல்வார்கள். இப்போது நம் உயிர் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிற இடம் தாழ்வான நிலை. இதை விட மிகச் சிறந்த இன்பநிலை ஒன்று உண்டு. அது மேலான

நிலை. தாழ்ந்த நிலையில் இருக்கிறவன் மேலான நிலைக்குப் போகவேண்டுமானால் மெல்ல மெல்லப் படியேறிச் செல்ல வேண்டும்.

இந்தப் படிகளுக்கு பெயர் வைத்திருக்கிறார்கள். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சொல்வார்கள். அவற்றைச் சோபானம் என்பர் வடமொழியாளர். சரியை என்பது ஆண்டவனுடைய திருநாமத்தைச் சொல்வது, அடியார்களோடு சேர்ந்து அவன் தொண்டுகளைப் புரிவது முதலியன. கிரியை என்பது இறைவனுக்குப் பூசை முதலியன செய்தல், யோகம் என்பது உள்ளத்தை இறைவனுக்குப் பீடமாக அமைத்து மனத்தில் பூசை முதலிய செய்தல். ஞானம் என்பது அறிவுச் சிறப்பினாலே உலக நிலை, உயிர்நிலை என்பனவற்றை ஆராய்ந்து இந்திரிய நிக்கிரகம் செய்தல். இந்த நான்கும் ஒன்றுக்கு மேல் ஒன்று உள்ளவை. சரியை நிலையைத் தாண்டிக் கிரியை நிலைக்கு வந்து கிரியை நிலையைத் தாண்டி யோக நிலைக்கு வந்து, யோக நிலையைத் தாண்டி ஞான நிலையை அடையவேண்டும். இவை நான்கும் சாதனம். ஞானத்திற்கு அப்பால் இறைவனுடைய அருள் இன்ப மாகிய சாத்திய நிலை இருக்கிறது. அதுதான் முத்தி. சரியை முதலிய நான்கு சோபானங்களையும் சாத்திரங்கள் சொல்கின்றன. அருணகிரியார் அவற்றையே வேறு வகையில் அலங்காரமாகச் சொல்கிறார்.

அருள் வேண்டும்

அராப்புனை வேணியன் சேய் அருள் வேண்டும்.

முதலில் முருகப் பெருமானுடைய திருவருள் வேண்டும் என்கிறார். அந்த அருள் கிடைத்தால் நமக்கு அன்பு உண்டாகும். முருகப்பெருமானைத் தொழும் இயல்பு வரும். ''ஆண்டவனுடைய திருவருளை அடைவதற்குத்தானே நாம் முயல்கிறோம்? அவன்பால் அன்புகொண்டு தொழுவதற்கு முன்னால் அந்த அருள் எப்படிக் கிடைக்கும்?'' என்ற சந்தேகம் நமக்குத் தோன்றும். நம்மால் எந்தக் காரியத்தையும் தொடங்கி நிலை நிறுத்துவது முடியாது. இறைவன் திருவருள் இயக்கத்தினால்தான் நாம் இயங்கவேண்டும். இறைவன்பால் அன்பு உண்டாவதற்குக்கூட அவன் அருள் வேண்டும். நமக்கு அவன்பால் அன்பை உண்

டாக்குகின்ற அருள் ஒன்று; முடிந்த முடிபாகிய இன்பத்தைத் தருகின்ற அருள் வேறு.

"அவனரு ளாலே அவன்தாள் வணங்கி"

என்று மணிவாசகர் பேசுகிறார்.

"பாட்டுவித்தால் யாரொருவர் பாடாதாரே"

என்று அப்பர் சுவாமிகள் சொல்கிறார்.

நாம் ஒரு வீட்டுக்குப் போகிறோம். தண்ணீர் கேட்கிறோம். "அதோ பம்பு இருக்கிறது. அதை அடித்துத் தண்ணீர் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்கிறார். பம்பு அடிக்கும்போது 'வாஷர்' தேய்ந்துபோய் இருப்பதனால் அடிக்க முடிவதில்லை. தண்ணீர் ஏறவில்லை. அதற்காக அந்த வீட்டுகாரரிடம் இருந்தே ஒரு செம்பு தண்ணீர் வாங்கி அதைவிட்டு அடிக்கிறோம். அதுவும் அந்தக் குழாயிலிருந்து வந்ததுதான். அவருடைய வீட்டுத் தண்ணீரை நிறையப் பெறுவதற்கு முன்னாலே சிறிது தண்ணீரைப் பெறுகிறோம். பின்னாலே வருகிற தண்ணீர் மிகுதியான தண்ணீர். முதலில் விடுகிற தண்ணீர் பின்னாலே வருவற்கு உதவியாகப் பயன்படுகிறது. குடம் குடமாகத் தண்ணீரைப் பின்னாலே நிரப்பு கிறோம். அதற்கு முன்னால் ஒரு செம்பு தண்ணீர் பெற்றுக் கொள்கிறோம். அதுபோல் இறைவன் பேரருள் கிடைத்தால் இன்பம் உண்டாகும். ஆனால் அந்த அருள் கிடைப்பதற்கு முன்னால் பல முயற்சிகள் செய்ய வேண்டும். எல்லாவற்றுக்கும் முதலாக ஆரம்பத்தில் அவன் திருவருள் கிடைத்தால்தான் அந்த முயற்சிகளைச் செய்ய முடியும். அந்த அருள், சாதனத்தைப் பெறுவதற்குரிய அருள், பின்னாலே பெறும் அருள் சாத்தியத்தைப் பெறும் அருள். இராப்பகல் அற்ற இடத்தை அடைவதற்கு முன்பு நாம் செய்ய வேண்டிய காரியங்களைத் தொடங்கும்போதே அவ னுடைய திருவருள் நமக்குத் துணையாக இருக்க வேண்டும். அதை,

அராப்புனை வேணியன் சேய்அருள் வேண்டும்

என்கிறார். 'பாம்பைத் தன் சடாபாரத்தில் அணியாக அணிந்து கொண்டிருக்கும் சிவபெருமானுடைய குழந்தையாகிய முருக னுடைய அருள் வேண்டும்' என்று முதலில் சிவபெருமானை நினைக்கிறார்.

அராப்புனை வேணியன்

முருகப் பெருமானுடைய தந்தை சிவபெருமான் என்பது நமக்குத் தெரியும். இங்கே அவரைப் பெருமையாகச் சொல்லா மல் நாகப்பாம்மைத் தலையில் அணிந்து கொண்டிருக்கிறவன் என்று சொல்கிறார். இப்படி ஏன் சொல்லவேண்டும்? இதற்கு ஏதாவது குறிப்பு உண்டா?

முருகப் பெருமானது குடும்பம் எத்தன்மை வாய்ந்தது? பாம்புக்கு அஞ்சாத குடும்பம் அது; பாம்பையும் வளர்த்து, சாதுப்பிராணியாக்கிய குடும்பம். பாம்பு மனிதன் கண்ணில் படாமல் புற்றில் ஒளிந்து கொண்டிருக்கும். மக்கள் போக முடியாத இடங்களில் வாழும். அது தன்னிடத்தில் நஞ்சுடையது. ஆகையால் அப்படி ஒளிந்து வாழ்கிறது.

''நஞ்சுடைமை தான்அறிந்து நாகம் கரந்துறையும்.''

நாம் பாம்பைக் கண்டு பயப்படுகிறோம். உண்மையில் அதுதான் நம்மைக் கண்டு பயப்படுகிறது. அதனால் புற்றுக்குள் ஒளிந் திருக்கிறது. பகலில் வெளியில் தலை காட்டுவது இல்லை. அத்தகைய பாம்பை எல்லோரும் காணத் தன் தலைமேல் வைத்துக் கொண்டிருக்கிறவன் சிவபெருமான். அங்கே அது யாருக்கும் அஞ்சாமல் இருக்கிறது.

கருடன் நிழல் பட்டாலே பாம்பு மயங்கிவிடும். ஒரு சமயம் திருமாலுடைய வாகனமாகிய கருடன் மேலே பறந்து சென்ற தாம். இந்தப் பாம்பு, ''கருடா! கருடா! சுகமா?'' என்று கேட்ட தாம். அதற்குக் கருடன், இருக்கிற இடத்தில் இருந்தால் எல்லாம் சுகந்தான்'' என்று பதில் சொல்லியதாம். இயற்கையான இடத் தில் இருந்தால் பாம்பு கருடனைக் கண்டு அஞ்சும் இப்போது மிக உயர்ந்த இடத்தில் – சிவபெருமானுடைய சடாபாரத்திலேயே இருப்பதால் அந்த அச்சம் போய்விட்டது. ஒளியைக் கண்டு, கருடனைக் கண்டு அஞ்சிப் புற்றுக்குள் கிடக்கும் இயல்பு இப் போது மாறிவிட்டது.

நம் மனம் அந்தப் பாம்பைப் போன்றது; புற்றுக்குள் இருக்கும் பாம்பைப் போன்றது. இது நல்லது ஆக வேண்டும். நஞ்சு கக்குகிற நாகத்தை, நான்குபேர் அறியப் புறப்படாத நாகத்தை, கருடனுக்குப் பயப்படுகிற நாகத்தை எல்லோரும்

காணத் தலையின்மேல் வைத்திருக்கும் ஆண்டவனுடைய குடும்பத்தோடு தொடர்பு கொண்டால், அந்தப் பாம்பைப் போன்று வாழ்க்கை மாறி உயர்ந்த நிலையை அடைந்து விடலாம். நம் மனத்தின் தீய தன்மைகளும் மாறும், துன்பத்தைத் தருகின்ற மனம் இறைவனோடு சார்ந்து விளங்கும். இந்தக் குறிப்புடன்தான்,

அராப்புனை வேணியன் சேய்அருள் வேண்டும்

என்றார்.

ஆண்டவனுடைய திருவருளைப் பெற்ற பெரியவர்கள் அந்த உடம்பில் இருந்தாலும், கருவிகரணங்களோடு பல தொழில் களைச் செய்தாலும் அவர்கள் சிவபிரானிடம் உள்ள பாம்பு போல உயர்ந்த நிலையில் ஆபரணமாக இருப்பார்கள். அப்படி இல்லாதவர்கள் தாழ்ந்த நிலையில் எல்லோரும் அஞ்சும் பொருளாக இருப்பார்கள்.

அன்பும் தொழுதலும்

நமக்கும் அன்பை உண்டாக்கும் கருவியாகிய அருள் இறை வனிடமிருந்து வரவேண்டும். இறைவனை அடைவதற்குரிய பக்குவத்தை அந்த அருள் நம்பால் விளைவிக்க வேண்டும். இந்த அன்பு நாமாக உண்டாக்கிக் கொள்வது அன்று.

"நினைப்பித்தால் நின்னை நினைப்பேன்"

என்பர் பெரியோர்.

"சிந்தனைநின் தனக்காக்கி நாயினேன்றன்
கண்இணைநின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குஉன்
மணிவார்த்தைக்கு ஆக்கிஐம் புலன்கள் ஆர
வந்தனைஆட் கொண்டுஉள்ளே புகுந்த விச்சை
மால் அமுதப் பெருங்கடலே!"

என்று மணிவாசகர் பாடுகிறார். இறைவனே அவருடைய சிந்த னையைத் தன்பால் வரும்படி ஆக்கிக் கொண்டானாம். சிந்தனையை மாணிக்கவாசகர் இறைவனுக்கு ஆக்கவில்லை; இறைவனே அவ்வாறு ஆக்கி ஆட்கொண்டான். இறைவன்பால்

நமக்கு அன்பு உண்டாகவேண்டுமானால் அதற்கும் அவனுடைய திருவருள்தான் துணையாக இருக்கவேண்டும். ஆண்டவனை நாம் பார்ப்பதற்கு முன்பு அவன் நம்முன்னால் வந்து நம்மைப் பார்க்க வேண்டும். தாமரை மலர்ந்து சூரியனுக்கு முன்பாக நின்று ஒளியை ஏற்றுக் கொள்வது இல்லை. சூரியன் வந்த பிறகு தாமரை மலர்ந்து பின்பு ஒளியை ஏற்றுக் கொள்கிறது. அப்படி முதலில் முருகனுடைய திருவருள் கிடைத்து அதனால் அன்பு வரவேண்டும். அந்த அன்பின் பயனாக அவன் தாளை வணங்கவேண்டும்.

அராப்புனை வேணியன் சேய் அருள் வேண்டும்
அவிழ்ந்த அன்பால்
குராப்புனை தண்டையம் தாள் தொழல் வேண்டும்.

அவிழ்ந்த அன்பு

அன்பு அவிழ்வதாவது யாது?

இறைவன் நம்முடைய மனத்தில் நல்ல குணங்களையும், பொல்லாத குணங்களையும் ஒரு சேர வைத்திருக்கிறான். அதனிடையே அவனே நின்று கொண்டிருக்கிறான். மனத்தில் உள்ள நல்ல குணங்கள் மலர்ந்து, அதனால் உயிர்கள் நல்ல நெறியை அடையவேண்டும் என்பதே ஆண்டவனின் திருவுள்ளம். மனம் மலராமல் மொட்டாகப் பக்குவம் இன்றி இருந்தால் முனையுடையதாக இருக்கும். தாமரை மலராமல் இருக்கும்போது பார்த்தால் முனையையுடைய அரும்பாக இருக்கும். அந்த அரும்பின் கூர்மை மெல்லிய உடம்பைக் குத்திவிடும். மனம் பக்குவம் அடையாமல், மலராமல் மொட்டாக இருக்கும்போது 'நான்' என்ற தன்முனைப்போடு நிற்கும். அதில் அன்பு என்ற மணம் மலரும்போது அந்த முனைப்பு விரிந்து, இல்லாமல் போய்விடும்.

நமக்கு அன்பு உண்டு. ஆனால் அந்த அன்பு மலர்ச்சி பெறாமல் குறுகிய உருவத்தில் நிற்கிறது. நம்மைச் சார்ந்தவர்கள் என்று யாரை யாரை நினைக்கிறோமோ அவர்கள் அளவில் அன்பு செல்கிறது. உண்மையில் உலகம் எல்லாம் நம்மைச் சார்ந்தது என்ற அறிவு வரவேண்டும். அப்படியின்றி நம்

மனைவி, நம் பிள்ளை, நம் சுற்றத்தார் என்ற குறுகிய அளவுக்குள் உறவு கொண்டு அன்பை அந்த அளவுக்குள் செலுத்துகிறோம். 'உலகம் முழுவதும் நமக்குச் சொந்தம். உலகில் உள்ள உயிர்க்கூட்டம் அனைத்தும் நம்முடைய சகோதரர்கள். அவை அனைத்துக்கும் தலைவனாக இருப்பவன் ஆண்டவன்' என்னும் உணர்வு வந்தால் எல்லாப் பொருள்களிடத்திலும், அவற்றுக்கு மேலுள்ள பெருமானிடத்திலும் அன்பு விரிந்து இருக்கும். அப் போதுதான் அன்பின் முழு மலர்ச்சி புலனாகும். அதுவரைக்கும் அன்பு சிறுகச் சிறுக மலர்ந்து வருகிறது என்று சொல்ல வேண்டும். அது முற்றும் போது ஆண்டவன் நினைவும் அவன்பால் இடை விடாத பக்தியும் உண்டாகும். அதையே அருணகிரியார் இங்கே,

அவிழ்ந்த அன்பால்

என்று சொன்னார்.

அவிழ்ந்த அன்பால் குராப்புனை தண்டையம்
தாள்தொழல் வேண்டும்.

அன்பு தன்னுடைய முழு அளவுக்கு விரிந்து நின்றால் அந்த அன்பின் லட்சியம் இறைவன் திருவடியாக இருக்கும். மற்றப் பொருள்களிடத்தில் வைக்கும் அன்புக்குப் பற்று என்று பெயர். 'இறைவன் ஒருவன் உள்ளான். அவனால் படைக்கப்பட்ட ஆருயிர்களிடத்தில் நாம் சகோதர பாவத்தோடு பழக வேண்டும்' என்ற ஜீவகாருண்யம் உண்டானால் அது பற்று ஆகாது. பற்று வேறு; ஜீவகாருண்யம் வேறு. சிலரிடத்தில் வெறுப்பும், மற்றவர் களிடத்தில் விருப்பமும் இருந்தால் அதுவே பற்று ஆகும். அப்படியின்றி எல்லோரிடத்திலும் விருப்பம் இருந்தால் அது பற்று ஆகாது. இறைவன் திருவருள் நினைவோடு, அவன்தான் எல்லாவற்றையும் படைத்தான் என்று உணர்ந்து, எல்லா உயிர் களும் அவனுடைய குழந்தைகள் என்று அன்பு வைத்தால் அது பரவலாக இருக்கும். அவிழ்ந்த அன்பின் பயனாகத் தோற்றும் ஜீவகாருண்யம் அது.

உண்மையான அன்பு யாருக்கு உண்டாகிறதோ அவன் இறை வனை நன்கு நினைப்பான். இறைவனுடைய திருவடியாகிய பற்றுக்கோட்டில் தன் நோக்கத்தை வைத்திருப்பான்.

குராமலர்

நமக்குத் தலை தந்த இறைவன் கால்களைப் பெற்றிருக் கிறான். தலையால் இறைவன் தாளைத் தொழல் வேண்டும்.

குராப்புனை தண்டையம் தாள்தொழல் வேண்டும்.

முருகப் பெருமான் தன்னுடைய திருவடியில் அன்பர் இட்ட குரா மலரையும், அவர் அணிந்த தண்டையையும் புனைந்திருக் கிறான். தண்டை என்பது குழந்தைக்குத் தாய்மார்கள் இடுகிற அணிகலன். இறைவன் அணிகளாலும், மலர்களாலும் தன்னுடைய திருவடிக்கு அழகு செய்து கொண்டு அன்பர்களுடைய உள்ளங் களைக் கவர்கிறான். முன்பே பணிந்த அன்பர்கள் அந்தத் திருவடி யில் குராமலர்களை அணிந்திருக்கிறார்கள். அதைக் கண்டு நாமும் மலர் தூவிப் பணிவதற்குரியது அது என்று தெரிந்து கொண்டு அதைத் தொழ வேண்டும்.

முருகப் பெருமானுக்கு உகந்தது குரா மலர். திருவிடைக்கழி என்னும் தலத்தில் குரா மரத்தினடியில் முருகன் எழுந்தருளி யிருக்கிறான். திருவிசைப்பாவில் சேந்தனார் குரா நீழற் கீழ் நின்ற அப்பெருமானைப் பாடியிருக்கிறார்.

"கொந்து வார்குர வடியினும் அடியவர்
சிந்தை வாரிச நடுவினும் நெறிபல
கொண்ட வேதநன் முடியினும் மருவிய – குருநாத"

என்பது திருப்புகழ்.

இங்கே அருணகிரிநாதப் பெருமான் இராப் பகலற்ற நிலை வருவதற்குக் குராமலர் அணிந்த முருகப் பெருமானின் தாளை நினைக்க வேண்டும் என்று பேசுகின்றார். அருணகிரியார் இராப் பகல் அற்ற அநுபவத்தை நினைக்கும்போது குராப்புனை தண் டையந் தாளையும் நினைப்பது வழக்கம். கந்தர் அலங்காரத்தில் வேறு ஓரிடத்தில்,

"இராப்பக லற்ற இடம் காட்டி யான்இருந் தேதுதிக்கக்
குராப்புனை தண்டையம் தாள் அருளாய்"

என்கிறார். திருப்புகழில் ஒரு பாட்டில் இந்த இரண்டையும் ஒருசேர வைக்கிறார். "ஆண்டவனே, எனக்கு உலகத்தில் உள்ள மயல் போக வேண்டும். அந்த மயல் அற்ற நிலையில் உன்

னுடைய திருவுருவத்தைத் தரிசனம் செய்யவேண்டும். அன்பு மிகமிக என் நெஞ்சு உருகவேண்டும். உருகி ஆர்வம் மிக உன்னைப் புகழ்ந்து பாராட்டவேண்டும்'' என்கிற கருத்தோடு பாடுகிற பாட்டு அது.

''விரகற நோக்கியும் உருகியும் வாழ்த்தியும்
விழிபுனல் தேக்கிட அன்புமேன்மேல்
மிகவும் இராப்பகல் பிறிது பராக்கற
விழைவு குராப்புனை யுங்குமாரா!''

இங்கே இரவும் பகலும் கடந்து நின்ற ஓர் இன்பம் வேண்டு மென்று குறிப்பிடுகிறார். பிறிது பராக்கற ஆசை என்று குராப் புனையும் குமாரனைப் பார்த்து வேண்டுகிறார்.

ஐவர் பராக்கு அறல்

ஆண்டவனுடைய திருவருள் துணையினால் அன்பு விரிந்து அந்தப் பெருமானுடைய திருவடியைப் பற்றிக் கொள்ளும் நிலை வந்தால் நாமும் பக்தர்களாகி, ஐம்பொறிகளை வென்று இறை வனைச் சாரும் நிலை பெறலாம். அப்போது கருவி கரணங்கள் யாவும் இயற்கையாகத் தமக்குள்ள தொழில்களையே செய்து கொண்டிருந்தாலும், அந்தத் தொழில்கள் யாவும் இறைவனையே சார்ந்தவையாகிவிடும். பல பல இடங்களுக்குச் செல்லும் கால்கள் கோயிலுக்குச் செல்லும். பலருடைய முன்னிலையில் வீழ்ந்து வணங்கும் தலை இறைவனுடைய தாளில் வீழ்ந்து வணங்கும். பலருடன் கலந்து இணைந்து வாழும் வாழ்க்கை அடியார்களோடு இணைந்த வாழ்க்கையாகும். உண்ணும் உணவு இறைவனுடைய பிரசாதமாகிவிடும். இந்த வகையில் இந்திரியங் கள் எல்லாம் இறைவனுடைய சம்பந்தம் உள்ள பொருள்களோடு தொடர்பு பெறுவதால் எண்ணங்களும் இறைவனைச் சார்ந்து நிற்கும். இந்த நிகழ்ச்சிகளை அடுத்தபடி சொல்கிறார்.

அவிழ்ந்த அன்பால்
குராப்புனை தண்டையம் தாள்தொழல் வேண்டும்; கொடியஐவர்
பராக்குஅறல் வேண்டும்.

இதுவரைக்கும் நம்முடைய ஐந்து இந்திரியங்களும் நமக்குத் துன்பத்தைத் தந்து கொண்டிருக்கின்றன. அதனால் அவை

கொடிய ஐவர் ஆயின. அந்த ஐந்தும் நம் வழியில் நின்றால் அவற்றால் நாம் பக்தி பெறுவதற்குரிய நெகிழ்ச்சி நிகழும். இதனைத் திருமூலர் திருமந்திரத்தில் ஒரு பாட்டில் கூறுகிறார்.

"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாய்ச் சொரியுமே."

வெறியோடு கூடிய மாடுகள் தக்கபடி அடக்கப்பெற்றால் பாலைச் சொரியும் என்று உருவகமாக இந்தப் பாட்டைச் சொல்கிறார். ஐந்து இந்திரியங்களும் தம் போக்கில் போய்க் கொண்டிருந்தால் அவற்றைப் பெற்றவனுக்குத் துன்பந்தான் விளையும். அப்படி யின்றி அவை அடங்கித் தம் போக்கில் போகாமல் நின்றுவிட்டால் அப்போது இறைவனைத் தொழும் வகையில் அந்த ஐந்து இந்திரியங்களும் செயல்படும். அதனால் அவனுடைய அருள் அநுபவத்திற்குரிய வழியில் அவை நிற்கும். பகையாக நின்றவை உறவாக ஆகிவிடும். இதனையே திருமூலர் உருவக வகையில் சொல்லுகிறார்.

அப்படி, கொடிய ஐவராக இருக்கிறவர்கள் நமக்கு ஏற்றவர் களாக ஆகவேண்டும் என்றால் இறைவன் திருவருளும் அவன் திருத்தாளிடத்தில் அன்பும் உண்டாக வேண்டும். அவன் திரு வடியைத் தொழல் வேண்டும். இதுவரை அவனுடைய திரு வருள் இல்லாமையினால் அவை புறப்பொருட் பார்வையுடை யனவாக இருந்தன. அந்தப் பார்வை இப்போது அறுந்து போகும்.

கொடிய ஐவர்
பராக்குஅறல் வேண்டும்.

பராக்கு என்பது பார்க்க வேண்டிய இடத்தைப் பார்க்காமல் மற்றவற்றைப் பார்ப்பது. பராங்முகம் என்பதைப் பாராக்கு என்று தமிழில் சொல்கிறோம். இறைவனுடைய அருளால் அன்பு உண்டான பிறகு இவை யாவும் மாறிவிடும். அவன் அருள் கிடைக்காத வரைக்கும் இந்திரியங்கள் பல வகையில் அலைக் கழித்துத் துன்புறுத்தும். வெளிமுகமாக இருக்கும் நோக்கம் எல்லாம் அவன் அருளால் உள்முகமாக மாற வேண்டும்.

மனம் பதைப்பறல்

மனம் தானே நின்று செயலாற்றக் கூடியது அன்று. ஐந்து வாசல் வழியாக அது தன் விளையாட்டை நடத்துகிறது. ஐந்து இந்திரியங்களின் வாயிலாகப் பெறுகிற அநுபவத்தை வைத்துக் கொண்டு தன் அரசை நடத்துகிறது. இந்த ஐந்து வாயில்களையும் அடைத்துவிட்டால் அது ஓரளவு அடங்கிக் கிடக்கும். அதற்கு மேல் இறைவனுடைய அன்பையும் பெற்றால் இருக்கிற இடத்தில் அடங்கிவிடும். ஐந்து வாசல்களையும் அடைப்பதைத் தான் இந்திரிய ஜயம் என்று சொல்வார்கள். மனத்திலுள்ள எண்ணம் சிதறுண்டு போவதற்குக் காரணம் ஐந்து வாசல்களும் திறந்து நிற்றல்தான். அரசர்கள் வரும்போது 'பராக்' என்று சொல்வது உண்டு; அவர்கள் வருவதைக் கவனிக்காது வேறு எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்னும் பொருளில் அவ்வாறு சொல்வார்கள். வெளிமுகப்படுகின்ற இந்திரியங்களை ஒடுக்கினால் மனம் சிதறுண்டு போவது நீங்கி ஒருமுகப்பட்டு நிற்கும்.

கொடிய ஐவர்

பராக்குஅறல் வேண்டும்; மனமும் பதைப்புஅறல் வேண்டும்

என்றார்.

மனம் என்பது ஒரு மையப்புள்ளி. அதன் நடுவில் இறைவன் இருக்கிறான். மையப் புள்ளியில் இருந்து ஒருவன் புறப்பட்டு வெளியில் செல்லச் செல்ல அதனுடைய வெளிவட்டம் விரிந்து கொண்டே போகும். அதற்கு முடிவே இல்லை. நாம் அப்படி மையப் புள்ளிக்கு நெடுந்தூரம் வெளி வட்டத்தில் இருக்கிறோம். நம்முடைய லட்சியம் நம்முடைய வட்டத்திற்குப் புறம்பே இருக்கிறது என்று எண்ணி மேலும் பயணம் செய்து கொண்டிருக்கிறோம். அதனால் இந்த வட்டம் விரிந்துகொண்டே போகிறதன்றி, இனிமேல் போக இடம் இல்லையென்று சொல்கிற முடிவைக் காண்பது இல்லை. காரணம் நாம் புறத்தே பயணம் செய்வதுதான்; நம்முடைய இந்திரியங்கள் பராக்காக நிற்றல்தான். அப்படியின்றி நாம் உள்முகமாகப் பயணம் செய்யத் தொடங்கினால் வட்டத்தின் வெளியில் எங்கே நின்றாலும் கடைசியில் மையப் புள்ளிக்குத்தான் வரவேண்டும். இங்கே வந்த பிறகு பயணம் நின்று விடுகிறது. யார் எங்கிருந்து தொடங்கினாலும்

எவ்வளவு தூரத்தில் நின்று தொடங்கினாலும் கடைசியில் யாவரும் ஒன்று சேருகிற மையப் புள்ளி ஒன்றுதான். அதை அடைந்தவர்களுக்கு வேறு லட்சியமோ பொருளோ இல்லை; போக இடமும் இல்லை. பராங்முகமாக இருக்கிற இந்திரியங் களை மாற்றி, மனத்தை உள்முகமாகச் செலுத்தி, மனத்திடையே இருக்கிற மையமாகிய குராப்புனை தண்டையந் தாளை நோக்கி நின்றால் அதற்கு மேல் நினைவும், செயலும், உரையும் இன்றி அங்கேயே இராப்பகல் அற்ற அநுபவம் வந்துவிடும்.

மனம் பதைப்பதற்கு இப்போது எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. அது விரிந்து விரிந்து செல்கிற பிரபஞ்சச் சுழலில் சிக்குண்டு கிடக்கிறது. விருப்பு வெறுப்புகளால் தாக்குண்டு நிற்கிறது. பழைய அநுபவ வாசனையும், இப்போது உள்ள அநுபவமும், இனிப் பெற வேண்டிய அநுபவத்தின்பால் உள்ள ஆசையும் சேர்ந்து அதை அலைக்கழித்துக் கொண்டே இருக் கின்றன. இவையெல்லாம் மாற வேண்டுமானால் நம்முடைய மனம் விரிந்து இறைவனுடைய தாளைப் பற்றிக் கொண்டு அன்பு மலரவேண்டும். இந்திரியங்கள் பராக்கு அறல்வேண்டும். அன்பு விரிவடைந்து, இந்திரியங்கள் பராக்கு அற்றால், மனம் பதைப்பு அற்று ஒருமை நிலைக்கு வரும். அப்போது இராப்பகல் அற்ற நிலை வந்துவிடும்.

சுற்றிச் சுற்றி அலைந்த குழந்தை கண்ட கண்ட இடங்களில் விளையாடி அழுக்கைச் சேர்த்துக் கொண்டு அதனால் தூய்மை கெட்டு, உடம்பில் காயத்தையும் அடைந்து வருந்துகிறபோது தாய் அதனைத் தன் வீட்டுக்குள் கூட்டிக் கொண்டு வருகிறாள். மெல்ல வீட்டின் எல்லைக்குள் வந்த குழந்தை, பின்பு வீட்டுக் குள்ளும், அறைக்குள்ளும் செல்கிறது. அதைத் தொட்டிலில் போட்டுத் தாய் தாலாட்டுப் பாடுகிறாள். அதைத் தா, இதைத் தா என்று கேட்டு அழுவதையும் விட்டுவிட்டு, தாயின் தாலாட்டுப் பாட்டில் அது மனம் செலுத்தி ஒன்றுபடும்போது அப்படியே கிடந்து தூங்கிவிடுகிறது.

அந்த வகையில் பிரபஞ்சம் முழுவதும் தன் ஆசைக் கரத்தை நீட்டி ஐந்து இந்திரியங்கள் என்னும் வாசல்களின் வழியே எப்போதும் சுற்றித் திரிந்துகொண்டிருக்கிற மனம், வெளியே போவதை நீக்கி உள்ளே இருக்கும் எம்பெருமான் திருவடிக் கீழே

தூங்கத் தொடங்கினால் இராப்பகல் அற்ற இன்பம் அதற்குக் கிடைத்துவிடும். இது படிப்படியாக வரவேண்டும் என்று அருணகிரிநாதப் பெருமான் இந்தப் பாட்டில் வெளியிடுகிறார்.

அராப்புனை வேணியன் சேய்அருள்
வேண்டும்; அவிழ்ந்த அன்பால்
குராப்புனை தண்டையம் தாள்தொழல்
வேண்டும்; கொடியஐவர்
பராக்குஅறல் வேண்டும், மனமும்
பதைப்புஅறல் வேண்டும்என்றால்,
இராப்பகல் அற்ற இடத்தே
இருக்கே எளிதல்லவே.

(பாம்பை அணியாக அணியும் சடைமுடியானாகிய சிவபிரானுடைய திருக்குமாரனாகிய முருகன் திருவருள் முதலில் வேண்டும்; அதனால் (விரிந்த அன்பு உண்டாகும்; அந்த அன்பினால்) குராமலரைப் புனையும் முருகனுடைய தண்டையை அணிந்த அழகிய திருவடியைத் தொழுதல் வேண்டும்; (அதன் பயனாக) ஐந்து இந்திரியங்களும் புறத்தே செல்லும் வெளிமுகப் பயணம் அறுதல் வேண்டும்; (அது காரணமாக) மனம் சலனம் இல்லாமல் இருத்தல் வேண்டும்; இவ்வளவும் நிகழ்ந்த பிறகே கைகூடும் என்று சொன்னால், இரவும் பகலுமாகிய சகல கேவலங்கள் அற்ற இன்ப நிலையில் இருத்தல் என்பது எளிய காரியம் அன்று.

அருளால் அன்பு உண்டாக, அன்பால் தாள் தொழல் நிகழ, தொழு தலால் பராக்கு அற, பராக்கு அறுதலால் பதைப்பு அறும்; இவ்வளவும் ஒன்றன்பின் ஒன்றாகக் கை வந்த பிறகே இராப் பகலற்ற இடத்தே இருக்கும் ஜீவன் முக்தி நிலை எய்தலாகும் என்றபடி.

வேணி - சடை, குராப்புனை தாள், தண்டையந்தாள்; முருகனுடைய இளந்திருவுருவத்தை எண்ணியபடி. பராக்கு - பராங் முகம். ஐவர் என்பது தொகைக் குறிப்புச் சொல்; மனமும் என்றது ஐவர் பராக்கறுதலாகிய இறந்ததைத் தழுவி நின்றது; உயர்வு சிறப்பும்மையாகவும் கொள்ளலாம். என்றால் - இராப்பகல் அற்ற இடத்தே இருக்கைக்கு முன் இத்தனையும் கைகூட வேண்டும் என்று சொன்னால்.

முருகனுடைய திருவருளால் அவன்பால் அன்பு உண்டாகி அவனைத் தொழுதலால் இந்திரியம் ஐந்தும் வெளிமுகப்படாமல் நிற்க மனம் லயமாகும் என்றும், அப்பால் இறைவன் அருள் இன்ப அநுபவம் கிடைக்கும் என்றும் இதனாற் புலனாகிறது.)

கந்தர் அலங்காரத்தில் 74-ஆம் பாட்டு இது.

பழனித் திருநாமம்

முன்னுரை

"ஒன்றரை மணி நேரமா பேசுகிறீர்கள்?"

"ஆமாம்,"

"எத்தனை பாடல்கள் சொல்வீர்கள்?"

"அநேகமாக ஒரு பாடலுக்கு விளக்கம் சொல்வேன். சில சமயங்களில் பாதிப் பாடலோடு நின்றாலும் நின்றுவிடும்."

"அந்தப் பாடல்கள் அவ்வளவு கடினமானவையா? பொருளை விளக்க அவ்வளவு நேரம் எதற்கு?"

"நான் பாடலை விளக்குவதில்லை; அதாவது அதில் உள்ள சொற்களுக்குப் பொருளை விளக்குவதோடுமட்டும் நிற்ப தில்லை. அந்தப் பொருளையே விளக்குகிறேன்."

"பொருளை விளக்குவதென்றால் எனக்கு விளங்கவில்லை. அதை முதலில் எனக்கு விளக்குங்கள்."

"முசியாமல் இட்டு மிடிக்கின்றிலை என்று ஒரு பாட்டில் வருகிறது. சலிக்காமல் பிறருக்கு ஈந்து அதனால் வறுமையைப் பெறாமல் இருக்கிறாயே என்று சொல்லி நிறுத்தினால் சொற் களுக்குப் பொருள் சொன்னதாக இருக்கும். ஏன் இடவேண்டும், இட்டு மிடிப்பதனால் பயன் என்ன, சலிப்பு வருவது இயல்புதானே என்று கேள்விகளை எழுப்பிக் கொண்டு, விடை சொல்ல முயல்கிறேன். ஈகை என்பது நமக்கும் பிறருக்கும் பயனை உண்டாக்குகிறதென்று விளக்குகிறேன். பற்றறுப்பதற்கு இது அடையாளமாவதையும் சொல்கிறேன். இவற்றிற்கு மேற்கோள், வரலாறு, அநுபவம் என்று இப்படியே அந்தப் பொருளை விளக்கும் உரை விரிகிறது."

கந்தர் அலங்கார விரிவுரை எவ்வாறு நடக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வந்த நண்பர் ஒருவருக்கும் எனக்கும் நடந்த உரையாடல் இது. கந்தர் அலங்காரப் பாட்டுக்குச் சொற்பொருள் மட்டும் சொல்லி முடிப்பதனால் பெரிய பயன் ஒன்றும் இல்லை. தமிழ் இலக்கியங்கள் பல உள்ளன; அவற்றைப் படித்துக்

கொள்ளலாம். இந்த நூல் வாழ வழிகாட்டும் நூல். செத்துப் போகவும் வழி காட்டுகிறது.

இப்படிச் சொன்னால் வேடிக்கையாகத் தோன்றும். நன்றாக வாழ்வது எப்படி இன்பந் தருகிறதோ அப்படியே நன்றாகச் செத்துப் போவதும் இன்பத்தைத் தரும். 'சாவு என்பதே துன்பத்தில் துன்பமாக இருப்பது; அதில் இன்பம் எது?' என்று தோன்றும். வாழ்வு துன்பமாக இல்லையா? உலகிலுள்ள மனிதர்கள் யாவரும் இன்ப வாழ்வா வாழ்கிறார்கள்? இல்லை இல்லை, இன்பமாக வாழ்கிறார் என்று எண்ணிக் கொண்டிருக்கிற பலருடைய மனத்துக்குள் புகுந்து பார்த்தால் அங்கே எத்தனை புயல்கள் கொந்தளிக்கின்றன என்பது தெரியவரும்.

உண்மையில் இந்த உலகில் முழு வாழ்வு வாழத் தெரிந்த வனுக்கு அந்த உலக வாழ்வு இதனுடைய தொடர்ச்சியாகவே இருக்கும். அப்படி வாழ்கிறவன் இது வேறு வாழ்வு, அது வேறு வாழ்வு என்று பிரித்து நினைக்கமாட்டான். இருபத்தைந்து வயசில் உத்தியோகம் பண்ண ஐந்து வயசில் கல்வியைத் தொடங்குவது போலவும், அறுபது வயசில் துணையாக இருக்கப் பிள்ளை வேண்டுமென்று இருபத்தைந்து வயசில் திருமணம் செய்து கொள்வது போலவும் மறுமையில் நன்கு வாழ வேண்டுமென்று இம்மையிலே அடிப்படை அமைக்க வேண்டும். இங்கே அமைதி பெற்றவன், அங்கே அமைதி பெறுவான். இங்கே அச்ச மில்லாதவன் அங்கே அஞ்சமாட்டான்.

இந்த வாழ்வும் அந்த வாழ்வும் ஒரு முழு வாழ்வின் இரு வேறு பகுதிகள். இம்மை வாழ்வு அடிப்படையானால் அம்மை வாழ்வு மேல் கட்டிடம். ஆகவே, நம்முடைய நாட்டில் இம்மை வாழ்வில் நிகழ்த்தும் நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் மறுமை வாழ்வுக்குரிய தொடர்புகளை வைத்திருக்கிறார்கள். இங்கும் அங்கும், இன்றும் அன்றும் நமக்கு உறவினனாக இருக்கும் இறைவனுடைய திருவருளை இம்மையிலேயே பெற வழிதுறை வகுத்திருக்கிறார்கள்.

இந்த வாழ்விலேயே அந்த வாழ்வின் மணத்தை நுகரலாம் என்று கூறுவது இந்த நாட்டுச் சமயம். ஜீவன் முக்தி என்பது அதுதான். செத்த பிறகு சிவலோகம், வைகுந்தம் என்று சொல்லித்

திரைபோடும் சமயம் அன்று நம் சமயம். இங்கேயே முத்தியின்பம் பெறலாம் என்பதை உறுதியாகச் கூறுகிறது.

அந்த நிலையைப் பெற்றவர்கள் இங்கே நன்றாக வாழ் வார்கள்; நன்றாகவும் சாவார்கள். அவர்கள் நலவாழ்வு வாழ்ந்து நல்ல மரணம் பெறுவார்கள். மரணம் அடைவதனால் துன்பம் அடையாமல், ஓரிடத்திலிருந்து வேறோரிடத்துக்குப் பயணம் செய்வது போல எண்ணி அதனை இயற்கையாக ஏற்றுக் கொள் வார்கள்.

இத்தகைய வாழ்க்கை வாழும் வகையைக் கந்தர் அலங்காரம் எடுத்துரைக்கிறது. இதனை அருளியவர் உலகை அறிந்தவர்; உலகின் நன்மை தீமைகளையும் மனிதனது வலிமையையும் வலியின்மையையும் உணர்ந்தவர். இந்தச் சுழற்சியினின்றும் நீங்கும் வழிகளை உணர்ந்தவர். இறைவனுடைய பெருமை யையும் நன்கு தெரிந்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக அவ னுடைய திருவருளைப் பெற்று அதனால் இவ்வாழ்வையே பேரின்ப வாழ்வாக மாற்றிக் கொண்டவர்.

இறைவனுடைய கருணையில் நனைந்த அவர் உள்ளத்தில் மக்கட் சாதியிடம் கருணை சுரக்கிறது. மக்களை வாழ வைக்க வேண்டும் என்று இரக்கம் உண்டாகிறது. வேண்டாத பொருள் களைக் குவித்துக் கொண்டு, தமக்குக் கிடைத்த கருவிகளைப் பயனற்ற துறைகளில் ஈடுபடுத்தி வீணாக்கி, அச்சமும் அவலமும் கொண்டு வாழும் வாழ்க்கையை மாற்ற வழி காட்டுகிறார். இறைவன் ஒருவன் உள்ளான் என்பதையும், அவன் எந்தத் தீங்கையும் போக்கும் பேராற்றல் உடையவன் என்பதையும், நம்முடைய நிலை எத்தனை இழிந்ததானாலும் அவனுடைய கருணை வெள்ளத்துக்குப் புறம்பன்று என்பதையும், 'எந்தச் சமயத்திலும் எந்த நிலையிலும் அவனுடைய அருளைப் பெறும் முயற்சியை மேற்கொள்ளலாம் என்பதையும் கூறுகிறார். உயிர்களிடத்து அன்பு வைத்து அறநினைவோடு வாழ வேண்டும் என்றும், அத்தகைய இயல்பு உண்டாகி வளர்வதற்கு இறை வனிடம் உண்டாகும் அன்பே மூலகாரணம் என்றும் தெளிய வைக்கிறார். யமனால் வரும் துன்பத்தையும் போக்கிக் கொள்ள லாம் என்று உறுதி கூறுகிறார். இப்போது நாம் கொண்டுள்ள பார்வை மாறி உலகமே இறைவன் மயமாகவும், இல்வாழ்வே

பேரானந்தப் பெருவாழ்வாகவும் அநுபவத்தில் உணர வாய்ப் புண்டு என்ற நம்பிக்கையை ஊட்டுகிறார்.

முருகனது துதியாக இருபபதோடு கந்தர் அலங்காரம் வாழும் வகையையும் தெரிவிக்கிறது. நம்முடைய சமயக் கருத்துக்கள் பலவற்றை வாழும் வகைக்கு ஒத்தபடி கூறுகிறது. பலவேறு வகையில் வாழ்பவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு முறை எளிதாக இருக்கும்வண்ணம் பலபல முறைகளைப் புலப் படுத்துகிறது.

இத்தகைய கருவூலத்தைத் தமிழர் பெற்றது பெரும்பேறு. இதனை விளக்கும் வாய்ப்புக் கிடைத்தது எனது முன்னைப் பிறவியின் புண்ணியப் பயன்.

வாழ்க்கையில் நடைமுறையில் கடைப்பிடிக்கக் கூடிய வழிகளை அருணகிரிநாதர் நுட்பமாகக் கூறியுள்ளார். அவற்றை விரிவாக விளக்கியிருக்கிறேன். புராண வரலாறுகளின் உள்ளுறை களை என்னால் இயன்ற வரையில் புலப்படுத்த முயன்றிருக் கிறேன். மனத்தை வயப்படுத்துவதே எல்லாச் சாதனங்களுக்கும் இலக்கு. அதனை வாழ்வியலில் எளிதிலே பயில அருணகிரியார் வழிகாட்டுகிறார். அத்தகைய இடங்களைக் கூடியவரையில் உலக நிகழ்ச்சிகளோடும் மனித மனப்பாங்கோடும் இயைத்துக் காட்டி விளக்கியிருக்கிறேன்.

இந்தப் புத்தகத்தில் ஏழு பாடல்களின் விளக்கம் (75 – 81) இருக்கிறது.

முதற்பாட்டில் படிப்படியாக இறைவன் அருளைப் பெறும் எளிய வழிகளை எதிர்மறை முகத்தால் தெரிவிக்கிறார் அருண கிரியார். இரண்டாவது பாடலில் உடலுறுப்புக்களை இறைவனது வழிபாட்டில் ஈடுபடுத்த வேண்டும் என்பதை எதிர்மறை முகத்தால் கூறுகிறார். மூன்றாவது பாடலில் மாதர் மயலை மாற்றி முருகன் திருவடித் தியானம் செய்ய வேண்டும் என்பதைச் சொல்கிறார். நான்காவது செய்யுளில் உறவினரும் உடைமையும் நில்லா என்பதை விளக்கி இறைவனைப் போற்றவேண்டும் என்று நல்லுரை கூறுகிறார். ஐந்தாம் செய்யுள் காம மயக்கத்தால் அல்லற்படுவதைச் சொல்கிறது. ஆறாவது செய்யுளும் ஏழாவதும் இறைவனுடைய அருள் வல்லபத்தால் மரணபயத்தையும்

போக்கிக் கொள்ளலாம் என்ற அரிய கருத்தை இருவேறு வகையில் சொல்கின்றன.

நெஞ்சை நோக்கிக் கூறும் பாடல்கள் இரண்டும் (1,3), முருகனை முன்னிலைப்படுத்துவன மூன்றும் (2,5,6), உலகத் தாரை விளித்துரைப்பது ஒன்றும் (4), காலனை அறை கூவும் பாட்டொன்றும் (7) இப்புத்தகத்தில் வருகின்றன. பழனியை ஒரு பாட்டிலும் (1), திருத்தணியை இரண்டு பாடல்களிலும் (2,5) நினைப்பூட்டுகிறார்.

இறைவனுடைய வழிபாட்டு முறைகள் பலவற்றைச் சொல்லித் தருகிறார். அவன் உறையும் தலத்தின் திருநாமத்தைப் பலகால் சொல்லுதல், அப்படிச் சொல்வாரைப் பணிதல், அடி யாருக்கு இட்டு மிடித்தல், முருகா என்று இறைவன் திரு நாமத்தைக் கூறுதல், அவன் திருக்கோலத்தைக் கண்ணால் நாடுதல், கையால் தொழுதல், நாவாற் பாடுதல், அவன் பூங்கழலை நோக்குதல், தலையிற் சூடுதல், அவனைப் போற்றுதல், பரமானந்தம் மேற்கொள விம்மி விம்மிக் கூத்தாடுதல் ஆகியவற்றைச் சொல்கிறார்.

மகளிரைச் சேல்வாங்கு கண்ணியர் என்றும் தார்கொண்ட மாதர் என்றும் பந்தாடு மங்கையர் என்றும் குறிக்கிறார். மாகத்தை முட்டிவரும் கூற்றன், அந்தகன் என்று யமனைக் குறிக்கிறார்.

வெள்ளிமலை போலக் கால் வாங்கி நிற்கும் ஐராவதத்தின் மேல் வரும் இந்திரனையும், கோடாத வேதனையும், தாராகணம் எனும் தாய்மார் அறுவரையும் காட்டுகிறார். சிவபெருமானை முத்திக் கொடை வழங்கும் வள்ளற்பெருமானாகவும் இறை வியைப் பாகத்தில் உடையவராகவும் வருணிக்கிறார். உமாதேவி சிவபெருமானைப் பாகத்தில் வைக்கும் பரம கல்யாணியாகவும் முருகனுக்குப் பால் அருத்தும் பெருமாட்டியாகவும் இருப்பதைப் புலப்படுத்துகிறார்.

செவ்வேளை அமராவதி காவலன், இளங்குமரன், உமை முலைப்பாலுண்ட பாலன், கந்தன், குமரன், கூர்கொண்ட வேலன், செய்யவேல் முருகன், பரம கல்யாணிதன் பாலகன், முருகன் என்று பாராட்டுகிறார். அவனுடைய பூங்கழலும் தண்டையும் அணிந்த திருத்தாளையும், அவன் திருக்கை வேலையும், சிறு வாளையும், அவன் உடை வாளையும், தோகைப் புரவியாகிய மயிலையும் இடையிடையே நினைக்கிறார்.

முருகன் கார்த்திகை மாதர் தந்த பாலை உண்டதும், உமா தேவி கறந்தருத்திய பாலை நுகர்ந்ததும், கிரவுஞ்ச மலையை எறிந்ததும், சூரனை அழித்து இந்திராணியின் தாலி காத்ததுமாகிய திருவிளையாடல்கள் இந்தப் பாடல்களில் வருகின்றன.

இதுவரையில் வெளியாகியுள்ள பதினைந்து புத்தகங்களிலும் பல செய்திகளும் உவமைகளும் மீட்டும் மீட்டும் வந்திருக்கலாம். முருகனுடைய திருநாமங்களையும், திருவிளையாடல்களையும், நம்முடைய குறைகளையும், உலகியலையும் மீட்டும் மீட்டும் அருணகிரியார் சொல்லுகிறார். அப்படி வரும் இடங்களில் முன் சொன்ன சில கருத்துக்கள் மீட்டும் வருவது இயல்பே. ஆயினும் முன்னே விரிவாகச் சொன்னதைப் பின்னே சுருக்கியும், முன்னே ஒரு வகையில் விளக்கியதைப் பின்னே வேறு வகையில் விளக்கியும், சுருக்கமாகச் சொன்னதைப் பெருக்கியும், மேற்கோள் இல்லாமற் சொன்னதை மேற்கோள் காட்டி வற்புறுத்தியும் சொல்ல முயன்றிருக்கிறேன். இருப்பினும் பல இடங்களில் ஒரே கருத்து வந்திருப்பதை மாற்ற முடியவில்லை. அவற்றை மீட்டும் படிக்கும் போது, ''சொன்னதையே திருப்பிச் சொல்கிறாரே!'' என்று அன்பர்கள் சலித்துக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்று வேண்டுகிறேன். தனித்தனிப் புத்தகமாக வரும் இந்த வரிசையில் ஏதேனும் ஒன்றை மட்டும் படிக்கும் அன்பருக்கு ஓரளவு தெரிய வேண்டும் அல்லவா? அந்தப் பயனை எண்ணி, இந்தக் 'கூறிய கூறல்' குற்றத்தை அன்பர்கள் பொறுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

வழக்கம்போல் இந்த அலங்காரச் சொற்பொழிவுகளைச் சுருக்கெழுத்தில் எடுத்துத் தட்டெழுத்தில் வடித்துத் தந்தவர் திரு. அனந்தன் அவர்கள். சுருக்கெழுத்துக் கலையில் கைவந்த அவருடைய உதவி இன்றேல் இந்த வடிவில் இவ்வரிசை வந்திராது. அவருக்கு முருகன் இன்னருளால் எல்லா நலங்களும் மேன்மேலும் ஓங்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

கி.வா. ஜகந்நாதன்

பழனித் திருநாமம்

பெரியவரின் நல்லுரை

ஒரு பெரியவர் ஓர் இளைஞனுக்கு நல்லுரை கூற வந்தார். அவன் சரியானபடி நடக்காமையினால் இன்ன இன்ன செய்ய வேண்டுமென்று அவர் சொல்லலானார். ''ஹைஸ்கூலுக்குப் போய்ப் படிக்க வேண்டும். முதல் வகுப்பில் தேர்ச்சி பெற வேண்டும். பின்பு காலேஜுக்குப் போக வேண்டும். அங்கே பாடமாக உள்ள நூல்களைப் படித்துத் தெளிவு பெற்றுத் தேர்ச்சி பெறவேண்டும். அப்போதுதான் உத்தியோகம் கிடைக்கும்'' என்று சொன்னார். அதைக் கேட்டவுடன் அந்த இளைஞனுக்கு ஒரே பிரமிப்பாக இருந்தது. ''அப்படியெல்லாம் செய்வதற்கும் நமக்கும் நெடுந்தூரம்'' என்று எண்ணி மயங்கி நின்றான்.

பேசியவருக்குக் கொஞ்சம் கருணை பிறந்தது. ''சோம்பித் திரிந்து கொண்டிருக்கிறாயே. இவ்வளவு பெரிய காரியங்களை எல்லாம் செய்ய வேண்டும் என்று சொன்னவுடன் மயங்குகிறாயே. புத்தகத்தை எடுத்துப் படிக்காமல் இருக்கிறாயே. கேட்டவுடன் சொல்ல வேண்டுமென்று நெட்டுருப் பண்ணாமல் இருக்கிறாயே. பள்ளிக் கூடத்தைப் பற்றிக் கவலைப்படாமல், சம்பளம் கட்டு வதற்கு என்ன வழி என்று ஆலோசிக்காமல், சும்மா வழியில் போகிறாயே'' என்று பின்பு எளிய முறைகளைச் சொன்னார்.

அதுவும் இதுவும்

அவ்வண்ணமே அருணகிரியார் சென்ற பாட்டில்,

"அராப்புனை வேணியன் சேய் அருள் வேண்டும்
அவிழ்ந்த அன்பால்
குராப்புனை தண்டையந் தாள் தொழல் வேண்டும்
கொடிய ஐவர்
பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பு அறல் வேண்டும்"

என்று சொன்னார். ''இவையெல்லாம் நிறைவேறினால் அல்லவா இராப்பகல் அற்ற இடத்தில் இருக்க முடியும்? அது மிகவும் எளிய செயல் அன்றே!'' என்று முடித்தார். பிறகு அவருக்கே இரக்கம் தோன்றியது. ''இப்படிச் சொல்லி விட்டோமே! இந்த நெறிகள் மிகவும் துன்புற்று அடைய வேண்டியனவாயிற்றே! இதைக் கேட்டே அஞ்சுவார்களே யாவரும்!'' என்ற கருணை அவர் உள்ளத்தில் முதிர்ந்தது. உடனே எளிய முறைகளை அடுத்த பாட்டில் சொல்லத் தொடங்கினார். இது செய்ய வேண்டும் என்று முன்பு சொன்னவர், எளியனவாய் இருக்கின்ற இவை களைக்கூடச் செய்யவில்லையே என்ற வாய்பாட்டிலே இப் போது ஆரம்பிக்கிறார். ''அப்படியெல்லாம் சொன்னேனே என்று அஞ்சாதே. இவ்வளவு எளிமையான வழிகள் இருக்க இவற்றைக் கூட நீ கவனிக்கவில்லையே! இவற்றை முதலில் செய். பின்பு முன்பு சொன்னவை எளிதில் நிறைவேறும்'' என்று உற்சாக மூட்டும் முறையில் இந்தப் பாட்டை அடுத்தபடி வைக்கிறார்.

படிக்கின் றிலைபழ னித்திரு நாமம்; படிப்பவர்தாள்
முடிக்கின் றிலை;முரு காஎன் கிலை;முசி யாமல் இட்டு
மிடிக்கின் றிலை;பர மானந்தம் மேற்கொள விம்மி விம்மி
நடிக்கின் றிலை;நெஞ்ச மே,தஞ்சம் ஏது நமக்குஇனியே?

நெஞ்சை நோக்கிக் கூறல்

இன்று வந்து நாளைப் போகின்ற மக்களைப் பார்த்துச் சொல் லாமல் தம்மோடு உறவாகிய நெஞ்சைப் பார்த்துச் சொல்கிறார். தம்முடைய நெஞ்சுக்குச் சொன்னாலும் மற்றவர்கள் இதனை உணர்ந்து பயன்பெற வேண்டுமென்றதுதான் அவர் கருத்து. பசுமாடு தன் கன்றுக்குப் பால் கொடுத்தாலும் அதன் பிறகு அதன் பாலை எல்லோரும் பயன்படுத்திக் கொள்வது வழக்கந்தானே? அதுபோல் நெஞ்சுக்குச் சொல்லும் வாயிலாக உலகிலுள்ள மக்களுக்கு அரிய கருத்தைத் தெரிவிக்கிறார். 'முருகப் பெருமானைத் துதி செய். அவனுடைய கோயிலுக்குச் சென்று சுற்று. அவனைத் தினமும் மலரெடுத்து அருச்சனை செய்து வழிபாடு செய்' என்று சொல்லியிருக்கலாம். ஆனால் இதில் அப்படிக்கூடச் சொல்ல வில்லை. அவற்றைவிட மிக எளிய வழிகளைச் சொல்லுகிறார்.

தலப்பெயர்

தலந்தோறும் சென்று அங்கங்கே எழுந்தருளியிருக்கும் ஆண்டவனைத் தரிசனம் செய்து இன்புறுதல் சமய வாழ்க்கையில் அடிப்படையான வழக்கம். ஆண்டவனுடைய தரிசனத்தைச் செய்தவர்கள் மெல்ல மெல்ல அவனுடைய திருவுருவை உள்ளத்தில் வைத்துத் தியானம் செய்ய வேண்டும். அந்தத் தியானத்திற்குக் கருவியாகவே தல தரிசனத்தைப் பெரியவர்கள் அமைத்திருக்கிறார்கள். அப்படிப் போய்த் தரிசனம் பண்ணுவது கூடக் காலம், சக்தி, செல்வம் ஆகியவற்றைப் பொறுத்தது. பல ஊர்களுக்குப் போகவேண்டாம். சொந்த ஊரில் கோயில் இருக்கும். கோயில் இல்லாத ஊர் தமிழ்நாட்டில் இல்லை அல்லவா? அந்தக் கோயிலுக்குச் சென்று தினமும் தெய்வத்தைத் தரிசித்து வழிபடுவது நல்லது. அதுவும் முடியவில்லை; உத்தியோகத் தொந்தரவு அதற்கு இடம் கொடுக்கவில்லை. அப்போது வீட்டிலேயே ஒரு படத்தை வைத்து வழிபடலாம். அப்படியும் முடியவில்லை. இறைவனுடைய திருநாமத்தையாவது சொல்லிக் கொண்டிருக்கலாம். கடவுளுடைய திருவுருவத்தைத் தியானிப்பது ஒருவகை முயற்சியினால் நடப்பது. ஆனால் அவன் திருநாமத்தை எளிதில் சொல்லிவிடலாம். அவன் திருநாமத்தைச் சொல்வது கிடக்கட்டும். அவன் இருக்கிற ஊர்களின் பெயரையாவது சொல்லலாம். அது எல்லாவற்றையும்விட மிக எளிது. ''இதைக்கூட நீ சொல்லாமலே இருக்கிறாயே!'' என்று தொடங்குகிறார்.

''அப்பா! நீ ஆண்டவன் நாமத்தைக்கூடச் சொல்ல வேண்டாம். அவன் உறையும் எல்லாத் தலங்களுக்கும் சென்று தரிசனம் செய்ய வேண்டாம். அவன் எப்போதும் அருள் ஆட்சி செய்து எழுந்தருளியிருக்கும் பழனிக்குப் போ என்றுகூட நான் சொல்லவில்லை. அந்தச் சிறந்த தலத்தின் பெயரைக்கூடவா சொல்லக் கூடாது? பெயரைச் சொன்னாலும் புண்ணியம் உண்டாகுமே! இந்த எளிய காரியத்தைக்கூட நீ செய்யாமல் இருக்கிறாயே!'' என்று இரங்கிப் பேசுகின்றார்.

திருநாளைப் போவாராகிய நந்தனார் நடராசப் பெருமானைக் கண்டு முதலில் சேவிக்கவில்லை. சிதம்பரத்திற்குப் போகவில்லை. தில்லை, தில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தாராம்.

''தில்லை தில்லை என்றாற் பிறவி
இல்லை இல்லை என்று மறை மொழியும்''

என்று கோபாலகிருஷ்ண பாரதியார் பாடுவார். நந்தனார் தல தரிசனத்திற்கு முன்னாலே தலத்தின் பெயரைச் சொல்லியே ஆனந்தப்பட்டார். அந்த நிலைகூட நமக்கு வரவில்லையே என்று அங்கலாய்க்கிறார் அருணகிரியார்.

படிக்கின்றிலை பழனித் திருநாமம்!

தலங்களின் பெருமை

பழனி என்ற ஊரின் பெயரைச் சொன்னால் பல வகையான எண்ணங்கள் வரலாம். அங்கே நகரசபை இருக்கிறது. கச்சேரி இருக்கிறது. வியாபாரிகள் இருக்கிறார்கள். ஆனால் பழனி என்று சொன்னவுடன் நமக்கு அவை நினைவுக்கு வருகிறது இல்லை. ''நான் பழனிக்குப் போகிறேன்'' என்று யாரேனும் ஒருவர் சொன்னால், அவர் ஏதோ விவகாரத்திற்காகவோ, வியாபாரம் செய்து லாபம் சம்பாதிப்பதற்காகவோ போகிறார் என்று எண்ணுவது இல்லை. பழனி என்றவுடனே நமக்கு ஆண்டவன் நினைப்புத்தான் வருகிறது. திருநெல்வேலியில் இருக்கும் ஒருவன், ''நான் திருச்செந்தூர் போகிறேன்'' என்று சொன்னால், ''அங்கே யாரேனும் உறவினர் வீட்டில் விசேஷமா?'' என்று கேட்பது வழக்கம் அன்று. ''அங்கே இப்பொழுது என்ன திரு விழா?'' என்று கேட்போம். போகிறவனுக்குத் திருச்செந்தூரில் வேறு வேலை இருக்கலாம். ஆனாலும் திருச்செந்தூர் போகிறேன் என்று சொன்னால் முதலில் நமக்குச் செந்தில் ஆண்டவனுடைய நினைவுதான் வருகிறது.

இந்த நாட்டில் எந்த ஊரைப் பார்த்தாலும் அங்கே கோயில் இருக்கும். அந்தக் கோயிலுக்கு வந்து வழிபடுபவர்களுடைய வரலாற்றை அந்த ஊர்க்காரர் சொல்வார்கள். சில ஊர்களுக்குப் புராணம் இருக்கும். ஊரின் பெயரைச் சொல்லும்போதே அந்த ஊரின் பெருமை எல்லாம் தெரியும்படியாக அப்பெயர் அமைந் திருக்கும்.

மதுரை என்றால் மீனாட்சி நினைவுக்கு வருவாள். சுவாமி மலை என்றால் முருகன் நினைவுக்கு வருவான். அந்த இடங்

களில் வாழ்க்கைக்குரிய வசதிகளும், நாகரிக முயற்சிகளும், சினிமாக் கொட்டகையும் இல்லாமல் இல்லை. ஆனாலும் எல்லாவற்றுக்கும் மேலாக என்றும் மறையாமல் இருக்கின்ற பெருமை இறைவனுடைய சம்பந்தத்தினால் உண்டானதுதான். ஊருக்கே அதனால் மாறாத பெருமை உண்டு.

தலதரிசனப் பயன்

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்பைச் சொல்வார்கள். பல பெருமக்கள் வந்து வழிபட்ட இடம் என்று சொன்னால் அந்தத் தலத்திற்கு மதிப்பு உண்டாகிறது. இறைவனுடைய திருவருளைப் பெறவேண்டுமென்று முயற்சி செய்கிறவனுக்குக் குருநாதன் கிடைக்க வேண்டும். குருநாதன் எளிதில் கிடைக்க மாட்டான். பல இடங்களில் தேடி ஒரு மூலிகையைக் கண்டு பிடிப்பது போலக் குருவினுடைய திருவருள் கிடைக்க வேண்டும். மூலிகை கடையில் கிடைக்காது; சந்தையில் கிடைக்காது; வீட்டுக் கொல்லையிலும் கிடைக்காது. மலைப் பிராந்தியங்களில் தான் சிறந்த மூலிகை வளரும். ஆகவே அதைத் தேடுகிறவன் பெரிய சாலைகளில் நடந்து கொண்டிருந்தால் பயன் இல்லை; பங்களாக்களுக்குப்போய் வந்தாலும் பயன் இல்லை. எங்கே எங்கே மூலிகைகள் உண்டோ அங்கெல்லாம் போய்த் தேட வேண்டும்.

அதுபோல இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்கு வழி காட்டுகிற குருநாதன் இந்த உலகத்தில் இருந்தாலும் அவன் எங்கே இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நல்லவர்களிடையே சிறந்த ஞானிகள் பழகுவார்கள். தம்மைக் காட்டிக் கொள்ளாமல் அத்தகைய கூட்டத்தில்தான் அவர்கள் இருப்பார்கள். எங்கே தீர்த்த விசேடம் இருக்கிறதோ, தல விசேடமும் மூர்த்தி விசேடமும் உள்ளனவோ அங்கேதான் பெரும்பாலும் பெரியவர்கள் இருப்பார்கள். அவர்கள் தம்மைக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் வேறு இடங்களில் தங்குவதற்கு அவர்கள் மனம் இடம் கொடுக்காது. ஆகையால் தலங்களையும், தீர்த்தங்களையும், மூர்த்திகளையும் தேடிக் கொண்டு போனால் நடமாடும் மூர்த்தியாகிய குருநாதனை என்றைக்காவது ஒருநாள் கண்டுபிடித்துவிடலாம். தலயாத்திரை செல்வதில் இத்தகைய ஒரு பயன் உண்டு

முதலில் நம் நெஞ்சில் இறைவனுடைய பெருமையும் வரலாறுகளும் இடம் கொள்கின்றன. அப்பால் நாம் போகின்ற கோயில்களுக்கு நம்மைப்போலவே வருகின்ற பல பக்தர்களின் பழக்கம் உண்டாகிறது; சாது சங்கம் ஏற்படுகிறது. அது அதிகமாகச் சாதுக்களுடைய இயல்பு தோன்றுகின்றது. பக்தர் களும், சாமான்ய மனிதர்களும், சிறந்த நிலையில் உள்ளவர்களும் இன்னார் என்று இனம் கண்டுபிடிக்கும் ஆற்றல் நமக்குக் கிடைக்கிறது. அதனால் சிலருடைய சிறப்பான குணங்களைக் காணுகின்ற பேறும் கிடைக்கிறது. அந்தப் பேற்றைக் காணும் போது நமக்கும் அத்தகைய நிலை வரவில்லையே என்ற ஏக்கம் உண்டாகிறது. இந்த ஏக்கமே ஆர்வமாக மாற, அந்த ஆர்வம் முயற்சிக்குத் தூண்டு கோல் ஆகும். முயற்சி செய்ய வேண்டு மென்ற துடிப்பு உண்டாகும் போது சாதுக்களிலே சிறந்தவர் களைக் கண்டதுபோலச் சிறந்தவர்களுக்குள்ளே சிறந்த குரு நாதனைக் கண்டுபிடிக்கின்ற வாய்ப்புக் கிடைக்கும்.

இவற்றுக்கு எல்லாம் மூலம் சாது சங்கந்தான். சாதுக்கள் நல்ல இடங்களைச் சார்வார்கள். நல்ல இடம் என்பது கூடமும், ஹாலும், நகரமும் அன்று; ஆண்டவன் கோயில் கொண்டிருக்கிற ஆலயங்களும், திருத்தலங்களுமே ஆகும். ஆக, மூர்த்தி தலம் முதலிய திவ்ய தரிசனத்தால் சாது சங்கம் ஏற்பட்டு, அதனால் நாம் நற்கதி அடையவேண்டுமென்ற ஆசை உண்டாகி, அதனால் அதற்கு வழி காட்டுவார் யார் என்று ஆராய்ச்சி பிறந்து, கடைசி யில் குருநாதனைச் சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைக்கும். இவற்றை யெல்லாம் எண்ணித் தாயுமானவர் ஒரு கண்ணி பாடியிருக்கிறார்.

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தைசொலச் சற்சருவும் வாய்க்கும் பராபரமே"

என்று சொன்னார்.

சிறந்த தலங்கள்

இந்த நாட்டில் ஓர் ஊருக்குப் பெருமை அந்த ஊரிலுள்ள வீடுகளாலே அல்ல; வீதிகளாலே அல்ல; கோயில்களால்தான். இன்றுகூட அந்த நிலை மாறவில்லை.

தலங்களுக்குள் சிறந்தவை என்று சிலவற்றைத் தனியாக எடுத்துச் சொல்கிறோம். இறைவன் எழுந்தருளியிருப்பதனாலேயே

அவற்றிற்குத் தனிச் சிறப்பு என்பது இல்லை. இறைவன் இருப்பது தான் சிறப்பு என்றால் உலகம் முழுவதும் அவனுக்குரிய தலமே. ஏதேனும் ஒரு கடையில் பல பண்டங்களை விற்பார்கள். அந்தக் கடையில் வியாபாரம் செய்கின்றவனும் உரமுள்ளவனாக இருக்க லாம். ஆனால் கடையில் இருக்கும் பண்டம் நல்லது என்பதை வியாபாரிகள் பேச்சினால் நாம் நம்புவது இல்லை. நமக்கு வேண்டியவர்கள், நம்முடைய மதிப்புக்கு உரியவர்கள் அந்தக் கடையில் பண்டங்களை வாங்கிப் பயன்படுத்திக் கொண்டதாகச் சொல்லும் போதுதான், நாமும் அங்கே போய் வாங்கலாம் என்ற நம்பிக்கை எழுகிறது. அப்படி, எல்லாத் தலங்களிலும் இறைவன் இருந்தாலும் எந்த எந்தத் தலங்களில் பல பெரியவர்கள் வந்து வழிபட்டு நல்ல அநுபவத்தைப் பெற்றார்களோ அந்தத் தலங் களுக்கு சென்றால் பக்தி முதிர்கிறது. அத்தகைய தலங்களில் மற்றப் பெரியவர்களும் வந்து சேருவார்கள். ஞானசம்பந்தர் முதலிய பெருமக்கள் தம்முடைய திருப்பாட்டினாலே புகழ்ந்த தலங்களுக்குப் பெருமை உண்டாகியிருக்கிறது. அங்கே இறைவன் தனிச் சிறப்போடு இருக்கிறான் என்பது அல்ல. அந்த இடத்தில் திருஞான சம்பந்தப்பெருமான் முதலிய பெருமக்கள் வந்து அருள் அநுபவம் பெற்று அதன் விளைவாகப் பாடல்கள் பாடியிருக் கிறார்கள் என்ற நினைவு அங்கே போனால் உண்டாகிறது. அப்போது நாமும் அதனைப் பெறவேண்டுமென்ற ஆர்வம் அதிகமாகும்.

கல்யாணமாகாத பிரமசாரி ஒருவன் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்ற ஆசை உடையவனாக இருக்கலாம். ஆனால் அந்த ஆசை சில சமயங்களில் மிக அதிகமாக முறுகி நின்று வேதனைப்படுத்தும். தன்னைப் போல மற்றொரு பிரமசாரிக்குக் கல்யாணம் ஆகி, அந்தக் கல்யாணத்திற்கு அவன் சென்றிருந்தானானால், 'நமக்கும் இப்படி ஒரு கல்யாணம் நடக்கவில்லையே' என்ற ஏக்கம் எழும். கல்யாணம் நடப்பதற் குரிய பருவம் அவனுக்கு எப்போதும் இருந்தாலும், முதிர்ந்த எண்ணம் எழுவது அதனை நினைப்பதற்குரிய இடத்தில்தான். அவ்வாறே இறைவனுடைய திருத்தலங்கள் எங்கும் இருந்தாலும் அவன் திருவருள் பெற்ற பெரியவர்கள் நல்ல அநுபவத்தை அடைந்த இடமானால் நமக்கு அந்த நிகழ்ச்சியின் நினைவும்

அதனால் ஆர்வமும் அது காரணமாக முயற்சியும் அந்த இடத்தில் எழும். ஆகையால்தான் நம்முடைய ஊரிலேயே கோயில் இருந் தாலும் காசி என்றும், இராமேசுவரம் என்றும், பழனி என்றும், செந்தூர் என்றும் நாம் போகிறோம்.

பெயரைச் சொல்லுதல்

ஏதேனும் ஒரு பொருளுக்கு மதிப்பு இருக்குமானால் அதை நாம் அடைவதுமட்டும் நமக்குப் பெருமை என்பது இல்லை. அதைப் பற்றிச் சொல்வதையே ஒரு பெருமையாகக் கருது கிறோம். தலத்திற்கு மதிப்பு இருப்பதைப் போலவே தலத்தி னுடைய திருநாமங்களுக்கும் மதிப்பு உண்டு. அருணாசலம் என்று நினைத்தாலே போதும் என்று சொல்வார்கள். ஒருவரை நாம் அடைவதற்கு முன்னாலேயே அவரை அடைய வேண்டு மென்ற ஆசை மிக வேண்டுமென்றால் அவரைப் பற்றிய நினைப்பு அதிகமாக வேண்டும். தலங்களில் போய் இறைவனை வழிபடுவதற்கு முன்னால் தலங்களைப் பற்றிய எண்ணம் நம் முடைய உள்ளத்தில் முறுகவேண்டும். கோயிலுக்குப் போகா விட்டாலும் கோயில் கோயில் என்று சொல்லிக் கொண்டிருந்தால் ஏதேனும் ஒருநாள் போகின்ற முயற்சி நமக்கு உண்டாகும்.

தலங்களுடைய நினைப்பை நமக்கு அதிகமாக்குவதற்குப் பல முறைகளைப் பெரியவர்கள் வகுத்திருக்கிறார்கள். தலங் களின் பெயரைக் குழந்தைகளுக்கு வைப்பது உண்டு. ஏழுமலை என்று ஒருவர் கூப்பிடுகிறார்; உடனே திருப்பதி நமக்கு நினைவு வருகிறது. அருணாசலம், வேதாசலம் என்று பெயர்கள் வைப்பதை நம் நாட்டில் பார்க்கிறோம். பழனி என்று பெயர் உடையவர் களும் பலர் இருக்கிறார்கள். அந்தப் பெயர்களைக் கேட்கும் போதெல்லாம் அந்த அந்தத் தலங்களைப் பற்றிய நினைப்பு நமக்கு வரவேண்டும். ஆகையால்தான் அத்தகைய பெயரை வைப்பது வழக்கமாக இருக்கிறது. இறைவனைத் தரிசிப்பதோடு அதற்கு முன்பே இறைவன் திருநாமத்தைச் சொல்வதனால் ஒருவகைப் பயன் இருப்பது போல, தல தரிசனத்திற்கு முன் தலத்தின் பெயரைச் சொல்வதிலும் பெருமை உண்டு. அதை முதல்படி என்றுகூடச் சொல்லலாம். 'அந்த முதற்படியைக்கூட நீ மிதிக்கவில்லையே!'' என்று இரங்குகிறார் அருணகிரியார். ''நீ

ஆண்டவன் பெயரைச் சொல்லாவிட்டாலும் அவன் இருக்கிற ஊரையாவது சொல்லக்கூடாதா?'' என்கிறார்.

தமிழில் ஒரு பழமொழி உண்டு, ''ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக் கூடாது'' என்று. பழங்காலத்தில் பெரியவர் களின் பெயரைச் சொல்லும் வழக்கம் இல்லை. பெயர் இரக சியம் என்பது அல்ல. பெரியவர்களுடைய பெயரைச் செரல்வது மரியாதையாகாது. ஆனாலும் அவர்களை எப்படிக் குறிப்பது? அவருடைய ஊரையிட்டுக் குறிப்பது வழக்கம். அந்த வழக் கத்தை இப்போது சங்கீத வித்துவான்களிடம் பார்க்கலாம். முசிரி, அரியக்குடி, செம்மங்குடி என்று பேசுகின்றோம். பழங்காலத்தில் பெரியவர்களைக் கூறும்போது கூடலூர் கிழார், அரிசில் கிழார் என்று சொல்வார்கள். அவர்களுடைய சொந்தப் பெயர் நமக்குத் தெரியாது. ஊர்ப் பெயர்களுக்கே ஒரு பெருமை உண்டு.

இங்கே அருணகிரியார் சொல்கிறார், ''நீ ஆண்டவன் பெயரைச் சொல்லாவிட்டாலும் அவன் இருக்கிற ஊரின் பெயரையாவது சொல்லக்கூடாதா, சொல்லவில்லையே!'' என்கிறார். ஆண்டவன் திருவருளால் இன்ப அநுபவத்தை அடைய வேண்டுமென்ற ஆசை நமக்கு இருக்கிறது. ஆனால் அதற்குரிய முயற்சிகளைச் செய்வதற்கு மனம் இல்லை. சோம்பேறியாக இருக்கிறோம். எந்த இன்பமும் திடீரென்று கிடைக்காது. ஒவ்வொரு காசாகச் சேர்த்தால் ரூபாயாவது போல, ஒவ்வொரு சிறு முயற்சியும் சேர்ந்து பெரிய முயற்சியாகிப் பெரிய பயன் கிடைக்கிறது. பெரிய காரியமாகிய அருளநுபவத்திற்குச் சின்ன முயற்சிகள் காரணமாகின்றன. அந்த முயற்சியை மெல்ல மெல்ல நமக்குச் சொல்லித் தருவாரைப் போல, எதிர்மறை வாயிலாக அருணகிரி யார் சொல்கிறார். ''ஆண்டவன் பெயரைச் சொல்வது கிடக் கட்டும். முதலில் அவன் உறைந்திருக்கிற ஊரையாவது சொல்லத் தெரிந்து கொள். நீ அதைத் தெரிந்து கொள்ளவில்லையே!'' என்று நம் நெஞ்சைப் பார்த்துச் சொல்கிறார்.

படிக்கின்றிலை பழனித் திருநாமம்.

பழனியின் பழஞ்சிறப்பு

பழனி ஆறுபடை வீடுகளில் ஒன்று. திருமுருகாற்றுப் படையில் ஆறுபடை வீடுகளை நக்கீரர் சொல்கிறார். ஆறுபடை

வீடு என்று சொல்கிற வழக்கம் திருமுருகாற்றுப்படைக்கு பின்னர்த் தான் எழுந்தது. படைவீடு என்பது அரசன் சென்று படைகளோடு தங்கியிருக்கும் இடம். முருகப் பெருமான் தன்னுடைய அடியார் களுக்கு அருள் செய்வதற்காக இந்த ஆறு இடங்களிலும் தன் னுடைய கணங்களுடன் தங்கியிருக்கிறான். ஆதலால் அவை படைவீடு என்று பெயரைப் பெற்றன.

திருஆவினன்குடியை மூன்றாவது படைவீடாக நக்கீரர் சொல்கிறார். ஆவினன்குடியே பழனி என்றாலும், சிலர் அடி வாரத்தில் இருக்கிற கோயிலை ஆவினன்குடி என்றும், மலைக்கு மேல் இருக்கிற கோயிலைப் பழனி என்றும் சொல்கிறார்கள். ''ஆவினன்குடிதான் பழையது; பழனி என்ற தலம் பழையது அன்று'' என்றும் சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். மலையின்மேலே கோயில் இருந்தால் கீழும் கோயில் இருப்பது வழக்கம். திருச்செங்கோட்டில் அப்படி இருப்பதைக் காணலாம். பழனி மலையின்மேல் தண்டாயுதபாணி எழுந்தருளியிருக்கிறான். மலையின் கீழே முருகன் எழுந்தருளியிருக்கிறான். மலையின் மேல் ஏறி வழிபட இயலாதவர்களுக்கு கீழும் இறைவன் எழுந் தருளிக் காட்சி தருகிறான். பழனி என்ற மலை யும் பழமை யானது; அதிலுள்ள முருகனும் பழமையானவன்.

ஆவினன்குடி என்பது அந்த ஊருக்குப் பெயர். பழனி என்பது மலைக்குப் பெயர். பழங்காலத்தில் ஆவியர் குலம் என்ற குலத்தில் பிறந்த குறுநில மன்னர்கள் இந்த இடத்தைத் தலை நகராகக் கொண்டு ஆண்டு வந்தார்கள். ஆவியினுடைய நல்ல குடி ஆதலின் ஆவிநன்குடி என்று ஆயிற்று. அவர்கள் வைகின இடத்திற்கு வைகாவிபுரி என்றும் பெயர் உண்டு. அதுவே நாளடை வில் வையாபுரி என்று ஆயிற்று. பழனிக்கே வையாபுரி என்று பெயர் உண்டு. இப்போது ஒரு குளத்திற்கு பெயராக வழங்குகிறது.

ஆவியர்கள் காலத்தில் தோன்றிய மன்னர்களில் சிறந்தவன் பேகன் என்பவன். அவனை வையாவிக்கோப்பெரும்பேகன் என்று சங்கநூல் கூறும். குளிரால் நடுங்கின மயிலுக்கு அவன் போர்வை தந்தான் என்று ஒருவரலாறு உண்டு. ஏழு வள்ளல் களில் ஒருவன் அவன். மலையின்மேல் இருக்கிற ஆண்டவனை வழிபடும் வழக்கம் அவனுக்கும் அவனது மரபினருக்கும் இருந்து வந்தது. ஒருநாள் எங்கேயோ சென்று கொண்டிருந்த

போது கொஞ்சம் மழைக்காற்று அடித்தது. கார் வந்தால் மகிழ்வது மயிலுக்கு இயல்பு. ஒரு மயில் அந்தச் சமயத்தில் தன் தோகையை விரித்து ஆடியது. மயில் ஆடும்போது ''சர் சர்'' என்ற ஒலி உண்டாகும். பேகன் பார்த்தான். மயிலைக் கண்டவுடனேயே அவனுக்கு அது வெறும் பறவையாகத் தோன்றவில்லை. முருகப் பெருமானுக்கு அன்பனாகையால், 'எம்பெருமானின் வாகனமாகிய இது குளிரில் நடுங்குகிறதே!' என்ற எண்ணம் தோன்றியது. அடுத்த கணத்தில் தன்மேலே இருந்த போர்வையை எடுத்து அதன்மேல் போட்டுவிட்டான். அவனுக்குப் பறவைகளிடத்தில் இரக்கம் இருப்பது இயல்பு; ஆனால் எல்லாப் பறவைகளிடத் திலும் அவனுக்கு இத்தகைய இரக்கம் உண்டாகவில்லை. இயல் பாகவுள்ள இரக்கமும், முருகனிடம் உள்ள அன்பும் சேர்ந்து மயிலுக்குப் போர்வை போர்த்தும்படி செய்தன. ஆவியர் குலத் தில் வந்த பேகன் இங்கே வாழ்ந்திருந்தான் என்பதை இந்த வரலாற்றோடு சேர்த்துச் சங்ககாலத்து நூல்களில் பார்க்கலாம்.

அந்தக் காலத்தில் பழனிமலையைப் பொதினி என்று சொன்னார்கள். முருகன் காக்கின்ற மலை என்று சங்க நூலில வருகிறது. நகர் என்பது கோயிலுக்குப் பெயர். ''நெடு நகர்ப் பொதினி'' என்றே வருகிறது. ஆகையால் பழங்காலத்திலேயே பழனி மலையும்,மலையிலே முருகனுக்குத் திருக்கோயிலும் இருந்தன என்று தெரியவருகிறது.

புராண வரலாறு

பழனியின் பெருமையை நாம் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று பிற்காலத்தில் பெருமக்கள் வேறு ஒரு வரலாற் றையும் நமக்கு நினைப்பூட்டுகிறார்கள். பொதினி என்பது பழனி என்று மாறியது என்று ஆராய்ச்சிக்காரர்கள் சொல்வார்கள். ஆனால் பக்தர்கள் இதற்கு வேறு ஒரு காரணம் சொல்வது உண்டு. பழம் நீ என்பதே பழனி என்று குறுகியது என்பார்கள்.

ஒரு சமயம் நாரத முனிவருக்கு முருகப் பெருமானுடைய பெருமையை உலகத்திற்குக் காட்ட வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. அவர் எதையாவது சாதிக்க வேண்டுமானால் சண்டை மூட்டிச் சாதிப்பார். இங்கும் ஒரு சிறிய கலகத்தை விளைவித்து உலகம் எல்லாம் கொண்டாடுகிற ஒரு தலத்தை

ஏற்படுத்த வேண்டும் என்று அவர் எண்ணினார். ஒரு மாம் பழத்தைக் கையில் கொண்டு சிவபெருமானை நோக்கிப் போனார். அப்போது சிவபெருமானும் உமாதேவியாரும் முருகப் பெருமான், விநாயகர் ஆகியோருடன் ஒருங்கே வீற்றிருந்தார்கள். அந்தச் சமயத்தில் நாரத முனிவர் அந்தப் பழத்தைச் சிவ பெருமானுடைய திருக்கரத்தில் ஈந்தார். மிக்க அன்புடைய தந்தையோ, தாயோ தமக்கு ஏதேனும் ஒரு தின்பண்டம் கிடைத் தால் அருகில் இருக்கிற குழந்தைக்கு அதைத் தந்துவிடுவது வழக்கம். அதுபோலப் பழத்தைப் பெற்ற சிவ பெருமான் தம்முடைய குழந்தைகளுக்கு அதைக் கொடுக்க வேண்டுமென்று எண்ணினார். ஒரு பழத்தை விண்டு இரண்டு பேருக்கும் பாதி பாதியாகக் கொடுக்க விரும்பவில்லை. உலகத்து மக்களாக இருந்தால் பழத்தை வெட்டிக் கொடுத்துவிடலாம். தெய்வக் குழந்தைகள். ஆகவே இந்தப் பழத்தை அவர்களுக்கு உண்ணக் கொடுப்பதன் மூலம் உலகத்திற்கு ஒரு நல்ல பயனை உண்டாக்க வேண்டுமென்று இறைவன் கருதினான். "இந்த உலகத்தை யார் முதலில் சுற்றி வருகிறாரோ அவருக்கு இந்தப் பழம் உரியது" என்று ஒரு பந்தயம் வைத்தான்.

உடனே முருகன் தன் மயில்மேலேறி உலகை வலம் வரப் புறப்பட்டுவிட்டான். சிறிது நேரம் சும்மா அமர்ந்திருந்த கணபதி மெல்லத் தம்முடைய தொந்தி வயிற்றைத் தூக்கிக் கொண்டு மிகவும் நிதானமாகத் தம் தாய் தந்தையர்களை வலம் வந்தார். மூன்று முறை வலம் வந்து வணங்கிப் "பழத்தைத் தாருங்கள்" என்று கேட்டார். "நீ உலகத்தை வலம் வரவில்லையே; எப்படி உனக்குப் பழம் கொடுப்பது?" என்று சிவபெருமான் கேட்க, "எல்லா உலகங்களும் உங்களிடத்தில் அடங்கியிருக்கின்றன. ஆதலால் எல்லாப் பிரபஞ்சங்களையும் ஒரு முறைக்கு மூன்று முறையாக நான் சுற்றிவிட்டேனே" என்று விநாயகர் சொன்னார். அந்த உண்மையை எப்படி மறுக்க முடியும்? ஆகவே மறுமொழி சொல்லாமல் சிவபெருமான் அந்தப் பழத்தைக் கணபதியிடம் கொடுத்துவிட்டான்.

வாங்கிக்கொண்ட பழத்தை தம் தம்பி வருவதற்கு முன்னா லேயே அவர் தின்றிருக்கலாம். ஆனால் பின்னாலே நிகழ்கின்ற காரியங்களுக்கு ஏற்றபடி நிகழ்ச்சி அமைய வேண்டாமா? முருகன்

வரும் வரைக்கும் கணபதி காத்திருந்தார். முருகன் உலகத்தை விரைவில் வலம் வந்து வாயிலுக்குள் நுழையும் சமயம் பார்த்து வாயிலில் போய் நின்று அந்தப் பழத்தைத் தின்னத் தொடங்கி னார். அவர் தின்னுவதைக் கண்ட முருகன் உண்மையை ஊகித்துக் கொண்டான். 'நம்மை உலகத்தைச் சுற்றும்படி செய்து விட்டு நம் தந்தையார் நம் அண்ணாவுக்கு அல்லவா பழத்தைத் தந்துவிட்டார்?' என்று எண்ணிச் சினம் வந்தவனைப் போலப் புறப்பட்டுவிட்டான். ஆடை அணிகளை எல்லாம் கழற்றிவிட்டுத் துறவி போல நேரே பழனி மலையின் உச்சிக்குச் சென்று நின்று விட்டான்.

இதனை அறிந்த சிவபெருமான் உமாதேவியாரோடு சென்று, "நீயே பழம் ஆயிற்றே; உனக்கு வேறு பழம் எதற்கு? பழம் நீ" என்று சொல்லிச் சமாதானப்படுத்தினார்களாம். அது முதல் இந்தத் தலத்திற்குப் பழம் நீ என்ற பெயர் வந்தது. அதுவே பழனி என்று ஆயிற்று.

இது எப்போது நடந்தது. யார் பார்த்தார்கள் என்ற கேள்வி களுக்கு இடம் இல்லை. முருகப்பெருமானே நமக்கு அநு பூதியைத் தரும் சுவை மிக்க கனி என்ற ஓர் உண்மையை இந்த வரலாறு காட்டுகிறது. இதனை நாம் மனத்தில் கொண்டால் நிகழ்ச்சியைப் பற்றிக் கவலை கொள்ளாமல் இறைவனுடைய அருள் அநுபவத்தைப் பற்றிக் கவனிக்கலாம்.

அரோகரா!

இப்படிச் சங்க நூல்களிலும், புராணங்களிலும் பெருமை பெற்றது பழனி. இன்றும் பழனி மலையில் ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் பழனி ஆண்டவனுக்கு அரோகரா என்று சொல்லி மலை ஏறுவதைப் பார்க்கலாம். பக்தர்கள் அல்லாதவர்களுக்கும் மனம் உருகும். அண்ணாமலைக்கு அரோகரா என்று அரோகரா சப்தம் தொடங்கியது. அரனுடைய திருநாமமே அது. ஆனால் நாளடைவில் அந்தச் சப்தத்தைப் பழனி ஆண்டவனே வாங்கிக் கொண்டான். அரோகரா என்றால் இப்போது நமக்குப் பழனிதான் நினைவுக்கு வரும். பல நோயாளிகளும், ஏழைகளும் அங்கே சென்று தம்முடைய நோயும், வறுமையும் தீர்ந்து இன்புறுகிறார் கள். முதிர்ந்தவர்கள் கூடப் பிரார்த்தனை செய்துகொண்டு அங்கே

சென்று மலை ஏறித் தரிசனம் செய்யும் ஆற்றலைப் பெறுகிறார்கள். அருணகிரியார்,

"அதிசயம் அநேகமுற்ற பழனிமலை"

என்று திருப்புகழில் பாடியிருக்கிறார்.

"இத்தகைய சிறந்த தலத்தின் பெயரைக்கூட நீ சொல்லவில்லையே!" என்று இப்போது தம்முடைய நெஞ்சுக்கு உரைப்பாரைப் போலச் சுட்டிக்காட்டுகிறார்.

படித்தல்

படிக்கின்றிலை பழனித் திருநாமம்

படிப்பாவது, பலமுறை சொல்வது. "படித்துப் படித்துச் சொல்கிறேன்" என்று உலக வழக்கிலும், பலமுறை சொல்வதைக் குறிப்பிடுவது வழக்கம். திருநெல்வேலிக்காரர்கள் பாடுவதையே படிப்பது என்று சொல்வார்கள். பாடம் பண்ணி இங்கே பாடுவதையே படித்தல் என்று கொள்ளவேண்டும். மீட்டும் மீட்டும் அதைச் சொல்ல வேண்டும். ஏதேனும் ஒரு பொருள் இனிக்குமானால் அதை நாவில் வைத்துப் பலதடவை சுவைப்போம். விழுங்குகிற பொருளைக் காட்டிலும் வாயில் வைத்துச் சுவைக்கின்ற பொருளுக்கு இனிமை அதிகம். வாயில் வைத்துச் சுவைக்கின்றவையெல்லாம் உண்ணும் பொருள்களே என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் பெரியவர்களுக்கு இறைவன் திருநாமம் தின்பண்டம் போல இனிக்குமாம். இனிக்கின்ற ஒரு பொருளைப் பலமுறை நாவினாலே சுவைக்க வேண்டும் அல்லவா? ஆகையால் இறைவனுடைய திருநாமத்தையும் பலகாலம் சொல்லிச் சொல்லி அதனால் உண்டாகிற இன்பத்தைப் பெறுவது பக்தர்கள் இயல்பு. இங்கே பழனி என்ற திருநாமத்தை நீ பலகாலமும் சொல்லவில்லையே என்ற பொருளில்,

படிக்கின்றிலை பழனித் திருநாமம்

என்று சொன்னார்.

அடியார்களைச் சார்தல்

அடுத்தபடியாக ஒன்று சொல்கிறார். "பழனியின் பேரைச் சொன்னால் அதைப்பற்றிய நினைவு உன்னிடம் இருக்கும். பல

தடவை அங்கே சென்று வந்திருக்கிற அன்பர்கள் இருப்பார்கள். அவர்கள் பழனி பழனி என்று அநுபவ நினைவுடன் பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்களிடத்தில் போய் அவர்கள் காலைப் பிடித்துக் கொண்டு வணங்கத் தோன்றும்; அதை நீ செய்ய வில்லையே!'' என்கிறார். பழனி அநுபவத்தை வெறும் சொல்லால் தெரிந்து கொள்வது முடியாது. அங்கே போய் வந்தவர்கள் பெற்றிருக்கிற கிளர்ச்சியைக் கண்டால் நமக்கு அதன் பால் மதிப்பு உண்டாகும். ''அத்தகையவர்களைப் பார்த்து நீ அவர்களுடைய தாளில் வீழ்ந்து வணக்கம் செய்யவில்லையே!'' என்கிறார்.

படிப்பவர் தாள் முடிக்கின்றிலை.

முதலில் ஆண்டவன் இருக்கிற தலத்தை நினைக்க வேண்டும்; பின்பு அந்தத் தலத்திற்குச் சென்று நலம்பெற்ற அடியார்களோடு சேரவேண்டும் என்ற இரண்டைச் சொன்னார். தலத்தை நினைந்து அந்த நினைவால் அங்கே சென்றவர்களைக் கண்டு பழகவேண்டும். அவர்களுடைய பழக்கத்தால் அந்தத் தலத்தின் வரலாறுகள் நமக்குப் புலனாகும். அங்கே அவர்கள் தாம் பெற்ற அநுபவங் களைச் சொல்லும்போது நாமும் அங்கே போக வேண்டும் என்ற ஆர்வம் மிகும்.

மூர்த்தியின் நாமம்

அடுத்தபடி அந்தத் தலத்திற்குப் பெருமை அளிக்கும் மூர்த்தி யின் நினைவு வரும். நமக்கும் அந்தப் பெருமானைக் காண வேண்டுமென்ற ஆசை எழும். அங்கே போகவேண்டுமென்பதற்கு முன்பே அவனுடைய திருநாமத்தைச் சொல்லத் தொடங்கு வோம். ''இந்த மூன்றாவது படிக்கு நீ போகவில்லையே!'' என்று சொல்வது போல,

முருகா என்கிலை

என்றார். முதலில் பழனி பழனி என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். பின்பு அந்தத் தலத்திற்குப் போனவரைக் கண்டு வழிபடவேண்டும். பின்பு அவர்கள் வழிபட்ட முறைகளைத் தெரிந்து, அந்த ஊரில் உள்ள மூர்த்தியைப் பற்றித் தெரிந்து, அவனுடைய திருநாமத்தைச் சொல்ல வேண்டும். ஆக மூன்று படிகளைச் சொன்னார்.

''முருகா என்கிலை'' என்பது ஏதோ ஒரு விலாசத்தைச் சுட்டிச் சொன்னது போன்றது அல்ல. பழனியின் திருநாமத்தைப் படித்துப் பின்பு அங்கே போனவர்களைக் கண்டு அவர்கள் பெற்ற அநுபவத்தை நமக்குச் சொல்ல, அந்த அநுபவத்தை அருளிய பெருமான் என்று நினைவோடு அந்த நாமத்தைச் சொல்ல வேண்டும். அது வெறும் அடையாளம் அன்று; நம் உள்ளத்தில் ஆர்வத்தை விளைக்கின்ற சொல்.

பற்று அறுதலும் கொடையும்

மனிதர்களுடைய துன்பத்திற்குக் காரணமாக இருப்பது பற்று. தன்வீடு, தன் இனம், தன் மனையாட்டி என்கிற பற்றுக் களை மனிதன் வளர்த்துக் கொள்ள வளர்த்துக் கொள்ள அவன் துன்பத்தை மிகுதியாக அநுபவிக்கின்றான். பற்று நீங்கும்போது இன்பம் உண்டாகும். பற்று முற்றும் நீங்கும்போது வீடு கிடைக்கும்.

"அற்றது பற்றெனில் உற்றது வீடு."

நம்முடைய ஊர், நம்முடைய வீடு, நம்முடைய சுற்றத்தார் என்று பற்று வளராமல் இருக்க வேண்டுமானால் இந்த மூன்றுக்கும் மாற்றாக மூன்று பொருள் வேண்டும். இறைவனுடைய ஊரி னிடத்தில் அன்பு வந்தால் நம் ஊரைக் காட்டிலும் அந்த ஊரில் பற்று அதிகமாகும்; நம் ஊர்ப் பற்றுக் குறையும். நம்முடைய வீட்டை மறந்து இறைவன் திருக்கோயிலிடத்தில் பற்றுக் கொள்ள வேண்டும். அப்படியே இறைவனுடைய அடியார்களைச் சுற்ற மாக மதிப்பது, அவர்களுக்கு வழிபாடு செய்வது என்று வந்தால் நம்முடைய உடலுக்கு இன்பம் தருகிற சுற்றத்தார்களையே எண்ணியிருக்கும் நிலை மாறும். இறைவனுடைய அன்பு உள்ளத் தில் ஏற ஏற, நான், எனது என்ற எண்ணங்கள் மாறிப் பொருள் முதலியவற்றில் உள்ள ஆசை மெல்ல மெல்லக் கழலும். நான்கா வது படியாகிய பற்றுக் கழன்ற நிலையைச் சொல்ல வருகிறார்.

பற்றுக் கழல்வது எப்படித் தெரியும்? தனக்குக் கிடைத்த ஒரு பொருளைப் பிறருக்குக் கொடுக்காமல் வைத்துக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறவன் பற்று உடையவன். பிறருக்கும் கொடுக்கவேண்டுமென்று நினைத்தால் அவனுடைய பற்றுக் கொஞ்சம் குறைந்தது என்று தெரிந்து கொள்ளலாம். தம்மிடம்

உள்ளன எல்லாம் இறைவனுடைய அடியார்களுக்கே உரியன என்று எண்ணுகிறவர்களுக்கு இறைவனுடைய பக்தி முறுகி நிற்கும். நாயன்மார்கள் அப்படி வாழ்ந்தார்கள். தலத்தினுடைய பெயரைச் சொல்லி, தலவழிபாடு செய்த அன்பர்களை வழிபட்டு, தலத்தில் எழுந்தருளி இருக்கும் மூர்த்தியினுடைய நாமத்தை உள்ளக் கசிவோடு சொல்கிற பக்குவம் வந்தால் பற்றிக் கொண்டிருக்கும் பொருள்களிடத்தில் பிடிப்பு அற்றுவிடும். பிறருக்கும் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாகும். இறைவனுடைய அன்பர்களையே உறவினர்களாகப் பெற்று அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்க வேண்டுமென்ற பக்குவம் உண்டாகும். ''அப்படி நீ இடாமல் இருக்கிறாயே!'' என்று அடுத்தபடி சொல்கிறார்.

முசியாமல் இட்டு மிடிக்கின் றிலை.

முசித்தல் – சலித்தல். எவ்வளவு பெரிய பணக்காரனாக இருந்தாலும் பிறனுக்குக் கொடுப்பதனாலே பெயர் வரும் என்று எண்ணிக் கொண்டிருந்தால் கணக்காகத்தான் தர்மம் செய்வான். பொருளில் பற்று உள்ளவன் புகழிலும் பற்றுப் பெற்றுச் செய்வது அது. அப்படியின்றி அடியார்களிடத்தில் மாத்திரம் பற்று உள்ளவர்கள் பொருளைப் பெரிதாகக் கருதாமல் தம்மிடத்தில் எது இருந்தாலும் கொடுத்துவிடுவார்கள். மனைவியைக் கொடுத்தவருடைய உள்ளமும், மகனைக் கொடுத்தவருடைய உள்ளமும், கண்ணைக் கொடுத்தவருடைய உள்ளமும் அத்தகைய நிலையில் இருப்பவை. எல்லாவற்றையும் கொடுத்துவிட வேண்டுமென்ற எண்ணம் இருக்கும்போது எதைக் கொடுப்பது, எதைக் கொடுக்கக் கூடாது என்று வேறுபடுத்திப் பார்க்கிற ஆராய்ச்சிக்கு இடம் இல்லை. ஆடையைக் கொடுக்கிறவன் ஆடை அளவில் பற்று நீத்தவன் ஆகிறான். கண்ணைக் கொடுத்தவன் உடல் அளவில் பற்று நீத்தவன். மனைவியையே கொடுத்தவன் உணர்ச்சியையும் நீத்து விட்டவன்.

இட்டு மிடித்தல்

இறைவன்பால் அன்பு முதிர முதிர நம்முடைய பொருளை அடியார்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஆர்வமும், கொடுக்கும் முயற்சியும் வளர்ந்துவரும். இந்த நாட்டில் தானம் செய்வதற்கு

இவ்வளவுதான் என்ற வரையறையில்லை. மிக்க செல்வனாக இருக்கிறவன் பிறருக்குக் கொடுத்து வறியவனானால் அந்த நிலையை முன் இருந்த செல்வத்தைக் காட்டிலும் பெரிய செல்வம் என்று நினைக்கிற இயல்பு இந்த நாட்டு மக்களுக்கு உண்டு.

முசியாமல் இட்டு மிடிக்கின்றிலை

என்றால், 'சிறிதேனும் சலிக்காமல் அடியார்களுக்கு இட்டு அதனால் வறுமையை அடையவில்லையே!' என்று பொருள்.

''அவன் லட்ச ரூபாய் உடையவன்'' என்று பிறர் சொல்வதைக் காட்டிலும், ''லட்ச ரூபாய்க்கு மேல் சொத்து இருந்தது. பிறருக்குக் கொடுத்தே அந்தத் தர்மப் பிரபு இன்றைக்கு ஆண்டியாக இருக்கிறான்'' என்று சொன்னால் அது மிகப் பெரிய பேறு. யாரிடத்திலும் செல்வம் நிலைத்திருக்கப் போவதில்லை. ஆனால் அத்தகைய பேறு நிலைத்திருக்கும். திருட்டிலே கொடுத்துவிட்டு ஆண்டியானவரும், தவறான வழிகளில் பணத்தைச் செலவிட்டு ஆண்டியானவரும் வறுமையையும் துன்பத்தையும் அடைவார்கள். ஆனால் பிறருக்குக் கொடுத்து வறுமையை ஏற்றவர்கள் பிறரால் புகழப்படுவதோடு தம்முடைய உள்ளத்திலும் ஒரு வகை நிறைவு பெறுவார்கள்.

அழகான பொருள்களை எல்லாம் தொகுத்துச் சொன்ன ஒரு புலவர், ''கொடுத்து இளைத்த தாதா அழகன்'' என்று சொல்கிறார். பிறருக்குக் கொடுத்து அதனாலே வறுமையைப் பெற்ற வள்ளல் சிறந்த அழகுடையவனாம்.

யாருக்காவது உடம்பு மெலிந்தால் அது அழகன்று. ஆனால் தன் மணவாளனுடன் புது வாழ்வு தொடங்கினவள் சற்று மெலிந்தால் அது ஒரு தனி அழகாம். அப்படியே விரதம் இருந்து உடம்பு மெலிந்தால் அந்த உடம்பு அழகு. கண்ணுக்கு அழகு அன்று; கருத்துக்கு அழகு. புண்பட்ட வீரன் அழகன். விக்கிரகமாக வெட்டப்பட்ட கல் அழகிது. அவைபோல் பிறருக்குக் கொடுத்து வறுமையை மேற்கொண்டவன் அழகன்.

''சுரதந் தனில்இளைத்த தோகை, சுகிர்த
விரதந் தனில்இளைத்த மேனி – நிரதம்
கொடுத்திளைத்த தாதா, கொடுஞ்சமரிற் பட்ட
வடுத்துளைத்த கல்அபிரா மம்.''

பிறருக்கு இடுதல் என்பதை மிகச் சிறந்த தர்மமாக இந்த நாட்டில் கடைப்பிடித்திருக்கிறார்கள். ஓர் அரசன், 'நான் இந்தக் காரியத்தைச் செய்யாமற் போனால் இன்ன இன்ன பாவத்தைச் செய்தவனாவேன்' என்று சபதம் செய்கிறான். 'பலநாள் விருந்தினர் வாராமல் இருக்கிற அபாக்கியத்தை நான் பெறுவேனாக' என்று அங்கே சொல்கிறான்.

''இரவலர் வாரா வைகல்
பலவா குகயான் செலவுறு தகவே.''

அதனால், கொடாமல் இருக்கிற நிலை எவ்வளவு கொடியது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

அழுதல்

இனி அடுத்தபடியாகச் சொல்கிறார்.

பரமானந்தம் மேற்கொள விம்மி விம்மி நடிக்கின்றிலை.

இறைவனுடைய திருவருளினால் கிடைக்கும் ஆனந்தந்தான் மேலான ஆனந்தம். அதற்கு முன்னாலே வருகிற சிலசில மகிழ்ச்சிகள் மேலே உள்ள கோயிலுக்குப் படிகள் போன்றவை. ஆனந்தம் வந்துவிட்டால் நாணம் இல்லாமல் குதிப்பான்; அழுவான்; ஆடுவான்; பாடுவான். யாருக்கு ஆனந்தம் உண்டாகிறதோ அவன் அழுவான். அது துக்கத்தினால் அழுவது அல்ல; ஆனந்தத்திலே விம்முவது.

நாமும் அழுகிறோம். எல்லா அழுகையும் ஆனந்தத்தினால் வந்தன என்று சொல்ல முடியாது. ஓர் ஊரில் ஒரு தெருவில் இரண்டு பெரும் செல்வர்கள் வீட்டில் அழுகை கேட்கிறது. வீதியின் ஒவ்வொரு கோடியிலும் அவர்களுடைய வீடு இருக்கிறது. இரண்டு குடும்பத்தாரும் லட்சாதிபதிகள். ஒரு கோடியில் உள்ள வீட்டுப் பெண்மணி இடுப்புவலி என்று அழுகிறாள். மற்றொரு வீட்டுப் பெண்மணியும் அப்படியே அழுகிறாள். இரண்டு வீட்டிலும் பக்கத்தில் பலர் இருக்கிறார்கள். ஒரு வீட்டில், அருகில் இருப்பவர்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். மற்றொரு வீட்டிலோ வேதனையோடு இருக்கிறார்கள். சிறிது நேரம் கழித்து ஒரு வீட்டில் அழுத அம்மாள் அழுகையை நிறுத்துகிறாள். ஆனால் வேறு ஓர் அழுகை கேட்கிறது. அது சிறிய குழந்தையின் அழுகை; அப்போது பிறந்த குழந்தை.

ஆனால் மற்றொரு வீட்டில் அந்த அழுகை இருந்துகொண்டே இருக்கிறது. இரண்டு இடத்திலும் இடுப்பு வலியினால் பெண் மணிகள் அழுதாலும் ஒரு வீட்டில் அழுத அம்மாளுக்கு வாயு வலி. மற்றொருத்திக்குப் பிரசவ வேதனை. இரண்டு பேரும் வேதனைப்பட்டு அழுதாலும் குழந்தை பெற்றவளுடைய வேதனை இன்பவேதனை ஆகிவிட்டது. இந்த இரண்டு பேருடைய அழுகையும் ஒன்றாகா.

அதுபோல் நம்முடைய அழுகை துயரம் காரணமாக வருவது. ஆனந்தம் பெற்றவர்களுடைய அழுகை வேறு. இராமகிருஷ்ண பரமஹம்சர் இரண்டுக்கும் வேறுபாடு சொல்கிறார். தாயுமானவர் ஆனந்தத்தின் விளைவாக வரும் அழுகையைப் பற்றிப் பாடுகிறார்.

"பெற்றவட்கே தெரியும்அந்த வருத்தம் பிள்ளை
பெறாப்பேதை அறிவாளோ? பேரா னந்தம்
உற்றவர்க்கே கண்ணீர்கம் பலையுண் டாகும்
உறாதவரே கன்னெஞ்ச முடைய ராவார்."

கூத்தாடல்

குடத்தில் கள்ளை நிறைத்து வெயிலில் வைத்தால் அந்தக் குடம் ஆடும். பதிற்றுப்பத்தில் ஒரு பாடலில் இச்செய்தி வரு கிறது. ஓரிடத்தில் அந்தமாதிரி குடங்கள் ஆடிக் கொண்டிருந்தன வாம். அதனால் அந்த இடத்தை, "தசும்பு துளங்கிருக்கை" என்று புலவர் சொல்கிறார். அது போல இறைவனுடைய பக்தியாகிய கள்ளை உண்ட மனிதனுடைய உடம்பு சும்மா இருக்காது; ஆடும்; அசையும்; குதிக்கும்.

"உள்ளத்தே விளைந்த கள்ளே"

என்று அபிராமிபட்டர் சொல்கிறார். பக்தியில் முறுகி நின்றவர் களுக்கு, அருகில் இருப்பவர்கள் நம்மைக் கவனிப் பார்களே, பரிகசிக்கப் போகிறார்களே என்ற எண்ணம் தோன்றாது; கூத்தாடு வார்கள்.

"ஆடு கின்றிலை கூத்துஉடையான் கழற்கு அன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதும்இலை துணைஇலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே"

என்று மணிவாசகப் பெருமான் சொல்கிறார். எடுத்தவுடன் ஆடு கின்றிலை என்கிறார். அதுதான் நடித்தல். நடித்தல் என்றால் பாவனை செய்தல் என்று இங்கே பொருள் கொள்ளக் கூடாது; நடனம் செய்தல் என்று கொள்ள வேண்டும்.

பஜனைக் கோஷ்டியில் தம்மை மறந்து கூத்தாடுகின்ற பக்தர்களை நாம் கண்டால் நாமும் ஆடவேண்டுமென்ற உணர்ச்சி எழுகிறது. வேண்டுமென்று கூத்தாடுவது வேறு; உள்ளே உள்ள பக்தியின் விளைவாகக் கூத்தாடுவது வேறு. கோபம் உள்ள வனுக்கு உடம்பு பதறுவது போல, பக்தி உணர்ச்சிமிக்கவனுக்குக் கூத்தாடும் நிகழ்ச்சி இயல்பாக உண்டாகும். அதுதான் மெய்ப் பாடு. மாசு மறுவற்ற உள்ளத்தில் பக்தி உண்டானால் அவர் களுக்கு ஏற்படும் கிளுகிளுப்பில் ஆடுவார்கள்; கதறுவார்கள்; பாடுவார்கள்.

குழந்தை மகிழ்ச்சி வந்தால் எப்படிக் குதித்துக் கூத்தாடுகிறதோ அப்படித்தான் அவர்கள் இருப்பார்கள். நாம் குழந்தைபோல ஆக வேண்டும். அப்படி ஆனால் நாணம் இல்லாமல் இறைவனை நினைந்து ஆனந்தம் உறுகின்ற நிலை வரும். குழந்தை அம்மாவைக் கண்டு விட்டால் ஓடி வந்து கட்டிக் கொள்கிறது. கொஞ்சம் வயசான பிற்பாடு அந்தக் குழந்தை கட்டிக் கொள்வானா? நாம் இப்போது அம்மாவை விட்டு விலகி நிற்கிறோம். நமக்கு வயசு ஆகிவிட்டது. உலக இயல் அநுபவம் மிக்கதுதான் காரணம். உலகத்திலுள்ள தாயினிடத்தில் இப்படி நடந்து கொள்வது இயற்கை; நேர்மையும்கூட. அதற்கு நேர்மாறாக, ஆண்டவனாகிய தாயினிடத்தில் நடந்து கொள்ள வேண்டும். வரவரக் குழந்தை யாகி நாணத்தைவிட்டு அவனுடைய சந்நிதானத்தை அடைந்து கூத்தாட வேண்டும்; குதிக்க வேண்டும். உள்ளத்தில் உலக நினை வாகிய மாசு இருக்கிற வரைக்கும் கூத்தாடுவதற்கு நாணுவோம். கூத்தாடுகிறோமே என்ற எண்ணமே இல்லாமல் இயற்கையாக அந்த நிலை வந்துவிட்டால் நாணமும் நழுவி விடும்.

பரமானந்தம் மேற்கொள விம்மி விம்மி நடிக்கின்றிலை

என்று சொல்லும்போது அருணகிரியார் படிப்படியாக விளை கின்ற மெய்ப்பாடுகளை நமக்கு நினைப்பூட்டுகிறார்.

இருவகை அழுகை

அழுகையில் இரண்டு வகை உண்டு. ஏங்கி அழுவது ஒன்று; தேங்கி அழுவது ஒன்று. இறைவன் திருவருள் நமக்குக் கிடைக்க வில்லையே என்று விம்முவது உண்டு. கிடைத்த பிறகு ஆனந்தத் தால் விம்முவதும் உண்டு. முதலில் உண்டாவது ஏக்கக் கண்ணீர்; பின்னால் உண்டாவது ஆனந்தக் கண்ணீர். பக்தர்களிடத்தில் இரண்டும் உண்டாகும். சாதன நிலையில் இருப்பவர்களுக்கு இறைவன் திருவருள் கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தினால் கண்ணீர் உண்டாகும். சாத்திய நிலையை அடைந்தவர்களுக்கு ஆனந்த நிறைவினாலே கண்ணீர் உண்டாகும். இங்கே பயனைச் சொல்கிறார்.

பரமானந்தம் மேற்கொள விம்மி விம்மி நடிக்கின்றிலை.

ஐந்து நிலை

இதை ஐந்தாவது நிலையாகச் சொன்னார். முதலில் தலத் தினுடைய திருநாமத்தைச் சொல்வது. பின்பு சாது சங்கத்தைச் சேர்தல். அதன் பின்பு இறைவன் திருநாமத்தைச் சொல்லுதல். நான்காவது நிலை இறைவனிடத்தில் பக்தி முறுக முறுகப் பொருள்களிடத்தில் பற்றற்றுத் தம்மிடம் இருப்பனவற்றையெல் லாம் பிறருக்குக் கொடுத்தல். பின்பு உணர்ச்சி விஞ்சிச் சாதனம் செய்து பரமானந்த நிலை பெற்று உடம்பையே மறந்து நிற்றல். ஆக ஐந்து படிகளை இந்தப் பாட்டில் சொன்னார். இப்போது வரிசையாக அவற்றை மீட்டும் நினைத்துப் பார்க்கலாம்.

"நீ பழனி என்ற தலத்திற்குப் போகாவிட்டாலும் அந்தப் பெயரையாவது கேட்டுத் தெரிந்து கொண்டாயா? இல்லையே! தெரிந்து அதைப் பலதடவை சொன்னாயா? சொல்லி அந்த ஊருக்குப் போகவேண்டுமென்ற ஆசை உண்டாகி, போனவர்களை யாவது போய்ப் பார்த்து அவர்கள் காலில் விழுந்தாயா? அதுவும் இல்லையே! அப்படி விழுந்திருந்தால் அவர்களிடம் பழனியைப் பற்றிக் கேட்கலாமே! கேட்டபிறகு அங்கேயுள்ள முருகனைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கலாமே. முருகனுடைய திருநாமத்தைத் தெரிந்துகொண்டு அதைச் சொன்னாயா? அப்படி அடிக்கடி சொல்லியிருந்தால் உன் உள்ளத்தில் பக்தி முறுகி இருக்கும். உன்

ஊரிலுள்ள அபிமானம் தொலைந்திருக்குமே. உன்னிடத்தில் பொருள் இருந்தால் அதன் மேல் பற்றுக் குறைந்திருக்கும். சிறிதும் சலித்துக் கொள்ளாமல் பிறருக்கு இடுகின்ற நிலை வந்திருக்குமே. அப்படி இட்டாயா? இறைவனிடத்தில் பற்று மிகுதியும், பொருளினிடம் பற்றுக் குறைவும் வளர வளர இறுதியில் ஆனந்தநிலையை அடைந்திருப்பாயே. அதுவும் இல்லையே! இந்த வழியில் செல்லாமல் இருக்கும் உனக்குப் பெரிய துன்பம் காத்திருக்குமே. அந்தத் துன்பத்திற்குப் பற்றுக் கோடாக உலகத்தில் உள்ள எந்தப் பொருள் வரும்?''

தஞ்சம் ஏது?

தஞ்சம் ஏது நமக்கு இனியே?

யமன் வரும்போது நமக்குத் தஞ்சம் என்று சொல்கிறவன் ஒருவன் வேண்டும். இடையூறு வருகிறபோது அதைப் போக்கிக் கொள்வதற்குப் பலம் இல்லாவிட்டால் பலம் உடையவனைச் சார்ந்திருப்பது ஒரு பலம். வறுமையைப் போக்கிக் கொள்வ தற்குப் பணம் பலம். நோய்க்கு மருந்து பலம். ஆற்றல் இல்லாத வனுக்கு ஆள் பலம். பிரமசாரிக்கு இல்லறம் செய்ய வேண்டு மென்றால் மனையாட்டி பலம். இந்தப் பலங்கள் எல்லாம் உலக இயலில் வருகிற இடையூறுகளுக்கு மாற்றாக இருக்கும். ஆனால் எல்லாவற்றுக்கும் பெரிய இடையூறாகிய மரணம் வந்தால் அதற்கு யார் பலம்? இந்த உலகத்தில் நமக்கு வருகிற இடையூறு களைப் போக்க வருகிற அத்தனை பொருள்களும் அந்தப் பயத்தை நீக்குவதற்குரிய ஆற்றல் பெற்றவை அல்ல. இறைவன் ஒருவன்தான் அப்போது பற்றுக் கோடாக இருக்கும் ஆற்றல் பெற்றவன். வேறு யாரை அழைத்தாலும் அவர்கள் நமக்குத் துணையாக வரமாட்டார்கள்; இறைவன் ஒருவன்தான் வர முடியும். ஆதலின், ''இந்த நெறியில் செல்லாமல் இருக்கிற உனக்கு அந்த இறுதித் துன்பம் வரும்போது தஞ்சமாக யார் வருவார்கள்?'' என்று கேட்கிறார்.

செய்ய முடிந்தவை

இல்லாத ஒன்றைச் செய் என்றால் அது முடியாது. நமக்கு நாக்கு இருக்கிறது. விலங்குகளின் நாக்கைப் போன்றது அன்று.

நன்றாகப் பெயரை உச்சரிக்கிற நாக்கு அது. ஆகையால் அந்த நாக்கினாலே இறைவனுடைய திருத்தலமாகிய பழனியின் நாமத்தைச் சொல்லலாம். நமக்குக் கால் இருக்கிறது. வாய் இருக்கிறது. உடம்பு இருக்கிறது. பழனிக்குப் போகவேண்டு மென்ற ஆர்வம் உண்டாகாவிட்டாலும் போனவர்களின் காலில் வீழ்ந்து வணங்குவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் சொன்ன வற்றைக் கேட்கும் காதும், உணர்ந்து கொள்ளும் அறிவும் நமக்கு இருக்கின்றன. அவர்கள் உபதேசத்தைப் பெற்று இறைவனுடைய நாமத்தைச் செபித்துச் செபித்துப் பக்தியை வளர்த்துக் கொள்ள மனம் இருக்கிறது. மனிதப் பிறவியில் இறைவனோடு ஒன்றுபடுகிற ஆனந்த அநுபவம் கிடைக்கும். வேறு எந்தப் பிறவியிலும் கிடைக்காது. இவ்வளவு வாய்ப்புகள் இருந்தும், கருவிகள் இருந்தும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்கிறார் அருணகிரியார்.

இவ்வளவையும் செய்வதனால் நமக்கு ஆனந்த அநுபவம் உண்டாகும். நாம் மரணத் துன்பத்தை நிச்சயம் அடையவேண்டி வருமென்ற உண்மையை நினைக்க வேண்டும். அந்த இடை யூற்றுக்கு நாம் தப்ப முடியாது. அதனின்றும் தப்புவதற்கும் இந்த நெறி காரணமாகும். இவற்றையெல்லாம் நம் உள்ளம் கொள்ளும் படியாக அருணகிரிநாத பரமகுரு இந்தப் பாட்டைப் பாடுகிறார்.

படிக்கின் றிலைபழ னித்திரு
நாமம்; படிப்பவர்தாள்
முடிக்கின் றிலை; முரு காஎன்
கிலை;முசி யாமல் இட்டு
மிடிக்கின் றிலை; பர மானந்தம்
மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலை;நெஞ்ச மே!தஞ்சம்
ஏது நமக்கு இனியே?

(அறியாமையையுடைய என் நெஞ்சே! நீ பழனித் திருத்தலத்தின் திருப்பெயரைப் பலமுறை அடுத்தடுத்துச் சொல்லவில்லை; அவ்வாறு சொல்லுகிறவர்களை வணங்கி அவர்கள் அடிகளைத் தலைமேற் கொள்ள வில்லை; முருகா என்று பக்தியுடன் அவன் திருநாமத்தைக் கூறவில்லை; சிறிதும் சலிக்காமல் உன்னிடத்தில் உள்ளவற்றை அடியார்களுக்குக் கொடுத்து வறுமையை மேற்கொள்ளவில்லை; உயர்ந்த ஆனந்தம்

உண்டாகி மீதூர, அதனால் விம்மி விம்மிக் கூத்தாடவில்லை; இனிமேல் நமக்கு ஆபத்து வந்தால் அப்போது தஞ்சமாக வரும் பொருள் ஏது இருக்கிறது?

படித்தல் - பலமுறை சொல்லுதல். முடித்தல் - தலைமேற் சூடுதல், முசியாமல் - தளர்ச்சி அடையாமல். இடுதல் - ஈதல்; உணவிடுதலுக்கே பெரும்பாலும் வரும். மிடிக்கின்றிலை: மிடி என்ற பெயரடியாகப் பிறந்த வினை; வறுமையை அடையவில்லை. நடிக்கின்றிலை - கூத்தாட வில்லை. நெஞ்சை உறுப்புடையது போல வைத்துச் சொன்னது இது. தஞ்சம் - பற்றுக்கோடு. இனி என்பது இப்போது என்றும், இனிமேல் என்றும் இருவகையாகவும் கொள்வதற்குரியது. ஏது என்ற வினா இல்லை யென்னும் குறிப்பையுடையது.

இப்படியெல்லாம் நடந்தால் முருகன் நமக்குத் தஞ்சமாக வந்து பாதுகாப்பான் என்பது கருத்து.)

இது கந்தர் அலங்காரத்தில் 75 – ஆவது பாடல்.

செய்த குற்றம் என்ன?

சென்ற பாடலில் பழனி ஆண்டவனுடைய நினைவை அருணகிரிநாத சுவாமிகள் ஊட்டினார். இன்று பார்க்கப் போகிற இந்தப் பாடலில் திருத்தணிகை ஆண்டவனுடைய நினைவு வரும்படியாகச் செய்கிறார். அதோடு தாம் முழுப் பொய்யர் என்பதையும் புலப்படுத்துகிறார்.

பொய்யர்

இறைவன் திருவருளில் ஈடுபட்டு, கரசரணாதி அவயங்களினால் வழிபட்டு, மனத்தினாலே சிந்தித்து, வாக்கினாலே பாடிப் பேரின்ப அநுபவத்தைப் பெற்றவர் அருணகிரிநாதர். த்தகையவர், "ஆண்டவனே! உன் தாளைத் தொழாத சென்னி ம், உன் திருமேனியை நாடாத கண்ணும், உன் திருமுன் தொழாத கையும், உன் புகழ் பாடாத நாவும் எனக்கே தெரிந்து பிரமன் படைத்தனனே!" என்று புலம்புவது முழுப் பொய் அல்லவா? மலடி மகன் என்று சொல்வது போலல்லவா இது இருக்கிறது? மகன் என்ற வார்த்தையே அவனைப் பெற்றவள் மலடி அல்ல என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. இந்தப் பாட்டில் சூடாத சென்னி, நாடாத கண், தொழாத கை ஆகியவற்றைப் பிரமன் படைத்திருக்கிறானே என்று மட்டும் சொல்லியிருந்தால் ஒருகால் அது மெய்யோ என்று நம்பலாம்.

பாடாத நாவும் எனக்கே தெரிந்து படைத்தனனே

என்று சொல்கிறார். இந்தப் பாட்டைப் பாடியது அவர் தானே? ஆகவே அவர் பொய் சொல்கிறார் என்று நிச்சயமாகச் சொல்லி விடலாம்.

பொய்யும் மெய்யும்

இவை பொய்போலக் கோற்றினும் பொய்யாகா. சத்தியம்

னாலும் அது சத்தியம் ஆவதில்லை. சத்தியம் சொல்வதனால் தீமை உண்டாகுமானால் அதைச் சொல்வதைக் காட்டிலும் சொல்லாமல் இருக்கலாம். நல்லது நடப்பதற்காக ஒரு பொய் சொன்னால் அது பொய் ஆகாது என்று பெரியவர்கள் சொல்வர். பொல்லாதவன் ஒருவன் வேறு ஒருவனைக் கொல்ல வேண்டு மென்று துரத்திக்கொண்டு வருகிறான். ஓடி வருகிறவன் நம் வீட்டில் வந்து ஒளிந்து கொள்கிறான். துரத்தி வந்தவன் நம்மிடம் வந்து, "இங்கே எவனாவது வந்து ஒளிந்திருக்கிறானா?" என்றால் உடனே, "ஆம், இதோ இருக்கிறான்" என்று காட்டினால் நாம் அரிச்சந்திரன் ஆகிவிடமாட்டோம். "அவனை நாம் அறியேனே" என்று சொல்லவேண்டும். அப்படிச் சொன்னால் அது பொய் அல்லவா என்று கேட்கலாம். வாய்மை என்றால் என்ன?

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொல்ல"

என்பர் வள்ளுவர். யாருக்கும் தீங்கு உண்டாகாமல் உண்மையைச் சொல்ல வேண்டும். தீங்கு உண்டாகும்படியாகச் சொன்னால் அது உண்மையாகாது. அதைச் சொல்லாமல் இருப்பதே நல்லது. அதற்கு மாறாகப் பொய்யாக இருந்தாலும் குற்றமற்ற நன்மை உண்டாகுமாயின் அது உண்மைக்கு ஒப்பாகும்.

"பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"

என்பது குறள்.

அலங்காரம்

பொய்யில் இரண்டுவகை உண்டு. ஒருவகைப் பொய், சொல்கிறவனுக்குப் பொய் என்று தோன்றும்; கேட்கிறவனுக்குத் தெரியாது. இது வஞ்சனையாகும். மற்றொரு வகை, சொல்கிற வனுக்கும் கேட்கிறவனுக்கும் பொய் என்று தெரியும். இதற்குக் கற்பனை என்று பெயர். கம்பன் முதலிய புலவர்கள் இந்த வகையில் எத்தனையோ பொய் சொல்லியிருக்கிறார்கள். அவர் களுடைய கற்பனைகள் உண்மை அல்ல; பொய். ஆனால் இவற்றைக் கண்ட யாரும் ஏமாறுவதில்லை. படிக்கிறவர்களுக்கு இவை கற்பனை என்று தெரியும். இவற்றைப் 'புலவர் கற்பனை' (Poetic Illusion) என்பர்.

''துரும்பாக இளைத்து விட்டாயே'' என்று ஒருவரைப் பார்த்துச் சொல்கிறோம். உண்மையில் துரும்பு போல எப்படி இளைக்க முடியும்? அப்படிச் சொல்லும்போது பொய் சொல் கிறோம் என்ற நினைவு இல்லை; கேட்கிறவனுக்கும் இல்லை. மிகையாகச் சொல்வதாக, அலங்காரமாகச் சொல்வதாக நினைத்துக் கொள்கிறோம். இப்படியே குழந்தையைப் பார்த்து, ''யானைக் குட்டி'' என்கிறோம். யானைக்குட்டி போலக் கொழு கொழு என்று இருக்கிறதென்று பொருள். இவையெல்லாம் மேலாகப் பார்த்தால் பொய்யாகத் தோன்றும். ஆனால் பொய் அன்று; அலங்காரப் பேச்சு. அதுபோல அருணகிரியார் இந்தப் பாட்டில் சொல்வது ஒரு வகையான அலங்காரந்தான்; நூலே அலங்காரந் தானே?

அருணகிரியார் இயல்பு

அருணகிரிநாத சுவாமிகள், ''நான் அதைச் செய்யவில்லையே! இதைச் செய்யவில்லையே! இந்தக் குற்றத்தைச் செய்தேனே! அந்தக் குற்றத்தை செய்தேனே!'' என்று புலம்புவன எல்லாம் தம்மை நினைந்து சொல்வன அல்ல என்பதைப் பலமுறை பார்த்து வருகிறோம். இந்தப் பாட்டை, தம்முடைய உறுப்பு களை ஆண்டவனுடைய வழிபாட்டில் ஈடுபடுத்தாமல் இருக்கிற வர்களை நினைந்து சொல்வதாகக் கொள்ளவேண்டும். ''நீங்கள் இப்படி இருக்கிறீர்களே'' என்று நம்மைப் பார்த்துச் சொன்னால் நமக்குக் கோபம் உண்டாகும். பெரியவர்களைப் புகழ்ந்தால் அவர்கள் நாணுவார்கள்; அவர்களுடைய குற்றத்தை எடுத்துச் சொன்னால் சொன்னவரைப் போற்றித் தாம் வாடுவார்கள். பொல்லாதவர்களிடத்தில் அவர்களுடைய குற்றத்தை எடுத்துச் சொன்னால் கோபம் கொள்வார்கள்; சொன்னவருக்குத் தீங்கு செய்தாலும் செய்வார்கள். குரங்குக்கு உபதேசம் செய்த குருவி பட்ட பாடு நமக்குத் தெரியுமே! பொல்லாதவர்களுக்கு உபதேசம் செய்யப் புகுந்தால், ''நீ யார் உபதேசம் பண்ண?'' என்று கேட் பார்கள். இது அருணகிரிநாதப் பெருமானுக்குத் தெரியாதா? தாய் போன்ற கருணையையுடைய அவர், நாம் இருக்கும் நிலைமையை உணர்ந்து தாமே அப்படி இருப்பதாக இரங்குகிறார்.

உறுப்புக்களால் பயன்

நம் உடலில் உள்ள உறுப்புகளில் சிலவற்றை நாம் இயக்கலாம். சில தாமே இயங்குவன. இதயம் இருக்கிறது. அது நம்மால் இயக்க முடியாதது. அது நின்று விட்டால் மீண்டும் நம்மால் அதை இயக்க முடியாது. கை கால் தலை இவைகளை நாம் இயக்கலாம். நம்மால் இயக்குவதற்குச் சாத்தியமான, புறத்தில் இருக்கிற உறுப்புகளைச் சரியான முறையில் பயன் படுத்திக் கொள்வது நமது கடமை.

உயர்ந்த பொருளைக் குறைந்த விலையில் வாங்கிவிட்டால் மனிதர்கள் எல்லோருமே மகிழ்ச்சி அடைவார்கள். சிறிய பொருளால் பெரிய பொருளை வாங்கவேண்டுமென்ற ஆசை மனிதனுக்கு இருக்கிறது. கிடைத்தற்கரிய பொருள் கிடைத்தால் அதைக் கொண்டு மிகப் பெரும் பயனை அடைவதுதான் முறை. பணம் கொடுத்து மற்றப் பாண்டங்களை வாங்கிவிடலாம். இறைவன் தந்திருக்கிற பாண்டமாகிய உடம்பு எத்தனை பொருள் கொடுத்தாலும் வாங்க முடியாதது. நமது சுண்டுவிரல் போய் விட்டது. லட்சம் ரூபாய் கொடுத்தாலும் அதை வாங்க முடியாது; புதிதாக ஒன்று பண்ண முடியாது. அத்தகைய அரிய உறுப்புகளைக் கொண்டு மிக அதிகமான பயனைப் பெற வேண்டும் என்று மனிதன் நினைக்க வேண்டும். எம்பெருமான் அருளாகிய பயனைப் பெறுவது ஒன்றுதான், நாம் அடைகிற பயன் எல்லாவற்றையும்விடச் சிறப்பானது என்பதை உணர்ந்து பெரியோர்கள் கரசரணாதி அவயவங்களை எல்லாம் ஈசுவரார்ப்பணம் செய்தார்கள். கையும் காலும் உடையவர்களாக நாம் இருப்பதனால் அவற்றைக் கொண்டு தன்னை வணங்கவேண்டும் என்றே ஆண்டவன் கையும் காலும் உடையவனாக எழுந்தருளியிருக்கிறான்.

இறை வழிபாடு

உடம்பில் உள்ள அங்கங்களுக்கு ஏதாவது நல்ல வேலை கொடுக்காவிட்டால் கெட்ட வேலையைத்தான் செய்யும். அவற்றுக்குச் சரியான வேலையைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே பெரியோர்கள் ஆலயங்களுக்குச் செல்வது, ஆண்டவன் சந்நிதானத்திலே சென்னி தாழ்த்தி வணங்குவது, கை கூப்புவது, தோத்திரங்களை நாவினாலே சொல்வது ஆகிய பல செயல்களை

வைத்திருக்கிறார்கள். உடலில் உள்ள உறுப்புகளுக்கு இறைவனோடு தொடர்புடைய வேலையைக் கொடுத்தார்கள். இப்படி இந்த உடம்பு முழுவதையும் ஆண்டவனின் திருத்தொண்டில் ஈடுபடுத்தினால் இது புனிதமாகும். இப்போது புலாலின் குவையாக இருக்கிறது. இதைக் கங்கை நீரில் கழுவினாலும் தூய்மை பெறாது. இதைப் புனிதப்படுத்தும் வழி இறை வழிபாடு ஒன்றுதான்.

திருநாவுக்கரசர் திரு அங்கமாலை என்ற திருப்பதிகம் பாடியிருக்கிறார். ''தலையே நீ வணங்காய்'' என்று தொடங்குவது அது. ஒவ்வொரு உறுப்புக்கும் ஒவ்வொரு பணியைச் சொல்கிறார். உறுப்புகளைப் பெற்றதனாற் பயன் அவற்றைச் செய்வதுதான்.

''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை''

என்று வேறோரிடத்தில் பாடுகிறார்.

மனத்தில் இறைவனுடைய நினைவு உறைக்க வேண்டுமானால் அவன் நினைவு உண்டாவதற்குரிய செயல்களைப் புறத்தில் செய்து பயில வேண்டும். செயல்கள் என்பன உடம்பிலுள்ள அங்கங்களின் இயக்கம். ஒவ்வோர் அங்கத்துக்கும் ஒவ்வொரு வகை இயக்கம் இருக்கிறது. கால் நடக்கிறது; கை வேலை செய்கிறது; கண் பார்க்கிறது; வாய் பேசுகிறது. இவ்வாறு உள்ள உறுப்புகளை இறைவனுடைய வணக்கத்தில் ஈடுபடுத்த வேண்டும்.

இராமலிங்கர் வாக்கு

இராமலிங்க சுவாமிகள் முருகப் பெருமானை வழிபடாத அங்கங்கள் இன்ன இன்ன விளைவைப் பெறும் என்று ஒரு பாடலில் சொல்கிறார்.

''எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்
ஏக்கற் றிருக்கும் வெறுவாய்
எங்கள்பெரு மான்உனை வணங்காத மூடர்தலை
இகழ்விறகு எடுக்கும் தலை;
கந்தம்மிகு நின்மேனி காணாத கயவர்கண்
கலம்நீர் சொரிந்த அழுகண்;
கடவுள்நின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி
கைத்துஇழவு கேட்கும் செவி;

பந்தம் அற நினையெணாப் பாவிகள்தம் நெஞ்சம்
பகீர்என நடுங்கும் நெஞ்சம்;
பரமநின் திருமுன்னர்க் குவியாத வஞ்சர்கை
பலியேற்க நீள்கொ டுங்கை
சந்தம்மிகு சென்னையிற் கந்தகோட்டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.''

ஒருவன் மிக நன்றாகத் தலைக்கு வேண்டிய அலங்காரங்களைச் செய்து கொண்டிருக்கிறான். அரசன் முடி புனைந்திருக்கிறான். என்ன அலங்காரம் செய்து கொண்டாலும் இறைவனுடைய திருவடியில் வணங்காத தலை எதற்கும் பயன் இல்லை. வள்ளுவர் சொல்கிறார்:

''கோள்இல் பொறியின் குணம்இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.''

இறைவனுடைய திருவடியை வணங்குவதற்கு நமக்குத் தலை இருக்கிறது. அந்தக் கடமையைச் செய்யாவிட்டால் கேளாத காது போலவும், காணாத கண் போலவும், மணத்தைத் தெரிந்து கொள்ளாத மூக்குப் போலவும் பயனற்றதாகிவிடும் என்று சொல்கிறார்.

இறைவனுடைய திருவடியை வணங்காத தலையைப் பற்றி இராமலிங்க சுவாமிகள் வேறு ஓரிடத்தில் சொல்வது மிகவும் சுவையாக இருக்கிறது.

''வீட்டுத் தலைவநின் தாள்வணங் கார்தம் விரிதலைசும்
மாட்டுத் தலை; பட்டி மாட்டுத் தலை; புன் வராகத்தலை;
ஆட்டுத் தலை;வெறி நாய்த்தலை; பாம்பின் அடுந்தலை;கற்
பூட்டுத் தலை;வெம் புலைத்தலை; நாற்றப் புழுத்தலையே''

என்று அவர் நாகரிகமாக வைகிறார். இந்தத் தலையை உடையவனை, ''மாடே, பன்றியே, ஆடே, நாயே'' என்று வையாமல் தலையை வைவது போலச் சொல்கிறார்.

அருணகிரியார் கூறுவது

இங்கே அருணகிரியார் முருகப் பெருமானைப் பார்த்து, ''உன்னுடைய திருவடியை வணங்காத தலையும், உன்னுடைய

திருவடியின் பேரெழிலைக் காணாத கண்ணும், அதனைத் தொழாத கையும், அதனைப் பாடாத நாவும் பிரமன் எனக்கென்றே அறிந்து படைத்திருக்கிறானே!'' என்று குறைப்பட்டுக் கொள்கிறார்.

கோடாத வேதனுக்கு யான் செய்த குற்றம்என்? குன்றுஎறிந்த
தாடாள னே;தென் தணிகைக் குமர,நின் தண்டைஅம்தாள்
சூடாத சென்னியும் நாடாத கண்ணும் தொழாதகையும்
பாடாத நாவும் எனககே தெரிந்து படைத்தனனே!

''ஆண்டவனே! உன்னுடைய ஆணையைத் தாங்கி இந்த உலகத்தை யெல்லாம் நெறி தவறாமல் படைக்கும் வேலையை உடைய பிரமன் சிறிதும் பட்சபாதம் இல்லாதவன் என்று எனக்குத் தெரியும். எல்லா உயிர்களையும் அவரவர்களுடைய வினைக்கு ஏற்றபடி படைத்திருக்கிறான். அப்படி இருந்தும் என் அளவில் அவன் ஏதோ தவறு செய்துவிட்டான் என்று தோன்றுகிறது. நான் அவனுக்கு எந்தவிதமான குற்றமும் செய்ததாகத் தெரியவில்லை. அப்படி இருந்தும் எனக்கு வேண்டாத உறுப்புக்களை அளித்திருக் கிறானே! ஒரு கால் என்னையும் அறியாமல் அவனுக்கு ஏதாவது தவறு செய்துவிட்டேனோ? நானே அவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள இயலாது. ஆகையால் உன்னைக் கேட்கிறேன்'' என்று சொல்வதுபோல இந்தப் பாட்டை அமைத்திருக்கிறார். பிரமனைப் பற்றிக் குறை கூறும் போதே அவனை உயர்வாகவே சொல்கிறார்.

கோடாத வேதன்

மனிதர்கள் முற்பிறவியில் செய்திருக்கும் புண்ணிய பாவங் களுக்கு ஏற்றபடி அநுபவங்களை அடுத்த பிறவியில் தரவேண்டு மென்பது பிரமன் பெற்ற ஆணை. அவன் அந்த ஆணையைச் சரிவர நிறைவேற்றிக் கொண்டு வருகிறான். அதில் சிறிதும் கோடுவது இல்லை. அதனால்,

கோடாத வேதன்

என்று அருணை முனிவர் சொன்னார். ''அப்படி இருந்தும், என் அளவிலே ஏதோ தவறு செய்கிறான் போல இருக்கிறது'' என்றும் சொல்கிறார்.

''பிரமன் தன்னுடைய வேலையைச் செய்வதற்கு ஏற்ற அறிவு படைத்தவன். எப்போதும் வேதத்தைச் சொல்லிக்

கொண்டிருப்பவன். வேதம் நித்தியமானது. அதைச் சொல்லித் தன்னுடைய தொழிலில் சிறிதும் பிசகு ஏற்படாமல் செய்கிறவனாக அவன் இருந்தும், எனக்குச் சரியான வகையில் உறுப்புக்களை அமைக்கவில்லையே!'' என்று குறை கூறுகிறார்.

வேலைக்காரன் குறை

வேலைக்காரன் ஒருவனுக்குக் கணக்குப் பிள்ளை அபராதம் போட்டுவிட்டான். எதற்குப் போட்டான் என்பது அவனுக்குத் தெரியவில்லை. அவன் தன் மனம் அறிந்து ஒரு தவறும் செய்தான் இல்லை. ''நான் ஒரு நாளைக்குக்கூட நேரம் கழித்துப் போனதில்லையே! எந்த நாளிலும் நான் அங்கே தூங்கினதில்லேயே! நேரம் தவறாமல் சென்று செய்ய வேண்டியவற்றை எல்லாம் சரியாகச் செய்கிறேனே! அப்படி இருக்க, இந்தக் கணக்குப்பிள்ளை என் சம்பளத்தைக் குறைத்துவிட்டானே!'' என்று முதலாளியிடம் அவன் விண்ணப்பம் செய்து கொள்கிறான். அதுபோல இருக்கிறது இந்தப் பாட்டு.

முருகப் பெருமானுடைய திருவருளால் வேலை செய்கிறவன் பிரமன். ஆதலால் அவனை மிகவும் கெட்டவன் என்று சொல்வதற்கு மனம் வரவில்லை. 'ஒருகால் என் மீதுதான் குற்றமோ?' என்று குறிப்பும் இந்தக் கேள்வியில் அடங்கியிருக்கிறது.

தாடாளன்

பிரமன் செய்த தீங்கை அருணகிரிநாதப் பெருமான் முருகனிடத்தில் விண்ணப்பித்துக் கொள்ளும்போது அப்பெருமானை எப்படிச் சொல்லுகிறார் என்று சற்றே கவனிக்க வேண்டும்,. முருகன் குன்றெறிந்த தாடாளன். தாடாளன் என்பதற்குச் சிறப்பான முயற்சியை உடையவன் என்பது பொருள். கிரௌஞ்ச மலையை வேலாயுதத்தால் எறிந்த பெரு முயற்சி உடையவனே! தென்னாட்டில் உள்ள தணிகாசலத்தில் எழுந்தருளி இருக்கும் முருகனே! என்று விளிக்கிறார்.

குன்றெறிந்த தாடாளனே! தென்தணிகைக் குமர!

''வீரம் நிறைந்த நின்னுடைய அடியான் நான். இந்த உலகத்தில் என்னைப் போன்றவர்கள் அருள் பெறுவதற்காகத் திரு

வுருவம் கொண்டு, தணிகையில் எழுந்தருளியிருக்கிறவன் நீ. ஆகையால் உன்னிடம் இந்த விண்ணப்பத்தைச் செய்து கொள் கிறேன்'' என்பது போலப் பாடுகிறார்.

வணங்காத் தலை

முருகன் அருணகிரிநாதரைப் பார்த்து, ''பிரமன் மேலே நீ குறைபட்டுக்கொள்வதற்கு என்ன காரணம்? அவன் என்ன செய்துவிட்டான்?'' என்று கேட்கிறான். அருணகிரியார் சொல் கிறார். ''எம்பெருமானே! அவன் எனக்குத் தலை அமைத்திருக் கிறானே. இதைக் கண்டு நான் மிக்க அறிவாளி என்று பலரும் நினைக்கிறார்கள். நான் இந்தத் தலையைச் சுமந்து கொண்டிருக் கிறேன். இருந்தும் என்ன பயன்? உன்னுடைய தண்டை அணிந்த திருவடியில் இந்தத் தலை விழுவது இல்லையே! இது தலை யாகுமா? இத்தகைய தலையை எனக்கு அந்தப் பிரமன் தந்திருக் கிறான்'' என்கிறார்.

நின் தண்டைஅம் தாள் சூடாத சென்னியும்.

தண்டையந் தாள் என்கிறார். ''நான் மறந்தாலும் இந்தத் திருவடியை நீ தொழவேண்டுமென்று அந்த அடியில் ஒலிக்கின்ற தண்டை எனக்கு அறிவுறுத்துமே! அப்படி இருந்தும் என்னுடைய தலை வளைவது இல்லை. தாளைப் பணிவது இல்லை.''

நாடாத கண்

''உன்னுடைய திருவுருவத்தை எத்தனை விதமாக அலங்காரம் பண்ணுகிறார்கள் பெரியவர்கள்! உன் திருக்கோயிலுக்கு வந்து, அந்தத் திருக்கோயிலில் நீ எழுந் தருளியிருக்கும் இடம் கண்டு, சிறந்த அலங்காரங்களைப் பெற்று மிளிரும் உன்னுடைய திரு வுருவ லாவண்யத்தைக் கண்ணால் கண்டு தரிசிக்க வேண்டாமா? திருவுருவத்தைக் கண்ட பிறகு உன் திருவடி எங்கே என்று தேடித் தண்டையை அணிந்த அந்தத் தாமரையைக் கண்டு ஆனந்தம் அடையவேண்டாமா? என்னுடைய கண் அப்படி இருக்க வில்லையே! நான் கோயிலுக்குச் செல்கிறேன். ஆனால் அங்கே என்னுடைய கண் எதை நாடுகிறது? உன்னுடைய திருவடியை அல்ல; ஆகாசத்தைப் பார்க்கிறது; விளக்கு வெளிச்சத்தைப் பார்க்கிறது; அங்கே வந்திருக்கிறவர்களைப் பார்க்கிறது. உன்

னுடைய திருவடியைப் பார்த்து அதனால் வருகின்ற இன்பத்தை அடைவதற்குத் தெரியவில்லையே! அத்தகைய கண்ணை அல்லவா அந்தப் பிரமன் எனக்குக் கொடுத்திருக்கிறான்?''

நின் தண்டைஅம் தாள்
நாடாத கண்ணும்

தொழாத கை

''அதுமட்டுமா? எனக்கு இரண்டு கைகளைக் கொடுத்திருக்கிறான். விரிக்கவும், குவிக்கவும் ஏற்ற வகையில் அவை இருக்கின்றன. பற்பல இடங்களில் சென்று ஆடியும் அசைந்தும் வேலை செய்கின்ற கைகள் உன்னுடைய சந்நிதானத்தில் வந்து குவிய வேண்டாமா? இந்தக் கைகள் வெவ்வேறு காரியங்களைச் செய்து செய்து ஏற்றுக்கொண்ட அழுக்கை எல்லாம் போக்குவதற்கு உன் திருமுன்னர் நின்று தொழுவதுதான் சரியான வழி. அப்படி இருந்தும் என்னுடைய கைகள் உன்னைத் தொழுவது இல்லை. அத்தகைய கொடிய கைகளாக அல்லவா பிரமன் எனக்குப் படைத்திருக்கிறான்?''

நின் தண்டைஅம்தாள்
தொழாத கையும்.

கைகளைக் குவித்தல்

நம்முடைய நாட்டில் கைகளைக் குவித்துக் கும்பிடுவது ஒரு வழக்கம். கோபுரத்தைக் கண்டாலும் கை குவியும். இறைவனுடைய நினைப்பை ஊட்டுகின்ற எந்தப் பொருளைக் கண்டாலும் கும்பிடுவது நமக்கு இயல்பு.

நம்முடைய கைகள் தனித்தனியே இரண்டு வேறு பக்கங்களில் இருக்கின்றன. நடக்கும்போது வீசி நடக்கின்றன. கொடுக்கும்போது நீண்டு கொடுக்கின்றன. வாங்கும்போது நீண்டு வாங்குகின்றன. அடிப்பது, அணைப்பது ஆகிய சமயங்களில் எல்லாம் கைகள் வேலை செய்கின்றன. இத்தனை இருந்தும் நல்ல பயன் உண்டாவது இல்லை. ஒரு வேலையும் செய்யாமல் இரண்டு கைகளும் குவித்துத் தொழுவதுதான் சிறந்த காரியம். சில கிழவர்களைப் பார்த்து அவர்களுடைய பிள்ளைகள், ''நீங்கள்

கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருங்கள். எல்லாவற்றையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என்று சொல்வார்கள். அது போல் நம்முடைய கைகள் ஒரு வேலையையும் செய்யாமல் இறைவனுடைய சந்நிதானத்திற்கு முன் குவிந்து நின்றால் பெரிய நன்மை உண்டாகும். கையைச் சேர்த்துக் குவிப்பது, ''நான் செயல் அற்றவன். எனக்குச் செய்வதற்குரிய உரிமை இல்லை. செயல் மாண்ட நிலை எனக்கு வர 'வேண்டும்' என்பதற்கு அறிகுறியாகும்.

நின் தண்டைஅம்தாள்
தொழாத கையும்

என்று குறை கூறினவர் அடுத்தபடி நாவைப் பற்றிச் சொல்கிறார்.

பாடாத நா

''எம்பெருமானே! பலவற்றைப் பேசுகின்ற நாக்கு எனக்கு இருந்தும் என்ன பயன்? உன்னைப் புகழ்வதற்குத்தானே நாவை யும் மொழியையும் எனக்குத் தந்திருக்கிறாய்? உன்னைப் பரவிப் பாடி அந்தச் சுவையை நுகரவேண்டும். என்னுடைய நாவோ உன்னைப் பாடுவது இல்லை. எனக்கென்று ஆராய்ந்து இந்த நாக்கைத்தான் கொடுக்கவேண்டுமென்று பிரமன் படைத்திருக் கிறான்'' என்கிறார்.

அருணகிரியார் பாடாமலேயே இருந்தவர் என்றால் நாம் நம்ப முடியுமா? 'பாடாத நாவை எனக்குப் படைத்தான்' என்று சொல்வதே ஒரு பாட்டாக இருக்கிறதே!

நின் தண்டைஅம்தாள்
பாடாத நாவும்

பாடுதல் இறைவனுடைய புகழைச் சொல்வது. நாமாகப் புதிய பாடல்கள் பாடவேண்டுமென்பதில்லை. முன்னே பல பெரியவர்கள் பாடி வைத்த பாடல்களை இறைவன் முன் நின்று பாடவேண்டும்; அல்லது அவனை நினைந்து பாடவேண்டும்; அதனால் உள்ளம் நெகிழும்.

அருணகிரியார் பிறர் பாடல்களைப் பாட வேண்டிய அவசிய மின்றித் தாமே ஆயிரக்கணக்கில் முருகப் பெருமானைப் பாடி யவர். ஆகவே அவர் நாக்குப் பாடாத நாக்கு அன்று. நம்முடைய

நாவைச் சொல்வதற்காகத்தான் தமக்கே உரிய முறையில் அவ்வாறு சொல்கிறார்.

சிறப்பான உறுப்புக்கள்

தலை, கண், கை, நாக்கு ஆகிய நான்கையும் இங்கே சொன்னாலும் உப லட்சணைத்தால் மற்ற உறுப்புக்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். உடம்பில் உள்ள உறுப்புகளில் மிகவும் சிறந்ததாக இருப்பது தலை என்று சொல்வார்கள். தலை என்பதே சிறப்புடைய பொருளைக் குறிக்கும் சொல். வட மொழியில் இதை உத்தமாங்கம் என்று சொல்வார்கள். உடம்பினால் வழி படும் மனிதனுக்கு எல்லாவற்றிலும் சிறந்த உறுப்பாகிய தலை முருகப் பெருமானுடைய தாளில் கிடந்து வணங்க வேண்டும். ஆகையால் அதை முதலில் சொன்னார்.

ஐம்பொறிகளில் மிகவும் சிறந்தது கண்.

''கண்ணில் சிறந்த உறுப்பில்லை'

என்று சொன்னார்கள்.

'சர்வேந்த்ரியாணாம் நயனம் பிரதானம்'

என்பது வடமொழி வாக்கியம். கண் என்னும் பொறி நம் உள்ளத்தில் ஆசையை உண்டாக்குவதற்கு உறுதுணையாக இருக்கிறது. பார்க்கின்ற பொருள்களெல்லாம் நமக்கு வேண்டுமென்று ஆசைப் படும்படி கண் வேலை செய்கிறது. அதை மாற்ற வேண்டுமானால் எதைப் பார்க்க வேண்டுமோ அதைப் பார்க்க வேண்டும். பார்க்கும் பொருளின் திறத்தைத் தெரிந்து பார்க்கும் ஆற்றல் நம் கண்ணுக்கு இருக்கிறது.

மனிதனுடைய உடம்பு சிறந்தது. அதனில் அவனுடைய தலை மிகச் சிறந்தது. அதில் அவனுடைய கண் மிகமிகச் சிறந்தது.

அடுத்தபடியாக மனிதன் கரங்களால் பல வேலைகளைச் செய்கிறான். விலங்குகளுக்குக் கால்கள் உண்டேயொழியக் கைகள் இல்லை. உலகம் முழுவதும் மனிதன் செய்கிற செயல்கள் மிக்க அற்புதமாக இருக்கின்றன. அவனுடைய கைகள் அவனுக்கு உறுதுணையாக உள்ளன. ஆகையால் மனிதனுடைய கைகள் மிகச் சிறந்தவை.

அப்படியே அவனுடைய நாவும் மற்ற உயிர்களுக்கு இல்லாத வகையில் அமைந்திருக்கிறது. விலங்கு முதலியன சில ஒலி களைத்தான் எழுப்பும். மனிதனே பேசும் ஆற்றலைப் பெற்றிருக் கிறான். அவனுடைய நாக்கு மிகச் சிறந்தது.

ஆகவே இந்தப் பாட்டில் மனிதனுக்குச் சிறப்பைத் தந்த தலையையும், கண்களையும், கைகளையும், நாவையும் எடுத்துச் சொன்னார். மற்ற உயிர்க் கூட்டங்களைப் போல இல்லாமல் சிறப்பான உறுப்புக்களைப் பெற்ற மனிதன் அந்த உறுப்புக் களைக் கொண்டு மிகச் சிறந்த பயனைப் பெற வேண்டும்.

தலையினால் வணங்குவதற்கும், கண்ணால் காண்பதற்கும், கையால் தொழுவதற்கும், நாவினால் பாடுவதற்குமாக இறைவன் திருவுருவத்தோடு எழுந்தருளியிருக்கிறான். நம்முடைய கண் முன்னே திருத்தணி மலையுச்சியில் நின்று தன்னுடைய திருக் கோலக் காட்சியை வழங்குகிறான். அவனுடைய திருமேனி முழு வதையும் பார்த்துப் பயிலாவிட்டாலும் அவனுடைய திருவடி யிடத்தில் ஈடுபட்டுக் கீழே விழுந்து வணங்கலாம். அது மிகவும் முக்கியமானது. அவனுடைய திருமேனி உறுப்புக்கள் பலவற்றைக் கண்டு வணங்கினாலும் இறுதியில் அவனுடைய திருவடியை வணங்குவதுதான் தலையானது; பயனைத் தருவது. அதனால், 'அந்த அடியை வணங்காத தலையையும், அதனை நோக்காத கண்ணையும் அதனைத் தொழாத கையையும், அதனைப் பாடாத நாவையும் பிரமன் எனக்கென்றே படைத்தானே!'' என்று அருண கிரியார் முருகனிடத்தில் முறையிட்டுக் கொள்கிறார்.

கருத்து

எதிர்மறை வாய்பாட்டில் இந்தப் பாட்டு இருந்தாலும் திருத் தணிகைக் குமரனுடைய தண்டையந்தாளைத் தலையினால் வணங்கி, கண்ணால் பார்த்து, கைகளினால் கும்பிட்டு, நாவி னால் பாடவேண்டுமென்பதையே கருத்தாகக் கொள்ள வேண்டும்.

''நீ இப்படியெல்லாம் எனக்கு அமைத்தாயே'' என்று முருகனையே குறை கூறியிருக்கலாம். நேரே சொல்லாமல் ஒரு வகையில் போக்குக் காட்டிப் பிரமன் மேலே அந்தக் குற்றத்தைச் சுமத்தினார். இது ஒருவகைச் சாமர்த்தியம். இருந்தாலும் முருகப்

பெருமான் ஆணையின்றி எதுவும் நடப்பதில்லை; அதனால் குறை கூறுவது பிரமனையே ஆனாலும் அவனுக்குத் தலை வணாகிய முருகனிடத்தில் இந்த விண்ணப்பத்தைச் சொல்லுகிறார்.

கோடாத வேதனுக்கு யான்செய்த
குற்றம்என்? குன்றுஎறிந்த
தாடாளனே, தென் தணிகைக்
குமர, நின் தண்டைஅம்தாள்
சூடாத சென்னியும் நாடாத
கண்ணும் தொழாதகையும்
பாடாத நாவும் எனக்கே
தெரிந்து படைத்தனனே.

(கிரவுஞ்ச மலையை வேலால் எறிந்து அழித்த பராக்கிரமத்தை உடையவனே! தென்னாட்டில் உள்ள தணிகாசலத்தில் எழுந்தருளி யிருக்கும் குமரக் கடவுளே! நின்னுடைய தண்டையை அணிந்த அழகிய பாதங்களை வணங்கி அணியாத தலையையும், அவற்றைத் தேடித் தரிசியாத கண்களையும், அவற்றைக் குவிந்து தொழாத கைகளையும், அவற்றின் புகழைப் பாடாத நாவையும் எனக்காகவே ஆராய்ந்து பொறுக்கி எடுத்து வேதன் அமைத்தானே; சிறிதும் பட்சபாதம் இல்லாத அந்தப் பிரமனுக்கு நான் செய்த பிழை என்ன?

கோடாத – ஒருபால் சாயாத; பட்சபாதமில்லாத. ''கோடாமை சான்றோர்க் கணி'' என்பது திருக்குறள். வேதன் – பிரமன். தாடாளன் – தாளாளன். தாடாளன் என்று சீர்காழியிலுள்ள திருமாலுக்கு ஒரு பெயர் உண்டு; பெருமுயற்சியுடையோன் என்பது பொருள்.)

இது கந்தர் அலங்காரத்தில் 76–ஆம் பாட்டு.

மயக்கத்துக்கு முறிவு

காமினி காஞ்சனம்

இராமகிருஷ்ண பரமஹம்சர் அடிக்கடி, 'காமினி காஞ்சனத்தினாலேயே இறைவனது திருவருள் நம்மைச் சார முடியாது இருக்கிறது' என்று வற்புறுத்திச் சொல்வார். அவர் பத்தொன்பதாவது நூற்றாண்டில் வாழ்ந்தவர். மக்கள் மாதர் மயலினாலும், பணத்தாசையினாலும் உயர்ந்த கொள்கைகளைப் பறி கொடுத்து விட்டுத் தீய ஒழுக்கத்தைச் சார்ந்து மயங்குகிறார்கள். எல்லா வகையான இன்பங்களும் பொருளினால் வரும் என்று, எந்தப் பருவத்தினரானாலும் அதற்காக ஏங்கி நிற்கிறார்கள். உடம்பில் பலமும், அறிவில் கிளர்ச்சியும், முயற்சி செய்யும் ஊக்கமும் உடையவர்கள்கூடப் பெண் மயலில் சிக்கி வாழ்நாளைச் சோர விடுகிறார்கள். ஆண்டவன் மனிதனைக் கரசரணாதி அவயவங்களைக் கொண்டு நல்ல கதி அடைய வேண்டுமென்பதற்காகப் படைத்திருக்கிறான். இறைவன் தந்த கருவிகளைப் பணத்தைச் சம்பாதிப்பதிலும், பெண் போகத்தை அடைவதிலுமே செலவழித்து விட்டு, வாழ்நாளை வீணாக்குகின்ற மக்களைப் பார்த்து இறைவன் திருவருளைப் பெற்ற பெருமக்கள் இரங்குவது இயல்பு.

அருணகிரியார் காலநிலை

அருணகிரி முனிவர் காமத்தினால் வருகின்ற துன்பங்களை நன்றாக உணர்ந்தவர். அவர் காலத்தில் பலர் சிற்றரசர்களாக வாழ்ந்தார்கள். ஜமீன்தார்கள் என்று பிற்காலத்தில் நாம் சொல்கின்றவர்களைப் போலவே அவர்கள் வாழ்ந்தார்கள்.

பணம் வந்துவிட்டால் பலபல போகங்களையும் அநுபவிக்க வேண்டுமென்று அறிவுத் தெளிவு இல்லாதவர்களுக்குத் தோன்றும். போகங்களுக்குள்ளேயே மிகவும் உயர்ந்தது பெண் போகம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இன்றும் பணத்தைச் சம்பாதிக்

கிறவர்கள் அதனால் பெண் மயலை வளர்த்து அந்தப் போகத்தை அடைவதற்கே முயன்று கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். வெவ்வேறு வகையில் கலை என்றும், தொழில் என்றும், நாடகம் என்றும் சொல்லிப் பலர் காமத்தைப் பெருக்கி வருகிறார்கள்.

இப்படிக் காமம் வளர்ச்சி அடைவதை அருணகிரிநாதர் தம்முடைய காலத்திலேயே கண்டார். அதனால் அதைப் பற்றி அடிக்கடி பலவகையாகச் சொல்கிறார்.

பொதுமகளிர் செயல்

மயலூட்டும் பொதுமகளிர் தம்மை அலங்கரித்துக் கொண்டு ஆடவர்களைத் தம் மயலில் சிக்க வைக்கிறார்கள். இந்தப் பொது மகளிருடைய அழகையும், அவர்களது வஞ்சகச் செயல்களையும் திருப்புகழில் அருணகிரிநாதர் பற்பல விதமாக வருணித்திருக் கிறார். அவரது சொந்த அநுபவம் அது என்று சொல்லக் கூடாது- இதனை நான் பலமுறையும் சொல்லியிருக்கிறேன்.

டாக்டரும் நோயாளியும்

ஒரு டாக்டர் பல நோயாளிகளுக்கு மருந்து கொடுத்தும், அறுவை வைத்தியம் செய்தும் நோயைத் தீர்க்கிறார். அவர் தமக்கு என்று ஒரு மாளிகையை அமைத்துக் கொண்டிருக்கிறார். நோயாளிகளுக்கு என்று பெரிய ஆஸ்பத்திரி ஒன்றும் கட்டி யிருக்கிறார். பலவகையான நோயாளிகள் அந்த ஆஸ்பத்திரியில் வந்து தங்கியிருக்கிறார்கள். அவர் தம்முடைய நேரத்தில் பெரும் பான்மையும் ஆஸ்பத்திரியில்தான் செலவிடுகிறார். ஆஸ்பத்திரி யில் இருப்பவர்கள் நோயாளிகள் என்று நமக்குத் தெரியும். ஆனால் நோயாளிகளுக்கு நலம் செய்வதற்காக டாக்டரும் அங்கே இருப்பார். மாளிகையில் அங்கே உள்ள வசதிகளை அநுபவித்துச் செல்வரைப் போல வாழ்பவரும் அவரே. மாளிகையில் இருக்கும் போது அவர் கையில் அழுக்கு இராது. மேலே ரப்பர் குழாய் இராது. உல்லாசமாக உணவு உண்டு வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருப்பார். அப்போது யாரோ பெரிய கனவான் என்று அவர் தோற்றுவார்.

ஆனால் அவர் நோயாளிகளுக்கிடையே இருந்து அவர்களுடைய புண்களைக் கழுவுவதிலும், நோய்க்கு மருந்து கொடுப்பதிலும்

ஈடுபட்டிருப்பதைப் பார்த்தால் அவருடைய நிலையே வேறாக இருக்கும். மாளிகையில் அவரது வாழ்வைப் பாராத ஒருவன் நோயாளிகளுக்கு நடுவில் அவரைப் பார்த்தால் அவர் நிலைக்கு வருந்தி இரங்குவான்.

அருணகிரி முனிவர் ஆண்டவன் திருவருள் இன்பத்தைப் பெறுகிற வாழ்வில், ஆண்டவனது இன்ப மாளிகையில் வாழ்கின்ற நிலையிலேயே இராமல், உலகமாகிய ஆஸ்பத்திரியில் நடமாடுகின்ற நோயாளிகளுக்கு நலம் செய்ய வருகிறார். தம்முடைய சொல் மருந்தினால் சுகம் அடையும்படி செய்ய வேண்டுமென்ற கருணையினால் இரங்கி இந்த நிலையில் இருக்கிறார். அவர்களிடத்தில் வந்து அவர்களுடைய நோயைத் தம்முடைய நோயாக ஏற்றுக் கொண்டு பல பாடல்களைப் பாடியிருக்கிறார்.

மனிதர்களுடைய குற்றங்கள் பலவகையாக இருந்தாலும் எல்லாவற்றுக்கும் மேலாகப் பலபல துன்பங்களுக்குக் காரணமாக இருப்பது காமம். அதனால் அதைப் பற்றி அடிக்கடி சொல்வது அருணகிரியாருடைய இயல்பு. இந்தப் பாடலில் காமத்தினால் உண்டாகும் தீமையைச் சொல்ல வருகிறார். தாமே காமத்தினால் துன்புறுவது போல வைத்து, அதை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று தம் நெஞ்சைப் பார்த்து உபதேசம் செய்வது போல இந்தப் பாட்டை அமைக்கிறார்.

மகளிர் அலங்காரம்

நம்முடைய நாட்டில் பெண்டிர் தம்மை அளவுக்கு மீறி அலங்காரம் செய்து கொள்வதில்லை. அப்படிச் செய்து கொண்டால் வீட்டுக்குள்ளே இருந்து தம் கணவன்மார்களின் கண்ணில் படுவதற்காக மாத்திரம் செய்து கொள்வார்கள். தாம் செய்து கொள்ளும் அலங்காரத்தைப் பிறர் காணவேண்டுமென்றும், தம் அழகைப் பிறர் புகழவேண்டுமென்றும் நினைப்பது இந்த நாட்டுப் பண்புக்கு நேர் விரோதமானது. மேல் நாட்டிலோ பிறர் காண அலங்காரம் செய்து கொள்வது இயல்பு. ஒருவருடைய மனைவியை அவருடைய முன்னிலையில் பிறன் ஒருவன், 'சிறந்த அழகி' என்று புகழ்ந்தால் அவர்களுக்கு மிகவும் உவகை உண்டாகும். அப்படிப் புகழ்வது நாகரிகமுங்கூட. ஆனால் இந்த நாட்டிலோ கணவன்கூடத் தன் மனைவியை வெளிப்படையாகப் புகழ்வது இல்லை.

தம் அழகைப் பிறர் கண்களில் காட்டவேண்டுமென்ற எண்ணமே இந்த நாட்டு மகளிருக்குத் தோன்றாது. ஆனால் பிறரை மயக்கவேண்டுமென்ற எண்ணமுடைய, போகத்தை விலைக்கு விற்கின்ற மடந்தையர்கள் தம்முடைய இயற்கை அழகையும் செயற்கை அழகையும் விளம்பரப்படுத்தி ஆடவர் கண்களில் படும்படியாக நிற்பார்கள்.

கண்வலைப்பட்டு மயங்குதல்

உடம்பிலுள்ள உறுப்புகளுக்குள் மிகச் சிறந்தது கண். அந்தக் கண்ணால் வெட்டித் தம்முடைய பார்வையினாலே ஆடவர்களை மயக்குவது பொதுமகளிருடைய இயல்பு. தம் கண்ணினாலே மயக்கி, தம் பருவத்தைக் காட்டும் அங்கத்தின் அழகைக் காட்டிக் காளையர்களை இழுக்கின்ற கலையில் அவர்கள் வல்லவர்கள். அவர்களுடைய கண் வலையில் சிக்குகின்ற ஆடவர்கள் அவர்கள் மார்பகத்தைக் கண்டு மயங்கி, அவர்களோடு சேர வேண்டுமென்று எண்ணுகிறார்கள். அந்த எண்ணம் முறுக முறுக அவர்களுக்குக் காமம் வளருகிறது. காமம் வளர வளர அவர்களால் வருகின்ற இன்பத்தைப் பெற முயல்கிறார்கள். ஒருகால் பெற்றால் மீட்டும் மீட்டும் பெறவேண்டுமென்று ஏங்குகிறார்கள். ஒருகால் அடைந்த அளவில் அந்த இன்பம் நிறைவு தருவது இல்லை. பொறிகளால் அநுபவிக்கும் இன்பம் யாவுமே இத்தகையனவே.

நிறைவு தராப் பொறி இன்பம்

எத்தனை காலம் வாழ்ந்தாலும் இப்பொறிகளினால் பெறுகின்ற இன்பத்தை நிறைவாகப் பெற்றோம் என்று சொல்வார் யாரும் இல்லை. இறக்கும் மனிதன் மனத்திலே குறையோடு மாய்கிறான். கருணை நிரம்பிய ஆண்டவன், 'நம்முடைய குழந்தையாகிய இவன் இன்னும் பொறிபுலன்களின் இன்பத்தில் ஆசை வைத்திருக்கிறான். இவன் ஆசை நிறை வேறவில்லை. மறுபடியும் பிறந்து பொறிகளால் வரும் இன்பத்தை நுகரட்டும்' என்று எண்ணி மீண்டும் பிறக்கச் செய்கிறான். நம்முடைய பிறப்புக்குக் காரணமாய் இருப்பது நம்முடைய ஆசைதான். நம் ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்கு வாய்ப்பாகவே அடுத் தடுத்துப் பிறவி வருகிறது. ஒரு பிறவியில் ஆசைப்பட்ட

இன்பத்தை மறுபிறவியில் பெற்றாலும் அதோடு நமக்கு நிறைவு வருகிறது இல்லை. பிறவி வரவர, ஆசைகளும் வளர்ந்து, ஆசை வளரவளர, பிறவியும் வளர்ந்து கொண்டு வருகிறது. ஒன்றுக் கொன்று தொடர்புடைய ஆசையும், பிறவியும் எந்தக் காலத் திலும் நிற்பதில்லை.

ஆகவே, கண்வலை வீசுகின்ற பெண்டிருடைய இன்பத்தைப் பெற்றவர்கள் அதனால் நிறைவு பெறாமல் மீட்டும் மீட்டும் அதனைப் பெறவேண்டுமென்று எண்ணுகிறார்கள். அந்த ஏக்கம் அதிகமாக அதிகமாக, மயங்குகிறார்கள். இந்த நிலையை முதலில் அருணகிரியார் சொல்ல வருகிறார். தம்முடைய கண்ணைச் சேல் மீனைப் போல உருட்டி மயக்குகிறார்கள் பொது மகளிர்.

சேல்வாங்கு கண்ணியர்.

வாங்கு என்பது உவம வாசகம். சேல்போன்ற கண்ணை உடையவர் என்று பொருள். எத்தனையோ சேல்களை விலைக்கு வாங்கும் பேரழகுடைய கண்களை உடையவர்கள் என்று சொல்லலாம். பொதுவாக மகளிருடைய கண்களுக்குச் சேல் மீனை உவமமாகச் சொல்வது வழக்கம். இங்கே, பொது மகளிருடைய கண்கள் ஆயிரம் சேல்களினுடைய அழகையும் மிஞ்சி அவற்றை எல்லாம் விலைக்கு வாங்கும் கிளர்ச்சியை உடையது என்கிறார். அந்தச் சேலுக்கும் இந்தச் சேலுக்கும் வேறுபாடு உண்டு. கடலில் உள்ள சேல்மீன்கள் வலையில் படும். ஆனால் இந்தப் பொது மகளிருடைய கண்ணாகிய சேல் மீனோ தானே வலை வீசும். அந்த வலையில் காளையர்கள் படுவார்கள்.

மால்வாங்குதல்

சேலைப் போன்ற கண்ணை உடைய பொது மகளிர், பாதை யிலே நான்குபேர் காணச் செல்லும்போது, அவருடைய கண் அழகை முதலில் கண்டு, பின்பு மேனியில் கண்ணை ஓச்சுகிறார் கள் காளையர்கள். பருவப் பூரிப்பை மார்பகத்தில் காணக் கண் செல்கிறது. அப்போது உள்ளம் சோர்ந்து அவர்களை அணைய வேண்டுமென்ற எண்ணம் முதிர்கிறது.

சேல்வாங்கு கண்ணியர் வண்ணப் பயோதரம் சேர எண்ணி.

வண்ணம் என்பது இங்கே அழகைக் குறிக்கும். அவர்கள் பருவ மடந்தையர்கள் என்பதை இந்த வருணனை காட்டுகிறது. அவர்களை அணைய எண்ணுகிறார்கள் காளையர்கள். அந்த எண்ணம் மயக்கமாக, மயலாக, காமமாக வளர்கிறது. அதை அவர்கள் வாங்கிக் கொள்கிறார்கள்.

சேர எண்ணி மால் வாங்கி,

வாங்குதல் என்பது நம்மிடத்தில் உள்ள பொருளைக் கொடுத்து வேறு பொருளைப் பெறுதல். இங்கும், அறிவுடைய ஆடவர் தம் அறிவைக் கொடுத்து மாலை வாங்கிக் கொள்கின் றனர். தாம் செய்ய வேண்டிய முயற்சியில் ஈடுபடாமல் அந்த முயற்சியையும் பறிபோகவிட்டு, தம்முடைய தொழில் ஆற்றலை நழுவவிட்டு, இது தக்கது, இது தகாதது என்கிற ஆராய்ச்சியை யும் அர்ப்பணம் செய்துவிட்டு, மாலை வாங்கிக் கொள்கிறார்கள். உடல் பொருள் ஆவி என்ற மூன்றையுமே கொடுத்து மாலை வாங்கிக் கொள்கிறார்கள் என்றுகூடச் சொல்லி விடலாம். வீதியிலே தம் அழகையும், போகத்தையும் விற்க வருகின்ற மடந்தையர்களிடம் தம்மிடம் உள்ள எல்லாவற்றையும் கொடுத்து விட்டுக் காமத்தைக் காளையர்கள் வாங்கிக் கொள்கிறார்களாம்.

ஏங்கி மயங்குதல்

அப்படி வாங்கிக் கொள்வதனாலே அவர்களுக்கு ஏதேனும் நன்மை உண்டாகிறதா? கண்ணினாலே அவர்களைக் கண்டு, அவர்களைச் சேரவேண்டுமென்று மனத்தினாலே எண்ணி, பின்பு அந்த எண்ணம் முறுகி மாலாக நிற்க, அதன் பயனாக ஏக்கம் உண்டாகிறது. இப்படி ஏங்குகிறவர்கள், முயற்சி செய்து தம்மிடம் உள்ள பணத்தைக் கொடுத்து அவர்களை அணைந்து விட்டால், மீண்டும் அவர்களோடு சேரவேண்டும் என்ற விருப்பம் எழுகிறது. எப்போதும் இடைவிடாமல் அவர்களோடு இருப்பதற்குப் பண நிலை இடம் கொடுப்பதில்லை. அதனால் ஒருகால் இன்புற்றாலும் அதனால் நிறைவு பெறாமல் மீட்டும் மீட்டும் பெறவேண்டுமென்று எண்ணுகிறார்கள். இதனால் அவர் களிடம் அவ்வப்போது இருக்கும் சிறிதளவு தெளிவுகூடப் போய்விடுகிறது.

மால்வாங்கி ஏங்கி மயங்காமல்.

அப்போது தாம் அடையவேண்டுமென்று ஆசைப்பட்ட இன்பத்தைப் பெறாமல் இருப்பது ஒன்று. இது நல்லது, இது தீயது என்று எண்ணுகிற அறிவு குழம்பிப் போவது ஒன்று. இந்த இரண்டும் அல்லலை மேலும் உண்டாக்குகின்றன. நிறைவற்ற தன்மையும், குழப்பமும் சேர்ந்து மயக்கத்தை உண்டாக்கு கின்றன. நம்முடைய செயலைக் கண்டு உலகத்தார் இழிப்பார்களே என்பதை எண்ணாமல், நம்முடைய வாழ்நாளில் நாம் செய்ய வேண்டிய கடமை என்ன என்பதையும் சீர்தூக்கிப் பாராமல் பித்துப் பிடித்தவர்களைப் போல மயங்கி நிற்கிறார்கள். ''என் நெஞ்சமே, நீ இப்படி மயங்காதே'' என்று உபதேசம் செய்ய வருகிறார் அருணகிரியார்.

மயக்கம் போக்க வழி

இந்த மயக்கத்தைப் போக்குவதற்கு வழி என்ன? சேல் வாங்கு கண்ணை உடைய உருவத்தைக் கண்டு, அதிலிருந்து தொடங்கிய இந்தத் திருவிளையாடல் நிற்க வேண்டுமென்றால் அதற்கு முறிவாக வேறு ஒன்றைக் காணவேண்டும். கண்டு கருத வேண்டும். அந்தப் புரிகாரத்தைச் சொல்ல வருகிறார். ''முருகப் பெருமானுடைய திருவடியைப் பார்த்துத் தியானம் செய்'' என்பது அவர் சொல்லும் பரிகாரம்.

பூங்கழல் நோக்கு நெஞ்சே.

'தாமரை போன்ற, அழகுடைய கழலை அணிந்த முருகப் பெருமானுடைய பாதத்தைத் தியானம் பண்ணு நெஞ்சமே' என்ற உபதேசிக்கிறார். நோக்கு என்பது இங்கே தியானம் பண்ணு என்று பொருளை உடையது.

முருகப் பெருமானைப்பற்றிப் பின் அடிகளில் சொல்கிறார். முருகப் பெருமான் இந்திரனுக்கு உபகாரம் செய்தவன்.

இந்திரன் நிலை

இந்திரபோகம் என்று சொல்வார்கள். உலகத்தில் உள்ளவர்களுடைய பெரும் போகங்கள் எல்லாம் இந்திர போகத்திற்கு ஈடாகா. இந்திரன் தேவர்களுக்குத் தலைவன். புண்ணியத்தின் பயனாக இன்பத்தை அநுபவிக்கின்றவன். பொதுவாகத் தேவர்களே அந்த இயல்பு உடையவர்கள். அவர்களுக்குத் தலைவன்

என்றால் அவனைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? அவன் எப்போதும் ஐராவதத்தில் செல்கிறவன். இந்தக் காலத்தில் பெரிய பணக்காரர்கள் நான்கைந்து காராவது வைத்திருப்பார்கள். பழங் காலத்தில் சிறந்த அரசர்கள் தங்களுடைய செல்வத்திற்கு அறிகுறி யாகத் தேர்களையும், யானைகளையும், குதிரைகளையும் வைத் திருப்பார்கள். யானை இருப்பது பெரிய செல்வத்திற்கு அடை யாளம். ''களாந்த ஐச்வர்யம்'' என்று சொல்வார்கள்.

ஐராவதம்

இந்திரனோ வேறு யாருக்கும் இல்லாத பெரிய யானையை உடையவனாக இருக்கிறான். அந்த யானைக்கு நான்கு கொம்பு. மற்ற யானைகள் கரிய நிறம் உடையனவாக இருக்க, அவன் யானையோ வெள்ளை நிறம் உடையது. சாமான்ய வெள்ளை நிறம் அன்று; பளபளக்கும் வெள்ளி போன்ற வெள்ளை நிறம். அது நடந்து வருவதைப் பார்த்தால் வெள்ளி மலையே கால் படைத்து நடந்து வருகிறதோ என்று தோன்றும். அதன்மேலே இந்திரன் அமர்ந்திருப்பான். தேவ ராஜனுக்குத் தான் வாகனம் என்ற மிடுக்கினாலே அது தன் காலை வாங்கி நடக்கும்; இறு மாப்போடு நிற்கும். இந்திரனுடைய போகத்தையும், செல்வச் சிறப்பையும், பதவியையும், பெருமையையும் அளவிட்டுச் சொல்லவொண்ணாது. அவனுடைய மனைவிக்கு எவ்வளவு பெருமை இருக்கும்! அவள்தான் இந்திராணி.

வெள்ளி மலை எனவே
கால்வாங்கி நிற்கும் களிற்றான் கிழத்தி.

இந்திரனும் சூரனும்

தன்னுடைய இந்திர லோகத்தில் தனக்கென்றே அமைந்த ஐராவதம், காமதேனு, கற்பகம், உச்சைசிரவம், சிந்தாமணி முதலிய பலவகை அங்கங்களையும் குவித்துக் கொண்டு போகத்தில் மூழ்கி இருந்த இந்திரன் இறைவனையே மறந்துவிட்டான். அவனுக்கு அறிவு கொளுத்தவேண்டும் என்று ஆண்டவன் எண்ணிச் சூரபன்மன் என்ற அசுரனைத் தோற்றுவித்தான். அவன் சர்வ லோகங்களையும் தன் ஆளுகைக்குள் அடக்கி, சர்வப் பிரபஞ்சத்தையும் தானே தனி மன்னனாக ஆளவேண்டுமென்று ஆசைப்பட்டான். அவன் ஆயிரத்தெட்டுக் கோடி அண்டங்களுக்

கும் அறுபத்தாறு கோடி அசுரர்களுக்கும் தலைவனாக இருந்தான். இந்திரனோ தேவலோகத்திற்கு மாத்திரம் தலைவன்; முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு மட்டும் அரசன். தேவர்களைப் போல இரட்டிப்பு மடங்கினர் அசுரர்கள்.

இந்திராணியின் நிலை

அந்த அசுரர்களுக்குத் தலைவனாகிய சூரன் அமராவதிப் பட்டணத்தின் மேல் படையெடுத்து இந்திரனை அந்த நகரத்திலிருந்தே ஓட்டி, அவனுடைய மகனைச் சிறையில் அடைத்தான். இந்திரன் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்தான். அவன் மனைவி இந்திராணி யாரும் அறியாமல் மேரு மலையில் மறைந்திருந்தாள். எந்தச் சமயத்தில் இந்திரன் உயிர்விடுவானோ என்று அவள் கழுத்தில் கட்டியிருந்த கயிறு ஊசலாடிக் கொண்டிருந்தது. இந்திரன் வச்சிராயுதத்தைக் கையில் வைத்திருந்தாலும் சூரனுக்கு முன்னால் அந்தப் பெரும்படை பயன் அற்று ஒழிந்தது. இந்திரன் பிழைத்தால்தான் இந்திராணியினுடைய மங்கல வாழ்வு நிலைத்து நிற்கும்; அவள் கழுத்தில் நூல் நிற்கும். இந்திரன் எத்தனையோ படைக்கலத்தைக் கொண்டிருந்தாலும், பேராற்றல் உடையவனாக இருந்தாலும், அமுதத்தை விருந்தாக நுகர்ந்திருந்தாலும் தனக்கு வந்த நாசத்தைப் போக்கிக்கொள்ளும் ஆற்றல் இல்லாதவன் ஆகிவிட்டான். இந்திராணியின் திருமாங்கல்ய நூல் என்றைக்கு அறுமோ என்று தொங்கிக் கொண்டிருந்தது. அந்த மாங்கல்ய நூலைப் காப்பாற்றுவதற்கு இந்திரனுக்கு ஆற்றல் இல்லை; அவனது வச்சிரப் படைக்கும் ஆற்றல் இல்லாமல் போய்விட்டது.

தாலி காத்த பெருமான்

ஆனால் அந்த மாங்கல்ய நூலை இரும்பு நூலாக ஆக்கி அது அவள் கழுத்தில் இருந்து கழியாத வண்ணம், சூரன் அந்த நூலை வாங்காத வண்ணம், பாதுகாத்தவன் முருகப் பெருமான். சூரபன்மனை அழித்து, இந்திரன் வாழ்வு பெறும்படி செய்து, இந்திராணிக்கும் மாங்கல்யக் கயிறு நிற்கும்படி செய்தான். அவன் தன் திருக்கையில் உள்ள வேலாயுதத்தை வாங்கிச் சூரன் மேலே விட்டான். அவன் வேலை வாங்கியிராவிட்டால் இந்திராணி அமங்கலியாகியிருப்பாள்; அவள் தன் கழுத்தில்

கட்டியிருந்த நூலை வாங்கியிருப்பாள். அவள் நூலை வாங்காமல் இருந்ததற்குக் காரணம் முருகன் வேலை வாங்கியதுதான். இறைவன் கையில் இருந்த வேல் தன்னுடைய வீரத்தால் இந்திராணியின் கழுத்தில் இருந்த நூலைக் காப்பாற்றியது. எல்லாவிதமான போகங்களையும் அடைந்தும் இந்திராணியின் கழுத்தில் கட்டிய நூலைக் காப்பாற்றும் ஆற்றல் இல்லாதவனாக இந்திரன் இருந்தான். அத்தகைய இந்திரனின் சோர்வை அகற்றி, வலியின்மையை மாற்றி, பாதுகாத்தவன் முருகப் பெருமான். ''பெரும் போகத்தில் வாழ்ந்த இந்திரனே துன்புற்றான் என்றால், சேல்வாங்கு கண்ணியர் மயலில் ஆழ்ந்து, இருக்கிற அறிவையும் பறிபோகவிட்டு மயங்கிக் கிடக்கிற உனக்கு என்ன நன்மை உண்டாகப் போகிறது? அன்று வேலை வாங்கின பெருமானுடைய தாமரை போன்ற திருவடியை நினைத்து அன்பு செய்வாயாக'' என்று நெஞ்சைப் பார்த்து உபதேசம் செய்கிறார்.

மால்வாங்கி ஏங்கி மயங்காமல் வெள்ளி மலையெனவே
கால்வாங்கி நிற்கும் களிற்றான் கிழத்தி கழுத்தில் கட்டும்
நூல்வாங்கி டாது அன்று வேல்வாங்கி
பூங்கழல் நோக்கு நெஞ்சே!

நோக்கும் காலம்

வேல்வாங்கி என்பதற்கு வேலை வாங்கினவன் என்று பொருள். அன்று என்பது, பழங்காலத்தில் நடந்த கதையைச் சுட்டியது. அதைப் பண்டறி சுட்டு என்பார்கள். முருகப் பெருமானுடைய கழலை நோக்க வேண்டும். சேல்வாங்கு கண்ணியரிடத்தில் சேருவதற்கு முன்னாலே நோக்கலாம். அப்படி நோக்கினால் தெளிவு பெறலாம். அவர்களைப் பார்த்த பிறகும் கழலைப் பார்க்கலாம். அப்போது பயோதரம் சேருகின்ற எண்ணம் இல்லாமல் இருக்கும். அப்படிச் சேர எண்ணிய பிற்பாடும் பார்க்கலாம். அப்போதும் அந்த நினைவு மால் வாங்காத நிலையை நமக்குத் தரும். மயல் உள்ளத்தில் தோன்றிய பிறகும் வேல்வாங்கி பூங்கழல் நோக்கலாம். அப்போது உள்ளத்தில் ஏக்கம் வராமல் இருக்கும். பயோதரம் சேர எண்ணி, மால் வாங்கி, ஏங்கிய பிறகும் பார்க்க வாய்ப்பு உண்டு. அந்தச் சமயத்தில் பார்த்தாலும் மயக்கம் இல்லாமல் இருக்கலாம். மயக்கம் அடைந்த பிற்பாடும்

நோக்கலாம். அப்போது தெளிவு உண்டாகும். ஆகவே எந்த நிலையானாலும் இறைவன் நம்மைக் காப்பாற்றுவதற்காகவே கையில் வேலையும், காலில் கழலையும் கொண்டிருக்கிறான் என்று சொல்வாரைப் போல,

வேல்வாங்கி பூங்கழல்

என்றார்

சேல்வாங்கு கண்ணியர் வண்ணப்
பயோதரம் சேரஎண்ணி
மால்வாங்கி ஏங்கி மயங்காமல்
வெள்ளி மலையெனவே
கால்வாங்கி நிற்கும் களிற்றான்
கிழத்தி கழுத்தில்கட்டும்
நூல்வாங்கி டாதன்று வேல்வாங்கி
பூங்கழல் நோக்குநெஞ்சே.

(நெஞ்சமே! சேல்மீனை வெல்லும் கண்ணையுடைய மகளிருடைய அழகிய நகிலை அணைய எண்ணிக் காமத்தைப் பெற்று ஏக்கம் அடைந்து மயங்காமல், வெள்ளிமலை என்று சொல்லும்படியாகக் காலை எடுத்து வைத்து நிற்கும் யானையையுடைய இந்திரனுடைய மனைவியாகிய இந்திராணி தன் கழுத்தில் கட்டிய மங்கல நூலைக் கழுத்திலிருந்து கழற்றாமல் அந்தப் பழங்காலத்தில் வேலை விட்ட முருகனுடைய பூவைப்போன்ற திருவடியைத் தியானம் பண்ணுவாயாக.

வண்ணம் – அழகு. பயோதரம் – பாலைத் தாங்குவது; நகில். மால் – மயல்; காமம். கால் வாங்கி – காலை எடுத்து வைத்து. களிறு – ஐராவதம். கிழத்தி – மனைவி. நூல் – மாங்கல்ய சூத்திரம். வாங்கிடாது – கழற்றாமல். வேல் வாங்கி: பெயர். பூ – தாமரை மலர். கழல்: ஆகுபெயர். நோக்கு – தியானம் செய்; நெஞ்சத்தை விளித்துச் சொன்னமையால் இங்கே தியானம் செய் என்று பொருள் கொள்ள வேண்டும். நெஞ்சையும் உறுப்புடையது போல வைத்துப் பேசும் மரபு உண்டு; ஆதலின் நீ தரிசனம் பண்ணு என்றும் பொருள் கொள்ளலாம்.)

இது கந்தர் அலங்காரத்தில் 77– ஆவது பாடல்.

ஆர் கொண்டு போவர்?

அருணகிரியார் தம் நெஞ்சைப் பார்த்துச் சொல்கிற வகையில் அமைந்த பாட்டு ஒன்றை முன்பு பார்த்தோம். குற்றம் செய்வாரைப் பார்த்து, 'நீ குற்றம் செய்கிறாயே' என்று சொன்னால் அவருக்குக் கோபம் வரும். அதனால் தம் நெஞ்சைப் பார்த்துச் சொல்வது போலச் சொல்லும் பாடல்களை அருண கிரியார் வாக்கில் பார்க்கலாம். ஆனாலும் அவருக்குக் கருணை மிகுதியாகிவிட்டால் நேரே மக்களைப் பார்த்துச் சொல்லும் வகையிலும் பாடுவார். அப்படிப் பாடிய ஒரு பாடலையே இப்போது பார்க்கப் போகிறோம்.

தாயின் கேள்வி

தன் முரட்டுக் குழந்தை தான் சொல்வதைக் கேட்காமல் இருக்கிறான் என்று தாய் வருந்துகிறாள். ''என் தலையெழுத்து'' என்று குறிப்பாகச் சொல்கிறாள். அயலான் வந்தால் அதை வெளிக்காட்டிக் கொள்வதில்லை. ஆனாலும் அந்தக் குழந்தை வீணாகப் போகிறதே என்ற வருத்தம் அதிகமானால், ''அடே. இப்படிச் சொன்ன பேச்சுக் கேட்காமல் ஓடுகிறாயே; நீ முன்னுக்கு வரவேண்டாமா?'' என்று பதைப்புடன் கேட்பதும் உண்டு. அது போல அருணகிரியார் இப்போது நம்மைக் கேட்கிறார்.

செல்வரின் கதை

ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒரு சிறிய கிராமத்தில் ஒருவர் பிறந்தார். மிகவும் முயற்சி செய்து முன்னுக்கு வந்தார். 'தாமே முன்னுக்கு வந்தவர்' (Self - made man) என்று சிலபேரை உலகத்தார் சொல்வது வழக்கம். அந்த வகையைச் சேர்ந்தவர் அவர். செல்வம் நிரம்பிய குடும்பத்தில் அவர் பிறக்கவில்லை. ஆனால் அவருக்கு முயற்சி என்ற செல்வம் இருந்தது. அந்தச் சிற்றூரில் கல்வி கற்று முடித்துக் கொண்டு பேரூருக்கு வந்தார்.

பல பெரிய மனிதர்களின் தொடர்பு கொண்டு நயமாகப் பேசி அவர்களுக்குரிய சிறுசிறு காரியங்களைச் செய்து அவர்களால் பொருள் உதவி பெற்றார். கல்லூரியில் படித்தார். மிகச் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றார். அதன் விளைவாக அவருக்கு நலல உத்தியோகம் கிடைத்தது. திருமணப் பருவம் சற்றுத் தாண்டி விட்டாலும் அவருடைய குணநலங்களையும் பதவியையும் கண்டு ஒருவர் தம் பெண்ணை அவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். நல்ல உத்தியோகமும், நல்ல குடும்பத்தில் பிறந்த பெண்ணும் சேர்ந்த பிறகு வளம் பெருகக் கேட்கவேண்டுமா? மேலும் அவர் பொருளை நிரம்பச் சம்பாதித்தார். இந்த உலகத்தில் நன்றாக வாழவேண்டுமென்ற குறிக்கோளுடன் உழைத்தார். எப்படி எப்படி வாழலாம் என்பதை ஆராய்ந்தார். பலர், வாழும் வகை பற்றிப் புத்தகங்க்ள் எழுதியிருக்கிறார்கள். நண்பர்களைப் பெறுவது எப்படி, எப்படிப் பொருள் ஈட்டுவது, எப்படிப் புகழ் சம்பாதிப்பது என்றெல்லாம் இந்தக் காலத்தில் ஆங்கிலத்தில் பல புத்தகங்கள் வெளி வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் நன்றாகத் தெரிந்து ஆராய்ந்து வரவர முன்னுக்கு வந்து கொண்டிருந்தார். ஒரு கணப்பொழுதையும் வீணடிக்காமல் எப்போதும் சுறுசுறுப்பாக வேலை செய்தார். அவருடைய நிலை வரவர உயர்ந்தது. உறவினர்கள் பெருகினார்கள். நண்பர்கள் அதிகமானார்கள். சொத்தும் சேர்ந்து வந்தது. நல்ல வீட்டைக் கட்டிக் கொண்டார். பெரிய மாளிகையாக அந்த வீடு அமைந்தது.

பொருள்களின் வகை

மனிதர்களோடு தொடர்புடைய பொருள்களில் இரண்டு வகை உண்டு. உயிருள்ள பொருள் ஒரு வகை; உயிர் இல்லாத பொருள் ஒருவகை. உயிருள்ள பொருள்களாவன, உறவினர்களும், நண்பர்களும். உயிரில்லாத பொருள் சொத்து. சொத்து இரண்டு வகைப்படும்; அசையும் பொருள், அசையாப் பொருள் என்று சொல்வார்கள்; ஸ்தாவர ஜங்கமம் என்று வடமொழியில் சொல்வர். வீடு, நிலம் முதலியன அசையாப் பொருள். ஆடை, அணி, பணம் முதலியன அசையும் பொருள். இந்த இரண்டு வகையான பொருள்களும் முன்னே சொன்ன செல்வருக்கு நாளுக்கு நாள் பெருகி வந்தன. முதலில் அவருக்கு நல்ல

மனையாட்டி வாய்த்தாள். அப்புறம் குழந்தை குட்டி, பேரன், பேத்தி என்று சுற்றம் பெருகிற்று. ஊர் முழுவதும் நண்பர்களானார்கள். பத்து ஏக்கரா நிலம், ஐந்து வீடுகள், பாங்கில் பணம் ஆகிய எல்லாம் சேர்ந்தன. மனையாட்டியின் கழுத்தில் நிறைய நகைகள் இருந்தன. அவரும் காதில் கடுக்கன், கையில் மோதிரம் முதலியன அணிந்து கொண்டிருந்தார்.

வாழ்க்கையில் குறை

இத்தகைய வாழ்க்கையைத்தான் உலகத்தார் சிறந்த வாழ்க்கை என்று சொல்கிறார்கள். இப்படி வாழ முடிந்தால் இதைக் காட்டிலும் சிறந்த பதவி வேறே இல்லை என்று பெரும்பாலான மக்கள் நினைக்கிறார்கள். ஆகவே எல்லா வகையிலும் வளம் பெற்ற அந்த மனிதரை உலகம் போற்றியது. நிலமும், பொருளும், உறவினர்களும், நண்பர்களும் அவருக்கு இருந்தன எனினும் அவருக்குக் குறை இல்லையென்று சொல்லலாமா? அவருடைய உள்ளத்தில் அமைதி இருந்ததா? இல்லை. காரணம் என்ன?

ஈட்டிய பொருள் எப்போதும் நிற்பது இல்லை. அணிகளும், ஆடைகளும் எப்போதும் விளக்கமாக இருக்கும் என்பதும் இல்லை. உறவினர்கள் எப்போதும் நம்மோடு இருந்து வாழ்வார்கள் என்று சொல்வதற்கும் இல்லை. அதிகமான குழந்தைகள் பிறந்தால் அவை நோய்நொடி இல்லாமல் வாழ வேண்டுமே என்ற அச்சம் பெற்றவர்களுடைய உள்ளத்தில் இருக்கிறது. வியாபாரம் செய்தால், 'பொருள் நஷ்டம் அடையாமல் இருக்க வேண்டுமே' என்ற அச்சம் வியாபாரிக்கு இருக்கிறது. வீட்டைக் கட்டிக்கொண்டால் அது அழுக்குப்படாமல் இடியாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை வீட்டுக்காரனுக்கு இருக்கிறது. பணம் வைத்திருந்தால் திருடரும், கடன் வாங்குவாரும், வரி தண்டுவாரும் அந்தப் பொருளைக் கொண்டுபோய் விடுவார்களே என்ற அச்சம் இருக்கிறது. பொருளும், உறவினர்களும், நண்பர்களும் நம்மை விட்டுப் போய்விடும் காலம் வருமோ என்ற கவலையினால் அமைதியை இழந்துவிடும் இயல்பு மனிதர்களுக்கு இருக்கிறது. ஒருகால் அவையாவும் தம்மை விட்டுச் செல்லாமல் இருந்தாலும் அந்தச் செல்வர் அவைகளை விட்டுப் போகின்ற காலம் ஒன்று உண்டு. யமன் வந்து உயிரைக் கொண்டுபோகும்

போது ஒருவன் ஈட்டி வைத்திருக்கும் செல்வமோ, உடம்பில் அணிந்திருக்கும் அணிகளோ, அன்பு செய்து பாராட்டும் மனைவியோ, உறவினர்களோ, நண்பர்களோ அவனுடன் செல்ல இயலாது. அவன் தன்னுடையது என்று எண்ணி, பல சமயங் களில் தானே அது என்று ஏமாந்து வாழ்ந்திருந்த உடல்கூடச் செல்லாமல் பிணமாகப் போய்விடும். ஒரு மனிதன் இறந்தால் அவனுடைய உறவினர்கள் மயானத்தோடு நின்றுவிடுகிறார்கள். மனையாட்டி வீட்டோடு நின்றுவிடுகிறாள். அசையாப் பொருள் அசைவதே கிடையாது.

இறந்த பிறகு

செல்வன் ஒருவன் இறந்துவிட்டால் அவன் சம்பாதித்து வைத்திருந்த பொருள்களை எனக்கு உனக்கு என்று சண்டை யிட்டுப் பெற்றுக் கொள்வதற்குப் பலர் காத்திருப்பார்கள். பல குடும்பங்களில் பொருளை ஈட்டி வைத்த செல்வன் இறந்த பிறகு அந்தச் சொத்துக்காகப் பலவகையான சச்சரவுகள் உண்டாகிப் பலகாலம் வழக்குகள் நடந்து வருவதை நாம் பார்க்கிறோம். எத்தனைக்கு எத்தனை செல்வன் சிறப்பாக வாழ்ந்தானோ அத் தனைக்கு அத்தனை அவனுக்குப் பின் அவன் குடும்பம் உலகம் பழிக்கும் படியான நிலைமையை அடைகிறது. ''அத்தனை சம்பாதித்தான் ஐயா! என்ன பிரயோசனம்? அத்தனையும் ஒரு தலைமுறைக்குக்கூட நிற்காமல் போய்விட்டதே'' என்று ஊரார் பேசுவதை நாம் கேட்கிறோம். ஆகவே, மனிதன் ஈட்டுகின்ற பொருள் அத்தனையும் அவன் உயிருள்ள வரைக்கும் பயன்படும் என்று சொல்லலாம். உயிர் பிரிந்த பிறகு அவற்றால் அவனுக்கு எவ்விதப் பயனும் இராது.

இறைவன் ஆணை

மூன்று பேர்கள் இருந்தார்கள். அம்மூவரும் சிறிதுசிறிது பணத்தை முதலாக வைத்துத் தொழில் நடத்தத் தொடங் கினார்கள். ஒருவன் தான் வைத்த முதலை இழந்து விட்டான். ஒருவனுக்கு முதலில் ஒரே நஷ்டமாக வந்தது; ஆனால் விடாமல் தொழிலை நடத்தினமையினால் கடைசியில் இழந்ததையும் சேர்த்துச் சம்பாதித்தான். மூன்றாமவனுக்கு முதல் பெருகிக்

கொண்டே போயிற்று; ஆனால் கடைசியில் எல்லாவற்றையும் இழந்து விட்டான்.

இப்படிப் பல வகையில் தொழில் செய்பவர்களின் நிலை இருப்பதைப் பார்க்கிறோம். பணமும், முயற்சியும் இவர்களிடத்தில் ஒரே மாதிரி இருந்தாலும் முடிவும் ஒரே மாதிரி இருக்கும் என்று சொல்ல முடியாது. நம் சக்தியினாலே இந்த விளைவு நேருவதாக இருந்தால் எல்லோருக்கும் ஒரே மாதிரி பயன் உண்டாகும். அப்படியின்றி அவரவர்களுடைய வினைகளுக்கு ஏற்ப ஒரு சக்தி நம்மையெல்லாம் இயக்குகிறது. அந்தச் சக்தியினாலேயே இப்படியெல்லாம் ஏற்படுகிறது. அதனால் இந்த வேறுபாட்டை உலகத்தில் பார்க்கிறோம். ஆகவே ஒருவனுக்குச் செல்வம் சேருவதும், உறவினர்கள் சேருவதும், நண்பர்கள் சேருவதும் தன்னுடைய சொந்த முயற்சியினால் அன்று என்று எண்ணி, எல்லாம் ஆண்டவனுடைய ஆணை என்கிற நினைப்பு இருந்தால், அவற்றைப் பெறுவதனாலே தனி இன்பமும் இழப்பதனாலே பெருந்துன்பமும் உண்டாகா. எப்படி என்பதைப் பார்க்கலாம்.

பற்று அற்ற நிலை

செய்கின்ற காரியத்தின் விளைவு இறைவனுடைய திருவருளின்படி அமையும் என்ற நினைப்பு இருந்தால் நிச்சயமாக லாபம் வருமென்று எதிர்பார்க்கமாட்டான். ஈட்டுகின்ற பொருளில் பற்று இராது. லாபம் வந்தாலும், 'நம்முடையது அல்ல; இறைவன் திருவருள்' என்று எண்ணி இருப்பான். இதனால் மிகுதியான லாபம் வந்தால் அது காரணமாக அகம்பாவமோ, செருக்கோ உண்டாகாது. நஷ்டம் வந்தாலும், 'ஐயோ போய்விட்டதே' என்ற துக்கம் உண்டாகாது. ஒரு பொருளில் பற்று வைத்தால் அந்தப் பொருள் போகும்போது துன்பம் உண்டாவது இயல்பு; அல்லது அந்தப் பொருளை வேறு ஒருவன் கைப்பற்றினால் அவனிடத்தில் பகை உண்டாகும். பொருளிடத்தில் பற்றுக் குறைவாக இருந்தால் பகையோ துன்பமோ குறைந்து விடும்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"

என்பது திருக்குறள். பற்று இல்லாமல் இருக்கவேண்டுமானால் இறைவனுடைய நினைப்பு வரவேண்டும். முன்னாலே சொன்ன

செல்வர் தம்முடைய முயற்சியினால் பலவகைப் பொருள்களை ஈட்டியும் அவர் இறந்துபட்டார். அவை அவருடன் போகா என்ற உண்மையைத் தெரிந்து கொண்டோம்.

இந்த உண்மையை அவரும் வாழும்போதே தெரிந்து கொண்டிருக்கலாம். இதைத் தெரிந்து கொண்டதனால் அவருக்கு உண்டாவது துக்கந்தான். அதற்கு மேலே மற்றோர் உண்மையைத் தெரிந்து கொண்டிருந்தால் அவருக்குத் துக்கம் வராமல் இருந்திருக்கும். 'பொருள்கள் எல்லாம் நம்மை விட்டுப் போகும்; நாமும் அவற்றைவிட்டுப் போவோம்' என்ற உண்மையைத் தெரிந்து கொள்வதோ? 'பொருள்கள் நம்மிடம் சேருவதும், நழுவுவதும் ஆண்டவன் திருவருளால்தான் நிகழ்வன. ஆகையால் அவற்றில் பற்றுக் கொள்ளாமல் இருக்க வேண்டும்' என்ற உண்மையையும் சேர்த்து நினைக்கக் கற்றுக் கொண்டிருந்தார் என்றால் பொருள் அவரை விட்டுப் போனாலும், அவர் அவற்றை விட்டுப் போகும் நிலை வந்தாலும் துன்பம் உண்டாகாது.

மூன்று வகை

மனிதன் சேர்த்துக் கொள்கிற பொருள்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். உறவினர்கள், நண்பர்கள் ஆகியவர்கள் ஒரு வகை. அசையாப் பொருள் ஒருவகை. அசையும் பொருள் ஒரு வகை. இந்த மூன்று வகைப் பொருள்களையும் நிரம்ப உடையவர்கள் மிகப் பெரியவர்கள். இந்த மூன்றும் ஒருவனிடத்தில் சேருவதும் மிக அருமை. மனிதன் இந்த மூவகையும் தனக்குச் சேரவேண்டுமென்று எண்ணி முயற்சி செய்துகொண்டிருக்கிறான். இவை ஒருவனைச் சாருவதும், தீர்வதும் அவன் முயற்சியின் பாற்பட்டவை அல்ல. இந்த உடம்பு போனவுடன் நிச்சயமாக அவற்றினுடைய தொடர்பு அற்றேவிடும். இந்த உண்மையை அருணகிரியார் சொல்ல வருகிறார்.

உறவினர்களுக்கெல்லாம் முதல் ஆரம்பம் மனைவி. மனைவி வந்த பிறகுதான் நம்முடைய குடும்பம் உண்டாகிறது. தாய் தகப்பனோடு இருக்கும்போது அது நம்முடைய குடும்பம் அன்று; தகப்பனின் குடும்பத்தில் நாம் இருக்கிறோம். நாம் நம் முயற்சியினால் எதையும் செய்வதற்குரிய வகை மனையாட்டியோடு நாம் குடும்பம் நடத்துகிறபோதுதான் அமைகிறது. மனைவி வந்த

பிறகு மக்களும், பேரன் பேத்திகளும் தோன்றிக் குடும்பம் பெருகுகிறது. இவ்வளவுக்கும் மூலகாரணமாக இருக்கிற உறவு மனைவிதான். நம்முடைய வாழ்க்கை மனையாட்டியோடு சேர்ந்து வளரத் தொடங்குகிறது. அதனால் மனைவியை வாழ்க்கைத் துணை என்று வள்ளுவர் கூறுவர்.

அடுத்தப்படியாகச் சொத்தைச் சேர்த்துக் கொள்கிறோம். நிலம், தோட்டம் ஆகிய எல்லாவற்றையும் அசையாப் பொருள்கள் என்று சொல்வார்கள். அவற்றுள்ளே எல்லோருமே காண அமைவது வீடு. அசையாப் பொருளாகிய சொத்தின் பிரதிநிதி வீடு என்று சொல்லலாம்.

வீட்டை ஒருவன் கட்டிக் கொண்ட பிற்பாடு வாழ்க்கைக் குரிய பொருள்கள் பலவற்றைச் சேர்த்துக் கொள்கிறான். அணி களைச் சேர்க்கிறான். கார் முதலியவற்றைச் சேர்க்கிறான். இவை யாவுமே பணத்தினால் உண்டாவன.

ஆகவே உறவினர்களுக்கு எல்லாம் பிரதிநிதியாக மனைவி யையும், அசையாப் பொருள்களுக்குப் பிரதிநிதியாக வீட்டை யும், அசையும் பொருள்களுக்குப் பிரதிநிதியாகப் பணத்தையும் சொல்லலாம். மனையாட்டி, வீடு, பணம் ஆகிய மூன்றும் பலவகை உடைமைகளுக்கு அடையாளங்கள். மனிதன் இந்த மூன்று வகைப் பொருள்களிடத்திலும் ஆசை வைத்து அழிந்து விடுகிறானே என்று அருணகிரியார் இரங்குகிறார். இப்போது பார்க்கப் போகிற கந்தர் அலங்காரப் பாட்டில் இரங்குவது மட்டும் அன்று; கந்தர் அநுபூதியிலும் இந்த மூன்றையும் சொல்கிறார்.

அநுபூதிப் பாட்டு

இந்த மூன்றின் மூலமாக உள்ளத்தைப் பற்றுவது மாயை. மாயை மூன்று வகைப்படும். சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என்பன அவை. பிரகிருதி மாயை பிரபஞ்சத்தில் நாம் வாழும்போது நமக்குத் தெளிவு உண்டாகாமல் கலக்கத்தை உண்டாக்குவது. பிரபஞ்சத்தில் வாழும் மனிதன் இந்த வாழ்க்கை யில் பற்றுக் கொண்டு இறைவன் அருளைப் பெற வேண்டுமென்ற தெளிவு இல்லாமல் மேலும் மேலும் ஆசையைப் பெருக்கிக் கொள்வது, இந்த மாயையினால் நிகழும் விளைவு. ஆசைதான்

பிறப்புக்குக் காரணம். இந்த ஆசை மாயையினால் உண்டாகிறது. ஆசையை மூன்று வகையாகப் பிரிப்பார்கள். பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை என்று. இதையே,

"அகம்மாடை மடந்தையர்"

என்று கந்தர் அநுபூதியில் சொல்கிறார். அகம் – வீடு. இது மண் ணாசைக்குப் பிரதிநிதி. மாடை – பொன். மடந்தையர் – பெண்.

"அகம்மாடை மடந்தையர் என்று அயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே"

என்று கந்தர் அநுபூதியில் வருகிறது. 'மகமாயையைக் களைகின்ற பேராற்றல் படைத்த முருகப் பெருமானது திருவருள் பெற்றும், பிரபஞ்ச மாயையினின்றும் நான் விடுபடவில்லையே' என்று கந்தர் அநுபூதிப் பாடலில் அவர் சொல்கிறார்.

"மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறும் மொழிந்தும் ஒழிந்திலனே
அகம்மாடை மடந்தையர் என்றயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே."

இந்தப் பாட்டில், "அகம் மாடை மடந்தையர்" என்று சொல் வதையே இப்போது பார்க்கப் போகிற கந்தர் அலங்காரப் பாட்டில்,

தார்கொண்ட மாதரும் மாளிகையும் பணச்சாளிகையும்

என்று சொல்கிறார்.

கூர்கொண்ட வேலனைப் போற்றாமல்
ஏற்றங்கொண் டாடுவிர்காள்
போர்கொண்ட காலன் உமைக்கொண்டு
போம்அன்று பூண்பனவும்
தார்கொண்ட மாதரும் மாளிகை
யும்பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவர்ஐ யோ?கெடு வீர்! நும்
அறிவின்மையே!

இறத்தல் உறுதி

உலகத்தில் பலபல பொருள்கள் அநுபவிப்பதற்கு இருந்தும் அவற்றை அநுபவிக்காமல், அநுபவிக்க முடியாமல், ஒருவன்

இறந்துவிடுகிறான். அந்தப் பொருள்கள் அவனோடு போகின் றனவா? இல்லை. நிலையாமை ஒன்றுதான் இந்த உலகத்தில் இருக்கிற உண்மை.

"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் உலகு."

எத்தனையோ மக்கள் பிறந்து பொருள் ஈட்டி வாழ்ந்தாலும் முடிவாக இறந்து போகிறார்கள். பிறந்தவர்கள் எல்லோரும் பொருள் ஈட்டிக் கொள்வது நிச்சயம் அன்று. அவர்கள் எத்தனை காலம் வாழ்வார்கள் என்றும் உறுதி சொல்ல முடியாது. அவர்கள் மணம் செய்து கொள்வார்களா, இல்லையா என்பதை வரையறை யாகச் சொல்ல முடியாது. அப்படிச் செய்துகொண்டாலும் குழந்தைகள் பிறக்கும் என்ற உறுதியும் சொல்ல முடியாது. உறவினர்கள் அவர்களுக்குக் கிடைப்பார்கள் என்ற நிச்சயமும் இல்லை. படிப்பார்களா, உத்தியோகம் செய்வார்களா, பணம் ஈட்டுவார்களா, ஊர் சுற்றுவார்களா, நோய் இல்லாமல் வாழ் வார்களா என்று கேட்டால் இந்தக் கேள்விகளில் எதற்கும் உறுதியாக விடை சொல்ல முடியாது. ஆனால் ஒன்று மாத்திரம் உறுதி. பிறந்தவர்கள் செத்துப் போவார்கள். வாழ்ந்தாலும் வாழா விட்டாலும், பணம் ஈட்டினாலும் ஈட்டாவிட்டாலும், மணம் புரிந்து கொண்டாலும் புரிந்து கொள்ளாவிட்டாலும், குழந்தை குட்டிகளைப் பெற்றாலும் பெறாவிட்டாலும், நோய் உடைய வனாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒருநாள் நிச்சயமாக மனிதன் செத்துப் போகத்தான் வேண்டும்.

நிலையான பொருள்

சாகும்போது அவனுடன் தொடர்ந்து நெருங்கியிருக்கின்ற அனைத்தும், உடம்பையும் உள்ளிட்டு அவனுக்குப் பயன் படாமல் விலகிவிடும். இப்படி உயிர் உலக வாழ்க்கையை விட்டுப் போகும்போது, நழுவிவிடுகிற பொருள்களிலே மனிதன் பற்று வைப்பதனால் பயன் இல்லை. இந்த உடம்பு இறந்து படுவதைக் கண்முன்னால் பார்த்தும், இதனால் கிடைக்கும் இன்பத்தில் ஈடுபட்டிருக்கிறோம். இன்பம் என்பது மனத்தினால் அமைகிற ஒன்றே தவிர வெளிப்பொருள்களினால் உண்டாவ தில்லை. நிரந்தரமாக நமக்கு இன்பம் வரவேண்டுமானால் எப்

போதும் நிலையான பொருளிடத்தில் பற்று வைக்க வேண்டும். மயக்கத்தினால் மனைவியினாலும், மற்றப் பொருள்களினாலும் இன்பம் வரும் என்று நினைத்து அவற்றோடு தொடர்பு ஏற் படுத்திக் கொள்கிறோம். அந்தப் பொருள்கள் நிலைத்தன அல்ல. ஆதலின் அவற்றால் வரும் இன்பமும் எந்தச் சமயத்திலும் நின்று விடும். அப்படியின்றி நாம் பெறுகின்ற இன்பம் நிலைத்திருக்க வேண்டுமானால் என்றைக்கும் நிலையான பொருளோடு தொடர்பு இருக்க வேண்டும். என்றைக்கும் நிலையான பொருள் இறைவன் தான்.

மனிதர்களாகப் பிறந்தவர்கள் இன்பமாக வாழ வேண்டு மானால் அன்பு செய்ய வேண்டும். அன்புடைய வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை. ''மனைவியிடத்தில் அன்பு வைக்கிறேன். குழந்தையிடத்தில் அன்பு வைக்கிறேன். ஐயோ, இவர்கள் கொடுக்கிற துன்பம் பொறுக்க முடியவில்லையே! இவர் களிடத்தில் நான் வைத்த அன்பு பெரும் தொல்லையாகப் போய் விட்டதே!'' என்று வருந்துகிறான். குழந்தை இறந்துவிட்டாலோ, மனைவி இறந்துவிட்டாலோ, அவன் அடைகிற துன்பத்திற்கு எல்லை இல்லை. இப்படி நாம் அன்பு வைக்கிற பொருள்கள் நிலையாத பொருள்களாக இருந்தால் அந்த அன்பினால் பயன் இல்லை. அந்த அன்பைப் பற்று என்று சொல்வர். எல்லாக் காலத்தும் இருக்கிற நிலையான பொருளிடத்தில் வைக்கும் அன்பே உண்மையான அன்பு.

நம்முடைய உடம்பு பல காலம் இராது என்பதைப் புதிதாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதில்லை. நிலையான பொருள் எங்கே இருக்கிறது என்பதைத்தான் ஆராய்ச்சி செய்ய வேண்டும். அந்த ஆராய்ச்சியையும் நாம் புதிதாகச் செய்வதுகூட அவசியம் இல்லை. பல பெரியவர்கள் இந்த வாழ்க்கையில் பல வகையான பரிசோதனைகளைச் செய்து உண்மை இன்னது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். நிலையான இன்பம் இத்தகையது, அது இன்ன இடத்திலிருந்து வருவது, இன்னவாறு பெற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நாம் படித்துக் கொண்டிருக்கிறோம்; பிறர் வாயிலாகக் கேட்கவும் கேட்கிறோம். ஆனாலும் அவற்றில் நமக்கு நம்பிக்கை இருப்பது இல்லை.

ஐயப்படுபவர்

உண்மையான பொருளிடத்தில் அன்பு வைத்தால் உண்மை யான இன்பம் கிடைக்கும் என்பதை நாம் நம்பாமல் இருப் பதற்குக் காரணம் என்ன? நமக்குள்ள ஐயம். ஒருகால் அது பொய்யாக இருந்தால் என்ன செய்வது என்ற ஐயம். இப்படி ஐயப்படுபவர்களுக்கு எந்தக் காலத்திலும் நன்மை கிடையாது. சம்சயாத்மா வினச்யதி என்பது பகவத் கீதை.

கடைக்குப் போய் ஒரு மூட்டை அரிசி வாங்கிக் கொண்டு வருகிறோம். அது நல்ல அரிசியாகத்தான் இருக்கும் என்று நம்பியே வாங்கி வருகிறோம். 'அதில் நஞ்சு கலந்திருந்தால் என்ன செய்வது?' என்று யாரும் நினைப்பதில்லை. நம் வீட்டுக் குழந்தை விளையாடப் போகிறது. 'அதன்மேல் கார் ஏறி இறந்து விட்டால் என் செய்வது?' என்று யாரும் சந்தேகப்படுவதில்லை. ஒரு சிற்றுண்டிச் சாலைக்குப் போகிறோம். அங்கே இருக்கிற சிற்றுண்டி நல்லதா அல்லாததா என்று நாம் உண்டால்தான் தெரியும். அது நல்லது என்று தெரிந்தால்தான் உண்ண முடியும். அந்தச் சமயத்தில் நாம் என்ன செய்கிறோம்? நமக்கு முன்னே அங்கு உண்டு வந்தவரைக் கேட்கிறோம். ''அங்கே சாப்பாடு நன்றாக இருக்குமா?'' என்று கேட்டு, ''மிக நன்றாக இருக்கிறது'' என்று அவர் சொல்ல, அதை நம்பி நாம் போய் உண்கிறோம்.

என்றும் நித்தியமாக இருக்கும் ஒன்றை அறியும் தகுதி நமக்கு இல்லை. அத்தகைய இன்பம் ஒன்று இருந்தால் அதை அடையவேண்டும் என்கிற ஆசை நமக்கு இருக்கிறது. ஆனால் அப்படி ஓர் இன்பம் உண்டென்று அதனை நன்றாக உணர்ந்த ஒருவர் சொன்னால் அவரது வார்த்தைகளில் நமக்கு நம்பிக்கை பிறப்பது இல்லை. உணவை உண்ணப் போகிறவன் முன்பு உண்டவனிடத்தில் கேட்டு அதில் நம்பிக்கை வைத்து உண்ண வேண்டியது எப்படி அவசியமோ, அப்படியே உயிருக்கு இன்பம் அளிக்கின்ற உணவைப் பற்றிப் பெருமக்கள் கூறிய சொல்லில் நாம் நம்பிக்கை வைக்கத்தான் வேண்டும். ஒருவர் இருவர் சொன்னால் சந்தேகம் உண்டாகும். எத்தனையோ காலமாக எத்தனையோ பெருமக்கள் கடவுள் உண்மையென்றும், அவரால் தான் உய்வு பெறவேண்டும் என்றும், அவருடைய திருவருள்'

தான் நிரந்தரமானது என்றும் சொல்லியிருக்கிறார்கள்; வெவ் வேறு மொழிகளில் வெவ்வேறு வகையில் வெவ்வேறு துறை யில் சொல்லியிருக்கிறார்கள். அத்தனை பேர்களும் நம்பக் கூடாத வர்களா? அவர்கள் சொல்வதை நம்பக் கூடாது என்று சொல்வது முறையாகுமா?

கூர்கொண்ட வேலன்

அருணகிரிநாதர் உலக இயலில் ஈடுபட்டுத் தாம் ஈட்டிய பொருளில் மிக்க பற்றுக் கொண்டு வாழ்பவர்களைப் பார்த்து உபதேசம் செய்யப் புகுகிறார்.

கூர்கொண்ட வேலனைப் போற்றாமல் ஏற்றம்
கொண்டாடுவீர்காள்!

மக்கள் பொருளைப் போற்றுகிறார்கள்; மனைவியையும் மக்களையும் போற்றுகிறார்கள். 'நான் நான்' என்று தம்மையே போற்றி ஏற்றம் கொண்டாடுகிறார்கள். தம்முடைய அழகான மனைவியைப் பார்க்குந்தோறும், 'நமக்கு இப்படிக் கிடைத்தாளே' என்று தம்மைத் தாமே கொண்டாடிக் கொள்கிறார்கள். தம்முடைய மாளிகையின் அழகைப் பார்த்தும், பிறருக்குக் காட்டியும் பெரு மிதம் அடைகிறார்கள். இப்படி எதை எதையோ போற்றி ஏற்றம் கொண்டாடிக் கொண்டிருக்கிறார் களோ, அவர்கள் ஒருநாளாவது ஆண்டவனைப் போற்றி இருக்கிறார்களா?

ஆண்டவன் வடிவேல் பெருமான். அவன் கையில் இருக்கிற வேல் கூர்மையானது. அதனை ஞானசக்தி என்று சொல்வார்கள். ஞானம் உயர்ந்த அறிவு. அறிவுக்கும் கூர்மை உண்டு; வேலுககும் கூர்மை உண்டு. வேல் ஞான சக்தி. ஆகையால் அது மிகக் கூர்மையாக இருக்கிறது. இறைவன் அதனைத் தன் படையாக வைத்திருக்கிறான். ஞான சொரூபியாகிய ஆண்டவன், ஞான சக்தியைத் தன் படையாகக் கொண்ட ஆண்டவன், தன்னையும் தன் கை வேலையும் போற்றுகிறவர்களுக்கு அருள் செய்கிறான். ஞானிகள் கூர்கொண்ட வேலனைப் போற்றி ஏற்றம் கொண்டாடு கிறார்கள். மற்றவர்களோ தம் மனையாட்டியிடத்தில் மயக்கம் கொண்டு, தாம் ஈட்டிய பொருளிடத்தில் மயக்கம் கொண்டு அவையே உண்மையென்று கருதி அவற்றைப் பெற்றதனாலே

தமக்கு ஏற்றம் வந்துவிட்டதாகக் கொண்டாடிக் கொண்டிருக் கிறார்கள். 'கூர்கொண்ட வேலனைப் போற்றாமல், அப்படிப் போற்றுகின்ற பக்தி தம்மிடத்தில் இருக்கிறது என்று ஏற்றம் கொண்டாடாமல், உலகத்துப் பொருள்களைப் பெற்றதனாலே தமக்கு ஏற்றம் வந்துவிட்டதாக இவர்கள் கொண்டாடு கிறார்களே!' என்று இரங்குகிறார் அருணகிரியார். ''பூண்பனவும், தார்கொண்ட மாதரும் மாளிகையும் பணச்சாளிகையும் பெற்றிருக் கிறோம் என்று ஏற்றம் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்களே. இவை நிலை என்று எண்ணுகிறீர்களா?'' என்று கேட்கிறார். பூண்பன – அணிகின்ற அணிகலன்கள். தார் – மாலை. தார்கொண்ட மாதர் – தம் மாலையை ஏற்றுத் தமக்குத் துணையான மனைவி. பணச் சாளிகை – பணப்பை. இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு தம் பெருமைக்கு இவை காரணம் என்று எண்ணி, மரணம் என்ற ஒன்று உண்டு என்பதை மறந்து செருக்கி நிற்கின்ற செல்வர்களைப் பார்த்துச் செய்கின்ற உபதேசம் இது.

காலன்

போர்கொண்ட காலன்

என்கிறார். யமன் யாரிடத்திலும் சிநேகமாக வருபவன் அல்ல. யமன் வந்தால், ''நான் உன்னோடு வருகிறேன்'' என்று சொல்கிற மனிதரும் இல்லை. யமன் வந்தான் என்றால் ஒரே கலக்கந்தான்; அழுகைதான். கொடுத்த கடனைத் திருப்பி ஒருவன் கேட்டாலே நமக்குச் சங்கடம் வருகிறது. உயிரைக் கொண்டு போகிற காலன் வந்தால், ''நான் வருகிறேன்'' என்றா சொல்வோம்? அவன் சும்மா வருவது இல்லை. உயிர்க்கூட்டங்களில் எதுவும், ''நான் உலக வாழ்க்கையை விட்டுப் போகவேண்டிய காலம் வந்து விட்டதா? சரி, வருகிறேன்'' என்று அமைதியாக வராது என்பதை அவன் நன்கு உணர்ந்திருக்கிறான். அதனால் போர் செய்வதற் குரிய ஆயுதங்களுடனே வருகிறான். அவன் கையில் கதை இருக்கிறது. சூலம் இருக்கிறது. பாசம் இருக்கிறது. அவனுடைய உருவமே பயங்கரமாக இருக்கிறது. அவன் சமாதானமாக அலங் காரம் பண்ணிக் கொண்டு வருகிறவனே அல்ல. எப்போதும் போர்க் கோலத்தோடு வருகிறான். அதனால்,

போர்கொண்ட காலன்

என்று சொன்னார். அவன் பாசம் ஒருநாள் நிச்சயமாகக் கழுத்தைச் சுற்றி விழுந்துவிடும். "நீங்கள் உம்முடைய உடம்பு, மாளிகை முதலியன எல்லாம் நிலையானவை என்று எண்ணிக் கொண்டு ஏற்றம் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்களே. உமது மாளிகையில் இருந்து மட்டும் அல்ல, உம்முடைய உடம்பிலிருந்தே உம் முடைய உயிரை அவன் பிரித்துக் கொண்டு போவான். அப்படிக் கொண்டு போகும்போது உம்முடைய இத்தனை பொருள்களும் உம்மோடு வருமா?" என்று கேட்கிறார்.

ஆர் கொண்டு போவர்?

நிச்சயமாக வாரா. அவற்றை யார் கொண்டு போவார்கள்? அதுவும் நிச்சயம் இல்லை. பல பேர் தம்முடைய மக்களுக்குச் சொத்தை எழுதி வைப்பார்கள். சிரமப்படாமல் பெற்றது ஆகையால் அவர்கள் அந்தச் சொத்தைச் சூதாட்டத்திலும், வேறு தீய நெறிகளிலும் செலவிட்டுவிடுவார்கள். பலகாலம் உழைத்துச் சம்பாதித்த அந்தச் சொத்து மிகக் குறுகிய காலத்திலே கள்வர்கள், வழக்கு அறிஞர்கள், சூதாடிகள் ஆகியோர்களுக்குரிய சொத்தாகப் போய்விடுகிறது. அதனால்,

ஆர்கொண்டு போவர் ஐயோ?

என்று கேட்கிறார். கட்டி வைத்திருக்கும் வீட்டில் ஒருவன் பல காலம் வாழ்கிறான். ஆனால் அவன் இறந்தவுடன் அவன் பிள்ளை அதை விற்றுவிடுகிறான். அந்த வீட்டின் அமைப்பு அவனுக்குப் பிடிக்கிறது இல்லை; அல்லது வீட்டை விற்க வேண்டிய அவசியம் அவனுக்கு ஏற்படுகிறது. அதைக் கட்டினவன் நல்ல சைவனாக இருப்பான். அவனுக்குப் பின்னால் அதுவே கசாப்புக் கடையாகக்கூட மாறிவிடுகிறது. இந்த மாதிரி சொத்தைச் சேர்த்த வனுடைய இயல்புக்கு விரோதமானவர்களிடம்கூட அவை போய்ச் சேருவதைப் பலவிடங்களில் பார்க்கிறோம். "நான் இறந்த பிற்பாடு இவற்றையெல்லாம் நிச்சயமாக என்னுடைய பிள்ளை அநுபவிப்பான்" என்று யாரும் நம்புவதற்கில்லை. அதற்குக் காரணம் பிள்ளை பொல்லாதவன் என்பது மாத்திரம் அன்று. அந்தப் பிள்ளையே இவனுக்கு முன்னால் இறந்துவிட லாம். நிலையாமையே தன்னுடைய பெருமையாக உள்ள இவ் வுலகத்தில் இன்ன பொருள் இன்னாரிடம் இவ்வளவு காலம்

எளிய செயல்

மனைவியை மணப்பதும், பணத்தை ஈட்டுவதும், மாளிகையைக் கட்டுவதும் ஆகிய காரியங்கள் பெரும் முயற்சியினாலே உண்டா வன. ஆனால் கூர்கொண்ட வேலனைப் போற்றுவதற்குப் பெரிய முயற்சி வேண்டியதில்லை. நமக்கு மனம் இருக்கிறது. வாய் இருக்கிறது. உடம்பு இருக்கிறது. அவற்றைக் கொண்டு எல்லோருமே வேலனைப் போற்றலாம். பணம் இல்லாதவன் மனைவியைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது. தொழில் செய்ய முடியாது. வீடுகட்ட முடியாது. ஆனால் முருகனை நினைக்கலாம். உலகத்திலுள்ள எல்லா மக்களும் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியும் என்று சொல்ல முடியாது. வீடு கட்ட முடியும் என்று சொல்ல முடியாது. உறவினர்களைப் பெறு வார்கள் என்றும் சொல்ல முடியாது. ஆனால் முயன்றால், எல்லோருமே ஆண்டவனுடைய அருளைப் பெறுவதற்கு முயற்சி செய்யலாம். அதற்கு வேண்டிய உறுப்புக்கள் உடம்பும், வாயும், மனமுமே. மனிதர்களுக்கு இவை இருக்கின்றன. எளிதில் இவை நமக்குக் கிடைத்தும் அந்த ஏற்றமான காரியத்தைச் செய்யாமல் மிகவும் முயன்று சம்பாதித்த பொருள்களிடத்தில் ஈடுபட்டு அவற்றையே பெரியனவாகப் போற்றி அவற்றை உடைய நிலை தான் ஏற்றமான நிலை என்று கொண்டாடிக் கொண்டிருப்பது மாயையின் விளைவு. இந்த விளைவினால் வருகின்றது துன்பம். இது மாற வேண்டுமானால் உலகில் வாழும் போதே கூர்கொண்ட வேலனைப் போற்ற வேண்டும். அப்படிப் போற்றுவதுதான் ஏற்றம் என்று கொண்டாட வேண்டும். அப்படிப் போற்றுகிறவர் களையே ஏற்றம் உள்ளவர்களாகக் கொண்டாடி வணங்க வேண்டும்.

இறைவனைப் போற்றுவதற்குரிய கரணங்களை எல்லாம் பெற்றிருந்தும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளாமல் வீணாகப் பொழுது போக்குகின்றவர்களைப் பார்த்து,

கெடுவீர்!

என்று கூறுகிறார். 'வீணாகப் போகிறீர்களே! கேட்டை அடை வீர்கள்' என்பது பொருள். அவர்கள் அறியாமையினால் அப்படிச் செய்கிறார்கள். ஆகையால், ''உங்கள் அறிவின்மை இருந்தவாறு என்னே!'' என்ற பொருளில்

கெடுவீர்! நும் அறிவின்மையே!

என்று சொல்கிறார். ஆண்டவன் நமக்கு அறிவு கொடுத்திருக்கிறான். அதனைக் கூர்மையாக்கிக் கொண்டு அதனாலே உலக இயல்பை நன்கு அறிந்து வாழ வேண்டும். எது நிற்கும், எது நிலையாதது என்கிற உண்மையைத் தெரிந்து, கூர்மையான ஞான வேலைத் திருக்கரத்திற்கொண்ட பெருமானே உண்மையான பொருள் என்று அறிந்து அவனைப் போற்ற வேண்டும். ஆனால் அறிவு படைத்த மனிதன் ஆசையை வளர்த்துக் கொண்டே போவதனால் தன்னிடம் இருக்கிற சிறிது அறிவையும் வரவர மங்க அடித்துவிடுகிறான். மாயை கப்பிக் கொள்கிறது. அறிவின்மையினால், அஞ்ஞானத்தினால் உண்மையை உணர முடியாதவனாகி விடுகிறான். ஆகவே, 'பூண்பணவும் தார் கொண்ட மாதரும் மாளிகையும் பணச்சாளிகையும் நமக்கே உரியன' என்று எண்ணி வாழ்கிறான். ''இப்படி வாழ்கிறீர்களே, என்னே உங்கள் அறிவின்மை!'' என்று இடித்துக் காட்டி இரங்குகிறார் அருணகிரியார்.

கூர்கொண்ட வேலனைப் போற்றாமல்
　　ஏற்றங்கொண் டாடுவிர்காள்,
போர்கொண்ட காலன் உமைக்கொண்டு
　　போம்அன்று பூண்பணவும்
தார்கொண்ட மாதரும் மாளிகை
　　யும்பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவர்ஐ
　　யோ!கெடு வீர்நும் அறிவின்மையே!

(கூர்மையையுடைய வேலாயுதனை வழிபடாமல், நமக்கு ஏற்றம் இருக்கிறதென்று தம்மைத் தாமே பாராட்டிக் கொள்ளும் மக்களே, போர்க்கோலத்தைக் கொண்ட யமன் உம்மை உடலினின்றும் பிரித்துக் கொண்டு போகும் அந்த நாளில், நீங்கள் அணியும் ஆடையாபரணங்களையும், மாலையை அணிந்த மனைவியரையும், மாளிகையையும், பணப்பையையும் ஆர்கொண்டு போவார்கள்? ஐயோ! கெட்டுபபோகிறவர்களே; உம் அறிவின்மை இருந்தவாறு என்னே!

கூர் - கூர்மை. போர் - போர்க்கோலம்; ஆகுபெயர். தார் - மாலை; தார் கொண்ட மாதர் - உம்முடைய மார்பின் மாலையை ஏற்று மணந்து கொண்ட மாதர். சாளிகை - பை. அறிவின்மையே என்பது அறிவின்மை இருந்தவாறு என்னே என்றவாறு.)

இது கந்தர் அலங்காரத்தின் எழுபத்தெட்டாவது பாட்டு.

எளிய செயல்

மனைவியை மணப்பதும், பணத்தை ஈட்டுவதும், மாளிகையை கட்டுவதும் ஆகிய காரியங்கள் பெரும் முயற்சியினாலே உண்டா வன. ஆனால் கூர்கொண்ட வேலனைப் போற்றுவதற்குப் பெரிய முயற்சி வேண்டியதில்லை. நமக்கு மனம் இருக்கிறது. வாய் இருக்கிறது. உடம்பு இருக்கிறது. அவற்றைக் கொண்டு எல்லோருமே வேலனைப் போற்றலாம். பணம் இல்லாதவன் மனைவியைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது. தொழில் செய்ய முடியாது. வீடுகட்ட முடியாது. ஆனால் முருகனை நினைக்கலாம். உலகத்திலுள்ள எல்லா மக்களும் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியும் என்று சொல்ல முடியாது. வீடு கட்ட முடியும் என்று சொல்ல முடியாது. உறவினர்களைப் பெறு வார்கள் என்றும் சொல்ல முடியாது. ஆனால் முயன்றால் எல்லோருமே ஆண்டவனுடைய அருளைப் பெறுவதற்கு முயற்சி செய்யலாம். அதற்கு வேண்டிய உறுப்புக்கள் உடம்பும், வாயும் மனமுமே. மனிதர்களுக்கு இவை இருக்கின்றன. எளிதில் இவை நமக்குக் கிடைத்தும் அந்த ஏற்றமான காரியத்தைச் செய்யாமல் மிகவும் முயன்று சம்பாதித்த பொருள்களிடத்தில் ஈடுபட்டு அவற்றையே பெரியனவாகப் போற்றி அவற்றை உடைய நிலை தான் ஏற்றமான நிலை என்று கொண்டாடிக் கொண்டிருப்பது மாயையின் விளைவு. இந்த விளைவினால் வருகின்றது துன்பம். இது மாற வேண்டுமானால் உலகில் வாழும் போதே கூர்கொண்ட வேலனைப் போற்ற வேண்டும். அப்படிப் போற்றுவதுதான் ஏற்றம் என்று கொண்டாட வேண்டும். அப்படிப் போற்றுகிறவர் களையே ஏற்றம் உள்ளவர்களாகக் கொண்டாடி வணங்க வேண்டும்.

இறைவனைப் போற்றுவதற்குரிய கரணங்களை எல்லாம் பெற்றிருந்தும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளாமல் வீணாகப் பொழுது போக்குகின்றவர்களைப் பார்த்து,

கெடுவீர்!

என்று கூறுகிறார். 'வீணாகப் போகிறீர்களே! கேட்டை அடை வீர்கள்' என்பது பொருள். அவர்கள் அறியாமையினால் அப்படிச் செய்கிறார்கள். ஆகையால், ''உங்கள் அறிவின்மை இருந்தவாறு என்னே!'' என்ற பொருளில்

சிந்தாகுலம் தீர

பொருள், மடந்தையர், வீடு ஆகியவற்றில் பற்று வைத்து வேலாயுதனைப் போற்றாமல் ஏற்றம் கொண்டாடுவதால் பயன் இல்லை என்றும், எல்லாம் காலனுக்கு முன் விட்டு ஒழியும் என்றும் கூறிய உபதேசத்தைச் சென்ற பாட்டில் பார்த்தோம். இந்த மூன்று வகையான ஆசைகளுள்ளும் மக்களின் உள்ளத்தை மிகுதியாகப் பிணித்துப் பல வகையான சிக்கல்களுக்கு ஆளாக்குவது மாதர் மயல், அதனைப் பலபல வகையில் நமக்கு நினைப்பூட்டுவார் அருணகிரிநாதர். இப்போது பார்க்கப் போகும் பாடலில் அதனையே எடுத்துச் சொல்கிறார். மங்கையருடைய பார்வை வலையில் சிக்கித் திண்டாடுகின்ற நிலையை இந்தப் பாட்டில் சொல்ல வருகிறார்.

> பந்தாடும் மங்கையர் செங்கயல் பார்வையில் பட்டு உழலும்
> சிந்தாகுலம்

என்று தொடங்குகிறார். மங்கையரைச் சொல்லும்போது, பந்தாடும் மங்கையர் என்று சிறப்பிக்கிறார்.

பந்தாடும் மங்கையர்

பழைய காலத்தில் சின்னஞ் சிறு வயதில் ஆண்களும், பெண்களும் விளையாடுவார்கள். பெண் குழந்தைகள் தனியாகவும், ஆண் பிள்ளைகள் தனியாகவும் விளையாடுவதுண்டு; சேர்ந்தும் விளையாடுவார்கள். மங்கைப் பருவம் அடைந்த பிறகு பெண்கள் தனியாக விளையாடுவார்கள். அவர்களுக்கென்றே தனி விளையாட்டுகள் இருந்தன. வீட்டில் இருந்தபடியே விளையாடுவார்கள்; வீட்டுக்குப் புறம்பும் சென்று விளையாடுவதுண்டு. மங்கையர் விளையாடுகின்ற ஆடல் வகைகள் அம்மானை ஆடுதல், கழங்கு ஆடுதல், பந்து ஆடுதல் முதலிய பல. முக்கியமாகப் பந்தாடும் விளையாட்டு மங்கையர்களுக்கே உரியது. பந்து

விசிறி எறிந்து ஆடுவதும், கீழே தட்டி ஆடுவதும் அவர்களது விளையாட்டு வகைகளில் சிறந்தவை.

"பந்தாடி அங்கம் நொந்தார் பரிந்து"

என்று திருப்புகழில் அருணகிரிநாதர் பாடுவார். பெருங்கதை என்னும் சிறந்த காவியத்தில் ஓர் அத்தியாயம் முழுவதும் இரண்டு பெண்கள் பந்தடித்து ஆடியதைச் சொல்கிறது.

கம்பராமாயணத்தில் மங்கையர்கள் பந்தாடும் எழிலைப் பலவிடங்களில் கம்பர் சொல்கிறார். ஓரிடத்தை மாத்திரம் இங்கே நினைப்பூட்ட விரும்புகிறேன். கோசல நாட்டில் மங்கையரும் ஆடவர்களும் விளையாடுகிறார்கள். பூம்பொழில் களில் தங்கள் தங்களுக்கேற்றபடி அவர்கள் பொழுதைப் போக்குகிறார்கள். மங்கையர்கள் சந்தன மரம் அடர்ந்த சோலையில் பந்து விளை யாடுகிறார்கள். ஆடவர்களோ நந்தன வனங்களில் கலைகளைப் பயில்கிறார்கள். இயற்கையாகச் சந்தனவனமாகவும், நந்தன வனமாகவும் இருந்த அந்தப் பூம்பொழில்கள் தங்களிடம் வந்து பயிலும் மகளிராலும், ஆடவராலும் மணம் மாறி வேறு பொழில் களைப் போலத் தோன்றுகின்றனவாம். நல்ல மகளிருடைய மேனி சண்பக மணமுடையதாக இருக்கும் என்று சாமுத்திரிகா லட்சணம் கூறுகிறது. மங்கையர்கள் பந்தை அடித்து ஆடுகின்ற இடத்தில் அவர்கள் மேனி மணம் எங்கும் பரவிச் சந்தன மணத்தையே மாற்றி விடுகிறது. அது சண்பக வனமோ என்று ஐயப்படும்படியாக அமைகிறதாம். அதுபோல் ஆடவர்கள் கலை பயில்கின்ற நந்தனவனங்களும் தம்முடைய இயற்கை மாறிக் காண்கின்றன. சிறந்த ஆடவர்களுடைய திருமேனியில் முல்லை மணம் வீசும் என்பது ஒரு மரபு. கலை பயில் கழகங்கள் இருந்த நந்தன வனத்தில் ஆடவர்களுடைய திருமேனியிலுள்ள முல்லை மணம் படர்ந்து நந்தன வனங்களை எல்லாம் முல்லைக் காடு போலத் தோற்றச் செய்கிறது. இந்தக் கருத்தைக் கம்பர் வைத்துப் பாடுகிறார்.

"பந்தினை இளையவர் பயில்இடம், மயில் ஊர்
கந்தனை அனையவர் கலைதெரி கழகம்,
சந்தன வனம்அல, சண்பக வனம்ஆம்;
நந்தன வனம்அல, நறைவிரி புறவம்."

"பந்தினை இளையவர் பயில் இடம், சந்தன வனம் அல சண்பக வனம் ஆம்" என்று கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். இந்தக் காட்சியில் சண்பக மணம் பெற்ற உடம்பையுடைய பெண்கள் சந்தன மரக்காட்டில் பந்து விளையாடுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இந்தக் காலத்தில் பெரும்பாலும் ஆடவர்களே பந்தாடுகிறார் கள். ஆண்களுக்குரிய செயல்களைப் பெண்களும், பெண்களுக் குரிய செயல்களை ஆண்களும் செய்கிற காலம் இது. முறை மாறிச் செய்கின்ற பல செயல்களை இந்தக் காலத்தில் பார்க் கிறோம். இந்த முறை மாற்றத்தால் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு.

பந்தும் கண்ணும்

மங்கையர்கள் பந்தை ஆடும்போது அவர்களுடைய கண்கள் அந்தப் பந்தோடு செல்லும். இயற்கையாகவே பிறழுகின்ற அவர்களுடைய கண்கள் பந்தை விளையாடும் போது பின்னும் அதிகமாகப் பிறழும். தண்ணீரில் மேலும் கீழும் உலாவுகின்ற மீனைப் போலப் புரண்டுகொண்டிருக்கும்.

காளையின் பார்வை

ஒரு பெண் பந்தாடிக் கொண்டிருக்கிறாள். அவளுடைய கயல் மீன் போன்ற கண்கள் புரண்டு கொண்டிருக்கின்றன. அப்போது அங்கே ஒரு கட்டிளங் காளை வருகிறான். அவன் அந்தப் பெண் பந்து ஆடும் கோலத்தைக் கண்டு மகிழ்வதற்கு வாய்ப்பு உண்டு. அந்தப் பந்து மேலும் கீழும் எழும்பி விழு வதையும், அவள் தன்னுடைய கையினால் வீசி அடித்தலையும் கண்டு வியக்கலாம். ஆனால் அவன் பந்தையும் காணவில்லை; அதனை ஆடும் திறத்தையும் காணவில்லை. பந்தை ஆடுகின்ற மங்கையைத்தான் கண்டான். விளையாட்டின் திறத்தைக் கண்டு அநுபவிக்கின்ற இயல்பும், மனமும் அவனுக்கு வந்திருக்கலாம். ஆனால் அவன் உள்ளம் மங்கையின் அழகைக் கண்டு சுவைப்ப தில் ஈடுபடுகிறது.

முள்ளும் ரோஜாவும்

நல்ல பொருள் எங்கேனும் இருந்தால் அதன்பாலுள்ள நன்மையைக் கண்டு நுகர்வது ஒருவகை. அதனிடம் உள்ள தீமையை நுணுக்கமாக ஆராய்ந்து அதைத் தெரிந்து கொள்வது ஒரு வகை. ரோஜாப்பூ ஒரு செடியில் பூத்திருக்கிறது. அந்தச் செடியைப் போய்ப் பார்க்கும்போது மேலேயே மலர்ந்திருக்கும் ரோஜாப் பூவைக் கண்டு இன்புறலாம். அப்படி இல்லாமல் அதில் உள்ள முள்ளைக் கண்டும், அதைத் தொட்டுப் பார்த்தும் துன்பத்தை அடைகிறவர்களும் இருக்கிறார்கள். சின்னஞ்சிறு குழந்தையை ரோஜாப் பூவின் பக்கத்தில் கொண்டு போய் நிறுத்தி னால் அது பூவைத்தான் தொட்டுப் பார்க்கும் என்று சொல்வதற் கில்லை. முள்ளைத் தொட்டுக் கையில் ரத்தக் காயம் உண்டாக்கிக் கொள்ளலாம்.

பார்வையில் வேறுபாடு

அந்தக் குழந்தையின் நிலையில்தான் இந்த ஆடவன் இருக் கிறான். பந்தாடும் திறமையையும், அவளுடைய உடம்பு அசை வினில் அவளுக்கு இருக்கும் சுறுசுறுப்பையும் உணர்ந்து வியக்க வேண்டிய அவன் அந்த மங்கையின் அழகைக் கண்டு வருந்து கிறான். அழகைத் தனித்து நின்று பார்ப்பதும் இல்லை. அந்த அழகைத் தான் அநுபவிக்க வேண்டுமென்று பார்க்கிறான். அவ னுடைய கண்ணில் உள்ள கோளாறு அது.

மங்கைப் பருவம் வந்த ஒரு பெண்ணை அவனுடைய தந்தையும் பார்க்கிறான்; தமையனும் பார்க்கிறான்; வேறு ஓர் ஆடவனும் பார்க்கிறான். தந்தை அவள் மிக்க அழகி என்று கண்டு அவளுக்கு ஏற்ற கணவனைத் தேடவேண்டுமென்று நினைக்கிறான். தமையனும் அப்படியே நினைக்கிறான். அந்த அழகைத் தனித்து நின்று சுவைக்கிற ஆற்றல் அவர்களுக்கு உண்டு. அப்படியின்றி அயலானாகிய காளையோ அந்த அழகைக் கண்டு அதனைத் தான் நுகர எண்ணுகிறான். இது அவன் உள்ளத் தில் உள்ள உணர்ச்சி காரணமாக நிகழ்வது. இதைத்தான் பெண் மயல் என்று சொல்கிறோம். தந்தை, மகள் என்ற பாவத்திலே பார்க்கிறான். தமையன் சகோதர பாவத்துடன் பார்க்கிறான்.

அயலானாகிய ஆடவனோ காமத்துடன் பார்க்கிறான். இந்த மூவரும் அழகை நன்கு சுவைப்பவர்களே. ஆனால் முதலில் சொன்ன இருவருடைய உள்ளமும் தூய்மையாக இருப்பதனால் அவர்கள் அழகைக் காண்பதில் தீங்கு ஒன்றும் நேருவது இல்லை. மூன்றாமவன் பார்ப்பதில் அவனுக்கும் தீங்கு உண்டாகிறது; அவன் ஆற்றல் உடையவனாக இருந்தால் அந்தப் பெண்ணுக்கும் தீங்கு உண்டாகும்.

சுழற்சி

பந்தாடும் மங்கையைப் பார்க்கிற ஆடவன் தன்னை அந்த மங்கையோடு தொடர்புபடுத்தி அவள் அழகைத் தான் நுகர வேண்டுமென்று நினைக்கிறான். மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்து அவளை அடைவதற்கு என்ன வழி என்று யோசனை பண்ணுகிறான். அவளுடைய கண்ணாகிய கயல் அவனைச் சிறைபடுத்துகிறது. பொதுவாகக் கயல் வலையில் படும் என்று சொல்வார்கள். இங்கே கயலே வலை வீச, அந்த வலைக்குள் இந்த ஆடவனுடைய உள்ளம் பட்டுவிடுகிறது. அதனால் அவன் மனத்திலே உழல்கிறான். பலபல வகையான எண்ணங்கள் எண்ணுகிறான். அவன் மனம் சுழலுகிறது. அதன் பயனாக அவளை அடைவதற்கு என்ன வழி என்று யோசித்துப் பற்பல காரியங்களைச் செய்கிறான். சுழன்று வருகிறான். மனத்திலே சுழற்சியும், உடம்பிலே சுழற்சியும் அவள் பார்வையில் பட்டு உருகுவதனாலே ஏற்படுகின்றன.

சிந்தாகுலம்

பந்தாடும் மங்கையைப் பார்த்து நிற்பது ஒருவகை. அவளுடைய கயல் பார்வையைக் காணுவது ஒருவகை. இந்த இரண்டிலும் தவறு இல்லை. ஆனால் அந்தப் பார்வையில் பட்டு உருகுவதே தவறு. உருகுவது உள்ளத்துடன் முதலில் நிற்கும். பின்பு இதுகாரணமாக நெஞ்சிலே உழன்று, உடம்பினாலும் உழலுகின்ற நிலை வந்து விடுகிறது. அப்போது அந்த ஆடவன் மற்றக் காரியங்களை எல்லாம் மறந்து பெண் மயலில் ஆழ்ந்து உலகத்தில் பலவகையான துன்பங்களை அநுபவிக்கிறான். அப்போதும் தான் அடையவேண்டிய ஒரு பொருளை அடைய

வில்லையே என்ற கவலையோடு இருக்கிறான். அவன் சிந்தா குலம் உடையவனாக, பித்துப் பிடித்தவனாகத் திரிகிறான்.

இத்தகைய சிந்தாகுலத்தைத் தீர்ப்பதற்கு வழி என்ன? ஆண்ட வனுடைய திருவருள் இருந்தாலன்றி இந்தக் கலக்கத் தினின்றும் தெளிவு பிறக்காது. ஆதலின் அருணகிரியார் இத்தகைய சிந்தா குலத்தை நீ தீர்த்து அருள வேண்டுமென்று முருகப் பெரு மானிடம் விண்ணப்பித்துக் கொள்கிறார்.

பந்தாடும் மங்கையர் செங்கயல் பார்வையில் பட்டு உழலும்
சிந்தாகுலந்தனைத் தீர்த்து அருள்வாய்.

விளையாட்டும் வினையும்

மகளிர் பந்து ஆடும்போது அதை விளையாட்டாகக் கருதி ஆடுகிறார்கள். அதனைப் பார்க்கிறவர்களும் விளையாட்டாகக் கருதிப் பார்க்க வகை உண்டு. ஆனால் உள்ளத்தில் மயல் உணர்ச்சி உள்ளவனோ அதை விளையாட்டாகப் பாராமல் வினை யாட்டாகப் பார்க்கிறான். அந்த விளையாட்டு அவனிடத்தில் தீமையை உண்டாக்குகிறது. ''விளையாட்டே வினையாகும்'' என்ற பழமொழி உண்டல்லவா? அது அவன் திறத்தில் பலித்து விடுகிறது.

உலகத்தில் நமக்கு உண்டாகின்ற அநுபவங்கள் எல்லாம் முற்பிறவியில் செய்த வினைகளால் நிகழ்வன. அந்த வினைகள் அடியாகத்தான் நமக்கு இன்ப துன்பங்கள் உண்டாகின்றன. இந்த விளையாட்டில் ஈடுபட்டு மனம் உருகிப் பலவகையான அல்லல் களில் துன்புற்று வருகிறோம். ஆனால் இறைவனுடைய திரு வருளை எண்ணி வாழுகின்ற மக்களுக்கு இந்த வினையாட்டும் ஒரு விளையாட்டாகத் தோற்றும். இறைவனுடைய அருள் ஆணை என்னும் கயிற்றில் ஊசலைப் போல நாம் ஆடிக் கொண்டிருக் கிறோம். 'நாம் நினைக்கிறோம். நாம் துன்புறுகிறோம். நாம் மகிழ்ச்சி அடைகிறோம்' என்று நம்மோடு தொடர்புபடுத்திப் பார்த்தால், 'ஐயோ விதியே!' என்று இரங்கத் தோன்றும்.

''யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டுவானாகி
நின்றாயை''

என்பார் மணிவாசகர். கூத்தாட்டுவான் இறைவன். அவன் திருவருள் ஆணையால் இந்த ஆட்டங்கள் எல்லாம் நிகழ்கின்றன

என்று பிரபஞ்சத்தில் உள்ள எல்லா நிகழ்ச்சிகளையும் மூலப் பொருளாகிய இறைவனது விளையாட்டாகக் காணுகின்றவனுக்கு, விளையாட்டை நினைக்கின்றபோது உண்டாகும் இன்பம் உண் டாகும். ஞானிகள் எல்லாவற்றையும் அப்படிப் பார்க்கிறார்கள். இந்த வகையில் தம்முடைய அநுபவங்களை வேறே நிறுத்திப் பார்த்தலைச் சாட்சி மாத்திரமாக நின்று பார்ப்பது என்று சொல்வார்கள்.

தாயுமானவர் இந்தத் திருவிளையாடலைப் பற்றிப் பேசு கின்றார். அறுவகையான சமயங்களில் உள்ளவர்கள், ''என் கடவுள் பெரியவன், என் கடவுள் பெரியவன்'' என்று கூத்தாடுகிறார்கள். இறைவனைப் பற்றிப் பேசும்போதே இந்த வேடிக்கை நிகழ் கிறது என்றால் மற்றத் திறங்களைப் பற்றிச் சொல்ல வேண்டிய தில்லை. எங்கே பார்த்தாலும் கலகந்தான்; போட்டிதான். இவற் றுக்கு எல்லாம் மூலகாரணமாக இருப்பது எது? இறைவனுடைய அருள் ஆணை. அது செய்கிற விளையாட்டுத்தான் இத்தனையும். அவன் எல்லாவற்றுக்கும் பின்னாலே பொம்மலாட்டக்காரன் திரைக்குப் பின்னால் மறைந்து நின்று எல்லாவற்றையும் ஆட்டு வது போல நின்று ஆட்டுகிறான். இடையில் உள்ள திரைதான் மாயை என்பது. மாயை மறைப்பதனால் நாம் எல்லாவற்றையும் வினையாட்டாகக் காண்கிறோம். விளையாடலிலேகூட வினை யாட்டைப் பார்க்கிறோம். இதனைத் தாயுமானவர் சொல்கிறார்.

''குன்றாத மூவுருவாய் அருவாய் ஞானக்
கொழுந்தாகி அறுசமயக் கூத்து மாடி
நின்றாயே; மாயையெனுந் திரையை நீக்கி
நின்னையார் அறியவல்லார்? நினைப்போர் நெஞ்சம்
மன்றாக இன்பக்கூத் தாட வல்ல
மணியேஎன் கண்ணேமா மருந்தே நால்வர்க்
கன்றாலின் கீழிருந்து மோன ஞானம்
அமைத்தசின்முத் திரைக்கடலே அமர ரேறே.''

திருடன் பார்வை

ஒரு குழந்தை விளையாடுகின்றது. காலில் தண்டையும், வெண்டையமும் அணிந்திருக்கிறது. கையில் காப்புப் புனைந்து ிருக்கிறது- அதன் கழுத்தில் சங்கிலி மின்னுகிறது. தலையில்

சுட்டி அசைகிறது. இளம் குழந்தை அது; ஆடையின்றி விளை யாடுகின்றது.

அதைப் பெற்ற தாய் அதைப் பார்க்கிறாள். அதன் ஒவ்வோர் அசைவிலும் அவள் இன்பம் காண்கிறாள். இறைவன் திருவருளி னால் இந்தக் குழந்தைச் செல்வம் தனக்குக் கிடைத்ததை எண்ணி எண்ணி ஆனந்தம் அடைகிறாள். பெற்ற தாய் மாத்திரம் அன்று. நல்லவர் யாராக இருந்தாலும் அந்தக் குழந்தையைப் பார்க்கும் போது அதன் அழகிலும் அது விளையாடுகிற விளையாட்டிலும் உள்ளம் ஈடுபட்டு ஆனந்தத்தை அடைவார்கள்.

ஆனால் அங்கே ஒரு திருடன் வருகிறான். அவனும் அந்தக் குழந்தையின் அழகைப் பார்க்கலாம். மற்றவர்களுடைய கண் போலத்தான் அவனுக்கும் கண் இருக்கிறது. ஆனால் அவன் அந்தக் குழந்தையின் அழகைப் பார்ப்பது இல்லை. அது அணிந் திருக்கிற நகைகளைப் பார்க்கிறான். அதனிடத்தில் உள்ள நகை களைத் தன்னுடையவை ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று எண்ணு கிறான். விளையாட்டைக் காணுகின்ற கண் அவனுக்கு இருப்ப தில்லை. அவன் அங்கே ஒரு வினையாட்டை நிகழ்த்துவதில் ஈடுபடுகிறான். அவன் உள்ளத்தில் உள்ள பொன்னாசை குழந்தை யின் அழகை, விளையாட்டைத் திரை போட்டு மறைத்துத் தீமையான எண்ணத்தை எழுப்புகிறது.

அப்படியேதான் பந்தாடும் மங்கையரைக் கண்ட ஆடவன் தன்னுடைய உள்ளத்தில் அவளுடைய இன்பத்தை நுகர வேண்டு மென்ற எண்ணத்தை வளர்க்கிறான். திருடன் உள்ளத்தில் பொன் னாசை இருக்கிறது. ஆடவன் உள்ளத்தில் பெண்ணாசை இருக் கிறது. இரண்டுபேரும் குழந்தையின் விளையாட்டையோ, குமரி யின் விளையாட்டையோ காணாமல் அவர்கள் மூலமாகத் தாங்கள் பெறுகின்ற லாபத்தை எண்ணுகிறார்கள். அழகிய ஆட்டுக் குட்டியைப் புலி பார்க்கும்போது தன்னுடைய இரையாகப் பார்க்கிறது. அத்தகைய புலிப் பார்வைதான் பந்தாடும் மங்கையர் செங்கயல் பார்வை பட்டு உருகும் ஆடவர்களுக்கு இருக்கிறது.

மாற வழி

இந்தப் பார்வை மாறவேண்டுமானால், "உலகம் முழுவதும் இறைவனது விளையாட்டுக் கூடம்; உலகத்தில் உள்ளவைகள்

எல்லாம் இறைவன் உருவம்'' என்று பக்தியினால் எண்ணுகின்ற எண்ணம் வரவேண்டும். அந்தப் பக்தி இறைவன் திருவருளால் நம் உள்ளத்தில் நிலை கொள்ள வேண்டும். இதனை எண்ணி அருணகிரியார் பந்தாடுகின்ற மங்கையருடைய கயல் பார்வையில் பட்டு நான் ஆழாமல் நீ அருள் செய்ய வேண்டுமென்று வேண்டு கிறார்.

> பந்தாடும் மங்கையர் செங்கயல் பார்வையில் பட்டு உழலும்
> சிந்தாகுலந்தனைத் தீர்த்து அருள்வாய்.

செங்கயல் பார்வை என்று சொன்னது, கயல் சிவந்தது என்பதனால் அல்ல. மங்கையர் கண் சிவந்திருக்கிறது.

கண்ணை மறைக்கும் படலம்

மாதர் மயல் மாயையினால் உண்டாவது. உலகத்து நிகழ்ச்சி களை விளையாட்டாகக் காணாமல் வினையாட்டாகக் காணு வதற்குக் காரணம் அந்த மாயையென்னும் திரைதான். அது கிழிபடவேண்டும். அப்போது உண்மை புலனாகும். மாயைத் திரை கிழிந்தால் அழகை நன்றாக நுகரலாம்; தனி நின்று பார்த்து இறைவன் படைப்பு என்று கண்டு இன்புறலாம். கவிஞனும் பக்தனும் ஞானியும் இயற்கையின் எழிலைக் கண்டு பற்றற்ற நிலையில் நின்று அநுபவிப்பார்கள். மலரைச் செடியிற் கண்டு அதன் அழகை நுகர்வார்கள்; அதனைப் பறித்து மோந்து பார்க்க மாட்டார்கள். அதனதன் போக்கிலே தாம் நின்று அதன் அழகை யும் அதன்மூலம் இறைவன் அருளையும் காணும் கண் படைத் தவர்கள் அவர்கள்.

அப்படிக் காணும் பார்வை நமக்கு இல்லை. நம் கண்ணை ஒரு படலம் மறைக்கிறது. அதற்குத்தான் மாயை என்று பெயர். மாயை என்னும் திரையைக் கிழித்தால் பின்னே கூத்தாடும் பொம்ம லாட்டக்காரனைக் காணலாம். மாயை யென்னும் படலத்தை நம் கண்ணிலிருந்து கிழித்தால் உண்மையைக் காணலாம்.

படலம் கிழிக்கும் வேல்

அதைக் கிழிப்பதற்குரிய கருவி முருகன் திருக்கரத்தில் இருக்கிறது. அவன் செய்ய வேல் முருகன். அவனை நோக்கி முறையிடுகிறார்.

செய்ய வேல் முருகா!

மாயைப் படலம் கண்ணில் இல்லை. கண்ணில் பார்வையை மறைக்கும் படலம் படர்வது உண்டு. அதை மருத்துவர்கள் உரித்துவிடுவார்கள். அத்தகைய படலம் அன்று இது. கண்ணிலே பார்வை வேறுபடுவதற்குக் கருத்திலே உள்ள மயல்தான் காரணம். ஆதலின் கண்ணில் உள்ள படலத்துக்குக் கருத்துப் படலமே காரணம். கருத்திலே மயல் இல்லாமல் வாற்சல்யம் உள்ள தந்தை பார்க்கும் பார்வை வேறாக இருக்கிறதல்லவா?

ஆதலின் கருத்திலே உள்ள மயல் திரையைத்தான் கிழிக்க வேண்டும். மங்கையர் பார்வையில் படுவதற்குக் காரணமாக இருப்பது கருத்திலே உள்ள மயல். பட்டு உருகி ஆகுலம் கொள் வதும் அந்தக் கருத்துத்தான். மயலாகிய விதையும் கவலையாகிய மரமும் சிந்தையில்தான் உள்ளன. அங்கே புகுந்து மயலையும் கவலையையும் களையும் கருவி ஒன்று இருந்தால்தான் இந்த வினையாட்டுப் போகும்.

முருகனுடைய திருக்கரத்தில் உள்ள வேல் அத்தகையது. அது புறக் கண்ணாற் கண்டாருக்குக் கதிரும் செம்மையும் உடைய வேலாகத் தோன்றும். அகக் கண்ணாற் காண்பாருக்குச் செய்ய ஞானமாகத் தோன்றும். சூரனோடு செய்த போரில் அசுரர் கூட்டத்தைக் குலைத்த வேல் அது. உள்ளமாகிய போர்க்களத்தில் நற்குணங்களாகிய தேவர்களுக்கும் தீய குணங்களாகிய அசுரர் களுக்குமிடையே நாள்தோறும் நிகழும் நுட்பமான போரில் தன்னை நாடுவானுக்குத் துணையாகப் புக்குத் தீய குணங்களைச் சாடும் வேல் அது. அஞ்ஞான இருட்டைப் போக்கி ஞான ஒளியை ஏற்றி வைக்கும் செஞ்சுடர் வேல் அது.

சிந்தாகுலத்தைப் போக்குவதற்குத் தக்க படையாக இருப்பது வேல். இருள் அடர்ந்த கரிய அஞ்ஞானச் செறிவைச் செய்ய சுடர்வேல் போக்கி விடும். அதனைக் கரத்தில் ஏந்திய அழக னாகிய முருகன் அருள் இருந்தால் இந்த நிகழ்ச்சி உண்டாகும். அதனால்,

சிந்தாகுலந்தனைத் தீர்த்தருள்வாய்,
செய்ய வேல் முருகா!

என்றார் அருணை முனிவர்.

''நீ அஞ்ஞானத்தைப் போக்கி அதன் விளைவாகிய மய லிருட்டை மாய்த்து அதனால் வரும் சிந்தாகுலத்தை அழிக்கும் ஆற்றல் உள்ளவன் என்பதை உன்னைக் கண்டவுடனே உணர்ந்து கொள்ளலாம். எக்காலத்தும் செய்ய வேலை ஏந்தி நிற்கும் நின்னுடைய கோலம் இந்தத் தைரியத்தை எனக்கு ஊட்டுகிறது. மடந்தையர் பார்வை வலையிலே பட்ட என்னை நீ காப்பாற்ற வேண்டும். உன் திருக்கைவேலால் அந்த வலையை எளிதில் அறுத்து எறிந்து விடலாமே!'' என்று எண்ணும்படியாக இந்தத் தொடர்கள் அமைந்திருக்கின்றன.

பந்தாடும் மங்கையர் செங்கயல்
பார்வையில் பட்டு உருகும்
சிந்தாகுலந்தனைத் தீர்த்தருளாய்,
செய்ய வேல் முருகா!

விண்ணப்பம் போடும் இடம்

முருகனை விளித்துச் சொல்லத் தொடங்கியவுடனே அவ னுடைய பெருமைகளெல்லாம் நினைவுக்கு வருகின்றன. ''வேலைக் கொண்டு சூரனை மாய்த்த அப்பெருமான் எங்கே இருக்கிறானோ? இந்த விண்ணப்பத்தை அவனுக்கு அனுப்புவது எப்படி?'' என்று அருணகிரிநாதர் மயங்கவில்லை.

நாம் எழுதும் கடிதங்களைப் போடுவதற்கு அங்கங்கே தபால் பெட்டிகளை வைத்திருக்கிறார்கள். தபால் நிலையங்கள் சிறியனவும் பெரியனவுமாக அங்கங்கே இருக்கின்றன. சிறிய ஊராக இருந்தாலும் நம்முடைய வீட்டிலிருந்து சிறிது தூரம் நடந்தால் அடையும் இடத்தில் தபால் நிலையங்களை அமைத் திருக்கிறார்கள். கடிதம் எழுதுபவர்களுக்கு அவை பயன்படும். எழுதாதவர்களுக்கு அவர்கள் வீட்டு வாயிலிலே தபால் பெட்டி தொங்கினாலும் பயன் இல்லை.

முருகன் கந்தலோகத்தில் தன் இராசதானியை அமைத்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு அனுப்பும் விண்ணப்பத்தை அங்கே போய்த்தான் போட வேண்டும் என்பது இல்லை. அவன் எந்த லோகத்திலும் இருக்கிறான். எந்த இடத்திலும் இருக்கிறான். வெளிப்படையாக, யாவரும் தெரிந்து கொள்ளும்படியாக நம் விண்ணப்பத்தைப் போடும் இடங்கள் பல இந்த நாட்டில் இருக்

கின்றன. அவற்றிலும் சிறியது, பெரியது என்ற வேறுபாடு உண்டு. பல காலமாக மிகப் பெரியவர்கள் விண்ணப்பம் போட்ட இடங்கள் பெரிய நிலையங்கள். அத்தகைய சிறந்த நிலையங் களில் ஒன்று திருத்தணிகை.

திருத்தணிகை

செய்ய வேல் முருகனை நோக்கி விண்ணப்பம் செய்யும் அருணகிரிநாதர் தம்முடைய முறையீட்டைத் திருத்தணிகை என்னும் அருள் நிலையத்தில் போடுகிறார். அந்த நிலையம் எப்படி இருக்கிறது? அது ஒரு குன்று. பல மரங்கள் அடர்ந்த பொழில் களை உடையது. அங்கே முருகன் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறான்.

கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக்
    குன்றில் நிற்கும்
கந்தா!

முருகன் நிற்கும் குன்றத்தைச் சூழக் கடம்ப மரங்கள் வானுற ஓங்கி வளர்ந்திருக்கின்றன. அவற்றில் கொத்துக் கொத்தாக மலர்கள் மலர்ந்து மணக்கின்றன.

கடம்ப மலர்

முருகனுக்குரிய மலர்கள் பல. அவன் போருக்குச் செல்லும் போது காந்தளை அணிந்து கொள்வான். போர்க்களத்தில் அவனை அடையாளங் காட்டும் கண்ணி அது. வெட்சிப் பூவும் அவனுக்கு விருப்பமானதுதான்; ஆனால் அவன் எப்போதும் விரும்புவது கடம்ப மலர். கடம்ப மலர்மாலையை அவன் தன் திருமார்பில் அணிந்திருக்கிறான். அதனால் சங்க நூல்களில், ''காரலர் கடம் பன்,'' ''கார்க்கடம்பந் தாரெங்கடவுள்'' என்று முருகனைப் பழம் புலவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கடம்பன் என்று சொன்னாலே போதும்; முருகன் என்று தெரிந்து கொள்ளலாம்.

கடம்ப மாலையைப் போகத்துக்குரிய தார் என்று, திருமுரு காற்றுப்படை உரையில் நச்சினார்க்கினியர் எழுதியிருக்கிறார். முருகன் தன் தேவியரோடு இருந்து உலகமெல்லாம் இன்புறும் படி அருளுகிறான். தான் போகியைப் போல மனைவியுடன் இருந்து உலகத்து மக்கள் கணவன் மனைவியராக இல்லற

இன்பம் நடத்தும்படி செய்கிறான். அந்த நிலையில் அவன் அணிவது கடம்ப மலர்மாலை.

வள்ளியை மணந்த இடம்

திருத்தணிகையில் முருகன் வள்ளி யெம்பெருமாட்டியை மணந்து கொண்டான். தன்னை எதிர்த்து வந்த வேடர்களைச் சினத்தினால் பொருது, வள்ளி நாயகியின் வேண்டுகோளால் கோபம் தணிந்து, திருத்தணிகைக் குகையில் வந்து தங்கி வள்ளி யோடு இன்புற்றான். அவன் கோபம் தணிந்த இடம் ஆதலால் தணிகை என்ற பெயர் வந்தது. அதுவே தணி என்றும் வழங்கும். கோபம் தணிந்து, போக மூர்த்தியாக முருகன் எழுந்தருளியிருக்கும் இடம் இது.

ஆதலின் அவன் அணிவதற்குரிய மாலைக்கு வேண்டிய கடம்ப மலர்கள் இங்கே நிறையக் கிடைக்கின்றன. அருண கிரியார் சென்று தரிசித்த காலத்தில் இங்கே நிறையக் கடம்ப மரங்களை வளர்த்து வந்தார்கள் போலும். நாள்தோறும் முருகனுக்குப் பெரிய பெரிய கடம்ப·மாலைகளை அணிய ஏற்ற வகையில் எங்கே பார்த்தாலும் கடம்ப மரங்கள் நிற்கின்றன. மரம் இருந்தால் போதுமா? அவ்வளவும் கொத்துக் கொத்தாக மலர்களைத் தாங்கி அழகுடன் விளங்குகின்றன. வள்ளி மணவாளனது கல்யாண மண்டபம் திருத்தணிகைக் குன்று; அதனைச் சூழ அலங்காரம் செய்த பசுந்தூண்கள் அந்தக் கடம்ப மரங்கள் என்று சொல்லும்படியாக அவை நிற்கின்றன.

கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிகைக்
குன்றில் நிற்கும், கந்தா!

கொந்து – பூங்கொத்து.

கந்தன் என்பதன் பொருளைப் பலமுறை நாம் சிந்தித்து வந்திருக்கிறோம். இணைக்கப்பட்டவன், மூலமாக இருப்பவன் என்று பல பொருள் அத்திருநாமத்துக்கு உண்டு.

இளங்குமரன்

முருகன் இளங்குமரனாக இங்கே இருக்கிறானாம். அவன் என்றும் இளைய குமரன்தான். ஆயினும் வள்ளி நாயகியை வசப்

படுத்துவதற்காக முதிய கிழவன் வேடம் தாங்கி அவளுக்குப் பல போக்குக் காட்டினான். வேடனாகவும், வேங்கை மரமாகவும், முதியவனாகவும் கோலம் காட்டினான். அவை அனைத்தும் அவன் வேண்டுமென்று புனைந்தவை. ஒரு நாடகக் கலைஞன் பலவகையான கோலங்களைக் கதைக்கு ஏற்பப் புனைந்து கொள் கிறான். ஆனால் இயல்பாக வாழும் வீட்டில் அந்த வேடத்தைக் களைந்து விட்டுத் தனக்கு இயற்கையான உருவத்துடன் விளங்கு வான். முருகன் வள்ளி நாயகியைச் சந்தித்து வள்ளி மலையில் இருக்கும் அளவும் வெவ்வேறு கோலம் காட்டினான். அவன் அங்கே செய்த செயல்கள் யாவும் நாடகமே. வள்ளி நாயகியை மணந்த பிறகு தன் இயல்பான கோலத்தோடு இங்கே எழுந் தருளியிருக்கிறான்; இளங்குமரனாக இளங்குமரி வள்ளியை மணந்து விளங்குகிறான்.

கந்தா! இளங்குமரா!

குமாரன் என்ற பெயரே தமிழில் குமரன் என்று வந்தது. மாரனும் குலையும் வண்ணம் செய்யும் பேரழகன் முருகன்; ஆதலின் அத்திருநாமம் அவனுக்கு அமைந்தது. முருகன் என்ற திருநாமத்துக்கு அமைந்த பல பொருள்களில் இளமையுடையவன், அழகுடையவன் என்பன சிறந்தவை. இளமையும் அழகும் ஒரு சேர இருந்தால் காண்பார் உள்ளம் கவர்ச்சி பெறும். முருகன்,

"என்றும் இளையாய், அழகியாய்"

என்று பாராட்டப் பெறுபவன். இந்த இரண்டு இலக்கணங்களும் ஒருங்கே உடையவன் என்பதை எண்ணியே,

இளங்குமரா!

என்று விளித்தார்.

முருகன் காதல் விளையாட்டிலே சிறந்து போகமூர்த்தியாகிப் போகத்துக்குரிய மாலையாகிய கடம்பை அணிந்து கொண்டு திருத்தணிகையில் நிற்பதை மாத்திரம்கண்டு, "இவன் காதல் வாழ்க்கையை மட்டும் உடையவன்" என்று கருதக் கூடாது. அவன் உலகில் வாழும் உயிர்கள் உய்ய வேண்டும் என்ற கருணை யால் இங்கே உள்ள பல தலங்களில் அருள் விளையாடலைச் செய்தான். நிலவுலகத்திலே பிறந்த வள்ளியம் பெருமாட்டியைத் திருமணம் செய்து கொண்டான்.

முருகன் ஆற்றல்

அவன் ஆற்றலிற் பெரியவன்; வீரத்திற் சிறந்தவன். அவனுடைய வீரச் சிறப்பை அறிந்து கொள்ள வேண்டுமானால் அமராவதிப் பட்டணத்துக்குப் போய்க் கேட்க வேண்டும். தேவர்கள் வாழும் உலகத்தில் இந்திரன் எல்லா வகைப் போகங்களும் பெற்று வாழும் இராசதானி அமராவதி. அங்கே சென்று, ''இந்த ஊருக்குச் சொந்தக்காரன் யார்?'' என்று கேட்டால், ''இந்திரன்'' என்று சொல்வார்கள். ''அவன்தான் இந்த நகரத்தைப் பாதுகாக்கிறானோ?'' என்று கேட்டுப் பாருங்கள். உண்மை வெளிவரும். ''அமராவதியில் கிடைக்கும் இன்பங்களை நுகர்ந்து வாழ்பவர்கள் தேவர்களாகிய நாங்கள். எங்களுக்குத் தலைவன், மன்னன் இந்திரன். எந்தவிதமான இடுக்கணும் இல்லாதவரையில் இது இந்திரனுக்குரிய பட்டணந்தான். ஆனால் இதைப் பாதுகாக்கும் திறமை எங்களுக்கு இல்லை. முருகன்தான் அமராவதியைக் காக்கிறான்; தேவலோகத்துக்குத் துன்பம் வராமல் பாதுகாக்கிறான்; எங்கள் வாழ்வு குலையாமல் காவல் புரிகிறான். இந்திரன் அமராவதிக்கு அரசன்; அரசனே காவலனாக இருப்பது உலகத்து வழக்கு. இங்கே அப்படியில்லை. அமராவதியில் இன்பம் பெற்று வாழும் மன்னன் இந்திரன்; இதற்கு இடையூறு வராமல் காப்பாற்றும் காவலன் முருகன்'' என்று தேவர்கள் சொல்வார்கள்.

ஒரு சமயம் இந்த உண்மையை அவர்கள் மறந்திருந்தார்கள். இறைவன் அவர்களுக்கு அவர்களுடைய ஆற்றலின் எல்லையைப் புலப்படுத்தி அகந்தையைப் போக்க எண்ணிச் சூரனைப் படைத்து விட்டான். அவன் அமரலோகத்தையே சூறையிட்டான். அவனை எதிர்த்துப் போரிட மாட்டாமல் தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டுக் கொண்டார்கள். முருகன் திருவவதாரம் செய்து சூரனை அழித்தான்.

சூரனோடு போர் செய்யும்போது ஒரு பக்கம் தேவர்களும் மற்றொரு பக்கம் அசுரர்களும் நின்று பொருதனர். அசுரர்களுக்குத் தலைவனாகச் சூரபன்மன் நின்றான். தேவர்களுக்குத் தலைவனாக இந்திரன் இருக்க வேண்டும் அல்லவா? அப்படி இல்லை. முருகனே தேவர் படைக்குத் தலைவனாக, தேவ சேனாதிபதியாக நின்று பொருதான்.

அரசனும் சேனாபதியும்

மற்ற இடங்களில் அரசன், சேனாபதி என்னும் இருவருள்ளும் அரசன் பதவியாற் பெரியவன்; சேனாபதி அவனிடம் ஊழியம் புரிபவனாக இருப்பவன். இங்கே அதற்கு மாறான நிலை. பெயருக்கு அரசனாக இருந்தான் இந்திரன். தேவசேனாபதியாகிய முருகனே உண்மையில் தனிப்பெருந் தலைவனாக நின்று போரை நடத்தினான். போர் நிகழ்ந்த போது ஒரு சமயம் இந்திரனே மயிலாகச் சென்று முருகனுக்கு வாகனமாகி அவனைத் தாங்கி னான். அரசன் உயர்ந்தவனாக இருந்தால் இப்படிச் செய்வானா?

போர் முடிந்து தேவர்களுக்கு வெற்றி கிடைத்தது. பிறகு, ''என் வேலை தீர்ந்துவிட்டது; இந்த உத்தியோகம் இனிப் போதும்'' என்று முருகன் சொல்லவில்லை. அவன் அப்படிச் சொன்னாலும் தேவர்கள் அவனை விடுவார்களா? ''சுவாமி! போர் முடிந்தாலும் எங்கள் அச்சம் நீங்கவில்லை. போகம் உள்ள இடத்திற்கு எப்போதும் ஆபத்துக் காத்துக் கொண்டு நிற்கும். ஆதலால் இந்தப் போரோடு எங்கள் சங்கடம் போயிற்றென்று நாங்கள் நினைக்க மாட்டோம். நீ இனி எக்காலத்தும் எங்களுக்குக் காவலனாக இருந்து காப்பாற்ற வேண்டும். உன்னையல்லாமல் எங்களுக்கு வேறு துணை இல்லை. போர் ஒழிந்தாலும் நீ எங்களுக்கு அரணாக இருக்கும் உத்தியோகம் உன்னை விட்டு நீங்காது'' என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

ஆகவே, முருகன் எப்போதும் தேவர்களுக்கு வரும் இடையூறு களைக் காப்பாற்றும் தேவசேனாபதியாகவே இருக்கிறான்.

''வானோர் வணங்குவில் தானைத் தலைவ''

என்பது திருமுருகாற்றுப்படை.

அவன்தான் உண்மையில் தேவ லோகத்துக்கே அதிபதி. அமராவதியைப் பாதுகாக்கும் ஆற்றலுள்ளவன் அவன்தான்.

அமராவதி காவலன்

நமக்கு அணிமையில் திருத்தணிகையில் மாப்பிள்ளைக் கோலத்தில் எழுந்தருளியிருக்கிறதைக் கண்டு அவன் ஆற்றலைச் சிறியதாக எண்ணக் கூடாது. பேராற்றல் படைத்த தேவர்களுக்கு

வரும் இன்னல்களைப் பாதுகாக்கும் பெருவீரன் அவன்; அமராவதி காவலன்.

அமராவதி காவலனே!

செய்யவேல் முருகன், கந்தன், இளங்குமரன், அமராவதி காவலன் என்று சொன்ன திருநாமங்களால் அவன் அஞ் ஞானத்தைப் போக்கும் ஞானத்தையே படையாக உடையவன் என்பதும், பிரிந்தவற்றை ஒன்று படுத்தும் அருளாளன் என்பதும், இளமையும் எழிலும் இணைந்த திருவுருவமுடையவன் என்பதும், தேவர்களைப் பாதுகாக்கும் அமராவதி காவலன் என்பதும் புலனாகின்றன.

அழகு அழகு என்று மங்கையர் பார்வையிற் பட்டுருகும் நெஞ்சத்தில் இளங்குமரனுடைய திருவுருவத்தியானம் அமைந் தால் உண்மையான அழகு இன்னதென்ற உண்மை புலனாகும். மடந்தையர் பார்வையிற் பட்டு உருகும் நெஞ்சில் செய்யவேல் முருகன், அமராவதி காவலன் நினைவு உண்டானால் மயல்வலை அறுந்து நலம் உண்டாகும்.

பந்தாடும் மங்கையர் செங்கயற்
    பார்வையிற் பட்டுருகும்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள்
    வாய்;செய்ய வேல்முருகா!
கொந்தார் கடம்பு புடைசூழ்
    திருத்தணிக் குன்றில் நிற்கும்
கந்தா! இளங்கும ரா!அம
    ராவதி காவலனே!

(பந்தை எடுத்து வீசி விளையாடும் மங்கைப் பருவ மாதரின் கயல் போன்ற சிவந்த கண்ணாகிய வலையிலே பட்டு மனத்திண்மையின்றி உருகி மயல் கொள்ளும் மனக் கவலையைத் தீர்த்து அருள் புரிவாயாக; சிவந்த வேலை எடுத்த முருகா! பூங்கொத்துகள் நிரம்பிய கடம்பமரங்கள் சுற்றிலும் சூழ்ந்துள்ள திருத்தணிகைக் குன்றில் நின்ற கோலத்தில் எழுந்தருளியிருக்கும் கந்தா! இளங்குமரா! தேவர்கள் வாழும் அமராவதிப் பட்டணத்துக்குரிய காவலனே!

மங்கையர் - மங்கைப் பருவம் எய்திய மாதர். செங்கயல் பார்வை: செம்மை, பார்வைக்கு அடை. பார்வை - கண்; ஆகு பெயர். பட்டு

என்பதனால் பார்வையை வலையாகக் கொள்ள வேண்டும். உருகுதலாவது திண்மை கலைந்து வருந்துதல். சிந்தா ஆகுலம் - மனக்கவலை. செய்யவேல்: செம்மை, போர் செய்து குருதி பூசியமையால் வந்தது. கொந்து - பூங்கொத்துகள். அமராவதி - அமரர் வாழும் நகரம்; இந்திரனுடைய இராசதானி நகர்.)

இது கந்தர் அலங்காரத்தில் 79-ஆவது பாட்டு.

விண்ணப்பம்

நாம் இந்த உலக வாழ்வில் எத்தனை பாதுகாப்பை செய்து கொண்டாலும் இந்த வாழ்வு முடியும் நாளில் யமனுக்கு முன்னால் இந்தப் பாதுகாப்புகள் பயன்படா என்பதை பலமுறை அருணகிரிநாதர் சொல்லியிருக்கிறார். மரணம் வந்தா என்ன செய்வது என்ற அச்சம் மிகச் பெரிய மனிதர்களிடத்தி கூட இருந்திருக்கிறது. அப்பர் சுவாமிகள்,

"உள்ளுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்"

என்று பாடினார்.

"யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்"

என்பது மணிவாசகர் வாக்கு.

பிரார்த்தனை

அதனால் இப்பொழுதே இறைவனை நோக்கி, "நான் மரணம் அடையும்போது என்னைப் பாதுகாக்க வேண்டும்" என்று பிரார்த்தனை செய்து கொண்டார்கள். எவ்வளவுதான் தைரியம் உடையவனாக ஒருவன் இருந்தாலும் கடைசிக் காலத்தில் அந்தத் தைரியம் உதவுவது இல்லை. இறைவன் திருவருள் முன்நின்று காப்பாற்றினாலொழிய நம் பதவியோ, பலமோ பயன்படுவது இல்லை. ஆகையால் யமனைப் போக்குவதற்குரிய ஆற்றலுடைய இறைவனிடத்தில் இப் பொழுதே விண்ணப்பித்துக் கொண்டு, அவன் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையோடு இருப்பதுதான் யம பயத்தை நீக்குவதற்கு வழி.

அருணகிரிநாதர் பல சமயங்களில் யமனுடைய பயத்தைப் போக்குவற்குரிய பாடல்களைப் பாடியிருக்கிறார். இறைவனைப் பார்த்து, யமன் வந்தால் என்னைப் பாதுகாக்க வேண்டுமென்று சொல்வது ஒருவகை. இறைவன் திருவருளால் எனக்கு யம

பயமே இல்லையென்று சொல்வது ஒருவகை. யமனைப் பார்த்து, உன்னால் என்னை ஒன்றும் செய்ய இயலாது என்று அறை கூவுவது ஒருவகை. இப்போது இறைவனைப் பார்த்து, யமன் வரும்போது என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்கிறார்.

நெடுங்கூற்றன்

யமனை நாம் நேரில் பார்ப்பது இல்லை. 'அவன் வானத்திற்கும் பூமிக்கும் வளர்ந்து இருப்பான்; கன்னங்கரேல் என்று கையில் பாசத்தைக் கொண்டு நிற்பான்' என்று பலர் சொல்லியிருக்கிறார்கள். வானத்தையும் பூமியையும் அளவிடுகின்ற உருவம் நம் முன்னர்த் தோற்றினால் வேறு எதையும் எண்ணவோ, பார்க்கவோ இயலாது. அவன் மாகத்தை முட்டி வருபவன்.

மாகத்தை முட்டி வரும் நெடும் கூற்றன்.

அவன் நிச்சயமாக நம்முடைய உயிரைக் கொள்வதற்கு வருவான். அதற்கு முன்னாலே பாதுகாப்புச் செய்யாவிட்டால் அவன் வந்தே தீருவான். அந்தப் பாதுகாப்பு இறைவனுடைய அருள் துணையைப் பெறுவதுதான். அந்தத் துணை வேண்டுமென்று அருணகிரிநாதர் விண்ணப்பம் செய்து கொள்கிறார். 'கூற்றுவன் வந்தால் என் முன்னே தோகைப் புரவியில், மயில் வாகனத்தில், நீ தோன்றி நிற்க வேண்டும்' என்பது அவர் பிரார்த்தனை.

கூற்றன் வந்தால் என்முன்னே
தோகைப் புரவியில் தோன்றி நிற்பாய்.

யமன் வரும்போது நம்முடைய வாழ்நாளில் நாம் ஈட்டிய அறிவெல்லாம் மறைந்துவிடும். கடவுள் நினைவு போய்விடும். எல்லாவற்றையும் மறைத்துக் கொண்டு கூற்றுவன் வானத்தை முட்ட வந்து நிற்பான். அப்போது அவனை நாம் என்ன வைதாலும் போக மாட்டான்; அச்சுறுத்தினாலும் போகமாட்டான்; நம்மைக் கண்டு இரங்கியும் போகமாட்டான்.

இருவேறு உருவம்

வையத்தில் நாம் வாழும்போது காலத்தை வீணே கழித்தாலும், தீய செயல்களில் போக்கினாலும் நம்முடைய

வாழ்வுக் காலம் முடியும்போது காலக்கணக்கனாகிய காலன் வந்து நிற்பான். உலகில் பிறந்து இறந்துபடும் உயிர்கள் அத்தனையையும் யமனோ அவனுடைய தூதுவர்களோ கொண்டு போவார்கள். தீயவை செய்கிறவர்களுக்கு யமனுடைய ஆணைக்கு உட்படும் நிலை வரும். இறைவனுடைய திருவருளில் ஈடுபடுகிறவர்களுக்கு யம தூதர்கள் வந்து உயிரைக் கொண்டு போக மாட்டார்கள். 'சிவ கணங்கள் வந்து பக்தர்களுடைய உயிரையும், ஞானிகளுடைய உயிரையும் கொண்டு போவார்கள்' என்று புராணம் கூறுகிறது. கூற்றுவன் என்ற உருவமும் சிவகணம் என்ற உருவமும் கற்பனை என்று வைத்துக் கொள்ளலாம். உயிரை மேலான நிலைக்குக் கொண்டு செல்லும் சக்தி, கீழ்நிலைக்குக் கொண்டு செல்லும் சக்தி ஆகிய இரண்டையும் சிவ கணம், கால தூதன் என்று உருவகப்படுத்தினார்கள் என்று கொள்வதில் தவறு இல்லை.

நல்லதானாலும், பொல்லாததானாலும் நம் உள்ளத்தில் பதிந்திருக்கவேண்டுமானால் அதற்கு ஓர் உருவம் கொடுக்க வேண்டும். இல்லையானால் மறைந்துவிடும். குழந்தையை அச்சுறுத்துகின்ற தாய் பூச்சாண்டி என்று சொல்லி எதையோ காட்டுகிறாள். அது போல் நமக்கு அச்சம் ஊட்ட வந்த பெரியவர்கள் யமன் என்று காட்டிப் பயமுறுத்தினார்கள். நம்மைப் பயமுறுத்தியது, அந்தப் பயத்தினாலேயே சாவதற்காக அல்ல. கூற்றுவனைச் சொன்னவர்கள் கூற்றுவனுக்குக் கூற்று வனாக இறைவன் இருக்கிறான் என்பதையும் நினைவூட்டினார்கள். ''அங்கே வெளிச்சம் இல்லை; ஒரே இருட்டாக இருக்கும். ஆகையால் இந்த விளக்கைக் கொண்டு போ'' என்று சொல்வாரைப் போல,''நம்முடைய இறுதிக் காலத்தில் யமன் வருவான். ஆனால் இறைவனை நம்பி அவன் திருவருளைப் பெற்றவர்களுக்குக் காலபயம் இல்லாது போகும்'' என்று சொல்லி நாம் வாழும்போதே இறைவன் திருவருளைப் பெற முயல வேண்டும் என்பதையே வற்புறுத்தினார்கள். அந்த வகையில் யமன் எல்லாவற்றையும் மறைத்துக் கொண்டு நிற்கும்போது அவனை மாய்ப்பதற்கு அல்லது போக்குவதற்குரிய சக்தி இன்னது என்பதையும் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

வேண்டுகோள்

அருணகிரிநாதர் முருகப் பெருமானைப் பார்த்து இங்கே, ''ஆண்டவனே! கூற்றுவன் வந்தால் அவனை எதிர்த்து ஓட்டு வதற்கு எனக்குத் தைரியம் இல்லை; அந்தச் சமயம் பார்த்து நீ என்முன்னால் வந்து பிரசன்னம் ஆக வேண்டும்'' என்று வேண்டி யிருக்கிறார்.

மாகத்தை முட்டி வரும் நெடும் கூற்றன் வந்தால்
என்முன்னே
தோகைப் புரவியில் தோன்றி நிற்பாய்.

யமன் வருவது எருமைக் கடாவின்மேல். முருகன் வருவது அழகான பச்சை மயிலின்மேலே. கூற்றுவன் என்ற சொல் உடலினின்றும் உயிரைக் கூறு போடுவதனால் வந்த காரணப் பெயர். நாம் உலகத்தில் இது வேறு அது வேறு என்று வேறுபடுத்திப் பார்த்துப் பார்த்து அதன் பயனாகக் கூற்றுவனின் கையில் அகப்படுகிறோம். எல்லாம் இறைவன் படைப்பு, எல்லா உயிர்களும் இறைவனுடைய மக்கள் என்று ஒன்றுபடுத்திப் பார்த்தால், ஒன்று படுத்தும் பேரருளாளன் ஆகிய கந்தன் அருள் நமக்குக் கிடைக்கும். கண்ணுக்குக் குளிர்ச்சியான கலாபத்தை உடைய மயிலில் முருகப் பெருமான் வந்து தோன்றினால் அச்சத்தைத் தருகின்ற கூற்றுவன் முன்னே நிற்கமாட்டான். இருளுக்கு மாற்று ஒளி. கூற்றுவனுக்கு மாற்று முருகப் பெருமான். ''கூற்றுவன் வரும்போது, ஐயோ வந்துவிட்டானே! இப்போது வந்து காப்பாய்; என்று சொல்வதற்கு எனக்கு ஆற்றல் இருக்குமோ இராதோ! ஆகையால் இப்பொழுதே விண்ணப்பித்துக் கொள்கிறேன். அவன் நிச்சயமாக வருவான். அப்படி வரும் போது எனக்கு முன்னே வெகுவேகமாக மயிலின் மீதே எழுந் தருளிக் காட்சி அளிக்க வேண்டும்'' என்று வேண்டுகிறார்.

முருகன் புகழ்

இனி முருகப் பெருமானுடைய புகழைச் சொல்ல வருகிறார். முருகப் பெருமான் சிவபெருமானுக்கு மகன்; பராசக்தியின் குழந்தை. அப்படிச் சொல்லாமல் அந்த இருவரையும் ஒன்றுபடுத்திச் சொல்கிறார் அருணகிரிநாதர். பரமேசுவரன் தன்னுடைய ஒரு

பாகத்தில் அம்பிகையை வைத்திருக்கிறான். அதனால் அர்த்த நாரீசுவரன் என்ற திருநாமத்தை அவன் பெற்றிருக்கிறான்.

அருணகிரிநாதர் பராசக்தியினிடம் ஈடுபாடு உடையவர். எப் போதும் அம்பிகையின் பக்கத்திலிருந்து உலகத்தைப் பார்க்கிறவர். ஆதலின் அம்பிகை இறைவன் பாகத்தில் இருப்பதாகக் காணாமல், இறைவன் அம்பிகையின் பாகத்தில் இருப்பதாகக் காணுகிறார்.

''ஒருவரைப் பங்கில் உடையாள் குமாரன்''

என்று சொன்னதை முன்பே பார்த்தோம். அதுபோல், ''சிவ பெருமானைத் தன்னுடைய பாகத்தில் வைத்திருக்கும் பராசக்தி யின் குழந்தையே!'' என்று இங்கும் முருகப் பெருமானை விளிக் கிறார். முதலில் சிவபெருமானுடைய பெருமையைச் சொல்ல வருகிறார்.

தியாகராஜன்

சிவபெருமான் பெரிய வள்ளல். அவனைத் தியாகராஜன் என்று சொல்வார்கள். திருவாரூரில் தியாகராஜன் எழுந்தருளி இருக்கிறான். எல்லாவகைச் செல்வங்களையும் தருபவன் சிவ பெருமான். தனக்குள்ள பொருளையும் பிறருக்குக் கொடுக்கிறவன். தன்னை அண்டி எதைக் கேட்டாலும் வரமாகக் கொடுக்கும் பெரியவன் அவன். பஸ்மாசுரனுக்கு யார் தலையில் கை வைத் தாலும் அந்தத் தலை உடைந்து போய்விடும் என்ற வரத்தைக் கொடுத்தவன். மிக்க எளிதில் மகிழ்ச்சி பெற்றுப் பழைய குற்றங்களை எல்லாம் மறந்து கொடுக்கும் கொடையாளி அந்தப் பெருமான். இந்த உலகத்தில் வாழ்கிறவர்கள் அவனைப் போற்றி னால் சோறு கிடைக்கும்; கூறை கிடைக்கும்; மனைவி கிடைப் பாள்; மக்கள் கிடைப்பார்கள்; வீடு கிடைக்கும்.

''இம்மை யேதரும் சோறும் கூறையும் ஏத்த லாம்இடர்
கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுற
வில்லையே''

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுவார்.

''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்''

என்பது ஞானசம்பந்தப் பெருமானுடய திருவாக்கு.

இந்தப் பொருள்கள் எல்லாவற்றையும்விடச் சிறந்த பொருளாக இருப்பது பேரின்பமாகிய முத்தி. அந்த முத்தி அழியாதது; நித்தியமானது. பதமுத்தி என்றும், பரமுத்தி என்றும் இருவேறு முத்தியைச் சாத்திரங்கள் சொல்கின்றன. இந்திரன் முதலியோர் பதங்களில் இருந்து இன்புறுவது பத முத்தி. இறைவனோடு ஒன்றுபட்டுப் பரமானந்தப் பெருவாழ்வைப் பெறுவது பர முத்தி. இந்தப் பர முத்தியைச் சுத்த முத்தி என்று அருணகிரி நாதர் சொல்கிறார். அது நித்தியமான வாழ்வு ஆதலின்,

சுத்த நித்த முத்தி

என்ற சிறப்பித்துப் பேசுகின்றார். இந்த முத்தியாகிய பெரிய செல்வத்தைச் சிவபெருமான் கொடுக்கிறான்; தியாகம் பண்ணு கிறான். அவன் அசஞ்சலமானவன்; அசையாதவன். அதனால் 'ஸ்தாணு' என்ற பெயரை உடையவன். அசையாப் பொருளுக்கு மலையை உவமை சொல்வது ஒரு மரபு. இறைவன் மலையைப் போன்றவன். பர முத்தி ஆகிய பேரானந்தப் பெருவாழ்வைத் தியாகம் பண்ணுகிற சிவபெருமான் மலையைப் போன்றவன்.

சுத்த நித்தமுத்தி
த்யாகப் பொருப்பை.

திரிபுராந்தகன்

தன்னை அண்டி அருள்பெற்றவர்களுக்கு நித்தியமான முத்திச் செல்வத்தை வழங்கும் வள்ளலாகிய அந்தப் பெருமான், தவறு செய்தவர்களுக்கு அச்சத்தை ஊட்டுவதிலும் சிறந்தவனாக விளங்குகிறான். மூன்று புரங்களைத் தம்முடைய கோட்டை களாகக் கொண்டு எங்கும் திரிந்து உலகத்திற்குத் துன்பத்தைத் தந்து கொண்டிருந்தார்கள் மூன்று அசுரர்கள். அவர்களுடைய கோட்டைகளைத் திரிபுரம் என்று சொல்வார்கள். மூன்று மலங்களையே திரிபுரம் ஆக உருவகம் செய்தார்கள்.

"முப்புரம் என்பது மும்மல காரியம்"

என்பது திருமூலர் திருமந்திரம். மூன்று மலத்தின் உருவமாகிய அம்மூன்று புரங்களையும் இறைவன் எரித்தான்; திரிபுரங்களுக்கு யமனாக நின்றான் அவன்.

த்ரிபுராந்தகனை.

முக்கண்ணன்

பொதுவாக மக்களுக்கு இரண்டு கண்களே உண்டு. தெய்வங் களுக்கும் இரண்டு கண்கள் உண்டு. நான்கு முகம் படைத்த பிரமனுக்கு எட்டுக் கண்ணானாலும் ஒவ்வொரு முகத்திலும் இரண்டு இரண்டு கண்களே இருக்கும். ஆனால் சிவ பெரு மானுக்கோ மூன்று கண். மூன்று கண் படைத்தது ஒரு சிறப்பு. அவனுடைய கண்கள் மூன்றில் ஒன்று சூரியன்; மற்றொன்று சந்திரன்; ஒன்று அக்கினி. நெற்றியில் குறுக்காக இருக்கிற கண் தான் அக்கினிக் கண்; அல்லது ஞானக்கண். அதனை ஆண்டவன் எப்போதும் திறப்பது இல்லை. அஞ்ஞானத்தைச் சுட்டு எரிக்கும் போது திறப்பான். காமன் வேகத் திறப்பான். அவன் ஞானமூர்த்தி என்பதை அந்தக் கண் காட்டுகிறது. அது மற்ற இரண்டு கண் களைப் போல நேரே இல்லாமல் குறுக்கே இருப்பதனால் சிவபெருமானை விரூபாட்சன் என்று சொல்வார்கள்.

த்ரியம்பகனை.

பரம கல்யாணி

இத்தகைய சிவபெருமானைத் தன்னுடைய வலப் பாகத்தில் வைத்திருக்கின்றாள் அம்பிகை. சிவபெருமான் தன்னுடைய வாமபாகத்தில் இறைவியை வைத்திருக்கிறான் என்பதே பெரும் பாலான வாக்கு; அது சிவனடியார் கூறும் திறன். சின்னஞ்சிறு குழந்தையாகிய முருகன் அம்பிகையின் பக்கத்தில் இருக்கிறான். எப்போதும் சிறு குழந்தைகள் பெரும்பாலும் தாயை விட்டு அகலுவது இல்லை. கொஞ்சம் நடக்கக் கற்றுக் கொண்ட பிறகே தந்தையோடு வெளியிலே உலாவும். இல்லாவிட்டால் எப்போதும் தன் தாயின் இடையிலேயே இருக்கும். முருகப் பெருமான் இளம் குழந்தை. அவன் தன்னுடைய தாயின் பக்கத்தில் எப்போதும் இருப்பவன். முருகனை அண்டுகின்ற குழந்தையாகப் பக்தர்கள் இருக்கிறார்கள். ஒரு குழந்தை முதலில் பக்கத்து வீட்டுக் குழந்தையைத் தெரிந்து கொண்டு பழகும். அதற்கு அடுத்தபடி அந்தக் குழந்தையின் தாயைத் தெரிந்து கொள்ளும். அதற்குப் பின்னரே அந்தத் தாயின் கணவனாகிய ஆடவனை அறிந்து கொள் ளும். அந்த முறையில் முருகனை அறிந்து, முருகன் தாயாகிய

அம்பிகையை அறிந்து, அதன் பின்னே சிவபெருமானை அறியும் முறை தோன்றுகிறது. இறைவனைத் தன்னுடைய வலப் பக்கத் தில் வைத்திருக்கிற மேலான மங்கல வாழ்வைத் தருகிற பெரு மாட்டி பராசக்தி. அவளை,

பரம கல்யாணி

என்று சொல்கிறார். கல்யாணம் – மங்கலம். என்றைக்கும் மங்கலம் உடையவள் அவள். உலகில் உள்ள எல்லா மங்கலங்களுக்கும் மேலான மங்கலத்தைப் பெற்றவள் அந்தப் பெருமாட்டி.

சுத்த நித்தமுத்தித்
த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந்தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல்யாணி.

அத்தகைய பெருமாட்டியின் குழந்தை முருகப் பெருமான்.

பரம கல்யாணி பாலகனே.

பாலகன்

'தன்னை வழிபட்டு அருள் பெற்றவர்களுக்கு நித்திய வாழ் வாகிய பர முத்தியைத் தரும் வள்ளலும், மூன்று மலங்களின் உருவாக இருந்த மூன்று புரங்களையும் எரித்த ஞான சொரூபி யும், யாருக்கும் இல்லாத சிறப்பான மூன்று கண்களை உடைய வனும் ஆகிய சிவபெருமானைத் தன்னுடைய வலப்பாகத்தில் எழுந்தருளச் செய்திருக்கும் மேலான மங்கலப் பெருமாட்டியான அம்பிகையின் குழந்தையே' என்று முருகப் பெருமானைத் துதி செய்கிறார் அருணகிரிநாதர்.

இறந்துபட்டால் முத்தி பெறவேண்டும். அதனைத் தருகிறவன் சிவபெருமான். சிவபெருமான் முத்தி தந்தாலும் முருகன் தந்தா லும் இரண்டும் ஒன்றே. தந்தையினுடைய பொருளை உரிமை யோடு பிள்ளையும் எடுத்துத் தரலாம் அல்லவா? 'முத்தியைத் தியாகம் செய்யும் சிவபெருமானுடைய குழந்தை ஆதலால், கூற்றுவன் வரும்போது நீ தோன்றி எனக்கு அந்தச் சுத்த முத்தியைத் தரவேண்டும்' என்ற கருத்தும் இந்தப் பாட்டில் குறிப்பாக அடங்கிக் கிடக்கிறது.

மாகத்தை முட்டி வரும்நெடுங்
கூற்றன்வந் தால்என்முன்னே
தோகைப் புரவியில் தோன்றிநிற்
பாய்,சுத்த நித்தமுத்தித்
த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந்
தகனை த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல்
யாணிதன் பாலகனே

(வானத்தை முட்டி வருகிற உயர்ந்த தோற்றத்தையுடைய யமன் என் உயிரைக் கொள்ள வந்தால் அப்போது என்முன்னே நீ உன்னுடைய தோகையையுடைய வாகனமாகிய மயிலின் மேல் வந்து காட்சி அளித்து எனக்குத் துணையாக நிற்கவேண்டும்; நித்தியமான பரமுத்தியை அடியார் களுக்கு வழங்கும் மலைபோன்ற அசஞ்சலனும், முப்புரங்களை அழித்த வனும், மூன்று கண்களையுடையவனுமாகிய சிவபெருமானைத் தனது வலப் பாகத்தில் வைத்திருக்கும் மேலான மங்கல சொரூபியாகிய அம்பிகையின் குழந்தையே!

மாகம் - வானம். புரவி - குதிரை; இங்கே ஊர்தியென்ற பொதுப் பொருளுக்காயிற்று. தோகைப் புரவி என்றதனால் மயிலாயிற்று; தோகையை யுடைய வாகனம் என்றும் தோகையாகிய வாகனம் என்றும் இருவகையில் பொருள் கொள்ளலாம். இரண்டாவது பொருளில், தோகை, ஆகுபெயர். ''ஆடும்பரி'' என்று குதிரைக்குரிய பெயரை மயிலுக்கும் வழங்குவது அருணகிரிநாதர் வழக்கம். தோன்றிப் பின்பு துணையாக நிற்பாய். சுத்த முத்தி, நித்தமுத்தி என்று கூட்ட வேண்டும். முத்தி த்யாகம் என்று சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டும். பொருப்பு: உவம ஆகுபெயர். த்ரியம்பகனை - முக்கண்ணனை, அம்பகம் - கண். பாகம் - இங்கே வலப்பாகம்.)

இது கந்தர் அலங்காரத்தில் 80-ஆவது பாட்டு.

யமனுக்கு எச்சரிக்கை

முன் பாட்டில் அருணகிரிநாதருடைய பிரார்த்தனையைக் கேட்டோம். எம்பெருமானிடத்தில் எப்படி விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டுமென்பதை அவர் சொல்லிக் கொடுத்தார். ''யமன் வானத்தை முட்டிக் கொண்டு வருவான். அப்போது என்னை அவனிடம் இருந்து காப்பாற்ற வேண்டும்'' என்ற விண்ணப்பம் அது. மரணம் நிச்சயமாக வரும் என்பதை உணர்ந்து முன்னாலேயே விடுத்த வேண்டுகோள் அது.

வருமுன் காப்பவன்

வருமுன் காப்பான், வந்த பின் காப்பான், வரும் போது காப்பான் என்று மூன்று வகை உண்டு. உலகில் வருகிற நோய்களுக்கும் வறுமைக்கும் மரணத்திற்கும் இது பொருந்தும். 'நாளைக்கு உண்ண வேண்டும்' என்று இன்றே உணவைச் சேமிக்கிறவன் ஒருவன். உண்ணும் நேரம் வந்த பிறகு உணவைத் தேடுகிறவன் ஒருவன். உண்ணும் நேரம் தாண்டிய பிறகு பசி மிகுதியாகித் துன்புற்று உணவு தேடிப் போவான் ஒருவன். இந்த மூன்று பேர்களிலும் நிச்சயமாகத் துன்பம் வருமேயென்று முன் கூட்டியே உணர்ந்து அந்தத் துன்பத்திலிருந்து பாதுகாப்புத் தேடிக் கொள்ளத் தக்க முயற்சி செய்கிறவனையே அறிவாளி என்று கருதுகிறோம். அந்தப் பாதுகாப்புத் தனக்குக் கிடைக்காமல் இருந் தால் எங்கே கிடைக்கும் என்று அவன் நாடித் தேடி ஓடுவான். தான் இருக்கும் இடத்தில் கிடைக்காவிட்டால் அது கிடைக்கிற இடத்திற்கு ஓடுவான். அந்தக் காலத்தில் கிடைக்காவிட்டால் எந்தக் காலத்தில் கிடைக்கும் என்று அதற்குரிய காலத்தை நோக்கிக் காத்திருப்பான். துன்பம் வரும் என்று தெரிந்த பிறகு துன்பத்தைப் போக்கிக் கொள்ளும் வழியைத் தேடிப் பெறாதவன் அறிவாளி ஆகமாட்டான்.

முன் பாதுகாப்பு

நாளைக்கு உணவு வேண்டுமே என்று தேடி வைத்துக் கொள்ளும் அறிவு விலங்குகளுக்கு இல்லை. நமக்கு இன்பத்தை அளிப்பது எது, துன்பத்தை அளிப்பது எது என்று நமக்குத் தெரிகிறது. இனிமேல் நமக்கு வரும் இன்பம் எத்தகையது, துன்பம் எத்தகையது என்று எண்ணிப் பார்க்கின்ற அறிவு நமக்கு இருக்கிறது. பசித் துன்பம் வருமே என்று உணவு ஆக்கிக் கொள்ள நமக்குத் தெரிகிறது. அரிசி குத்தி வைத்துக் கொள்கிறோம். நெல்லைக் குதிரில் போட்டு வைத்துக் கொள்கிறோம். நிலம் வாங்கி வைக்கிறோம். தலைவலி வருமே என்று அம்ருதாஞ்சனம் வாங்கி வைத்துக் கொள்கிற அறிவு நமக்கு இருக்கிறது. இத்தகைய அறிவுடைய நாம் நமக்கு வருகிற துன்பங்களுக்கு எல்லாம் தலையாய துன்பம் எது என்று ஆராய்ந்து அந்தத் துன்பத்தினின்றும் விடுதலை பெறுவதற்குரிய வழியைத் தேடிக் கொள்ள வேண்டாமா?

காலத்தில் வேலை

மனிதன் ஒவ்வொரு நிமிஷமும் முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறான். ஒவ்வொரு நாளும் அலுவலகத்திற்கு ஓடுகிறான். அலுவலக வேலை நடக்க வேண்டுமே என்பதற்காக அல்ல; அங்கே போய் வேலை செய்தால்தான் வெள்ளையப்பர் வருவார்; நாம் குடும்பத்தோடு வாழமுடியும். இப்படி வயிற்றுக்காகப் பாடு பாட்டுப் பல வேலைகளைச் செய்கிறான். பலருடைய உதவியை எதிர்பார்க்கிறான். காலத்தை எதிர் பார்க்கிறான். சரியாகப் பத்து மணிக்குக் காரியாலயத்தை நோக்கி அவன் ஓடுவது, முதல் தேதி தப்பாமல் சரியான காலத்தில் பணம் வருவதற்காக. முதல் தேதி தப்பாமல் பணம் வந்தால்தான் மாதத்தில் ஒவ்வொரு நாளும் சரியான காலத்தில் அவனுக்குச் சோறு கிடைக்கும். இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொன்றோடு இணைந்து இருக்கிறது. இந்த உடம்புக்கு வருகிற துன்பத்தை நீக்கக் கருதி முன்பே பாதுகாப்பான காரியம் செய்கிறோம். இதை அறிவுடையவன் செயல் என்கிறோம்.

ஒருவனுக்குப் பெண் குழந்தை பிறக்கிறது. பிறந்தது முதல் ஐந்து ஐந்து ரூபாய் சேமிப்பு நிதியில் கட்டுகிறான். அந்தக்

குழந்தையின் கல்யாணத்திற்கு என்று காரணம் சொல்கிறான். இருபதாம் வயதில் கல்யாணம் பண்ண வேண்டுமென்று அறிந்திருக்கிறான். அதன் பொருட்டுக் குழந்தை பிறந்ததிலிருந்தே பணம் கட்டுகிறான். உலகம் இத்தகையவர்களைச் சாமர்த்திய சாலிகள், அறிவுள்ளவர்கள் என்று சொல்கிறது.

இப்படிச் செய்கிறவர்கள் வருமுன் காப்பவர்கள், பிழைக்கத் தெரிந்தவர்கள், வாழத் தெரிந்தவர்கள் என்று நாம் சொல்கிறோம். ''கோயிலுக்குப் போய் ஆண்டவனைத் தரிசித்து வரலாம்'' என்று ஒருவன் சொன்னால் அவனைப் பகுத்தறிவுவாதி குருட்டு நம்பிக்கைக்காரன் என்கிறான். சேம நிதியில் பிறந்த பெண் குழந்தையின் கல்யாணத்திற்காக முன் கூட்டியே பணம் கட்டுவது அறிவானால், நமக்கு ஏதாவது விபத்து வந்துவிடப் போகிறதே என்று இன்ஷூரன்ஸ் பண்ணி வைப்பது அறிவானால், உயிருக்கு வருகிற துன்பத்தைப் போக்கிக் கொள்ளப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதும் அறிவு அல்லவா?

பழியும் புகழும்

எல்லோரும் இன்ஷூரன்ஸ் பண்ணிக் கொள்ள வேண்டுமென்று சட்டம் கொண்டுவரப் போகிறார்களாம். நாமே செத்துப் போய் போகிறோம். எதற்காக இன்ஷூரன்ஸ் பண்ணிக் கொள்ள வேண்டும்? செத்துப் போகிறவன் பழியோடு செத்துக் போகக் கூடாது. ''ஐயோ! இந்தப் பாவி குடும்பத்தை நடுத் தெருவில் விட்டுவிட்டுப் போய்விட்டானே!'' என்று சொல்லும் பழி வராமல் இருப்பதற்கே இன்ஷூரன்ஸ் பண்ணிக் கொள்கிறான்.

செத்துப் போன பிறகு இங்கே நிற்கும் உடம்பு ஒன்று உண்டு. பஞ்சபூதங்களினாலான உடம்பு அழிந்து விடலாம். ஆனால் அந்த உடம்பு அழியாது. அதனைப் புகழ் உடம்பு என்று சொல்வார்கள்.

''மாய்ந்தவர் மாய்ந்தவர் அல்லர்கள்; மாயா
தேந்திய கைகொ டிரந்தவர் எந்தாய்
வீந்தவ ரென்பவர்; வீந்தவ ரேனும்
ஈந்தவ ரல்ல திருந்தவர் யாரே''

என்ற கம்பர் பாடுகிறார். இந்த உடம்பு செத்துப் போகலாம். புகழ் உடம்பு இறவாது. புகழின்றி வெறும் உடம்பைச் சுமந்து

கொண்டு ஒருவன் வாழலாம். அவன் நடைப்பிணம். ஆனால் பெரியவர்கள் உடம்பு அழிந்தாலும் புகழ் உடம்பை நிலை நாட்டிக் கொள்வார்கள். அவர்கள் இந்த உலகில் புகழ் உடம்பை வைத்துவிட்டு மறுமையில் இன்பத்தை அடைகிறார்கள். பாவி யாக இந்த உலகில் பலகாலம் வாழ்ந்தால் உலகம் அவனைப் பழிக்கும்; மறுமையில் அவன் நரகத்தை அடைவான். இங்கே பழியைக் கொண்டவனுக்கு அங்கே இன்பம் இல்லை.

பாட்டியின் தீர்ப்பு

ஒருவர் இறந்து போனார். ''அவர் சொர்க்கத்திற்குப் போவாரா, நரகத்திற்குப் போவாரா என்று நான் பார்த்து வருகிறேன்'' என்று ஒரு பாட்டி வீதிக்கு வந்தாள். செத்தவனுடைய சரித்திரம் என்ன வென்று கேட்கவில்லை. அவன் என்ன என்ன காரியங்கள் செய் தான் என்றும் அறியவில்லை. வெளியில் போய்ப் பார்த்துவிட்டு உள்ளே வந்தவள். ''இவன் நிச்சயமாகச் சொர்க்கத்திற்குத்தான் போவான்'' என்றாள். ''எப்படிப் பாட்டி தெரிந்து கொண்டாய்?'' என்று கேட்டார்கள். ''வீதி முழுவதும் மக்கள் கூடியிருக்கிறார்கள். இவ்வளவு பேர்களுடைய மனமும் துயரமடைகின்றன இன்றைக்கு. இத்தனை பேரும் அவனுக்குப் பிள்ளைகளும் அல்ல; உறவினர் களும் அல்ல. சிலரே உறவினர்களாக இருப்பார்கள். இருந் தாலும் பலர் வருத்தம் அடைகிறார்கள். இவனால் பெற்ற நலம் இனிக் கிடைக்காதே என்ற துக்கம் அவர்களுக்கு. அதனால்தான் இத்தனை பேர்களும் துயரக் கடலில் மூழ்கி இருக்கின்றனர். இத்தனை பேர்களுக்கும் நல்லவனாக இருந்தவன் அவன் என்று தெரிகிறது. அவன் புண்ணியசாலி என்பதில் தடை என்ன? அதனால்தான் சொர்க்கத்திற்குப் போவான் என்று சொன்னேன்'' என்றாளாம் பாட்டி.

எய்ப்பில் வைப்பு

இறந்த பிறகும் உலகம் பழி சொல்லாமல் இருக்க வேண்டு மென்பதற்காகப் பணம் சேர்த்து வைத்து நலம் பண்ணுகிற வனையே அறிவாளி என்கிறோம். இது நன்றாக வாழத் தெரிந் தவர்களுடைய பேச்சேயன்றி வேதாந்தம் படித்தவர்களுடைய பேச்சன்று. நம்முடைய பையன் உத்தியோகத்திற்கு விண்ணப்பம்

போடுகிறான். ஒரு கம்பெனிக்குப் போட்டிருக்கிறான்; சர்க்கார் உத்தியோகத்திற்கும் போட்டிருக்கிறான். இந்த இரண்டு இடங் களிலிருந்தும் உத்தியோகம் கிடைக்கிறது என்றால் அரசாங்க வேலையைத்தான் விரும்புவான். பென்ஷன் கிடைக்கும் அல்லவா? பென்ஷன் என்பதற்குச் சரியான தமிழ் 'எய்ப்பில் வைப்பு' என்பது. எய்ப்பு என்பது இளைப்பு. இளைப்பு அடை கிற காலத்தில் உதவி செய்கின்ற நிதி அது. மற்ற இடங்களில் உடம்பில் வலிமை இருக்குமட்டும் வேலை செய்து பணம் வாங்கலாம். வேலையை விட்டுவிட்டால் சம்பளம் கிடைக்காது. ஆனால் அரசாங்க வேலையில் உடம்பு இளைத்து வேலையை விட்டு நீங்கிய பிறகு பென்ஷன் வாங்கலாம்.

பென்ஷன் பணத்தை முன்கூட்டியே தொகையாக வாங்கிக் கொள்வது சரியல்ல என்பதற்குரிய காரணங்களை ராஜாஜி அவர்கள் முதல் மந்திரியாக இருந்தபோது சொன்னார். அவர் பேசியபோது கேட்டிருக்கிறேன். ''பென்ஷன் கொடுப்பதன் நோக்கம் நமக்கு ஊழியம் செய்தவர்கள் உடம்பு தளர்ச்சி அடைந்துவிட்டாலும் இன்னல் இல்லாமல் இருக்கவேண்டு மென்பதுதான். அதற்காக மாதந்தோறும் பென்ஷன் கொடுக்கி றோம். இதைக் 'கம்யூட்' பண்ணி மொத்தமாக வாங்கிவிட்டால் மனைவி மக்கள் நயமாகப் பேசி அந்தப் பணத்தை வாங்கிக் கொண்ட பிறகு துன்பப்படுத்த ஆரம்பிக்கலாம். மாதந்தோறும் கையெழுத்துப் போட்டால்தான் பணம் கிடைக்கும் என்று இருந் தால் சாகிற வரைக்கும் அவரைப் பத்திரமாக அந்தப் பணத்திற் காகவாவது காப்பாற்றுவார்கள்'' என்று சொன்னார்.

இளைத்த பின்பும் உதவியாகப் 'பென்ஷன்' பெறும் அரசாங்க வேலை இருந்தால் நல்லது என்று நாடுகிறோம். இது போல் உயிருக்குத் தளர்ச்சி ஏற்படுகிற காலத்தில் அதற்கு உதவி செய்ய ஒரு பொருளைச் சேமிக்க வேண்டாமா? உண்மையான எய்ப்பில் பெரிய இன்பத்தைத் தருவதற்குரிய வைப்பு அருளாகிய செல் வந்தான். அதைத்தான் முன் பாட்டில் அருணகிரியார் வேண் டினார். ''நாளைக்கு யமன் வருவானே! நான் என்ன செய்வேன்? அப்போது நீ மயிலின் மேல் வந்து பாதுகாக்க வேண்டும்'' என்ற பொருளோடு,

"மாகத்தை முட்டிவரும் நெடுங்கூற்றன் வந்தால் என்முன்னே
தோகைப் புரவியில் தோன்றி நிற்பாய்"

என்று பிரார்த்தனை பண்ணினார்.

அருணகிரியார் பெற்ற உறுதி

ஆண்டவனைப் பிரார்த்தனை பண்ணினவுடன் அவருக்குத் தைரியம் வந்துவிட்டது. நிச்சயமாக ஆண்டவன் திருவருள் நமக்குக் கிடைக்கும் என்ற உறுதி அவர் உள்ளத்தில் எழுந்தது. இனி அவர் யாருக்குப் பயப்பட வேண்டும்?

ஒரு குழந்தை ஒரு பெரிய பையனிடம் பயந்து கொண்டு அப்பாவிடம் ஓடுகிறான். அப்பா துணைக்கு வரும்போது அந்தக் குழந்தை அந்தப் பெரியவனிடம், "என்னடா இப்போது சொல் கிறாய்? என்னிடம் வந்தால் என்ன செய்வேன் தெரியுமா?"என்று அறைகூவுவதைப் பார்க்கிறோம்.

அதுபோல், முன்பாட்டில் சொல்கிறபோது அருணகிரி யாருக்கு யமனைக் கண்டு பயப்படுகிற நிலை இருந்தது. "ஆண்டவனே, உனக்கும் எனக்கும் நடுவில் நிழல் போன்ற நெடிய உருவத் துடன் நிற்பானே காலன். அப்போது உன்னை நினைக்கலாம் என்றால் அவன் நிழல் மறைக்குமே! அந்தச் சமயத்தில் நீ என் முன்னே தோன்ற வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். அவர் பிரார்த்தனை உடனே பலித்துவிட்டது. ஆண்டவன் திருவருள் அவருக்குக் கிடைத்துவிட்டது. "அந்தகா உன் ஜம்பம் என்னிடம் பலிக்காது. எனக்குத் துணையாக இருக்கும் ஆண்டவன் யார் தெரியுமா ? என் பக்கத்தில் வேண்டுமானால் வந்து பார். உன் உயிரையே வாங்கி விடுகிறேன்" என்று இங்கே பேசுகின்றார்.

வேலனும் காலனும்

பயத்திற்குக் காரணமான இருள் மயமாகிய அஞ்ஞான மலையை வெல்வதற்கு ஞான சொரூபமான கருவிகளை உடைய ஆண்டவனை நினைக்கிறார். "என்னுடைய திருவருளைப் பெற்றவர்களுக்கு யாரேனும் துன்பம் செய்தால் நான் காப்பாற்று வேன்" என்பதைக் காட்டுவதற்காக இறைவன் எப்போதும்தான் திருக்கரத்தில் வேல் படையை வைத்திருக்கிறான். 'வேலே விளங்கு

கையான்' அவன். அவனைக் கண்டால் நமக்கு ஒரு நம்பிக்கை உண்டாகிவிடுகிறது. நோயாளிக்குக் கழுத்தில் ரப்பர் குழாயைப் பூண்டு வரும் டாக்டரைக் கண்டவுடன் நம்பிக்கை உண்டா வதைப் போன்றது அது.

உலகத்திலுள்ள மக்களுக்கு அச்சத்தைத் தருகிறவன் யமன். அவன் இருள் நிற மேனி உடையவன். அவனை ஒளியுடைய திருமேனி படைத்த முருகன் அழித்து ஒழிப்பான் என்ற எண்ணத்தால் யமன் நேரே வந்ததாகப் பாவனை பண்ணிக் கொண்டு இந்தப் பாட்டைச் சொல்கிறார்.

நம்மை அச்சுறுத்துவற்குக் காரணமாக இருப்பவன் யமன். நாம் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாமல் இருப்பத னால் அவன் நம்மைப் பற்ற வருகிறான். அவனிடம் அகப் படாமல் நாம் பாதுகாப்பைத் தேடிக் கொள்ள வேண்டும்.

உயிரும் உடம்பும் ஒட்டி இருப்பதனால் ஒரு மனிதன் வாழ் கிறான் என்று சொல்ல முடியாது. செய்ய வேண்டிய காரியங் களைக் கை செய்யாவிட்டால் கை வாழ்கிறது என்று சொல்ல முடியாது. அது இருந்தும் பிணத்தின் கை போன்றதே. நம் உள்ளத்திற்குள் ஒரு நோய் உண்டு. 'ஒரு காரியத்தைச் செய்' என்று உள்ளே இருந்து ஒன்று சொல்கிறது. 'அதைச் செய்யாதே' என்று மற்றொன்றும் உள்ளே இருந்தே தடுக்கிறது. செய்கிற காரியத்தைச் செய்வதற்குத் தெம்பு இல்லாமல் செய்கிற இந்த நோய்தான் மனிதனை உருக்குலைக்கிறது. இந்த நோய் நீங்க வேண்டுமானால் தைரியம் வரவேண்டும். நம் மனமே நமக்குப் பகையாக இருக்கிறது. அதை அடக்கவேண்டுமானால் இறை வனுடைய திருவுருவத்தைத் தியானம் செய்ய வேண்டும். நமக்காகவே அவதரித்தவன் அந்தப் பெருமான். இவைகளை எல்லாம் சொல்ல வருகிறார் அருணகிரியார்.

பால் உண்ட பாலன்

ஆண்டவன் குழந்தையாக உலகத்தில் அவதாரம் செய்தான். ஊருக்குப் பால் குடித்தான். சரவணப்பூம் பொய்கையில் கிருத்திகை மாதர் அறுவர் கொடுத்த பால் போதாமல் உமாதேவி கொடுத்த ஞானப்பாலைக் குடித்தவன் அவன்.

தாராகணம் எனும் தாய்மார் அறுவர் தரும்முலைப்பால்
ஆராது உமைமுலைப்பால் உண்ட பாலன்.

"முருகனாகிய குழந்தையின் துணை எனக்கு இருக்கிறது. அவன் யார் தெரியுமா? பூவுலகையும், தேவருலகையும் காப்பாற்று வதற்காகச் சிவபெருமானிடமிருந்து தோன்றிய குழந்தை. ஆறு பேரோடு ஏழாவது அன்னையிடம் பால் குடித்தவன்" என்கிறார்.

சிவபெருமானுடைய ஆறு முகங்களிலிருந்து ஆறு பொறி களாக எழுந்து சரவணப்பூம் பொய்கையிலே ஆறு குழந்தைகளாக வளர்ந்தான். உமாதேவியின் குழந்தையாக இருந்தாலும் தனக்குப் பால் கொடுக்கும் புண்ணியம் வேறு சிலருக்கும் கிடைக்க வேண்டுமென்று அவன் திருவுள்ளம் கொண்டான்.

தாராகணம் எனும் தாய்மார் அறுவர்.

தாராகணம் - நட்சத்திரங்களின் கூட்டம். ஆறு நட்சத்திரங்கள் சேர்ந்த கூட்டத்தைக் கிருத்திகா நட்சத்திரம் என்று சொல்வார்கள். அந்த ஆறு நட்சத்திரங்களும் ஆறு மாதர்கள். ஏழு முனிவர்களுக்குள் வசிஷ்டர் அல்லாத மற்ற முனிவர்களுடைய கற்புடைய மனைவி களாகிய ஆறு பேர் இப்போது கிருத்திகா நட்சத்திரங்களாக இருக் கிறார்கள் என்று சொல்வார்கள். குழந்தையாகிய ஆறுமுகநாத னுக்குப் பாலூட்டி வளர்க்க வேண்டுமென்று தவம் செய்தவர்கள் அவர்கள். அவர்கள் முனிவர்களுடைய பத்தினிகளாக இருந்து பல நல்ல காரியங்களைச் செய்து அதன் பயனாக இப்போது வானில் நட்சத்திரமான ஒளிர்கிறார்கள். அந்த ஆறு பேரும் சரவணப்பூம் பொய்கையில் ஆறு குழந்தைகளின் உருவத்தில் இருந்த முருகப் பெருமானுக்குப் பால் ஊட்டினார்கள்.

பின்பு எம்பெருமாட்டியிடம் ஞானப் பாலை உண்ண வேண்டும் என்று திருவுள்ளத்தில் நினைத்தான் முருகன். ஞானமே திரு வுருவமாகிய எம்பெருமானுக்கு இறைவியினுடைய பாலை உண்ட பிறகே அருள் விளக்கம் உண்டாகும். அதுவரைக்கும் சரவணப்பூம் பொய்கையில் குழந்தையாக இருக்கும் நிலை மாத்திரம் இருந்தது. ஞானக் கனலாக விளங்கும் சிவபெரு மானிடத்தில் இருந்து ஞானப் பொறிகளாக வந்த பெருமானுக்கு அருள் ஊட்டம் இருந்தால்தான் உலகம் எல்லாம் அந்தக் குழந்தையினால் பயன் பெறும். ஆதலின் உமா தேவியினுடைய

அருளும் அந்தக் குழந்தைக்கு ஏற்பட வேண்டியிருந்தது. சிவ பெருமான், ''உன் குழந்தை சரவணப்பூம் பொய்கையில் வளர் கிறான்'' என்று சொல்ல, உமாதேவி மிக்க அன்புடன் குழந்தையைப் பார்க்க வந்தாள். ஆறு குழந்தைகளாக இருந்த கார்த்திகேயனை அவள் மிக்க ஆர்வத்துடன் தன் இரண்டு கையினாலும் எடுத்து அணைத்தாள். அணைக்கவே, ஆறு குழந்தைகளும் ஒன்றாக, ஆறுமுகமும், பன்னிரு திருக்கரங்களும் உடைய ஆறுகக் கடவுள் ஆனான்.

உடனே பொற்கிண்ணத்தில் பாலைக் கறந்து அந்தப் பெருமானுக்கு அம்பிகை ஊட்டினாள். ஆறுமுகமும், பன்னிரு திருக்கரங்களும் உடைய அந்தப் பெருமான் கந்தன் என்றும் திரு நாமத்தோடு விளங்கலானான். தனித்தனியாகப் பிரிந்து நிற்பத னால் உலகுக்கு யாதும் பயன் இல்லை. சக்திகள் எல்லாம் ஒன்று சேர்ந்தால்தான் உலகத்துக்குப் பயன் உண்டாகும். இந்தச் சக்தியின் ஒருமைப்பாட்டைப் பராசக்தி தன்னுடைய கையினால் செய்தாள்.

வெறும் ஞானத்தினால் உலகத்திற்குப் பயன் இல்லை. அறிவு மாத்திரம் தனித்திருந்தால் இன்பம் உண்டாகாது. அருளும், அறிவும் கலந்திருந்தால்தான் உண்மையான இன்பம் உண்டாகும். அறிவினால் மாத்திரம் பார்த்தால் உலகத்தில் பேதம் தெரியும். அறிவை மறந்து அருளினால் பார்த்தால் அபேதம் தோன்றும்.

''அருளாலே எவையும்பார் என்றான் – அத்தை
அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லால் – கண்ட
என்னையும் கண்டிலன்; என்னேடி தோழி''

என்று தாயுமானவர் பாடுவார். ஞான மயமாக நிலவிய முருகன் உலகத்திற்கு அருள் செய்ய வேண்டுமென்ற பெருங்கருணை யினால் அறப்பெருஞ் செல்வி தன் அருளைக் கலந்து குழைத்த பாலை முருகனுக்கு ஊட்டினாள்.

இறைவனும் அம்பிகையும் சேர்ந்தால்தான் உலகம் இயங்கும். பரமசிவன் தனக்குள்ளே அம்பிகையை அடக்கிக் கொண்டிருந் தால் அவனுக்கும் இயக்கம் இல்லை; அது காரணமாக உலகமே இயங்காது.

"சிவம்ஏ னும்பொருள் ஆதி சக்தியொடு
சேரின் எத்தொழிலும் வல்லதாம்:
அவள்பி ரிந்திடின் இயங்கு தற்குமரிதாம்"

என்று சௌந்தர்ய லஹரி சொல்கிறது. முருகப் பெருமான் இறைவனுடைய அம்சமாகத் தோற்றினான். அந்தப் பெருமானுக்குப் பராசக்தியினுடைய அம்சம் கலந்தால்தான் அருள் வெள்ளம் பெருக்கெடுக்கும். எம்பெருமாட்டி அதன் பொருட்டே அந்தக் குழந்தையை நாடி வந்து பாலை ஊட்டினாள்.

தாராகணம் எனும் தாய்மார் அறுவர் தரும் முலைப்பால்
ஆராது உமைமுலைப்பால் உண்ட பாலன்

என்று அருணகிரியார் பாடுகிறார். ஆராது என்றால் உண்ணாது என்று இங்கே பொருள் கொள்ளக் கூடாது. நிரம்பாது என்று பொருள். தாராகணம் - நட்சத்திரக் கூட்டமாகிய கிருத்திகை மாதர். அந்த ஆறு பேரும் தரும் முலைப்பால் குடித்து அதனால் வயிறு நிரம்பாத பெருமான் அழுதான். அவனுடைய பசி மேலோங்கியது. உலகத்திற்கு அருள் செய்யவேண்டுமென்ற பசியோடு அழுதான். ஆறு பேரும் கொடுத்த பால் போதாமல் ஏழாமவளாக உமா தேவியாகிய பராசக்தி வந்தாள். அந்தப் பெருமாட்டி கறந்து அருத்திய பாலைக் குழந்தையாக இருந்த முருகன் உண்டான். "அந்தக் குழந்தையின் துணை எனக்கு இருக்கிறது" என்று சொல்ல வருகிறார் அருணகிரியார். முருகன் துணை எனக்கு இருக்கிறதென்று சும்மா சொன்னால் போதாது என்று அவனைப் பற்றித் தாம் நன்றாகத் தெரிந்து கொண்டிருப்பதைக் காட்டுவதற்காக இப்படிச் சொன்னார். யமனைப் பார்த்து,

வாராது அகல் அந்தகா!

என்று மிடுக்காகப் பேசுகிறார். அந்தகன் என்றால் யமன் என்றும், குருடன் என்றும் இரண்டு பொருள்கள் உண்டு. "நான் முருகனுடைய அருளைப் பெற்றிருக்கிறேன் என்பதை நீ கண்டு கொள்ளாமல் குருடனாக இருக்கிறாயே" என்ற குறிப்பும் இதில் இருக்கிறது. "நீ எப்போதும் பலபல இடங்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறாய். போகிற போக்கில் என்னை நினைந்து என்னிடத்தில் வந்து விடாதே. சற்றே அகன்று செல்வாயாக. 'இவன் என்ன செய்வான்? போய்த்தான் பார்க்கலாமே!' என்று அசட்டுத்

தைரியத்தில் என்னிடம் வந்தால் என்ன செய்வேன் தெரியுமா? நீ எல்லா உடம்பிலிருந்தும் உயிர்களை வாங்குகிறவன் என்று புகழ் பெற்றிருக்கிறாய். அதனால் செருக்கும் அடைந்திருக்கிறாய். ஆனால் இங்கே வந்தாயானால் உன் உயிரை நான் வாங்கி விடுவேன். இது நினைவு இருக்கட்டும்'' என்று அறை கூவுகிறார்.

வாராது அகல் அந்தகா, வந்தபோது உயிர் வாங்குவனே.

பாவனை

இவ்வாறு வீறு பேசுவதற்கு அருணகிரியாரிடம் என்ன பலம் இருக்கிறது? ஏதாவது ஆயுதத்தைக் கையில் வைத்திருக்கிறாரா? அவர் கையில் எந்தப் படையும் இல்லை. எதிரே மாடு வருகிற தென்றால் கையில் உள்ள குச்சியால் அடித்து விடலாம். சித்திரத்தில் உள்ள மாட்டை அடிக்க வேண்டுமானால் கைக் குச்சி பயன்படாது. அந்தச் சித்திரத்திலேயே மாட்டை அடிப்பது போல ஒரு குச்சியையும், ஆளையும் எழுத வேண்டும். அதற்காகக் கையில் குச்சியை எடுக்க வேண்டியதில்லை; வண்ணம் தீட்டுகிற தூரிகைதான் வேண்டும்.

யமன் எப்படி இருக்கிறான்? நம் கண் முன்னால் உருவத் தோடு வந்து நிற்கவில்லை. யமன் வருவான் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அவன் இருப்பதாக ஒரு பாவனை நிலவு கிறது. உயிரைப் போக்குகின்ற ஒரு சக்திக்கு உருக் கொடுத்துப் பருப்பொருளாகச் சொல்லியிருக்கிறார்கள். குதிரையின் மேல் வரும் மனிதனைப் போலக் கண்ணுக்கு நன்றாகத் தெரியும்படி எருமைக் கடாவின் மேல் அவன் வருவது இல்லை. யமன் என்ற கற்பனை, அவன் நம்மைப் பாசம் போட்டு இழுத்துச் செல்வான் என்ற பாவனை எல்லாம் மனத் தளவில் நிற்கின்றன. அந்தப் பாவனைக்கு மாற்று மற்றொரு பாவனைதான்.

யம பயத்தைப் போக்குவதற்குரிய படைக்கலங்களை அருணகிரியார் கையிலே எடுத்துக் கொள்ளவில்லை; மனத்திலே நினைக்கிறார். இந்த நினைப்பு இடைவிடாது இருப்பதனால் அவருக்குத் தைரியம் உண்டாகிறது. முருகப் பெருமானுடைய திருவுருவத் தியானந்தான் அது. அந்தப் பலத்தினால் அறை கூவுகிறார்.

படைக்கலங்கள்

பாசம், கதை முதலியனவற்றை எடுத்துக் கொண்டு வரு தாக யமனைப் பற்றிய நினைப்பு வரும்போது அதனை மாற்று வதற்குரிய சிறந்த வீரப்பெருமானாகிய ஆண்டவனை நினை கிறார். ஆண்டவன் திருக்கரங்களிலுள்ள படைக்கலங்களை நினைக்கிறார்.

பாலன் அரையில் கட்டும்
சீராவும் கையில் சிறுவாளும் வேலும் என் சிந்தையவே.

''என்னுடைய மனமாகிய பெட்டகத்தில் இருக்கும் ஆயுதங் கள் எவை தெரியுமா? நான் எப்போதும் முருகப் பெருமானுடைய திருவுருவத்தைத் தியானம் பண்ணிக் கொண்டிருக்கிறேன் அவனுடைய ஒவ்வோர் அங்கமும் என் உள்ளத்தில் நிற்கிறது அவன் கையில் உள்ள ஆயுதங்களும் என் அகக்கண்ணில் நிற் கின்றன. அவன் தன் இடையில் உடை வாளைச் செருகி இருக் கிறான். அது எனக்குப் பலமாக இருக்கிறது. அவன் கையில் சிறிய வாளை வைத்திருக்கிறான். அதுவும் எனக்குத் துணையாக வரும். இந்த இரண்டுமே போதும். இந்த இரண்டிலும் தீராத பெரும் பகை வந்ததானாலும் அது எவ்வளவு பெரிய தடையாக இருந்தாலும் அழித்து ஒழிக்கின்ற பெரிய படையாகிய வேல் அவனிடம் இருக்கிறது. பெரிய பெரிய அசுரர்களை அடியோடு அழித்து வென்ற வீரவேல் அது. சீராவும், சிறுவாளும், வேலும் எனக்குத் துணையாக என் நெஞ்சில் எப்போதும் இருந்து கொண் டிருக்கும்போது, நீ எந்தப் படையோடு என்னிடத்தில் வந்தாலும் உய்யமாட்டாய். நீ பிழைத்திருக்க வேண்டுமானால் என் பக்கத் தில் வராமல் அகன்று செல்'' என்கிறார் அருணகிரியார்.

காலனுக்குக் காலனாகிய ஆண்டவன் தன்னுடைய திருவடி யினால் காலனை உதைத்து அழித்துக் கொன்றான் என்று கதை இருக்கிறது. மார்க்கண்டேயர் திருக்கடவூரில் சிவபெருமானைச் சரணடைந்தார். அப்போது அந்தப் பெருமான் காலனுக்குக் காலனாக எழுந்து நின்று தன் காலால் உதைத்துக் கொன்றான் யமனை. அருணகிரியாரோ மார்க்கண்டேயர் பட்ட பாட்டைப் படவில்லை. அவருக்கு மிக எளிதில் பாதுகாப்புக் கிடைத்திருக் கிறது. முருகப் பெருமானுடைய திருக்கரத்திலுள்ள படைகளை

உறுதியாக எண்ணிக் கொண்டால் போதும், அதுவே யம பயத்தைப் போக்குவதற்குரிய பாதுகாப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு பேசுகின்றார்.

முருகப் பெருமானைத் தியானம் பண்ணும்போது அவனுடைய திருவுருவத்திலுள்ள பகுதிகளை எல்லாம் ஆர அமர உள்ளத்திலே எழுதிக் கொள்ள வேண்டும். அப்படி எழுதினால் ஒவ்வோர் அங்கமும் ஒவ்வொரு வகையில் நம்முடைய வாழ்நாளில் நலனைத் தரும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இறைவனுடைய படைக்கலங்களை அவனுடைய திருக்கரங்களோடு தியானம் பண்ணினால் நமக்கு வருகின்ற எல்லாவிதமான பயங்களும் அடியோடு மாறி விடும். ஆதலின் இந்தப் பாட்டில் வடிவேல் பெருமானுடைய ஆயுதங்கள் மூன்றை நினைப்பூட்டு கிறார் அருணகிரியார்.

படைக்கலங்களின் உண்மை

முருகப்பெருமான் கரத்திலுள்ள படைக் கலங்கள் உலகத்தில் உள்ள அழிப்புக் கருவிகளாகிய படைக்கலங்களைப் போன்றவை அல்ல. அவை ஞானத்தின் சொரூபம். ஞானசக்தியே வடிவேலாக இருக்கிறது. அதன் அம்சங்களாகவே மற்ற ஆயுதங்களும் இருக் கின்றன. அஞ்ஞானம், மறதி, மரணம், இருள் ஆகிய எல்லா வற்றுக்கும் ஒரு வடிவம் கொடுத்து யமன் என்று சொல்கிறோம். இவற்றையெல்லாம் அடியோடு அழிப்பதற்கு முருகப் பெரு மானுடைய படைக்கலங்கள் இருக்கின்றன. அவை இருளை ஓட்டிப் பளபளக்கும். அசுரர்களை அழித்துத் தேவர்களை வாழ வைக்கும். அவித்தையை நீக்கி ஞான ஒளி தரும். ஆசையைப் போக்கித் தைரியத்தை ஊட்டும்.

மிகவும் வலிமை உள்ளவன் யமன். அவனை ஓட்டுவதற்கு நம்மிடத்தில் படை இல்லாவிட்டாலும் இறைவனைத் தியானம் செய்து, அவன் திருக்கரத்தில் உள்ள படைகளைச் சிந்தனையில் கொண்டால் அந்த அச்சம் ஓடி விடும். காலனால் துன்பம் வருமே என்ற அச்சமே நமது துன்பத்துக்கு அடிப்படை. எங்கே அச்சம் இல்லையோ அங்கே காலனுக்கு வேலை இல்லை. அந்த அச்சத்தைப் போக்குவதற்கு, அச்சம் தோன்றும் இடமாகிய

உள்ளத்தில் தைரியம் தோன்றச் செய்கின்ற தியானத்தை உறுதிப் படுத்தவேண்டும். அதற்குரிய பாடல் இது.

தாரா கணம்எனும் தாய்மார்
அறுவர் தரும்முலைப்பால்
ஆராதுமைமுலைப் பால்உண்ட
பாலன் அரையில்கட்டும்
சீராவும் கையில் சிறுவாளும்
வேலும்என் சிந்தையவே;
வாரா தகல் அந்த கா!வந்த
போதுயிர் வாங்குவனே.

(யமனே! நட்சத்திரக் கூட்டம் என்று சொல்லும் கிருத்திகை மாதர்களாகிய அன்னைமார் அறுவர் தரும் முலைப்பால் போதாமல், உமாதேவியின் திருமுலைப்பாலையும் உண்ட குழந்தையாகிய முருகப் பெருமான் தன் இடையிலே கட்டும் உடையவாளும் கையில் வைத் திருக்கும் சிறிய வாளும் அவனுடைய வேலாயுதமும் என் சிந்தையிலே உள்ளன; நீ என்னிடம் வாராமல் சேய்மையிலே அகன்று செல்வாயாக! அவ்வாறு இன்றி என்பால் வந்தால் அப்போது அந்தப் படைக் கலங்களின் வலிமையால் உன் உயிரை வாங்குவேன்.

தாரா – நட்சத்திரம். கணம் – இனம்; இங்கே கூட்டம். அறுவர் – கிருத்திகைப் பெண்கள். ஆராது – நிரம்பாமல். அரையில் – இடையில். சீரா – உடைவாள். என் சிந்தையில் இருக்கின்றன; ஆதலின் அவற்றால் உன் உயிரை வாங்குவேன் என்றபடி.

மனத்தினால் ஒருமைப்பாட்டுடன் செய்யும் தியானம் மரண பயத்தைப் போக்கி உறுதியைப் பயக்கும் என்பது கருத்து.)

இந்த கந்தர் அலங்காரத்தில் 81 –ஆம் பாடல்.



'தமிழ்க்கவி பூஷணம்'
'திருமுருகாற்றுப்படை அரசு'
'வாகீச கலாநிதி'

கி.வா. ஜகந்நாதன்

எழுதிய

அனைத்து நூல்களும் -

அவரது பேச்சுக்களின்

ஒலி நாடா

மற்றும்

குருந்தகடுகள் (பல)

வெளிவர

உள்ளது

என்பதை

மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக்

கொள்கிறோம்

- பதிப்பகத்தார்

‘தமிழ் அறிஞர்’

பி.ஸ்ரீ.

எழுதிய வேறு நூல்கள்

1. ஆறுபடை வீடுகள் (6 தொகுதிகள்)
2. ஆழ்வார்கள் வரலாறு (8 தொகுதிகள்)
3. திவ்யப் பிரபந்த ஸாரம்
4. அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாறு
5. கந்தபுராணக் கதைகள்
6. வேதப் பொருளில் பூதக் கண்ணாடி
7. நவராத்திரியின் கதைகள்
8. ராஜரிஷி விசுவாமித்திரர்
9. தசாவதாரக் கதைகள்
10. துள்ளித் திரிகின்ற காலத்திலே
11. மஹாபாரதக் கதைகள்
12. ஔவையார்
13. மூன்று தீபங்கள்
14. லக்ஷ்மி வரலாறும் வழிபாடும்
15. திருப்பாவை
16. திருவெம்பாவை
17. கண்ணன் கதை
18. காதம்பரி
19. சிவநேசச் செல்வர்கள் I & II
20. தாயுமானவர்
21. சுவையான சம்பவங்கள் 129
22. நாரதர் கதை
23. இந்து சமயக் கதைகள் I & II



இன்னும் சில

கி.வா.ஜ. அவர்களுக்கு சிறு வயதிலேயே தமிழ் இலக்கியங்கள் மீது பற்று ஏற்பட்டது. டாக்டர் உ.வே. சுவாமிநாதையர் அவர்களுடைய தலை மாணாக்கராக இருந்து தமிழ் பயின்று, அவர்களது அருந்தமிழ் பணிக்கும் துணை நின்று, 'கலைமகள்' மாதப் பத்திரிகையின் ஆசிரியராக ஐம்பதாண்டுகளுக்கு மேல் பணி யாற்றியுள்ளார்.

தமிழ் ஆராய்ச்சி, இலக்கியம், பக்தி இலக்கியங்கள், கவிதைகள், நாடோடிப் பாடல்கள், பழமொழிகள் என இவரே எழுதியும், தொகுத்தும் அளித்துள்ள நூல்கள் இருநூற்றுக்கும் மேற்பட்டனவாகும்.

குறிப்பாக, இலக்கணத்துக்கு விளக்கம் தருவதில் வல்லவர். சிலேடையாய்ப் பேசுவதில் இவருக்கு நிகர் இவரே.

எந்த இலக்கிய நூலிலே சந்தேகம் ஏற்படினும் உடனடியாக விளக்கம் கி.வா.ஜ. அவர்களிடமிருந்து கிடைக்கும் என்பதைத் தமிழ் அறிஞர்கள் பலரும் அறிவர்.

இவர், பல காலமாக உள்ள ஐயங்களைப் போக்குகின்ற வகையில், 'கலைமகள்' மாத இதழில் பதிலளித்து வந்தார். இவை என்றென்றும் நமக்குப் பயன் விளைக்கக் கூடும்.